அரங்கம் 100

வானவில் கே ரவியின் படைப்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் முகிலை இராசபாண்டியன்

முனைவர் இரா அனுராதா

அரங்கம் 100

பதிப்பாசிரியர்கள்
முனைவர் முகிலை இராசபாண்டியன்
முனைவர் இரா. அனுராதா

புதிய இலக்கு புதிய தடம்

நிவேதிதா பதிப்பகம்
ப.எண்.1, பு.எண்.2, F3 முதல் தளம்,
தத்தாத்ரேயா பிளாட்ஸ்,
ஸ்வர்ணாம்பிகை நகர் மெயின் ரோடு,
விருகம்பாக்கம், சென்னை 600 092.
செல்: 89393 87296
Email : nivethithapathippagam1999@gmail.com
website: www.nivethithapathippagam.com

நூல் தலைப்பு : அரங்கம் 100

ஆசிரியர் : பல பேராசிரியர்கள்

பதிப்பாசிரியர்கள் : முனைவர் முகிலை இராசபாண்டியன்
முனைவர் இரா. அனுராதா

பொருள் : கட்டுரைகள்

முதற் பதிப்பு : 2025

அளவு : டெம்மி

வெளியீடு : நிவேதிதா பதிப்பகம்,
ப.எண்.1, பு.எண்.2, F3 முதல் தளம்,
தத்தாத்ரேயா பிளாட்ஸ்,
ஸ்வர்ணாம்பிகை நகர் மெயின் ரோடு,
விருகம்பாக்கம், சென்னை - 600 092,
கைபேசி: 89393 87296
Email : nivethithapathippagam1999@gmail.com

ஒளியச்சு : வி. தனலட்சுமி

அட்டைப் படம் : விவேக்பாரதி

அச்சாக்கம் : வேதா எண்டர்பிரைசஸ், சென்னை-17

பக்கங்கள் : 616

விலை : ரூ. 650

ISBN : 978-93-6643-346-2

பதிப்புக்குழு

- முனைவர் முகிலை இராசபாண்டியன்
- முனைவர் மு. முத்துவேலு
- முனைவர் R. அனுராதா
- முனைவர் A. ஜெயம்
- இசையியல் பேராசிரியர் மகேஸ்வரி சுப்பிரமணி
- கவிஞர் திரு. விவேக்பாரதி

பதிப்பில் உதவிய சான்றோர்

- முனைவர் ஜே.ஆர். லட்சுமி
- முனைவர் ப. தாமரைக்கண்ணன்

முன்னுரை

படைப்புக் கடவுளாம் பிரம்மனின் படைப்புகளிலேயே உயர்ந்த படைப்பான மானுடப் படைப்பிற்கு மாத்திரமே தனது உள்ளத்து ஊறும் உணர்ச்சிகளை, அறிவில் உதிக்கும் அரிய கருத்துக்களைக் கலை வடிவில் வடிக்கும் ஆற்றல் உள்ளது, அது சிற்பமாயினும், சித்திரமாயினும், இலக்கியமாயினும், இலக்கணமாயினும் படைப்பாளியின் கற்பனைத்திறனை விளக்குவதாக் மாத்திரமின்றி அவற்றைப் பார்ப்பவர் மற்றும் படிப்பவரின் மனதைச் செம்மைப் படுத்துவதாகவும் அமைதல் சிறப்புடையது. அவ்வகையில் திரு. வானவில் ரவி அவர்களின் படைப்புகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் படித்தோர் பிணிக்கும் தகையவாய் அவற்றைப் படிக்க வாய்ப்பிழந்தவரும் வேட்கும் வகையில் அமைந்துள்ளன.

வானவில் பண்பாட்டு மையம் என்னும் அமைப்பின் மூலம் தமிழ்த்தொண்டாற்றி வருவதனால் வழக்கறிஞர் ரவி என்பதைவிட வானவில் ரவி என்றே அறியப்படுகின்ற இவர், எட்டையபுரத்தானின் எழுச்சிமிகு எண்ணங்களில் உதித்த கவிதைகளில் கருத்தைப் பறி கொடுத்ததனால் ஆண்டுதோறும் அந்த எட்டையபுரத்தானின் பிறந்த நாளன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலிலிருந்து துளசிங்கப் பெருமாள் கோயிலில் உள்ள பாரதியார் வசித்த இல்லம் வரை, ஆடல் பாடலுடன் ஜதிப்பல்லக்கு ஊர்வலம் நடத்துவதோடு ஊர்வலத்தின் இறுதியில் தமிழ்றிஞர்கட்கு விருது வழங்கி கௌரவித்தல், கவியரங்கம், சொற்பொழிவுகள் நிகழ்த்துதல் போன்ற

செயல்களின் மூலம் இன்றளவும் பாரதிக்குத் தொண்டாற்றி வருகின்றார்.

வானவில் கே.ரவி என்று அழைக்கப்படுகின்ற அடைமொழிக்கேற்ப கவிதை, கட்டுரை, அறிவியல், ஆன்மீகம், வரலாறு போன்ற பல்வேறு துறைகளிலும் தனது திறனை வெளிப்படுத்தி வரும் இவரது படைப்புகட்குத் தங்கக் குடத்திற்குப் பொட்டுவைத்ததுபோல் மேலும் சிறப்பு சேர்க்கவும், இவரின் படைப்புகளைப் படித்து மகிழ வாய்ப்பிழந்தவர்கட்கு வாய்ப்பு அளிக்கவும் தமிழகத்தில் கன்னியாகுமாரிமுதல், திருநெல்வேலி, பளையங்கோட்டை, ஈரோடு, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை, சென்னை போன்ற பல்வேறு ஊர்கலிலுமுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தி இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர், ஆய்வுமாணாக்கர் போன்ற மாணவ சமுதயம் மட்டுமின்றி பேராசிரியப் பெருமக்களும் பங்கேற்க வாய்ப்பளித்து ஆய்வுக்கட்டுரை வழங்கச் செய்து அவற்றைத் தொகுத்து 'அரங்கம் நூறு' என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளார்.

கைப்பேசி நாகரிகத்தில் சிக்கித்தவிக்கும் படிக்கும் பழக்கத்தையே இழந்துவரும் இன்றைய மற்றும் எதிர்காலத் தலைமுறையினருக்கு இதுபோன்ற நூல்கள் சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

கவிஞர் கே. ரவி அவர்களின் படைப்புகளைப் படிக்க வாய்ப்பு பெறாதவர்களையும் படிக்கத்தூண்டும் வகையில் அமைந்துள்ள இக்கட்டுரைத் தொகுப்பு நூலுக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பு கிடைத்ததில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

இத்தகு அரியநூல் உருவாகக் காரணமான வழக்கறிஞரும், சிறந்த படைப்பாளருமான திரு. வானவில் கே.ரவி அவர்கட்கு என் நெஞ்சார்ந்த பாரட்டுகளும், வாழ்த்துகளும்.

– முனைவர் A. ஜெயம்

பதிப்புரை

கவிஞர், கட்டுரையாளர், தத்துவ அறிஞர், நடிகர், இசையமைப்பாளர், பாடல் பாடுபவர் எனப் பன்முகங்களில் பரிமளிக்கும் வானவில் ரவி அவர்கள், மிகுந்த ஈடுபாட்டுடன் இலக்கியத்தில் தோய்ந்தவர் என்பதனை அவரின் படைப்புகளின் வழி அறிய முடியும். யாரும் நினைத்துப் பார்க்காத புதிய புதிய கோணங்களில் கம்பரையும் வள்ளுவரையும் இளங்கோவையும் பார்க்கிறார். பாரதியில் தோய்ந்தவராக இருக்கிறார். இவரின் நுட்பமான சிந்தனையின் காரணமாக நல்ல, புதிய கருத்தாக்கங்கள் இவரின் படைப்புகளை மிளிர வைக்கிறது. இவர், வானவில் பண்பாட்டு மையத்தின் நிறுவனர் சென்னையில் புகழ்பெற்ற ஒரு வழக்கறிஞர்.

வானவில் கே ரவி அவர்கள், இலக்கிய உலகின் விருந்தாகத் திகழும் புதுக்கவிதையை, அழுத்தமாகவும் அழகாகவும் சொற்செறிவு மிக்கதாகவும் படைத்து வருகிறார். பல இடங்களில் தன்னுள் உதித்த கவிதைகளையும் அதற்கான காலச் சூழலையும் அழகாக விளக்கி கூறுகிறார். இவரின் படைப்பாற்றலின் மூலமாக அறியவரும் இவரின் மொழி ஆளுமை படிப்பவரை வியக்க வைக்கிறது. 'சொற்களுக்குள் ஏறிக்கொள்' என்கிற இவரது கட்டுரை நூல், பல அரங்குகளில் ரவியின் மனதைத் தொட்ட கவிஞர்கள் நிகழ்த்திய பல்வேறு கவிதைகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். நினைத்தவுடன் கவி பாடும் ஆற்றல் உடைய இவரின் கவிதைகளில் எளிமையும் ஆற்றொழுக்கும் இழைந்தோடுகிறது.

"முத்தமிழ் கவியே! பாரதியின் நவீன வாரிசே! தமிழை நேசித்ததால் கவிதை பிறந்ததா? இல்லை தமிழ்க் காற்றை சுவாசித்ததால் கவிதை பிறந்ததா?" என்று கேட்கும் அளவில் இவரின் தமிழ்ப் பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நூலாக மட்டுமின்றி மின் இதழிலும் இவர் தன்னுடைய படைப்புத்திறனை வெளிப்படுத்தி இருக்கிறார். பாரதியின் பிறந்த நாளை திருவையாறு தியாகராஜ உற்சவம் போல் மிகச் சிறப்பாக விழாவாக கொண்டாடும் இவர், நல்ல ஈர்ப்புத் திறனுடன் நூல்களைப் படைக்க வல்லவர். தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் சரளமாக எழுத வல்லவர். மாணிக்கவாசகர் எழுதிய ஞானத் தமிழிசை என்ற நூலை Verses of Wisdom *என்று மொழிபெயர்த்துள்ளார்.*

ஏதாவது நூல் வெளியிட வேண்டும் என்பதற்காக எழுதுபவராய் இராமல், இயற்கையான உந்துதலால் ஏற்படும் உணர்வின் விளைவாக நூல்களைப் படைப்பவராக இருக்கிறார், வானவில் கே. ரவி. தாம் கற்ற கல்வியையும், அதனால் பெற்ற அறிவையும் அனுபவங்களையும் கலந்து, தமிழ் இலக்கிய உலகில் ஒரு மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கி வருகிறார்.

வானவில் கே ரவி, தம் மனம் ஏற்றுக் கொண்டதை மட்டுமே கவிதையாக படைப்பவர். 'உன்னோடு நான்' நூல் முழுவதும், கவிஞனும் ரசிகனும் பேசுவதாகவே அமைந்திருப்பது புதுமையும் அருமை ஆகும். வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாய், ஒவ்வொரு சொல்லும் வெல்லும் சொல்லாகவே படைக்கிறார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கொள்கையில், தாம் படித்த நூல்களுக்கு இதுவரை யாரும் எண்ணாத பல்வேறு சமுதாய சிந்தனைகளையும் விளக்கி உள்ளது பாராட்டிற்குரியது.

இசையால் வசமாகாத இதயம் எது? இவர் பஞ் சபூதங்களுடனும் கவிதைப் பல்லாங்குழி ஆடியுள்ளார். நல்ல மனங்களில் நல்ல விதை விதைத்தால் வளரும் விருட்சம் அடுத்த சந்ததியினர்க்குப் பயன்படும். அதுபோல கவிதையை மக்கள் உள்ளத்தில் விதைத்துச் சந்தத்தோடு சிந்திக்க வைத்து,

இயற்கையோடு வாழ்கின்ற தமது வாழ்க்கையையும் கூறிச் செல்கின்றார்.

அதனால்தான் நாம் இதுவரை கேட்டிராத வகையிலும், யாருக்கும் நடந்திராத வகையிலும் இவருடைய படைப்புகளைப் பற்றி மட்டுமே நூற்றுக்கும் அதிகமான கருத்தரங்கங்கள் இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் நடைபெற்றிருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், வானவில் கே ரவியின் படைப்புகளைப் படித்து ரசித்து ஆய்ந்து கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

அக்கட்டுரைகளைச் செப்பனிடும் பணி ஓராண்டுக்கு மேலாக நடைபெற்றது. ஆய்வாளரின் சிந்தனையை அப்படியே நூலாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருந்ததால் செம்மையாக்கம் செய்ய ஆய்வாளர்களுக்கு கட்டுரைகள் மீண்டும் அனுப்பப்பட்டு, அவற்றை அவர்கள் திருத்தம் செய்து தந்த பின், இந்த நூல் தங்கள் கைகளில் தவழ்கிறது. ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்குபொழுது மேற்கொள்ள வேண்டிய அல்லது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை உரிய படி பின்பற்றி இருந்தால் இந்த நூல் எப்பொழுதோ வெளிவந்திருக்கும் ஆய்வாளர்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருந்திருக்கும் காலம் தாழ்ந்தாலும் பாட்டினில் அன்பு செய் நூலினை பகுத்துணர் என்ற மகாகவி பாரதியின் வாக்கின்படி கவிஞர் வானவில் ரவி அவர்களின் படைப்பு எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? எதனால்? என்று ஆராய்ந்து நுட்பமான பார்வையில் அழகாக ஆழமாக வெளிப்படும் தன்மை உடையதாக இருக்கும் இவரின் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளடங்கிய இந்த நூலை படிக்கும் பொழுது இதனுடைய மூலத்தையும் ஆசிரியரின் படைப்பையும் படித்து தமிழ்கூறு நல்லுலகம் பயன் பெற வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நூலானது பதிப்பிக்கப்படுகிறது. பல்வேறு கடினமான பணிகளுக்கு இடையேயும் இந்த நூலாக்கம் மிகச் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளை மையமாகக் கொண்டு செயல்பட்டது மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஒரு மனிதன் தன்னோடு உருவாகும் அல்லது தனக்குள் ஏற்படும் மாற்றத்தை தன்னுடனே நிறுத்திக் கொள்ளாமல் அதை வெளி உலகிற்கு கொண்டு வர செய்யும் முயற்சியின் வடிவங்களே கவிதை இலக்கியம் காவியம் பாட்டு இசை நாடகம் என்பதாகும். இப்படித் தன்னுள் பீறிட்டு எழும் கருத்துக்களைத் தனக்கே உரித்தான பாணியில் பல்வேறு வடிவங்களில் இந்தச் சமூகத்திற்கு கொண்டு வந்து சேர்த்து உள்ளார் வானவில் கே ரவி அவர்கள்.

இவரின் சொற்கள் மிடுக்காக அமைந்திருப்பது இவரின் தனித்துவம். இவரின் அறிவியல் ஆளுமை ஆக்கபூர்வமானது. கவிஞராக உரைநடை ஆசிரியராக, மொழிப் போராளியாக, நடிகராக, இசை வல்லுநராக, இதழாசிரியராக, விமர்சகராக, பாரதியின் மீது பற்று கொண்டவராக நிற்பதோடு மட்டுமல்லாமல் நல்லதொரு மனிதராகவும் சிறந்ததொரு பண்பாளராகவும் இருக்கும் இவரின் படைப்புகளில் 125–க்கு மேற்பட்ட கருத்தரங்கங்கள், பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில், பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்று இருப்பது இவரின் பன்முக திறனுக்குச் சான்றாகும்.

'அரங்கம் 100' என்ற இந்த நூலில் நூறு கருத்தரங்கங்களில் படிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகள் அவர்களிடமே அளித்து செப்பம் செய்யப்பட்டு, நூலாக்கம் பெற்றிருக்கிறது. இன்னும் பலரின் ஆய்வுக் கட்டுரைகள் திருத்தம் செய்யப்பட்டு எங்களிடம் அனுப்பப்படாமல் இருப்பதால், அனுப்பியவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து இந்த நூலானது வெளிவருகிறது. 25–க்கும் மேற்பட்ட நூல்கள், நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வரங்கங்கள், அதனோடு கூடிய தன்னுடைய வழக்கறிஞர் பணி என்றாலும் மொழியின் மீதும் இலக்கியங்களின் மீதும் சமூகத்தின் சமூகத்தின் மீது உள்ள அளப்பரிய அன்பும் அறச்சீற்றமும் இவருடைய படைப்பில் இவரால் கொண்டுவரப்பட்டுள்ளது பல்வேறு ஆய்வாளர்களின் கருத்துகளில் இருந்து புலனாகிறது. இப்படிப்பட்ட நல்ல பண்பாளரிடம் எங்களை அறிமுகப்படுத்திய பேராசிரியர் இராஜாராம் அவர்களுக்கும் எங்களின் நன்றி. இப்படிப்பட்டதொரு சிறந்த நூலை பதிப்பிப்பதில் எத்தனையோ

சிரமங்கள் இருப்பினும் அதற்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர் முத்துவேலு, பேராசிரியர் ஜெயம், ஆகியோருக்கும் எங்களின் நன்றி. இந்த மிகப்பெரிய பொறுப்பினை ஒப்படைத்த வானவில் கே ரவி அவர்களுக்கும் எங்களின் அன்பான நன்றி. இதுபோல் பல்வேறு நூல்கள் படைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு கருத்தரங்க நூல்களாக வெளிவர வேண்டும் என்ற அவாவினை வெளிப்படுத்துகின்றோம்.

பதிப்புக்குழு.

பொருளடக்கம்

1. காற்று வாங்கப் போனேன்
நூல் மதிப்புரை - திருமதி. ஆ. அந்துவான் 17

2. அணையாத சுடரேற்றுவேன் கவிதையில் பன்முகப்
பார்வை - பெ.அந்தோணியம்மாள் 23

3. வானவில் கே. ரவியின் அனுபவங்களும்
இலக்கியங்களும் - முனைவர் மு.அய்யம்மாள் 29

4. அணையாத சுடரேற்றுவேன் கவிதையில்
விழுமியங்கள் - முனைவர் ஆ ஆதிலட்சுமி 34

5. காற்று வாங்க போனேன் - உபதேசம் -
முனைவர் செ.ஆனந்தி 44

6. வானவில் கே. ரவியின் மெய்யியல் நோக்கு -
முனைவர் சு.இராசாராம் 51

7. காற்று வாங்கப் போனேன் கவிதை வாங்கி
வந்தேன் - திரு.இரா.இராமதுரை 65

8. நினைவு தரும் சுகம் - முனைவர் ச. இராஜலதா 72

9. உள்ளொளி - முனைவர் ச. இராஜலதா 84

10. பாரதிக் கடலில் கவிஞர் - முனைவர் ச. இராஜலதா 91

11. வானவில் ரவியின் பார்வையில் கம்பன் -
முனைவர் இல. இரேவதி 103

12. கவிஞர் கே.ரவியின் தன் வரலாற்று நூல் -
கோ. இலட்சுமிப்பிரியா 112

13. வானவில் கே.ரவி அவர்களின் மக்கள் பாடும் பாட்டு
கவிதை நூல் - ஓர் ஆய்வு - ஜெ.உஷா 122

14. வானவில் கவிஞரின் இறையியல் பார்வை -
திருமதி.ச.கண்ணம்மாள் 135

15. கவிதையும் கே. ரவியும் - மு.கண்மணி 143

16. 'வானவில்' கே.ரவியின் பார்வையில்
தமிழ்க் கவிஞர்கள் - மு.கயல்விழி 150

17. பன்முக நோக்கில் வானவில் கே.ரவியின்
'மக்கள் பாடும் பாட்டு' - முனைவர் நா.கலைவாணி 159

18. 'வானவில்' ரவியின் பார்வையில் புதுக்கவிதை
- முனைவர் ந.மு. கவிதா 174

19. கவிஞர் கே.இரவியின் மின்னற் சுவை காட்டும்
பாரதி சிந்தனைகள் - முனைவர் ம.கவிதா 179

20. வானவில் கே.ரவியின் கவிதைகள் ஓர் ஆய்வு
- முனைவர் செ.காஞ்சனா 185

21. பல்திறன் பண்பாளர் குறித்து ஒரு பார்வை
- முனைவர் கு.கார்த்திகா 192

22. சொற்களுக்குள் ஏறிக்கொள் - ஒரு பார்வை
- முனைவர் கி. காவேரி 199

23. சொல்லாததைச் சொன்ன கவிஞர் - ரூ.கிறிஸ்டோபர் 208

24. 'வானவில்' கே. ரவி - அறிவியல் தமிழாக்கி
- முனைவர் ப. கொழந்தசாமி 214

25. 'வானவில்' கே.ரவியின் பன்முகத்திறன்
- சகோ.பி.சகாய மேரி 218

26. தீக்குள் விரலை வைத்தால் அழிக்கும் அருளும்
- முனைவர் ப.சங்கீதா 226

27. வானவில் ரவியின் மொழித்திறன் - சங்கீதா 234

28. கே.ரவியின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனை
- முனைவர் பா.சங்கீதா 241

29. வானவில் கே. ரவியின் படைப்பில் கலைஞனின் கவிநயம் - திருமதி. மு. சண்முகவடிவு 248

30. இசைக்கவி ரவி - முனைவர் ஆ. சந்திரபுஷ்பம் 254

31. காற்றில் ஏற்றிய அணையாச்சுடரின் ஒளிக்கீற்றுகள் - முனைவர் ஜெ. சந்திரிகா 258

32. கவிச்சக்கரவர்த்தியின் சொல் முடிச்சுகளும் வானவில் கே. ரவியின் அவிழ்ப்புகளும் - முனைவர் அ. சர்மிளா 268

33. கவிஞர் வானவில் கே. ரவியின் 'நமக்குத் தொழில் கவிதை' - கவிஞர் இல. சாந்தா 275

34. வானவில் கே. இரவியின் அணுவைத்துளைத்த இயல்பியல் வரலாறு - முனைவர். சித்திரவேலு கருணாணந்த ராஜா 285

35. வானவில் கே. ரவியின் "பாரதியார் உலககவி" ஒருமதிப்பீடு - முனைவர் ச.சிவமணி 299

36. உலக மகாகவி - 'வானவில்' ரவியின் படப்பிடிப்பு - முனைவர் க.சுப்புலட்சுமி 305

37. காற்று வாங்கப்போனேன் - தொகுப்பில் கவிதை மொழி - முனைவர்மு.செந்தமிழ்ச்செல்வி 317

38. 'வானவில்' கே.ரவியின் படைப்புகளில் புதிய சிந்தனைகள்" - முனைவர் க. செல்வராணி 322

39. கானல் நீரைப் பருகும் கவிதைக் கதிரவன் - முனைவர் சௌந்தர மகாதேவன் 330

40. பெண்களின் வாழ்க்கையே ஒரு கானல் நீர் - முனைவர் செ. திலகவதி 336

41. 'வானவில்' கே. ரவியின் இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு காட்டும் நோபல் பரிசு நாயகர்கள் - வி.திவ்ய தர்ஷ்னா 345

42. மக்கள் பாடும் பாட்டில் - சிறுவர் பாடல்கள் - முனைவர் ச. துர்கா 350

43. கவிஞர் வானவில் கே. ரவியின் "காற்று வாங்கப் போனேன்" - ஒரு பார்வை - ஆ.தேவிகா 361

44. சொன்னதும் சொல்லாததும் - ஓர் மீள் பார்வை - இரா.நாகராணி 374

45. அகண்ட வெளியில் அகத்தைத் தேடும் வானவில் கே.ரவியின் படைப்பாளுமை - முனைவர்.ர.நித்யா 385

46. வானவில் கே. ரவியின் 'சொன்னதும் சொல்லாததும்' - முனைவர் வெ.நிர்மலா 393

47. அறிவியல் சிந்தனைக் களஞ்சியம் 'வானவில்' ரவி - முனைவர் ஆர். நிர்மலா தேவி 403

48. வானவில் கவிஞரின் வள்ளுவப் பாதை - முனைவர் பா. பத்மபிரியா 410

49. வானவில் கே. ரவியின் வெல்லும் சொல் ஒரு பார்வை - முனைவர் கோ.பத்மவிலாசினி 416

50. 'வானவில்' கே.ரவியின் பார்வையில் கம்பரின் படைப்புலகம் - சி.பரமேஸ்வரன் 422

51. வானவில் கே.ரவியின் - கவி(தை) எனும் அணையாத சுடர் - திருமதி. க.பாண்டிச்செல்வி 428

52. 'வானவில்' கே. ரவி அவர்களின் இயற்பியல் கருத்தாய்வுகள் - இ.பிரியங்கா 434

53. சொன்னதும் சொல்லாததும் பற்றிய திறனாய்வு - முனைவர் ஆ.பெ.மகேஸ்வரி 439

54. வானவில் கே. ரவியின் 'மக்கள் பாடும் பாட்டில்' சமூகப் பார்வை - முனைவர். ர. மங்கையர்க்கரசி 448

55. கவிஞர் வானவில் கே. ரவியின் கவிதை உத்திகள் - முனைவர் முகிலை இராசபாண்டியன் 457

56. கவிஞர் ரவியின் கவிதைகளில் - கவிஞர்கள் - முனைவர் சு.முருகலெட்சுமி 467

57. காற்று வாங்கப் போனேன் - தன் வரலாற்றுக் கவிதையியல் (கவிதையும் கவிஞரும்) - முனைவர் ப.சு. மூவேந்தன் 477

58. 'வானவில்' ரவியின் சிந்தனைச்செல்வம் - கி. மோகனாம்பிகை அரசு 509

59. அணையாத சுடரேற்றுவேன்' கவிதைகள் - உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள் - முனைவர் ரா.ரவிச்சிந்திரன் 515

60. மகா கவியும் மகா ரசிகனும் - முனைவர் ஆ.ரூபா 522

61. வானவில் கே. ரவி அவர்களின் பார்வையில் வள்ளுவம் - முனைவர் மோ. ரூபா 528

62. கானல் நீரைக் கடந்தது புதிதினும் புதிது - முனைவர். இர. ரேச்சல் மேனகா 534

63. கண்ணன் என் சற்குரு - ஒரு கண்ணோட்டம் - முனைவர் சு. லட்சுமி 546

64. உன்னோடு நான்; கவிதைத் தொகுப்பில் புலப்படும் தன்னம்பிக்கைச் சித்தாந்தம் - முனைவர் வே. வளர்மதி 551

65. தனிச் சார்புக் கொள்கையும் ரவியும் - பெ. வாசுகி 561

66. 'வானவில்' கே.ரவியின் பார்வையில் வள்ளுவர் - திருமதி கி.வான்மதி 565

67. கவிஞர் 'வானவில்' ரவியின் அறிவியல் ஆளுமை - முனைவர் உ. விஜி 573

68. கவிதை வழி வானவில் கே. ரவி - முனைவர். அ.ஜனார்த்தலி பேகம் 581

69. கவிஞர் ரவியின் மக்கள் பாடும் பாட்டும் "மனம்" மேலாண்மையும் - முனைவர்.மா.ஜாஸ்மின் பிரியா 595

70. வானவில் கே.ரவியின் மக்கள் பாடும் பாட்டு மதிப்பீடு - முனைவர்.த.ஹேமலதா 609

காற்று வாங்கப் போனேன்
நூல் மதிப்புரை

•

திருமதி. ஆ. அந்துவான்
தமிழ் உதவிப் பேராசிரியர் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஈரோடு – 9.

சிறந்த மனிதர்கள் எனப்படுவோர், செயல்வீரர்கள். ஒரு மனிதனின் சிறந்த சொல் செயலே. ஐம்பது ஆண்டுகளாய், நூற்றுக்கணக்கான கவிதைகளும், பல ஆய்வுக்கட்டுரைகளும் தமிழ், ஆங்கில நூல்கள் ஒன்பதும் படைத்துள்ளவர், செயல்வீரர், கவிஞர். வழக்கறிஞர். கே. ரவி அவர்கள். அவரின் "காற்று வாங்கப் போனேன்" நூல் மதிப்புரையைப் பதிவு செய்துள்ளேன்.

நூல் எழக் காரணம்

வல்லமை.காம் என்ற மின்னிதழில் எழுத வேண்டும் என்பதற்காக சகோதரி. பவளசங்கரி கேட்டுக் கொண்டதற்கிணங்க கவிஞர். வானவில் K. ரவி அவர்கள் எழுதிய தொடரே இந்த "காற்று வாங்கப் போனேன்" எனும் சுயசரிதைத் தொகுப்பு.

இச் சுயசரிதையைப் படிக்கத் தொடங்கும் போது மிகப்பெரிய வியப்பும் ஆவலும் தொக்கி நின்றது. வழக்கமான சுயசரிதை நூல்களைப் போல் அல்லாமல் இந்நூல் கவித்துவமான... ரசனை மிகுந்த ... படிப்போரை ஈர்க்கக் கூடிய ஒரு சுயசரிதைத் தொகுப்பு.

காற்றே கவிதையாக

கவிதையை அவர் கவிதை எனும் வடிவமாக மட்டும் பார்க்கவில்லை. அவரை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தியாகவே நம்புகிறார் கவிஞர்.

எப்படியாவது தன் உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பே கவிதை எழுதத் தூண்டுகோல் ஆகிறது.

செய்யுள் என்பதும் கவிதையாகலாம். கவிஞர் இந்நூலில் கவிதை எழுதத் தொடங்கும் போதே சுயசரிதமும் ஒட்டிக் கொள்கிறது. சுய சரிதையை எழுதிக் கொண்டிருக்கும் போது கவிஞருக்குள் கவிதாயினி நுழைந்து கொண்டு நர்த்தனம் ஆடுவதை நூல் முழுவதும் காண முடிகிறது.

"காற்று வெளியிடைக் கண்ணம்மா நின்றன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்"

கவிஞரின் மூச்சுக் காற்றையும் கவிதையையும் பிரிக்க முடியாத ஒரு ஆழமான பிணைப்பு இந் நூலைப் படிக்கக் கூடிய நம் மனதில் ஒட்டிக் கொள்கிறது.

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்"... என்ற மெட்டில் கவிஞர்,

சொல்லும் சொல்லும் சேரும்போது கானமாகலாம்.
சொல்கடந்து செல்லும் போது மோனமாகலாம்.
சொல்மலர்ந்து சுடரெழுந்து ஞானமாகலாம்.
செய்யுள் என்பதும் கவிதை யாகலாம்.....

என அப்பாடலில் உள்ள அந்த உம்மைக்கு எத்தனை உம்மா வேண்டுமானாலும் கொடுக்கலாம், எனக் கவிஞரின் காதல் வார்த்தைகளைப் படிக்கும் பொழுது, கவிதைக்கும், படிக்கும் நமக்கும் கூட ஒரு காதல் தோன்றி விடுகிறது.

அறிவா?... கற்பனையா...?

"அறிவைக் கொண்டு சொற்கள் தேடி அடுக்கிச் செய்யும் செய்யுள்கள் வேறு, கவிதை வேறு. உருவாக்கும் ஆற்றல் அறிவுக்குக் கிடையாது. கற்பனையின் தனிப்பட்ட சக்தி அது. அறிவு ஆக்கும் கருவியல்ல; காக்கும் கருவி" என்ற வரிகளில் கவிஞரின் தெளிவான புரிதல் நமக்கும் தரப்படுகிறது.

காற்று வீசினாலே கவிஞருக்குக் கவிதையும்சேர்ந்து வந்து விடுகிறது. காற்றும் கவிதையும் கவிஞரின் சுவாசம் ஆகிறது.

1990ல் அவர் சென்ற ஒரு உல்லாசப் பயணம் பற்றி நினைவு கூறும் பகுதியில் அவர், (பொதிகை செய்தி வாசிப்பாளர்) தன் மனைவி ஷோபனா ரவி, அவர் வளர்ப்புத் தந்தை, பெண் குழந்தைகள் எனத் தன் அழகிய குடும்பத்தையும் தன் அன்பு நண்பன் அமரர். சிவக்குமாரையும் நமக்கு அறிமுகப் படுத்துகிறார். இறைப்பற்று மிக்கவர்.

நினைத்துக் கொள்ள நிமிடம் போதும்
உன்னை நினைத்துக் கொள்ள நிமிடம் போதும்.

என்ற வரிகளும்,

உன்னைப் பாடும் எண்ணம் என்னுள் யார் விதைத்தது.
அந்தப் பாடலுக்குள் பரவசத்தை யார் வளர்த்தது.....

எனும் வரிகள் இறைவனைப் பற்றியதாக அமைந்துள்ளது. கவிதையையும் கடவுளையும் இணைத்து மனங்களைப் பிணிக்கிறார்.

இப்படி காணும் வரிகள் எல்லாம் காற்றும் கவிதையும் ஒரு மனிதனை இத்தனை ஈர்த்திருக்க இயலுமா என்ற வியப்பை நமக்கு ஊட்டுகிறது.

நட்பின் சிகரம் இவர்

அடுத்ததாக அவருக்குக் கிடைத்த மற்றுமொரு நட்பு ரமணன். ரமணன் உள்ளே நம் கவிஞர் வள்ளுவனின் முதிர்ச்சி, கம்பனின் கற்பனை வளம், பாரதியின் உணர்ச்சி, கண்ணதாசனின் எளிமை. எல்லாவற்றையும் ஒருங்கே காண்பதாகக் குறிப்பிடுகிறார்.

இசையிலும் ஈடுபாடு கொண்ட இக் கவிஞர்... தன் நண்பர் வ.வே.சு.வுக்குப் பாடிக் காட்டுகிறார். பாடி விட்டு அவரிடம் கவிஞர் இப்படியாக முடிக்கிறார்.

ஏதோ... காதிருக்கிறது... காற்றடிக்கிறது, வாயசைகிறது. பாடல் வருகிறது. அம்புடுதேன், ஆனால் அம்புட்டும் தேன்.'

மேற்கண்ட வரிகளில் சொல் விளையாடல்களில் கவிஞர் சிற்பியாகிறார்.

மேலும் இன்று மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கும் இனிய நண்பன் சுகி சிவம் பற்றியும் இந்நூலில் அறிமுகப்படுத்துகிறார்.

நண்பன் (சிவம்) ஒரு பேரழகியைத் தன் கனவில் கண்டதாக படபடப்போடு கூறுகிறார்.

நீ என்ன செய்தாய் என நம் கவிஞர் கேட்க, அவரும் கவிதையிலே பதிலிருக்கிறார் தெரியுமா?

எப்படி...

கண்ணளந்து நின்றிருந்தாள் காதலித்தேன்
கையளைந்து நானவளைக் காதலித்தேன்

கையளந்து அல்ல, கையளைந்து என்கிறார். சிவமும் நம் கவிஞரும் கல்லூரி நாட்களில் இருந்தே மிகச் சிறந்த நண்பர்கள். இருவருமே கவிஞர் சுரதாவின் ரசிகர்கள். இதற்குக் காரணம் இவர்களின் ஆசான், வழிகாட்டி திரு. ஔவை. நடராசன் ஐயா அவர்கள்.

மாணவர் இதழ்

கவிஞர் சுரதாவின் சில முயற்சிகளைக் கேலி செய்து 'கம்பாசிடர் கவிதைகள்' என்று திரு. சோ அவர்கள் விமர்சனம் செய்ய, அதற்கு அருமையாக ஒரு விடை கூறினாராம் கவிஞர் சுரதா.

மாடுமுட்டிக் கோபுரங்கள் சாய்வதில்லை
மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை

என, இதை அடியொற்றியே

சுகி சிவம் அவர்களும்,

எலி தாக்கி புலியிங்கே வீழ்வதில்லை
எருக்கம் பூ தாமரையாய் ஆவதில்லை

என மாணவரிசம் என்ற தம் மாணவர் இதழில் வெளியிட்டார். இதை வைத்துத் தந்தை போல் அவர்கள் எண்ணிய ஔவை நடராசன் அவர்கள் கவிஞர் சுரதா கவிதைக்கு விளக்கம் தந்த விதம் எதார்த்தம்.

இவரைப் போலவே இலக்கிய அன்பர் நா. பார்த்த சாரதியும்.

நூலாசிரியர் கவிதை பற்றி கூறுமிடத்து கவிதை வெறும் ஆற்றலில்லை, அதுவோர் ஆற்றாமை" என்கிறார்.

மற்றோரிடத்தில்.
வெறும் புத்தியைக் கொண்டு
புனைகின்ற கவிதைகள் பூஜைக்கு சேர்வதில்லை - கவி
ஒத்திகையில் கொஞ்சம் பக்தி சேராவிடில் உள்ளம்
தொடுவதில்லை

என்கிறார்.

நாடக ஈடுபாடு

நெஞ்சம் நெகிழவைக்கும் ஒரு நிகழ்வை ஒரு இடத்தில் நூலாசிரியர் பதிவு செய்கிறார். நந்திவர்மன் நாடகம் – 1968 – பிப்ரவரி 3. அந்நாடகத்தில் சுகி சிவம் காடவர் கோனாகவும், நூலாசிரியர் நந்திவர்மனாகவும், காலஞ்சென்ற கவிஞர் வசந்தப்பிரியன் அமைச்சராகவும் நடிக்கின்றனர்.

அதில் வரும் ஒரு காட்சியில், நந்திவர்மன் காடவா என, அவன் பாடவா என்று கூற பலத்த கரகோஷம் எழும்பியது. இதைக் கண்ட வசந்தப்பிரியன் அவர்களும், தானும் சுய வசனம் பேசி கைதட்டல் பெறவேண்டும் என்ற ஆவலில், நாடக ஆசிரியர் தண்டமிழ்க் கொண்டல் எழுதாத வசனத்தை, தம் சுயவசனமாகப்பேசி நடிக்கிறார். அவ் வசனம் இது தான்.

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்ட அண்ணா மீண்டு வருவாரா?" என நந்திவர்மனின் தம்பி காடவனிடம் அமைச்சராக நின்ற வசந்தப் பிரியன் பேசுகிறார் .

அடுத்த ஆண்டே, அதே மாதம் அதே நாளில் அறிஞர் அண்ணா மாண்டார் என்ற செய்தி இடி போல் விழுந்தது... என்று சொல்லின் வலிமையை இந்நூலில் எடுத்தாளும் விதம் சிறப்பு.

அடுத்து கண்ணதாசனுடனான அவருடைய நட்பு – நூலாசிரியரின் கவிதைப் போட்டிக்கு நடுவராக கண்ணதாசன் வீற்றிருந்த விதத்தையும் பரிசு பெற்ற பாங்கையும் மிக அழகாகப் படைத்துள்ளார் நூலாசிரியர்.

மற்றோர் பகுதியில், "அழுகை உன் திறமையையும் தன்னம்பிக்கையையும் தகர்த்து விடுகிறது" எனக் குறிப்பிடுகிறார்.

மேலும், உண்மையான, உள்ளத்து வழிபாடே சிறந்தது என்கிறார்.

கல்லூரி நாட்களிலே நம் கவிஞருக்கு கீட்ஸும் ஷெல்லியும் பைரனும் மிகவும் பாதித்து இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

ஷோபனா அம்மையாரை விரும்பி மணமுடித்த பின் சட்டம் படித்துக் கொண்டே வேறு பணியிலும் ஈடுபட்டிருந்தார். வேலைப் பளு அதிகம் எனினும் கவிதைப் பகிர்தலும் அம்மையாரின் வீணை வாசிப்பும் அவர் இதயம் தொட்டவை.

இவ்வாறாக பலவிதமான தன் வாழ்க்கை நிகழ்வுகளை மிக அழகாக கவிதைப் பெண்ணின் துணையோடு நம் கவிஞர் நமக்குப் படைத்திருக்கிறார்.

நூல் முழுவதும் படிக்கப் படிக்க, எடுத்த நூலை கீழே வைக்க இயலாதபடி, வாசகனை ஈர்க்கும், வித்தையைக் கற்றுள்ள வித்தகர் இவர்.

'காற்று வாங்கப் போனேன் – ஒரு கவிதை வாங்கி வந்தேன்' என்ற சொற்றொடருக்குக் கவிஞரே சிறந்த சான்று. மொத்தத்தில் "காற்று வாங்கப் போனேன்" என்ற அவரின் சுய சரிதைத் தொகுப்பு, வாசகனின் உள்ளம் ஈர்க்கும் தங்கப் பெட்டகம்.

❖

அணையாத சுடரேற்றுவேன் கவிதையில் பன்முகப் பார்வை

•

பெ.அந்தோணியம்மாள்
தமிழ் உதவிப்பேராசிரியர், கீதா ஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி–628722

அணையாத சுடரேற்றுவேன் வானவில் கே.ரவி ஐயா அவர்களின் கவிதைத் தொகுப்பில் உலக வாழ்க்கையின் எதார்த்தம் மற்றும் தன் வாழ்க்கையில் செய்த சாதனைகள், தமிழ் மொழிக்காகத் தொண்டாற்றிய விதம் போன்றவற்றை விவரிக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வீரம்

வீரம் என்ற தலைப்பில் உள்ள கவிதை வரிகளைப் படிக்கும் போது நம்முடைய மந்த நிலையை அறிய முடிகிறது. இந்த உலகத்தில் வீரத்தை எதற்காகப் பயன்படுத்துகிறோம். சாதி, மதம் போன்றவற்றை வளர்க்கவும், கள்ளுக்கடை வாசலுக்காகவும் மட்டுமே வீரம் இன்று பயன்படுகிறதே தவிர, உலகை மாற்றும் சக்தியாக நாம் பயன்படுத்தவில்லை என்று கூறுகிறார்.

தப்பு செய்யும் போது நின்னுத் தடுக்காத வீரம்
தன்னைத்தானே கட்டியாளத் தெரியாத வீரம்
கள்ளுக்கடை வாசலுக்கு கதையளக்கும் வீரம்
ஜொள்ளுவிட்டு டாவடிச்சு சோரம் போன வீரம்

அந்தாதித் தொடை

1986–ஆம் ஆண்டு ரவி அவர்கள் சுகி சிவம் அவர்களுக்கு மாத்ருகா மந்திரத்தை உபதேசம் செய்து விட்டு இரவு நெடு நேரம் அளவளாவிக் கொண்டிருந்த வேளையில் நண்பர்கள் அனைவரும் உறங்கிவிட்ட பின் ரவி அவர்கள் உறங்காமல் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அந்த முணுமுணுப்பு, 51 வெண்பாக்களாக எழுந்துள்ளன அதை அவர் குருவணக்கமாக அந்தாதித் தொடையில் எழுதியுள்ளார். இதனை எழுத்தாளர் நா.ராமச்சந்திரன் இல்லத்தில் பாரதி கலைக் கழகத்தில் நடந்த விழா ஒன்றில் அவர் அதனைப் படிக்க சுமார் 50 கவிஞர்கள் அதை அமைதியாக அமர்ந்து கேட்டனர். படித்து முடித்தவுடன் கவிஞர் நா.சீ. வரதராஜன் ஐயா அவர்கள் எழுந்து யாரும் கைதட்ட வேண்டாம். அது சரியானது அன்று. கைதட்டி கொச்சைப் படுத்த வேண்டாம் அதற்குப் பதிலாக அனைவரும் எழுந்து நின்று மௌனமாக இந்தக் கவிதையின் நாயகனான குருநாதனை மானசீகமாக வணங்குவோம் என்று கூறியுள்ளார். அதைப் போன்று அனைவரும் எழுந்து நின்று குரு வணக்கம் செய்துள்ளனர்; அந்த வெண்பாக்களில் சில வரிகள்,

தும்மாட்டிக் காயுள்ளே தூவானம் விட்டதனால்
மம்மட்டி யில்மண் மணிக்கிறது கும்மிருட்டில்
கோடிமலர் பூத்திருக்கக் கண்கள் குருடாகி
வாடிச் சிலைத்த மனம்

வறுமையின் அடிமைகள்

வறுமை இன்று ஏழைகளை எப்படி ஆட்டிப் படைக்கிறது என்பதனைக் கவிதைகளில் அழகாக வடித்துள்ளார்.

பசித்த வயிற்றுக் குணவு கொடுக்கப்
பாட்டுத் திறத்தால் முடியாது
பசியை மறந்து பறந்து செல்லச்
சிறகுதர முடியும்
சிறகா உணவா சீக்கிரம் சொல் - பிறகு
இரண்டும் இன்றி ஏமாந்து விடாதே

என்று நகைச்சுவை கலந்த தொனியில் அவர் பசியின் கொடுமையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெடித்துப் பிறந்தவர்கள்

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் பல உயிர்களைச் சேதப்படுத்தியதைத் தனது கவிதைகளில் வடிவமைக்கிறார். இயற்கை கோரத்தாண்டவம் ஆடிய நிகழ்வைத் தனது கவிதைகளில் கண்ணகியையும் கடவுளையும் ஒப்புமைப்படுத்திக் கூறியுள்ளார்

அவளே சற்று நடுங்கும் வண்ணம்
அமைதி இழந்து குலுங்கும் வண்ணம்
என்ன நடந்தது யாரழு தாரோ
எங்கே ஒருகண் ணகியா இல்லை
இரணியன் மீண்டும் வந்துவிட் டானா

எனக் கூறுகின்றார்.

ஷேக்ஸ்பியர் கவிதையில் ஈர்ப்பு

சேக்ஸ்பியரின் கவிதைகளில் கவிஞர் மிகவும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். "டெம்பஸ்ட்" என்ற காப்பியத்தில் வரும் ஏரியலின் பாடலைப் பள்ளி வகுப்பில் ஒரு நாள் தலைமை ஆசிரியர் ஆன்ஸ்லம் நடத்தியதை நினைத்து அந்தப் பாடலைக் காவடிச் சிந்து மெட்டில்

எலும்புகள் இன்று பவளங்களாம்
விழியிரண்டும் நல்ல முத்துக்களாம்
எதுவும் அழிவதில்லை அவர் கோலத்திலே

என்று பாடியுள்ளார்.

கேள்விக்கென்ன பதில்

ஒரு முறை முகநூலில் நண்பர் ஒருவர் கேட்ட கேள்விக்கு நகைச்சுவையாகவும், அதே சமயம் சிந்திக்க கூடிய வகையிலும் பதில் அளித்துள்ளார். அதில் கேட்கப்பட்ட கேள்வி என்னவென்றால் தேவதூதர்கள், ஞானிகள் இவர்கள் படங்களுடன் மறைந்த நடிகர்கள் வன் கொடுமையாளர்கள் (ஹிட்லர்) போன்ற புகைப் படங்களைப் போட்டு இவர்களில் யார் மீண்டும் பிறக்க வேண்டும் என்று அந்த நண்பர் கேட்டதற்குத் "திருந்த வேண்டியவர்களே மீண்டும் பிறக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

கவிஞர்களின் கவிதைகளால் பிறந்த கவிதை:

இசைக்கவி ரமணனின் அற்புதமான பாடல் வரிகளிலிருந்து 'எனக்குத் தோன்றிய பாடல் வரிகள்' எனக் கவிதையைப் படைக்கின்றார்

காற்றோடு புல்லின் வளைவில் சாய்ந்து
நேற்றோரு சொல்லில் நெஞ்சம் தோய்ந்து
வசமாய் மாட்டிக்கொண்டது
ஒரு புல் போதும் விழா எடுக்க

ஒன்றிலிருந்து மற்றொன்று பிறக்கின்றது என்று கூறுகின்றார். இதைப் போன்று ஒரு விழா நிகழ்ச்சியில் மக்கள் அனைவரும் அரங்கத்தில் அமர்ந்திருந்தனர். அங்கு விரல் நகத்தில் சாயம் பூசப்பட்டிருந்த ஒரு காட்சியைக் கண்டு கவிதை ஒன்றை வடிவமைத்துள்ளார்

விரல் நுனிகளில் தீ தீ - அவள்
விரல் நுனிகளில் தீ
மிக அழகிய முகமும் - ஒரு
கொடியசைக்கிற உடலும்
இளவயதினன் எனினும் - அவள்
விரல் நுனிகளில் தீ

எனச் சிறிய பொருள் கிடைத்தாலும் அதனைக் கவிதையாக வடிவமைக்கும் திறன் படைத்துள்ளார்.

தாகூரின் பாடல் வரிகளிலிருந்து தனிமையைப் பற்றி ஆழ்ந்த சிந்தனைகளைக் கொடுத்துள்ளார்

தனிமையை நீயேன் தவிர்க்க வேண்டும்
தனிமைக்குள்ளே செல்
தனிமைக்குள் எத்தனைக் குரல்கள்
தலை நிமிர்ந்து நில்
ஈரடி ஈரடியாக உலகை
இழை பிரிகின்ற முனிவர் -வண்ணச்
சீரடி பிரிந்த சிலம்பின் ஒலியிலே
சித்திரம் தீட்டும் புலவர்

தனிமை நமக்கு அவமானம் அல்ல, அடையாளம். தன்னை உலகுக்கு காட்டும் சந்தர்ப்பம் என்று தனிமையைப் பற்றி தாகூரின் வரிகளால் பிறந்த கவிதையைக் கூறுகின்றார்

மேலும் இதைப் போன்று பாத்திமா பாபு அவர்கள் தொலைக்காட்சி நேரடிப் பேட்டி ஒன்றில் அவர் இல்லத்திற்கு நடந்து சென்றதை விவரித்துக் கொண்டிருந்ததை கேட்ட பின் சட்டென்று "நடந்து போகலாம் வா" என்றதொரு கவிதையைப் படைக்கின்றார்

நடந்து போகலாம் வா
காலார நடந்து செல்லலாம் - பல
காட்சிகள் கடந்து செல்லலாம்
வாகன இருக்கையில் முதுகும் மனமும்
வளைத்துக் கொண்டு அமர்வதைக் காட்டிலும்

என நடந்து செல்வதால் ஏற்படும் நன்மையினை சுட்டிக்காட்டுகிறார். மேலும் வேறு ஒரு நிகழ்வையும் இதில் சுட்டிக்காட்டுகின்றார் கவிஞர். அரிமா பாலகிருஷ்ணன் அவர்கள் முகநூலில் பதிவு செய்த பாடலைப் படித்துக் கவிதை ஒன்றை எழுதியுள்ளார்.

மாரித்தாய் புகழ்பாடி பூரித்தாய் அவளே நம்
சேரித்தாய் ஜெகமெல்லாம் செவிக்கும் தாய் உருவம்

இவ்வாறு மழையிலிருந்து அருவி, அருவியிலிருந்து ஆறு பிறப்பது போன்று ஒன்றுலிருந்து மற்றொரு கவிதை பிறக்கும் விதத்தை அழகாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

கையூட்டு ஒழிப்போம்

இன்றைய உலக வாழ்க்கையில் தலை விரித்தாடும் (லஞ்சம்) கையூட்டினை விவரிக்கும் வண்ணம் கவிதை ஒன்றைப் பாடலாகப் பாடியுள்ளார்

கையூட்டம்மா கையூட்டு
லஞ்சத்தின் பெயர் கையூட்டு
கிழவி காலை அமுக்கிவிட
கேட்டாயே நீ சாக்லேட்டு

இந்தக் கவிதை வரிகளில் இன்றைய அரசியல் அவலங்களையும் சித்திரித்துப் பாடியுள்ளார்.

வெட்கம் கெட்ட அரசியலாம்
விதவிதமான கட்சிகளாம்

வீதியில் நின்று நீதியைக் கூட
விற்கத் துணியும் தலைவர்களாம்

என இன்றைய அரசியல் நிலமையைத் துணிச்சலுடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆற்றுப்படை

ஆற்றுப்படுத்தல் என்பது வழிப்படுத்துதல் என்பது பொருள்.

இங்கே கவிஞர் தனது நண்பனின் மனைவி இறப்பினை நினைத்து அவரை ஆற்றுப்படுத்தி கவிதையின் மூலமாக ஆறுதல் கூறுகிறார்

உன் நெஞ்சம் வடிக்கின்ற கண்ணீரை என்
ஒரு வார்த்தை துடைத்து விடக் கூடுமோ நீ
முன்னிருந்த நிலைகுன்னை மீட்டெடுக்க
மொழிக்கற்றல் உண்டா உன் துயரம் எல்லாம்
என் பாட்டில் கரைந்திடுமா

என ஆற்றுப்படுத்துகிறார்.

'அணையாத சுடரேற்றுவேன்' என்ற கவிதைத் தொகுதியில் ரவி அவர்கள் பல்வேறு சமூகக் கண்ணோட்டத்துடனும் சமூகத்தின் அவலங்களையும் தனது வாழ்வில் நடந்த நிகழ்வுகளையும் கவிதைகளாகப் படைத்துள்ளார். மேலும் இந்நூல் பிற்காலத்தில் ஆய்வு மாணவர்களுக்கு முன்னோடியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

❖

வானவில் கே. ரவியின் அனுபவங்களும் இலக்கியங்களும்

•

முனைவர் மு.அய்யம்மாள்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு 12,
அலைபேசி எண் 9677410507

முன்னுரை

பஞ்சபூதங்களில் ஒன்று காற்று. அக்காற்றைப் பல களங்களில் கொண்டு சொல்கிறார். அத்துடன் தனது அனுபவக் கவிதையைக் கலந்து இலக்கியத்துடன் இணைந்து காற்றுப் போலப் பவனி வரும் கவிதை வழி தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

கவிதையும் ரவியும்

கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதைவிட, அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதை விட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையை ஒரு சாதனமாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. என்னை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன்.

“நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பி விட்டோம்“ என்ற பாரதி வேதத்தைத் தனக்கு வேதமாக ஏற்றுக் கொள்கிறார்.

குருவின் உபதேசம்

கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குச் செய்த செய்த உபதேசம் பகவத் கீதை, உபதேசம் என்பது ஒரு சீடனை அவன் குரு தன் உள்வெளிக்குள் வரவழைத்துத் தன் அனுபவத்தில் அவனைப் பங்கேற்க வைப்பது. முதலாவதாக குரு சீடனுக்குள் நுழைய வேண்டும். நுழைந்து நுழைந்து அவனுடைய உயிர் நிலையைத் தம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைக் கைப் பிடித்து மெல்ல உயர்நிலைக்குத் தம் அனுபவ நிலைக்கு ஏற்ற வேண்டும் என்கிறார்.

“காற்று வந்து கைப்பிடித்துக் கூட்டிச் செல்வது எவ்விடம்” என்ற கவிதை வரியின் பொருள். அந்தக் காற்று குருநாதனின் பிராண சக்தியே, குருவின் பிராண

சக்தியானது அவருடைய சுவாச கதியின் அதிர்வுகளான மாறிச் சீடனின் சுவாச கதியுள் நுழைவதே உபதேசத்தின் முதற்கட்டம்.

ரவியின் குருமந்திரம்

திருமூலரின் திருமந்திரம் சாயலில் தனக்குத் தோன்றிய பாடலைக் குருமந்திரமாகக் காட்சிப்படுத்தி உபதேசம் என்ற தலைப்பில் செய்யுள்களை எழுதுகிறார்.

“அமைதி கொடுத்துப்பே ரானந்தம் தந்து
சுமையகல வைத்துச் சுழுமுனையுள் செல்லும்
சமநிலையும் தந்துயிர் சாதிக்கப் பாதை
அமைத்துத் தருவது உபதேச மாமே”

என்றும்,

“மூச்சுக்கு மூச்சு முறையாகி உள்ளத்தின்
பேச்சுக்குப் பேச்சு பதிலாகி உள்விதியின்
ஆச்சரிய மாகி அறமாகி அத்தனைக்கும்
காட்சி தருவது தானுப தேசமே”

உபதேசம் அமைதியைக் கொண்டும், ஆனந்தம் தரும், யோகத்தின் வழி உயிர், சாதிக்கும் வழி செல்லும், மூச்சு அறமாகி எல்லா நற்கருணையும் தரும் உபதேசம் என்று குருமந்திரத்தின் வழி விளக்குகிறார்.

நந்திவர்மன் நாடகம்

நந்திவர்ம பல்லவனாக வானவில் ரவி நடிக்கிறார். நந்திவர்மன் சகோதரன் காடவர்கோன் நண்பன் சுசி சிவம் நடிக்கிறார். நாடகத்தை உருவாக்கியவர் தமிழ் ஆசிரியர் தண்டமிழ்க் கொண்டால் சிதம்பரம் சுவாமிநாதன், நந்திவர்ம பல்லவனின் அமைச்சராக அமிர்தலிங்கம் நடிக்கிறார்.

நாடகக் கதையில் நந்திவர்மனை வீழ்த்தி விட்டுத் தான் நாடாள வேண்டும் என்று அவன் தம்பி காடவர்கோன் திட்டமிடுகிறான், நந்திவர்மன் மாவீரன், தமிழ்ப்பித்தன் அவனைப் போர்க்களத்தில் வீழ்த்துவதைக் காட்டிலும் மிக எளிதாகக் தன் புலமையால் வீழ்த்தி விடத் திட்டமிடுகிறான், கடைசி நேரத்தில்

சகோதரப்பாசம் மேலிட்டு அந்தப் பாடலைப் பாட அவன் மறுக்கிறான், அவன் பாடத்தான் கேட்டால் எரிந்து விடுவோம் என்று தெரிந்த பின்னும் அவன் பாடியே தீர வேண்டும் என்று நந்திவர்மன் தூண்டுகிறான்.

காடவன் பாடல் பாடுதல்

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
யானும்மென் கவியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தியா பரனே”

அறச் சொற்கள் மிகுந்த பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த நந்திவர்மனாகிய ரவியின் மீது எரிதழல், மூண்டெழ, அத்தழலில் உயிரிழக்கிறார், அந்த நாடகத்தில் நாடகத்திற்கு உயிரூட்டி நடித்த பாங்கு சிறப்பிற்குரியது.

வாலியும் ரவியும்

ரவி அவர்களின் இல்லம், அங்கே எஸ்.எம்.சுப்பையா நாயுடு, ஏ.எஸ். நாராயணன் இவர்களுடன் வாலி இருக்க, நாராயணனைப் பற்றிய பாடல் ஒன்று பாடவேண்டும் எனக் கேட்க எனது ஊரும் ஸ்ரீரங்கம் தான் என்று கூறி ஐந்து நிமிடத்தில் வாலி பாடத் தொடங்குகிறார்.

"ரெண்டு பக்கம் காவேரி எங்கு ஊரு நடுவிலே
ரெங்க நாதசாமியோ ஆதி சேன் மடியிலே
சித்திரையில் தேரோட்டம் மாசியிலே படகோட்டம்
இத்தனையும் காணவரும் எத்தனையோ ஜனக்கூட்டம்
பக்தாளுக்குத் தெரியாதோ பெருமாளின் சங்கதி
உள்ளூரில் ரெண்டிருக்க உறையூரில் இன்னொருத்தி
கைவழியே நெய்வழியும் பொங்கலுண்டு காலையிலே
சித்திரான்னம் படைப்பதுண்டு மத்தியான வேளையிலே
ஊருக்கெல்லாம் சோறூட்டும் சாமியெங் சாமிதான்
நான் சமச்சுப் போடாட்டா நாள் முழுக்கப் பட்டினிதான்"

என நய்யாண்டி சுவை கூட்டப் பாடுகிறார். இப்பாட்டு பெருமாளே கள்ளத்துயில் நீங்கி எழுந்து வந்து சிவன் போல் தாண்டவம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாக்கித் தந்தது என்று கூறுகிறார். இதன் பிறகு வாலியைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் அவர் பாடிய பாடலை நான் ரசிக்காமல் இருந்ததில்லை என்று அவருடன் நடந்த இனிமையான சந்திப்பைக் கூறுகிறார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கவிஞர் வாலியை நான் பல ஆண்டுகள் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் அவருடைய பாடல் வரிகள் பல என்னை ஆட்கொண்ட வரிகளாக பல பாடல்களைக் கூறுகிறார்.

"மண்குடிசை வாசல் என்றால் தென்றல் வர மறுத்திடுமா
மாலை நிலா ஏழை என்றால் வெளிச்சம் தர வெறுத்திடுமா"

இயற்கையும் ஏழ்மை நிலை பற்றிய இப்பாடல் தன் உள்ளம் கவர்ந்த வரிகள் என்கிறார்.

“இந்தப் புன்னகை என்ன விலை என்
இதயம் சொன்ன விலை இவள்
கன்னங்கள் என்ன விலை - இந்தக்
கைகள் தந்த விலை”

கவிஞர் வாலியின் கள்ளம் கபடுமற்ற கவிதையுள்ளத்தை நான் நன்கு அறிவேன். புன்னகை என்பது இதயத்தோடு தொடர்புடையது. காதலியின் கன்னமோ காதலனின் கையோடு தொடர்புடையது என்ற நுட்பத்தை மிக எளிமையாக அவர் பாடியுள்ளதை நினைக்கும் போது அவரோடு உரையாடிய சந்தித்த நாட்கள் மீண்டும் மீண்டும் இன்பத்தைத் தருவதாகக் கூறுகிறார்.

“சொல்லும் சொல்லும் சேரும் போது கானமாகலாம்
சொல்கடந்து செல்லும் போது மோனமாகலாம்
சொல்மலர்ந்து சுடரெழுந்து ஞானமாகலாம்
செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம்“

முடிவுரை

சொல், மனம், அறிவு, கற்பனை, சக்தி எல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. இவற்றைக் கொண்டு வாழ்வில் எங்கும் நிறைந்திருக்கும் காற்றைப் போல் மகிழ்ச்சி காணலாம் என்பதை தன் அனுபவம் வழி படைத்துக் காட்டுகிறார் வானவில் கே. ரவி அவர்கள்.

❖

அணையாத சுடரேற்றுவேன் கவிதையில் விழுமியங்கள்

•

முனைவர் ஆ ஆதிலட்சுமி
தமிழ் உதவிப் பேராசிரியர் தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி
சென்னை.

வாழ்க்கையின் மிக உயர்ந்த அறங்கள் ஒழுக்க நெறிகள் பண்பட்ட வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதே விழுமியங்கள் எனச் சான்றோர்கள் குறிப்பிடுகின்றனர். Value *என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் விழுமியம் எனப்படும் அது மதிப்பு என்றும் பொருள்படும். இங்குக் கவிஞர் வானவில் கே.ரவி அவர்களின் கவிதைக் தொகுப்புகளில் ஒன்றான 'அணையாத சுடரேற்றுவேன்' என்னும் கவிதை நூலில் காணலாகும் விழுமியங்களைக் காணலாம்.*

உறுதி கொண்ட நெஞ்சம்

நாம் எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் முழுமன ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும் அச்செயல் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் சரி அச்செயலை செவ்வனே முடிக்க வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கின்றார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள்.

குயவனவன்
மண்னைச் சுடுவது மண்பானை ஆவதற்கே
எண்ணத் திலும்நெருப்பை ஏற்று

என்று உரைக்கிறார்.

மண் சுடுவதன் மூலம் பக்குவமடைந்து வேறுருவம் பெற்று மண்பானையாக உருவெடுக்கின்றது. மனிதனும் பிரச்சனைகளை உறுதி கொண்ட நெஞ்சுடன் ஏற்றுக் கொண்டு பக்குவம் அடைந்து மனிதம் என்ற நிலையை அடைகின்றான் என்று இக்கவிதை வரியின் மூலம் எடுத்துரைக்கிறார்.

மனித வாழ்வு

மனித வாழ்க்கை ஒரு வடிகால் என்றுரைக்கிறார் மனிதனின் புலன்கள் அதன் போக்கில் அலையும் இவற்றை உற்றுநோக்கின் அவை உண்மையன்று என்று எடுத்து இயம்புகின்றார்.

வாழ்க்கையொரு சின்ன வடிகால் புரியாத
போக்கில் அலையும் புலன்களுடன் - யாக்கை
மனமென்று மாயச் சகடம் உருட்டிக்
கனவென்று கண்மலரு மாம்

எனவே வள்ளுவர் வகுத்த வழியினைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதனை,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

என்ற குறள்வழி வாழ அறிவுறுத்துகிறார்.

மேலும் இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரையும் தமது கவிதையின் மூலம் தட்டியெழுப்புகிறார்.

உனக்கென் றியற்கை வகுத்த உணவு
களவு போனது போகட்டும்
திருட்டுக் கூட்டம் சிரித்து மகிழ்ந்து
உலகத் தையே ஆளட்டும்
அடங்கிப்போ நீ சாகும் வரை
முடங்கிக் கிட என்று சொல்லிக்
கனவுப் போர்வை தருவதற்கா
கவிதை எழுதுகிறேன் துயில்
கலையச் சொல்லி வேண்டுகிறேன் - உன்

துணிச்சலை நான் தூண்டுகிறேன்
கனவை உதறித் தள்ளிவிடு
துணிச்சலை நீ கையிலெடு

என்று கூறி மேலும் நம்பிக்கை என்னும் விதைகளை மக்களின் மனிதில் விதைக்கின்றார்.

நெஞ்சுரத்தை நேர்மை செய்து
நிமிர்ந்துநில்
நீலவானம் உனது சொந்தம்
பறந்து செல்
தட்டிக் கொண்டே - கதவைத்
தட்டிக் கொண்டே தாமதிக்காதே
எட்டியுதை - இதோ
சூழம் இருட்டைச் சுட்டுப் பொசுக்க
நெருப்பு விதை

"கனலாய் எழுகிறார். இதே போன்று மீசைக் கவிஞனும் "சிதையா நெஞ்சுகொள்" என்று புதிய ஆத்திச்சூடியில் எடுத்து இயம்புவதையும் இங்கு ஒப்பிட்டு காண்பது சாலச் சிறந்தது.

தட்டுங்கள் திறக்கப்படும் திறக்கவில்லை என்றால் தட்டிக்கொண்டேயிருக்காதீர் எட்டி உதைத்திடுங்கள் என்று உரைப்பது அதிலும் அவசரமான இந்த உலகத்திற்கும் பொருந்தும். மேலும், பாரதியார் 'பாதகம் செய்வோரைக் கண்டால் மோதி மிதித்துவிடு பாப்பா' என்று உரைப்பதை இங்கு நினைவூட்டுவது சிறப்பு.

இறைவனைக் காணுதல்

மானிடப்பிறவியில் அனைவரும் வேண்டுதல் இறைவனைக் காண விழைதல் இறைவனடி சேர்தல். அவ்விறைவன் எங்கும் நிறைந்தவன் மனிதனுள் இருக்கும் ஆணவம், பேராசைகள் பொய்கூறுதல் இவை போன்ற பலவும் இறைவனை அடையும் வாசலை அடைத்துவிடும் என்று கூறுகின்றார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள்

ஆணவம் கண்மறைக்கப் - பே
ராசைகள் பொய்வளர்க்க
வானமும் பூமியுமாய் - மெய்
வாசல் அடைத்திருக்கக்
காண முடியவில்லை

என்று தன் உள்ளே இருக்கும் குற்றங்களினாலேயே இறைவனைப் பலராலும் காண முடியவில்லை என்று எடுத்துரைக்கின்றார். மேலும் மற்றொரு கவிதையில் "புறவழகு' என்னும் தலைப்பில்

புறவழகு நிலையில்லை போக்குக் காட்டும்
பொய்த்தோற்றங்கள் புனைந்து கம்பி நீட்டும்
அறத்தினிலே காலூன்றி நிற்ப தொன்றே
அழியாத மலர்ச்சி யூட்டும்
இறையுணர்வில் தனையிழக்கும் உருக்கம் ஒன்றே
எந்நாளும் ஒளிகூட்டி வழியும் காட்டும்

என்ற உடல் நிலையாமையை எடுத்துக்கூறி அறத்தின் வலிமையை எடுத்துரைக்கின்றார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள். வெடித்துப் பிறந்தவள் (நிலநடுக்கம்)

இயற்கையின் எழிலுக்கு அளவுகோலே இல்லை. வருணனை செய்து ஒரு வட்டத்துக்குள் அடக்க வார்த்தைகள் இல்லை. எனினும் நிலத்தில் ஏற்படும் இயற்கைச் சீற்றத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள்.

பொறுமைக்கு எடுத்துக்காட்டாக கூறுவது பூமித்தாயையே! இங்கு சற்று மாறுதலாக சிந்திக்கிறார் 'சாது மிரண்டால் காடு தாங்காது என்னும் பழமொழிக்கு ஏற்ப பொறுமையாக இருப்பவள் கொதித்து எழுந்தால் என்னாகும் என்று விளக்குகிறார்.

அவளே சற்று நடுங்கும் வண்ணம்
அமைதி இழந்து குலுங்கும் வண்ணம்
என்ன நடந்தது யாரழு தாரோ
எங்கோ ஒருகண் ணகியா இல்லை
இரணியன் மீண்டும் வந்துவிட் டானா
தேவகு மாரனைச் சிலுவையில் அறைய
யாரோ திட்டம் இடுகின்றாரோ
மாமுனி வர்தவம் கலைப்ப தற்கே
மீண்டும் ஊர்வசி ஆடுகி றாளோ
....
ஊழிக் கூத்துக் (கு) ஒத்திகையோ
பாழில் வெடித்துப் பிறந்தவள் தானே
எங்கும் பரவசம் எல்லாம் அதிசயம்
தங்கும் வரையித் தரைதான் நிச்சயம்

என்று இயற்கையாக நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்க நிகழ்வினைக் கொண்டு காப்பியம், புராணங்கள் மற்றும் நிகழ்காலச் சிந்தனையோடு ஒப்பிட்டுக் காட்டியிருப்பது மிகவும் சிறப்புடையதாகக் காணப்படுகிறது.

இவ்வுலகில் வாழும் வரை தான் எல்லாம். உடலைவிட்டு உயிர் பிரிந்தால் இவ்வுலகம் இல்லை என்பதை எதார்த்தத்துடன் எடுத்துரைக்கின்றார்.

சமுதாயச் சீரழிவு

'வீரமாம் வீரம் என்னும் தலைப்பில் இயற்றியுள்ள கவிதை மனிதர்களுக்கான உண்மையான வீரம் பற்றி சுட்டிச் செல்கின்றார்.

வீரமாம் வீரம் வெத்துவேட்டு வீரம்

மாடுபுடிக்கப் பத்துப்பேரு மல்லுக்கட்டும் வீரம்
பொம்பளைங்க கிட்டப்போயி பொளந்து கட்டும் வீரம்

தப்பு செய்யும் போது நின்னுத் தடுக்காத வீரம்
தன்னைத்தானே கட்டியாளத் தெரியாத வீரம்

கள்ளுக்கடை வாசலுல கதையளக்கும் வீரம்
ஜொள்ளுவிட்டு டாவடிச்சு சோரம் போன வீரம்

பெத்தவரை இல்லத்துல சேத்துவிடும் வீரம்
வெக்கங்கெட்டுத் தலைவர்காலில் விழுந்துவிடும் வீரம்

எலும்புத் துண்டுக் காசைப்பட்டு ஓட்டுப்போடும் வீரம்
எவனெவனோ பஞ்சாயத்தில் எகிறுகிற வீரம்

ஜாதி மதம் பேசிகிட்டுப் பிரிஞ்சுநிக்கும் வீரம்
வீதிக்கொரு மாவீரன் போஸ்டருல வீரம்
வீரமாம் வீரம் வெத்துவேட்டு வீரம்

என்று நாட்டில் நடக்கும் எதார்த்தமான உண்மைகளை விளக்கி கூறியுள்ளார்.

விடுதலை

சட்டங்கள் அறிந்தவரும் மற்றும் கவிஞராகவும் விளங்கும் வானவில் ரவி அவர்கள் விடுதலையின் நிலையைப் பற்றிப் பேசுகிறார்.

அடக்கி ஆள நினைப்பவ ரைத்தோற்
கடிக்க முடிந்த விடுதலை
அமைதியாக ஒரு புரட்சி
செய்து காட்டும் விடுதலை

சாதி மதங்கள் சமத்துவமாகச்
சட்டம் செய்யும் விடுதலை
நீதிமன்றத்துக்கும் நீதி
சால்லிக் கொடுக்கும் விடுதலை

எத்தனை மக்கள் தடியடி பட்டும்
வீரத்தோடு தாங்கியது
எத்தனை இளைஞர் இரத்தம் சிந்தி
இன்னுயிர் ஈந்து வாங்கியது

கொதிக்கும் எண்ணைக் கொப்பறை தப்பி
முட்புதரில் தான் வீழ்ந்தோம்
முட்களுக்கிடையே மலர்களும் உண்டே

"எப்படியும் எழுந்து விட்டோம்"
என்றோம் எழுந்து விட்டோம்
இனிநாம் என்றும் அடிமைகள் இல்லை
இது போதாதா தம்பி

தெய்வம் உண்டு தெரியும் என்பார்
தெரியா தென்பார் சிலபேர்
தேசம் உண்டு தேசம் ஒன்று
இந்தியாவே அதன்பேர்
பொய்வேற்றுமைகள் போயொழியட்டும்
உறுதி பூண்டு நிற்போம்

கவிதைகளில் பலவகை உண்டு. ஆனால் எந்த வகையும் கவிஞனை கட்டுப்படுத்த முடியாது என்று கவிதைக்கு விளக்கம் தருகிறார் கவிமணி

உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை

எனவே பாடு பொருள்களைக் கவிஞன் தேர்ந்தெடுப்பதில் காலம் தான் அதனை தீர்மானிக்கின்றது. இதனையே கவிஞரும் கூறுகிறார்.

கவிதை என்றன் கை வாளில்லை
கவிதைக்கே நான் ஆளானேன் - புவி
சுழற்றுகின்ற வாளானேன்'

என்றும்,

நானழைக்க வருவாளா கவிதை நங்கை
நான் சொல்லும் உடையையா தேர்ந்தெடுப்பாள்

என்றும்,

மோடிவித்தைக் காரிக்கே வாக்கப் பட்டேன்

உலகதைத் திருத்த உதித்தாய் என்னுன்னே

மேலும்

நிலவை மலரை நின்று ரசிக்கும்
மனத்தில் வஞ்சம் வரமுடியாது
இசையில் கரையும் இதயத்துற்கு
சுயநலத்தின் சுவடும் ஏது.

இதன் வாயிலாக இயற்கையை நேசிக்க அனைவரையும் தூண்டுகின்றார். அப்படி நேசிக்கும் மனதில் வஞ்சம் தோன்றாது என எடுத்துரைக்கின்றார்.

இயற்கைச் சீரழிவு

ஒண்ட வந்த பூமியையே
நாசமாக்கும் கொள்ளையராய்க்
கண்டபடி வாழுகிறோம்
சண்டைகளும் போடுகிறோம்
எங்கள் செயல் கண்டு சினம்
கொள்வதிலும் நியாயமுண்டு
பொங்கலிட்டுப் பூஜிப்போம்
பொறுத்தருள வேண்டும் மாரி
கூழாக்க வருபவள் நீ
கொடுஞ்சினத்தில் சூறையாடிப்
பாழாக்க வேண்டுமா
பாராளும் மகமாயி

என இந்த உலகில் மக்கள் செய்யும் செயலை வெளிச்சம் போட்டு காட்டுகிறார்.

புல்லின் நுனியில் வானம் விரிந்து
கண்சிமிட்டி நகைக்கிறது

என்று இயற்கையின் அழகை புல் நுனியில் காட்டி எடுத்து இயம்புகிறார்.

சமுதாய சீரழிவைச் சுட்டுகிறார்

கையுட்டம்மா கையுட்டு
லஞ்சத்தின் பெயர் கையுட்டு
கிழவி காலை அமுக்கிவிடக்
கேட்டாயே நீ சாக்கிலேட்டு
அன்று முதல் இன்று வரை
எங்கும் எதிலும் கையுட்டு

இவ்வாறாக நாட்டில் நிகழும் சமுதாயச் சீரழிவை வெளிச்சம் போட்டு காண்பிக்கின்றார்.

நிறங்களின் வருணனை

விடமேரி னால்நீல கண்டன் நீரில்
விளையாடும் போதந்த மடுவில் பாம்புப்
படமேறி னால் நீல வண்ணன் கங்கைப்
படகேறி னால் நீல மேகராமன்
இடம் ஏறி னால் நீல அர்த்த நாரி
புலியேறி னால்நீல வஸ்த்ர தாரி
குடமேறி ஒளிசிந்தும் நீல வானம்
குறையாத கடல்நீலம் கண்கள் நீலம்

இப்பாடலில் நீல நிற வருணனையும் எதுகை, மோனை, சந்தம், நயம், இயைபு போன்றவை இடம் பெற்றுள்ளது கவிதைக்கு மேலும் அழகு கூட்டுகிறது.

தனிமனித ஒழுக்கம்

தானம் லஞ்சம் மறுத்து விடுங்கள் -
தன் மானம் காக்க வாக்களியுங்கள்

பணத்துக்காக ஓட்டை விற்றால்
அதுவும் ஒரு வகை விபச்சாரம்
நாட்டைக் கெடுக்கும் நயவஞ் சகத்துடன்
நடத்தலாமா வியாபாரம்
ஓட்டுச் சீட்டு காகிதமா

மானம் காக்கும் ஆயுதமா
முடிவு உங்கள் கைகளிலே
கைகுவித்து வேண்டுகிறேன்

இவ்வாறு தன் உணர்வின் வெளிப்பாட்டைக் காட்டுகிறார்.

அரசியல்: தர்மம் எங்கே?

மக்களின் சேவகர்கள் மக்களையே புறக்கணித்து
மாவீரர் போல் வேடம் போடுவதா
மன்றத்தில் கைகலப்பு வீதியெலாம் சலசலப்பு
மலிவான நாடகங்கள் ஆடுவதா
வக்கற்றுப் போனவரா வாக்காளர் பெருமக்கள்

என்று இக்கவிதையில் மக்களையே சிந்திக்கச் செய்கிறார்.

தேசப்பற்று

நூறு கோடி முகங்களாய்
மலர்ந்து நிற்கும் தேவதை
வேறு வேறு மொழிகளாகப்
பேசுகின்ற தேவதை

என இக்கவிதையின் வாயிலாக தேசப்பற்றை விளக்குகிறார். பாரதியாரின் கவிதையும் இங்கு காண்பதைச் சிறப்பாகக் கருதுகிறேன்.

முப்பது கோடி முகமுடையாள் - உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் - எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்

வாழ்க்கை

கூத்து நடக்கையிலே
கூட நடிப்பார்கள்
கூத்து முடிந்ததுமே
கூட்டம் கலைந்துவிடும்
கூத்தன் அவனன்றிக் கூட்டில் எதுபறவை

என்னும் கவிதையில் இறைவன் ஒருவனே நம்மை ஆட்டிவைப்பவன் அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதை விளக்குகிறார்.

வாழ்க்கை என்பது யார் அறிவார். பிறப்பு இறப்பு என்பது இறைவன் செயல். இதனையே சித்தர் பாடல் ஒன்று சித்தரிக்கின்றது.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

ஜாதி ஒழிப்பு

ரத்தத்தில் சாதி என்ற
ரகசியக் குறியீ டுண்டா - *23*

மேலும்

நிமிர்த்தடா நெஞ்சை இன்றே
நிகழ்த்தடா அறப்போர் சாதி
உமியினை விலக்கி உள்ளே
ஒளியினைப் பார டாநீ

என்று சாதி ஒழிப்பு பற்றியும் தன் கருத்தினை பதிவு செய்துள்ளார். நிறைவாக மனித வாழ்விற்குத் தேவையான வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தும் கவிதையில் தந்துள்ளார். மேலும் மகாகவி பாரதியாரின் தாக்கம் புலப்படுகின்றது. தம் மனதில் எழும் வினாக்களையே மக்கள் மனதில் அணையாத வண்ணம் சுடரேற்றுகிறார் கவிஞர் வானவில் கே.ரவி

❖

காற்று வாங்க போனேன் – உபதேசம்

•

முனைவர் செ.ஆனந்தி
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, தி.நகர், சென்னை – 17

முத்தமிழ் இலக்கியங்கள், பகுத்தறிவுப்படைப்புகள், பக்தி, நம்பிக்கை என எண்ணிலடங்காத படைப்புகள் அனைத்தும் முந்திக் கொண்டு போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன ஏதோ ஒரு நீதியை உரைக்க. கடந்த கால வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியத்திற்கென்று ஒரு இலக்கணம் உண்டு. அப்படியெனில் நிகழ்கால வாழ்விற்கு.

6 மணி ஆச்சி இன்னுமா தூங்கரது என்பதில் தொடங்கி, மணி 10 ஆச்சி இவ்வளவு நேரம் தூங்காம இருந்தா உடம்பு என்னத்துக்காகும் என்பதில் முடியும் வரை இந்த அறிவுரைகளே நம் நிகழ்கால வாழ்வை நகர்த்திச் செல்கிறது. பொதுவாக எதை எழுதினாலும் பேசினாலும் சொல்லவந்த காதலாக இருந்தாலும் காயமாக இருந்தாலும் ஒளிவு, மறைவு இல்லாமல் உடைத்து சொல்லிவிட வேண்டும் என்ற நோக்கம் வரவேற்கத்தக்கது. அந்த வகையில் கவிஞர், வழக்கறிஞர் வானவில் கே. ரவி அவர்களின் 'காற்று வாங்கப் போனேன்' என்ற சுயசரிதை நூலும் மனம் திறந்துள்ளது. நிவேதிதா பதிப்பகத்தாரால் 2019இல்

பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 53 கட்டுரைகளைக் கொண்டு, ஒவ்வொன்றும் தலைப்புகள் இல்லாமல் 278 பக்கங்களைத் தாங்கியுள்ளது. இக்கட்டுரைகளில் பதினோராவது கட்டுரையை உபதேசம் என்ற தலைப்பு கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

உபதேசம்

உபதேசம் என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். இச்சொல்லை இரண்டாகப் பிரித்துப் பொருள் கொண்டால் உப என்பது ஆரம்பம் என்றும் தேசம் என்பது ஒரு பகுதி அல்லது இடம் என்றும் பொருள் கொள்ளலாம். அந்த வகையில் உபதேசம் என்பதை நீதி, அறம், அறிவுரை என இவற்றின் தொடக்கமாகப் பொருள் கொண்டு, மிகப் பெரிய நீண்ட கதைக்குள் சில உபகதைகள் இடம் பெறுவதுண்டு அதுபோல இப்பரந்த உலகத்தில் காணப்படும் பலநாடுகளையும் நாட்டில் காணப்படும் பல தேசங்கள் என இருவகைப் பொருள் கொள்ளலாம். இதைத்தான் ஆசிரியர்அவர்களும், கதைக்குள் உபகதைகள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது ஒரு பெரிய வெளியில் சிறிய பகுதியாக இருக்கும் வெளி அல்லது இடம் உபதேசம். பாரததேசத்தில் தமிழ்நாடு ஓர் உப–தேசம் என்று சொல்லலாம்[1] என்று உபதேசத்திற்கு இருவகை விளக்கத்தை முன்வைக்கிறார்.

புரிதல்

மனிதனுக்கும் மனிதனுக்குமாக உள்ள உறவின் புரிதல், சமுதாயம் மக்களுக்குமான புரிதல், இயற்கைக்கும் மனிதனுக்குமான புரிதல், இயற்கைக்கும் இயற்கைக்குமான புரிதல், அதாவது மீனுக்கும் நீருக்கும் உள்ள உறவு, காற்றுக்கும் மரங்களுக்கும் உள்ள உறவு, மனிதனுக்கும் அவன் குருதிக்கும் உள்ள உறவு என இப்பரிமாணங்கள் அனைத்தும் சீரான புரிதலோடு இருக்க இங்கு உபதேசம் எதற்கு என்ற கேள்வி எழும்புகிறது. அப்படியெனில் சீரான புரிதல் இல்லாதவிடத்திலே நமக்கு உபதேசத்தின் தேவை அவசியமாகிறது. அப்படித்தான் அர்ச்சுனனுக்கும் போர்க்களத்தில் தேவைப்பட்டது. நீதி, இரக்கம், நல்லது, தருமம், தானம், அறம், ஒழுக்கம் என்பது உபதேசத்தின் ஆணிவேராகும். இந்த ஆணிவேர்கள் சற்று ஆட்டம் கண்டபோதுதான் பல நீதிமான்கள் தோன்றி

நீதியை நிலைநாட்டி உள்ளனர். நாம் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கைப் பாதையில் திடீர் ஏமாற்றம், இழப்பு, எதிர்பாராத ஏமாற்றம் ஏற்படுகிறது. அவ்வேளையில் அதை உந்தித்தள்ள ஊன்றுகோலாக ஒரு அறிவுரை தேவைப்படுகிறது. இதை அறிந்துகொள்ளப் புரிதல் என்பது மிகவும் அவசியமாகிறது. உறவுகளின் புரிதல்களில் மிகவும் உன்னதமானதும் உயர்வானதும், குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு. இந்த உறவின் புரிதலை ஆசிரியர் மிகத் தெளிவாக விளக்குகிறார். ஒரு சீடனை அவன் குரு தன் உள்வெளிக்குள் வரவழைத்துத் தன் அனுபவத்தில் அவனைப் பங்கேற்க வைப்பது முதல்கட்டம் என்கிறார்ஆசிரியர். ஒரு சீடனை அவன் குரு தன் உள்வெளிக்குள் வரவழைத்துத் தன் அனுபவத்தில் அவனைப் பங்கேற்கவைப்பது என்று புரிந்து கொள்ளலாம். அதற்கு முதற்கட்டமாக, குரு சீடனுக்குள் நுழைய வேண்டும். நுழைந்து அவனுடைய உயிர்நிலையைத் தம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைக் கைப்பிடித்து மெல்ல உயிர்நிலைக்கு, தம் அனுபவ நிலைக்கு ஏற்ற வேண்டும் என்று விளக்கியுள்ளார் ஆசிரியர். மேலும் இதனை விளக்கத் தன்னையே உதாரணமாக்குகிறார்.

காற்று வந்து கைப்பிடித்து அழைத்துச் சென்றதான ஒரு கவிதையில் காற்றுதான் ஆசிரியரின் குரு என்பதைப் பதிவுசெய்கிறார். காற்று குருநாதனின் ப்ராணசக்தியே! குருவின் ப்ராணசக்தியானது அவருடைய ஸ்வாஸகதியின் அதிர்வுகளாக மாறி, சீடனின் ஸ்வாஸகதியுள் நுழைவதே உபதேசத்தின் முதற்கட்டம்3 என்று உபதேசத்தின் முதல்படியைப் பயில்விக்கிறார். இதுதான் உபதேசம் செய்பவர்களுக்கான சிறந்த மந்திரம். புரிதலையும் – புரிதலில் உபதேசத்தையும் விளக்கிய ஆசிரியர், முன்னோர்கள் பெற்ற உபதேசத்தோடு நம்மைப் பிணைக்கிறார்.

கற்றுணர்தல்

எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும் துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குரு மணியும் – பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதாதேவிக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன் என்று சமர்ப்பணம் செய்துள்ளார். 1910இல் ஞானரதம் என்ற நூலைப் பதிப்பிக்கும் போதும் ஓம் ஸ்ரீமதி

நிவேதிதா தேவிக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டது என்றும் பதிவு செய்துள்ளார் பாரதியார்.

நிவேதிதாவைச் சந்திப்பதற்கு முன் இருந்த ப்ரம்மசார்யம் போற்றிய பாரதி. நிவேதிதாவைச் சந்தித்த பின் (சற்றும் பேசாத காரியம் பேசினார்) பற்றற்றதைப் பற்றச் சொன்னார். பற்றியப் பின்பு பெற்றதை என்னவென்று சொல்வேன்? சற்றும் பேசாத காரியம் பேசினார் தோழி. என்ற நிவேதிதாவின் உபதேசத்திற்குப் பிறகு இருந்த பாரதிவேறு. இதைச் செல்லம்மாள் அவர்களே பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

நிவேதிதா குரு என்பதற்குச் சிறு உதாரணம். கருகிப் போன எலும்புகளும்கூட உயிர்பெற்று அசையத் தொடங்குகின்றன. அவற்றுக்குள் நிவேதிதா செலுத்திய உயிர்மூச்சே காரணம் என்று நிவேதிதா நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் டாக்டர் ராஷ்பிகாரிகோஷ்4 அவர்கள் பேசிய பதிவோடு, நிவேதிதாவிடம் ஒரு மாபெரும் சக்தி இருந்தது. அவர் அந்தச் சக்தியை மற்றவர்களின் வாழ்க்கையில் முழுவலிமையோடு பிரயோகித்தார் என்ற தாகூரின் கூற்றை உள்வாங்கி உணர்ந்தவர் பாரதியார். உள்வாங்கி உணர்ந்த உணர்வினால் நிவேதிதாவைத் தன் குருவாக ஏற்று, தொடர்ந்து வெளிவந்த தனது நான்கு படைப்புகளையும் நிவேதிதாவிற்குச் சமர்பித்துள்ளார் பாரதியார்.

அமைதி கொடுத்துப்பே ரானந்தம் தந்து
சுமையகல வைத்துச் சுழுமுனையுள் செல்லும்
சமநிலையும் தந்துயிர் சாதிக்கப் பாதை
அமைத்துத் தருவ(து) உபதேச மாமே

பாரதிக்குப் பொருத்தமான வரிகளைக் கவிஞர் வண்ணம் தீட்டியுள்ளார். மேலும் உபதேசம் ஒரு காட்சியாகக் கூட இருக்கலாம் என்பதை ஆசிரியர் இங்கு பதிவு செய்கிறார்.

ஆராய்ந்துணர்தல்

ராமகிருஷ்ண பரமஹம்சர் விவேகானந்தருக்குத் தந்தது போல உபதேசம் ஒரு தொடுகையாக இருக்கலாம் என்கிறார் கே. ரவி அவர்கள். விவேகானந்தர் அவர்கள் எதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ள மாட்டார். ஏன்? எதற்கு? எப்படி? என்பதைச் சோதித்து ஆராய்ந்து பார்க்கும் குணம்

கொண்டவர். அப்படி இருக்கையில் பரமஹம்சரையும் சோதித்துப் பார்த்தே தனது குருவாக ஏற்றுக் கொண்டார். பரமஹம்சர் ஒருமுறை, கடவுளை உணர வேண்டும் என்றால் பெண், பொன் இவற்றின் மீதுள்ள ஆசையை விட வேண்டும் என்று கூறினார். அதை விவேகானந்தரும் சோதித்துப் பார்த்தார். பரமஹம்சர் வெளியே சென்றிருந்த தருவாயில் அவர் தலையணையின் கீழ் ரூபாய் நோட்டை மறைத்து வைத்தார். வெளியில் இருந்து வந்த பரமஹம்சரும் தலையணையில் தலைசாய்த்தார். சாய்த்த மறுமகணமே தலையில் தேள் கொட்டியது போன்று இருந்ததால் கட்டிலிலிருந்து குதித்தார். மெத்தையை உதறிய போது, ரூபாய் நோட்டு கீழே விழுந்தது. இதைச் செய்தது விவேகானந்தன் என்பதும் தன்னைச் சோதிக்கச் செய்தான் என்பதையும் உணர்ந்தார் பரமஹம்சர். விவேகானந்தரும் பரமஹம்சரை உணர்ந்தார். குருவாக ஏற்றுக் கொண்டார்.

தன்னுள் விரிந்த தனிவெளியில் தத்துவமாய்
இன்னொன்றை வைத்திழைத்துத் தானும் அதுவாகி
முன்சென்(று) உயிர்த்துயிர் மூலத்தை ஆட்கொள்ளும்
உண்மைப் பிணைப்பே உபதேச மாமே

என்ற வரிகள் சொல்லளவில் மட்டும் உபதேசம் இருக்கக் கூடாது மூலத்தை ஆட்கொள்ளும் உண்மைப் பிணைப்பாக, செயலிலும் ராமகிருஷ்ணரைப் போன்று வாழ்ந்தும் காட்ட வேண்டும் என்பதை நம்மளவில் உபதேசமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர் சொல்லாமல் சொல்கிறார்.

ஒரு சொல் - உபதேசம்

உலகெலாம் என்ற ஒரு சொல் உபதேசமாக இருக்கலாம். ஒரு சொல்லும் ஒரு ஆயுதம் தான். அதுவும் ஒருவரின் வாழ்வை மாற்றும் தன்மை படைத்தது. சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க நாயன்மார்களின் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்க எண்ணி ஊர்ஊராகச் சென்று பல தகவல்களை இலக்கியம், கல்வெட்டு, வாய்வழிச் செய்தி, அடியார் கதைகள் என அனைத்தையும் திரட்டிய சேக்கிழாருக்கு, இறைவன் எடுத்துக் கொடுத்த முதலடியே உபதேசமானது.

வெளியே இருந்துவிளக் கேற்றிவைக் காமல்
ஒளியாகி உட்புகுந்(து) ஊடுருவிச் சென்று

வெளியையே உட்கொள்ளும் வித்தை அறிவித்(து)
ஒளியாக்கும் உண்மை உபதேச மாமே

சனகாதி முனிவருக்குச் சிவபெருமான் செய்தது போல – அதுவும் உபதேசம் தான் என்கிறார் ஆசிரியர்.

மூச்சுக்கு மூச்சு முறையாகி உள்ளத்தின்
பேச்சுக்குப் பேச்சு பதிலாகி உள்விதியின்
ஆச்சரிய மாகி அறமாகி அத்தனைக்கும்
சாட்சி தருவது தானுப தேசமே

சனகாதி முனிவர்கள் நால்வரும் கேள்வி மேல் கேள்வி கேட்ட வண்ணம் இருந்ததால், சிவபெருமான் அவர்களுக்கு அருளையும் அமைதியையும் தனது சின்முத்திரையால் விளக்கினார்.

சொல்லி உணர்தல், சொல்லாமல் உணர்தல், கண்டு உணர்தல், கேட்டு உணர்தல் என இப்படித்தான் உபதேசிக்க வேண்டும் என்பதில்லை, ஒரு கடிகையில் நிகழ்ந்துவிடக் கூடியது உபதேசம். உபதேசத்திற்குக் காலச்செலவு தேவை யில்லை ஒரு கணம் போதும். எப்படி வேண்டுமானாலும் நிகழலாம்; யார் மூலமாக வேண்டுமானாலும் நிகழலாம். இப்படித்தான் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு ஒரு கணப்பொழுதில் ஒரு கடிகையில் சொல்லியிருப்பார். உபதேசம் என்றதும் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொன்னது என்பதே நம் அனைவரின் எண்ணத்தில் உதயமாகும் ஒன்று. இக்கட்டுரையும் மகாபாரதத்தில் ஒரு பகுதி பகவத்கீதை என்றே தொடங்குகிறது. இக்கட்டுரை ஒரு கேள்வியாகவும் தொடங்குகிறது. அக்கேள்வி என்னவென்றால் மகாபாரதம் என்பது ஒரு மிகப் பெரிய வரலாற்றைத் தாங்கியுள்ள நூல். அதில்ஒருபகுதிதான்பகவத்கீதை. எதிர்எதிரே வீரர்களின் ஆயுதங்கள் குருதியையும் உயிரையும் உறிஞ்சி வெற்றிவாகை சூடக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு சூழல், இச்சூழலில் போர் நடந்து கொண்டிருக்கும் அக்கணத்தில், 18 அத்யாயங்களைக் கொண்ட மிக நீண்ட செய்யுளான பகவத்கீதையை, கிருஷ்ணன் போர் நடக்கும் தருவாயில் போர்க்களத்தின் நடுவே அர்ச்சுனனுக்கு உபதேசித்திருக்க முடியுமா? இது சாத்தியம்தானா? என்ற கேள்விக்குத் தனது கவிதை வரிகளிலேயே பதிலுரைக்கிறார்.

ஓதி உணர்விப்ப(து) ஏதுமில்லை உள்ளுக்குள்
ஊதி உலைவைத்(து) ஒருகவளம் சோறாக்கிப்
பாதிநீ பாதிநான் என்று பகிர்ந்துண்ணும்
பேதமில் லாதது ப்ரம்மோப தேசமே

போர்க்களத்தில் உபதேசம் செய்திருக்க முடியுமா? என்ற கேள்விக்கு ஒரு கடிகையும் ஒரு கணப்பொழுதுமே போதும் என்ற பதிலே ஆசிரியரின் முடிவான பதிலாக இக்கட்டுரைப் பதிவு செய்கிறது.

காற்றின் உபதேசம்

கடற்கரைக்குக் காற்று வாங்கச் சென்ற போது, ஏலேலோ பாட்டு கைப்பிடித்து அழைத்துச் சென்று, செம்படவன் மூலம், பிரபஞ்சத்தின் அடிப்படை உபதேசத்தைப் பெறச் செய்தது பாரதிக்கு. அதுபோல ஆசிரியர் கே.ரவி அவர்களையும் 1988இல் காற்று வந்து கைப்பிடித்து அழைத்துச் சென்றதில், திருமூலரின் மந்திரம் போல 100 கவிதை ஊற்றெடுத்துள்ளது. அதற்கு குரு மந்திரம் எனப் பெயர் சூட்டப்பட்டு, அதிலொரு கிளையாக ஐந்து உபதேச மந்திரத்தைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். ஒரு படைப்பு எண்ணத்தோடு ஒன்ற வேண்டும். காலத்தோடு இணைய வேண்டும், அப்படைப்பு ஒரு தேடலைத் தூண்ட வேண்டும். அந்த வகையில் இந்நூலில் இடம்பெற்ற இக்கட்டுரையும் கவிதைகளும் உபதேசம் என்ற கருவை உருவாக்கி, அதன் மேன்மையை இலக்கியப் பதிவுகளோடு இணைத்து, வாழ்வின் நிலைப்பாட்டை உணர்த்திச் செல்கின்றது.

❖

வானவில் கே. ரவியின் மெய்யியல் நோக்கு

•

முனைவர் சு.இராசாராம்
தமிழ்த்துறை தலைவர், அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி – 3

ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் அருட்செல்வர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் நடத்தி வரும் வள்ளலார் – காந்தியடிகள் விழாவில் ஒருநாள், 1970 என்று நினைக்கிறேன். கவிஞர் தேவநாராயணன் இறைவணக்கம் பாடினார். அவர் பாடிய பாடல் பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வரும் கலைமகள் துதி.

தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல்
சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல காட்டல்
கண்ணீர்த்
துளிவரவுள் ளுருக்குதலிங் கிவையெல்லாம் நீயருளும்
தொழில்களன்றோ
ஒளிவளரும் தமிழ்வாணீ அடியனேற் கிவையனைத்தும்
உதவுவாயே.

"அவர் பாடும்போது ஏனோ தெரியவில்லை என் கண்கள் கலங்கின. என்னைச் சுற்றி நிறையபேர் இருந்தனர் என்பதை மறந்து நான் கண்ணீர் சொரிந்து நின்றது எனக்கே

அதிசயமாய் இருந்தது. அது என்னை மீறி நடந்த செயல். காரணம் புரியவில்லை. என் அகங்காரத்தை ஊடுருவிச் சென்று உயிர்நிலையை அளாவிப் பிசைந்து, சுற்றம் மறக்கச் செய்து, ஏன், என்னையே நான் மறக்கச் செய்த அந்தப் பாட்டு வரிகளை எண்ணி எண்ணி வியந்தேன். மெய்மறத்தல் என்பதை எனக்கு நிதர்சனமாக உணர்த்தியது அந்தப்பாடல்". இதுவே மெய்யான தரிசனம் என்று குதிக்கத் தொடங்கினாள் மனோன்மணி.

புத்தி சிகாமணியோ தன் வேலையைக் கச்சிதமாகச் செய்யத் தொடங்கினான்.

"நமக்கு என்ன தெரியும் என்பதில் தெளிவு வேண்டும். அதைப் பிறர்க்குச் சொல்ல முயலும் போதும் தெளிவாகச் சொல்ல வேண்டும். சிந்திப்பார்க்கே களிபெருகுமாறு அவர்கள் உள்ளங்களில் ஆனந்தக் கனவுகள் பல காட்ட வேண்டும் கேட்போர் மனமுருக வைத்து, அவர்களறியாமல் கண்ணீர் பெருக்கெடுக்கச் செய்ய வேண்டும். ஈதனைத்தும் உன் அருளால் மட்டுமே கிடைக்கக் கூடியவை. இவை அனைத்தையும் எனக்கு நீ அருள வேண்டும். இவ்வாறு தன்னுள் தமிழ்க் கவிதைகள் ஊற்றெடுக்கும் சுடராக விளங்கும் கலைமகளைப் பாரதி வேண்டுகிறான்"

மனோன்மணி பெற்ற அனுபவமே கவிஞர் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனை; முதல் தரிசனம். கவிஞரின் மெய் யியல் கதவு திறந்தது. புகுமுக வகுப்பு முடிந்து பி.ஏ சேர வேண்டும். அதிலும் ஒரு போராட்டம். ஒரே சமயத்தில் ஆங்கில இலக்கியத் துறையில் சென்னை இராயப்பேட்டையில் உள்ள புதுக்கல்லூரியிலும், மெய்யியல் துறையில் மயிலை விவேகானந்தா கல்லூரியிலும் கவிஞருக்கு இடம் கிடைத்தது. நேராக, விவேகானந்தா கல்லூரி மெய்யியல் துறைக்குச் சென்று அப்போது துறைத்தலைவராக இருந்த பேராசிரியர் த.ந. கணபதி அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்து மெய்யியல் துறையில் சேர்கிறார். அந்த வகையில் கவிஞர் வானவில் ரவி ஒரு மெய் யியல் மாணவர்.

கவிஞர் வானவில் ரவி, நிறைய எழுதி வருகிறார். 'நமக்குத் தொழில் கவிதை' என்னும் நூலை ஒரு மாதத்திற்குள் எழுதி முடித்ததாகக் கூறுகிறார். ஆங்கிலத்தில் எழுதிய சட்ட நூல்கள் இரண்டையும் அப்படித்தான் எழுதியதாகக் கூறுகிறார். ஆனால்

'இருபதாம் நூற்றாண்டு இயற்பியல் வரலாறு' என்னும் நூலை எழுதி முடிக்கச் சில ஆண்டுகள் ஆயின என்கிறார். காரணம் அது அவர் படிக்காத அறிவியல் பற்றிய நூல். பல ஆங்கில நூல்களைப் படித்துப் பயின்று எழுத வேண்டியிருந்தது என்கிறார். அதே போல் 'வெர்ஸஸ் ஆப் விஸ்டம்' என்ற ஆங்கில நூல் எழுதவும் பல ஆண்டுகள் ஆயின என்கிறார். அதற்குக் காரணம், அதை அவர் தன் போக்கில் சிந்தித்து எழுதவில்லை. அதன் ஒவ்வொரு பகுதியையும் எழுதும் போதும் சிந்தனை முயற்சி அதிகம் குறுக்கிடாமல், உள்ளூக்கம் அவரைத் தூண்டக் காத்திருந்து, காத்திருந்து எழுதிய நூல் என்கிறார். அவ்வாறே, "ப்ரும்ம சூத்ரா த காஸ்மிக் கோட்" (Brahma Suthra, the Cosmic Code) என்ற ஆங்கில நூலைக் கடந்த பத்து ஆண்டுகளாக, உள்ளூக்கம் தூண்டக் காத்திருந்து, காத்திருந்து எழுதி வருவதாகக் கூறுகிறார்.

இவ்வாறு பல்வேறு நூல்களையும் "நான் எதற்காக எழுதுகிறேன்?" என்ற வினாவைத் தனக்குள்ளேயே எழுப்பிக் கொண்டு அதற்கு அவர் பதிலும் கூறுகிறார். அவர் தரும் பதில்:

"எதை என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லையோ அதை எழுதுகிறேன். அதை என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை என்பதுதான், நான் அதை எழுத ஒரே காரணம்; நானறிந்த ஒரே காரணம்".

"நூல்கள் எழுதி அதன் மூலம் பேரும் புகழும் பெற்று வாழ வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. இந்த நூல்களை ஈன்றெடுத்த காலமே அவை எங்கே, எப்போது போயடைய வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும். காலத்தை நான் தேடிப் போவதில்லை; காலமே என்னை நாடி வந்து பற்றிக் கொள்கிறது" என்று கூறுகிறார்.

இதற்குப் ஃபிரான்ஸிஸ் தாம்ஸன் என்ற ஆங்கிலக் கவிஞனின் கவிதையை எடுத்துக்காட்டுகிறார் கவிஞர் வானவில் ரவி. எத்தனையோ அடியார்கள் இறைவனைத் தேடி அலைபாய்ந்திருக்கும் வரலாறுகளுக்கு இடையில், ஃபிரான்ஸிஸ் தாம்ஸனைத் தேடி வந்து துரத்துகிறதாம், சொர்க்கத்தின் வேட்டை நாய். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவன் அலைபாய்கிறான். எங்கெங்கோ ஓடுகிறான். நட்சத்திர

மண்டலங்களுக்கெல்லாம் சென்று புகலிடம் கேட்கிறான். எதுவுமே அவனை ஒளித்து வைத்துக்கொள்ள முன்வராத நிலையில், "ஐயோ நான் தோற்றேன்" என்று அவன் வீழ்கிறான். அவனைத் துரத்தி வந்த சொர்க்கத்தின் வேட்டை நாயான இறைவனே தன் உண்மையான புகலிடம் என்பதைக் கடைசியில் உணர்கிறான். " The Hound of Heaven" என்ற அந்த அருமையான ஆங்கிலக் கவிதை:

இரவு பகலாக அவனிடமிருந்து தப்பிக்க நான் ஓடிக் கொண்டிருக்கிறேன். காலச் சந்திகளின் ஊடே, என் நெறியற்ற குறுக்குப் பாதைகளின் ஊடே. கண்ணீர்த் துளிகளுக்கிடையில் ஒளிந்து கொண்டேன்; ஏதோ ஒரு நம்பிக்கைத் தோற்றம் காட்டிச் சலசலக்கும் சிரிப்பலைகளினூடே விரைந்தேன். எதிர்பாராமல், திடீரென்று அச்சம் என்ற அதல பாதாளத்தில் வீழ்ந்தேன். ஆனால், நிதானமான விரட்டலில், நிலைகுலையாத கதியில், கணிக்கப்பட்ட விரைவோடு, கம்பீரமான கலைநயத்தோடு என்னைத் துரத்தித் துரத்தி வரும் அந்த வலிமையான பாதங்கள்; அவற்றைக் காட்டிலும் ஓர் அவசர அருகில் ஒலிக்கிறது ஒரு குரல்: "என்னை விட்டு ஓடும் உன்னை எல்லாமே கைவிட்டு விடும்"

ஃபிரான்ஸிஸ் தாம்ஸன் என்னும் அந்தக் கவிஞனைத் துரத்திய சொர்க்கத்தின் வேட்டை நாய் போல், காலம் தன்னைத் துரத்தித் துரத்திப் பிடித்து எழுத வைக்கிறது என்கிறார் கவிஞர் வானவில் ரவி. (காற்று வாங்கப் போனேன், பக். 251 – 53)

என் மூலமாக என்னென்ன படைப்புகள் உருவாக வேண்டும் என்பது இறைவன் திட்டமோ அவை உருவாகியே தீரும். காத்திருப்பது மட்டுமே என் பணி. கொக்குத் தவத்தில் காத்திருக்கிறேன். தக்க நேரத்தில் அதன் குத்தொக்கச் செயல்படுவேன். (கா. வா. போ. ப.255)

38 ஆண்டுகளுக்கு முன் கவிஞர் எழுதிய ஒரு கவிதை

வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்
வாழ்க்கை என்றேன் அதில் மூழ்கிவிட்டேன்.
கனவுக்கடலின் நடுவினிலே நான்
காகிதப் படகாய் மிதந்திருந்தேன் - என்
கலங்கரை விளக்கங்கள் மூழ்கியதாலே

காற்றின் கருணையைப் பார்த்திருந்தேன்
கரைவரும் என்று காத்திருந்தேன்
காத்திருந்தே மெல்லக் கரைகின்றேன். (கா. வா. போ. ப. 256)

ஐம்பூதங்கள் - உலகம்

மெய்யியலையும் அறிவியலையும் இணைத்துப் பார்க்கும் போக்கு கவிஞர் ரவியின் சிறப்பாக உள்ளது. பஞ்ச பூதங்கள் எனப்படும் ஐம்பூதங்களை அறிவியலோடு முரண்படாமல் விளக்குகிறார்.

சாதாரணமாக, நம் புலப்பாட்டுக்கு உள்ளாகும் பொருட்கள் மூன்று நிலைகளில் இருப்பதாக விஞ்ஞானம் சொல்கிறது. திடப்பொருள் நிலை, திரவப்பொருள் நிலை, வாயு அல்லது ஆவி நிலை. ஆங்கிலத்தில் சொல்வதென்றால், ஸாலிட், லிக்விட், கேஸ்.

இன்னும் சற்று நுட்பமாக ஆராய்ந்தால், இந்த மூன்று விதமாகவும் இல்லாத சில விஷயங்கள் அறிவியல் புலப்பாட்டிற்கு உட்படுவது தெரிகிறது. இந்த மூன்று நிலைகளில் ஒன்று இன்னொன்றாகச் சில சூழ்நிலைகளில் மாறும். எடுத்துக்காட்டாக, திடப்பொருளாக இருக்கும் பனிக்கட்டி உருகினால் திரவமாகி விடும்; நீரைக் கொதிக்க வைத்தால் அது ஆவியாகி விடும். விஞ்ஞானிகள், சோதனைக் கூடத்தில் செய்த சில பரிசோதனைகளில் சில பொருள்கள் இந்த மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் மறைந்தே போய்விடுவதைக் கண்டுபிடித்தார்கள். ஆனால், பொருண்மை அழிவதே இல்லை என்ற விதியின்படி அவை மறைவதில்லை என்று சொல்லி, அவை Pure Energy என்ற ஆற்றல் நிலையை அடைந்து விட்டன என்று அமைதி செய்தார்கள். அணுகுண்டின் சூக்குமமே அதுதான்.

எந்தப் பொருண்மை நிலைக்கும் அடிப்படைப் பொருண்மையான அணுவுக்குள் ஆற்றல் பொட்டலமாக ஓர் உட்கரு, மையம் கொண்டு இருப்பதை ரதர்ஃபோர்ட் என்ற அறிவியல் மேதை கண்டுபிடித்துச் சொன்னார். அவரைத் தொடர்ந்து, அவருடைய சீடர்கள், சாட்விக் போன்றவர்கள், அந்த ஆற்றல் பொட்டலத்தைப் பிரித்து, அவிழ்த்து அதற்குள் இருந்து மிகப் பெரிய அளவு ஆற்றல் வெளிப்படக்கூடிய வாய்ப்பை முன்மொழிந்த பிறகே, ஓப்பன்ஹைமர் என்ற

விஞ்ஞானியின் தலைமையில் ஒரு குழு, அணுகுண்டை உருவாக்க முடிந்தது. திடநிலை, திரவ நிலை, ஆவி நிலை, ஆற்றல் நிலை ஆகிய நான்கு நிலைகளில் பொருண்மை இருக்க முடியும் என்பது தெளிவாகியது. இன்னும் நுட்பாமாக விஞ்ஞானம் வளர வளர வெட்டவெளி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் வெளியில் உண்மையிலேயே, பாரதி வியந்து சொன்னதுபோல் கணம்தோறும் சிற்றணுத் துகள்கள் கோடிகோடித் தோன்றி, நொடிப்பொழுதில் மறையும் தீராத விளையாட்டு, அல்லது கம்பர் சொன்னதுபோல், "அலகிலா விளையாட்டு" நடைபெற்றுக் கொண்டே இருப்பது தெளிவாகியது.

எனவே, ஆற்றலாக உருவெடுத்து, அதிலிருந்து சிற்றணுக்களாக உருவெடுத்து, உடனே மறைந்து, மீண்டும் தோன்றி, ஓர் ஓயாத சக்தி நடனத்தை வெட்டவெளி நடத்திக் கொண்டிருக்கும் வியப்பை விஞ்ஞானம் ஒப்புக்கொண்டுள்ளது.

திடப்பொருள், திரவப்பொருள், ஆவிப்பொருள் ஆகிய மூன்று நிலைகள், அவற்றைக் கடந்த ஆற்றல் நிலை என்ற நாலாவது நிலை, நான்கு நிலைகளுக்கும் நிலைக்களமாக விளங்கும் வெட்டவெளியாக விரிந்து கொண்டே இருக்கும் ஐந்தாம் நிலை. இப்படி ஐந்து நிலைகளை அறிவியல் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஐந்து நிலைகளே, திடப்பொருள் நிலையைக் குறிக்கும் நிலம்; திரவப் பொருள் நிலையைக் குறிக்கும் நீர்; ஆவிப்பொருள் நிலையைக் குறிக்கும் காற்று; ஆற்றல் நிலையைக் குறிக்கும் நெருப்பு; வெட்டவெளி நிலையைக் குறிக்கும் ஆகாசம். அதாவது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்கள், ஐம்பூதங்கள்.

பூதம் என்ற சொல்லுக்கு வடமொழியில் தோற்றம் என்று பொருள். பூதவுடல் என்றால் புலப்பாட்டுக்குத் தோன்றும் உடல். சூட்சுமம் என்பதன் எதிர்ப்பதமே பௌதிகம். பௌதிகம் என்ற சொல்லில் இருந்து வருவது பூதம். தோற்றங்களால் ஆன உலகத்தில் தோன்றும் பொருள்கள் இந்த ஐந்து விதமாகத்தான் தோன்ற முடியும் என்ற விஞ்ஞான உண்மையைக் குறிப்பதே 'பஞ்ச பூதங்கள்' என்ற சொற்றொடர். பஞ்ச பூதங்கள் இன்றி உலகம் இல்லை. பஞ்ச பூதங்களை நுகரும் பொருட்டே அவற்றுக்கு ஏற்ப ஐந்து பொறிகளும், அவற்றின் மூலம் புலப்பாடாகின்ற ஐந்து புலன்களும். (கா. வா. போ. பக். 138–140)

தொல்காப்பியர் மரபியலில்,
நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும். (தொல்.1589)

என்று கூறுவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். உயர்திணை, அஃறிணை, ஆண், பெண், பலர், ஒன்று, பல என்ற இருதிணை ஐந்து பால்களின் இயல்பினின்றும் வழுவாது, திரிபு இல்லாத சொற்களால் கூறித் தழுவிக் கொள்ளவேண்டும் என வலியுறுத்த வரும் தொல்காப்பியர் இவ்வுலகம் நிலம், தீ, நீர், காற்று, வான் என்ற ஐம்பூதங்களின் கலவைதான் என்கிறார்.

தொல்காப்பியர் கூறும் ஐம்பூதங்களின் வரிசையும் கவிஞர் கே. ரவி அவர்கள் கூறும் ஐம்பூதங்களின் வரிசையும் மாறுபடுகின்றன. தொல்காப்பியர் நிலம், தீ, நீர், காற்று, வான் என்று வரிசைப்படுத்த கவிஞர் கே. ரவி அவர்கள் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாசம் என வரிசைப்படுத்துகிறார். திடப்பொருள், திரவப்பொருள், ஆவிப்பொருள் ஆகிய மூன்று நிலைகள், அவற்றைக் கடந்த ஆற்றல் நிலை என்ற நாலாவது நிலை, நான்கு நிலைகளுக்கும் நிலைக்களமாக விளங்கும் வெட்டவெளியாக விரிந்து கொண்டே இருக்கும் ஐந்தாம் நிலை. இப்படி ஐந்து நிலைகளை அறிவியல் ஏற்றுக் கொண்டுள்ளது என விளக்கும் போது அவர் கூறும் வரிசை தருக்க ரீதியாக ஒத்துப்போகிறது. தொல்காப்பியர் கூறும் ஐம்பூதங்களின் வரிசைக்கும் மெய்யியலில் இடம் உள்ளதா? என்பதைக் கவிஞர் கே. ரவி அவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

பராசக்தி - வகுப்புத் தப்பிதம்

மேலைநாட்டு மெய்யியல் கருத்தீடுகளை எளிமையாகக் கூறி, இந்திய மெய்யியல் கருத்துகளைக் கவிஞர் விளக்கும் பாங்கு குறிப்பிடத்தக்கதாகும். விட்ஜன்ஸ்டைன் என்ற ஆஸ்டிரிய நாட்டு மெய்யியல் ஆய்வாளருடைய கருத்துப் பள்ளி வியன்னா வட்டம். இதன் பாதிப்பில் மோரிட்ஜ் ஷ்லிக், ருடால்ஃப் கார்னாப் போன்ற மெய்யியல் பேராசிரியர்களின் குழுவால் வளர்க்கப்பட்ட இன்னொரு கருத்துப்பள்ளி தர்க்க உடன்பாட்டியல் (Logical Positivism). இது இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் வளர்ந்தது. இந்தப் பள்ளியைச்

சார்ந்த கில்பர்ட் ரைல், ஏ.ஜெ.அயர் போன்ற தர்க்க நிபுணர்கள் ஒரு கருத்தை முன்மொழிந்தனர். குறிப்பாக, கில்பர்ட் ரைல் என்ற பேராசிரியர் மனம் ஒரு கருத்தீடு (The Concept of Mind) என்ற தம்முடைய நூலில் கேட்டகரி மிஸ்டேக் (Category Mistake) என்ற ஒரு கருத்தீடு பற்றிக் குறிப்பிடுகிறார். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைக் காண வரும் ஒரு நபர், அங்குள்ள வகுப்பறைகள் கொண்ட கட்டிடங்கள், நூலகம், விளையாட்டு மைதானம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, "அதுசரி, பல்கலைக்கழகம் எங்கே? என்று கேட்டாராம். இதைத்தான் கேட்டகரி மிஸ்டேக் என்று ரைல் சொல்கிறார். வகுப்பறைகள் நூலகம், சோதனைக்கூடம் போலவே பல்கலைக்கழகம் என ஒன்று தனியாகக் காட்சி தர வேண்டும் என்று அந்த நபர் தப்பிதமாக நினைத்துக் கொண்டார். அதைத்தான் ரைல் கேட்டகரி மிஸ்டேக் என்று குறிப்பிடுகிறார். தமிழில் அந்தக் கருத்தை "வகுப்புத் தப்பிதம்" அல்லது "முறை மாற்றுத் தப்பிதம்" என்று சொல்லலாமா? அந்தத் தப்பில் ஒரு கள்ளங் கபடமற்ற அறியாமை கலந்திருப்பதால், அதை இதம் செய்யவே தப்பிதம் என்ற சொல் பயன்படுகிறது.

இதற்கு கவிஞர் கே.ரவி அவர்கள் வாழ்க்கையிலிருந்து ஓர் உதாரணம் காட்டுகிறார். வானம் இருண்டு காணப்பட்ட ஒரு பகல் வேளையில், அன்று புயல் வரப்போகிறது என்று தன் பாட்டி சொன்னதைக் கேட்ட ஒரு நாலைந்து வயதுப் பெண் குழந்தை, மழைச் சாரலையும் பொருட்படுத்தாமல், வீதியைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் வெளியே அமர்ந்து கொண்டிருந்தாளாம். அதைப் பார்த்துவிட்டு அவளுடைய அம்மம்மா 'உள்ளே வா' என்று சத்தம் போட்டாளாம். குழந்தையோ எப்படியும் புயலைப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே போகவேண்டும் என்று நினைத்திருந்தாளாம். "புயல் வந்து போய்விட்டது" என்று கேட்டதும் அவளுக்கு ஏமாற்றம் ஆகிவிட்டதாம். அந்தச் சின்னக் குழந்தை 'புயல்' என்பது முயல் போல ஒரு சிறிய மிருகம் என்று நினைத்து அதைப் பார்க்கக் காத்திருந்ததாம். அந்தக் குழந்தை வேறு யாருமில்லை, ஐந்தாறு வயதில் ஷோபனாதான். அவள் இந்தக் கதையைப் பலமுறை சொல்லக் கேட்டுள்ளேன். என்ன ஒரு கள்ளங்கபடமற்ற தவறு பார்த்தீர்களா? முயல் போலப் புயல் வரும் என்பது ஒரு வகுப்புத் தப்பிதம் தானே!

இந்த உலகத்தில் ஒரு ரூபாய் நோட்டைப் பார்த்து இது நிஜமா என்று கேட்டால், அந்த நோட்டு செல்லுபடியாகும் நோட்டா, இல்லை கள்ள நோட்டா என்று பொருள்படும். அதேபோல், ஒரு பூனை வடிவைப் பார்த்து இது நிஜமான பூனையா என்று கேட்டால், அது உயிருள்ள பூனையா, இல்லை பூனை பொம்மையா என்று அர்த்தம். கண்ணுக்கு நீர்த்தடாகம் போல் தெரியும் ஒன்றை நிஜமா என்று கேட்டால், அது கானல் நீரா இல்லை குளமா என்று புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த உலகமே நிஜமா என்ற கேள்வியை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? நிஜமான உலகம் எது என்பதும் அதன் பொய்த்தோற்றம் எது என்பதும் ஆகிய இரண்டும் தெரிந்திருந்தால்தான் அந்தக் கேள்விக்கு அர்த்தம் புரியும். இதுதான் "வகுப்புத் தப்பிதம்" என்பது.

ஏலகிரி மலையைக் காட்டிலும் நீலகிரி மலை உயர்ந்தது என்று சொல்லலாம். சரி, நீலகிரி மலையைக் காட்டிலும் அடக்கம் உயர்ந்ததா என்ற கேள்விக்கு அர்த்தம் உண்டா? அது வகுப்புத் தப்பிதம் இல்லையா? அடக்கத்துக்கு உயரம் கிடையாதே, அதன் உயரத்தை எப்படி அளந்தறிவது. திருவள்ளுவருக்கு ரைலைப் படித்திருக்க வாய்ப்பில்லை. அதனால்தான் தப்பிதமாகச் சொல்லி வைத்தார்.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

அடக்கம் உடையவரின் தோற்றம் திருவள்ளுவரின் மனக்கண்ணுக்கு மலையைக் காட்டிலும் உயரமாகத் தோற்றம் தந்துள்ளது. இதேபோல,

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

அதாவது, உதவி என்பது அகில உலகத்தையும் விட மிகப் பெரியது என்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறே பராசக்தியைக் காண விழைவதும் ஒரு வகுப்புத் தப்பிதமே என விளக்குவதற்காகவே கவிஞர் கே.ரவி அவர்கள் இவ்வளவையும் எடுத்துரைக்கிறார்.

பராசக்தி என்பது பிரபஞ்சத்தின் மூல சக்தி; அதன் ஒட்டுமொத்த சக்தியும் அதுவே. எப்படி வித்தே விருட்சத்தின்

மூலமோ, வித்துக்குள் விருட்சம் அடக்கமோ அதுபோல இந்த பிரபஞ்சத்தின் காரண மூலமான சக்தியே இந்த பிரபஞ்சத்தின் ஒட்டு மொத்தமான சக்தியாகவும் இருக்கிறது.

பராசக்தி என்பது கோடானு கோடி அண்டங்களை உள்ளடக்கி இன்னும் இன்னும் விரிந்து கொண்டே இருக்கும் ஒட்டுமொத்த பிரபஞ்ச சக்தி. அதன் வீரியத்தை எப்படிக் கணக்கிட முடியும்? கோடானு கோடி சூரியக் கோளங்களையும் ஒளி மங்கச் செய்யும் ஜ்வாலை அது. அதை எப்படிப் புறக்கண்ணால் பார்க்க முடியும்.

பராசக்தி இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிறாள். எப்படி ஒரு நபர் வகுப்பறைகள், நூலகம், சோதனைக் கூடம் போலவே பல்கலைக்கழகம் என ஒன்று தனியாகக் காட்சி தர வேண்டும் என்று நினைத்ததை ரைல் வகுப்புத் தப்பிதம் என்று கூறினாரோ அவ்வாறே உலகத்தில் உள்ள ஒவ்வொரு உயிரிலும் பொருளிலும் நிறைந்திருக்கும் பராசக்தியைத் தனி ஒரு உருவமாகக் காண முயலுவதும் வகுப்புத் தப்பிதமே என விளக்குகிறார்.

கடவுள் நிலை

நம் திட்ப உடலைக் கடந்த நிலையில் இன்னோர் அதிர்வுக்கு நாம் வசமாவதுதான் பரவசம். ஆங்கிலத்தில் இதுதான் எக்ஸ்டஸி. இதையே மெய்யியல் மொழியில் 'Transcedental Experience'.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன், ஒருநாள் மாலையில் சென்னை, மெரினா கடற்கரை சாலையில் கவிஞர் காலார நடந்து கொண்டிருக்கிறார். அருகில் ஒரு நங்கை. ஔவையார் சிலையருகே வந்தபோது 'வாக்குண்டாம்' என்னும் செய்யுளை உரக்கச் சொல்லிக் கொண்டே வருகிறார். அருகில் வந்த நங்கை அதன் அர்த்தத்தைக் கேட்டாள். அர்த்தம் சொல்லத் தொடங்கியதும் கவிஞரின் குரலும் போக்கும் மாறிவிடுகிறது.

வேறு ஏதோ ஓர் அதிர்வுக்கு ஆட்பட்டு பேசுவது போல் உணர்கிறார்.

வாக்கு உண்டாகும். ஓ! வாக்கு என்பது சாதாரணச் சொல் இல்லை. 'மணிவாக்கு' என்று பாரதி குறிப்பிட்டானே அப்படிப்பட்ட வாக்கு உண்டாகும். நல்ல மனம் உண்டாகும். அந்த 'நல்ல' என்ற சொல்லுக்குப் பொருள் தெரிய வேண்டுமா:

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி
பாம்பு இரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு
மிகவே

இந்த வாசகத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்க்க வேண்டும். அப்போது புரியலாம் நல்ல என்ற சொல்லின் அர்த்தம். அத்துடன் மாமராள் நோக்கு உண்டாகும். அதாவது 'மலரின் மேவு திருவே' என்று பாரதி பாடினானே, அந்தத் திருமகளின் நோக்கு உன்மேல் விழும் என்பது ஒருபுறமிருக்க, மாமலராகிய இந்தப் பிரபஞ்சத்தையே ஆள்கின்ற நோக்கு உனக்கு ஏற்படும். பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் சார்வாருக்கு என்று எளிதாக முடித்து விடக்கூடாது. தோழி! "மேனி நுடங்காது" என்ற சொற்றொடரை விட்டுவிடக் கூடாது. அதாவது மேனி வளையாமல், பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் சார்வாருக்கு என்று படிக்க வேண்டும். இது என்ன புதுக்குழப்பம். மேனி வளைந்துதானே இறைவனைத் தொழுவது வழக்கம். அது தானே நமஸ்காரம் செய்யும் முறை. மேனி வளையாமல் என்றால், மேனி வளையாமல் த்யான நிலையில் அமர்ந்து கொண்டு வணங்க வேண்டுமோ? இல்லை மகளே. மேனி வளையாமல், பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் சாரவேண்டுமாம். அதாவது, த்யான நிலையில் அமர்ந்துகொண்டு, உன் மேனி வளையாமல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டு தும்பிக்கையான் பாதத்தைச் சார வேண்டும். எது சார வேண்டும்?. துப்பார் திருமேனி சார வேண்டும். ஸ்தூல சரீரம் எனப்படும் திட்பவுடல் வளையாமல், நிமிர்ந்து த்யான நிலையில் அமர்ந்து கொண்டால், சூஷ்ம சரீரம் எனப்படும் நுட்பவுடல் நீர்போல் தெளிவாக இருக்குமாம். வெறும் மேனி வளையாமல் த்யான நிலையில் உட்கார வேண்டும். மனம் அடங்கி இருக்க வேண்டும். அப்போது திருமேனியாகவே,

தூயநீர் போல், ஆசாபாசங்கள் எதுவும் இன்றி நுட்பவுடல் துலங்கும். அப்போது அதில் பூக்கின்ற ஞான மலரைக் கொண்டு தும்பிக்கையான் பாதம் சார வேண்டுமாம். தும்பிக்கையைச் சொல்லி, அப்படிப்பட்ட கையுடையவனின் திருப்பாதத்தைக் காட்டுகிறாளே இந்தப் பாட்டி! கைகாட்டிக் கால்காட்டும் வித்தை என்ன வித்தையோ!. தும்பிக்கை என்பது யோக மார்க்கத்தில், பன்னிரண்டு அங்குலத் தொலைவு ஸ்வாஸத்தை, மூச்சுக் காற்றைக் குறிக்கும் ஒரு பரிபாஷை வழக்கு. அதன் பாதம் என்பதோ மூலாதாரச் சக்கரம் என்ற நுட்ப ஸ்தானம். அந்தத் திருப்பாதத்தைச் சேர்ந்தவர்க்கு என்று சொல்லாமல் 'சார்வார் தமக்கு' என்று சொல்கிறாளே!

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றொழித்துச்
சார்தரா சார்தரு நோய்

உலகப் பொதுமறையின் சாரத்தை அன்றோ ஔவைப் பாட்டி இங்கே குறிப்பிடுகிறாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டே அருகில் நடந்து வந்து கொண்டிருந்த நங்கையின் (இலண்டனில் வாழும் செல்வி ராணி ஸ்ரீநிவாசன்) கண்கள் பனித்தன. சார், "இப்படியெல்லாம் இந்தப் பாடல் பற்றி நான் யோசித்ததில்லையே" என்று நாத்தழுதழுக்க அவள் சொன்னதும், "யோசித்து வருவதில்லை இது. யோகத்தில் வருவது!" என்று நான் பதில் சொன்னதாக ஞாபகம்!.

நான் இந்த உடல் மட்டும் இல்லை. இந்த உடல் என் கூடு தான். பஞ்ச பூதங்கள் தைத்து வழங்கிய சட்டையாகத்தான் நான் இதை அணிந்து கொண்டிருக்கிறேன். இப்படி ஓர் ஆழமான நம்பிக்கை பலருக்கு உண்டு. நானும் நம்புகிறேன்.

என் நம்பிக்கை மேற்சொன்ன நிலையையும் தாண்டிச் செல்கிறது. நமக்கு ஸ்தூல உடல் இருப்பது போலவே, சூஷ்ம சரீரம் என்று ஒன்று உண்டு. அது திட்ப உடல் போல் சதை, எலும்பு, குருதியால் ஆன உடல் இல்லை. அதை எந்தப் புலனாலும் உய்த்துணர முடியாது. ஸாஃப்ட்வேர் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போன்ற நுட்பவுடல் அது. பூதவுடல் என்பது ஹார்ட்வேர். சூஷ்ம உடல் என்பது ஸாஃப்ட்வேர். பின்னது முனைப்புகளால் ஆனது. முனைப்புடல் என்றும் சொல்லலாம். ஒருவன் அல்லது ஒருயிர் இன்ன

வடிவில், இன்ன உடல் எடுத்து இன்னவாறு இயங்கப் போவதை நிர்ணயம் செய்வது இந்த நுண்ணுடல் அல்லது முனைப்புடல்தான். ஒருவன் மரணம் அடைவதற்கு முன்பே, அதாவது அவன் உயிர்நிலை திட்ப உடலைப் பிரிவதற்கு முன்பே, உடல் எடுக்கும் முனைப்பால் மட்டுமே உருவான நுட்ப உடலைக் கலைத்துவிட வேண்டும். அதாவது, வடிவ மோகம் அறவே இன்றி ஆக வேண்டும். அப்படியாகித் தன் திடவுடலை முழுதுமாகக் கழற்றிப் பஞ்ச பூதங்களில் கலந்துவிடச் செய்யாவிட்டால், அவனுடைய திடவுடலைப் பிரிந்த பின்னும் நுண்ணுடல் அல்லது முனைப்புடல் தன் முனைப்புக்கு ஏற்ப ஒரு திட உடல் பெற ஏங்கித் திரியும். அப்படியோர் உடல் செய்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததும், செய்து கொண்டு அதை ஆளத் தலைப்படும். இதுவே அதன் அடுத்த பிறவி எனப்படும்.

ஸ்தூல உடலாகிய திட்ப உடலை நுண்ணுடல் நிரந்தரமாக நீங்கிச் சென்றுவிடும் நிகழ்ச்சியே மரணம். அது சம்பவிப்பதற்கு முன்பே, அவ்வப்போது திட்ப உடலில் இருந்து நுண்ணுடல் நீங்கிச் செல்லும் பயிற்சியைக் கனவு நிலை தருகிறது.

ஆனால், இரண்டு குறைபாடுகள் இந்தப் பயிற்சியில் உண்டு பெரும்பாலும் கனவுகள் நினைவில் பதிவாகித் தங்குவதில்லை என்பது முதற் குறைபாடு. கனவில், அறிவின் துணை சிறிதும் இன்றி நுண்ணுடல் அலைபாய நேர்வதால், அது தான் தோன்றித்தனமான, எந்த வழிகாட்டுதலும், நெறிமுறையும் அற்ற தாறுமாறான அனுபவமாகிறது.

ஆனால், இந்தக் குறைபாடுகள் இன்றி அறிவு விழித்திருக்கும் நிலையிலேயே, திட்பவுடல் நீங்கி நுண்ணுடல் பயணம் மேற்கொள்பவன் கவிஞனும் யோகியும்தான்.

கவிதை ஜனிக்கும் வேளையில் தானன்றிப் பிறிதான ஓர் அனுபவக் களத்தில் கவிஞன் சஞ்சரிக்கிறான். அந்த அனுபவத்தை அவனுடைய அறிவு, விழிப்பு நிலையிலேயே உள்வாங்கிக் கொண்டு, அதை வார்த்தைகளில் வடித்து நிரந்தரமாக்குகிறது.

யோகியின் கதை வேறு. அவன் திட்ப உடல் நீங்கிப் பயணம் மேற்கொள்ளும் போது தன்னை வரவேற்கும் எந்த அனுபவக் களத்திலும் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துத் தான்

நுண்ணிலையிலும் இல்லாமல் தானாக, எந்த முனைப்பும் அற்ற தானாக, ஆகும் ஒரே முனைப்பில் லயிக்கிறான். அவன் களம் விரிய விரிய, முக்காலங்களுக்கும், எல்லா லோகங்களுக்கும் பொதுவான எல்லா அனுபவங்களுமே தானாக உணரும் அத்வைதானந்த அனுபவமே அவனுடைய இலக்காகிறது. அதுவே கடவுள் நிலை. இதுதான் இந்தக் கணத்தில் என் நம்பிக்கை (பக். 227–228).

கவிஞரின் 101 பாடல்கள் அடங்கிய குருமந்திரம் என்ற படைப்பு1986 இல் மலர்ந்தது. அதில் இரண்டு பாடல்கள்:

பூதங்களில் கலந்து போகாத சூக்குமம் தன்
வாதனைக் கேற்ப சாயல் வனைந்திடும் வனைந்த வண்ணம்
பூதங்கள் நெய்த சட்டை புனைந்திடும் புனைந்து கொண்டு
சாதனை போல மீண்டும் சகதியில் ஜனிக்குமாமே
தூலத்தில் வைத்த பற்றே தூலத்தை விட்ட பின்னும்
தூலமே போல எண்ணும் சூக்கும வடிவம் பின்னும்
தூலத்தில் பற்றறுந்து தூலத்தில் கட்டவிழ்ந்தால்
மூலத்திற் கலப்ப தென்ற முக்திகை கூடுமாமேநீ

கவிஞர் கே. ரவி அவர்களின் முதல் மெய்யான தரிசனத்துக்குக் காரணம் கவிஞர் தேவ நாராயணன். அவர் பாடிய பாரதியின் தெளிவுறவே அறிந்திடுதல் என்னும் பாடல். காலமே நம்மை இயக்குகிறது, ஐம்பூதங்கள் கலந்த மயக்கமே உலகம், பராசக்தியைத் தனி ஒரு உருவமாகக் காண முயலுவது வகுப்புத் தப்பிதம், திட்பவுடல் நீங்கி சூக்கும உடல் செல்லும் பயணமே பரவசநிலை, அதன் அத்வைதானந்த அனுபவமே கடவுள்நிலை என்று மெய்யியல் உண்மைகளை எளிமையாக விளக்கியிருக்கும் கவிஞரின் நோக்கு நாம் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். "காற்று வாங்கப் போனேன்" என்னும் சுயசரிதையின் தலைப்பில் 'காற்று' என்பதற்கு மறைபொருள் உள்ளது என்றே எண்ணுகிறேன். புத்தி சிகாமணியாகவும், மனோன்மணியாகவும் மாறி மாறி கவிஞர் எழுப்பும் வினாக்கள் மெய்யியல் முடிச்சுகளை அவிழ்க்கும் சூத்திரக் கயிறுகளாக விளங்குகின்றன.

❖

காற்று வாங்கப் போனேன் கவிதை வாங்கி வந்தேன்

•

திரு.இரா.இராமதுரை எம்.ஏ., எம்.ஃபில்., நெட்.,
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) காட்டேரி, ஊத்தங்கரை – 636 902.

கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசை பண்புச் சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம் ஆகும். கவிதை என்பதற்கு பா, பாடல், செய்யுள் என்ற பொருளும் உண்டு என்பதை, தமிழ்செந்தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. கவிதை என்பது 'கவிதையை ஒரு சாதனமாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்னை ஆட்கொண்ட ப்ரபஞ்ச சக்தி' என்று வானவில் கே.ரவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கவிதையின் மகத்துவத்தை காற்று வாங்கப் போனேன் என்ற நூலில் குறிப்பிட்டு கவிதையின் முக்கியத்துவத்தையும், தன்மையையும் வானவில் கே. ரவி அவர்கள் குறிப்பிட்டுள்ளமை பற்றி இக்கட்டுரையில் காண்போம்

எது? கவிதை
உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை

தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

(மலரும் மாலையும், கவிதை,7)

என்று கவிமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கவிதை என்பது உள்ளத்தில் இருந்து தோன்றக்கூடியது, அது கவிஞனின் உள்ளக்கிடங்கில் இருந்து ஊற்றுப் பிரவாளமாகத் தோன்றக் கூடியது. அறிவைக் கொண்டு சொற்கள் தேடி அடுக்கிச் செய்யும் செய்யுட்கள் வேறு, கவிதை வேறு என்றும் கவிதை கற்பனையின் தனிப்பட்ட சக்தி என்றும் குறிப்பிட்டு

கவிதையொரு மனோதர்மம் கலைந்த கூந்தல்
கற்பனைகள் சிறகடித்துப் பறக்கக் கண்டும்
புவியெல்லாம் புதுமெருகு தோன்றக் கண்டும்
புலப்படாது திடீரென்று நடுங்கும் நெஞ்சில்
தவிக்கின்ற உணர்வுகளில் தனிமை யூற்றில்
தாகத்தால் மனம்வறண்டு தளரும் போதில்
சுருக்கென்று முள்குத்திச் சிரித்துக் கொள்ளும்
சுவடுகளே தெரியாமல் விரைந்து செல்லும் - வந்த
சுவடுகளே தெரியாமல் விரைந்து செல்லும்

நேருக்குநேர் அதையும் பார்ப்ப தற்கு
நிச்சயித்த விழிகளுடன் காத்தி ருந்தேன்
கார்மேகம் நகர்கிறது கனவு காட்டிக்
கள்ளநிலா மறைகிறது சாரல் வேறு
யார்யாரோ வருகின்றார் ஓடு கின்றார்
அதைமட்டும் காணவில்லை அந்த நேரம்
இதயத்தைத் தூளாக்கும் சிரிப்புச் சத்தம்
இருள்கிழிக்க வந்ததொரு வெட்டு மின்னல்
உதிரத்தைச் சூடேற்றி என்னை நானே
உறிஞ்சுகிற ஆவேசம் அதற்குப் பேர்தான்
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

ஓசைகளின் விளிம்பினிலே ஊஞ்ச லாடும்
உற்சாகம் உள்மனத்தின் இயக்க மெல்லாம்
ஆசைகளாய்ப் பரிணமிக்கும் அர்த்த ஜாமம்
அனுபவங்கள் மலர்கின்ற உதய காலம்
புரியாத நுணுக்கங்கள் புலனா கின்ற

புதுப்பார்வை உலகாளும் புலமை யோகம்
தரிசனக் கடலாடி விட்டு வார்த்தைத்
தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

(காற்று வாங்கப் போனேன், ப, 8)

என்ற வரிகளில் கவிதை என்பது ஓசைகளின் விளிம்பில் ஊஞ்சல் ஆடும். உற்சாகம் பிறக்கும், அனுபங்கள் எல்லாம் மனதில் உதயமாகும், புரியாதவைகள் எல்லாம் புரியும், புது பார்வை தோன்றும், புதிய பாதையை நமக்கு காண்பிக்கும் இத்தன்மை அனைத்தும் கவிதைக்கு உண்டு என்கிறார் வானவில் கே. ரவி அவர்கள்.

காற்றும் கவிதையும்

தென்றல் காற்றுக்கும் கவிதை பிறப்பதற்கும் ஒற்றுமை உண்டு என்கிறார். குளிர்ந்த காற்று மனிதனை வருடும்போது மனதில் அற்புதமான உணர்வுகள் ஏற்பட்டு கவிதை உருக்கொள்கிறது என்பதை,

வண்ணமும் வாசமும் போலல்ல வோநம்
எண்ணமும் கற்பனையும்
வண்டுக ளாய்ப்பல வார்த்தைக ளைமன
வாசலில் கொண்டுவரும் - தேன்
கவிதைகள் மொண்டுதரும்

(காற்று வாங்கப் போனேன், ப,10)

என்று குறிப்பிடுகிறார். கவிதைக்காகவும், பாடலுக்காகவும் தன் உயிரையும் கொடுப்பதாக பாடல் அமைத்துள்ளார்.

முடியாத பாட்டுக்கு முதலாக என்னுயிரை
முழுதாக நான்தந்து விளையாடுவேன் - அந்தப்
பாட்டுக்குக் கருவாகிப் பண்ணென்ற உருவாகிப்
பாரெங்கும் காற்றாகப் பறந்தோடுவேன்

(காற்று வாங்கப் போனேன், ப.20)

என்ற வரிகளில் கவிதைக்கு ரவி அவர்கள் தரும் முக்கியத்துவம் உய்த்துணர முடிகிறது.

காற்றும் கவிதையும் ஒன்றாகும்போது பாடலாகிறது என்பதை,

இரண்டும் ஒன்றாய் இணையும்போது
பாடல் உருவாகும் - அதில்
பார்வை தெளிவாகும் (காற்று வாங்கப் போனேன், ப. 25)

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

உபதேசம்

உபதேசம் என்பது கடவுளின் தன்மையைக் கூறுதல், ஞான போதனை, மந்திரோபதேசம், புத்தி புகட்டல் என்ற பொருண்மை இருந்தாலும், குரு மாணவனுக்குக் காட்டும் பேரொளி எனலாம், அதனால் தான் நம் தமிழர் பண்பாட்டில் முன்னோர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசை முறை வைத்து குருவை உயர்வான இடத்தில் வைத்து, ஒரு நல்ல குருவால் தான் தெய்வத்தைக் காட்ட முடியும். குருவின் துணை கொண்டு அல்லது உபதேசம் கொண்டு பேரொளியாகிய கடவுளைக் காணமுடியும் என்பதை,

அமைதி கொடுத்துப்பே ரானந்தம் தந்து
சுமையகல வைத்துச் சுழுமுனையுள் செல்லும்
சமநிலையும் தந்துயிர் சாதிக்கப் பாதை
அமைத்துத் தருவ(து) உபதேச மாமே

தன்னுள் விரிந்த தனிவெளியில் தத்துவமாய்
இன்னொன்றை வைத்திழைத்துத் தானும் அதுவாகி
முன்சென்(று) உயிர்த்துயிர் மூலத்தை ஆட்கொள்ளும்
உண்மைப் பிணைப்பே உபதேச மாமே

வெளியே இருந்துவிளக் கேற்றிவைக் காமல்
ஒளியாகி உட்புகுந்(து) ஊடுருவிச் சென்று
வெளியையே உட்கொள்ளும் வித்தை அறிவித்(து)
ஒளியாக்கும் உண்மை உபதேச மாமே

மூச்சுக்கு மூச்சு முறையாகி உள்ளத்தின்
பேச்சுக்குப் பேச்சு பதிலாகி உள்விதியின்
ஆச்சரிய மாகி அறமாகி அத்தனைக்கும்
சாட்சி தருவது தானுப தேசமே

ஓதி உணர்விப்ப(து) ஏதுமில்லை உள்ளுக்குள்
ஊதி உலைவைத்(து) ஒருகவளம் சோறாக்கிப்
பாதிநீ பாதிநான் என்று பகிர்ந்துண்ணும்
பேதமில் லாதது ப்ரம்மோப தேசமே

(காற்று வாங்கப் போனேன், ப,39)

என்ற வரியில் வெளிப்படுத்தியுள்ளார்.

வாய்மையே வெல்லும்

வானவில் கே.ரவியின் பதின்மூன்றாவது கட்டுரையில் உண்மையை உண்மையாக கவிஞர்முன் எடுத்துரைத்த விதத்தைக் காட்ட கவிஞரின் வரிகளே துணைபுரிகிறது.

போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தைஎனது உள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேள்

என்ற கவிஞரின் வரிகளுக்கு ஏற்ப ரவி அவர்கள் கவிஞர் முன்னிலையில்,

குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக்
குடிப்பதுதான் வாய்மையெனச் சொல்லி விட்டார்
குடியாலே குழறுகிற நாவில் உண்மை
குடியிருக்க முடியாது மறந்து விட்டார்
பிடிவாதம் செய்யாமல் விடச்சொல் கின்றேன்
பிழைதிருத்த வரவில்லை விண்ணப் பம்தான்

(காற்று வாங்கப் போனேன், ப .48)

என்ற வரிகளில் கவிஞர் முன் தைரியமாக எடுத்துரைத்த கவித்துவமும், மன வலிமையும் பாராட்டத்தக்கது. கவிஞரின் மூன்றாவது சந்திப்பின் போது கவிஞரின் பாடல்,

கேளுங்கள் பெரியோர்களே - மனது
கீழ்க்குல மாயில்லை மேற்குல மாஎன்று
கேளுங்கள் பெரியோர்களே

(காற்று வாங்கப் போனேன், ப. 53)

என்ற பாடல் கேட்டு 'கேளுங்கள் பெரியோர்களே' என்ற வரி சரி இல்லை என்று குறிப்பிடும் ரவி அவர்களின் மன வலிமை பாராட்டுக்குரியது.

பாராட்டும் மனம்

மனிதர்களும் சரி, கவிஞர்களும் சரி, பெரும்பாலும் சக மனிதனையும், சக கவிஞர்களையும் பாராட்டிப் பேசுதல் அரிது வானவில் கே. ரவி அவர்கள் கவிஞர் வாலியின் வரிகளைப் பாராட்டி நூலில் குறிப்பிட்டு இருப்பது போற்றத்தக்கதாகும்,

மண் குடிசை வாசல் என்றால் தென்றல் வர மறுத்திடுமா
மாலை நிலா ஏழை என்றால் வெளிச்சம் தர வெறுத்திடுமா
(காற்று வாங்கப் போனேன், ப. 56)

என்ற வாலியின் வரியைச் சுட்டிக்காட்டி போற்றியுள்ளமை ஆசிரியரின் மனப் பக்குவத்தை எடுத்துக்காட்டுகிறது. தன் திருமண வரவேற்பில் சிவம் கொடுக்கும் அன்பளிப்பு பரிசில் இருக்கும் கவிதையைப் படித்துவிட்டு பாராட்டும் மனம் மெச்சத்தகுந்தது.

ஒருநாள் கண்டாய் மறுநாள் நின்றாய்
உயிரே அவர்தான் என்கின்றாய் - அவர்
வருநாள் தானே திருநாள் என்று
மனமே எனையேன் தின்கின்றாய்
(காற்று வாங்கப் போனேன், ப. 73)

என்ற வரியைப் படித்துவிட்டு கொடுத்த சிவத்தின் கவிதை ரசனையும் கவிதை எழுதிய டாக்டர் மின்னூர் சீனிவாசன் அவர்களைப் பாராட்டும் விதமும் ஆசிரியரின் பரந்த மனப்பான்மையையும் வெளிப்படுகிறது.

கடவுள் நம்பிக்கை

ஆசிரியர் ஆரம்ப காலத்தில் ஆன்மீக நாட்டம் கொண்டவர் என்பது அவரே குறிப்பிடுகிறார் 'அகத்திய முனிவரின் அகத்தினில் உதித்தவள்' என்ற முதல் கவிதையும் 'வேலவனின் வேலினிலே விளங்கி நிற்கும் செந்தமிழே' என்ற கவிதை வரிகளைக் குறிப்பிட்டு இடையில் ஆன்மீக நாட்டம் இல்லாமல் போனதற்குக் காரணம் பகுத்தறிவு பாசறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதன் விளைவாக ஆன்மீக ஈடுபாடு போனதை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். பின்னாளில் சிறிது சிறிதாக ஆன்மீக ஈடுபாடு வந்ததற்குக் காரணம் கவிதையும் பாடலும் தான் என்று குறிப்பிட்டு பாடலுக்கு அவ்வளவு வலிமை உண்டு என்பதை வெளிப்படுத்தியுள்ளார்,

சாயி ராம் சாயி ராம் சாயி ராம் சாயி ராம்

தாயின் கருணை சாயி ராம் - ஒளி
தவழும் வதனம் சாயி ராம்
நேய உணர்வு சாயி ராம் - என்றும்
நிலைக்கும் உறவு சாயி ராம்
தூய மனமுன் ஆலயம்
தீப ஒளியுன் ஆசனம்
தேகம் எடுக்கும் ஆணவம் - அதைத்
தடுக்கும் உன் அருட்கரம்
நீரும் நெருப்பும் சேருமோ - உன்
நிழலில் துயரம் தோன்றுமோ - உன்
பார்வை அழைக்கும் போது - மனம்
பாதை மாறிப் போகுமோ

(காற்று வாங்கப் போனேன், ப. 180)

என்ற பாடலைப் பாடும் போது தம்மை அறியாமல் கண்ணில் நீர் வடிவதைக் குறிப்பிட்டு மெல்ல மெல்ல ஆன்மீக ஈடுபாடு தன்னுள் வந்தமையைக் குறிப்பிடுகிறார்.

கவிதை என்பது மனிதனைத் தன் வயப்படுத்தி பரவசம் தரக்கூடியது என்பதை வானவில் கே.ரவி அவர்கள் குறிப்பிட்டு, கவிதை மனிதனின் உள்ளக்கிளர்ச்சி ஏற்படுத்தி மன நிறைவைத் தரவல்லது என்பதைப் புலப்படுத்துகிறார். ஆசிரியரின் 'காற்று வாங்கப் போனேன்' என்ற நூல் வழி அவரின் பரந்த உள்ளத்தையும், படைப்பாளுமையும் வெளிப்படுகிறது. அவர் குறிப்பிடும் வாசிப்பு தன்மை வள்ளுவர், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், ஆகிய சான்றோர் பெருமக்களின் வரிகளைச் சுட்டிக் காட்டி வருங்கால சந்ததியினர்க்கு வழி காட்டியாகத் திகழ்கிறார்.

போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து சொல்வேன்
ஏற்றதொரு கருத்தை என்னுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்

- கண்ணதாசன்

❖

நினைவு தரும் சுகம்

•

முனைவர் ச. இராஜலதா
தமிழ்த்துறைத் தலைவர் ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி
பொள்ளாச்சி.

காற்று வாங்கப் போனேன் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கும் போது அந்நூல் எந்த நிகழ்வுகளை எடுத்துக் கூறப்போகிறது என்று எண்ணினேன். ஆனால் நூலை முழுவதும் படித்து முடித்த போது நூலின் முன்னுரையில் நூல்ஆசிரியர் குறிப்பிட்ட சுயசரிதையாகவோ கவிதைப் பயண அனுபவத் தொடராகவோ அமையவில்லை. ஆன்மீகம், இயற்பியல் கணக்கீடு, இசை, நாடகம், திரைப்பட இயக்கம். நூலாசிரியர், வழக்கறிஞர் எனப் பல பரிமாணங்களைக் காணமுடிகிறது. நூலாசிரியரின் எழுத்துகளில் பாரதியின் வேகம், கண்ணதாசனின் கவிச்சுவை, நகைச்சுவைத் துள்ளல், விவாதப்பரிமாற்றம் எனப் பல மாற்றங்கள் காணப்படுகின்றன.

கவிதை என்னும் வார்த்தையின் உள்தேடல்

கவிதையிலும் வசனத்திலும் பல ஆய்வுகளைச் செய்து பார்த்தவர் நம் பாரதியார். அவர் வங்கக் கவியின் கீதாஞ்சலியையும் வால்ட் விட்மனின் புல்லின் இதழ்கள் என்ற நூலையும் படித்து மகிழ்ந்து, அதே போக்கில் "காட்சிகள்" என்ற இலக்கணம் மீறிய புதிய கவிதைப் படைப்பை உருவாக்கித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன் முதலாகப் புதிய

கவிதையின் தோற்றத்திற்கு வழி வகுத்தவர். தமிழில் அமைந்த புதுக்கவிதைக்குத் தந்தை நம் புதுமைக்கவிஞர் பாரதியாரே. அவர் பாடிய புதிய கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு

வெம்மைத் தெய்வமே! ஞாயிறே! ஒளிக்குன்றே!
அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே
மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே!
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே!
வலிமையின் ஊற்றே! ஒளிமழையே! உயிர்க்கடலே!

(ஞாயிறு - புகழ்)

என்கிறார். பாரதியின் பற்றாளர், நூலாசிரியர் கவிதையைக் கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதைவிட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையை ஒரு சாதகமாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. என்னை ஆட்கொண்ட ப்ரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன்."நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பி விட்டோம்" என்பது பாரதிவேதம் என்கிறார். மேலும் " மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" என்ற பழைய திரைப்படப்பாடல் மெட்டில் "செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம்" என்று தொடங்கும் ஒரு முழுப்பாட்டு ஒலிக்கிறது.

சொல்லும் சொல்லும் சேரும்போது கானமாகலாம்
சொல்கடந்து செல்லும்போது மோனமாகலாம்
சொல்மலர்ந்து சுடரெழுந்து ஞானமாகலாம்
செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம்

என்கிறார்.

எழுத்துகும் ஒரு சக்தி உண்டு என்பதை நந்திக்கலம்பகம் எடுத்துக்காட்டும். அதுபோல இவருடைய எழுத்துக்கும் காற்றைக் கட்டி இழுத்துவரும் சக்தி உண்டு என்பதை

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்று தாளம்
போடணும் நான் பாடணும்
பித்தெடுத்துக் காதலுடன் இத்தரையைத் தொட்டுத் தொட்டு
அத்தன மரங்களுமே ஆடணும்
சத்தங்கள வுட்டுப்புட்டு சந்தத்துலக் கட்டுப்பட்டுச்
சிட்டுக்குரு விக்கூட்டம் கூடணும்
நான் பாடணும்

மேகத்துலத் தோகவிரிச் சாடுகிற வானமயில்
ராகத்துல சிக்கித்தடு மாறணும் - என்
ராகத்துல சிக்கித்தடு மாறணும்
மோகவலை போலவொரு தாள அலை பின்னிப்பின்னி
மூச்சுத்தெண றும்படி யாகணும்
நான் பாடணும்
பாட்டுக்கொரு போதையுண்டு போதைக்கொரு பாதையுண்டு
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
கூட்டுக்குள்ள நீயிருந்து வாடுறது நியாயமில்ல
கூடவந்து களியாட்டம் போடலாம் - என்
கூடவந்து களியாட்டம் போடலாம்
பாடலாம் நாம் பாடலாம் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்று தாளம்
போடலாம் நாம் பாடலாம்."

என்று நூலாசிரியர் பாடும் போது திடீரென்று பாட்டுக்குப் பின்னணி இசைபோல ஊய்ய்ய் என்றொரு சத்தம்! காற்று சூறைக் காற்றில் புழுதி கிளம்பி எங்கள் கண்களை மறைக்க மரங்கள் தலை விரித்தாட இலைகள் பறந்தன. பாட்டு முடிந்து பத்து நிமிடங்கள், காற்றுச் சுழன்று சுழன்று அடித்து விட்டுக் களைத்துப்போய் மெல்ல விசையிழக்கும் வரை, நாங்கள் எதுவும் பேசிக் கொண்டதாக நினைவில்லை. எங்களிடம் ஒரு கனத்த மௌனம் என்கிறார்.

கண்ணதாசனின் கவிதை வரிகள்

ஆடிய ஆட்டமென்ன பேசிய வார்த்தை என்ன
தேடிய செல்வமென்ன திரண்டதோர் சுற்றமென்ன
கூடுவிட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன
வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ
ஆடும் வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம்
கூடிவரும் கூட்டம் கொள்ளிவரை வருமா

இக்கவிதை வடிவத்தின் மாதிரியாக நம் நூலாசிரியர்

மனைவி மக்கள் என்ப தெல்லாம்
மரணம் வரையிலே
மனையும் பொருளும் தேகத்தை நான்
மறக்கும் வரையிலே - நீ

ஏற்றி வைத்த தீபம் மட்டும்
அணைவ தில்லையே - எந்தக்
காற்று வந்து மோதினாலும்
கலைவ தில்லையே
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

என்ற கவிதை வாயிலாக நினைத்துக் கொள்ள நிமிடம் போதும் நிலைக்க வைக்கும் கவிதை யோகம் உனக்கும் எனக்கும் உள்ள பந்தம் ஒன்று மட்டும் என்றும் சொந்தம் இறைவனே இறைவனே என்னை எழுதிடும் கவிதையே என்கிறார்.

காற்றும் கவிதையும் ஒன்றா

'காற்றும் கவிதையும் ஒன்றா' என்னும் இத்தலைப்பு நூலாசிரியர் உடையது. 1988 – இல் நூலாசிரியர் அமரர் கவிமாமணி தேவ நாராயணன் வீட்டில் நடந்த பாரதிகலைக் கழகத்தில் "காற்று வேறு கவிதை வேறு" என்ற தலைப்பில்

இரண்டும் ஒன்றாய் இணையும் போது
பாடல் உருவாகும் - அதில்
பார்வை தெளிவாகும்.
நேற்றும் இன்றும் நாளை யென்றும்
மாற்ற மின்றி மலர்ந்திருக்கும்
தோற்றம் உருவாகும் - உயிர்
தோயும் ஒளியாகும்
வெண்ணி லாவில் அமுதம் அள்ளிக்
கொண்டு வந்த தென்றலும்
சொற்க ளுக்குள் சொக்கி விழும்
சொர்க்கம் எங்கள் பாடலே
மின்னி மின்னித் தார கைகள்
கண்சி மிட்டும் தாளத்தில்
மெல்ல மெல்லச் சொல்லெடுத்து
மீட்டும் எங்கள் பாடலே

எனப் பாடியுள்ளார்.

நூலாசிரியர் காற்றைத் தேடுவது போல், காற்றும் கவிதை தேடுகிறதோ என்று சகோதரி கீதா மதிவாணன் வல்லமை மின்னிதழில் "கவிதைப் புத்தகத்தின் வெற்றுப் பக்கங்களைப் படபடப்போடு புரட்டிக் கொண்டிருந்தது காற்று" என்று

எழுதியிருந்தார். பக்கங்களைப் படபடப்போடு புரட்டுவது என்றதும் பாவேந்தர் வரிகளை நினைவுக்குக் கொண்டு வருகிறார் நூலாசிரியர்.

"அவன் ஏதோ மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கிறானாம். அவனையே வைத்தகண் வாங்காமல் அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாளாம். இல்லை, ஓடையிலே பூத்திருக்கும் குளிர்ந்த மலர்ப் பார்வையினால் அவனை அருந்திக் கொண்டிருக்கிறாளாம். அப்போது சட்டென்று அவன் நிமிர்ந்து பார்க்க, அவன் பார்வையில் அவள் பட்டுத் தெறிக்க! அடடா, பார்வை தெறித்துச் சிதறும் சத்தம் கண்ணாடி உடைவது போல் கேட்கிறதா? அந்தவொரு கணச் சிதறலில் தன் ஆடை விலகிப் போய் நாணம் விளைய, ஆடையை அவள் சரிசெய்து கொள்கிறாளாம்! அவனோ "ஐய்யய்யோ, நான் பார்க்கவே இல்லை அம்மாடீ" என்பது போல் குனிந்து கொண்டு புத்தகத்தின் பக்கங்களைப் படபடவென்று புரட்டுகிறானாம். ஆயிரம் ஏடு திருப்புகிறாள் என்று முடிக்கிறார் பாவேந்தர்

கூடத்திலே மனப் பாடத்தி லேவிழிக்
கூடிக் கிடந்திட்ட ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினாலவள்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழிதனில்
பட்டுத் தெறித்தது மானின்விழி
ஆடை திருத்திநின் றாளவள் தானவன்
ஆயிரம் ஏடு திருப்புகிறான்

இவ்வரிகள் விழிகள் பட்டுத் தெறிக்கும் ஓசையும் ஒரு சில பக்கங்களையே ஆயிரம் பக்கங்கள் போல் சரசரவென்று அவன் புரட்டிக் கொண்டே இருக்கும் ஓசையும் கேட்க வைக்கும் நல்ல கவிதையாகும்.

நாடகம்

1968 – பிப்ரவரி மாதம் 03ஆம் தேதி 'நந்திவர்மன்' நாடகம். அதில் நந்திவர்மனாக நூலாசிரியர், நந்திவர்மனின் தம்பி காடவனாக நூலாசிரியரின் நண்பர் சுகிசிவம். நச்சு எழுத்துகளால் அமைந்த பாடலின் இறுதிப் பாடல் பாடும் போது அண்ணன்

நந்திவர்மன் இறந்து விடுவான் என்று சகோதரர் பாசத்தோடு கூறியதோடு அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்து" காடவா" என்று நூலாசிரியர் கர்ஜிக்கவேண்டும். உடனே வேறு வழியின்றித் தழுதழுத்த குரலில் "பாடவா" என்று காடவனாக நடிக்கும் சிவம் கேட்டுவிட்டுஅறம் பாடவேண்டும்.இப்படித்தான் காட்சியமைக்கப்பட்டிருந்தது.

உணர்ச்சி வேகத்தில் 'காடவா' என்ற முழக்கத்தோடு நூலாசிரியர் சிவத்தின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை.. நிஜமாகவே, பலமான அறை,பளார் என்று அடித்துவிட, நிஜமாகவே வலிபொறுக்க முடியாமல் சிவம்,'பாடவா' என்று குரல் தழுதழுக்கச் சொன்னதும் எல்லாரும் பலத்த கரகோஷம் எழுப்ப, அந்தச் சத்தம் ஓயவே சற்று நேரமாகியது.

கவியரங்கம்

1970ஆம் ஆண்டு விவேகானந்தா கல்லூரியில் நூலாசிரியர் படிக்கும் போது நடைபெற்ற கவிதைப் போட்டியில் நடுவராகக் கண்ணதாசன் கலந்து கொண்டார். தலைப்பு 'வாய்மையே வெல்லும்' முதலில் நடுவராக அவர் பேசும் போது 'நான் எதையும் மறைப்பதில்லை, என் குடிப்பழக்கம் உட்பட, குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக் குடிக்கின்றேன். அதனால் நான் வாய்மை தவறாதவன். வாய்மையே வெல்லும் என்ற தலைப்பில் நடக்கும் இந்தக் கவியரங்கத்துக்குத் தலைமைதாங்கும் தகுதியுள்ளவன்' இப்படியாக அவருடைய முன்னுரை அமைந்தது. அக் கவியரங்கில் நூலாசிரியர் கவிதை படிக்கும் போது,

குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக்
குடிப்பதுதான் வாய்மையெனச் சொல்லிவிட்டார்
குடியாலே குழறுகிற நாவில் உண்மை
குடியிருக்க முடியாது மறுத்து விட்டார்
பிடிவாதம் செய்யாமல் விடச்சொல் கின்றேன்
பிழைதிருத்த வரவில்லை விண்ணப் பம்தான்

என்ற அவரின் விண்ணப்பக்கடிதம் முதல்பரிசு பெற்றது. உண்மைக்கு என்றும் வெற்றி தான் என்பதை உணரவைத்த தருணமாகும்.

நாட்டுப்பற்று

கவியரசி சௌந்தரா கைலாசம் ஒரு சிறந்த கவிஞர். கவிதை யின்மேல் அளவு கடந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தெய்வ பக்தியும் தேச பக்தியுமே தம் இரு கண்களாகக் கொண்டிருந்தார். இந்திய சுதந்திரப் பொன் விழாவை ஒட்டி வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பில் ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்த போது அவரை அழைக்க நூலாசிரியர் அவர் வீட்டுக்குச் சென்றபோது அவர் அவரை பூஜை அறைக்குள் அழைத்துச் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த ஒரு கலசத்தைக் காட்டினார். அதில் வெறும் மண் இருந்தது" தம்பி இது வெறும் மண் இல்லீங்க. நான் இந்த பாரத நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கிருந்து ஒரு பிடி மண் எடுத்து வந்து இந்தக் கலசத்தில் போட்டு வைப்பேன். அது எப்பொழுதும் பூஜை அறை யில்தான் இருக்கும். இதை நான் பாரதமாதாவாகவே ஆவாகனம் செய்து பூஜை செய்து வருகிறேன்" என்று அவர் சொன்னதும் நூலாசிரியர் நெகிழ்ந்து போனார். அவர் எப்போதும் சிரித்த முகமாகவே காணப்பட்டதற்கு அவருடைய அசைக்க முடியாத தெய்வ பக்தியே காரணம். அவரே கவிதையில் சொல்கிறார்.

சுடும்போதும் சிரிப்பேன் துன்பம் சுட்டபின் தென்றல் வந்து
தொடும்போதும் சிரிப்பேன் தீய சொல்லினால் நெஞ்சில்
காயம்
படும்போதும் சிரிப்பேன் இந்தப் பாரெலாம் போற்றி மாலை
இடும்போதும் சிரிப்பேன் என்றன் இதயமே இறைவன்
சோலை

என்கிறார். இப்பாடல் கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் நின்று சிவபெருமான் திருவடியை எண்ணித் தம் ஐம்புலன்களுக்கும் அது குளிர்ச்சி தந்த பரவசத்தை ஒரு பெருங்கிழார் பாடலின் எதிரொலியாகக் காணலாம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

1999 கார்கில் போர் நடந்த போது, தம் வீரர்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் தர வானவில் பண்பாட்டு மையம் ஒரு முழுநாள் கவியரங்கம் நடத்தியது. அந்தக் கவியரங்கத்தில்

சென்னையில் இருந்த முன்னணிக் கவிஞர்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு கவிதை படித்தார்கள். அந்தக் கவியரங்கம் முழுதும் ஒலிப்பேழையாகப் பதிவு செய்யப்பட்டது. அதன் நூறு பிரதிகளை எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்று தீவுத் திடலுக்குப் பின்புறம், ஜிம்கானா கிளப்புக்கு எதிரில் உள்ள போர்ப்படைத் தளபதி அலுவலகத்தில் தலைமைத் தளபதியைச் சந்தித்து கொடுக்கப்பட்டது.

முயற்சி

நூல் ஆசிரியர் எனது "பதினொரு வயதில் என் ஆசிரியர் என் தமிழ் விடைத் தாளைச் சுருட்டி என் முகத்தில் வீசியெறிந்தது ஒரு மின்னல் அதிர்ச்சியில் உந்தப் பட்டு மூன்று மாதங்களில் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை நானே நூலகம் சென்று பயின்று கவிதை எழுதத் தொடங்கி " மின்னற் சுவையே கன்னற் கனியே" என்று ஒரு நீண்ட கவிதையை எழுதி ஆசிரியரின் அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்றதாகத் தெரிவித்துள்ளார்.

எட்டாம் வகுப்பில் நுழையும் போது கவிஞனாக மட்டுமன்றித் தமிழ் இலக்கணம் ஓரளவு படித்த புலவனாகவும் மாறியிருந்தேன். திரு.கிருஷ்ணராமானுஜம் பிள்ளை என்ற ஆசிரியர் எங்களுக்குத் தமிழ் இலக்கணம் பயிற்றுவித்தார். அவரிடம் பயின்ற போது, இலக்கணத்தின் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டேன். இலக்கணம் என்பது என்றைக்குமே மாறா விதிகளின் தொகுப்பு இல்லை. காலத்துக்கு ஏற்ப, மக்கள் பேசும் மொழிக்கு ஏற்ப, எழுதும் நடைக்கு ஏற்ப, அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கும் விதிகளின் தொகுப்பே என்பதைப் புரிந்து கொண்டேன். இலக்கணவிதி ஒவ்வொன்றின் பின்னணியிலும் அந்த விதிக்கான காரணம் அல்லது தேவை மறைந்திருப்பதை விளங்கிக் கொண்டேன். அந்த விதிகள், மக்கள் மொழியிலிருந்தும் படைப்பாளிகளின் எழுத்துகளில் இருந்தும் தேர்வு செய்யப் பட்டுத் தொகுக்கப்படும் உண்மையை அறிந்து கொண்டேன். அந்த அடிப்படைக் கருத்துகளை என் ஆசிரியர் கிருஷ்ணராமானுஜம் பிள்ளை என் மனதில் ஆழமாகப் பதித்ததால், கல்லூரி சென்ற பிறகு, பெரிய தமிழ்ப்பேராசிரியரிடமே தமிழ் இலக்கணம் பற்றி விவாதிக்கும் அளவுக்குத் துணிந்தேன்.

நூலாசிரியர் 1968–69 விவேகானந்தா கல்லூரியில் புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதெல்லாம் அப்படியோர் வகுப்பு இருந்தது. அதற்கு ஆங்கிலத்தில் பி.யூ.சி என்று பெயர். 'ஏந்தெழில்' என்ற சொல்லுக்கு தமிழாசிரியர் மதிப்பெண் தரவில்லை. அச்சொல்லுக்குத் தமிழாசிரியர் வினைத்தொகை என்றார். நூலாசிரியர் இரண்டாம் வேற்றுமைத்தொகை என்றார். இதற்கு நூலாசிரியர் தரும் விளக்கம்.

"ஏந்திய எழில், ஏந்தும் எழில்,ஏந்தப்போகும் எழில் என்று பொருள் கொண்டால் வினைத்தொகை. எழிலை ஏந்துகின்ற இராமன் என்றுதான் பொருள் கொள்ளத் தோன்றுகிறது. எழிலை ஏந்துகின்ற என்பது முன்பின்னாகவும், இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' மறைந்தும் இருப்பதால் 'ஏந்தெழில்' என்பதை முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என்று எழுதினேன். என்றேன். ஜகன்னாதாச்சாரியார்'முன்பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை என ஒன்று இலக்கணத்தில் இல்லையே!' என்று கேட்டார். அதற்கு நான் இலக்கியத்தில் இருக்கிறதே என்றேன். சரி இந்தத் தொடர் கம்பராமயணத்தில் வருகிறது. இதே போல் வேறு இலக்கியத்தில் எங்காவது உண்டா என்று கேட்டார். உடனே சொன்னேன். பெரிய புராணத்தில் "ஏந்தும்பூம் பந்தர்" என்ற சொற்றொடர் வருகிறதே என்றேன். ஜகன்னாதாச்சாரியார் என் விடைத்தாளில் தம் கைப்பட என் இலக்கணக் குறிப்புக்கு முழுமதிப்பெண் போட்டுக் கொடுத்து விட்டு, மறுநாள் என் வகுப்புக்கு வந்து இது பற்றிச் சொல்லிப் பாராட்டி ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டுச் சென்ற நிகழ்ச்சியை நான் மறக்க முடியுமா?" என்று பெருமிதம் கொள்கிறார் நம் நூலாசிரியர். ஏனெனில் அவரின் விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி அல்லவா?.

கவிதை ரசனை

நடிகர்களின் மனங்களில் கவிதை ரசனை உள்ளதை நூலாசிரியர் அவர்கள் "நூலாசிரியர் இசையில் எஸ்.பி.பி. பாடி, 1994இல் வெளியான 'தெய்வ கானாம்ருதம்' இசைப்பேழை வெளியீட்டு விழாவில் நாகேஷ் கலந்துகொண்டார். 'என் வக்கீல் அழைத்தால் நான் வராமல் இருக்க முடியுமா?' என்ற

கேள்வியோடு பேச்சைத் தொடங்கி நகைச்சுவையோடு பேசினார். அதே விழாவில் கலந்துகொண்டு சுகிசிவம் பேசும் போது, அந்த ஒலிப்பேழையில் இருந்த " கல்மனம் உருகிக் கனிவதும் எக்காலம் அகலாதா இந்த அகலிகையின் சாபம்" என்ற பாடலைக் குறிப்பிட்டு ஒரு கருத்துச் சொன்னார். இராமன் திருவடி பட்டுச் சாபம் நீங்கி அகலிகை மீண்டும் பெண்ணானதும், இராமன் அவளைத் தாய் என்றே குறிப்பிடுகிறான். அன்னையைப் போன்ற இந்த மங்கைக்கு எப்படி இந்த நிலை ஏற்பட்டது என்று இராமன் விஸ்வாமித்ர முனிவரிடம் வினவுவதாகக் கம்பச் சித்திரம் பேசுகிறது.

அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு அருளுக

கௌசல்யா, பத்து மாதம்தான் அவனைக் கருவில் சுமந்தாள். ஆனால், அகல்யா எத்தனை ஆண்டுகள் அவன் வரவுக்காக அவனை நெஞ்சில் சுமந்தாளோ! எனவே, அவளை இராமபிரான் தாயென்றது பொருத்தமே. இது தான் சிவம் சொன்ன கருத்தின் சாரம். விழா முடிந்த மறுநாள் நாகேஷ் என்னிடம் தொலைபேசியில் சிவம் சொன்ன இந்தக் கருத்தைச் சொல்லி வெகுவாகப் பாராட்டினார்". நாகேஷுக்குள் கவிதை ரசனை ஒளிந்திருப்பதை உணர்த்திய சம்பவம் என்கிறார் நூலாசிரியர்.

ஆன்மீகப் பயணம்

கேரளாவில் ஆதிசங்கரர் பிறந்த ஊரான காலடியில் நூலாசிரியர் தனக்கு ஏற்பட்ட இரண்டு அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார். அவ்வனுபவங்கள் படிப்பவர்களிடம் ஒரு மிரட்சியை ஏற்படுத்தும். "1985 அல்லது 86 இல் காலடிக்குச் சென்று அங்கிருந்த பூர்ணா நதியில் நீராடி விட்டுச் சிருங்கேரி சங்கரமடத்தாரால் பராமரிக்கப்படும் மண்டபத்தில் சங்கரரின் தாயார் ஆர்யாம்பாள் சன்னதிக்கு எதிரில் ஏழுசக்தி வடிவங்களாக உள்ள ஒரு தூணுக்கு முன்பாக அமர்ந்து கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தேன். சுமார் 15 நிமிடங்கள் கழித்து நான் கண் மலர்ந்தேன். தியானநிலையில் நான் இரண்டு கைகளிலும் சின்முத்திரையோடு உள்ளங்கைகளை மேற்காட்டி அமர்ந்திருந்த போது என் வலது உள்ளங்கையில் ஒரு வண்ணத்துப் பூச்சி. அந்த வண்ணத்துப் பூச்சி சில நிமிடங்கள் அமர்ந்திருந்த தன்மையை ஷோபனா விவரித்த போது சிலிர்ப்பு."

"சபரிமலை யாத்திரை முடித்து வரும் வழியில் நண்பர்களோடு காலடி சென்றேன். நான் பூர்ணா நதியிலேயே பத்மாசனம் இட்டுத் தியான நிலையில் அமர்ந்துவிட்டதாகப் பிறகு நண்பர்கள் சொன்னார்கள். தியானத்தில் இருந்தது நினைவுக்கு வந்தது, அப்போது நான் தியானத்தில் இருந்த சிறிது நேரத்துக்குள் துத்தநாகம் போன்ற நீல நிறத்தில் இருந்த ஒரு பெரியதடாகத்தில் மூழ்கி உள்ளே சென்றதும் அங்கே நீருக்கடியில் ஒரு குகை தெரிந்ததும், குகைக்குள் வரச் சொல்ல ஒரு குரல் என்னை அழைத்ததும், நான் குகைக்குள் நுழைந்ததும், அங்கே ஒரு பீடத்தில் ஒளிமயமான ஆதிசங்கரர் போல் ஒருவர் தியானம் செய்து கொண்டிருந்ததும் என்னை வா என்று அழைத்தவர் பார்த்ததும் அச்சம் உண்டாக்கும் இரத்தச்சிவப்பான கண்களுடன் தலையிலிருந்து தரையில் புரளும் ஜடாமுடியுடன் வீற்றிருந்ததையும் அவர் சொல்லாமலேயே எப்படியோ அவர்தாம் மார்க்கண்டேய மகரிஷி என்று நான் தெரிந்து கொண்டதையும் என் நண்பர்களுக்குச் சொன்னேன்" என்றார்.

பிரபஞ்சத்திற்கும் நூலசிரியருக்கும் உள்ள தொடர்பைக் 'காற்று வாங்கப் போனேன்' நூலின் வாயிலாகத் தெளிவாக எடுத்துக் காட்டிய பாங்கு இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கணம்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்
கணம்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணம்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ஆங்கே
கணம்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்
கணம்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்

என்ற வாக்குக்கு இணங்க வாழ்க்கை வாழ்ந்த பாங்கை அறிய முடிகிறது. ஏனெனில் வாழ்க்கை என்பதை நூலாசிரியர்,

கனவுக் கடலின் நடுவினிலே நான்
காகிதப் படகாய் மிதந்திருந்தேன் - என்
கலங்கரை விளக்கங்கள் மூழ்கியதாலே
காற்றின் கருணையைப் பார்த்திருந்தேன்
கரைவரும் என்று காத்திருந்தேன்

காத்திருந்தே மெல்லக் கரைகின்றேன்
வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்
வாழ்க்கை என்றேன் அதில் மூழ்கிவிட்டேன்

என்று தம் வாழ்க்கையை ஒரு கவிதையாக வடிவமைத்துள்ளார்.

உசாத்துணை நூல்கள்

1. *காற்று வாங்கப் போனேன்*
2. *கண்ணதாசன் கவிதைகள்*
3. *பாரதியார் கவிதைகள்*

❖

உள்ளொளி

•

முனைவர் ச. இராஜலதா
தமிழ்த்துறைத் தலைவர் – ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி
பொள்ளாச்சி.

கவிதையைக் கலையின் அரசி என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோத்து அமைப்பது கவியா? என்ற வினாவிற்கான விடை என்பது கவிதை ஒரு ஜீவசக்தி அது கவிஞனது உள் மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொருத்து அமைகிறது என்பதை கவிஞர் தம் நூல்களில் எடுத்துக்காட்டியப் பாங்கை இங்கு காண்போம்.

கவிதை

"காட்டுவாசி ஒருவன் கொட்டிய பாறையில் கவிதை தோன்றியிருக்க வேண்டும்" என்பார் எமர்சன் 'கவிதை மந்திரமொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப் பாடல்களாகத் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். கவிதை முதலில் இசைப் பாடலாகத் தோன்றியிருக்க வேண்டும் என்றக் கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாக சங்க இலக்கியத்தில் பாணன், பாடினி, விறலி போன்றோர்களின் குறிப்புகள் கிடைக்கின்றன. இவ்வாறு கவிதைக்குப் பலர் பல விதமாக கருத்துகளைக் கூறுகின்றனர். நம் கவிஞர்,

மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையும் மின்னல் சரேலெனப் பாயவும்
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்
ஊழைஎ லாமிடை யின்றியிவ் வானநீர்
ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டுங்கால்
மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாயென்று பாடுமென் வாணியே

என்று மழை பொழியும் போது அதன் வண்ணத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் ஒரு கவிதை வழி தோற்றுவிக்கிறது என்கிறார்.

இருள் சூழ்ந்த வானம், கருத்த புயல் இவற்றின் இடையே சரேலென மின்னல். மண்ணின் வாடை என இவற்றை எல்லாம் சுமந்தபடி காற்றின் இரைச்சல் இதனிடையே இடைவெளியின்றி மழைபொழிகிறதாம். இவ்வாறு காட்சிகள் அடுக்கடுக்காக விரிகின்ற போது அப்படிப்பட்ட மழைப் பொழிவைக் காணவேண்டும் என்ற எண்ணம் இருட்டுக்கும் புயலுக்கும் மின்னலுக்கும் ஒளிவடிவம் தருகிறது. இந்த ஒளி, மொழி வடிவம் பெறும்பொழுது கவிதையாகிறது.

மழையைப் பாடவந்த கவிஞன், மழையை மறந்து காற்று, திசை எல்லாம் மறந்து "வாழ்கதாய்" என்று பாடுகிறான். அதுவே அவனுள் இருக்கும் உள்ளொளியின் ஒலிவடிவம், அதையே தம் "வாணி" என்று போற்றுகிறார்.

உள்ளொளித் தன்மை

புறக்காட்சியில் தோற்றம் கொள்ளும் ஒரு சிறு பொறி – ஓர் ஒளித்துகள் – ஒரு கவிஞனுடைய உள்ளொளிச் சுடரைத்தாக்கித் தூங்கும் சுடரைத்தூண்டி எழுப்பும் தருணம் அவன் மகாகவி ஆகிறான். இந்த ரகசியத்தைப் பாரதியின் பாடல் பறை சாற்றுகிறது.

புறத்தே புலன்களைத் தாக்கும் அதிர்வுகளை மட்டும் மொழியாக்கம் செய்பவன் கவிஞனாக இருக்கலாம். அந்த அதிர்வுகளைத் தம் உள்ளொளியின் அதிர்வுகளோடு இழைத்து ஸ்ருதி எனப்படும் பண்நிலை சேர்த்து வெளிப்படுத்துபவனே மகாகவிஞன்,

உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே
ஒளியுண்டாகும்

இதைத்தான் ஊனினை உருவாக்கிய பெரியவர்,

உள்ளொளி பெருக்கி உவப்பிலா
ஆனந்தமாய தேன்

என்று பாடினார். மேலும் உள்ளொளியின் ஊற்றுக்குள் மூழ்கி எழுந்தவன் தான் என்பதை,

மின்னற் சுவைதான் மெலிதாய் மிகஇனிதாய்
வந்து பரவுதல் போல்
என்று பரவசப்பட முடியும்
கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ

என்று வியக்க முடியும்.

சுட்டெரிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் நின்றுகொண்டு

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

என ஈசன் இணையடி நிழல் என்று பூரிப்படைய முடியும்.

கலாம், என் இனிய நண்பனே,
உன் பெற்றோரைப் போல நானும்
நூறு வயதைக் கடந்துவிட்டேன்
ஒவ்வொரு வைகறையிலும் நீ
ஒரு மணிநேரம் நடக்கிறாய்,
பௌர்ணமி இரவுகளிலும் நான்
உன்னைப் பார்க்கிறேன்
நீ எப்போதும் சிந்தனையோடு
நடந்து கொண்டிருக்கிறாய்
என் நண்பனே, உன் மனத்தில் உள்ள
எண்ணங்களை நான் அறிவேன்
உனக்கு என்னால் என்ன கொடுக்க முடியும்?

என்ற கவிதையில் கலாம் அவர்கள் புதுதில்லியில் அவர் வீட்டின் உள்ள ஒரு பழம்பெரும் மருத மரத்தோடு மௌனமான உரையாடல்களில் ஈடுபடுவதும் உண்டு. ஒருமுறை மரத்தால் பேச மட்டும் முடிந்தால் இவ்வாறு கூறியிருக்கும் என்று கற்பனையில் மெய் மறந்தத் தன்மையைக் காணமுடியும்.

பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் - மனத்துன்னை

என்ற வரிகள் குருவருளை பரிபூரணமாய்ப் பெற முடியும், என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஒரு காட்சி அல்லது புலன் நுகர்ச்சி ஒருவன் உள்ளொளியைத் தாக்கும் போதுதான் "உள்ளூக்கம் பெறுகிறேன்" என்று சொல்கிறார். விழியையும் விழிச்சுடரையும் வேறுபடுத்தி ஒன்றை வானக் கருமை என்றும், இன்னொன்றை சூரிய சந்திரர்களின் சுடரொளி என்றும் நுட்பமாகப் பிரித்துப்பார்க்கும் திறன் புறக் கண்களுக்கு இல்லை. அது அகத்தூண்டுதல் அல்லது உள்ளூக்கம் என்ற சாதனத்தால் மட்டுமே இயன்றதாய் ஆகிறது. ஏனெனில் உள்ளூக்கத்தால் மட்டுமே உள்ளொளி தூண்டப் பெறுகிறது.

உள்ளொளியைத் தூண்டும் உள்ளாக்கம் சரியான மொழி வடிவம் ஏற்றால் அது சாகாவரம் பெற்ற கவிதையாகிறது. எந்தச் சொல் தான் பிறப்பெடுத்து வந்த உள்ளூக்கத்தைக் கேட்பவர் நெஞ்சிலும் கிளர்ச்சியுறச் செய்கிறதோ அந்தச் சொல்லே கவிதையில் இடம் பெறும் தகுதி பெறுகிறது. அதனால்தான் "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று மகாகவி பாரதி கேட்டார். அப்படிப்பட்ட சொற்கள் கவிஞனுடைய உள்ளொளியின் அதிர்வுகளை எதிரொலிக்கும் சொற்கள் படிப்பவருடைய உள்ளத்தை ஊடுருவிச் சென்று அவர்தம் உள்ளொளியிலும் அதே அதிர்வுகளை ஏற்படுத்தும் வல்லமைச் சொற்கள்.

"உள்" என ஒன்றும் "வெளி" என ஒன்றும் இருப்பது நடைமுறை உண்மை. எல்லா உயிர்களிடத்தும் உள்ள இந்த "உள்" ஒளி வீசுவதும், ஒளி குன்றித் தோன்றுதும் அந்தந்த உயிரைப் பொறுத்தது. மகான்களின் அருகில் மற்றும் கோயிலுக்குச் செல்லும் போதும் மனஅமைதி கிடைப்பதாகக் கூறும் பக்தர்கள் உலகில் ஏராளம். ஏதும் பேசாமலேயே இவர்கள் எப்படி மன அமைதி பெற முடியும்? இவர்களுடைய உள்ளொளியின் வேகம் மொழிப்பாலம் இன்றியே அண்டியவர் மனத்தை ஊடுருவுகிறதோ? முழுமையாகச் சுடர் வீசும் உள்ளொளி மௌனத்தாலேயே ஞானம் தரவல்லது

என்பதைத்தான் தட்சிணாமூர்த்தி போன்ற புராண நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு மகாகவி மகான் இல்லை அவனுடைய உள்ளொளி பரவமொழித்துணை தேவைப்படுகிறது. மொழியின் குறைபாடுகளால் அவன் உள்ளொளி முழுமையாகப் பரவ முடியாத ஆற்றாமை அவன் கவிதையில் சில பல இடங்களில் புலப்படுகிறது.

மழைபொழிந்திடும் வண்ணத்தில இருந்து பராசக்தியின் செய்கையைப் பாடவந்த பாரதி அடுத்த கணமே இந்த மர்மத்தை முழுவதும் விவரிக்க முடியாத மொழிக்குறைபாட்டால் நேரும் துன்பத்துக்கு ஆளாகிறான்.

சொல்லி னுக்கெளி தாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடம் செல்ல வழிவிடாள்

என்று புலம்புகிறார். கவிதையாவும் தனக்கெனக் கேட்கும் அன்னை, கவிதைகளில் மின்னி மறைகிறாளே அன்றி முழுமையாகப் புலப்படுவதில்லையே என்று புலம்புகிறான். ஒருவன் தன் புலன்களைத் தாக்கும் புற அதிர்வுகளைத் தன்னுள் ஆழ்ந்து, ஊடுருவிச் செல்ல அனுமதிக்கிறானோ அவனுடைய உள்ளொளி அந்த அதிர்வுகளால் தூண்டப்படுகிறது. இந்த அதிர்வுகளை உலகுக்கு அறிவிக்கும் வேட்கை அவனுள் மேலேங்குமேயானால் அவன் மகாகவியாக முடியும்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரின் உள்ளம்

அழகிய என் திருநாடே அன்புநாடே
வையகத்தில் உன்பெருமை தன்னை நல்ல
மணிநதியை உயர்குன்றைத் தேனை அள்ளிப்
பெய்யு நறுஞ் சோலையினைத் தமிழால் பாடும்
பேராவல் தீர்ந்ததில்லை அப்பே ராவல்
மெய்யிதயம் அறுபடவும் என் இரத்த
வெள்ளம்தான் வெளிப்படவும் தீரும் அன்றோ

என்று அரற்றிய புரட்சிக் கவிஞரின் உள்ளம். எந்த வெளிப்பாடு உள்ளொளியின் அதிர்வுகளைத் தாங்கி வருகிறதோ, எந்த வெளிப்பாடு, என்று படித்தாலும் நின்று படிப்போர் நெஞ்சிலும் அதே அதிர்வுகளை ஓரளவேனும் ஏற்படுத்த வல்லதோ, அதுவே உயர்ந்த கவிதை அது முன் முடிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது.

வர்ஜினியா உல்ஃப் என்ற கவிஞர் மிக அழகாகக் கவிதையின் தாக்கத்தை விவரிக்கிறார்.

ஒரு கவிதை நம்மைத் தாக்கும் கணத்தில் அக்கவிதையைத் தவிர வேறு உணர்வுகளே இருக்க முடியாத அளவுக்கு அது நம்மை அத்துணை வலிமையுடனும் நேரடியாகவும் தாக்குகிறது. அப்பொழுது நாம் எத்துணை அர்த்தமுள்ள ஆழங்களுக்குச் சென்று வர முடிகிறது. எப்படி நாம் முழுமையாக அந்த ஆழங்களில் மூழ்கி விடுகிறோம். அங்கே பிடிமானம் எதுவும் இல்லை. நம் விரைவைத் தடைசெய்ய எதுவும் இல்லை. கவிஞன் எப்பொழுதும் நம் சமகாலத்தவனே இது எவ்வளவு அற்புதமான உண்மை. என்பதில் மாற்றமில்லை. ஏனெனில் இன்றும் கம்பனையும் கீட்ஸையும் படிக்கும் பொழுது என்றோ எழுதியசொற்களாக நமக்குத் தெரிவதில்லை இன்றும் நம்முடன் உறவாடும் சொற்களாக நம்மை அனுபவ இன்பத்தில் அல்லவா திளைக்கவைக்கிறது.

கவிதைக்கு வடிவம் கவிஞனால் முன்முடிவு செய்யப்படுவதில்லை. தம் வடிவைக் கவிதை தானே முன்முடிவு செய்துகொள்கிறது. என்று அரவிந்தர் எழுதியுள்ளார்.

"உண்மையான கவிதை விளங்கிக் கொள்ளப்படும் முன்பே தொடர்பு கொள்ள வல்லது" என்று டி.எஸ்.எலியட் எழுதியதை எதிரொலிப்பது போல "கவிதை புரியத்தான் வேண்டுமா? என்று கேட்கிறார் சுஜாதா அவர் மேலும் எழுதுகிறார்.

> **சில கவிதைகள் புரிவதே இல்லையே என்று கேட்கிறார்கள் கவிதை புரிய வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்று சொல்வேன்.** Understanding stops action **என்று நீட்ஷே சொன்னதை யோசித்துப் பாருங்கள் ஒரு கவிதை என்பது அனுபவக் கடத்தல்**

அனுபவக் கடத்தல் என்ற அருமையான சொற்தொடரைச் சுஜாதா பயன்படுத்துகிறார். தான் சுமந்துவரும் உள்ளொளியின் அதிர்வுகளைப் படிப்பவர் நெஞ்சிலும் ஏற்படுத்தித் தான் எந்த அனுபவத்தில் பிறந்ததோ, அந்த அனுபவச் சூழலுக்கே படிப்பவரைக் கடத்திச் சென்று விடக் கூடியது கவிதை. உயர்ந்த

அனுபவச் சூழலுக்கு அழைத்துச் செல்லும் கவிதைகள் உயர்ந்த கவிதைகள்.

நல்ல சுவையைச் சுமந்துவரும் ஓசை வான்வெளியைத் தூய்மை செய்கிறது. மௌன நிலையில் அமர்ந்து தவம் செய்யும் ஒரு சித்தர் மொழித்துணை இன்றியே நல்ல அதிர்வுகளைப் பரப்பி வான்வெளியைத் துலக்குகிறார். மகாகவிகளோ நல்ல அனுபவச்சூழலுக்கு ஓர் அடிப்படைத் தேவை எனவே உயர்ந்த அனுபவச்சூழலுக்குப் படிப்பவரை அழைத்துச் செல்லும் கவிதைகளே தேவையாகின்றன. தன் உடலில் ஏற்பட்ட புண்களுக்குக் கூட மதிப்பளிக்கும் வகையில்

முத்து பவளம் முழுவயிர மாணிக்கம்
பத்தரை மாற்றுப் பசுந்தங்கம் - சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம்

என்று தேசிக வினாயகம் பிள்ளை பாடிய மரபை மறந்து நட்சத்திரக் குவியல் நிறைந்த வானத்தைப் பார்த்து இந்த வானத்துக்குச் சொறி பிடித்துவிட்டது என்றெல்லாம் எழுதும் பண்படாத வெளிப்பாடுகளை தவிர்க்க வேண்டும். தவம், யோகம், கவிதை இவற்றில் வேட்கை குறையக் குறைய வான்வெளி மாசுபடும். அசுர அதிர்வுகளே வானத்தைச் சூழ்ந்து கொள்ளும். எனவே கவிதையை ஒரு யோகமாகப் பயிலும் வேட்கையை வளர்த்துக் கொள்வோம். அண்டப்பெருவெளி அனைத்தையும் பாதிக்கும் ஒரு பெரிய பொறுப்பு கவிஞர்களுக்கு இருப்பதை உணர்வோம்.

உசாத்துணை நூல்கள்

1. மின்னற்சுவை, ரவி.கே.
2. நமக்குத் தொழில் கவிதை, ரவி.கே.
3. உன்னோடு நான், ரவி.கே.
4. மூவர்தேவாரம்
5. பாரதியார் பாடல்கள்

❖

பாரதிக் கடலில் கவிஞர்

•

முனைவர் ச. இராஜலதா
தமிழ்த்துறைத் தலைவர் – ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி,
பொள்ளாச்சி.

"சுவை புதிது, பொருள்புதிது, வளம்புதிது, சொற்புதிது, சோதி மிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை" என்று தமிழ்மொழியைப் புகழ்க்குன்றின் மேலிட்டவர் கவியரசர் பாரதியார். 'இளசை' என்னும் சிற்றூரில் தோன்றினாலும் கலை விளக்காய், பெருஞ்சோதி உதிக்கத் தோன்றும் மலைவிளக்காய் இந்தியர் தம் மனஇருளை மாற்றுதற்கு வந்த ஞானவிளக்காய் ஒளிவிட்டுத் திகழ்ந்தவர் பாரதியார். அவருடைய பாக்களில் தேசியம் சுடர்விடும், பக்திச்சுவை நனி சொட்டும், இன்னிசை முழங்கும், இன்குயில்கூவும், தமிழ் நடனமிடும். அத்தகைய பாரதியின் கவிதைக் கடலில் மூழ்கியவர் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள் ஆவார். கவிஞர் கண்டெடுத்த முத்துக்களை இங்கு காணலாம்.

பாரதி

பாரதியின் கவிதைகள் என்றும், எவருக்கும் சுவை தரக்கூடியவை. ஆம்! பாரதி, தன் நாட்டைத் தன் மொழியைத் தன் இனத்தை மட்டும் பாடிய கவிஞர் இல்லை. அவர் மனம் எந்தக் குறுகிய எல்லைக்குள்ளும் கட்டுப்படவில்லை. அவர் எந்தக் குறுக்குச்சுவர்களையும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்

மனம் வானம் போல் பரந்து, விரிந்தது. எத்துணையும் பேதம் உறாது. எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி வாழ்ந்த சித்தர் அவர். எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணியதோடு மட்டும் அன்றி, உயிரற்றவையாகக் கருதப்படும் பொருள்கள் அனைத்தையுமே தனக்கீடாக நினைத்து நெகிழ்ந்தவர் பாரதி, இந்த நெகிழ்ச்சியை அவர் எப்படி வெளிப்படுத்துகிறார்.

காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

தன் நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலும் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் அவரைப் பெரிதும் தாக்கத்துக்கு உள்ளாக்கின. ரஷ்யாவிலே புரட்சி வெடித்த போது அவர் அதை மனமார வாழ்த்தி வரவேற்றார்.

மாகாளி பராசக்தி உருசியநாட் டினில்கடைக்கண்

வைத்தாள் அங்கே

ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி

நம் கவிஞர் படித்துக் கேட்டமட்டில் 'புரட்சி' என்ற சொல்லை முதலில் புழக்கத்துக்குக் கொண்டு வந்தது இப்பாடல்,

இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம்
இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித்
தீர்ந்த போதில்
அம்மைமனம் கனிந்திட்டாள் அடிபரவி உண்மைசொலும்
அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே நோக்கினாள்
முடிந்தான் காலன்.

இந்தப் பாடலில், உணர்ச்சி கொந்தளிக்க அவன் சீற்றத்தோடு பாடும் வரிகள், காலத்தால் அழியாதவை ஆகும்.

பாரதியின் கட்டுரை

பாரதியின் கவிதை மட்டுமல்லாமல் கட்டுரையிலும் தன் பரந்த உலகநோக்கை வெளிப்படுத்தியுள்ளார். ஜப்பான் நாட்டில்

மலர்ந்த ஹைக்கூ கவிதைகள் பற்றி பாரதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் 'ஹொகூஷி' என்ற ஜப்பானியப் புலவன் தன் வீடு தீப்பற்றி எரிந்துவிட்ட செய்தியைத் தன் ஆசானுக்குத் தெரிவித்த வரிகளைத் தமிழாக்கி வியக்கிறார்.

தீப்பட்டெரிந்து, வீழுமலரின் அமைதியென்னே, என இதைப்பாராட்டி விட்டுப் பாரதி எழுதுகிறார்: சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மை என்று நோகுச்சிப்புலவர் சொல்வதுடன் ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது.'கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'. கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்விதமான ரஸம் அதிகம் தான். தமிழ்நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும், ஒரேயடியாகக் கவிதை சுருங்கியே போய்விட்டால் நல்லதன்று. ஜப்பானிலே கூட எல்லாக் கவிதையும்; 'ஹொகூஷி' பாட்டன்று, நோக்குச்சி சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது.

ஜப்பானியக் கவிதை பற்றிய திறனாய்வு; 'சியூசீன்' என்ற சீனத்துப் பெண்மணி பற்றி ஒரு கட்டுரை; 'நகரம்' என்ற தலைப்பில் வால்ட் விட்மன் என்ற அமெரிக்கக் கவிஞனைப் பற்றி ஒரு கட்டுரை. அமெரிக்காவில் கைதிகளைக் கடுமையாகத் தண்டிக்காமல் திருத்தக் கூடங்களில் சேர்ப்பது பற்றி ஒரு கட்டுரை, இன்னும் பல. பாரதி பரந்த உலகப் பார்வையுடையவர் என்பது இக்கட்டுரைகளின் வாயிலாகத் தெளிவாகும்.

பாரதியார் பல கட்டுரைகளில் தாம் ஆண் என்பதை மறந்து, தம் முண்டாசு, மீசை ஆகியவற்றை மறந்து, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளோடு உலவும் ஒரு பெண்ணாகவே மாறிப் பேசுகிறார். 'ஸ்த்ரீ' என்றொரு கட்டுரையில் அவர் எழுதுகிறார். நாம் சேர்ந்து உண்மையோடு விடுதலைக்குப் பாடுபட்டால், பிறகு நமக்கு ஆண்மக்களும் உதவி செய்வார்கள், கடவுளும் உதவி செய்வார்.

'தமிழ் நாட்டின் விழிப்பு' என்ற ஒரு கட்டுரையில் அவர் கீழ்வருமாறு எழுதுகிறார்.

"இங்ஙனம், பரிபூரண ஸமத்வம் இல்லாத இடத்திலே ஆண்மக்களுடன் நாம் வாழமாட்டோம் என்று சொல்வதனால், நமக்கு நம்முடைய புருஷர்களாலும் புருஷச மூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையோ ஆயினும், எத்தன்மை உடையனவாயினும் அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும் நாம் அஞ்சக்கூடாது." என்கிறார். பாரதி பல இடங்களில் தன்னை ஒரு பெண்ணாகவே உருவகித்துக் கொண்டு எழுதியுள்ளார். ஏனெனில் பெண் விடுதலை கிட்டாமல் மண் விடுதலை கிட்டாது. கிட்டினாலும் பயன்படாது என்று திட்டவட்டமாக நம்பியவர் பாரதி. அவருள் இந்த எண்ணத்தை ஆழவிதைத்தவர் நிவேதிதா அம்மையார். இதைப் பாரதியே ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"தேசத்தின் எந்தவிதமான பெருங்காரியமும் கைகூடி வரவேண்டுமானால், அதற்கு ஸ்திரீகளின் மனோபலம் இல்லாமல் தீராது. இதனை எழுதுபவரிடம் ஸ்ரீ சகோதரி நிவேதிதா தேவி சில நற்போதனைகள் கூறி வருமிடையே, அந்த அம்மை சொன்னார். ஐயா, மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு, அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்துவிட முயல்வது வீண்முயற்சி? அது ஒரு போதும் நடக்க மாட்டாது என்றார்.

பெண் விடுதலையின்றி மண்விடுதலை இல்லை என்ற கருத்து நிலைபெறுமாறு தனக்கு நற்போதனைகள் செய்த நிவேதிதா அம்மையாரையே பாரதி தன் குருவாகக் கொண்டவர். அவர் 'ஜன்மபூமி' என்ற தம் நூலில் அவரே எழுதிய சமர்ப்பணத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

" எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும் துறவுப்பெருண்மையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும் பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கிறேன்."

பெண் விடுதலையின்றி மண்விடுதலை கிட்டாது என்பது பாரதியின் நெஞ்சில் ஆழப் பதிந்துவிட்ட கருத்து என்பதை அவர் தம் கவிதைகளிலும் அக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

..பெண்மை அடிமை யுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?

என்று ஒரு கவிதையில் கேட்கிறார். இந்த வரிகளைத் தொடர்ந்து வரும் வரிகளும் இதேக் கருத்தை வலியுறுத்துகின்றன.

வீட்டில் உள்ள பழக்கமே நாட்டில் உண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறராம் என்பான்
நாட்டினிலே..
நாடோறும் முயன்றிடுவான் நலிந்து சாவான்

இன்னொரு பாடலில்

கும்மியடி தமிழ்நாடு முழுதுங்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமென்று கும்மியடி

உறங்கிக் கொண்டு செயல் இழந்து கிடந்த தமிழ்நாட்டை உலுக்கி எழுப்பிக் கும்மியடிக்கக் குரல் கொடுத்தவர் பாரதி. இதுவரை பழமையிலும் மூடத்தனத்திலும் மூழ்கிப் பெண்கள் அடிமைப்பட்டுக் கிடந்த தன் காரணம் அவர்களை அச்சம், நாணம் போன்ற பிசாசுகள் பிடித்திருந்தன என்பதே,

நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ

என்ற 'புதுமைப் பெண்' கவிதையில் கூறுகிறார். நாணம், அச்சம் என்றெல்லாம் பெண்ணியல்புகளைக் கூறியே அவர்களை ஆணினம் அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அந்தப் போலிப் பண்புகளை உதறிவிட்டு ஞானம், நல்லறம், வீரசுதந்திரம் பேணல் ஆகிய பண்புகளையே பெண்ணியல்புகளாகக் கொள்ளவேண்டும் என்று பெண்மையைப் போற்றி கும்மியடிக்கச் சொல்கிறார் பாரதி.

மகான்களும் பாரதியும்

பெண் விடுதலை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது எக்காரணத்தைக் கொண்டும் தம் கருத்தில் வளைந்து கொடுக்காமல் அதில் யாதொரு சமரசத்தையும் ஏற்காமல் துணிவோடு தன் கருத்தைச் சொன்னவர் பாரதி. அப்படிச் சொல்லுமிடத்துத் தான் மதிக்கும் ஒரு தலைவருடனோ, ஒரு

மகானுடனோ கருத்து வேறுபாடு கொள்ள நேர்ந்தாலும் தயங்காமல் தன் கருத்தை அறிவித்தவன் பாரதி. பாரதியின் இரண்டுகட்டுரைகள் இதற்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. ஒரு கட்டுரையில் மதாத்மா காந்தியுடனும் மற்றொன்றில் சுவாமி விவேகானந்தருடனும் பாரதி தம் கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துகிறார்.

வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா வாழ்க வாழ்க

என்று அண்ணல் காந்தியடிகளை நெஞ்சாரப் புகழ்ந்தவர் பாரதி. ஆனால் கருத்துப் போர் என்று வரும் போது காந்தியடிகளையும் விமர்சிக்கத்தயங்கவில்லை. 'நவஜீவன்' என்றொரு பத்திரிகையை மகாத்மா காந்தி நடத்தி வந்தார். அதில் ஒரு கடிதம் வெளியாகி இருந்தது. அந்தக் கடிதத்தில் இந்தியாவில் விதவைகள் எனப்படும் கைம்பெண்களின் எண்ணிக்கை பட்டியலிடப்பட்டு விவரிக்கப்பட்டிருந்தது. குறிப்பாகக் குழந்தைக் கைம்பெண்களைப் பற்றித் தரப்பட்டிருந்த பட்டியல் படிப்போர் நெஞ்சைப் பிளக்கும் வண்ணம் இருந்தது.

வயது	மணம்புரிந்த மாதர்	கைம்பெண்கள்
0–1	13212	1014
1–2	17753	856
2–3	49787	1807
3–4	134105	9273
4–5	302425	17703
5–10	2219778	94240
10–15	10087024	223032

இக்கடிதம் பற்றி காந்தி அவர்களே அந்த இதழில் ஒரு கட்டுரையும் எழுதியிருந்தார். அக்கட்டுரையில் அவர் இந்தக்

கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க இரண்டு அறிவுரைகள் வழங்கியிருந்தார். ஒன்று, குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து கொடுத்துவிடும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டும் என்பது; மற்றொன்று, இளம் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுக்க வேண்டும் என்பது இந்த அறிவுரைகளை வேண்டுவோர் மேற்கொள்ளலாம் என்றும், எல்லாரும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டியதில்லை என்றும் காந்தியடிகள் எழுதியிருந்தார். இவற்றை மேற்கொள்வதில் தமக்குத் தனிப்பட்ட முறையில் விருப்பமில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆண்கள் மறுமணம் செய்துகொள்வதில்லை என்று உறுதி பூணுவதே விதவைகளின் எண்ணிக்கையைக் குறைக்க உதவும் என்றொரு கருத்தையும் காந்தியடிகள் அக்கட்டுரையில் தெரிவிந்திருந்தார். மேற்சொன்ன அறிவுரைகளை, அந்தக்காலக் கட்டத்தில் படித்தவர் எவரும் இக்கருத்துகள் மிகவும் புரட்சிகரமானவை என்றே சொல்லியிருக்கக்கூடும். அதுவும் பெண்விடுதலை விழைந்தோர் இக்கருத்துகளைப் பெரிதும் போற்றிவரவேற்றிருக்கக்கூடும். பெண் விடுதலையில் தீவிர நாட்டம் கொண்டிருந்த பாரதிக்கோ இந்தக் கருத்துகள் ஏதோ அரைமனத்தோடு சொல்லப்பட்ட கருத்துகளாகவே தென்பட்டன. பாரதியின் தீவிர நோக்கில் இந்தக் கருத்துகள் மழுப்பல்களாகவே தோன்றின.

ஆண்கள் மறுமணம் செய்துகொள்ளாமல் இருத்தல் விதவைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் என்ற கருத்தைப் பாரதி திட்டவட்டமாக மறுத்ததோடு மறுமணம் பற்றிய தன் கருத்தையும் உறுதியோடு ஒரு கட்டுரையில் வெளியிட்டார். காந்தியடிகளின் கருத்துக்கு என்ன அடிப்படை? முதல் மனைவியைப் பறிகொடுக்கும் ஆண் பெரும்பாலும் வயது முதிர்ந்தவனாகவே இருப்பான். அதனால் அவன் வயதில் குறைந்த ஒரு பெண்ணை மறுமணம் புரிந்து கொண்டு விரைவில் உயிர்நீத்துவிடக் கூடும். அவன் மறுமணம் செய்துகொண்ட பெண் இதனால் விரைவிலேயே விதவையாகி விடநேரிடும். எனவே ஆண்கள் மறுமணம் செய்யாதிருத்தல் விதவைகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிடும்.. காந்தியடிகள் தெரிவித்த கருத்துக்கு இதுவே அடிப்படை என்கிறார் பாரதி. பெரும்பாலும் கிழவர்களே முதல் மனைவியைப் பறிகொடுப்பதாகக் கணிப்பது தவறு என்கிறான் பாரதி. 'இந்தியாவில் ஆண்களுக்கும்

பெண்களுக்கும் சராசரி 25 – ஆம் பிரயாத்தில் மரணம் நேருகிறது, என்பதை ஸ்ரீமான் காந்தி மறந்துவிட்டார்' என்று பாரதி எழுதுகிறார். இளமையிலேயே மனைவியை இழந்துவிடும் ஆண்கள் மறுமணம் செய்து கொள்ளாமல் இருப்பது எளிதன்று என்றும் அப்படியே மறுமணம் செய்துகொள்ளாமல் இருந்தால் தவறான வழிகளில் நாட்டமேற்படக் கூடும் என்றும் பாரதி எழுதுகிறார். மேலும், அவர் பின்வருமாறு கூறுகிறார்.

"ஸ்த்ரீ – விதவைகளின் தொகையைக் குறைக்க வழி கேட்டால், ஸ்ரீமான் காந்தி புருஷ – விதவைகளின்(அதாவது புனர் விவாகமன்றி வருந்தும் ஆண் மக்களின்) தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார். இதுனின்றும், இப்போது ஸ்த்ரீ – விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்லுவது போல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்" என்னும் கனமானக் கருத்தைக் கூடக் கிண்டல் கலந்த நகைச்சுவையோடு எழுதிப் படிப்பவர் மனத்தில் அக்கருத்து நன்கு பதிந்து விடுமாறு செய்யும் யுத்தியைத் தமிழில் முதன்முதலில் பாரதியே புகுத்தினார் என்று கூறலாம்.

மேலும் ஆணுக்கேணும் பெண்ணுக்கேணும் இளமைப் பிராயம் கடந்த மாத்திரத்தலே போக விருப்பமும் போக சக்தியும் இல்லாமற் போகும்படி கடவுள் விதிக்கவில்லை. 'வயதேறிய பெண்களை வயது முற்றிய ஆண்மக்கள் மணம் புரிந்து கொள்ளக் கூடாதென்று தடுக்க எவனுக்கும் அதிகாரம் கிடையாது' விதவைகளின் தொகையைக் குறைப்பதற்கும் அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வமி தான் இருக்கிறது. அதாவது யாதெனில் விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரை புனர்விவாகம் செய்து கொள்ளலாம். வீண் சந்தேகம், பொறாமை, பெண்களை ஹ்ருதயமில்லாத, ஸ்வாதீனமில்லாத, அடிமைகளாக நடத்த வேண்டுமென்ற கொள்கை. இவற்றைக் கொண்டே நம்மவர்களிலே சில புருஷர்கள் ஸ்திரீகளுக்கு புனர்விவாகம் கூடாது என்று சட்டம் போட்டார்கள். அதனாலே தான் மனைவியில்லாத கிழவர்கள் சிறுபெண்களை மணம் புரிய நேரிடுகிறது. பால்ய விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்ளலாம் என்று ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார். ஆனால்,

அதைக் கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியம் இல்லை. மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்று, மற்றப் பேச்செல்லாம் வீண்கதை" என்ற பாரதியின் கருத்து நேர்மையும் கொள்கை உறுதியும் தெளிவும் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

விவேகானந்தரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தவர் பாரதி. விவேகானந்தரின் முதன்மைச் சீடரான 'மிஸ் மார்க்ரெட் நொபெல்' என்ற நிவேதிதா அம்மையாரைப் பாரதி தன் குருவாகவே ஏற்றுக் கொண்டிருந்தச் செய்தி ஏற்கனவே சொல்லப்பட்டது. விவேகானந்தரைப் புகழ்ந்து வெளிப்படையாகப் பாரதி பல இடங்களில் எழுதியுள்ளார். "ஸ்ர்வ ஜீவர்களும் கீழ் ஜாதியரும் நோயாளிகளும் ஏழைகளும் மஹாபாதகரும்... எல்லா மனிதரும் பரமாத்மாவின் ஸ்வரூபமே என்று விவேகானந்தர் பாவித்தவர்.. மேற்கூறியபடி சண்டாளர்களும் பாதகர்களும் அவர்கள் எல்லாரிலும் அதிகமாக அவமானத்துக்கும் கஷ்டத்துக்கும் உட்பட்டும் பரம ஏழைகளும் கடவுளின் ரூபங்களென்று சொல்லி அவர்களைத் தொழவேண்டும் என்ற விவேகானந்தர் மாதர்களின் விஷயத்தில் மிகவும் முற்போக்குக் கொள்கைகளைத் தழுவி இருந்தனர் என்பது சொல்லாமலேயே போதரும் இவ்விஷயத்தை நன்றாக விளக்கிக் காட்டுவதற்கு அவருடைய எழுத்துகளில் இருந்தே பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி விவரித்தல் அவசியமென்று கருதுகிறேன். இங்ஙனம் செய்வதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது இடைக்கிடையே விவேகானந்தர் தம்முடைய ஸந்யாசப் பயிற்சியால் இயற்கையில் உண்டாகக் கூடிய ஸம்சய புத்தியையும் பயத்தையும் மாதரின் விஷயத்திலே புலப்படுத்திச் சில வார்த்தைகள் எழுதுகிறார். இல்வாழ்க்கையைக் காட்டிலும் துக்கம் மேற்பட்டதென்ற எண்ணம் அவருடைய மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்திருந்தபடியால் ஆண்களும் பெண்களும் மணக்கோலம் இன்றி அழிவதை அவர் பெருங்கஷ்டமாகக் கருதாமல் பல வார்த்தைகள் எழுதியிருக்கிறார்."

விதவைகள் மறுமணம் புரிந்துகொள்வது பற்றி விவேகானந்தர் எழுதியிருந்த சில கருத்துகளே பாரதியை மேற்சொன்னவாறு எழுத வைத்தன. விதவை மறுமணம்

தகாதவென்று இந்து தர்மத்தில் முன்பு விதிசெய்யப்பட்டது, ஏதோ, ஜன சமூக அவஸரத்தால் ஏற்பட்ட ஒன்று என்பது போல் விவேகானந்தர் எழுதியிருந்தார். 1898 ஜனவரி மாதம் 3–ஆம் நாள் பெங்கால் பெண்மணி ஒருவருக்கு விவேகானந்தர் எழுதிய கடிதத்தில் அவ்வாறு இருந்தது. மேலும், விதவை மறுமணம் தாழ்ந்த ஜாதியர்களுள் நடைபெறுவதாகவும், மேல் ஜாதியருள் ஆண்கள் தொகையைவிடப் பெண்கள் தொகை அதிகம் என்பதால் விதவை மறுமணம் நடப்பதில்லை என்றும் அக்கடிதத்தில் விவேகானந்தர் குறிப்பிட்டிருந்தார். ஒவ்வொரு கன்னிப்பெண்ணும் ஓர் ஆடவர் கணவனாக அமைவதே எளிதாக இல்லாத போது, ஒரு பெண்ணுக்கே அடுத்தடுத்து இரண்டு கணவர் கிடைப்பது அரிது என்பதால் விதவை மறுமணம் கூடாதென்ற விதி ஏற்பட்டதாக விவோகானந்தர் அக்கடிதத்தில் விவரித்திருந்தார்." இது குறித்து மிகவும் நையாண்டியாகக் குறிப்பிட்டு, அக்கருத்தைப் பாரதி கடுமையாகச் சாடுகிறார்.

"ஜாதி வகுப்புகளைத் தொலைத்துவிட்டால் விவேகானந்தர் மிகவும் சிரமத்துடன் எடுத்துக்காட்டிய ஜனஸங்கியைக் கஷ்டத்துக்கு இடம் இராதன்றோ? மேலும் விவேகானந்தர் மஹா நீசத் தனமான வழக்கமொன்றுக்குத் தம்மையறியாமலே பொய் முகாந்தரம் கூறத் தலைப்பட்ட இடத்தில் முக்கியமான விஷயம் ஒன்றை மறந்து போய்விட்டார். அதாவது, ஸ்மிருதிகள் எழுதப்பட்ட காலத்தில் ஜனசங்கியைக் கணக்குக் கிடையாதென்பதை அவர் மறந்து போய்விட்டார். சந்திரகுப்த ராஜன் காலத்தில் ஜனசங்கியை எடுக்கும் வழக்கமிருந்ததாகச் சரித்திரம் சொல்லகிறது. எனினும் பராசர ஸ்மிருதியாவது வைதியநாத தீசிதர் ஸ்மிருதியாவது தோழப்ப ஸ்மிருதியாவது ஜனசங்கியையை ஆதாரமாக வைத்துக் கொண்டு எழுதப்பட்டதாக நினைக்க யாதொரு ஆதாரத்தையும் காணோம்..' மேல் ஜாதியினர் மட்டும் எப்பொழுதுமே ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண்குழந்தைகள் அதிகம் பெற்றுக் கொண்டிருந்தனர் என்று எப்படிக் கொள்ள முடியும் என்பதே அந்தக் கேள்வி. இயற்கையிலேயே இந்தியாவில் சில வகுப்பினர் மாத்திரம் எப்போதும் நித்யமாக அனவரதமாக ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண்கள் அதிகமாகப் பெற்றுக் கொண்டிருக்கக் கடவார்களென ஒரு நியமம் ஏற்பட்டதாக நினைக்க வேறதுவில்லை. ஒரு வேளை, இங்ஙனம்

ஸ்த்ரீகளை மேல்மேலும் விலக்கி வந்தது காரணமாக ..இங்ஙனம் ஸ்தீரீகளை உலக வாழ்க்கையின் எல்லையில் இருந்து புறத்தே எறிந்து வந்தது காரணமாக... மேல் ஜாதியர்கள் எனப்படும் சில வகுப்பினருக்குள்ளே ஆண்மை குறைவுபட்டு, அதனால், மேன்மேலும் ஆண்படைப்பைக் காட்டிலும் பெண்படைப்பு மிகுதிப்பட்டு வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. எப்படி? என்ன கணக்கு? ஜனசங்கையா."

இவ்வாறு நையாண்டி செய்துவிட்டுச் சீற்றத்தோடு சில கேள்விகளைப் பாரதி கேட்கிறார். ஜனஸங்கையா ஸ்த்ரீகளுடைய ஆபரணங்களைக் கழற்றி அவர்களுடைய தலையைச் சிரைக்க வேண்டுமென்று சொல்லிற்று? ஜனஸங்கையா விதவைகள் ஒரு நேரம்தான் சாப்பிடலாம் என்று விதித்தது? கைம்பெண் முகத்தில் விழிப்பதும் வீதியில் செல்லும்போது ஒருவனுக்குக் கைம்பெண் எதிர்ப்படுவதும் அபசகுணமென்று ஜனஸங்கையா தீர்மானித்தது? ஜனஸங்கையாம். நொண்டிக்கதை?" எவ்வளவு ஆவேசமான கேள்விகள். விவேகானந்தர் ஏன் இப்படி எழுதினார் என்பதற்குப் பாரதி விளக்கம் கொடுக்கிறார். "அமெரிக்காவில் சென்று ஹிந்து மதப்பிரச்சாரம் பண்ண வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்வாமி விவேகானந்தர் இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஜப்பானுக்கு போன மாத்திரத்திலேயே வேதசக்தியாகிய பராசக்தி அவருக்கு ஞானச் சிறகுகள் அருள் புரிந்துவிட்டாள். மேல்நாட்டு வேலையை முடித்து இந்தியாவுக்குத் திரும்பிய அளவில் விவேகானந்தருடைய இருதயம் சோர்வெய்திப் போய்விட்டது. அவருடைய உற்சாகம் குன்றிவிட்டது. அமெரிக்க வேலையும் இங்கிலாந்து வேலையும் அவரை உடைத்துவிட்டன. சாரத்தைப் பிழிந்து கொண்டு சக்கையை விடுத்தன. எனவே ஸ்வாமி அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கெழுதிய கடிதங்களில் உள்ள வேகமும் திறமையும் சக்தியும் தெளிவும் ஆண்மையும் சுடரும் பிந்திய கடிதங்களிலே காணப்படவில்லை" தான் பெரிதும் மதித்துப் போற்றிய விவேகானந்தருடன் பெண் விடுதலை தொடர்பாகக் கருத்து வேறுபட்ட போது, மேற்சொன்னவாறு தயங்காமல் தம் வாதங்களை வெளிப்படுத்தியவர் பாரதி..

வானவில் ரவி அவர்கள் பாரதியின் கவிதைகளில் மூழ்கித் திளைப்பதோடு, அந்த மாயத்திற்கான காரணங்களையும் சிந்தனை செய்து தானடைந்த கவிதைச்சுவையைப் பகிர்ந்துக்

கொண்டிருக்கிறார். நமக்குத் தொழில் கவிதை என்ற பாரதியின் வரியில் தொழில் என்ற சொல்லுக்கு இவருடைய விளக்கத்தைக் காணும்போது கவிதை அனுபவநிலையைக் கடந்து, இலக்கிய ஆய்வாளராகவும் திகழ்வதைக் காணமுடிகிறது.. கவிஞனின் காட்சிப்புலப்பாடுகளுடன் அகப்பாடுகளும் இணைந்து கவிதை தோற்றம்பெற அனுபவமே வாசகனின் கவிதைச்சுவையாகிறது. நமக்குத் தொழில் கவிதை கட்டுரைத்தொகுப்பின் மூலமாக வானவில் ரவி முண்டாசுக் கவிஞன் பாரதியின் கவிதையைப் படித்து இன்புறும் சுவையை எடுத்துரைத்துள்ளது சிறப்புக்குரியது.

உசாத்துணை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள் – பாரதியார்;, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. மின்னற்சுவை, ரவி.கே.
3. நமக்குத் தொழில் கவிதை, ரவி.கே.
4. உன்னோடு நான், ரவி.கே.

❖

வானவில் ரவியின் பார்வையில் கம்பன்

•

முனைவர் இல. இரேவதி,
முதல்வர், அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
கொடைக்கானல்.

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் நூல்களுள் இராமாயணமும் ஒன்று. தமிழர் ஒழுக்க முறைகளையும், பண்பாட்டினையும், குறிக்கோளையும், ஆட்சிச் சிறப்பினையும் இந்நூல் விளக்குகிறது. பாரதி மதித்த மகா கவிகளுள் கம்பனும் ஒருவர். 'அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலர்," என்றும் "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் "யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல் வள்ளுவரைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனிலே யாங்கணுமே கண்டதில்லை" என்றும் கம்பரின் சிறப்பைப் போற்றியுள்ளார் பாரதி.

கம்பர், இராம அவதாரச் செய்யுள் என, தம் காப்பியத்திற்குப் பெயர் சூட்டினார். பின்னர் காலப்போக்கில் கம்ப இராமாயணம் என அழைக்கப்பட்டது. "விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்", "கம்பநாடன் கவிதைபோல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்னும் பாராட்டு உரைகள் கம்ப இராமாயணத்தின் பெருமையைப் பறைசாற்றும். "சொல்லுக்குள் வாக்கியத்தை அடக்கி வைத்த கவிப்புலவ" என வைரமுத்து

கம்பரைப் பாராட்டியமை இவண் நினைக்கத் தக்கது. "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" எனச் சான்றோர்களால் போற்றப்படுகிறார்.

சொற்களின் தவம்தான் கவிதை. எனவே கவிஞனுக்கு சொல்மீது அதிக ஈடுபாடு அவசியம். இராமாயணத்தை "நல்லோர் சொன்ன சொல் எனப் போயிற்று" என்பார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். கம்பனது காப்பியம் முழுமையும் சொல்லாட்சித் திறம் பெருகியுள்ளது. சொல்லை ஆய்ந்து பயன்படுத்துவதே சொல்லாட்சித் திறம் எனலாம். இராமாயணத்தில் கம்பர் சொல்லாட்சித் திறத்தை எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

அனுமன் இலங்கையில் சீதையைக் கண்ட செய்தியை இராமனிடம் விளம்புவதை,

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேன் இல்லேன்
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பென்னும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைத் தீவு என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் கம்பர் "இலங்கை வெற்பு" என்று அனுமன் வாயிலாகச் சொல்கிறார். இலங்கை மலையாக இருந்து கடலில் அமுங்கிப்போய் தீவாகிவிட்டதாக வான்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்ட செய்தியை 'இலங்கை வெற்பு' எனக் கம்பர் சொல்லியிருப்பதிலிருந்து கம்பரின் கவித்துவ ஆற்றல் புலனாகின்றது.

இராமனும் சீதையும் கானகம் சென்ற நிலையில் உறங்கிய காட்சியைக் கூறவந்த கம்பர்

அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். இராமனும் அவளும் ஒன்றாக உறங்கினார்கள் என்று கம்பர் சொல்வதிலிருந்து இராமனோடு படுத்து உறங்கக்கூடிய தகுதியுடைய ஒரே பெண் சீதை என்பதை உய்த்து உணரும் வகையில் 'அவள்' என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார்.

இராமன் முடிசூட்டு விழா நடக்கும் நிகழ்ச்சியைக் கம்பர்,

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலிஓங்க வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

எனப் புனைந்துள்ளார். அனுமன் அரியணையைச் சுமக்க, அங்கதன் உடைவாளைத் தாங்க, பரதன் வெண்பட்டுக் குடையைப் பிடிக்க, இலக்குவன், சத்துருக்கன் இருவரும் கவரிவீச, சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் முடியெடுத்துக் கொடுக்க வசிட்டன் அதை வாங்கி இராமன் தலையிலே முடிசூட்டினான். இலக்குவன், சத்துருக்கன் எனப் பெயர் குறிப்பிடாமல் 'இருவரும்' கவரி வீச என்று குறிப்பாகச் சொல்லி இராமாயணம் படிப்போர் உணரும் வகையில் சிந்தித்துச் செயல்பட வைக்கிறார் கம்பர்.

இராமன் வனவாசம் மேற்கொண்டபோது அவனைக் காண வந்த பரதனை வணங்கினான் குகன். பரதனும் குகனும் சந்தித்துக் கொள்ளும் பட்சத்தில், பேசிய காட்சியை, கம்பர்

வந்தெதிர் தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனுமவன் அடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்

இவ்வடிகளின் மூலம் உணர்த்துகிறார். (மலரிருந்த அந்தணன் – பிரம்மன்) பிரம்மன் திருமால், சிவன் என்ற இருவரைத் தவிர இன்னொருவரை வணங்கினான். அந்த இன்னொருவர் முருகப் பெருமான் என்பதும் இந்தப்பாடலில் குகன் (முருகன்) என்பதைக் குறிப்பால் உணர்த்திவிடுகிறார்.

சுந்தரகாண்டத்தின் நாயகன் அனுமனே என்றும் சிவனே அனுமன் என்ற செய்தியைக் கடல்தாவு படலத்தில் கம்பர் குறிப்பிடுகிறார். இதனையே,

வெயில் இயல் குன்றம் கீண்டு வெடித்ததும் நடுக்கம் எய்தி
மயில்இயல் தளிர்க் கை மாதர் தழீஇக் கொளப் பொலிந்த வானோர்
அயில் எயிற்று அரக்கன் அள்ளத் திரிந்த நாள், அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவைத் தனித் தனி கடுத்தல் செய்தார்

இப்பாடலில் குறிப்பிடுகிறார். குன்றில் அனுமன் கால்ஊன்றி அழுத்தியதும், அந்தக் குன்று அமுங்கிப்போய் காட்சி அளித்தது. இராவணன் இமயமலையைத் தூக்க முற்பட்டபோது தன் கால் விரலால் சிவபெருமான் அமுக்கியதும் அமுங்கியதுபோல் அக்குன்று அமுங்கியது எனக் கூறுகிறார்.

இராமனும் சீதையும் கண்களால் நோக்கியதைக் கூறவந்த கவிஞர்,

எண்ண அரு நலத்தினாள் இணையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

என்று குறிப்பிடுகிறார். நோக்கினான், நோக்கினாள் என்ற சொல் தொடர்களிலிருந்து நோக்குதல் என்பது பார்த்தல் என்ற பொருள்படும். ஆனால் ஒரு நோக்கத்தோடு பார்ப்பதே நோக்குதல் என்ற பொருள் தருகிறது.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல

என்ற குறள் இங்கு ஒப்புநோக்கத் தக்கது. நோக்கு ஒத்த காதலர்கள் பேசிக்கொள்ளத் தேவையில்லை. அப்படியே பேசினாலும் பயன்தரும் பேச்சாக இருக்காது என்ற கருத்தை அடிஒற்றியே சீதை இராமன் ஒருமித்த காதல் அமைந்துள்ளது என்பதை இத்தகைய சொல்லாடல்கள் விளக்குகின்றன.

இராமன் முடிசூட்டுவிழாவிற்காக அயோத்தி நகரம் விழாக்கோலம் பூண்டிருந்த நிலையை விளக்க வந்த கம்பர்,

சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமனைத் திருமாலையக்
கரிக்கரம் பொரு கைத்தலத்து உயர்காப்பு நாண் அணிதற்கு முன்

வரித்த தண்கதிர் முத்தது ஆகி இம்மண் அனைத்தும் நிழற்ற மேல்
விரித்த பந்தர் பிரித்ததுஆம் என மீன் ஒளித்தது வானமே

என்ற பாடலில் வானம் போட்ட நட்சத்திரப் பந்தலை வானமே பிரித்ததுபோல காட்சியளித்ததாகப் பாடுகிறார்.

இராமன் கைகேயி கேட்ட வரத்தால் நாடு துறந்து காடு ஏகினான். இளையவனோடும் சீதாபிராட்டியோடும் கானகம் ஏவியநிலையில் சந்திரன் உதித்ததைக் கூற வந்த கம்பர், வானமே கைவிளக்கு எடுத்ததுபோல சந்திரன் உதித்தது என்று பாடுகிறார்.

சீதாதேவி அசோக வனத்தில் சிறை இருந்ததைக் கூறவந்த கவிஞர் இலங்கை என்ற கண்ணாடியில் வானமங்கை தன்மேனி அழகைக் கண்டுகளித்திருந்ததாகக் கூறுகிறார்.

வாலி, மறைந்து நின்று இராமன் தன்னைக் கொன்றது அதர்மம் என்று வாதிடுகிறான். இராமன் எய்த அம்பிலிருந்து மூலமந்திரத்தைக் காணுகிறான். இராமனிடம் தன் தவறுகளை மன்னிக்கும்படி வாலி வேண்டுவதை,

தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினின் நோக்கு நேர்மை
நாயென நின்ற எம்மால் நவையற உணரலாமே
தீயென பொறுத்தி என்றான் சிறியன சிந்தியாதான்

கம்பர் இப்பாடலின் மூலம் உணர்த்துகிறார். வாலி சுக்கிரீவனை விரட்டிவிட்டு அவன் மனைவியைத் தன்னவளாக ஆக்கிக் கொண்ட பழிச்செயலுக்கு ஆளானதையே 'சிறியன' சிந்தியாதான் என்ற சொல் தொடர் மூலம் குறிப்பிடுகிறார். மரணவாயிலில் இருக்கும் வாலி இராமனிடம் தீயென பொறுத்தி என இறைஞ்சுகிறான்.

மருத நிலத்தின் அழகைப் பாடவந்த கவிச்சக்கரவர்த்தி,

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேன்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ

என்ற பாடலை யாத்துள்ளார். மருதநிலக் காட்சியை மயில்கள் நடனம் ஆடவும் தாமரை மலர்கள் விளக்காகவும் மேகங்கள் முழவாகவும் குவளை மலர்கள் கண்விழித்து

நோக்குவதாகவும் வண்டுகள் யாழ்போல் இசைப்பதாகவும் காட்சியை வர்ணித்துள்ளார். துன்பம் சூழ்ந்த கட்டத்தை விளக்கும்போதும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவ திலிருந்து கம்பரின் சொல் ஆளுமை புலனாகிறது.

இந்திரசித்து போரில் மரணமடைகிறான். அவன் தலையற்ற உடல் கண்டு புலம்பும் இராவணன், கூற்றையும் ஆடல்கொண்டேன் என்று கூறுகிறான். இராம பாணத்தால் அவன் கூற்றுக்கு இரையாகினான். கூற்றை வெல்ல முடியாத காரணத்தால் கூற்றையும் ஆடல் கொண்டேன் என்கிறான் இராவணன்.

நாட்டை இனி பரதனே ஆளட்டும். நீ கானகம் செல். இது மன்னவன் கட்டளை என்று கூறுகிறாள் கைகேயி. அதனைக் கேட்ட இராமன் மனம் கலங்காமல் மன்னவன் கட்டளையாக இல்லாமல் போனாலும் உங்கள் கட்டளையாகவே இருந்தாலும் அதனை ஏற்கிறேன் என்கிறான். இராமனது திருமுகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது என்கிறார் கம்பர். மேலும் உருளுகின்ற சக்கரம் கொண்ட வண்டியில் வண்டிக்கு உடையவனால் கட்டப்பட்ட காளையை, இரக்கம் மிகுந்த யாரோ அவிழ்த்து விட்டதும் கட்டறுந்த களிப்புடன் காளை எப்படி இருக்குமோ, அதுபோல் கைகேயின் உரை கேட்டதும் இராமன் களிப்புற்றான் என்கிறார் கம்பர். அசோக வனத்தில் சிறையிருக்கும் சீதாதேவி இராமனை நினைத்துப்பார்க்கும்பொழுது பழைய நிகழ்வை நினைவு கூர்கிறாள். இராமனுடைய முகம் பரதன் நாட்டை ஆளட்டும் நீ காட்டுக்குச் செல் என்றபோதும் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையாக ஒளிவீசியதை எண்ணிப்பார்க்கிறாள்.

கைகேயி சூழ்வினை படலத்தில் கைகேயி இரண்டு வரம் கேட்கிறாள். தசரதன் தந்தேன் என்று கூறுவதைக் கவிஞர்

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக்கடவேன், என்
உள்நேர் ஆவிவேண்டினும் இன்றே உனதன்றோ?
பெண்ணே, வண்மைக் கேகயன்மானே, பெறுவாயேல்
மண்ணே கொள்நீ, மற்றையது ஒன்றும் மற என்றான்

என்ற இப்பாடலில் குறிப்பிடுகிறார். வண்மைக் கேகயன்மானே என்ற சொல்லைக் கம்பர் கையாளுவது குறிப்பிடத்தக்கது.

கைகேயின் தந்தை வள்ளல் என்ற காரணத்தால் நான் கேட்பதைக் கொடு என்பதைக் குறிக்கவே இந்த சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். மேலும் இராமன் காடு ஏகுதல் வேண்டும் என்ற சொல்லைச் சொல்லக்கூட மனமில்லாத தசரதன் மனநிலையை விளக்கவே 'மற்றையது ஒன்றும் மற' என்ற சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார்.

பரசுராமனை இராமன் விளிக்குமிடத்தில், 'வேதவித்தாய மேலோன் மைந்தன் நீ, என்ற சொல்லாடலைக் கையாண்டுள்ளார். வில்லை வளைத்த இராமன் பரசுராமனை நோக்கி நீ மன்னர்களை அழித்தவன், வேத சாத்திரங்களில் வல்லவன், விரதங்கள் பல புரிந்தவன் ஆகையால் உன்னைக் கொல்லமாட்டேன் ஆயினும் என் அம்பு வீண் போவதன்று, எனக்கு விளக்கம் சொல் எனக் கேட்பதுபோல சொல்லாட்சியை அமைத்துள்ளார்.

பிணிவீட்டுப்படலத்தில் அனுமன், இராவணன் கேள்விக்கு விடை தருகின்ற சூழலை விளக்கும் கவிச்சக்கரவர்த்தி,

அஞ்சலை அரக்க! பார்விட் டந்தரம் அடைந்தான் அன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும் போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனியாள் தன் அடுகணை ஒன்றால் மாழ்கித்
துஞ்சினன் எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல் என்றான்.

என்ற பாடலை யாத்துள்ளார். அரக்க என இகழ்ச்சியாக விளிக்கிறான். மேலும் வாலியிடம் பயமுடையவன் இராவணன் என்பதை எள்ளி நகையாடும் விதமாக, வாலி இறந்தான். திரும்ப வாரான் அவன் வாலும் இறந்தது என்று கூறுகிறான்.

மீட்சிப்படலத்தில் சூக்கும உடலோடு வந்த தசரதனிடம் இராமன் வரம் கேட்பதை,

ஆயினும் உனக்கு அமைந்தது ஒன்று உணர என அழகன்
தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரந்தருக எனத் தாழ்ந்தான்
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன உயிர்எலாம் வழுத்தி

கம்பர் இப்பாடலின் மூலம் குறிப்பிடுகிறார். தாங்கள் தீயவளாகக் கருதி நீக்கினும் எனக்குத் தெய்வமாக விளங்கிய அவளும் அவள் மகனும் (கைகேயி, பரதன்) என்பதைக் குறிக்க தாயும் தம்பியும் என்ற சொல்லாடலைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தீயள் என்ற கைகேயின் பாத்திரப்பண்பை விளக்கும் விதமாக இந்த சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார்.

சனகனிடம் விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவனையும் அறிமுகம் செய்யுமிடத்தில் 'தந்தை அறிவு மகன் அறிவு' என்ற சொல்லாடலைக் கையாண்டுள்ளார். தசரதன் மக்கள் என்பது பெயரளவிலேயே பொருந்தும். தசரதனைப் போல பல மனைவியரை மணக்க மாட்டான். எல்லாக் கலைகளையும் ஓதுவித்து வளர்த்த வசிட்டனைப் போலவே விளங்குவான் என்பதைக் குறிக்கவே இந்தச் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார். உடல் உயிர் பற்றிய எண்ணம் கம்ப இராமாணயத்தில் பரவலாகக் காட்டப்பெறுகிறது.

'மன்னன் உயிர்: மக்கள் உடல் என்பதை மாற்றி

மக்கள் உயிர் மன்னன் உடல்' என அமைக்கிறான். பின் இராமனே தசரதனின் உயிர் என்பதனை 'மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன்' எனக் கைகேயியின் உரைகேட்டு அயர்ந்து வீழ்ந்த மன்னனைக் கம்பர் இங்ஙனம் குறிப்பிடுகிறார்.

அசோக வனத்தில் சிறையில் வைக்கப்பட்ட சீதையை அனுமன் கண்டு விடைபெற்றுத் திரும்பும்போது சில உறுதிமொழிகளைக் கூறுகிறார். இதனை

வந்து எனைக் கைப்பற்றிய வைகல் வாய்
இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன் என்று செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்

என்கிறார் கம்பர். இப்பாடலில் வரம்தந்த இராமன் சொன்ன சொற்களை அவனுடைய திருச்செவியிலே கூறுவாயாக என்று சீதை கூறுவதிலிருந்து இராமன் ஏகபத்தினி விரதம் பூண்டவன் என்ற செய்தியைக் குறிக்க சிந்தையாலும் தொடேன் என்ற சொல்லாடலைக் கையாண்டுள்ளார்.

சீதையைச் சிறையெடுத்த இராவணன் அவளை நிலத்தோடு பெயர்த்துச் சென்றான் எனக் கம்பன் காட்டுவதிலிருந்து தமிழ்நாட்டுக் கற்புத்திறத்தை உணர வைக்கிறார். இதனை

ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்து கொண்டு
ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய

நீண்ட சாலையோடு நிலை நின்றது
காண்டிஐய! நின்மெய் உணர் கண்களால்

கம்பர் இப்பாடலில் குறிப்பிடுகிறார். இலக்குவனால் அமைக்கப்பட்ட பர்ணசாலையோடு தான் இலங்கையில் இருப்பதை கூறுவதிலிருந்து இராவணனால் தீண்டப்படவில்லை என்பதை உணரவைக்கிறார்.

கம்ப இராமாயணத்தில் பாவிகமாகிய, 'பிறனில் விழைவோர் கிளையொடும் கெடும்' என்ற நல்லொழுக்கத்தை விளக்குகிறார். கம்ப இராமாயணத்தில் தமிழர் ஒழுக்க முறை, கற்புத்திறம், காதல் மணம், சகோதரத்துவ உணர்வு போன்ற பல்வேறு இடங்களில் சொல்லாடலை எங்ஙனம் பயன்படுத்தியுள்ளார் என்பதை உணரமுடிகிறது.

❖

கவிஞர் கே.ரவியின் தன் வரலாற்று நூல்

•

கோ. இலட்சுமிப்பிரியா,
தமிழ் கௌரவ விரிவுரையாளர், பாரத ரத்னா புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அரசு கலை அறிவியல் கல்லூரி,
பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.

சென்னையின் புகழ்பெற்ற வழக்கறிஞர் கே.ரவி அவர்கள் சிறந்த கவிஞரும் கூட, இளவயதிலேயே "மாணவரிஸம் " என்ற கையெழுத்து இதழை நடத்தியவர். நாடகங்கள் எழுதித் தயாரித்திருக்கிறார். நடித்திருக்கிறார். திரைப்படங்களுக்கு இசையமைத்திருக்கிறார். இசை ஆல்பங்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார்.

'வானவில்' கே.ரவியின் ('நமக்குத் தொழில் கவிதை') 'உன்னோடு நான்', 'மின்னற்சுவை', 'சொற்களுக்குள் ஏறிக்கொள்', 'இருபதாம் நூற்றாண்டு இயற்பியல் வரலாறு', 'வள்ளுவரின் வாயிலில்', 'காற்று வாங்கப் போனேன்' ஆகிய இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். ஆண்டுதோறும், பாரதிக்கு 'ஜதிபல்லக்கு' எடுத்துப் பிறந்தநாள் விழா கொண்டாடும் 'வானவில்' பண்பாட்டு மையத்தின் நிறுவனர். இவரைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

"உலகம் இனிது, காற்று, மழை, வெயில் எல்லாமே இனியவை. ஆனால், இப்பொழுது, புழுக்கம் தாங்கவில்லை. தோட்டத்திற்குச் சென்று அமர்ந்தேன். ஜில்லென்று ஒரு காற்று என்னைத் தீண்டியது, இல்லை சீண்டியது! எனக்கு ஏனோ தெரியவில்லை, கவிதையிடம் எனக்கு அப்படியோர் ஈடுபாடு! வெறி!

கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதைவிட, அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். கவிதை, என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. என்னை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன்.

"கவிதை வெறும் ஆற்றல் இல்லை. அதுவோர் ஆற்றாமை" அப்படியொரு நிலையில், 1988ல் என்று நினைக்கிறேன். என்னுள் இருந்து ஒரு நூறு செய்யுள்கள் ஊற்றெடுத்து வந்தன. அவை வடிவிலும் சரி, பொருளிலும் சரி என் மற்ற கவிதைகள் போலன்றி வேறுபட்டிருந்தன. திருமூலரின் திருமந்திரம் சாயலில் இருந்ததால் அவற்றை என் கவிதைத் தொகுப்பில் குரு மந்திரம் என்ற தலைப்பில் சேர்த்தேன்.

நான் பிறந்ததிலிருந்து என்னையும், என் மூத்த சகோதரி நந்தினியையும், என் அத்தையின் கணவர் ஆர்.கல்யாணராமனும், அவருடைய இரு மனைவியரும் வளர்த்து வந்தனர். கல்யாணராமன் திரைப்படத் தயாரிப்பாளர். 1940–களில், திரைப்படத் துறையின் முன்னணி விநியோகஸ்தராகத் திருச்சியில் கல்யாணராமன் தம்மை நிறுவிக்கொண்டார்.

1953இல் நான் பிறந்த பிறகு, தம் குடும்பத்தோடு சென்னைக்குக் குடிபெயர்ந்து வந்து, மொழிமாற்றுத் துறையில், அதாவது வேறு மொழிப் படங்களை தமிழில் 'டப்பிங்' செய்து வெளியிட்டு வெற்றிகண்டார்! இச்சமயத்தில், நான் சென்னை கோஷா ஆஸ்பத்திரியில் 13.01.1953இல் பிறந்த செய்தி அவருக்குக் கிடைத்தது. அன்று சூரிய வழிபாட்டு நாள் என்பதனால் எனக்கு "ரவி" என்று அவர்தான் பெயர் சூட்டினார். மகாகவி காளிதாஸ் 'டப்பிங்' படம் வெளியிட்டபோது பிறந்த என் தம்பிக்கு 'காளிதாஸ்' என்று பெயர் சூட்டியவரும் அவரே! எனக்கு ரவி என்று அவர் பெயர் சூட்டிவிட்டுச் சொன்னாராம்,

“பையன், ரவீந்திரநாத் தாகூரைப் போல் பெரிய கவியாக வருவான்!”. இந்தக் கதையை எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே என் அத்தைகள் ஸ்வர்ணாம்பாளும், அலங்காரவல்லி என்ற சரஸ்வதியும் சொல்லிச் சொல்லி என்னை வளர்த்த காரணத்தினாலோ என்னவோ, நான் கவிதைப் பைத்தியமாக வளர்ந்தேன். மேலும் 2000ஆம் ஆண்டில், என் முதல் கவிதை நூல் “உன்னோடு நான்”, இதை முழுமையாகப் படித்துவிட்டு, “பாரதி சுராஜ்” அவர்கள் அந்தக் கவிதை நூலை, “இன்னொரு கீதாஞ்சலி” என்று எழுதிப் பாராட்டிய பேறு பெற்றேன். மாமா எடுத்த படத்தில் நான் குட்டி ரஞ்சனாக நடித்தேன்.

என் வளர்ப்புத் தந்தை, ‘கவிராஜ காளமேகம்’ படம் தயாரிக்கத் தொடங்கியபோது, எங்கள் இல்லம் மயிலை பலாத்தோப்பில் இருந்தது. அங்குதான் கவிஞர் வாலியை நான் முதன்முதலாகப் பார்த்தேன். கையை மடித்து விட்டிருந்த வெள்ளை ஜிப்பா, வெள்ளை வேட்டி, நெற்றியிலே குங்குமப் பொட்டு, மீசை இந்த தோற்றத்துடன் கவிஞர் வாலியை பார்த்தேன்.

ஏற்கெனவே, இசையமைப்பாளர் எஸ்.எம். சுப்பையா நாயுடுவும், ஏ.எல்.நாராயணனும் வந்து காத்திருந்தனர். எங்கள் வீட்டுக் கூடத்தில் ஒரே வெற்றிலை மணம், ஆர்மோனியச் சத்தம், ஸ்ரீரங்கம் கோவில் மடப்பள்ளியில் சமையல் செய்துகொண்டே, பின்னாளில் காளமேகமாக மாற இருக்கும் கதாநாயகன் நையாண்டியாகப் பாடவேண்டிய, “நானும் அதே ஊர், ஸ்ரீரங்கம்தான்!” என்று சொல்லிவிட்டு, 5 நிமிடங்களுக்குள் பாடலை அமர்க்களமாக எழுதிக் கொடுத்த காட்சியை கண்குளிரக் கண்டும், செவிகுளிரக் கேட்டும் ரசித்தேன்.

ரெண்டுபக்கம் காவேரி எங்க ஊரு நடுவிலே
ரெங்க நாத சாமியோ ஆதி சேஷன் மடியிலே
சித்திரையில் தேரோட்டம், மாசியிலே படகோட்டம்
இத்தனையும் காணவரும் எத்தனையோ ஜனக்கூட்டம்
பக்தாளுக்குத் தெரியாதோ பெருமாளின் சங்கதி
உள்ளூரில் ரெண்டிருக்க, உறையூரில் இன்னொருத்தி
கைவழியே நெய்வழியும் பொங்கலுண்டு காலையிலே
சித்திரான்னம் படைப்பதுண்டு மத்தியான வேளையிலே
ஊருக்கெல்லாம் சோறூட்டும் சாமியெங்க சாமிதான்!
நான் சமச்சுப் போடாட்டா நாள் முழுக்கப் பட்டினிதான்!.

என்னையும் கவிஞன் என்று ஏ.எல்.நாராயணன், கவிஞர் வாலிக்கு அறிமுகம் செய்துவைத்ததும் "அதெல்லாம் ஒண்ணும் வேணாம்பா ஒழுங்காப்படி" என்றார் கவிஞர் வாலி.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, கவிஞர் வாலியை நான் பல ஆண்டுகள் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் அவருடைய பாடல் வரிகள் பல, என்னை ஆட்கொண்ட வரிகள்!

மண் குடிசை வாசல் என்றால் தென்றல் வர மறுத்திடுமா
மாலை நிலா ஏழை என்றால் வெளிச்சம் தர வெறுத்திடுமா

நான் ஏழாம் வகுப்பில் சான்தோம் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தேன். என் தந்தை விஸ்வம்தான் சேர்த்துவிட்டார். 8ஆம் வகுப்பு படிக்கும்போது சிவம், சீனி சுந்தரராஜன், சசி போன்ற நண்பர்களுக்கு கலிங்கத்துப் பரணியின் கடைத் திறப்பு அதிகாரத்தைப் படித்துக் காட்டி விளக்கிப் பாடம் எடுத்தது இன்னும் பசுமையாக என் நினைவில் உள்ளது.

நானும் கவிதை எழுதத் தொடங்கினேன். என் வகுப்பு நண்பர்கள் சேர்ந்து சீனி சுந்தரராஜன் கைவண்ணத்தில் "தமிழ்ச்சங்கு" என்ற கையெழுத்துப் பத்திரிகை தொடங்கினோம். மூன்று, நான்கு இதழ்கள் வந்தன. அதில்தான் என் முதல் கவிதை வெளியானது. அதன் தொடக்க வரிகள் மட்டும் இன்னும் என் நினைவில் இருக்கின்றன.

"அகத்திய முனிவரின் அகத்தினில் உதித்தவள்";;;, "தழல்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்" என்று கவிச்சக்கரவர்த்தி போற்றிய அகத்திய மாமுனிவரின் அருளோடு என் கவிதைப் பயணம் தொடங்கியது. அந்த காலகட்டத்தில் எழுதிய கவிதைகள் நிறைய தொலைந்தும், மறந்தும் போய்விட்டன. ஒன்றிரண்டு மட்டும் நினைவுப் பேழையில் நீங்கா இடம் கொண்டன.

ஒளிதந்து எரியும் விளக்கின் திரியும்
கரியாகத்தான் திரியும் - நெஞ்சக்
களிப்பை நல்கும் வெடியின் திரியும்
கரியாகிப் போய் மறையும் - ஆனால்
விளக்கில் உள்ள திரியின் நல்ல

சேவை உலகில் நிறையும் - இந்த
விளக்கம் தன்னை ஆராய்ந்து பார்த்தால்
விந்தை வாழ்வு புரியும்

1969–70களில் அப்பொழுது, வயது பதினாறு. இசையும், கவிதையுமாய் என் வாழ்க்கை இப்படிச் சென்றுகொண்டிருந்த போதுதான் என் நெஞ்சில் இல்லை இல்லை என் உயிரில் இசைக்கவிதையாகவே அவள் (ஷோபனா) நுழைந்தாள்.

அப்பொழுது, சிவம், அமிர்தலிங்கம், சீனி சுந்தரராஜன், சசீந்திரநாதன் என்ற சசி, வள்ளி, நான் ஆகிய ஆறு பேரும் மற்ற சில நண்பர்களோடு சேர்ந்து சிந்தனைக் கோட்டம் என்ற இலக்கிய அமைப்பை நிறுவி நடத்திவந்தோம்.

1971ஆம் ஆண்டு மீண்டும் ஷோபனா தன் தோழி மங்களசுந்தரியோடு ஏதோ நிமித்தமாக பலாத்தோப்பு வீட்டுக்கு வந்து என்னைச் சந்தித்தாள். நவராத்திரி நாளொன்றில் அவளும் மங்களசுந்தரியும் வந்து என் வீட்டில் "மலரின் மேவு திருவே" என்ற பாரதியின் பாடலைப் பாடும்போதுதான் என் உள்மனத்தின் ஓசையை நான் உற்றுக் கேட்டேன். ஷோபனா என் இதயத்துக்குள் நுழைந்து அமர்ந்துவிட்டதை அந்தக் கணத்தில்தான் உணர்ந்தேன்.

ஷோபனாவும், மங்களசுந்தரியும் கேட்டுக்கொண்டபடியே நான் "மாணவரிஸம்" என்ற மாத இதழை தொடங்கினேன். அதன் ஆசிரியராக நானும், இணை ஆசிரியராக ஷோபனாவும் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

25 ஆண்டுகளுக்குப் பிறகு நான் எழுதிய ஒரு கவிதை வரி நெஞ்சில் எதிரொலிக்கிறது. "மனமும் மனமும் தழுவிக் கொள்ள மௌனம் போதாதா".

1973ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள் எங்கள் இளவயது திருமணம். எனக்கு 20, ஷோபனாவுக்கு 19. சேன்னை ஹேமமாலினி திருமண மண்டபத்தில் திருமதி. எம்.எல்.வி. கச்சேரியுடன் அன்றைய தமிழ்நாடு ஆளுநர் உட்பட அத்தனை பெரியவர்களும் வந்து வாழ்த்த மிகச் சிறப்பாக நடந்தேறியது.

என் திருமண வரவேற்பில், என் அத்தனை நண்பர்களுக்கும் நடுவே சிவம் மட்டும் இல்லை. ஏன் என்று புரியவில்லை. வரவேற்பு முடியும் தருணம், சிவம் வேகமாக மண்டபத்துக்குள் நுழைகிறார். சிவம் கையில் ஒரு பெரிய கதவு அளவில் கண்ணாடி பிரேம் போட்ட வாழ்த்து மடல், அதில் இருந்த கவிதை

ஒருநாள் கண்டாய், மறுநாள் நின்றாய்
உயிரே அவர்தான் என்கின்றாய் - அவர்
வருநாள் தானே திருநாள் என்று
மனமே எனையேன் தின்கின்றாய்.

சிவத்தின் கவிதை ரசனையை நான் மிகவும் ரசித்தேன். எட்டாம் வகுப்பு மாணவனாக நான் கவிதை எழுதத் தொடங்கிய சில மாதங்களிலேயே காவியங்கள் எழுதவேண்டும் என்ற ஆசை என்னைப் பற்றிக்கொண்டது.

"வீரமா? ஈரமா?" என்ற தலைப்பில் எழுதிய சாம்ராட் அசோகன் சரித்திர காவியத்தின் கைப்பிரதியை முதலில் என் ஆசான் தண்டமிழ்க் கொண்டலிடம் தந்தேன். மறுநாள் அவர் என்னை அழைத்து, கவிதை நாடகம் நன்றாக இருப்பதாகப் பாராட்டிவிட்டு அவர் இல்லத்திற்கு என்னை வரச்சொன்னார்.

என் கவிதைப் பயணத்தில் இரண்டு திருப்புமுனைகள். பாரதி கலைக் கழகமாகிய அடியார்கள் திருக்கூட்டத்தில் நான் சேர்ந்தது ஒன்று. பாரதியின் விஸ்வரூப தரிசன அனுபவம் நேர்ந்தது மற்றொன்று. இவ்விரண்டு திருப்புமுனைக்கும் தேவநாராயணன் காரணம்.

1993ஆம் ஆண்டு நான் எழுதிய ஒரு கவிதை

முதுமையின் கனிவை நேசிக்கிறேன்,
இருந்தாலும் இளமையைத்தான் நான் யாசிக்கிறேன்.
இளமையில் இருந்து முதுமையில் நுழைய
இருமுறை நானும் யோசிக்கிறேன்.
அருவியில் வேகம் அலைகளின் ஆற்றல்
தென்றலைப் போலெங்கும் செல்லும் சுபாவம்
உதயத்தின் செம்மை உள்ளத்தில் உண்மை
இவையனைத்தும் என் இளமையின் தன்மை
முதுமையின் கனிவை நேசிக்கிறேன்.
இளமையின் கனவை யாசிக்கிறேன்.

இளமையில் இருந்து முதுமையில் நுழைய
இருமுறை நானும் யோசிக்கிறேன்.
முதுமையின் கனிவை நேசிக்கிறேன்
இளமையில் முதுமை முதுமையில் இளமை
இரண்டையும் ஒன்றாய் வாசிக்கிறேன்.

1994இல் பிறந்ததுதான் "'வானவில்' பண்பாட்டு மையம்". ஷோபனாவும், விஜயாவும் அவர்களின் வகுப்புத் தோழியர் பலருடன் ஒரு பெரிய பெண்கள் பட்டாளமாகவே வந்து சிந்தனைக் கோட்டத்தில் சேர்ந்துகொண்டனர். முதலில் பெண்களைச் சேர்க்கக்கூடாது, புத்தமதம் நிலைகுலைந்ததே அதனால்தான் என்றெல்லாம் என் நண்பர்கள் சிலர் தடுத்தும், சிவமும் நானும் வாதாடி அவர்களைச் சமாதானம் செய்து, பெண்களைச் சிந்தனைக் கோட்டத்தில் சேர்த்துக் கொண்டோம். அதற்குமுன் வள்ளியக்கா என்ற ஆசிரியை மட்டுமே சிந்தனைக் கோட்டத்தின் ஒரே பெண் உறுப்பினர். ஏற்கெனவே எதிர்ப்புகளுக்கு இடையில் பெண்களை சேர்த்துக் கொண்டதால், ஷோபனாவிடம் நான் ஒரு தொலைவை அனுசரித்தேன். என்னிடமே எனக்கு பயம்! ஆனால், சிந்தனைக் கோட்டத்துக்காக நான் ஒரு பாட்டெழுத ஷோபனா அதைப் பாடினார்.

சிந்தனைக் கோட்டம் வாழ்க, செந்தமிழ் மனமே சூழ்க,
சேர்ந்திருக்கும் யாவருமே பாச உணர்ச்சியில் ஆழ்க.

அதேபோல் ஒரு புத்தாண்டுத் திருநாளன்றும் என் பாடல் ஒன்றை அவர் பாடினார்.

புத்தாண்டுத் திருமகளே பூரிக்க வைப்பவளே
புன்னகையை தூவி வரவேற்கின்றோமே
புத்துணர்வு நல்வ வரம் கேட்கின்றோமே

இந்த நெருக்கம் ஒரே ஆண்டுதான் நீடித்தது. அந்தப் பெண்கள் கூட்டம், வேறு வேறு கல்லூரிகளில் சேர்ந்துவிடவும் என்னையும், சிவத்தையும் தவிர, மற்ற நண்பர்கள் வெவ்வேறு கல்லூரிகளுக்குப் போய்விடவும் சிந்தனைக் கோட்டமும் மெல்லச் செயலிழந்து போனது. நானும் ஷோபனாவும், பிறகு ஓராண்டுக் காலம் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை!

கவிஞர் என்றால் கண்ணதாசன். அவரை நினைக்கும் போதெல்லாம், ஒரு பாச உணர்வு என் நெஞ்சில் பொங்கியெழும். முதல்முறை அவரை நெருக்கத்தில் சந்தித்தது சென்னையில். 1969ஆம் ஆண்டு, நான் விவேகானந்தா கல்லூரியில், புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் என் கல்லூரியின் சார்பில் கலந்துகொள்ள நானும் இன்னொரு மாணவரும் தேர்வு செய்யப்பட்டிருந்தோம். அந்தப் போட்டியில், கலந்துகொள்ள நான் லயோலா கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்குதான் கண்ணதாசனை முதன்முதலில் சந்தித்தேன். அவர்தான் கவிதைப் போட்டிக்கு நடுவர்.

அந்த இடத்தில் அப்போது இரண்டு பெரிய கவிஞர்களைச் சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை!

அன்று நடந்த கவிதைப் போட்டியின் தலைப்பு "அழியா அழகு". அப் போட்டியில் எந்தப் பரிசும் நாங்கள் இருவருமே பெறவில்லை. ஆனால், கவிதையிடையே தெறித்த சிலவரிகளை அதுவும் குறிப்பாக "கலையும் கலையும்" என்றும் "மறையும் மறையும்" என்றும் முடியும் வரிகளைக் கவிஞர் கண்ணதாசன் ரசித்துக் கேட்டார் என்ற ஒரு பேறே போதுமென்றாலும், என் சக மாணவராய் வந்திருந்த பிறகு, அந்த இன்னொருவரைச் சந்தித்த பெரும் வாய்ப்புக்கும் பிறகு, மீண்டும் 1970களில் நாங்கள் சந்தித்துக் கொண்டதும் என்னுள் இயல்பாக இருந்த இசை வேட்கைக்குத் தூண்டுகோலாக, அவருடைய பாடல்கள் அனைத்தும் ஒரு தனி வரலாறு.

இமை வாசலின் ஓரத்திலே - ஏனோ
முத்துக்கள் பனிக்கின்றன, அவை
வந்ததும் பூத்ததும் வீழ்ந்ததும் மின்னிழை
நீர்க்கரை ஆனதும் யார் புகல்வார்?

நாளாக நாளாக எங்கள் கவிதை நட்பு சுடர்விட்டு வளர்ந்தது. விவேகானந்தா கல்லூரியின் முதல்வராக நற்பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் தாவரவியல் பேராசிரியர்தான், என் கவிதையார்வம் சரியான தடத்தில் செல்ல உதவி இருப்பவர்களில் ஒருவர் என்று, அன்று அவரை அடையாளம் கண்டுகொண்டேன்.

கவிஞர் கண்ணதாசனை இரண்டாம் முறையாகச் சந்தித்தேன். 1970ஆம் ஆண்டு விவேகானந்தா கல்லூரியில் கவிதைப் போட்டிக்கு அவர் நடுவராக வந்திருந்தார். நானும் அப்போட்டியில் கலந்துகொண்டேன். போட்டித் தலைப்பு "வாய்மையே வெல்லும்". அன்று, இளமைக்கே உள்ள துடிப்போடும், குறும்போடும் கவிதை படித்தேன்.

குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக்
குடிப்பதுதான் வாய்மையெனச் சொல்லிவிட்டார்
குடியாலே குழறுகிற நாவில் உண்மை
குடியிருக்க முடியாது மறந்துவிட்டார்
பிடிவாதம் செய்யாமல் விடச் சொல்கின்றேன்
பிழைதிருத்த வரவில்லை விண்ணப்பம்தான்

இதைப் படித்த பிறகு நமக்கெங்கே பரிசு தரப்போகிறார் என்று போட்டி முடியும் வரை காத்திருக்காமல் நான் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். இரவு 9.00 மணிக்கு என் வீட்டுக்கதவை யாரோ தட்டுகிறார்கள், திறக்கின்றேன். என்ன ஆச்சரியம் என் கல்லூரி மாணவர் பேரவையின் தலைவர் ராஜகோபாலும், சில நண்பர்களும் என் கையைப் பற்றிக் குலுக்கி உனக்குத்தான் கவிஞர் முதல்பரிசு அறிவித்தார் என்றதும் நான் அசந்து போய்விட்டேன்.

சுபரிமலைக்கு என்னுடன் யாத்திரை போய்க்கொண்டிருந்த நண்பர் குழுவின் பக்திப் பாடல்கள் அடங்கிய "சந்தன மணம் ஐயப்பன்" என்ற பாட்டு நூலை கவிஞர் வாலியைக் கொண்டு சென்னை ஆஸ்திக சமாஜத்தில் வெளியிட எங்கள் குருசாமி, என் மூத்த சகோதரர் ஸ்ரீதர் ஏற்பாடு செய்திருந்தார்.

என் மனத்தில் இசையும், கவிதையும் எப்படி கைகோத்துக்கொண்டு வளர்ந்தன என்பதை இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன.

இசையா, கவிதையா என்று பட்டிமன்றம் வைத்தால் நீ எந்தக் கட்சி? என்று என்னிடம் சிகாமணி கேட்க, பட்டென்று பாட்டாக வந்தது.

உனக்குத் தெரியும் கவிதை என்றால்
உயரப் பறப்பதென்று

எனக்குத் தெரியும், இசையென்றாவது
என்னை இழப்பதென்று
பறந்துகொண்டே இழந்தது பாதி
இழக்க இழக்க வளர்ந்தது மீதி.!

இதுவரை நான் உங்களுடன் பகிர்ந்துகொண்ட கே.ரவி அவர்களின் அன்றாட நிகழ்வுகளையும், இந்த பிரபஞ்சத்துக்கும், ஐயா அவர்களுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்தும் கவிதை வரலாற்றையும் உங்களிடம் பகிர்ந்து கொண்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

❖

வானவில் கே.ரவி அவர்களின் மக்கள் பாடும் பாட்டு கவிதை நூல் – ஓர் ஆய்வு

•

ஜெ.உஷா, இணைப் பேராசிரியர்,
தமிழ்த் துறைத் தலைவர், த.பெ.ஜெயின் கல்லூரி, சென்னை 600097.

"யார் மறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்று கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய மூவரும் உலகமகாக் கவிஞர்கள் என்று பாடினார் பாரதியார். பாரதியாரையும் சேர்த்து தமிழின் அனைத்து கொடைகளையும் ஆந்தறிந்து கட்டுரைகள், கவிதைகள் வடித்தவர் நம் வானவில் கே.ரவி அவர்கள். அவர் தன் பெயருக்கு ஏற்றாற் போல் பல திறமைகளை கொண்டவர். எழுத்தாளர் கே.ரவி அவர்கள் எளிய வார்த்தைகளால் கொண்ட கவிதைத் தொகுப்பு தான் "மக்கள் பாடும் பாட்டில்" ஓங்கி ஒலிக்கிறது. இதில் கதையாக, நிகழ்ச்சிகளின் கோவையாக, நடந்த கதையாக, வரலாற்று கதையாக, கற்பனைக் கவிதையாக தெய்வங்கள், மன்னர்கள், தனி மனிதர்களின் வரலாறாக அனைவரும் ஏற்கத்தக்க வகையில் கவிமொழியில் எழுதப் பெற்றவைகள் தான் இந்த கவிஞனின் படைப்புகள்.

தமிழ்

சங்ககாலத் தமிழ்மக்கள் மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டினார். முற்காலத்தில் தமிழர் பண்பாட்டில் சிறந்து விளங்கினர். ஆடை, அலங்காரம், கல்வி, குடும்ப உறவுகள், பொழுதுபோக்கு, சமுதாய உறவுகள், விருந்தோம்பல். குழந்தைப் பேறு , உணவு வகைகள், மருத்துவம் ஆகியவற்றில் தழைத்து வளர்ந்தனர் நம் தமிழ்மக்கள். சங்ககாலத் தமிழ்மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே கே.ரவியின் "தமிழ், தமிழ், தமிழ்"– என்ற தலைப்பினை நான் பார்க்கின்றேன். மூவேந்தர்களாலும், மாமன்னர்களாலும் புலவர்களாலும் போற்றிப் பாராட்டி சீராட்டி முச்சங்கத்தில் வளர்ந்தவள் அன்னைத் தமிழ் என்கிறார். எங்களுக்கு அன்னைத் தமிழாக விளங்கிய இவள் வள்ளுவனால் வரலாற்றில் "பொன்னேடு கண்ட தமிழ்" என்கிறார்.

என்றுவரை செங்கதிரில் ஒளியிருக்கும்
என்றுவரை நிலவினிலே குளிர் இருக்கும்
என்றுவரை இமயமலை நிமிர்ந்திருக்கும்
அன்றுவரை என் கவிதை நிலைத்திருக்கும்

என்று தன் கவிதையின் நிலைப்பேற்றைக் குறித்து நெஞ்சம் நிமிர்த்திப் பாடிய தமிழ் பாவலர் கண்ணதாசன்.

"முல்லைக்குத் தேரைத் தந்தான்
மயிலுக்குப் போர்வை தந்தான்
கொல்லாமை பொய்யாமை இரு
கண்களென மதித்தவன் தான்
கல்லாமை இழிந்ததென்றான்
கள் அளவு கொடுமை என்றான்."

இதில் கவிஞனின் விளக்கம் தேர்க்காலில் கன்று வீழ்ந்தவுடன் தேடிவந்த பசுவுக்கு நீதி தந்த மன்னன் – நீதித்தமிழன் முல்லைக்கு தேரைத் தந்தான் – இயற்கை செடிகொடிகளையும் தன்னைப்போல் பாவிக்கும் தமிழன் ஈதல் தன்மையை விலங்கு, பறவையிடமும் காணும் தமிழன் – கொலை, பொய், களவுதனை, கொடுமை என்று கூறிய தமிழன். தமிழ், தமிழ் என்று கூறிய தமிழன் தனியொருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தையே அழிப்போம் என்றான் எம் தமிழ் கவிஞன். ரிஷிமூலமாக

முண்டாசுகட்டிய கவிஞன் இருந்தான். அதனை நதிமூலமாக நம் கவிஞன் (கே.ரவி) கொண்டு செல்கிறான்.

இசைத்தமிழ்

இளங்கோவின் காப்பியத்தில் இசையோடு நாடகமும் பயின்ற தமிழ் வளமான பாசுரமும் வாசகமும் மந்திரமும் மலர்ந்த தமிழ் கம்பனுடைய சொல்லெல்லாம் கவிதைத் தமிழ் நீதி தமிழ் அறம் தமிழ் வெற்றித் தமிழ் வக்கிரத்தை வஞ்சனையை வீழ்த்தும் தமிழ் வாளாக வெம்பகையைச் சாடும் தமிழ் – இசை பாடும் தமிழ்

இளங்கோவின் காப்பியத்தில் இசையோடு நாடகமும் தமிழுடன் பக்தி பாசுரமும் திருவாசகமும், திருமந்திரமும் பக்தி தமிழ், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் கவிதைத் தமிழ், நீதி தமிழ், மனைவியை விடுத்துப் பிற பெண்டிருடன் கொள்ளும் உறவின் தீமை துன்பங்களுக்கு ஆசையே காரணம். வறுமையை ஒழித்தல், பத்தினிப் பெண்கள் வாழும் நாட்டில் மாதம் மும்மாரி மழை பொழிதல், வளம் கொழித்தல், கணவனை வழிபடல், நற்குடிப் பிறப்பு, பிறர்க்கு முற்பகல் செய்யின் பிற்பகல் தமக்குக் கேடு வருதல், பத்தினி தெய்வத்தை உயர்ந்தோர் வணங்குதல் போன்ற பல அறக் கருத்துகள் தாங்கிய அறத்தமிழில் இடம் பெற்றுள்ளன. "சுருங்கச் சொல்லின் விளங்க வைத்தல்"– என்ற தொல்காப்பியத்தின் கூற்றுப்படி கவிஞர் தமிழினைப் பற்றி கூறியது நம்மை கைதட்ட வைக்கிறது.

பக்தி

எத்தனை போதனை
என்னென்ன சோதனை
அத்தனையும் கடக்கும் சாதனை - புரிய
அருள் தரும் சாயிநாதனை - நீ
எப்பொழுதும் நினை என்றுமவன் துணை
வள்ளலவன் அன்பில் தினம் நனை.

(மக்கள் பாடும் பாட்டில் – ஞானத் தோணி என்ற தலைப்பில் சாய்நாதனைப் பற்றிய வரிகள்) மானுடப் பிறவிகளுக்கு வேதனையும், சோதனையும் வருவது என்பது சாதரணமானவை. ஆனால் அவற்றை எல்லாம் கடந்து

செல்லக்கூடிய மனவலிமையையும், தைரியத்தையும் கொடுப்பவர் சாய்நாதனே அது மட்டுமில்லாமல் நம்மீது அருள்மழை பொழிந்து நம்மை பக்குவப்படுத்துபவரும் அவரே. ஞானியாக அவதாரம் செய்த நாபியே பிறவிக்கடலை கடக்க வழிகாட்டுபவர்

ஷீரடி என்பது கூப்பிடு தூரம்
ஓரடிநீ வைத்தாலும் போதும்
ஓடோடி வருவான் உள்நுழைவான் - அந்த
நாடோடி பரதேசி ஞானி
ஞானக் கடலில் நமக்குத் தோணி.

பரதேசி ஞானி ஆனால் நமக்கு பிறவிக்கடலைக் கடக்க வழிகாட்டுபவர் அவரே என்று அழுத்தம் திருத்தமாக சாயிநாதனித் தன்மைகளை எடுத்துரைக்கிறார் நம் கவிஞர்.

வீரத்தில் பண்பாட்டுக் கூறுகள்

தமிழர் மட்டுமின்றி நம் நாட்டு மக்களனைவரும் வீரர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது என்று உலகிற்கு உணர்த்தியவர் மகாகவி

செந்தமிழ் நாட்டுப் பெருநகர் கொடுஞ்
தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் தாயின்
சேவடிக்கே பணி செய்திடும் துளுவர்
கன்னடர் ஒட்டியரோடு போரில்
காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்களொப்ப நிற்கும்
பொற்புடையார் இந்து தானத்து மல்லர்

எனப் பாரத நாட்டு வீரர்களை முறைப்படுத்தி போற்றிப் பாடியுள்ளார் பாரதி. தமிழகத்து மக்களில் பலபேர் வீரத்தோடு போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், பொருளீட்டிப் போர் வெற்றியடைய பொருளாதார உதவி புரிந்தனர், சேரமக்கள் துணிவோடு போராடக் கூடியவர்கள், தெலுங்கர்களோ துணிவுக்கும் போர் குணத்திற்கும் பெயர்போனவர்கள், பெற்றோர்களின் கடமையைத் தங்கள் கடமையாக்கி வாழ்ந்து வந்தவர்கள் துளுவர்கள் என்று போற்றுகிறார் பாரதி. கன்னடர் எத்தகைய போர் வெறி மிக்கவர்கள் தெரியுமா? தாங்கள் யாரையெல்லாம் நேசிக்கிறார்களோ? அவர்களுக்குத் தன்னுயிரை அளிக்கக் கூடியவர்கள் என்று கூறிய பாரதி எமன்

கூட நடுங்க அஞ்சி ஓடிடும் வகையில் வீர உணர்வுமிக்கவர்கள் மராத்தியர்கள் என்ற பெருமை பேசுகிறார்.

இராஜஸ்தான், குஜராத், ஒரியா போன்ற பகுதிகளில் வசிக்கும் நம் தேசத்துக் காளைகள் உலகம் அஞ்சக்கூடிய வகையில் போர்க்குணமும் மாண்பும் மிக்கவர்கள் என்கிறார் பாரதியார். இந்திய மக்களின் வீரத்தினை புகழ்ந்து பேசிய பாரதியின் வீரம் பற்றி இதோ நம் கவிஞனின் கூற்று.

மீசை வீரம் மிடுக்கும் வீரர்
முண்டாசும் வீரம் முழுதும் வீரம்
தேசம் என்றும் தெய்வம் என்றும்
பேசும் போதும் வீரம் வீரம்

பாரதியின் மீசையைப் பார்த்தாலே வீரம் பொங்குமாம். அனைவருக்கும் முண்டாசு கவியின் புகைப்படத்திலும் வீரம் தெரிகிறதாம். அதுமட்டுமில்லாமல் பாரதி தெய்வத்தினைப் பற்றி பேசும் போதும் இந்தியாவைப்பற்றி பேசும் போதும் சிங்கம் போல் கர்ஜனை செய்வது போல் உள்ளதாம்.

கண்ணம்மாவிடம் காதல் வீரம்
காலனைக் கண்டால் சாத வீரம்
பெண்மை வாழ்கெனக் கூத்திட்டு ஜய
பேரிகை கொட்டிய புரட்சி வீரம்

கண்ணம்மாவிடம் காதலில் பணிவான வீரம், எமனை பார்க்கும் போது நீ என்ன என்னை கொண்டுப்போவது நானே உன்பின்னால் வருகிறேன் போடா என்று திமிருடன் சொல்வது, பெண்களை முரசு கொட்டி கொண்டாடியதுதாம் புரட்சிக்கவிஞனின் வீரம்.

நிலைகெட்ட மனிதரை நினைந்து நெஞ்சம் பொருமிக் குமுறிய போதும் வீரம் நிலைக் கெட்ட மனிதரைப் பார்க்கும் போதும், துக்கத்தின் போதும், மகிழ்ச்சியின் போதும், கடல் அலையினைப் போல் வீரம் ஆர்ப்பரிக்கிறதாம் பாரதியின் வீரம். பாஞ்சாலி சபதத்தினை பாரத வீரமாகவும் தன்னுடைய வீரத்தினை பராசக்தியின் வீரமாகவும் பார்க்கின்றானாம் பாரதி.

இது தற்குறிப்பேற்ற அணியினைப் போல் தன் கருத்தினை ஏற்றிச் சொல்லியிருக்கிறாரோ கே.ரவி அவர்கள் என்பது என் கருத்து.

வரலாற்றுப் பாடங்கள்

"தமிழ்க்குமரி ஆண்டாள்" என்ற தலைப்பில் ஆண்டாளின் பிறப்பும் மற்றும் வளர்ந்த விதத்தினையும் வரலாற்றுப் பதிவாக அழகாக எடுத்துரைத்துள்ளார் நம் கவிஞர் கே.ரவி.

வில்லிபுத்தூர் பவளமல்லி விஷ்ணு சித்தர் வளர்த்த செல்வி சொல்லில் நீராட்டினாள் சொல்மாலை சூட்டினாள் – ஆண்டாள் மன்னாதி மன்னர்களும் வேறெந்த மானுடரும் ஒன்னாதெனத்தான் ஒதுக்கினாள் கண்டகனா விண்டுரைத்த பூவையாம் கவிச் செண்டுகளால் ஆனதிருப்பாவையாம் – இதில்

பெரியாழ்வார் நந்தவனத்தில் பயிரிடப்பட்ட துளசிப் பாத்தியில் ஆடித்திங்கள் பூரநட்சத்திரத்தில் பூமகள் அம்சமாய் தோன்றியவர். கோதை என்பது பெயர் நாளும் பெருமாளுக்காகக் கட்டிய மாலையைத் தந்தைக்குத் தெரியாது, சூடிக்கொண்டு, மகிழ்ந்துப்பின் கழற்றி வைத்து வருவார், இதனை அறிந்த பெரியாழ்வார் வேறுமாலை தொடுத்து சாத்தமுனைந்த மாலை, பெருமாள் மறுத்துச் சூடிக் கொடுத்த மாலையே வேண்டுமெனக் கனவில் கூற அங்ஙனமே செய்து, கோதையையும் பெருமாளுக்கே திருமணம் செய்து கொடுத்தார். ஆண்டவனையே ஆண்டவள் என்றமையால் ஆண்டாள் என்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் கோதையை அழைக்கலாயினர். இந்த வரலாற்றுப் பதிவினை நம் கவிஞர் எடுத்துரைத்த விதம் சிறப்பு.

இயற்கையோடு ஒட்டிய கவிதை வரிகள்

கடிதமும் கவிதையும்" என்ற கவிதையில் இவர் வானமிங்கு
மழைபொழிந்து வாழ்த்துகின்ற போதும் - இருள்
வடிவமொன்று மின்னலாய் ஒளி வழங்குகின்ற போதும் - இனிய
கானம் ஒன்று கவிதையாகக் காதில் வந்து போதும் - உன்
ஞாபகத்தை உறுதி செய்யப் பாடலொன்று போதும்

மழை பொழிவதைக்கூட வாழ்த்தாக கூறுவதோடு, மின்னல் வாழ்வில் ஒளி ஏற்றியதாம்.. கவிதை வந்து காதில் வீழும் போதும் உன் ஞாபகம் எனக்கு வருகிறது என்று தன் நண்பன் ரமணனை ஞாபகத்திடுகிறார் ஆசிரியர்.

"நடந்தாய் வாழி காவேரி" – இந்தக் கவிதையின் தலைப்பினைக் கேட்டவுடன் எனக்கு "நடந்தாய் வாழி காவேரி.

நாடெங்குமே செழிக்க – என்ற திரையிசைப் பாடல் தான் ஞாபகத்திற்கு வருகிறது. டி.கே.சந்தானத்தின் பாடலில் இன்று வரையில் நம் காதுகளுக்கு விருந்தாகவும் அமைகிறது. இப்பாடல் அதே போல்

செங்கோல் தலையசையக் - கொடி
மின்னல் ஒளிபடரக் - கடல்
கோரும் வழிதேடி இடை
ஆடி இசைபாடி - நீ

வயலில் இருக்கக்கூடிய செந்நெல் நாற்றுக்கள் காற்றிற்கு ஏற்றாற்போல் தலையசைப்பது, மின்னலின் ஒளி பூமியின் மீது படுவது, கடலினைத் தேடி சேருவது என வரிகளை அமைத்து உள்ளார்.

முன்னம் உனதங்கம் - அது
முழுதும் நுரை பொங்கும்
அன்னம் குருகெல்லாம் - அதில்
தங்கும் கரையெங்கும் - மூ
வேந்தர் பொதுமாந்தர் - என
யாரும் உனை வாழ்த்த
வேயும் தலை சாயும் - செங்
கரும்பும் வரவேற்க

காவேரி பாய்ந்து வரும்போது நுரையுடன் வருகிறது. அதில் அன்னம், குருகெல்லாம் கரையினில் அமர்ந்து தன் இரையினை தேடிக் கொண்டு இருக்கிறதாம். மன்னர்களும் பொதுமக்களும் வாழ்த்த, கரும்புகளும் வரவேற்கிறதாம். இப்படியெல்லாம் காவேரியை வரவேற்ற நம் கவிஞர் இந்த வரிகளில்

இன்றேன் நீ இளைத்தாய் - நீர்
இன்றி உடல் களைத்தாய்
வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலையாள்
நீயென்ற
வாக்கும் பொய்க்கலாமா - நீ
வாடி நிற்கலாமா"

நீர் வரத்து குறைந்துவிட்டது அதனால் அகலமாக இருந்த இடத்தில் தற்போது மெல்லியதாக சிறியதாக நீர் ஓட்டம் இருப்பதைப் பார்த்து மழை பொழியாமல் போனாலும் நீ வருவதை குறைத்துக் கொள்ளலாமா? என்பது காவேரித் தாயை ஆதங்கத்துடன் கேட்பது படிப்போரின் இதயத்தை கணக்கச் செய்கிறது.

இயற்கையோடு ஒட்டிய தன்மை

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனை வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என நம்பினான். இதன் அடிப்படையில் தான் இயற்கை வழிபாடுகளே தோன்றியது. தமிழ்ப்பண்பாடு சங்ககாலம் தொட்டு இயற்கையைச் சார்ந்து உள்ளது. மனித உழைப்பிற்குபின் மனிதனுடைய மனமானது ஆடல் பாடல்களில் ஈடுபடுவது இயற்கையாகும். அதுபோல நம் கவிஞனும் மகாபலிபுரம் கடற்கரையில் மின்விளக்குகள் அணைந்த போது வானத்தைப் பார்த்து "யார் பாதம் சுவடுகளோ யாருடைய கனவுகளோ யார் வீட்டுத் தோட்டத்திலே பூத்தமணிச் சிதறல்களோ என்று நட்சத்திரங்களை பார்த்து கூறுகிறான்.

வானவில்லின் நாண் அறுந்து அம்பு போனதே
நட்சத்திரத் தோரணம் வானவில்லை - உன் பார்வையில் நீ
புனைந்தாய்

என்று உவமையோடு கூறுகிறார்.

மழை மேகமா? மலர் தூவுமா
திசையெங்கும் தென்றல் காற்று
அசைகின்ற அழகைப் பார்த்து
மழைமேகமா மலர் தூவுமா

தன்னை இயற்கையிடம் இழக்கின்ற இக்கவிஞனுக்கு இயற்கைத் தரும் வரமே சொற்கள்.

ஒன்றே குலம்

சிவவாக்கியர் பாடல்களில்

ஆதியானது ஒன்றுமே அநேக அநேக ரூபமாய்
சாதிபேத மாய் எழுந்து சர்வசிவன் ஆனபின்

(இதன் கருத்து – ஆதியோடு இருந்து மீண்டும் எழுந்து ஜென்மம் ஆனபின் சோதியான ஞானியாகி சுத்தமாய் இருப்பவனே)

போதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகள்
சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே

என்ற சிவவாக்கியரின் பாடலின் அமைந்த கருத்துகள் மீண்டும் மனித சமுதாய மேம்பாட்டிற்கு கொண்டு வருகின்றார் நம் கவிஞர்.

கடவுளுக்கு ஜாதிமதம் இல்லை தம்பி - மனிதன்
கற்பித்துக் கொண்டதெல்லாம் மடமைதம்பி

என்று தன்னுடைய கருத்துகளை ஆழமாக பதிப்பிக்கிறார் கவிஞர்.

எத்துணையும் பேதமவன் கொள்வதில்லையே - அன்பில்
ஒத்திருக்கும் உள்ளமவன் ஆடும் தில்லையே

கடவுள் பணக்காரன், ஏழை, உயர்ந்தவன், தாழ்ந்தவன், நல்லவன், கெட்டவன் என்று எதிலும் பேதத்தினை பார்ப்பதில்லை. அவன் மனதில் அன்பினை தவிர வேறொன்றுமில்லை என்று அழுத்தமாக தன் மனக்குமுறலை பதிவிடுகிறார் கே.ரவி அவர்கள்.

குழந்தைப் பாடல்கள்

புறநானூறுப் பாடல்களில் பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தைச் செல்வம் பற்றி எழுதிய வரிகள்.

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்கும்
பயக்குறை மக்களை இல்லோர்க்கும்
பயக்குறை இல்லை - தாம் வாழும் நாளே.

பெறக்கூடிய செல்வங்கள் பலவற்றையும் பெற்றுப்பலருடன் உடனிருந்து உண்ணும் உடைமை மிக்க செல்வராக இருப்பினும், குறுகக்குறுக நடந்துச் சென்று சிறிய கையினை நீட்டிக் கலத்தில்

உள்ளதைத் தரையிலே இட்டும் பிசைந்து தோண்டியும் வாயால் கவ்வியும் கையால் துழாவியும் நெய்கலந்த சோற்றை உடம்பில் படுமாறு சிதறியும், இங்ஙனம் அறிவை இன்பத்தால் மயக்கும் மைந்தரைப் பெறாதவர்க்குத் தாம் வாழ்கின்ற நாளில் பயனாகிய முடிக்கப்படும் பொருள் இல்லை என்கிறார்.

இதை நம் கவிஞர்

குறுகுறுஎன் றோடியாடிக்
கும்மாளம் போட்ட பின்னே
சிறிது நேரம் குந்தி இளைப்பாறுங்க - பாடிக்
களித்திடுவோம் களைப்பெல்லாம்
தீருங்க

குழந்தைகளின் தளிர் நடைகள் செங்கீரை நாற்றுகள் காற்றில் அசைந்தாடுவது போல் உள்ளதாம். குழந்தைகள் ஒன்று கூடி விளையாடி மகிழ்வது பார்க்கும் நம்மை எல்லாம் உற்சாகப்படுத்தி கூடிவாழும் தன்மையை நமக்கு உணர்த்துகிறார் படைப்பாளர்.

ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்
திங்கட் கிழமை பிறந்த பிள்ளை
தினமும் உண்மை பேசிடுமாம்.
செவ்வாய்க் கிழமை பிறந்த பிள்ளை
செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுமாம்
புதன்கிழமை பிறந்த பிள்ளை
பெற்றோர் சொற்படி நடந்திடுமாம்
வியாழக்கிழமை பிறந்த பிள்ளை
மிகவும் பொறுமை காட்டிடுமாம்
வெள்ளிக்கிழமை பிறந்த பிள்ளை
வேண்டும் உதவிகள் செய்திடுமாம்
சனிக்கிழமை பிறந்த பிள்ளை
காந்தமாக இருந்திடுமாம்

இந்தக் கிழமைகள் ஏழுக்குள் எந்தக் கிழமையில் நீ பிறந்தாய்? அலமு.

அழ. வள்ளியப்பாவின் குழந்தைப்பாடல்களில் கிழமைகளைக் கொண்டு குழந்தைகளை உற்சாகப்படுத்துவது போல் அமைந்துள்ளது.

கைவினைப் பொருட்கள்
மரப்பாச்சி பொம்மைகள்

மரப்பாச்சி என்பதற்கு மரப் பொம்மை மரப்பாவை என்பது பொருளாகும். பெண் குழந்தைகள் மரப்பாச்சி பொம்மைகள் மீது மிகுந்த விருப்பங்கொண்டு வாங்கி விளையாடி மகிழ்கின்றனர்.

பொம்மைக்கும் பொம்மைக்கும்
கல்யாணமாம் - நம்ம
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்

என்று பொம்மைக் கல்யாணம் செய்து வைத்து குழந்தைகள் மகிழ்வதுண்டு. மரப்பாச்சிகள் அழகிய வேலைப்பாடுகளோடு மிக நேர்த்தியாகச் செய்யப்படுகின்றது. பெண்ணிற்கு நீண்ட நாட்களாக திருமணமாகவில்லை என்றால் ஒரு ஜோடி மரப்பாச்சி பொம்மைகளை வாங்கி அவற்றிற்கு திருமணம் செய்துவைக்கும் வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் காணமுடிகிறது. மரப்பாச்சி பொம்மைகள் என்ற தலைப்பில் கவிஞன்

தேவாதி தேவர்களின் நடுவிலே - ரெண்டு
மரப்பாச்சி பொம்மைகளாம் கொலுவிலே
தலப்பா சரிக வேட்டி தார்ப்பாச்சி கட்டிக்கிட்டுக்
கருப்பண்ணன் கம்பீரமா நிக்குறான்"

பொம்மை கொலுவில் மரப்பாச்சி பொம்மைகள் தலப்பாகை, சரிகை வேட்டி கட்டி கம்பீரமாக கருப்பண்ணன் நிற்கும் காட்சியினை நம் கண்முன்னே காட்சியாக படைக்கிறார். எங்க ஊரிலே கருப்பண்ண சாமிக்கு படையிலிடுவார்கள் வருடத்திற்கு ஒருமுறை வீட்டிலே நல்ல விஷயங்கள் நடந்தால் கருப்பண்ணசாமிக்கு பொரி கடலையுடன் படையலிட்டு குறி கேட்பார்கள். கருப்பணன் சாமி வந்திருச்சு குறி கேட்கிறவர்கள் கேட்கலாம் என்று கூறியவுடன் எலுமிச்சை பழத்துடன் குறி கேட்பார்கள். எனக்கு இதனை ஞாபகப்படுத்துகிறார் இக்கவிஞன்.

வாழ்வியல் நெறி

அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவைகளை முறையாகப் பெறுவது வாழ்வியல் நெறிகளாகும். அன்பு, அடக்கம், அர்பணிப்பு வாழும் மனிதனின் கடமையாகும். பகுத்தறிவும்,

இறைவுணர்வும் பண்பட்ட வாழ்விற்கு வழியாகும். ஓடி உள்ளத்தை ஒருமுகமாய் நாடி உணர்ந்து நிறைவுடன் வாழும் எளிய வாழ்வே சிறந்தது என்று எல்லாருக்கும் பாடுகிறேன் என்ற பாடலில் தன் கருத்துகளை ஏற்றியுள்ளார்.

வழக்கப் படிச்சுப்புட்டு வாதாடும் வக்கீலுதான்
கணக்கப் புரிஞ்சுக்கிட்டா கவிதை பாடுறேன் - உலகக்
கணக்கப் புரிஞ்சிக்கிட்டா கவிதை பாடுறேன் - மனசு
கனத்தை இறக்கி வைக்க இடம் தேடுறேன்

தான் ஒரு வழக்கறிஞராக இருந்தபோதும் தன் மனசுல பட்டதை கவிதையின் வழியாக எடுத்துச் சொல்லும் இவருடைய இயல்பு சிறப்பு.

உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லோருக்கும் பாடுறேன்"
காத்துமேட்டில் நடந்து வரும் கருப்பாயிக்கொரு பாட்டு
இரும்புக்கம்பியை வளைச்சுப்போடும் இசக்கிமுத்துக்கொரு பாட்டு
பள்ளிக்கூட வாத்தியாரு பாத்திமாவுக்கொரு பாட்டு
படிக்காம பராக்பாக்கும் பரட்டத் தலைக்கும் ஒரு பாட்டு

இப்படி எல்லாருக்கும் ஒருபாட்டு என்று தன் மனசுக்குள் சொல்லி வைக்கும் வானவில் கவிஞன் எளிமையான பாடல் வழியாக கூறியது சிறப்பு.

இழப்பும் இருப்பும்

கவிஞனின் பனிச்சரிவில் சிவப்பு ரத்தம் என்ற கவிதையில் தனக்கு பரிட்சயமான, பழக்கப்பட்ட எந்த ஒரு சிறு பொருளையோ, உயிரையோ பிரிந்து விடுதல் அல்லது இழந்து விடுவதற்கு பெயர் இழப்பு.

இருப்பு என்பது தன்னிடம் இருக்கப்பெற்ற அல்லது நிலைக்கப் பெற்ற ஒரு பொருளையோ, உயிரையோ குறிப்பிடுவது.

இமய மலையிலேன் துப்பாக்கிச் சத்தம்
பனிச்சரிவில் ஏன் சிவப்பு ரத்தம்
யாருக்காக இந்த நரபலி
போருக்குத் தானா அறிகுறி

இராணுவ வீரர்களின் இழப்பின் துயரங்களை வார்த்தைகளால் துடைத்திட முடியாது. இழப்பினால் ஆன

வலிகளின் பாதிப்புகளை விவரிக்கையில் கண்களில் ஈரம் முட்டித்தள்ளும் சொந்த மண்ணின் இழப்பை வேறெந்த தேசமும் ஈடுசெய்ய முடியாது என்று வீரர்களின் நிலைமையினை எடுத்துரைக்கிறார் எழுத்தாளர்.

"பொறுமைக்கும் எல்லையுண்டு" என்ற தலைப்பில்
நாட்டுக்கு மட்டுமில்லை
பொறுமைக்கும் எல்லையுண்டு
நரபலி தொடர்ந்தால் அம்மா

இருப்போமா பார்த்துக் கொண்டு (அம்மா) பொறுமையாக காத்துக் கொண்டிருப்பதால் இறப்பு எண்ணிக்கைத் தான் அதிகரிக்கும் பொறுத்தது போதும் விழித்துக் கொள்ளுங்கள் மக்களே என்று தன் ஆதங்கத்தினை எடுத்துரைக்கிறார் படைப்பாளர்.

கவிதைச் சொல்லில் முரண்பாடு இல்லாமலும் தன்னுடைய கவித்திறனால் "மக்கள் பாடும் பாட்டு" என்கிற பாடல்களடங்கிய இத்தொகுப்பினை சிறப்பாக இயற்றியுள்ளார். பண்பாடு, வீரம், நீதி, வரலாற்றுச் செய்திகள், சமுதாயம் சார்ந்த செய்திகள், வாழ்வியல் விழுமியங்கள், மண்ணின் நாட்டுப்புற மணம் கமழும் வரிகள், இயற்கையோடு ஒட்டிய தன்மை, குழந்தைப் பாடல்கள், விவசாயப் பாடல்கள், வழிபாட்டு பாடல்கள், கதைப்பாடல்கள் என்று பல்வேறு கவிதைகளை எளிய முறையில் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவாக கூறியுள்ளார். இவ்வாறான செய்திகள் பல இடங்களில் நுட்பமாக அமைந்து உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை கே.ரவியின் கவிதைத்திறனைப் பறைச்சாற்றி நிற்கின்றன எனலாம். கவிஞனின் இத்திறத்திற்குக் காரணம் அவர் கவிஞராக மட்டுமின்றி ஒரு வாசகனாகவும் இருப்பதே. "தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை" என்ற புரட்சிக்கவிஞனின் கூற்றுக்கு ஏற்ப தன் கவிதையின் மூலம் சமுதாயத்திற்கு தமிழ்த்தொண்டு ஆற்றிவரும் வானவில் கே.ரவியின் படைப்புகள் சிறப்பு. "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் எனும்" வள்ளுவர் வாக்கிற்கு இசைய, அறிய வகையில் அயராது பணிபுரிகிறீர்கள். தங்கள் முயற்சி தொடரவும் பயன்நிறைக்கவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

❖

வானவில் கவிஞரின் இறையியல் பார்வை

•

திருமதி.ச.கண்ணம்மாள்
தமிழ் உதவிப் பேராசிரியர் ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002

தலைமுறைகள் தோறும் கொண்டாடப்பட வேண்டிய மாமனிதர் பாரதியார் எனின் அது மிகையன்று. ஆம். வேடிக்கை மனிதராக வாழ விரும்பாது வியத்தகு மனிதனாய் வாழ்ந்தவர். தமிழ்த்தாயின் தவப்புதல்வர்.பாரதத் தாயின் மானம் காக்க அறைகூவல் விட்ட அறம் பாடியக் கவிஞர். அத்தகு பாரதியை உண்ணுவீர்; பருகுவீர்; அவனையே கனவு காண்பீர்! என்று வேண்டுகோள் விடுக்கிறார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள். வானவில்லின் வண்ணங்கள் ஏழு என்றாற் போன்று கவிதை, கட்டுரை, தன் வரலாறு, அறிவியல், இசை, இறையியல், சட்டம் ஆகிய ஏழு பொருண்மைகளில் நூல்களைப் படைத்துள்ள சிறந்த படைப்பாளர். இவரின் அனைத்துப் படைப்புகளும் ஏற்றமிகு படைப்பு தான் எனினும், பாரதியியல் பேசும் 'மின்னற்சுவை' என்ற ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு அனைவரும் படிக்க வேண்டிய நூல் ஆகும். இந்நூலிற்கு அணிந்துரை எழுதியுள்ள திருமதி.சௌந்தரா கைலாசம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போன்று 'மின்னற் சுவை'யின் ஒவ்வொரு கட்டுரையும் கன்னற் சுவை தான். அவ்வகையில், இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள "தேடியுனைச் சரணடைந்தேன்" என்ற கட்டுரையின் வாயிலாக வானவில் கே.ரவி அவர்களின் பரம்பொருள் தேடல் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

தலைப்புப் பொருத்தம்

உலகில் இல்லாத ஒன்றைத் தேட முடியாது.கண்ணுக்குப் புலனாகாமல் அருவமாக நிலைத்துள்ள ஒன்றைத் தான் தேட முடியும். பாரதியார், தேடி இளைத்தாரே தவிர தேடிச் சலிக்கவில்லை. தேட முற்பட்டதன் நோக்கம் சரணடைவதற்கேயாம்.

சைவ சித்தாந்தவாதிகள் மூன்று விதமாக இறைவனின் இருப்பை நிரூபிக்க முயல்வர்.'முதலாவது, உலகியலுண்மையைக் கொண்டு அதனைப் படைத்தவனும் உளன் என்பது. இரண்டாவது, இருப்பின் நோக்கத்தை ஆராய்வதன் மூலம் படைத்தவனும் உளன் என்பது.மூன்றாவது, பொருள்களிலுள்ள குறைகளைக் கொண்டு குறைவில்லாத பரிபூரணமான பொருளும் உண்டென நிரூபிப்பது.' எனவே தேடுதல் மட்டுமன்று, அங்ஙனம் தேடிய சக்தியிடம் தன்னைச் சரணடைதலே சிறப்பு என்றும் அதுவே ஆன்ம முக்தி என்றும் விளக்கப் புகுவதன் பொருட்டு தலைப்பை மிகப் பொருத்தமாகச் சூட்டியுள்ளார் இந்நூலாசிரியர்.

கருதுகோள் தெளிவு

படைப்பாளன் ஒருவனின் சிந்தனை மக்களின் செயல்பாடாக மாற்றம் பெற்றால்தான் அப்படைப்பு வெற்றி பெறும். படைப்பாளனின் எண்ணத்தை, படைப்பின் நோக்கத்தைத் துல்லியமாக விளக்கிச் செல்வது ஆராய்ச்சியாளனின் தலையாயக் கடமையாகும். சிறந்த ஆய்வு நூல்கள் தாம் மூல நூல்களைப் படிக்கத் தூண்டும் கிரியா ஊக்கிகள். வானவில் கே.ரவி அவர்களின் இக்கட்டுரை நம்முள் பாரதியைத் தேடத் தூண்டுகிறது.

நாமமும் உருவும் அற்றே - மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் - வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்
நின்றிடும் பிரமமென்பார் - அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடுவேன்

பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதன் இயல் ஒளியுறும் அறிவாம்
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினார்

என்ற பாரதியாரின் இந்தக் கவிதைப் பொருளைக் கருதுகோளாகக் கொண்டு, அதனை விளக்க முற்படும் ஆய்வாளராக, பாரதியின் கொள்கை பரப்புச் செயலராக இந்நூலாசிரியர் திகழ்கின்றார்.

தேடல் பொது

பரம்பொருளைத் தேடுவதற்கு எந்தத் தடையும் இல்லை, எவ்வகையிலும் பாகுபாடும் இல்லை என்று உரக்கச் சொல்கின்றார்."பரம்பொருளைத் தேடும் வேட்கை தத்துவ ஞானிகளின் தனியுடைமை இல்லை; மனித மனத்தின் இயல்பான இயக்கங்களில் அதுவும் ஒன்று. மனத்திற்கு இயல்பிலேயே ஒரு பிடிவாதம் உண்டு. புலப்படும் பொருள்களைப் புறக்கணித்து விடுவதும், அப்பொருள்களுக்கு அப்பால் புலப்படாத ஏதோ ஒன்று இருப்பதாக பாவித்துக் கொள்வதும், அதை எப்படியாவது புலப்பாட்டுக்கு உட்படுத்தியே தீருவது என்ற விடாமுயற்சியில் ஈடுபடுவதும் அந்தப் பிடிவாதத்தின் வெளிப்பாடுகளே. வேகத்தில், தீவிரத்தில் மனங்கள் வேறுபடலாம்.ஆனாலும் எல்லா மனங்களுக்கும் இந்தப் பிடிவாதம் பொதுவானதே" எனத் தேடலைப் பொதுமைப்படுத்துகின்றார்.

இந்தத்தேடலில் மனித மனம் நால்வகைப்பட்ட மனங்களாகப் பரிணமித்தலை முறையே குழந்தை மனம், இளைய மனம்,வீர மனம், அறிவியல் மனம் என்கிறார். கட்டுரையாசிரியர் தெளிந்த உளவியல் நோக்கோடு இம்மனங்களை விளக்கிச் செல்கின்றார்.

வாழ்த்த வயது தடையில்லை

நாம் சிறியவராக இருந்து கொண்டு, பெரியவரை எவ்வாறு வாழ்த்துவது. எனவே, வணங்குகிறோம், வணங்கி மகிழ்கிறோம் என்ற சொல்வழக்கைப் பயன்படுத்தி வருகிறோம். இவ்வெண்ணத்திற்கு மாற்றுரை கற்பிக்கின்றார் வானவில் கவிஞர். பெரியவர்களையோ அல்லது இறைவனையோ நாம் வாழ்த்தலாம்.

"மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"எனச் சேக்கிழாரும், "வாழ்க நீ எம்மான்" எனப் பாரதியாரும்,"கடவுள் வாழ்த்து" எனத் திருவள்ளுவரும் வாழ்த்திய பான்மையை எடுத்துரைக்கின்றார்.

இவ்விடத்து சிவனுக்குப் 'பல்லாண்டு' பாடிய சேந்தனாரையும் திருமாலுக்குப் 'பல்லாண்டு' பாடிய பெரியாழ்வாரையும் கருத்தில் கொள்ள முடிகிறது.

எனவே, இறைவனை அன்பினால் வாழ்த்துதல் மூலம் எங்கும் நிறை பரம்பொருளின் இயக்கத்தை உணர்ந்துகொள்ள முடிகிறது. அவ்வேளையில் கண்ணால் கண்டு மனத்தால் உணரக்கூடிய நிலையை எய்துதல் திண்ணம் என்கிறார் கட்டுரையாசிரியர்.

பரம்பொருளின் தன்மை

"நாமமும் உருவும் அற்றே" என்ற பாரதியின் வரிக்கு விளக்கம் கூற முற்பட்ட ஆசிரியர், "அனுபவித்திராத ஒரு பொருள் மீது மனம் நாட்டம் கொள்ள வேண்டும் என்றால், அப்பொருளுக்கு ஒரு பெயராவது இருக்க வேண்டும்" எனச் சுட்டி, ஈசன் பால் நாட்டம் கொண்ட திருநாவுக்கரசரின் நாயகி (பாவ) மனநிலையைப் பொருந்த உரைக்கின்றார்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடை ஆரூர் கேட்டாள்
பேர்த்துமவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

சிவபெருமானிடத்தில் சரணாகதி அடைய எண்ணிய அப்பருக்கு அவ்விறைவனின் நாமம்(பெயர்), அவன் வடிவம்(உரு), அவனுறைவிடம்(தலம்) அறிய வேண்டியுள்ளது.

பாரதியும் தொடக்கத்திலே பலவகைப்பட்ட வடிவத்தில் உறையும் இறைவனைத் தேடிச் செல்வதை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஆதி மூலமே அனைத்தையும் காக்கும்
தேவ தேவா, சிவனே, கண்ணா,
வேலா, சாத்தா, விநாயகா, மாடா,
இருளா, சூரியா, இந்துவே, சக்தியே,

வாணீ, காளீ, மாமகளோயோ,
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் உள்ளது
யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே!

அந்த யாதுமாகி இருக்கும் இயற்கைத் தெய்வத்தைப் பின் 'சக்தி'யாகக் கண்டார் பாரதி.வள்ளலார் அதனை 'அருட்பெரும்சோதி'யாகக் கண்டார்.

வெறும் அறிவு

நாமமும் உருவும் அற்று, இல்லை என்று கூற முடியாது ஆனால் இருக்கின்ற ஏதோ ஒன்றை 'ப்ருமம்', 'இறைமை' அல்லது 'கடவுள்' எனலாம். அத்தகு ப்ருமத்தைத் தேட 'வெற்று அறிவு' தேவைப்படுகிறது என்கிறார் பாரதி. அதற்கு விளக்கம் கூற முற்பட்ட வானவில் கவிஞர்," இயங்கிக் கொண்டே இருக்கும் அறிவை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி வைத்தால், அந்த வெறுமையாகிய உள்ளீடற்ற 'வெறும் அறிவு' என்ற நிலை தெளிவுறும்" என்கிறார்.

'இருக்கு ஆனால் இல்லை' என்பது போல "உருவகத்தாலே உணர்ந்து உணராது பலவகையாகப் பரவிடும் பரம்பொருளை" அறிய முடிவதற்கு வெறும் அறிவு (அ) 'வாலறிவு' (Wisdom) தேவைப்படுகிறது என்று உறுதிபடச் சொல்கின்றார்.மேலும் அத்தகு வாலறிவைப் பெறுவதற்கான இரண்டு வழிமுறைகளையும் ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார்.

1) ஒரு முனைப்பு உள்நோக்கம் (ஸம்ப்ரக்ஞாத சமாதி)

ஒருபொருள் அல்லது ஒரு குறியீட்டை மட்டுமே அகத்தில் நிறுத்தி அதையே சிந்தித்து, அது தவிர வேறெதுவும் சிந்தையில் இல்லாத வண்ணம் ஒருமுனை நோக்கில் ஆழ்வது 'ஒரு முனைப்பு உள்நோக்கம்' ஆகும்.

இவ்விடத்தே, அடியார்கள் வழிபட்ட இறைவனின் உருவங்கள், நாமங்கள், வழிபாட்டு முறைகள் மூலமும் தியானத்தின் மூலமாகவும் இறை இயக்கத்தை உணர முற்படுதல் இந்நோக்கத்திலேயே வைத்துப் பார்க்கப்படுகின்றன.

2)வெறுமுனைப்பு உள்நோக்கம்:

ஒருபொருள் அல்லது குறியீடு கூட இல்லாமல் அறிவை வெறுமையாக்கி அதை உள்ளீடற்ற காலிப் பரப்பாக ஆக்கி வைப்பது' வெறுமுனைப்பு உள்நோக்கம்' ஆகும்.

கதிரவனிடமிருந்து புறப்படும் ஒளியானது பல பொருள்களின் மீது பட்டு பிறகே நம்மீது விழுகிறது. அல்லது நம்மால் காணமுடிகிறது. இங்கு மீகம் கூட 'தடைப்பொருள்' தான். எனினும் கதிரவனின் ஒளியை ஒருமுனைப்பாகக் கொண்டு நோக்கும் போது இடைப்படும் தடைப்பொருள்களை விலக்க முற்படுதல் வேண்டும்.

அல்லலை அகற்றியவர்கள்

உள்ளீடற்ற வெறுமையைக் கண்டவர்கள் அல்லலை அகற்றியவர்கள் என்று விளக்கிச் செல்லும் வானவில் கவிஞர், நமக்கு ஏற்படும் ஐயத்தை அவரே எழுப்பிக்கொண்டு அதற்கு விடை காண முற்படுகிறார். வாலறிவு படைத்த ஞானிகளும் யோகிகளும் துன்பமாகக் கருதாமல் தம் பிறவி அறுக்கும் தளைகளாக அதை ஏற்றுக் கொண்டனர் என்பதே உண்மை என்கிறார்.

"யோகிக்கு அநேக துக்கம் வரும். அதாவது ஊர், உலகத்துக்கெல்லாம் அது துக்கமாகத் தோன்றும்.ஆனால் அவனுக்குத் துக்கம் லவலேசமும் தெரியாது, பட்ட கட்டை மாதிரி இருப்பான்" என்கிறார் கண்ணதாசன். இங்ஙனம் அல்லலை அகற்றத் தெரிந்தாலே ஆனந்தத்தை அடைய முடியும்.

பொறுப்புணர்வால் கிடைத்த கடவுளின் பரிசு

'நான் இருக்கும் இடம் தேடி மானிடா! நீ வரவேண்டாம்! மன ஒருமைப்பாட்டோடு நீ செயல்கள் புரியும் இடம்தேடி நான் வருவேன்' எனக் கிருஷ்ணர் கீதையிலே குறிப்பிடுவார். சுவாமி விவேகானந்தரும் கரும யோகத்தையே முன்மொழிவார். அவ்வழியே பாரதியாரும் 'கரும யோகத்தில் நிலைத்திட அருள்வாய்' என வேண்டுகிறார்.

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெல்லாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருள்வாய்!
குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!

என்ற இக்கவிதையின் வழி பாரதியார், மனிதர்களை நன்னெறிக்கு ஆட்படுத்துகின்றார். எனவே வானவில் கவிஞர் இக்கவிதைக்கான பொறுப்பையும் அறிவையும் கடவுளின் பரிசாகக் கொண்டாடுகின்றார்.

- *இக்கட்டுரையாசிரியர் சுட்டும் மேற்கோள்களிலிருந்து, அவரின் பரந்து பட்ட இலக்கிய அறிவும் சிந்தனைத் திறனும் புலப்படுகின்றன.*

- *கருதுகோளைத் தெளிவுபடுத்துவதிலே ஆற்றொழுக்கான, எதார்த்த நடையைக் கையாண்டுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.*

- *பாரதியாரின் பரம்பொருள் தேடலை, யாவரும் புரிந்துகொள்ளும் வகையிலான தத்துவ நோக்கோடு ஒப்பிட்டு விளக்கியிருத்தலைக் காணமுடிகின்றது.*

- *பரம்பொருளுக்கு உருவம் (அ) குறியீடு கொடுத்து, ஆழ்வார்கள், நாயன்மார்களைப் போன்று, அன்பினால் உணர்வு நிலையிலே இறைவனைச் சரணடையலாம்.*

- *சித்தர்கள், யோகிகள் போன்று வாலறிவாகிய வெறுமையின் வழியாகவும் பரம்பொருளை அடையலாம்.*

- *உலகியல் வாழ்க்கை வாழும் மனிதர்களுக்குத் தேவை 'தெளிவான அறிவு, உறுதி கொண்ட நெஞ்சம், அன்பு நிறை அகம், ஐம்பொறிகளை நிர்வகிக்கும் திறன், எப்போதும் இறையுணர்வு, கரும யோகத்தில் நிலைத்தல்' ஆகியனவாம்.*

- துன்பத்தை இன்பமாக ஏற்றுக்கொள்ளும் வேளையில் பேரருளும் பேரானந்தமும் கிட்டும்.

உசாத்துணை நூல்கள்

1. அர்த்தமுள்ள இந்துமதம், கண்ணதாசன்
2. இந்திய தத்துவ ஞானம், கி.லக்ஷ்மணன்
3. பக்தி இலக்கியம், ப.அருணாசலம்
4. திருக்குறள், பரிமேலழகர் உரை
5. கர்மயோகம், சுவாமி விவேகானந்தர்
6. கீதை எளியவுரை, பாரதியார்

❖

கவிதையும் கே. ரவியும்

•

மு.கண்மணி
தமிழ் உதவிப்பேராசிரியர் நாடார் சரசுவதி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி தேனி.

கவிதையும் வானவில் கே. ரவி அவர்களின் வாழ்வும் வேறல்ல. அவரது கவிதை வரலாறே அவர் வரலாறு. இவரது படைப்புகளுள் செய்யுள் வடிவ நாடகங்கள் நான்கும், இருநூற்றுக்கும் மேற்பட்ட இசைப் பாடல்களும், செய்யுள் வகைகளும் அடக்கம். முதன்முதலாக அசோகனின் வரலாற்று நாடகத்தை அவர் செய்யுள் வடிவமாக எழுதிய போது, தினமும் ஓரிரு மணித்துளிகள் அவருக்காக குப்புச்சாமி சில திருத்தங்களைச் செய்துள்ளார். அந்த திருத்தங்கள் தான் அவரை ஒரு கவிதை கவிஞனாக வெளி உலகிற்கு வருவதற்குக் காரணம்.

கவிஞன் என்பவன் யார்?
கவிதைப் படைப்பவன் கவிஞன் தான்"
பொய்யெனும் கற்பனைக்குப்
பூவைத்து அழகு பார்ப்பவன் கவிஞன்...
உண்மைகளைக் கூர் தீட்டி
குறிவைத்து வீசுபவனும்
அவன்தான்.

பள்ளிப்பருவம்

பள்ளிப்பருவத்தில் "சிந்தனைக் கோட்டம்" என்ற இயக்கத்தை நண்பர்களோடு இணைந்து நிறுவி அதன் மூலம் ஏதேதோ சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த போது தோன்றிய கவிதை

புறப்பட்டு விட்டோம் இப்புவிமீ தெங்கும்
புத்துணர்வைப் புகட்டிடவே இதனால் எங்கள்
புறப்பட்டுப் போனாலும்.....
கரம்பட்டுக் கட்டவிழக் காத்திருக்கும்
கமலப்பூங் கட்டுகளே கவலை வேண்டாம்.

என்ற வரிகளில் கருணையுள்ள அரும்புகளே கவலை வேண்டாம் என எழுதியிருந்தார். அதன் பொருள் கருணை உள்ளங்களாகிய அரும்புகள் எனவும் கருணையுள்ள அரும்புகள் எனவும் இரு பொருள்பட எழுதியுள்ளார். இதனை அவர் ஆசான் சுவாமிநாதன் இதை கமலப்பூங் கட்டுகளே என மாற்றித் தந்தார். அதன் பிறகு அதைப் படிக்கும் போது அம்மாற்றத்தால் பெற்ற வார்த்தை அவரை இன்னும் நுணுக்கமாக எழுதத் தூண்டியது என்பதை அறிய முடிகிறது.

நண்பனின் கவிதை அனுபவம்

டாக்டர் அவ்வை நடராசன் அவர்களோடு நெருக்கமாகப் பழகிய போதும், அவர் மூலம் அறிஞர் பெருமக்கள் பலரோடு பழக வாய்ப்பு ஏற்பட்ட போதும் கவிதையின் பல்வேறு நுட்பங்களைப் பயின்றார் கவிஞர். அப்போது சில நாட்கள் தாம் நடராசன் அவர்களைச் சந்திக்க முடியாமல் போயிருக்கிறது. அப்போது தங்கள் நட்பைச் சிலர் குறை கூறியதால்தான் கவிஞர் தம்மைச் சந்திக்கவில்லையோ என்று நினைத்துக்கொண்ட அவ்வை நடராசன், பின்னர் கவிஞர் ரவியை நிகழ்வு ஒன்றில் சந்தித்தபோது ஒரு கவிதையை எழுதிக் கொடுத்தாராம். அது,

ஊரார் அலருரைக்கக் கேட்டு - நீ
உள்ளம் வெதுப்புறலாமா
யாரார் எதுசொன்ன போதும்
யாழா முழவோடு மோதும்

இவ் வரிகள் தம்மை பண்படுத்தியது என்றும் அவரது கவிதை வரிகள் தம்மை இன்னும் நுட்பமாகக் கவிதை படைக்கத் தூண்டியது என்றும் பதிவு செய்கிறார் கவிஞர் ரவி.

திருமணத்திற்கு பிறகு

ரவி அவர்களின் திருமணத்திற்குப் பிறகு சில நாட்கள் கவிதை அதிகம் எழுதவில்லை. கல்விப் பட்டத்தை அடுக்கிக் கொள்வதில் நாட்டம் அதிகம் ஏற்பட்டதே அதற்கான காரணம் என்று பதிவு செய்கிறார். அப்போது அவரோடு கவிதை உறவாடியுள்ளது.

எனக்கொரு முடிவை எதிர்பார்க்கின்றேன் எனத் தொடங்கி

முடிந்து போவதா முடிவு வேறு
முடிவெடுக்கத்தான் முயன்று பார்க்கிறேன்”

என்ற கவிதை உறைந்து போன தமது உணர்வு நிலையைக் காட்டியது. அதன்பின் சில நடைத் துள்ளலோடு கவிதைகள் தோன்றியிருக்கின்றன.

கற்பனையில் காலூன்றி ககனத்தை ஆராயும்
கனவு வாழ்க்கை - இன்பம்
நிற்பதில்லை என்றாலும் நிகழ்வதற்குக் காரணமாய்
அமைந்த மேடை

என்ற நம்பிக்கை ஊட்டிய வரிகளும்

என்
உள்ளக் கதவை மெல்லத் திறந்து - நான்
உற்றுப் பார்க்கிறேன்
உருத்தெரியாமல் நான் தான் அங்கே
உதிர்ந்து கிடக்கிறேன் -

என்ற வரிகள் அவை உலுக்கிக் கொண்ட வரிகள் அப்பொழுதிருந்து என் படைப்புகளை இடை நிறுத்தவில்லை.

கவிதை வட்டம்

ரமணனும், வ.வே.சுவும், சுப்புவும், ஷோபனாவும்,ரவியும் சேர்ந்து கவிதை வட்டம் என ஒன்றை உருவாக்கினார்கள். அதில் ரமணன் கவிதை சொல்ல, அதைக் கேட்டு அனைவரும் சிலையாகி நீண்ட நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது.

கட்டவிழ்ந்த காட்டாற்று வெள்ளமாக - மெத்தக்
கற்றவர்க்கும் கால்தடுக்கும் பள்ளமாக

முட்டமுட்ட முழைக்கின்ற பாறையாக - எங்கோ
முணுமுணுத்துக்..
பரவசம் அதிசயம் பொய் எங்கள் பராசக்தி

என்ற கவிதை பாரதி கவிதை சொன்னதைக் கேட்டது போலிருந்தது என்று சிலாகிக்கிறார். அப்போது கவிஞர் ரவிக்கு தோன்றிய கவிதை

இமை வாசலின் ஓரத்திலே - ஏனோ
முத்துக்கள் பனிக்கின்றன

இவ்வாறு ஒவ்வொருவரும் தன்னுள் தோன்றிய கவிதையை சொல்லிக் கொண்டிருந்தனர். இந்த வட்டத்தின் மூலம் கவிதையை மேலும் படைக்கத் தூண்டியது.

புழுக்கத்தில் தோன்றிய கவிதை

ஒரு நாள் ரவி புழுக்கத்தில் இருந்த போது குளியலறைக்குள் சென்று தூவு குழாயைத் திறந்திருக்கிறார். நீர் விழவில்லை. நீர் தலையில் விழ நெடுநேரம் காத்திருந்து அப்படியே நின்றிருக்கிறார். பின்னர் நீர்த்துளிகள் ஒவ்வொரு சொட்டாக விழ, மழை நினைவுக்கு வர, கவிஞருக்குள் கவிதை வெடித்தது.

என்னென்ன சேதிகள் சொல்வதற்காக
மண்ணுக்கிறங்கிவந்தாய் மழைத்துளியே
மின்னலின் வீச்சிலே மேகங்கள் துவள்கின்ற
இன்னலைச் சொல்வதற்கோ இறங்கி வந்தாய்
விண்மீன்கள் எல்லாம்.....

மண்ணுக் கிறங்கி வந்தாய் மழைத்துளியே" என்று ஒன்றன் பின் ஒன்றாக வரிகள் உதிக்க உதிக்கக் கவிதைகள் உதித்தது குளியலறையிலிருந்து வெளியே வந்து ஏடெடுத்து எழுதி வைக்கலாம் என நினைத்த போது வேறொரு கவிதை அதற்கு பதில் கூறுவது போன்று தோன்றியது. ஏட்டில் இடம் பிடித்தது.

மண்குளிரப் பொழிந்தமழை
மனம் குளிரப் பிறந்த இசை
மகிழ்ச்சியோ மகிழ்ச்சி என்று
கூத்தாடும் கவிதை நடை -

என்ற கவிதை மயங்கியதோர் நிலவினிலே பாரதி கண்ட கனவு போல் கவிஞர் வானவில் கே. ரவி அவர்களை கவிதை கவிஞனாக மாற்றியது.

பாரதிக்காக ஒரு கவிதை

ஒரு நாள் தொலைக்காட்சியில் கவியரங்கம். இளவயதினர் பங்கேற்றனர் அவர்களின் கவிதையிலும் ஒரு வேகம் இருந்தது. அனைவரின் கவிதையும் பாரதி பற்றியதே. அந்த கணம் கவிஞர் ரவிக்குள் கவிதை தோன்ற, அதை எழுதி வைத்துவிட்டு, அவரது மனைவியும் பிரபல செய்தி வாசிப்பாளருமான திருமதி. ஷோபனா ரவி அவர்களிடம் விம்மியபடியே படித்துக் காட்ட, இருவரும் பின்னர் தேம்பிய நிகழ்வைக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கவிதை,

அவனுக்காகக் கொஞ்சம் அழக்கூடாதா
புதை மணலில்சில விதைகள் தூவப்
புறப்பட்டானே
போகும் வழியிலெல்லாம் நெஞ்சு
மிதிபட்டானே
அதையும் மீறிச்.....

அவனுக்காகக் கொஞ்சம் அழக்கூடாதா நட்சத்திரங்கள் மண்ணில் விழக் கூடாதா என்ற கவிதை வரிகள் கேட்பதற்கும், படிப்போருக்கும் உணர்ச்சியை வெளிப்பட வைக்கின்றது.

ஐந்து வயது மகளுக்காக ஒரு கவிதை

அந்திமாலைப் பொழுது கவிஞர் ரவியின் மகள் ஒரு கவிதை பாடுங்கள் என்றாள். உடனே

சாம்பல் நெறத்துல வான்கோழி
சோம்பல் முறிக்குதடா - காத்துச்
சேவலும் கொஞ்சம் தடுமாறித்
தத்தி நடக்குதடா.
மாமரம் குயிலுக்குச்..
கும்மாளம் போடுமடா.

என்ற கவிதையைப் பாடலாகப் பாடியிருக்கிறார். அதற்கு அவரது மகள் பாடல் புரிந்தது போல் மெய்ப்பாடுகளுடன் ஆட அதன் பின்தான் பக்தி, ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு ஏற்பட்டது என்று பதிவு செய்கிறார் கவிஞர் ரவி.

பக்தி கவிதை

பிறவா யாக்கைப் பெரியோன் பிறைசூடி அமர்ந்து தவம் செய்வது போல் வானம் வடிவெடுத்து வளர்ந்தது. அப்பொழுது வடிவெடுத்த கவிதை

நிலவை அணிந்து கொண்டு - சடை
புரளப்புரள விழி நிறைந்தது வானம்
மின்னல் த்ரிசூலம்.
இருள் ஒளி எனும்பகை அறும்நிழல் சிவம்

அந்தக்கால கட்டத்தில் கவிதைப்பாட்டு வராத நாளே இல்லை என்று சிலாகிக்கும் கவிஞர் ரவி, பாடுவதே தொழில் பாடுவதே தவம் பாடுவதே எங்கள் யோகம் என்று மூழ்கிப்போ யிருந்த காலகட்டம் ஆகும். அப்போது என் கவிதை மெல்ல மெல்லத் தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டது. சிற்றாடை கட்டிக் கொண்டு சிட்டாய்ச் சிறகடித்துப் பறந்த என் கவிதை சேலையுடுத்திக் கொண்டு ஒரு தெய்வமங்கையாய்க் காட்சியளித்தது என்று உணர்வுப் பூர்வமாக எழுதுகிறார்.

கவிதை இன்பம்

கவிதை தமக்கு எப்படிப்பட்டது எனக் குறிப்பிடும் கவிஞர் ரவி அவர்கள், "சில சமயங்களில் இன்பம் பயக்கும் கவிதை, பெரும்பாலும் என்னை ஓர் இனம்புரியாத துன்பத்தில் சிக்கித் தவிக்கச் செய்கிறது. மீண்டும் மீண்டும் கவிதை என்னுள் மின்னிப் புறப்பட்டு எனக்கு உண்மையை உணர்த்தும் முயற்சியில் ஓயாமல், சலிக்காமல் கவிதை படைக்க வைக்கிறது. விக்ரமாதித்தனைப் போல, நான் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்கிறேன், "முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது

வேதாளம்
கருவத்திற்கோர் உருவம் அளித்துக்
கருவுக் குள்ளே வைத்து வளர்த்ததில்
..... ஓர் அதள பாதாளம்.

இவ்வாறு வேதாளம் போல கவிதை தான் என்னுடன் போராடிக் கொண்டிருக்கிறது.

கவிதை என்னைப் பொறுத்தவரை, தெய்வத்தை தரிசித்துக் திரும்பும் போது நான் சுமந்து வரும் நினைவு தான் கவிதை. மேட்டைவிட்டுப் பள்ளத்தை நோக்கிப் பாயும் நதிபோல் என் கவிதையும் பொய்யைப் புறந்தள்ளி உண்மையை நோக்கித்தான் பாய்கிறது. எந்த கணம் தூக்கத்தில் ஆழ்கிறோம் என்று எப்படித் தெரிவதில்லையோ, அப்படிதான் கவிதையும் பிறக்கின்ற கணம் தெரிவதில்லை. நான் பிறக்கும் கணம் கவிதை என்னோடு பிறந்திருக்கும் என்ற உண்மை நிலையைப் பட்டவர்த்தனமாக கூறி விடுகிறார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

இனிமையும் நளினமும் பொருந்திய சொற்களால் ஆனது கவிதை. சில கணம் மறந்தாலும் கவிதை தன்னை விடுவது இல்லை. கவிதை இல்லாமல் தாம் இல்லை. தாம் இல்லாமல் கவிதை இல்லை. கவிதையும் கே. ரவியும் என்ற தலைப்பில் அவருக்கு எவ்வாறெல்லாம் கவிதை தோன்றியது என்பதை உணர முடிந்தது.

❖

'வானவில்' கே.ரவியின் பார்வையில் தமிழ்க் கவிஞர்கள்

•

மு.கயல்விழி
தமிழ் உதவிப் பேராசிரியர்,
பச்சையப்பன் மகளிர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

கவிஞர்கள் சமுதாயத்தின் தூண் போன்றவர்கள். அவர்கள் தம் பாக்கள் மூலம் சமகால வாழ்வைப் பிரதிபலிக்கின்றனர். கவிதை என்னும் ஊற்று அவர்தம் உள்ளத்தில் சுரந்து, அது பாக்களாக வெளிப்பட்டு அவர்களை சமுதாயத்தினின்று வேறுபடுத்திக் காண்பிக்கின்றது. தமிழ்நாட்டில் எத்தனையோ கவிகள் தோன்றினாலும், அவர்களெல்லாம் காலத்தை வென்று வாழவில்லை. ஒரு சிலர் மட்டுமே அமரத்துவமான கவிதைகளைப் புனைந்து எல்லோர் மனதிலும் இடம் பெற்று வாழ்ந்தனர். சான்றாக, மகாகவி பாரதியையும், பாரதிதாசனையும், கண்ணதாசனையும் கொள்ளலாம். கவிஞர்கள் யாரும் உருவாக்கப்படுவதில்லை, அவர்கள் கவிகளாகவே பிறக்கிறார்கள். தமிழை, முறையான பாடமாகக் கற்ற அனைவருமே, கவிஞர்களாகி விடவில்லை! மாறாக, கல்லூரிக்குச் சென்று பயிலாதவர்கள் கூட, பெரும் கவிஞர்களாகிப் புகழ் பெற்றனர்.

இதற்கு விதிவிலக்காகக் கல்வியும் நன்கு பயின்று, கவிஞராகவும் பரிணமித்தவர் ஒரு சிலர் மட்டுமே. அவ்வகையில்,

அத்தி பூத்தாற் போன்று, தமிழ் இலக்கிய உலகில் தோன்றியவர் தான், கவிஞர் 'வானவில்' கே.ரவி அவர்கள். அன்னார், ஆரவாரமின்றி, அமைதியாக, தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டு புரிந்து வரும் மாமணியாவார்! அவர் ஒரு நற்கவியாகக் கவி புனைந்ததுடன், தம் வாழ்வில் சந்தித்த பல கவிகளுடன் நெருங்கிப் பழகி, அவர்தம் கவிதைகளை நன்கு பயின்று, அவற்றை ரசித்து, தம் வாழ்க்கை என்னும் கவிதைப் பயணத்தில், நமக்கு அளித்துள்ளார்கள். அவை அவருக்கு மட்டுமல்லாமல், அவரது நூலைப் பயிலும் அனைவருக்கும் சுவை பயக்கும் வண்ணம் அமைந்துள்ளது. அவரைப் போன்று இலக்கிய ஆளுமைத் திறன் கொண்டவர்களைத் தமிழ் இலக்கிய உலகில் காண்பதரிது. தம் வாழ்க்கையில் சந்தித்த கவிஞர்களையும், அவர்தம் கவிதைகளில் தமக்குப் பிடித்தமானவற்றையும் தம் சுயசரிதையில் பாராட்டி, அவற்றினை நம்முடன் பகிர்ந்துள்ளார்கள். தமிழுலகம் நன்கறிந்து இன்புறத் தக்க அவற்றையெல்லாம், இக்கட்டுரையில் நன்கு ஆராய்வோம்.

காற்றுக்குக் கவிதை தந்த ரமணன்

கவிஞர் இசைக்கவி ரமணன் சிறந்த கவியாவார். எதார்த்தக் கவிதைகளை புனைவதில் வல்லவர். சூழ்நிலைக்குத் தக்கவாறு, கவிதையை உருவாக்கி அளிப்பதில் தன்னிகரற்றவர். நமது கவிஞர், எப்பொழுதும் அவரது கவிதையை ஆழ்ந்து அனுபவிப்பவர். ஒரு சமயம் காற்று இல்லை என்று புழுக்கமான மாலைப் பொழுதில் கவிஞர் சலித்த போது, ரமணன் அவர்கள் கவிஞருக்காகவே ஒரு காற்றுக் கவிதையை இயற்றினார். கவி புனைந்த உடன் காற்று வீசியது. அழகான அக் கவிதையைக் கீழே பதிவு செய்துள்ளார்

காற்றே வா கவிதை தா
ஆற்றாமை அதைநீ மாற்றாமல்
தாகம் என்ற யாகம் பெருகத்
தண்ணீர் ஊற்றிவிடு
காற்றே வா கவிதை தா

(காற்று வாங்கப் போனேன். 2019.ப:17)

சுகி.சிவத்தின் கவியாற்றல்

*பேச்சாளர், எழுத்தாளர், எனப் பன்முக ஆளுமைத் திறன் படைத்தவர் **சுகி. சிவம்** அவர்கள். நமது கவிஞரும் சுகி. சிவமும் ஒரு சாலை மாணாக்கர். அவர் சிறந்த பேச்சாளர் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். அவர் சிறந்த கவிஞரும் கூட என்பதனை நமது கவிஞர்தாம் முதன் முதலாக வெளியுலகிற்கு அறியச் செய்தார். சான்றாக, கருமாரியம்மன் குறித்து, சுகி. சிவம் எழுதிய கவிதையை, கவிஞர் அறிமுகப்படுத்தி, அவரது கவித்திறனை உலகறியச் செய்கின்றார்.*

கொடியோர்கள் கண்டஞ்சும் தாரார்புஜம் - கொண்ட
கொடிநின்றனை அல்லாமல் வேறோர்நிஜம்
விடியாத படிசெய்த மாபாதகம் - தீர்க்க
குடிலுக்குள் குடிகொண்ட கோமேதகம்
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:29)

கவியரசரின் கவி நலன்

கவியரசர் கண்ணதாசனைத் *தமிழுலகம் நன்கு அறியும். அவரது கவித்திறனை அறியாதவர் தமிழகத்தில் ஒருவரும் இலர். நமது கவிஞர் கவியரசரைச் சந்தித்து அவரிடம் தனக்காக ஒரு கவிதையைப் பெற்று வந்த சிறப்பைக் கொண்டவர். எப்பொழுதும் கவியரசரின் கவிதையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். கவியரசரின் கவிதையில் தனக்குப் பிடித்தமான ஒன்றை, அவரது எந்தத் தொகுப்பு நூலிலும் இடம் பெறாத ஒன்றை நமக்கு வழங்குகின்றார். அது வருமாறு*

சிவனுக்கு உமையென்ன அத்தை மகளா- அவன்
மகனுக்குத் தெய்வானை மாமன் மகளா
இறைவனின் வீட்டிலும் ஜாதியில்லையே - இதை
எம்மிடம் கேட்க ஒரு நீதியில்லையே
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:54)

கவிஞர் வாலியின் பெருமிதக் கவிதை

*திரைப்படத் துறையிலும், இலக்கியத் துறையிலும் மிகவும் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர் **கவிஞர் வாலி**. இவர் ஸ்ரீ ரங்கத்தைச் சார்ந்தவர். அன்னாருடன் நமது கவிஞர் நன்கு பழகியவர். அவரது இனிய, எளிய, கவிதைகளை நன்கு ரசித்து மகிழ்ந்தவர்.*

தமது சொந்த ஊரான ஸ்ரீரங்கம் குறித்து அவர் பெருமையுடன் எழுதி, நமது கவிஞருக்கு மகிழ்வுடன் அளித்த கவிதை இதோ

ரெண்டு பக்கம் காவேரி எங்க ஊரு நடுவிலே
ரெங்க நாத சாமியோ ஆதி சேஷன் மடியிலே
சித்திரையில் தேரோட்டம் மாசியிலே படகோட்டம்
இத்தனையும் காணவரும் எத்தனையோ ஜனக்கூட்டம்
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:55)

தமிழிசை மாமேதை பாபநாசம் சிவன்

தமிழிசை மேதைகளில் முதன்மையானவர் **பாபநாசம் சிவன்** ஆவார். அன்னார் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், உயரிய இசை மேதைமையும் கொண்டவர். எண்ணற்ற தமிழ்க் கீர்த்தனைகளை உருவாக்கி, தமிழிசையை வளர்த்த பெருமகனாவார். நமது கவிஞர், அவரது அற்புதக் கீர்த்தனைகளில் மனம் பறிகொடுத்தவர். தமக்குப் பிடித்த அவரது ஒரு கவிதையை, தம் நூலில் அளித்துள்ளார். அது வருமாறு

பைந்தமிழ் மலர்பா மாலை சூட்டிநின்
பாதமலர் பணிந்து பாடவும் வேண்டும்
சிந்தையும் என் நாவுமென் நேரமும் - உன்
திருப்பெயர்ப் புகழ் மறவாமையும் வேண்டும்
வந்த உலகில் மதி மயங்கி
அறு பகைவர் வசமாய் அழியாமல் உன்
அருள் பெற வேண்டும்
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:62)

கவிஞர் தேவநாராயணனின் கவிதைகள்

கவிஞர் தேவநாராயணன், கவிஞரின் நீண்ட கால நண்பர். பாரதி கவிதைகளில் ஆழ்ந்து தோய்ந்தவர். கவிஞருக்கு, தோளோடு தோள் கொடுத்து, பல இயக்கங்களில் பணியாற்றியவர். படிப்போர் உள்ளத்தில், ஒளியேற்றும் கவிதைகள் படைப்பதில் வல்லவர். பாரதியின் பெருமைகளை எப்போதும் பாடிப் பரவிக் கொண்டிருப்பவர். பாரதி குறித்து அன்னார் பாடிய ஒரு பாடல், கவிஞரின் நெஞ்சில் எப்போதும் நீங்காமல் ஒலித்துக்கொண்டிருந்தது. அது வருமாறு

பாரதியே ஒரு பாரதம் - அவன்
பாட்டெல்லாம் தமிழ் மாருதம்
பாரதி மண்ணின் காவிய வளம்தான்
பாரதி தோன்றக் காரணம்

அந்தப் பாட்டில் வரும் வரி:

ஏட்டில் எழுத்தில் இனிவரப் போகும்
எழுச்சிகள் எல்லாம் பாரதி

(காற்று வாங்கப் போனேன். 2019.ப:85)

கவியோகியின் கவிதைகள்

கவியோகி சுத்தானந்த பாரதியார் *சிறந்த தமிழறிஞர் ஆவார். சிறந்த இலக்கிய மேதை. கவிதையையும், தத்துவத்தையும் வாழ்வியலாகக் கொண்டவர். தலைசிறந்த மொழி பெயர்ப்பாளர். சமரச சமய நோக்கம் கொண்டவர். அன்னார் இயற்றிய கவிதைகளில் மிகவும் பிடித்தமான ஒரு கவிதையைச் சர்வ மதப் பிரார்த்தனையாக, கவிஞர் தாம் பங்கேற்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் பாடிப் பரவுவார். அப்பாடல் இதோ*

எல்லோரும் வாருங்கள் எல்லோரும் சேருங்கள்
ஈசனை அன்புசெய்வோம்
எல்லோரும் பாடுங்கள் எல்லோரும் ஆடுங்கள்
இன்பமே நமது தெய்வம்

(காற்று வாங்கப் போனேன்.2019.ப:92)

கவிஞர் வீரராகவனின் உன்னதக் கவிதைகள்

கவிஞரின் அன்பு நண்பர் **பா. வீரராகவன்** *சிறந்த கவிஞர் ஆவார். பல கவியரங்குகளில் பங்கேற்று, கவி பாடிப் புகழ் பெற்றவர். பக்திப் பாக்களால் இறைவனை வழிபடுவதில் வல்லவர். அவரது கவிதைகளில், கவிஞர் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவரது கவிதைகளில், தம்மை ஈர்த்த கவிதையைத் தன் நூலில் கீழ்க்காணுமாறு பதிவு செய்துள்ளார்*

மனமாரச் சொன்னகவி எல்லாம்
மன்றத்தில் புகழ்கொள்வ தில்லை
எனதானால் இக்கணமே வீழும் - அன்றி
உனதானால் எந்நாளும் வாழும்

எனதில்லை உனதென்றே அர்ப்பணித்தேன்
நினதருள் நின்செயல் நின்கடனே
(காற்று வாங்கப் போனேன். 2019.ப:155)

தமிழன் எக்ஸ்பிரஸ் சிவக்குமாரின் கவிதைகள்

பிரபல தமிழிதழான, 'தமிழன் எக்ஸ்பிரஸி'ன் ஆசிரியரான **திரு. சிவக்குமார்** *அவர்கள், தமிழார்வம் மிக்கவர். கவிதைகள் தீட்டுவதில் வல்லவர். அவரது கவிதைகளுக்கு நமது கவிஞர் ரசிகர். கவிஞர், அவரது கவிதைகளை எப்போதும் ஆராதிப்பவர். தமக்குப் பிடித்த அவரது கவிதையை இங்கே பதிவு செய்து உள்ளார். அது வருமாறு*

எங்கிருந்தாலும் என்னை அறிபவன் ஒருவன்
எண்ணத்தினால் வளர்ப்பான் என்குல இறைவன்
சங்கல்பம் ஓய்ந்துவிடச் சரண்புகுந் திருந்தாலும்
சஞ்சித சாகசத்தால் புறம்புறம் திரிந்தாலும்
தன்கையில் பிள்ளையெனத் தாங்கும் அவன்பரிவு
தடம் மறந்தாலு மங்கே தேடிவரும் உறவு
(காற்று வாங்கப் போனேன். 2019.ப:273)

மகாகவி பாரதியின் பாடல்களில் ஈடுபாடு

மகாகவி பாரதியாரைக் *கவிஞர் யுகபுருஷராகவே கருதி வந்தார். அவரது கவிதைகளைப் பரப்புவதும், அவரது சிறப்பை எடுத்துரைப்பதும், தம் பிறவிப் பயனாகக் கருதியவர். கவிஞர், பலமுறை பாரதியின் கவிதைகளில் தம்மை மறந்து ஐக்கியமானவர். 25 ஆண்டுகளாக, ஜதி பல்லக்கில், பாரதியின் சிலையை ஊர்வலமாகக் கொண்டு சென்று, அவரைத் தெய்வமாகக் கருதி விழா எடுத்தவர். சொல்லிலும், செயலிலும் உயிர் மூச்சிலும் பாரதியைப் பாடிப் பரவியவர். பாரதியின் பாடல்களில் தமக்கு மிகவும் பிடித்த சிலவற்றை நம்மோடு பகிர்ந்து கொண்டுள்ளார்கள். அவை வருமாறு*

அஞ்சுதலைப் பாம்பென்பான் - அப்பன்
ஆறுதலை என்று மகன் சொல்லி விட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்- பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:220)

மற்றும்,

கணம் தோறும் வியப்புகள் புதிய தோன்றும்
கணம் தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணம் தோறும் நவநவமாம் களிப்பு தோன்றும்
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ஆங்கே
கணம் தோறும் ஒரு புதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்
கணம் தோறும் அவள் பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்

(காற்று வாங்கப் போனேன்.2019.ப:236)

கவிஞர் பாரதிதாசன் கவிதைகள்

தமிழ்க் கவிஞர்களில் பாரதிக்குப் பின் பெரும் புகழ் பெற்றவர் **பாரதிதாசன்**. அவருடைய கவிதைகளில் இரசித்துத் தோய்ந்தவர் நமது கவிஞர். பாவேந்தரின் பல கவிதைகள் கவிஞரின் உள்ளத்தை ஆழ்ந்து ஆக்கிரமித்தன. அவரது எல்லாக் கவிதைகளையும் ஆழ்ந்து இரசித்தாலும் தன்னை மிகவும் பாதித்த ஒரு கவிதையை தம் நூலில் எடுத்துரைத்து அப் பாடலை நன்கு பாராட்டி மகிழ்ந்துள்ளார்கள். அது வருமாறு

கூடத்தி லேமனப் பாடத்தி லேவிழிக்
கூடிக் கிடந்திட்ட ஆணழகை
ஓடைக் குளிர்மலர் பார்வையினாலவன்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழிதனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடை திருத்திநின் றாள் அவள்தான் - இவன்
ஆயிரம் ஏடு திருப்புகிறான்

(காற்று வாங்கப் போனேன்.2019.ப:27)

கவிஞர் சுரதாவின் தேன் கவிதைகள்

பாரதிதாசனின் சீடரான **சுரதா** அவர்கள் தமது "தேன் மழை" என்ற நூலின் மூலம் தமிழுலகால் பாராட்டப்பட்டவர். அவர் சிறந்த கவிஞர். பாரதிதாசன் புகழைப் பரப்புவதில் ஈடுபாடு கொண்டவர். நமது கவிஞர், கல்லூரிக் காலம் தொட்டே அவரது கவிதைகளைப் படித்து இன்புற்றவர்.

அவரது பொன் போன்ற கவிதை வரிகள் கவிஞர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவரது பல கவிதைகள் கவிஞரின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தாலும், தமக்கு மிகவும் பிடித்த ஒரு கவிதையின் வரிகளை நாம் மகிழ நமக்கு அளித்துள்ளார். அது வருமாறு

மாடுமுட்டிக் கோபுரங்கள் சாய்வதில்லை
மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை
(காற்று வாங்கப் போனேன்.2019.ப:30)

கவிஞர் 'வானவில்' கே. ரவி அவர்கள், நீண்ட வாழ்க்கைப் போக்கு கொண்டவர். தன் வாழ்க்கைப் பயணத்தில் கவிஞராய் நின்று, கவிதைகள் பல புனைந்து தமிழ்த்தாய்க்கு நற்றொண்டாற்றியவர். அன்னாரின் நூலான, "நமக்குத் தொழில் கவிதை" என்பது, அவரது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கும். அவர் பன்முக ஆளுமைத் திறன் கொண்டவர். கவிஞராக, கட்டுரையாளராக, பேச்சாளராக, இலக்கியவாதியாக, ஆன்மீகவாதியாக, மொழி பெயர்ப்பாளராக, வழக்குரைஞராக பல் துறையில் தடம் பதித்த மாமேதை. அன்னார் மகாகவி பாரதியின் எழுத்துகளைப் பட்டி தொட்டி எங்கும் பரப்ப வேண்டும் என்பதைத் தம் வாழ்வில் லட்சியமாகக் கொண்டு செயல்படுபவர். தமிழோடு ஆங்கிலத்திலும் புலமை கொண்டவர். தன் புலமையைத் தமிழ் வளர்ச்சிக்கு எப்போதும் பயன்படுத்தியவர். வாழ்க்கை என்ற பள்ளியில் (பயணத்தில்) தாம் சந்தித்த பல கவிஞர்களுடன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், அக் கவிஞர்களின் கவிதைகளில் தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சிலவற்றையும், மிகவும் சுவைபடத் தன் நூலில் பதிவு செய்துள்ளார். அனுபவங்களே வாழ்க்கைப் பாடம் என்பதே, அவர் எழுத்துகள் நமக்கும் உணர்த்தும் கருத்தாகும்.

ஒரு கவிஞர் பிற கவிஞர்களையோ, அல்லது, அவர்தம் கவிதைகளையோ, போற்றிப் பாராட்டுதல் மிகவும் குறைவு. அது போன்றதொரு ஆரோக்கியச் சூழல் தமிழ் இலக்கிய உலகில் இல்லை. ஆனால், அதற்கு விதி விலக்காக, கவிஞர் 'வானவில்' கே. இரவி அவர்கள் தாம் சந்தித்த, சந்திக்கவியலாத கவிஞர்களையும், தாம் வாசித்த, தாம் கேட்டனுபவித்த, அவர்தம் கவிதைகளையும் போற்றிப் பாராட்டியுள்ளமை வியந்து

பாராட்டத்தக்கதாகும். தாம் வாசித்த கவிதைகளையும், அவற்றை யாத்த கவிஞர்களையும், மிகவும் பாராட்டி அவற்றைத் தன் நூலில் பதியச் செய்து, கவியின்பத்தைத் தானும் அனுபவித்து மகிழ்ந்து, தமது நூலினை வாசிக்கும் அனைவரையும் ரசித்து மகிழச் செய்துள்ளார்கள். இவ்வாறு, பல்வகை சிறந்த இலக்கிய ஆளுமைத் திறன் கொண்டவராக அன்னார் விளங்குவதால், தமிழ் இலக்கிய உலகில், அரிதில் தோன்றும் குறிஞ்சி மலராக அவர் விளங்கி வருகின்றார் என்பதில் ஐயமில்லை.

உசார்துணை நூல் (Bibliography)

1.'வானவில்' கே. ரவி, (2019), காற்று வாங்கப் போனேன், சென்னை: நிவேதிதா பதிப்பகம்.

❖

பன்முக நோக்கில் வானவில் கே.ரவியின் 'மக்கள் பாடும் பாட்டு'

•

முனைவர் நா.கலைவாணி,
தமிழ்த் துறைத்தலைவர், கொங்கு கலை அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி) ஈரோடு-638 107.

ஓரறிவு முதல் ஐந்தறிவு உயிர்கள் வரை உள்ள உயிர்கட்கு இல்லாத ஒன்று பகுத்தறிவு. இத்தகைய பகுத்தறியும் திறன் மனிதனுக்கு இருப்பதால் 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். இத்தகைய அரிய பிறப்பினை மனித நேயமின்றி சாதி, மத பூசல்களுக்கு இடம் தந்து அழிக்க முற்படுவது மடமைத்தனம் ஆகும். இத்தகைய அறியாமையில் இருந்து நம்மை விடுவிப்பதற்கு ஒரே வழி நல்லிணக்கத்துடன் நல்லன செய்து வாழ்வதே ஆகும். அதுவே அறவழி என்றும் வலியுறுத்தப்படுகிறது.

மனித சமுதாயம் வளம் பெற நல்வழிப்பட வானவில் ரவி அவர்கள் எடுத்துக்கொண்ட ஆயுதம், திறவுகோல் கவிதை. 'மக்கள் பாடும் பாட்டு' என்ற (ப.243) தலைப்பில் எளிமையான சொற்களைக் கையாண்டு சொல்ல வந்த கருத்தை அழகுபடச் சொல்லியிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

ஒரு படைப்பாளனுடைய வாழ்வின் அனுபவங்களே இலக்கியம் இயற்றுவதற்குப் பாடுபொருளாக அமைகின்றன.

மனித வாழ்வின் பல்வகைக் கோணங்களையும். சமுதாயத்தின் பல்வகைச் சிக்கல்களையும் உளவியல் முறையில் மனிதனுக்கு ஏற்படும் போராட்டங்களையும், பிறவற்றையும் வெளிப்படுத்தும் வகையில் இலக்கியப் படைப்புகள் வெளிவருகின்றன. அந்த வகையில் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தைக் கூர்ந்து பார்த்து அதன் நிறை குறைகளை உணரும் ஆற்றல் பெற்றவராய்த் தமது படைப்புகளில் பல்வேறு பட்ட கோணங்களில் கவிஞர் பார்வையைச் செலுத்தி உள்ளார். கவிஞரின் இசைப்பாடலாக வெளிவந்துள்ள 'மக்கள் பாடும் பாட்டு' என்ற நூலில் பொதிந்துள்ள கருத்தாக்கத்தை, அவரது எண்ண அலைகளை. என் மனதைத் தொட்ட, மனதைப் பிசைந்த வரிகளை, பன்முக நோக்கில் பார்வையைச் செலுத்தி உங்கள் முன்னால் அதைப் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கவிஞரின் பார்வையில் இயற்கை

இயற்கையின் வித்தையில் மதி மயங்காதவர் யாரும் இல்லை. பாரதிதாசன் முதல் இன்றைய கவிஞர்கள் வரை இயற்கையின் விநோதத்தை விந்தை மிகு காட்சியாய் வடித்துள்ளோர் பலர். பாரதிதாசன் நிலவைப் பெண்ணாக உருவகம் செய்து பாடியது அனைவரும் அறிந்ததே. நாமும் இரவு நேரத்தில் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கண் சிமிட்டும் விண்மீன்களைக் கண்டு அதிசயித்திருக்கின்றோம். கவிஞரின் பார்வையில் நட்சத்திரக் கூட்டமோ,

யார் பாதச் சுவடுகளோ? யாருடைய கனவுகளோ?
யார்வீட்டுத் தோட்டத்திலே பூத்தமணிச் சிதறல்களோ'

என்று பாட வைப்பதோடு,

"யாருமற்ற பாழ் வெளியில் அம்மானை ஆடுவதார்"

என்று பாடி தன் கற்பனைத் திறத்தால் சொக்க வைக்கின்றார்.

வாசனையுள்ள மலர் சூடுகின்ற கூந்தலைத் தேடுவது போல தான் இயற்கையின் ரசிப்பில் கனவுகளோடு மயங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"நிலவுக்கு ஓர் ஓவியம் வரைய
வானவில்லிடம் சென்று
வண்ணம் கேட்டது மின்னல்"

என்ற வரியில் கருமேங்கள் சூழ்ந்திருக்கும் மாலைப் பொழுதில். வராமல் போக்குக் காட்டிய நிலவுப் பெண்ணுக்கு ஓர் ஒவியம் வரைந்து பரிசாகக் கொடுத்து வரவழைக்க மின்னல் போய் வானவில்லிடம் ஒரு நிறத்தைக் கேட்டதாகப் பாடி இருப்பது, கவிஞர் இயற்கை மேல் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்துகிறது.

கற்பனையில் செதுக்கிய பெண் சிற்பம் கண் எதிரே வந்து நின்றவுடன் தாம் கற்சிலை ஆகிவிட்டதாகக் கூறும் கவிஞரின் வரிகள் அவரது அழகியல் உணர்வுக்கு அத்தாட்சியாய் அமைந்துள்ளன.

'காத்துக்கும் பூமிக்கும் கல்யாணம்' என்ற தலைப்பில் கவிமாமணி அமரர் தேவ நாராயணர் வீட்டுத் திருமண வரவேற்பில் தான் பாடிய பாடலாக,

"காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம் - இரு
தோளுக்குப் பட்டாடை அருவிகளாம்
தொங்கட்டான் போலச் சிறு குருவிகளாம்
காலுக்கு நீரோடை கொலுசுகளாம்"

என்று பாடுவதோடு எறும்புகள் சாரை சாரையாய் ஊர்ந்து போவது சீர்வரிசை எடுத்து வரும் உறவுகளாய்,

"சிற்றெறும்புக் கூட்டங்கள் ஊர்வலமாம் - புதுச்
சீர் கொண்டு போகின்ற சிங்காரமாம்"

என்று பாடி படிமக்காட்சியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

காற்றின் அரவணைப்பு அம்மாவின் அரவணைப்பிற்கு நிகரானது என்பதால் காற்றைக் காத்தாயி என்று அழைக்கின்றார். காற்றை,

"அஞ்சருவி நீரெடுத்துப் பஞ்சுப் பொதியா வெளுத்து
மஞ்ச வெயில் நெஞ்சு தந்த சேலையடி
நீ சிரிச்சாத்தான் எங்க வயல் செழிச்சிருக்கும்
சீறிப்புட்டாக் கடல் கூடக் கொந்தளிக்கும்"

என்று சிரிப்புக்கும் சீற்றத்திற்குமான விளைவுகளைகக் கூறி வயல் செழிப்பையும் புயலின் கோரத்தாண்டவத்தையும் உவமை நயங்களாகப் புலப்படுத்தியுள்ளார்.

தாயின் தோளில் சாய்ந்திருக்கும் குழந்தை அப்படியே தூக்கத்தில் சிரிக்கும். இது ஓர் அழகான காட்சி இதையே பாட்டாக,

"தாயோட தோளில் முல்லைச்
சரமாகத் தூங்கும் பிள்ளை
வாயோரம் சிரிக்கக் கண்டு
வண்டாகப் பாடுகின்றேன்."

என்று பாடுகிறார்.

முல்லைப் பூவில் உள்ள தேனைக் குடிக்க வண்டுகள் ரீங்காரமிடுவது இயற்கை. இங்கு குழந்தை மென்மையான முல்லைச் சரமாய்க் காட்சியளிக்க அதன் வாயோரம் கசியும் குறுஞ்சிரிப்பைக் கண்டு தான் வண்டாக மாறி இன்பத்தில் திளைத்ததாகப் பாடியிருப்பது கவிஞரின் கவித்துவத்திற்கு மற்றுமொரு சான்றாகும்.

கடல் படுப்பதற்காக விரிக்கப்பட்ட படுக்கையே பரந்து கிடக்கின்ற மணல் என்பதை,

"பாய் போடும் மணல் விரிப்பில்
படுக்காமல் கடல் நடத்தும்
மாய்மாலம் கண்டு கண்டு
மாளாமல் பாடுகின்றேன்"

என்று கடல், மணல் படுக்கையைத் தொட்டுச் சென்று ஏமாற்றும் வித்தையைப் பாடுகிறார்.

பட்டாம்பூச்சி கண்ணுக்கு மட்டுமல்ல கருத்துக்கும் அழகு சேர்க்கும் என்பதை,

"பட்டாம் பூச்சியைப் பாருங்கள்
புழுவாய் இருந்து பூச்சியும் ஆகிப்
பறக்கும் கதையைச் கேளுங்கள்
இன்றைய சிறுவர்களே
நாளைய மன்னர்களாம்"

என்று சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப் பூச்சியின் பரிணாம வளர்ச்சியைச் சிறுவர்களோடு ஒப்பிட்டு எத்தனை எத்தனை வண்ணங்கள் என்று கூறுவது குழந்தைகளிடம் ஒளிந்துள்ள திறமைகள் வெளிப்பட அவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட விடுங்கள் என்று பெற்றோர்களுக்கு இடும் கட்டளையாகப்

பாடியுள்ளது சிறப்பு.

அடைமழை தொடர்ந்து பெய்யும் பொழுது வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழல் ஒரு புறம் இருந்தாலும் மறுபுறம் ஏழைகளின் குடிசைகளோ வெள்ளத்தில் மூழ்க. வயிறோ காய்ந்து கிடக்க,

"பேயாப் பேயுது பெரிய மழை
ரோட்டுல பள்ளம் வீட்டுல வெள்ளம்
பச்சக் கொழந்த பயப்படுது
பால் கெடைக்காம அழுவறது"

என்று இயற்கைச் சீற்றத்தால் ஏழைகள் படும் அவல நிலையைப் 'பேய் மழை' என்ற தலைப்பில் படிமக் காட்சியாக கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். சூரியன் மறையும் காட்சியைச் 'சிவப்பு முக்காடு' என்ற தலைப்பில்,

"சிவப்பு முக்காடு அணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே - உடல்
கருத்த ஒருத்தி துரத்தி வரத்-தலை
கவிழ்கின்றாயோ மேற்கினிலே"

என்று பாடுகிறார். சிவந்த சூரியப்பெண் கருத்த இரவுப் பெண் வரும் பொழுது அவளோடு தோற்றுப் போய் மேற்குத் திசையில் தலைகுனிவதாகக் காட்டியிருப்பது கவிஞரின் கவித்துவத்திற்குச் சான்றாகும்.

இயற்கை அன்னை தமக்குத் தோசை சுட்டுத் தந்ததாக 'வட்ட நிலாத் தோசை' என்ற தலைப்பில்,

"நீலக் கல்லில் வெள்ளி தோசை
சுட்டுத் தருகிறாள்
கோடிக் கோடிக் கண் சிமிட்ட
நட்ட நடுவில் தோசை"

என்று பாடுவது அவரது அழகியில்வாத உணர்வைப் பிரதிபலிப்பதாய் அமைகிறது.

அரசியல்

அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளையும் அவர்கள் கொடுக்கும் இலவசங்களில் மயங்கும் மக்களின்

வாழ்க்கைப் போராட்டத்தையும் பல்வேறு நிலைகளில் பாட்டாகப் பாடியுள்ளார். படிக்காத பாமரனும் தங்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் அரசியல்வாதிக்கே ஓட்டுப் போட வேண்டும் என்பதை,

"பல் துலக்கக் குச்சியோடு
நிற்கும் ராசய்யா- உன்
பலத்தை எல்லாம் ஓட்டுச் சீட்டில்
காட்ட மாட்டியா" என்று கேள்வி கேட்பதோடு
"ஒன்சனங்களோடு சேர்ந்து
மூணு கேள்வி கேக்குறே
தொகுதி மக்களுக்குத்திட்டம் இருக்குதா
மாசம் நீ ஒரு முறை இந்தப்பக்கம் வந்து போவியா?
சனங்கதான் தலைவருன்னு
சொல்ல முடியுமா?"

என்று அரசியல்வாதியைப் பார்த்துச் சாமானியனும் கேட்கும் நிலை உருவாக வேண்டிய தம் ஆதங்கத்தைப் பாடலில் வடித்துள்ளார். காசை வாங்கிக் கொண்டு ஓட்டுப் போட்டால் அது மானத்தை அடகு வைப்பது போல என்று சீறும் குரலாகக் கவிஞரின் ஆவேசம் வெளிப்படுகிறது.

"ஆராய்ச்சி மணி கேட்டு ஓடிவந்த
அரசர்களைக் கண்டிருந்தோம் அந்தக்காலம்
அடிவயிற்றில் அடிப்பவரைத் தட்டிக்கேட்க
அஞ்சியஞ்சிச் சாகின்றோம் இந்தக்காலம்"

என்று பாடும்பொழுது மனுநீதிச்சோழன், சிபிச்சக்கரவர்த்தி ஆகியோர் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மனிதர்களால் ஏதேனும் ஒரு துயரம் ஏற்பட்டது என்றால் துடித்துடித்துப் போகும் மன்னர்களாக வாழ்ந்த பூமியில் அடிமைப்படுத்துவோரைத் தட்டிக் கேட்கும் உணர்வில்லாமல், பயந்து சாகும் நிலை மாற வேண்டும் என்று பாடுகிறார்.

பாரதிதாசன் பொதுவுடமைத் தத்துவத்தைக் கூறும் பொழுது,

"ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய் விடுவார் உணரப்பா நீ"

என்று கூறியுள்ளது இங்கு நோக்கத்தக்கதாகும்

"யார் யாரோ உன் தலைவருன்னு
நம்பும் வரை நீ அரோகரா
உன் வலிமை உனக்குப் புரிஞ்சுப்புட்டா
நல்ல காலம் பொறக்குண்டா"

என்று பாடியிருப்பது 'தன்னை அறிய தனக்கோர் கேடில்லை' என்ற திருமந்திர வாசகத்தை முன் வைக்கின்றது.

"கம்மலுக்கும் வளையலுக்கும் ஆசைப்பட்டு
நம்ம எதிர் காலத்தையே பாழாக்க
வேணாங்க சாமி"

என்று மனம் வருந்திப் பாடுவதில் இருந்து கவிஞரின் அரசியல் சாடலில் இருக்கும் உண்மையை அறிய முடிகிறது. இலவசம் என்று சொல்லி ஏமாற்றுவதை விட ஏழைகளின் கல்வித்தரத்தை உயர்த்தப் பாடுபடுவோம் என்று அரசியல்வாதிகள் சூளுரைக்க வேண்டுகிறார்.

சமுதாயப் பார்வை

ஒரு படைப்பாளனுடைய வாழ்வின் அனுபவங்களே இலக்கியம் இயற்றப் பாடுபொருளாக அமைகின்றது. மனித வாழ்வின் பல்வகைக் கோணங்களையும் சமுதாயத்தின் பல்வகைச் சிக்கல்களையும் உளவியல் முறையில் மனிதனுக்கு ஏற்படும் போராட்டங்களையும் வெளிப்படுத்தும் வகையில் படைப்புகள் வெளிவருகின்றன. அந்த வகையில் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தைக் கூர்ந்து பார்த்து அதன் நிறைகுறைகளை எல்லாம் உள்ளபடி வெளிப்படுத்தும் கவிஞரின் சிந்தனையானது சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதையே விழைகிறது.

வில்லுப் பாட்டாகப் பாடும் பொழுது,
"இது பெறுக்குதில்லை தம்பி
எரிதழல் கொண்டு வா"

என்ற பாஞ்சாலி சபதத்தில் பீமன் கூறும் சினவுரையைக் கூறி,

"வஞ்சகத்தை ஊழலை நீ
முறித்து விடு
காசுதரும் கையை உடன்
எரித்து விடு" *(ப.111)*

என்று சமுதாய அவலத்தைத் தம் கோபக்கணைகளால் சாடியுள்ளார்.

லஞ்சம், ஊழல் தலை விரித்தாடும் பொழுது ஏழைகளின் வாழ்வு கேள்விக்குறியாகிறது. ஏழை ஏழையாகவே இருப்பதற்கு என்ன காரணம் என்பதை நாடோடி மன்னன் படத்திற்கு பட்டுக்கோட்டையார் பாடல் எழுதும் பொழுது,

"மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே
பசி வந்திடக் காரணம் என்ன மச்சான்
அவன் தேடிய செல்வங்கள் வேறு இடத்திலே
சேர்வதினால் வரும் தொல்லையடி"

என்று எழுதி இருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

தனது சமூகப் பார்வையை எல்லாத் தளங்களிலும் கவிஞர் பதிவு செய்துள்ளார். உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்று எதுவும் இல்லை என்பதோடு பொருளாதரத் தேவை காரணமாக உடம்பை விற்றுப் பிழைக்கும் பெண்களுக்கும் மனம் என்று ஒன்று உண்டு, அப்படியிருக்க ஏன் பட்டப் பெயர்கள் சூட்டிப் பரிகசிக்க வேண்டும் என்று தன் கேள்வியை முன் வைத்துள்ளார்.

"வேசி தாசி யாவரும் நம்
அன்னை, தங்கை, பிள்ளையே
வேறு தொழில்கள் போலவே - இதில்
மேன்மை கீழ்மை இல்லையே
யோசிக்காமல் பேசிவிட்டுக்
கலங்கும் நெஞ்சம் ஏனடா
யாவரையும் மதிக்கும் வழக்கம்
பழக வேணும் மானுடா"

என்று பாடும் வரிகள் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்ற கவிஞரின் முற்போக்குச் சிந்தனையை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றன.

நடிகர் நடிகைகளையும் அரசியல்வாதிகளையும் முன் மாதிரியாகக் கொண்டு விலைபோகும் அடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்று பாடும் பொழுது,

"திரையில் சண்டை போட்டவரைத்
தீரர் என்று மகிழ்ந்தோமே

கரை வேட்டிகளின் காலடியில்
காவல்துறையை வைத்தோமே”

என்று பாடி அறியாமையில் இருந்து விடுபட்டு அனைவரும் விழிப்புணர்வு பெற வேண்டும் என விழைகிறார்.

“குடிசை எல்லாம் மேலுயர்ந்து
கோபுரமாய் விளங்கிடவும்
மடமையிருள், கொல் வறுமை
மடிந்தே கருகிடவும் நல்லதோர் ஆட்சி”

அமைதலே சமுதாய மாற்றத்திற்கு அடிகோலும் என்று தம் கனவைச் சமுதாயத்தின் மேல் தாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார். கலைஞர் கவிஞர் மு.கருணாநிதி அவர்கள் தன் ‘கவிதை மழை’ நூலில் சமுதாய மாற்றமாகக் கூறும் பொழுது,

“உற்றார் சுற்றம் ஒருவர் இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆகுமா?
கற்றார், கல்லார், கழனியில் உழல்வோர்
சிற்றாள், கொல்லர், சிறுதொழில் செய்வோர்
மாதர் கல்லார் மாணவமணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்” (ப.250)

என்று கூறியுள்ள கருத்து சமுதாய மாற்றத்திற்குப் பாதையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

சாதிக்கொடுமை அறவே ஒழிய வேண்டும் என்று பல இடங்களில் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

“சாதிப்பிரிவுகள் சொல்லி அங்கே
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்”

என்று பாடும் பாரதியார், மனித சாதியில் தாழ்வென்ன உயர்வென்ன என்று உரத்த குரலில் ஒலித்துள்ளார். சாதிப் பிரிவுகள், ஆண்டான் அடிமை, ஏழை பணக்காரன் என்ற நிலை இருக்கும் வரை நாடும் வீடும் வளமான பாதையில் அடியெடுத்து வைக்கமுடியாது என்பதை,

“மாட்டுக்கும் குதிரைக்கும் மனுசனுக்கும்
சாதி சொல்லிப் பிரிப்பானே சதிகாரன்

நாட்டுக்கும் வீட்டுக்கும் இது நல்லதில்லே”

என்று தம் வருத்தத்தைக் கவிஞர் பாடலாகப் பாடியுள்ளார்.

இன்றைய சமுதாயம் எப்படி இருக்கிறது என்று கொத்தமங்கலம் சுப்பு தமது பாடலில் குறிப்பிடும்பொழுது

“பெரிய மனுசன் புளுகினாக்க பேப்பரில போடுறான்
சின்ன மனுசன் புளுகினாக்க செயிலுக்குள்ள போடுறான்
கன்னக்கோலு களவடிச்சா கட்டி வச்சு வாங்கறான்
கள்ளச் சந்தக்காரன் கிட்ட கையால் காசு வாங்கறான்”

என்று இந்த சமுதாயத்தின் நிலை என்ன என்பதைக் குறிப்பிட்டுள்ளார். படைப்பாசிரியரும் சமுதாய மாற்றம் வேண்டிப் பல இடங்களில் தனது நோக்கத்தைப் பதிவிட்டுள்ளார்.

‘மனுசங்களா மாறனும்’ என்ற தலைப்பில் மக்களிடம் வைக்கின்ற வேண்டுகோளாகக் கவிஞர் கூறும் பொழுது,

“கருத்துச் சண்டை கட்சிச் சண்டை
கடவுள் சண்டை தீரணும்
கையெடுத்துக் கும்பிடுறேன் மனுசங்களா மாறணும் - நாம
மனுசங்களா மாறுணும்”

என்று கூறியிருப்பது கவிஞர் தாம் வாழும் சமுதாயம் அழகானதாய்க் காட்சிதரத் தனி மனிதர் ஒவ்வொருவரும் திருந்த வேண்டும் என்று தம் கனவை முன் நிறுத்துகின்றார்.

மொழிக்காதல்

தாய்மொழியாம் தமிழின் பெருமைகளைக் கூறுமிடத்து,

“முச்சங்கத்தில் வளர்ந்த முல்லைத் தமிழ்
இளங்கோவின் காப்பியத்தில் இசையோடு நாடகமும்
பயின்ற தமிழ்
கம்பனுடைய சொல்லெல்லாம் கவிதைத் தமிழ்
கன்னல் தேன் பாகு கற்கண்டுத் தமிழ்”

என்று தமிழின் பெருமையை தமிழ் மொழிப்படைப்புகளை அழகு தமிழில் சிறப்பித்துள்ளார்.

பிற கவிஞர்களைப் போற்றும் பாங்கு

பாரதி மகாகவியாக இருந்தாலும்,
\‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்

வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை”

என்று பிற கவிஞர்களைப் போற்றுவதில் எந்த இடத்திலும் தவறியதில்லை. அந்த வகையில் படைப்பாசிரியரும்,

யாதும் ஊரென்று ஒலித்த குரல் *என்று கணியன் பூங்குன்றனாரையும்,*

வாடும் பயிருக்கு வாடிய உள்ளம் *என்று*

‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் நான் வாடினேன்’ *என்று சீவகாருண்யம் போதித்த வள்ளலாரையும் போற்றிப் பாடுகிறார்.*

‘ஆதிபகவன் முதலென்று உரைத்த’ *என்று முப்பால் அருளிய வள்ளுவரையும்,*

‘சாதிகள் இல்லையடி பாப்பா’ *என்று பாடிய பாரதியையும் ‘தமிழில் வாழ்த்துகிறேன்’ என்ற தலைப்பில் வாழ்த்துப்பாடல் பாடுவதோடு,*

“ஒவ்வொரு கணமும் புதிதாய்ப் பிறக்கும்
உயிரின் மொழியில் வாழ்த்துகிறேன்”

என்று தமிழ்மொழியின் மேல் தாம் கொண்டிருந்த காதலைப் பாடலாகப் பாடியுள்ளார்.

1940–ல் பொங்கல் திருநாளுக்காக கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் ஆனந்த விகடனில் எழுதிய அருமையான பாடலைப் படித்து தாம் ஒரு பாடலை ‘சுப்பு போட்ட பொங்கல்’ என்ற தலைப்பில்

“நம்ம சுப்புவாக வந்த ஊரு
கொத்தமங்கலம் - அவர்
நாட்டுப்புறப் பாட்டு
உணர்ச்சியூட்டும் மந்திரம்”

என்று கூறியுள்ள நயம் பிற கவிஞர்கள் மேல் கொண்டிருந்த பக்தியை விளக்குகிறது.

பாரதி மேல் கொண்ட பற்றின் காரணமாகப் பாரதியின் பாடல் வரிகளைப் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். ‘பாரதி வீரம்’ என்னும் தலைப்பில்,

"கண்ணம்மாவிடம் காதல் வீரம்
காலனைக் கண்டு அஞ்சாத வீரம்
பெண்மை வாழ்க எனக் கூத்திட்டு - ஜய
பேரிகை கொட்டிய புரட்சி வீரம்"

என்று பன்முகக் கவிஞன் பாரதியை அழகாகப் போற்றிப் பாடியுள்ளார்.

தன்னுணர்ச்சிப் பாடல்கள்

மருமகளை நொந்து மாமியார் பாடுவதாகக் கண்ணதாசன் எழுதிய கவிதையைப் படித்துவிட்டு, உடனே தவிக்க விட்டுப் பிரிந்து போயிருக்கும் கணவனை நினைத்து ஒரு பெண் பாடும் பாடலாக 'தெக்கத்திக் காத்துல' என்ற தலைப்பில்,

"சிறுவாட்டுப் பணமிருக்கு சீக்கிரமா வருவீரே
கருவாட்டு மீன்குழம்பு கஞ்சிக் சோறு ஆக்கிருவேன்
வருவாய்க்கு கடைகண்ணி வச்சுப் பொழச்சுடலாம்
வருவேன்னு ஒரு வார்த்தை மறக்காம எழுதுவிரோ"

என்று பாடி, கிராமியப் பாடலின் இனிமையை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

இன்று எத்தனையோ மாற்றங்கள் உணவில், உடையில், நம் பழக்க வழக்கங்களில். இதை எல்லாம் ஏற்றுக்கொண்டு எங்கே போகிறோம் என்பதே தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கும் நிலை. அறிவியல் முன்னேற்றம் காரணமாக உள்ளங்கை அடக்கக் கைபேசி உலகத்தையே நம் முன் கொண்டு வந்து நிறுத்தி உள்ளது. ஆனால் கைபேசியைத் தவறான நோக்கத்துடன் கையாளும் பொழுது அது உயிர்க்கொல்லியாக மாறும் சூழலும் நிலவி வருவதை யாராலும் மறுக்க முடியாது.

'செல் பேசி என் தோழி' என்ற தலைப்பில்,

"காதல் மனைவியோ மழலைச் செல்வமோ
காணவரும் விருந்தாளிகளோ
எதுவும் வேண்டேன் வேறெதையும் தீண்டேன்
எப்பொழுதும் கையில் செல்பேசி
நேற்றைய வாழ்வை மாற்றியவள்" ***(ப.209)***

என்று பாடும்பொழுது மக்களின் போக்கு குறித்த தம் வருத்தத்தைப் பதிவிட்டுள்ளார். கைபேசி குடும்ப உறவுகளைத்

தனித்தனித் தீவுகளாக ஆக்கிவிட்டது என்று கூறுவதோடு 'செல் தோழி விட்டுச் செல்' என்று பாடுகின்றார்.

குடிசை வாழ் ஏழை ஒருவேளைக் கஞ்சிக்காக அல்லாடும் நிலை இன்றளவும் மாறாத நிலையில் சாதி. மத வேறுபாடுகள், வாட்ஸ் அப், முகநூல் என்று நம்மைத் தொலைப்பது ஏன்? என்று கூறும்பொழுது,

"தெனக்கூலி மக்களெல்லாம் சோத்துக்காக ஓடுறச்ச
பிணக்கூலி தந்து நோயோடு போராடுறச்ச
சாதி மதக் கூச்சலிடும் சூரர்களாம் - டிவி
வாட்ஸ்ஆப்பு முகநூல் வீரர்களாம்"

என்று தனது சமூகப்பார்வையைப் பாடலாகப் பதிவிட்டுள்ளார்.

பாடல் பாடும் பொழுது. தான் அந்தப் பாட்டாகவே மாறிப் போவதாகக் கூறும் கவிஞர்,

"பாடும் போது பாட்டாகவே
மாறிப் பாடுங்க - உங்க
பயமெல்லாம் தூளாகிக்
கலஞ்சு போவுங்க"

என்று தம் அனுபவ அலைகளைப் பதிவிட்டுள்ளார்.

'மக்கள் பாடும் பாட்டில்' பல்வேறு சிந்தனைகளை பன்முக நோக்கில் கொடுத்துள்ள கவிஞர் தான் சொன்ன சொற்கள் எல்லாம் இந்த சமுதாயத்திற்கு நம்பிக்கை விதையாகுமா? என்ற கேள்வியுடன் பின்வருமாறு பாடுகிறார்.

"நான் சொல்லும் சொல்லெல்லாம்
நாளைய உலகத்தின்
நம்பிக்கை விதையாகுமா? - வெறும்
நாடகக் கதையாகுமா?"

என்ற தமது கேள்விக்கு மக்களிடம் தான் பதில் உள்ளது என்பதைப் பதிவு செய்துள்ளார்.

தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ

என்ற பாரதியின் கூற்றுக்கு ஏற்ப சும்மா கிடைத்ததா சுதந்திரம்? தியாகிகள் பலர் தாய் நாட்டுக்காக இன்னுயிரும் செந்நீரும் சிந்திப் பெற்ற சுதந்திர பூமியே இது. இந்தப் புண்ணிய பூமியில்

பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் அவசியமாகும். சமூகச் சிந்தனை கொள்வதும் சமுதாய நலனில் அக்கறை காட்டுவதும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாகும் என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கவிஞர் வானவில் ரவி அவர்கள் தனது எளிமையான மொழி நடையால் சமூக அவலங்களை 'மக்கள் பாடும் பாட்டாக'ச் செதுக்கி இருக்கின்றார். பல்வேறுபட்ட தலைப்புகளில் சிந்தனைக் கருத்துகளை முன் வைப்பதோடு ஒவ்வொரு தனி மனிதனும் விழிப்புடன் அறவழியில் செயல்பட்டால் மட்டுமே வளமான சமுதாயம் உருவாகும் என்றும் பதிவு செய்துள்ளார்.

சமுதாய நலனில் அக்கறையும் சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட மனிதர்கள் தங்களுடைய இலக்காக மானுட விடுதலையையே கொள்கின்றனர். ஆனாலும் காலங்காலமாக வருணம், சாதி முதலிய மேலாதிக்க உணர்வுகளால் நசுக்கப்படும் கீழ்ச்சாதியினர் தலைமுறை தலைமுறையாய் தாழ்த்தப்பட்டவர்களாகவே வாழும் அவலம் மறைந்தபாடில்லை. அரசியல் சுரண்டல், லஞ்சம், ஊழல், சாதி வேறுபாடு விவசாயின் ஏழ்மைநிலை என்று எல்லாத் தளங்களிலும் தன் பார்வையில் பட்ட அவலங்களைச் சாடுவதோடு மாற்றம் வேண்டிப் பல இடங்களில் வெளிப்படையாகவே தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

'மக்கள் பாடும் பாட்டில்' கடைசிக் கவிதையாக 'எல்லோருக்கும் பாடுகிறேன்' என்ற தலைப்பில் பின்வருமாறு பாடுகிறார்

"வழக்கப் படிச்சுப்புட்டு வாதாடும் வக்கீலுதான்
கணக்கப் புரிஞ்சுக்கிட்டா கவிதை பாடுறேன் - உலகக்
கணக்கப் புரிஞ்சுக்கிட்டா கவிதை பாடுறேன் - மனசு
கனத்தை இறக்கி வைக்க இடம் தேடுகிறேன்" (ப. 282)

இயற்கையைப் பல்வேறு கோணங்களில் ரசித்த கவிஞர் சமுதாய அவலங்களைக் கண்டு பாரமாகி இருக்கும் மனதிற்கு ஒரு வடிகாலாய் கவிதை பாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் மீரா இன்றைய கவிஞர்கள் குறித்த தனது பார்வையாகக் கூறும்பொழுது, "இன்றைய பெரும்பாலான கவிஞர்கள் போலிக் கற்பனாவாதிகளாக இல்லாமல் தங்கள் கண்களை ஆகாயத்தில் மேயவிடாமல் நடைமுறை

வாழ்க்கையின் மேடு பள்ளங்களிலும் பரவ விடுகிறார்கள்" என்று குறிப்பிடுவார். அதற்குச் சான்றாய் மனித சமூகத்தில் மேடுபள்ளங்கள் அனைத்தும் சமமாக வேண்டும் என்ற நிலையில் தமது கவிதைகளில் சமத்துவ நல்லிணக்கத்தை வலியுறுத்துவதோடு அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வு சாதி வேறுபாடு போன்ற சீர்கேடுகள் இல்லாத சமுதாயம் உருவாக வேண்டும் என்ற தமது லட்சியத்தை 'மக்கள் பாடும் பாட்டாக' நம் எல்லோருடைய ஒருமித்த குரலாக கவிஞர் வானவில் கே. ரவி அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். கவிஞர் தாம் காண விரும்பும் சமுதாயம் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று விரும்புவதை சாட்டையடியாக அரசியல், சமுதாயம் மற்றும் தனிமனிதர்களிடம் ஏற்படவேண்டிய விழிப்புணர்வுக் கருத்துக்களை பல்வேறு நிலைகளில் பதிவுசெய்துள்ளமையை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

❖

‘வானவில்’ ரவியின் பார்வையில் புதுக்கவிதை

•

முனைவர் ந.மு. கவிதா,
தமிழ் உதவிப் பேராசிரியர், வேளாளர் மகளிர் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு – 638 012.

கல்லார் கவிபோல் கலங்கிக் கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோல் பலவான் றுறைதோன்ற வாய்த்துச்
செல்லாறு தொறும் பொருளாழந்து தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள இறுத்த தன்றே
(திருவிளையாடல் புராணம்)

ஆறு செல்லுங்கால் பலவகை நீர்த்துறைகளைக் கொண்டும், மணி, பொன் முதலானவற்றை எறிந்து தள்ளிக் கொண்டும், நாட்டினர் பலவகைப் பயனும் கொள்ள வரும். அதுபோல, ஆன்றோர் கவியும், அகத்துறை, புறத்துறை ஆகிய துறைகளைக் கொண்டு முத்து, மணி அன்ன கருத்துகளைத் தாங்கிக் கற்றவர் கேட்டவர் அனைவரும் நற்பயன் கொள்ள வரும். நூல் தேர்ச்சியும் நுண்ணறிவும் உடையவர் செய்யும் கவிதைத் தெளிவும் விளக்கமும் பொருள் ஆழமும் உடையதாக இருக்கும் என்று, நீர்ப் பெருக்குடைய ஆறுக்கு உவமையாகக் கூறுவார்கள். நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பி விட்டோம் என்பது பாரதியின் வேதம். என்னை ஆட்கொண்ட ப்ரபஞ்ச சக்தி கவிதை என்றும், அறிவு ஆயிரம் சொல்லும், அதனால்தான்,

அதைச் சிற்றறிவு என்றும் அது கடந்து போனால் அது பேரறிவு என்றும் அந்த பேரறிவுதான் கவிதை என்றும் விளக்கம் கொடுக்கிறார் 'வானவில்' ரவி அவர்கள். உணர்த்தும் ஆற்றல் திறம்பட பெற்ற கவிஞர்களின் கவிதைகள், படிப்பவர்களின் உள்ளத்தில் ஆழப்பதியும்.

சுவைபுதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது, சோதிமிக்க
நவக்கவிதை

என்று புதுக்கவிதை பற்றி மார்தட்டிக் கூறுகிறார் முண்டாசுக் கவிஞர். இதனை மேத்தா அவர்கள், எதுகை, மோனை, சீர், பா எதுவும் இல்லாத கட்டுப்பாடு அற்ற கவிதையை

ஜல்தி! ஜல்தி!
டும், டம், டம்,
புரட்சி, புரட்சி,
இலக்கிய உலகில் புரட்சி செய்வோம்!
தாளத்தைப் போக்கிக்
கூளத்தைக் கூப்பிடுவோம்!
இசையைத் தகர்த்து
இம்சைகள் செய்வோம்!
அமைப்பை நொறுக்கி
அலங்கோலம் செய்வோம்!

அகத்திய முனிவரை
ஹோ, ஹோ வென்று
அலற வைப்போம்!
கம்பனைக் கதற வைப்போம்!
எத்தனை சாத்தனார்
எதிர்த்து வந்த போதிலும்
அச்சம் இல்லை; அச்சம் இல்லை
அச்சம்
என்பது இல்லையே!

என்று விளாசுகிறார்!

மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதை உலகுக்கு மாறிய போது எத்தனை இன்னல்கள் வந்த போதும் அச்சமில்லாமல் எதிர் கொண்ட பான்மையினை இக்கவிதை விளக்குகிறது.

அறிவைக் கொண்டு, சொற்களைத் தேடி, அடுக்கிச் சொல்வது கவிதையல்ல, உணர்வுப்பூர்வமாக கற்பனையில் வடிப்பது கவிதை. இதனை,

கவிதையொரு மனோதர்மம் கலைந்த கூந்தல்
கற்பனைகள் சிறகடித்துப் பறக்கக் கண்டும்
புவியெல்லாம் புதுமெருகு தோன்றக் கண்டும்
புலப்படாது திடீரென்று நடுங்கும் நெஞ்சில்
தவிக்கின்ற உணர்வுகளில் தனிமை யூற்றில்
தாகத்தால் மனம் வறண்டு தளரும் போதில்
சுருக்கென்று முள்குத்திச் சிரித்துக் கொள்ளும்
சுவடுகளே தெரியாமல் விரைந்து சொல்லும்

என்று கவிதைக்கு விளக்கம் தருகிறார் ரவிக்குமார். காற்றையும் கவிதையையும் உவமைப்படுத்திப் பாடுகிறார்.

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்து வந்து தந்தனத்தோம் என்றுதாளம்
போடணும் நான் பாடணும்

பித்தெடுத்துக் காதலுடன் இத்தரையத் தொட்டுதொட்டு
அத்தன மரங்களுமே ஆடணும்
சத்தங்கள வுட்டுப்புட்டு சந்தத்துலக் கட்டுபட்டுச்
சிட்டுக்குரு விக்கூட்டம் கூடணும்
நான் பாடணும்

மேகத்துலத் தோகவிரிச் சாடுகிற வானமயில்
ராகத்துல சிக்கித்தடு மாறணும் - என்
ராகத்துல சிக்கித்தடு மாறணும்
மோகவலை போலவொரு தாளஅலை பின்னிப்பின்னி
மூச்சுதெண றும்படி யாகணும்
நான் பாடணும்

காற்றோடு தன்னுடைய நட்புகளையும் பழைய நினைவுகளையும் அசை போடும்படி கற்பனை செய்து, மீண்டும் மீண்டும் காற்று வரும், வந்து கொண்டே இருக்கும், சந்திப்பும் நிகழ்ந்து கொண்டே இருக்கும்! வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை என்று கண்ணதாசன் உருக உருகப் பாடிய பாடல், அதே பொருளில்,

மனைவி மக்கள் என்ப தெல்லாம் மரணம் வரையிலே
மனையும் பொருளும், தேகத்தை நான் மறக்கும் வரையிலே!

நினைத்துக் கொள்ள நிமிடம் போதும். நிலைக்க வைக்கும் கவிதை யோகம்! உனக்கும் எனக்கும் உள்ள பந்தம், என்னை எழுதிடும் கவிதையே! கவிஞன் என்றும் மரிப்பதில்லை என்ற பொருளிலேயே பாடியுள்ளார்.

அதன்பின், காற்றும் கவிஞனும் தனியாகப் பேசிக்கொண்டார்கள். கவிதை அவருக்குச் சாமரம் வீசியது. தாகத்தைத்தணிக்கவும், யாகத்தை அணைக்கவும் தண்ணீர் ஊற்றுவது தான் வழக்கம். ஆனால், தாகம் என்ற யாகம் பெருகத் தண்ணீர் ஊற்ற இறைவன் கட்டளையிடுகிறானே! காற்று மட்டுமன்று, பஞ்ச பூதங்களும் கவிஞனுக்கு அடிமை.

தீயென்றால் காடெரியத் தேனென்றால் பூமகிழ
வாய்நின்ற பேரருளே வாக்கு.

சாதாரண மனிதன் அன்றாடம் காணும் காட்சி, கவிஞனின் பார்வையில், மிக பிரமாண்டமாகப்படும். மகாபாரதக்கதையில் நிலைத்த பெயரினை உடைய வில்லிப்புத்தூர் ஆழ்வாரது கற்பனையில் மலர்ந்த பாடல் இதோ –

கானெல்லாம் மலர்ந்த முல்லை, ககனமீ தெழுந்த தென்ன
வானெல்லாம் வயங்கு தாரை நிறைநிறை அடர்ந்து தொன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்ப மென்ன
தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற் றம்மா!"

இப்பாடலில், கவிதையின் இனிமையைப் பருகலாம், உருகலாம், களி பெருகலாம், திரிகூடாராசப்பாக் கவிராயனின் கற்பனை. அம்புலியைக் கவளமென்று தும்பி வழி மறிக்கும்" என்றும் முத்தொள்ளாயிரத்தில் அரக்கு நிற ஆம்பல் பூக்கள் அடர்த்தியாகக் குளத்தில் மலர்ந்திருப்பதைப் பார்த்து விட்டு, "ஓ, வெள்ளமே தீப்பிடித்து எரிகிறதோ!" என்று பயந்து போய், பறவைகள் எல்லாம் தங்கள் குஞ்சுகளைக் கைச்சிறகால் அணைத்துக் கொள்ள சிறகடிக்கும் ஆரவாரம் மிகுந்த நாடு என்ற கற்பனையில்

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளினம்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

அமைந்தது இப்பாடல். இதனையே ரவி அவர்கள்,

நிலா, முகில் தொடாதது தொலைவில் உள்ளது - என்
றாலும், பார்வை நாடகமோ கண் வளைவில் உள்ளது
தோற்றம் என்பதா? - ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா?

எனக் கேட்டுள்ளார்.

காற்று, நம் கையைப் பிடித்துச் செல்வது எங்கே என்று மனம் உருகி, கவிதை படைக்கிறார். கவிதைப் புத்தகத்தின் வெற்றுப் பக்கங்களைப் படபடப்போடு புரட்டிப் பார்த்தது காற்று. இதனைப் பாரதிதாசன்

கூடத்தி லேமனப் பாடத்தி லேவிழிக்
கூடிக் கிடந்திட்ட ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையி னாலவள்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழிதனில்
பட்டுத் தெறித்தது மானின்விழி
ஆடை திருத்திநின் றாளவள் தானவன்
ஆயிரம் ஏடு திருப்புகிறான்.

என்று காற்றின் செயல்பாடுகளைக் கண்முன் நிறுத்துகிறார். 'சினிமா உலகம்' இதழில் பிரசுரமான கவிதை.

வெள்ளை நிலவில் வியப்புக் கிண்ணத்தில்
வானவில்'லின் வர்ணக் கலவையைச்
சூரியன் சுடர் கதிர் தூரியம் தொட்டு
வார்த்த பொற்சித்திரம் வசந்தக் காற்றில்
உயிர் பெற்றுலாவும் உலகம் மயங்கும்

கற்பனையில் உதித்த கவிதை, காற்றைத் தேடுவதுபோல், காற்றும் கவிதையைத் தேடுகிறது.

❖

கவிஞர் கே.இரவியின் மின்னற் சுவை காட்டும் பாரதி சிந்தனைகள்

•

முனைவர் ம.கவிதா
தமிழ் துறைத்தலைவர் தமிழ் உயராய்வுத்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு, நாமக்கல்.

இலக்கியம் என்பது மனிதர்கள் தங்களுக்கு நிகழும் வாழ்க்கைக்கு மேலதிகமாக விரிந்த வாழ்க்கையை மொழியினால் கற்பனை செய்து அறிவது. வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. அதிலும் குறிப்பாக இலக்கியம் என்பது விரிந்த பொருளில் எழுதிய அனைத்தையும் குறிக்கும் எனலாம்.

பாரதியும் - இலக்கியமும்

மனிதன் தன் எண்ணத்தை வெளிப்படுத்த உறுதுணையாகத் திகழ்வது மொழி அந்த மொழியின் மீது கொண்ட பற்றுதலால் தாம் படைத்த இலக்கியங்கள் வழி இறந்தும் இறவாப் புகழை அடைந்தவர் பாரதி. இருபதாம் நூற்றாண்டின் 'விடிவெள்ளி' 'தேசியக் கவி' 'மகாகவி' எனப் பல்வேறு அடைமொழிக்குச் சொந்தக்காரர் இவர், வளமான வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் அனைத்தும் அவருடைய

பாடல்களில் உள்ளன. அவற்றை ஆழமாக, அகலமாக, காதலோடு உள்வாங்கிய கவிஞரும் வழக்கறிஞருமாகிய திரு.கே. ரவி அவர்கள் படைத்திருக்கக் கூடிய மின்னற் சுவை என்னும் இந்நூல் ஆசிரியர் எத்தனை அழகாகப் பாரதியை உள் வாங்கி யிருக்கிறார் என்பதற்கான சிறந்த சான்றாகும். பாரதி இலக்கியம் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இந்நூலின் வழி ஆசிரியர் உணர்த்தும் பாரதியின் சிந்தனைகளைப் படைப்பாளர் திரு.கே. ரவியின் அகக் கண் வழி ஊடுருவி, அதனை எடுத்தியம்புவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

மனிதனின் முதல் தேடலும் முடிவுத் தேடலும்

உணவு என்பது நம் மனிதர் ஒவ்வொருவருக்குமே அத்தியாவசியமான ஒன்றாகும். நாம் உண்ணும் உணவும் அது சார்ந்த பழக்கவழக்கங்களுமே நம் உடல் நலத்தைத் தீர்மானிக்கின்றன. அதனாலேயே மனிதனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றிலும் உணவே மிகவும் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

என்ற வாக்கு இதனை மெய்ப்பிப்பதாகும். இருப்பினும் இப்படிப்பட்ட இன்றியமையாத உணவுத் தேடலிலேயே வாழ்க்கையைக் கழித்திடும் மனிதர்களின் நிலையை வருந்தியுரைத்த பாரதியின் கவிதை வழி அவரது ஆழ்மனதைப் படித்த கவிஞர் கே.ரவி, மனிதரின் தேடலைத் தேடியுனைச் சரணடைந்தேன் என்னும் கட்டுரை வழி அழகுற எடுத்துரைக்கிறார்.

தேடிச்சோறு நிதம் தின்று வாழ்வது முதல் நிலை
தேடியுனைச் சரணடைந்தேன் என்று பரவசமாவது இறுதிநிலை
இந்த இரண்டுக்கும் இடையில் தான் எத்தனை விதமான
தேடல்கள்! தேடல்களில் எல்லாம் முடிவானதாகக் கருதப்படும்
தேடல், பரம்பொருள் என்ற பேருண்மையைத் தேடும் முயற்சியே

என்றுரைத்த ஆசிரியரின் பாங்கு இங்கு சுட்டத்தக்கது ஏனெனில் மனித வாழ்க்கை ஏதேனும் ஒன்றின் தேடலிலேயே இருக்கிறது மண்ணைத்தேடி, பொன்னைத் தேடி, பெண்ணைத் தேடி, புகழைத் தேடி, பதவியைத்தேடி என ஒவ்வொருவரின் தேடலின் பட்டியலும் நீண்டு கொண்டே போகிறது எனலாம். இருப்பினும் அவனது முதல் தேடல்; மற்றும் முடிவுத் தேடல் என அவற்றின் தேவையை விளக்கியுள்ள விதம் சிறப்புக்குரியது.

கவிஞனும் கற்பனையும்

இயற்கை நமக்குத் தரும் ஆச்சரியங்கள் எவ்வளவு உண்மையானதோ அதைப் போலவே மனிதர்களுக்குத் தோன்றும் ரசனையும் கற்பனையும் அத்தனை உண்மையானது. இயற்கை நமக்கு பரிசளித்த மகாசக்தியின் பல்வேறு வடிவங்களில் தன்னை மறந்து லயிக்கும் கவிஞன், அதன் ஒவ்வொரு அசைவையும் தன் எண்ணங்களோடும் வாழ்வோடும் தொடர்புடையதாக்கிக் கொள்ளும் அவனது மொழி வழி அதனை உலகிற்கு உணர்த்துகிறான். பாரதியின் குயில் பாட்டு எனும் குறுங்காவியம் ஒரு காலை நேரக் காட்சியைக் கீழ்க்கண்டவாறு படம் பிடிக்கின்றது.

காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாம் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி

இப்படிப்பட்ட இயற்கை கொஞ்சும் எழில் சூழலும் அது சார்ந்த நிகழ்வுகளும் கவிஞரது கற்பனையைச் சிறகடிக்கச் செய்யும் எனில் அது மிகையாகாது.

மின்னல் போல் ஒரு கணம் தாக்கி மறைந்து விடும்
ஓர் அனுபவத்தைத் தக்க வைத்துக்கொண்டு, அந்த அனுபவக்
கணத்தை நீட்டித்து அதில் திளைத்து மூழ்கி, மெல்ல
அனுபவிக்கும் போது தான்; அது ரசனையாக முழுமை பெறுகிறது

என்ற ஆசிரியரின் கணிப்பு கவிஞரின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. பாரதியின் கவிதைகளில் மூழ்கித் திளைத்துக் கருத்தெனும் முத்தை கைநிறைய அள்ளிக் களித்த ஆசிரியர் கே.ரவி அவர்கள், மகாகவியின் மின்னற்போல் தாக்கி மறையும் கவிதைச் சுவையினைப் பல்வேறு உதாரணங்களோடு வழங்கியுள்ளார் என்றே கூறலாம்.

காலமும் கவிஞனும்

பாரதியின் சிந்தனைகளில்லாது தமிழ் கூறும் நல்லுலகம் பயணிக்க இயலாது. ஏனெனில், அனைத்து துறைகளிலும் ஒரு பரந்துபட்ட பார்வையைச் செலுத்திக் காலம் கடந்தும் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்றவன் பாரதியென்றே கூறலாம். அவரது பல்துறை சிந்தனையைக் கீழ்க்கண்ட பாரதியின் பாடல் மெய்ப்பிப்பதாய் உள்ளது.

இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
இயநூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களெலாம் சுழலுமென
வான்நூலார்; இயம்புகின்றார்

இடையின்றித் தொழில்புரிதல்
உலகினிடைப் பொருட்கெல்லாம் இயற்கையாயில்
இடையின்றிக் கலைமகளே நினதருளில்
எனதுள்ளம் இயங்கொ ணாதோ

பாரதியின் தொலைநோக்குப் பார்வையை உணர்ந்து உள்வாங்கி அவனை நேசித்தோர் பலராவர் அவர்களுள் நமது ஆசிரியர் கே.ரவி அவர்களின் பாரதி குறித்தான கூற்று,

ஒரு கவிஞன் தன் உள்ளத்தின் ஆற்றல் மிகுதியால் மானுட
உள்ளுணர்வுக் களத்தையும் கடந்து, அனைத்து உயிரினங்களின் ஏன்,
அண்ட சராசரத்தின் ஒட்டுமொத்த அதிர்வுக் களத்தில் சில நேரம்
பங்கேற்றுத் திரும்ப நேரிடுகிறது.

எவ்வளவு நிதர்சனம். பாரதியின் படைப்புகளை நாம் அலசி ஆராய்ந்தால், அவர் தனது சிந்தனைகளின் வழி தொழில், சமுதாயம், ஞானம், மதம், அறிவியல் முதலான அனைத்துத் துறைகளிலுமே முத்திரை பதித்தவர் என்பது உண்மையாக உணர முடியும். இதனை எடுத்துரைத்து வியந்த ஆசிரியர், இவற்றை உள்வாங்கும் கற்றுத் தேர்ந்த அறிஞர்களை இவை இன்னும் என்ன பாடுபடுத்துமோ? என்றும் புன்னகைத்த விதம் சிந்தனைக்குரியது. இதுமட்டுமல்லாமல், யார் படித்தாலும் சுவைதரக் கூடிய படிப்பை எழுதுபவன், தன்இனம், தன்மொழி, தன்நாடு, இவற்றோடு பிற நாடுகள் குறித்தும் கவலைகொள்பவன் கண்டங்கள் பல கடந்தும் போற்றுதலுக்குரியவன் என்ற இத்தனைக்கும் சொந்தக்காரன் எவனோ, அவனே உலகக் கவி என்றும் மகாகவி பாரதியே அத்தகு அடைமொழிக்கு ஏற்புடையவர் என்றும் உதாரணங்களோடு விளக்கிய விதம் சிறப்புடையது.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்; போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

என பட்டியலிட்ட பாரதியும் அந்த வரிசையில் வைக்கப்பட வேண்டியரே என எடுத்துரைத்த விதம் தெளிவு.

பாரதியும் பெண்மையும்

ஒரு நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமானால் அந்நாட்டுப் பெண்களின் நிலைமை மேம்பட வேண்டும். இருப்பினும் பாரதியாரின் காலத்தில் பெண்களை அடிமைப்படுத்துவதும், அவர்களை இழிவாக நடத்துவதும் காலந் தோறும் நடைபெற்று வரும் ஒரு நிகழ்வாகும். இதனை வன்மையாகக் கண்டித்த பாரதியார், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்களைத் தவிர்த்த புதுமைப்; பெண்களைப் படைத்து,

பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடுங் காணீர்

என்று சமுதாயத்திற்கு உணர்த்திய நிலையைப் 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' என்ற கட்டுரையின்; வழி எடுத்துரைத்துக் கீழ்காணுமாறு அதை விவரிக்கிறார்.

பாரதியார் பல கட்டுரைகளில் தான் ஆண் என்பதை மறந்து தன் முண்டாசு, மீசை ஆகியவற்றை மறந்து, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளோடு உலவும் ஒரு பெண்ணாகவே மாறிப் பேசுகிறான்

அறம் சார்ந்த செயல்பாடுகளையும், அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்வது பெண்ணின் சுதந்திரத்துக்கும்; முன்னேற்றத்திற்கும் தேவையானது என்பதே பாரதி கற்றுத் தந்த பெண் விடுதலை எனலாம். அதனால் தான் பாரதியின் படைப்புகள் பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தர மட்டுமல்ல சமூகத்தை மாற்றியமைக்கவும் முயற்சி செய்தன எனலாம்.

கற்பு நிலையென்று சொல்லிவந் தாரிரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

என்னும் வரிகள் சிலரால் விமர்சிக்கப்படுவதையும், விமர்சனத்திற்குள்ளாக்கப் படுவதையும் சாடிய ஆசிரியர்.

பாரதி எதைப் பாட எண்ணினாலும், எதைப் பாடினாலும், அவனையும் அவன் பாடலையும் ஆட்கொண்டு பாடுபொருளாய் மேலோங்கி எழுபவள் பராசக்தியே பக்தி என்ற பேருணர்வே பாரதி பாடல்களுக்கெல்லாம் அடிப்படை

என்று தெளிவுறுத்தி, பாரதி தன் கவிதைகளால் உலகை வாழ்த்தி வாழ வைக்க வந்த மகாகவி என எடுத்துரைத்துள்ளார். மேலும் கவிஞனின் படைப்புகளில் நன்மை தீமைகளின் வேறுபாடுகளை ஒருவர் விளக்கி, மற்றவர் புரிந்து கொள்வதை விட அவரவருக்கு தோன்றுமாறு புரிந்து கொள்ள விட்டுவிடுவதே பொருத்தமாகும் எனவும் பரிந்துரைக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் ஈடு இணையில்லாத கவிஞரான பாரதியின் படைப்புக் கடலில் மூழ்கி சிந்தனை முத்துக்களை கைநிறைய அள்ளி நெகிழ்ந்த இந்நூலின் ஆசிரியர் திரு கே.ரவி அவர்கள் அந்த நெகிழ்ச்சியை தாம் அனுபவித்த மனோ நிலையின் சாரம், சிறிதும் குறையாமல் அதனை அணுகி ஆராய்ந்து படிப்பவர்களிடமும் அதே ஆர்வத்தினைத் தூண்டி யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் நோக்கிலேயே இந்த நூலைச் செதுக்கியுள்ளார். இருண்டு கிடந்த மக்கள்; வாழ்வில் தம் எழுத்துகளால் வெளிச்சம் தந்த பாரதியின் கவித்துவத்தினை ஒரு புதிய நோக்கில் அனைவரும் அறிய இந்நூல் துணைபுரியும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றே கூறலாம்.

உசாத்துணை நூல்கள்

1. *மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்*
2. *மின்னற் சுவை, கே.ரவி*
3. *பாரதியார் கவிதைகள், பாரதியார்*
4. *மின்னற் சுவை, கே.ரவி*

❖

வானவில் கே.ரவியின் கவிதைகள் ஓர் ஆய்வு

•

முனைவர் செ.காஞ்சனா
கௌரவ விரிவுரையாளர் அரசினர் மகளிர்
கலைக்கல்லூரி சேலம் – 8.

*வா*னவில் கே.ரவி அவர்கள் 50 ஆண்டுகளாக நூற்றுக் கணக்கான கவிதைகளும், பல ஆய்வுக் கட்டுரைகளும், தமிழ் ஆங்கில நூல்களும் படைத்துள்ளார்.

சட்டம், தத்துவம், சமூகவியல், இலக்கியம் எனப் பல துறைகளிலும் இவருடைய படைப்புகள் பரவி இருக்கின்றன. 'வானவில் பண்பாட்டு மையம்' என்ற அமைப்பின் மூலம், ஆண்டுதோறும் ஜதி பல்லக்கில் பாரதியின் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று பாரதிக்கு மிகச் சிறப்பாக விழா நடத்தி வரும் பாரதி அன்பர் ஆவார். இவரின் கவிதைகள் சிலவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புதுக்கவிதை

காலந்தோறும் இலக்கிய வடிவமும் பாடுபொருளும் மாறிக் கொண்டே வருகின்றன.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே *(நன் 462)*

என்னும் கருத்திற்கேற்ப தமிழ் இலக்கியங்கள் சங்ககாலம் முதல் இக்காலம் வரை பல மாற்றங்களுடன் வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

கால வேகத்தில் கவிதைத்துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் இது. தமிழ்க் கவிதையில் மலர்ச்சி பெற்ற இப்புதுமைக்குப் 'புதுக்கவிதை' எனும் பெயர் 1960 களில் தான் சேர்ந்தது என்பார்கள்.

'நியூ பொயட்ரி' என்றும் 'மாடர்ன் பொயட்ரி' என்னும் ஆங்கிலத்தில் கூறப்படுவதை ஒட்டி, தமிழில் புதுக்கவிதை என்ற பெயர் இம்முயற்சிக்கு இடப்பட்டது எனக் கூறுவர்.

பாரதியார் தமது கவிதைகளைப் 'புதுக்கவிதை' என்றே கூறுகிறார். அந்நாள் வரையில் இருந்து வந்த தமிழ்க் கவிதைகளிலிருந்து அவை மாறுபட்ட தன்மைகளைப் பெற்ற படைப்புகளாக விளங்கியதால்,

சுவைபுதிது பொருள்புதிது வளம் புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை

என்று பாரதி தன் கவிதைகளைப் பற்றிப் பெருமையோடு பேசுவதை இவ்வரிகளின் மூலம் காணலாம்.

தமிழில் புதுக்கவிதை தோன்றக் காரணம்

காலந்தோறும் தமிழ்க்கவிதை மரபில் ஏற்பட்ட மாற்றமும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் நிலையும் சமுதாய நிலையும் மேலைநாட்டுக் கவிதைத் தாக்கமும். உரைநடை வளர்ச்சியும் தமிழில் புதுக்கவிதை தோன்றக் காரணங்களாக அமைகின்றன எனலாம்.

தமிழ்க்கவிதையில் பாரதிக்குப் பிறகு ஒரு இடைவெளி ஏற்பட்டிருப்பதும், பின் அவை மெல்ல வளர்ச்சி பெற்று வந்ததையும் காணலாம்.

அப்துல் ரகுமான் அவர்கள் பிரெஞ்சு, ஜெர்மனி, ஆங்கில மொழிகளில் ஏற்பட்ட புதுக்கவிதை இயக்கத்தின் பாதிப்பு

தமிழில் எல்லா இலக்கியத் துறைகளிலும் ஏற்பட்ட புத்தெழுச்சி பழைய தடங்களில் ஏற்பட்ட கலப்பு இலக்கியத்திற்குத் தோன்றிய சிற்றிதழ்களின் வலிமையான பிரசாரம் இவை தமிழில் புதுக்கவிதை தோன்றக் காரணமாயின என்கிறார்.

புதுக்கவிதை இலக்கணம்

ஒரு நாட்டிற்கு அரசியல் சட்டங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இலக்கியத்திற்கான இலக்கணம் ஆகும்.

"இலக்கியம் பலவாய்ப் பல்கிப் பெருகி வளரத் தலைப்படும் காலத்தில் மொழியினை ஒழுங்குபடுத்த எண்ணும் மூதறிவாளர் கண்ட முறையே இலக்கணமாகும்" என்ற சோம.இளவரசின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

"கருத்துகள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை" என்று வரையறை கூறுகிறார் மு.மேத்தா.

"புதுக்கவிதை என்பது சொற்கள் கொண்டாடும் சுதந்திரதின விழா" என்று வைரமுத்து புதுக்கவிதைக்கு விளக்கம் தந்ததும் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

புதுக்கவிதை வேறு பெயர்கள்

புதுக்கவிதை என்று வழங்கப்படுவது தொடக்கக் காலத்திலிருந்து பலராலும் பல பெயர்களால் வழங்கப்பட்டு வந்துள்ளது.

உரைப்பா, உரைவிடு பா, உரைக்கவிதை, வசனகவிதை, இலகு செய்யுள், இலகு கவிதை, கட்டற்ற கவிதை, யாப்பற்ற கவிதை, விடுநிலைப்பா, புதிர்க்கவிதை, நவகவிதை, யாப்பு மீறிய கவிதை எனப் பல பெயர்கள் புதுக்கவிதை தாங்கி நிற்பதைக் காணலாம். இப்படிப் புதுக்கவிதை பல கவிஞர்களால் பலவாறாகப் படைக்கபட்டு வருகிறது. அந்த வகையில் கே.ரவி அவர்களின் கவிதையும் இடம்பெறுகிறது.

கே.ரவியின் கவிதைகள்

கே.ரவி அவர்கள் தன் சொற்களைச் செதுக்கி, கவிதைகளை வடித்துள்ளார். இதனை இங்கே காண்போம்.

"கல்லைச் செதுக்கியவன் சிற்பி சொல்லைச் செதுக்கியவன் கவிஞர்" இவ்வகையில் கவிதை என்னைப் பொறுத்த வரை தெய்வத்தை தரிசித்துத் திரும்பும்போது நான் சுமந்து வரும் நினைவு. மேட்டை விட்டுப் பள்ளத்தை நோக்கிப் பாயும் நதிபோல் என் கவிதையும் பொய்யைப் புறந்தள்ளி உண்மையை நோக்கித்தான் பாய்கிறது என்கிறார் கவிஞர் கே.ரவி.

இயற்கை

இயற்கையைப் பார்த்தால் யாருக்குத்தான் ரசிக்க தோணாது. பாமரமக்கள் ரசிக்கின்றனர். கவிஞர்கள் கவிதையாகப் படைக்கின்றனர். இயற்கை அனைத்தையும் அணைத்துக்கொள்கிறார் இக்கவிஞர். இதோ,

மேகங்களிலே தேகம் இழைத்து
மேனி படைத்திடலாம்
மின்னலைப் போல் துள்ளித்துள்ளி
வானில் குதித்திடலாம்
நிலாப் பிறையைத் தந்துபியாக்கி
நாதம் எழுப்பிடலாம்
வானவில்லை வளைத்துக் கட்டி
ஆடை நெய்திடலாம்

என்று தம் கற்பனைச் சிறகை மிக அழகாகப் பறக்கவிடுகிறார் கவிஞர்.

"நிலவு என்னும் ஒற்றை வாக்கியக் காவியத்தை எழுதி முடித்த எக்காளத்தில் எவனவன் இத்தனை முற்றுப்புள்ளிகள் இட்டு வைத்தவன்" என்கிறார் வைரமுத்து.

நதி நகர்ந்துகொண்டே இருக்கிறது
பூ பூத்துக் கொண்டே இருக்கிறது
நீ தேடிக்கொண்டே இரு

என்ற பா.விஜயின் கவிதை இங்கு ஒப்பு நோக்கதக்கதாகும்.

இளைஞன் கவிதை

உதயச் செம்மையில் மூழ்கிய படி உரக்கப்பாடும் இளைஞனின் கவிதை, தாம் இளைஞனாக இருந்தபோது தோன்றிய கவிதை என்கிறார் கவிஞர்.

உற்றுப்பார் ஒரு கணமே போதும்
வெட்ட வெளியும் பற்றி எரியும்
புரண்டு படுக்கும் பூமித் தாய்க்குப்
புதிய கனவுகள் தோன்றும் நேரம்
இதுதான் சமயம் இதயம் திறக்க
இருவிழி களிலும் தீப்பொறி பறக்க
பாடிக் கொண்டே பாடிக் கொண்டே...

வட்டாரச் சொற்கவிதைகளையும் மிகவும் அழகாக அவர் படைத்துள்ளார். மதுரை மீனாட்சிக்குத் திருக்கல்யாணம். அக்கோலத்தை வட்டாரச் சொல்லில் கவிதையாக எழுதியிருக்கிறார்.

அக்கரையில் மீனாட்சிக்குக் கல்யாணக் கோலம்
ஆறெல்லாம் வெள்ளம் இந்தக் கள்ளழகன் பாவம்
சீர்வரிசை யோடுவந்து காத்திருக்கேன் நானும்
சீறிவரும் காத்தக் கொஞ்சம் சாந்தி பண்ணவேணும்

என்று மிகவும் சாந்தமாக சீர்வரிசைகள் சரியாக வரவேண்டும்; அதற்காகக் காற்றை கொஞ்சம் நிறுத்தி வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார்.

நிலா - பசு ஒப்பீடு

வெள்ளைப் பசுவை மேய்ப்பதற்கா
கோடிச் சிறார்க் கூட்டம் - அது
மெல்ல நடந்து போவதற்கா
இத்தனை ஆர்ப்பாட்டம் (பசு)
மேகக் கன்றுகள் துள்ளுகின்றன
தாகம் தீரப் பால்கொடு
பூமிக் குவளை காத்திருக்கப்படும்
மிச்சம் இருந்தால் பொழிந்திடு (நிலா)

மிக அழகான உவமைகளை கையாண்டுள்ளார் என்பதை இதன்மூலம் அறியலாம்.

கண்ணன் கவிதை

ஒரு நாள் காலை கண் மலர்ந்ததும் தம் படுக்கை அறைச் சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ணன் படம் ஒரு கவிதையை வரவேற்றது என்கிறார் கவிஞர்.

உறியில் திரளும் வெண்ணையாகக்
கவிதை கொண்டு வந்துள்ளேன் - நீ
இழுத்துச் செல்ல உரலாய்க் காதல்
இதயம் கொண்டு வந்துள்ளேன்
பீதாம் பரமாய் என்னை உன்மேல்
புரள விடுவாயா - கண்ணா
புரளவிடுவாயா

எனக் கண்ணன் மீது காதல் கொண்ட கவிஞர் உருகும் கவிதை.

சிங்களத்தீவுப் பிரச்சனை

இலங்கைத் தீவைப் புயல் தாக்கிப் பலர் மாண்டபோது கவிஞர் கடல் நடுவே ஒரு கண்ணீர்த்துளி என்ற தலைப்பில் எழுதிய கவிதை. இதே போன்ற ஒரு கவிதையை அப்துல் ரகுமான் எழுதியுள்ளார்.

அங்கே
பிணங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன
நாம்
எத்தனை விக்கெட்டுகள் விழுந்தன? என்று

விசாரித்துக் கொண்டு இருக்கிறோம் (சுட்டுவிரல்)
கவிஞர் கே.ரவி
கடல் சினந்து இலங்கைத் தீவைக்
களவு கொண்ட போதெல்லாம்
கண்ணீர்த் துளியென இரக்கப்பட்டுக்
கவிதை யாலே அழுதவர் நாம் -

என்று தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கிறார்.

பொதுவுடைமை

கவிஞரின் பொதுவுடைமைச் சிந்தனையை இக்கவிதை மூலம் அறியமுடியும்.

சோத்துப் பஞ்சம் தனியுடைமை
சாதி என்னும் பழங்கொடுமை
பார்த்துப் பார்த்துப் புளிச்சிப் போச்சு
பாடங் கேட்டுச் சலிச்சிப் போச்சு - அட
மாத்தி மாத்திப் பாடினாலும் காத்துமழை கடலுதான்

மந்திரத்தை முணுமுணுக்குற மாதிரி ஒரு கனவுதான்
மத்ததெல்லாம் மன சொத்துக்கலே - மனச
மறைச்சுப் பாடக் கத்துக்கலே

சாதியும், வறுமையும் இன்றும் நம்மைவிட்டுப் போகவில்லை என்பதை, தம் கவிதை வரிகளின் மூலம் மிகவும் அழகாக எடுத்து இயம்பி உள்ளதை அறியலாம்.

இயந்திர வாழ்க்கை

வாழ்க்கை இயந்திர மயமாகிக் கொண்டிருப்பதை, தன் கவிதை மூலம் காட்டுகிறார் கவிஞர்.

காலைப் பொழுதின் கரகோஷங்கள்
கனவுத்திரை விலகியது
காத்துக் கிடந்த பகல் வேஷங்கள்
ஆட்டம் உடனே தொடங்கியது
சுற்றுப் புறத்தைச் சூனியமாக்கிச்
சுடர் விட்டெரிந்த மனமோ
வெற்றிடமாகச் சுருங்கியது
வெளியுலகில் ஒளி பரவியது

நிம்மதியான பொழுதுகள் எல்லாம் கனவில் மட்டுமே நிகழ்கிறது எனவும், விடிந்ததும் மனிதன் இயந்திரமாகச் சுழல ஆரம்பித்து விடுகிறான் எனவும் கூறுகிறார்.

இக்கவிஞர் பன்முகத்திறன் கொண்டவர். தம் கவிதையை அனைத்து தடங்களிலும் பதித்துள்ளார். இயற்கை முதல் இயந்திர வாழ்க்கை வரை அனைத்தையும் அழகாகக் கவிதையில் வடித்துக் காட்டியிருப்பது அருமையே. சில கவிதைகள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடியும்.

❖

பல்திறன் பண்பாளர் குறித்து ஒரு பார்வை

•

முனைவர் கு.கார்த்திகா
தமிழ் உதவிப் பேராசிரியர் அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி – 635207.

ஒரு எழுத்தாளன் தன்னுள் இயங்கும் அத்தனை நிகழ்வினையும் தன்னுள் நிறுத்திக் கொள்ளாமல் அவை வெளியுலகத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று முயற்சிக்கிறான். அது கவிதையாக, இலக்கியமாக, காவியமாக, பாட்டாக, இசையாக, நடிப்பாக, கருத்தாக, சுயசரிதையாக எனப் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்றான். அப்படி தன்னுள் பீறிட்டு எழும் படைப்புகளைத் தனக்கே உரித்தான நடையில் இந்தச் சமூகத்திற்கு வெளிக்கொண்டு வந்துள்ளார் நம் எழுத்தாளர். பெருமைமிக்க, சிறந்த எழுத்தளாரான பல கவிதைகளுக்குச் சொந்தக்காரான வழக்கறிஞர், கவிஞர் வானவில் கே. ரவி ஐயா அவர்கள் "காற்று வாங்கப் போனேன்" என்னும் தலைப்பில் தன் வாழ்க்கையில் அவர் கற்றுக் கொண்டத்தை, இந்த உலகத்திற்கும், அவருக்கும் உள்ள ஒரு தொடர்பைச் சுயசரிதையாக எழுதியுள்ளார். அவரே தன் முன்னுரையில் சுயசரிதையாக, என் கவிதைப் பயண அனுபவத் தொடராக வளர்ந்தவை என்று குறிப்பிடுகிறார். இவரைக் குறித்து "பல்திறன் பண்பாளர் குறித்து ஒரு பார்வை" என்னும் தலைப்பில் இக்கட்டுரை ஆராயவுள்ளது.

கவிதை

ஆசிரியருக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு மிகவும் ஆழமானது. ஒரு கவிஞனுக்கு நினைத்த அடுத்த கணத்திலே கவிதை இயற்ற முடியுமா? தன்னையும் மறந்து அவற்றில் மூழ்கிவிட முடியுமா? என்று கவிதைப் பற்றி அவர் பேசிய இடங்களில் நான் பிரமித்துப் போனேன். கவிதைப் பற்றி அவர் கூறுகையில் "கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதைவிட அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதை விட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்று தான் எண்ணம் தோன்றுகிறது" என்கிறார். கவிதை இவரை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தி என்று நம்புவதாகத் தெரிவிக்கிறார்.

காற்றுக்கும் கவிதைக்கும் சம்பந்தம் உண்டு என்பதை அவர் பயணம் செய்த ஏலகிரிமலையில் நிகழ்ந்த நிகழ்வினைப் பதிவு செய்கிறார். இவர்கள் தங்கும் விடுதியில் பிற்பகல் நேரத்தில் மின்சாரம் இல்லாமல், காற்று வாங்க வெளியே வருகிறார். அந்த இடத்தில் மழை மேகமூட்டத்தனுடன் காற்று இல்லாமல் இருக்கிறது. அந்தத் தருணத்தில் இவர் மனதில் பாடல் பிறந்து பிருந்தாவனி ராகத்தில் பாடியதும் அதற்கு இசையாகக் காற்று வீசியதையும் குறிப்பிடுகிறார். இந்த நிகழ்வு இதோடு நின்றுவிடவில்லை, காற்றுக்கும் கவிதைக்கும் உள்ள உறவுநிலையினையும் அதை நிரூப்பிக்கும் வகையில்,

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்து வந்து தந்தனத்தோம் என்று தாளம்
போடணும் நான் பாடணும்

என்று அவர் பாட, திடீரென்று பாட்டிற்குப் பின்னணி இசையாகக் காற்றின் சத்தம் என்று அவர் கூறுகையில், காற்றே அவருடைய பாட்டிற்கு இசை வழங்குவது போல் தோன்றுகிறது.

இவர் இப்படி கவிதையின் மீது அளவுகடந்த ஆர்வம் இருப்பதற்குக் காரணம் அவருடைய வளர்ப்புத் தந்தை தான் என்று பதிவு செய்கிறார். "ரவிந்திரநாத் தாகூர்" போன்று ஒரு பெரிய கவிஞனாக வருவான்" என்று அவர் சொன்ன வார்த்தை ஆழ்மனதில் பதிந்துவிட்டதாகக் குறிப்பிடுகிறார். இவர் இயற்றிய முதல் கவிதை நூலான "உன்னோடு நான்" என்ற

கவிதையைப் படித்துவிட்டு அதை குறித்துத் திரு பாரதிசுராஜ் அவர்கள் இது இன்னொரு கீதாஞ்சலி என்று பாராட்டியதையும் குறிப்பிடுகிறார். ஏன்னென்றால் ரவிந்தரநாத் தாகூர் அவர்கள் கீதாஞ்சலி என்ற நூலிற்கு நோபெல் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய கவிதைப்பயணம் முதலில் ஆரம்பம் – இவரும், இவருடைய நண்பர் சீனி சுந்தராஜன் அவர்களும் தமிழ்சங்கு என்ற கையெழுத்துப் பத்திரிக்கை தொடங்கியுள்ளனர். அதில் தான் இவருடைய முதல் கவிதை வெளிவந்துள்ளது. அந்தவரி "அகத்திய முனிவரின் அகத்தினில் உதித்தவள்" என்பது தான். கவிச்சக்கரவர்த்தி கம்பன் போற்றிய அகத்திய மாமுனிவரின் அருளோடு இந்தக் கவிதையைத் தொடங்கியதாகக் கூறுகிறார்.

"கவிதை வெறும் ஆற்றல் இல்லை. அதுவோர் ஆற்றாமை" என்கிறார். அவர், கவிதை குறித்துப் பேசுகையில் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். கவிதை என் கைவாள் இல்லை. என் கேடயம் இல்லை, என் ஆயுதமோ, கருவியோ, சாதனமோ இல்லை. நானே கவிதையின் கருவி, ஆயுதம்,சாதனம் கவிதையே என்னை ஆட்டிவைக்கும் பிச்சி, பேய் பெருந்தெய்வம் என இவருக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பை விவரிக்கிறார். கவிதை எப்படி அறிவின் பெருமுயற்சியின்றி கவிஞனை மீறி வெளிப்படுகிறது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொண்டேன் என்கிறார். உணர்வின் வெளிப்பாடு தான் கவிதை என்பதை கவிஞன் கூறுவதின் மூலம் அறியமுடிகிறது. ஆனால் இதுவே நிதர்சனம்.

இவர் தன் கவிதையைப் பற்றிப் பேசும் இடம் எல்லாம் இலக்கியங்கள் பற்றி பேசாமல் இல்லை. கலிங்கத்துப் பரணி, நளவெண்பா, பாரதிதாசன் பாடல்கள், சிலப்பதிகாரம், பாரதப் போர், முத்தொள்ளாயிரம் இவற்றின் வழியாகவே தமிழ் இலக்கியப் பயிற்சி வளர்த்துக் கொண்டேன் என்கிறார்.

தமிழ்மொழியின் மீது ஆர்வம்

வானவில் கே.ரவி கவிஞராக மாறுவதற்கு அவர் தமிழ் மீது கொண்டிருக்கும் ஆழமான பற்றே அடித்தளம் எனலாம். இவர் இடைநிலை பள்ளிப் படிப்பை சாந்தோம் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வியில் சேர்ந்த நேரத்தில் இவருக்குத் தமிழாசிரியராகச் சிதம்பரம் சுவாமிநாதன் அவர்கள் இருந்துள்ளார். இவர்

விடைத்தாளில் கோழி என்பதைக் கேழி என்று எழுதியதால் ஆசிரியர் கோபத்தில் விடைத்தாளைக் கசக்கி அவருடைய முகத்தில் விட்டெறிந்துள்ளார். இந்த அவமானம் அவர் நெஞ்சில் கனல் போல் எரிந்ததன் விளைவாக மூன்று மாதங்களில் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றதாக அந்த நூல்களையும் வரிசைப்படுத்துகிறார். எந்தத் தமிழாசிரியர் விடைத்தாளை வீசினாரோ அவரிடமே கண்ணகி பற்றி ஒரு கட்டுரை எழுதி பாராட்டுக்களைப் பெற்றதைப் பதிவு செய்கிறார். தன்மான உணர்வு இருந்தால் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் சாதித்துவிடலாம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அவருக்குத் தமிழ் மொழியின் தாக்கம் இதோடு நின்றுவிடவில்லை. கல்லூரி படிக்கும் பொழுது அவர் எழுதிய விடைத்தாளில் இலக்கணக் குறிப்பு தவறு என்று சொல்லி தமிழாசிரியர் மதிப்பெண் தரவில்லை. தமிழாசிரியிடம் வாதம் செய்வது பயனில்லை என்று கருதி அவருடைய துறைத்தலைவரிடம் சென்று நடந்ததைக் குறிப்பிடுகிறார். அவரும் பத்து மதிப்பெண்ணில் இரண்டு மதிப்பெண் தானே விடுப்பா என்று அவர் சொல்ல, இவர் மதிப்பெண் முக்கியமில்லை. எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த ஆசானின் மதிப்புப் பிரச்சனை என்று குறிப்பிடுகிறார்.
இவர் கற்றுக்கொடுத்த ஆசிரியர் மீது வைத்திருக்கும் மதிப்பும் மரியாதையும் பாராட்டுக்குரியது. இவர் ஒரு கவிஞனாகவும், தமிழ் இலக்கணம் படிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் எட்டாம் வகுப்புத் தமிழாசிரியர் திரு.கிருஷ்ணராமானுஜம் அவர்கள். இவரிடம் பயின்ற போது இலக்கணத்தின் அடிப்படைத் தத்தவத்தைப் புரிந்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். "இலக்கணம் என்பது என்றைக்குமே மாறா விதிகளின் தொகுப்பு இல்லை, காலத்துக்கு ஏற்ப, மக்கள் பேசும் மொழிக்கு ஏற்ப, எழுதும் நடைக்கு ஏற்ப, அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும் விதிகளின் தொகுப்பே என்பதைப் புரிந்து கொண்டேன் என்கிறார். அத்துடன் இலக்கண விதியின் பின்னணியில் தேவை மறைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மொழிப் போராளி

இவர் ஒரு மொழிப் போராளி. இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவர் கிளர்ச்சியில் இவர் ஈடுபடுகிறார். அப்பொழுது அவரை ஊக்குவித்தது அவருடைய ஆசிரியர் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன். இவர் பேசிய வீரவசனங்களால்

உந்தப்பட்டு அவற்றில் கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் அவற்றைத் தலைமையேற்று நடத்தியதையும் பதிவுசெய்கிறார்.

நாடகம்

இவர் ஒரு நடிகர், நாடக நடிகர். இவர் ஐந்து வயதில் மின்னல் வீரன் என்ற படத்தில் ஒரு குட்டிக் கதாநாயகனாவும் நடித்துள்ளார். பள்ளிப் படிப்புக் காலத்தில் "ஜேம்ஸ் மிஸ்" என்ற ஆசிரியை "மான்விழி" என்றொரு நாடகம் உருவாக்கி, அதில் மான்விழி என்ற கதாநாயகியாக நடிக்க இவரைத் தேர்வு செய்கிறார். இவருடைய தமிழ் உச்சரிப்பு நன்றாக உள்ளது என்று பாராட்டியதுதான் தமிழ் மீது ஆர்வம் கொள்ள தூவப்பட்ட முதல் விதையாகக் குறிப்பிடுகிறார். 'பார்வைக்கு என்ன பொருள்' என்ற நாடகம் இவரும் இவருடைய துணைவியார் ஷோபனா அம்மையாரும் நடித்துள்ளனர். இவர் பல நாடகங்களையும் இயற்றியுள்ளார். இவர் நாடகம் நடிப்பதோடு மட்டுமில்லாமல் அந்த நாடகத்திற்குப் பாடல் எழுதி கொடுப்பதும் உண்டு. இவர் எழுதிய முழு நாட்டிய நாடகம் "பாதுகா பட்டாபிஷேகம்" ஆகும்.

இசை

இசையின் மீது ஆர்வம் வந்ததற்கான காரணத்தை கருவில் வந்தது பாதி, ஜி.ராமநாதன் உருவில் வந்தது மீதி என்று பதிவு செய்கிறார். பிருந்தாவனி, சிவரஞ்சனி, சுபபந்துவராளி முதலிய ராகங்களில் பாடல்கள் இயற்றிப் பாடியுள்ளார்.

இசையும் கவிதையும் இவருடைய இருகண்களாகவும், கைக்கோத்து வளர்ந்து வந்ததாகவும் குறிப்பிடுகிறார். தமது பெரும்பாலான பாடல்கள் மெட்டோடும் தாளத்தோடும் படைக்கிறார். அத்தகைய பாடல்களுக்கு பின்னணி இசை இருப்பது போலவே பின்னணி கதைகளும் உண்டு என்பது வெளிப்படை.

சொற்கள்

வானவில் கே.ரவி சொற்கள் பயன்படுத்திய முறை மிகவும் சிறப்பு. சொற்கள் மிடுக்காகவும் அமைந்துள்ளன. கவிதைகள் ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என இலக்கண முறைப்படி கவிதைகள் எழுதியது சிறப்புக்குரியது. இடை

யிடையே தமிழோடு வடமொழியும் கலந்து உறவாடி இருக்கும் தன்மையும் கவனிக்கத்தக்கது. தம் படைப்புகளில் சொல் ஆளுமைக் குறித்துப் பேசுகையில் "என் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன் அவர்களிடம் நான் பயின்றது சொல்லாளுமை, சொற்கள் எப்படி அடுக்கடுக்காக நெருங்கி வர வேண்டும். அதே சமயத்தில் ஒன்றில் ஒன்று கோக்கப்பட்டு ஊடுபாவி இருக்க வேண்டும் என்ற நுட்பத்தை அவருடைய கவிதைகளில் இருந்தே கற்றுக் கொண்டேன்" என்கிறார்.

இதழாசிரியர்

"மாணவரிஸம்" என்ற இதழின் ஆசிரியர். இதழில் பகலவன் என்ற பெயரில் கவிதைகளும் கதிரவன் என்ற பெயரில் கட்டுரைகளும், நாடோடிக் குறள் என்ற குறட்பாக்களையும் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வல்லமை என்ற மின்னிதழ் இவருடைய இலக்கிய பேழைக்குச் சொற்சதங்கை என்று பெயர் அளித்துள்ளனர்.

நற்சிந்தனை பண்பாளர்

1999 ஆம் ஆண்டு கார்கில் போரில் வீரர்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் தரவேண்டும் என்பதற்காக வானவில் பண்பாட்டு மையம் சார்பில் முழுநாள் கவியரங்கம் நடத்தி அவற்றை ஒலி பேழையாகப் பதிவு செய்து அதை போர் முனைக்கு அனுப்பியது நாட்டின் மீது அவர் கொண்டிருக்கும் அக்கறை பாராட்டுக்குரியது.

அரசியல் விமர்சகர்

கவிதை, இசை, மொழிப்பற்று, நடிகர், வழக்கறிஞர் என்பதையும் கடந்து இந்தச் சமூகத்தில் நடக்கும், ஊழல் அரசியல் எதிராகக் குரல் கொடுக்கும் மாமனிதராகவும் இருக்கின்றார்.

பாரதிவிழா

வானவில் கே.ரவி ஐயா அவர்கள் கவிதை எழுதத் தொடங்கி பல ஆண்டுகள் கழித்தே, பாரதியின் மீது முழு ஈடுபாடு செலுத்தியதாக கூறுகிறார். இதற்குக் காரணம்

கவிமாமணி தேவநாரயணன் என்கிறார். வானவில் பண்பாட்டு மையம் பாரதியின் கனவை நிறைவேற்றும் விதமாக அவருடைய உருவச்சிலையை ஜதிப்பல்லக்கில் வைத்து ஊர்வலமாகச் செல்கின்றனர். டிசம்பர் 11 அன்று மிக விமரிசியாகக் கவிஞர் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இதில் ஒரு சிறப்பு உண்டு. பெண்மை வாழ்க என்று கூறிய பாரதியின் ஜதிப்பல்லக்கை பெண்கள் தூக்கிக் கொண்டு வருகிறார்கள் என்பது மிகவும் பாராட்டுக்கும் வரவேற்கும் உரியது. பாரதி கண்ட புதுமைப்பெண்ணாகவும், ஆணுக்கு நிகர் பெண் சமம் என்று பாரதியின் வாக்கிற்கேற்ப இந்நிகழ்வில் பெண்களுக்குச் சமஉரிமை கொடுத்துப் பாரதியின் உருவசிலை பல்லக்கை தூக்குவதற்கு வாய்ப்புக்கொடுத்துப் பாரதியின் கனவை நிறைவேற்றியது மிகவும் பாராட்டுக்குரியது.

ஒரு நல்ல கலைஞனை தமிழுக்குத் தொண்டு செய்ய கடவுள் கொடுத்த ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். கவிதை இலக்கியத்திலும், சட்டத்திலும் சிறந்து விளங்கக் கூடிய இவரை பல்துறை வித்தகராகப் பன்முகம் கொண்டவர் என்று சொல்வது மிகையாகாது. ஒரு கவிஞராகவும், ஒரு வழக்கறிஞராகவும், எழுத்தாளராகவும், இசைமைப்பாளராகவும், பாடல் இயற்றக்கூடியவராகவும், பாடல் பாடக் கூடியவராகவும், ஒரு நடிகராகவும், தயாரிப்பாளராகவும், அரசியல் விமர்சகராகவும், இதழின் ஆசிரியராகவும், இலக்கிய வாதியாகவும், சமூகத்தின் மீது அக்கறை கொண்டவராகவும் பல்திறன் பண்பாளராக விளங்குகிறார் என்பது இவரது இலக்கியத்தின் வாயிலாகக் காணமுடிகிறது. இவர் இத்தகு திறமைகள் பெற்று, சிறந்த ஞானம் கொண்டவராக இருப்பதற்கும் அவருடன் சிறுவயதில் இருந்தே பழகிய நண்பர்கள், கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள், கற்ற இலக்கியங்கள், குடும்பச்சூழல் இவையே காரணம் என்பது வெளிப்படை.

❖

சொற்களுக்குள் ஏறிக்கொள் – ஒரு பார்வை

•

முனைவர் கி. காவேரி,
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,
சென்னை.

கவிஞரும் வழக்கறிஞருமான திரு கே. ரவி அவர்களின் 'சொற்களுக்குள் ஏறிக்கொள்' எனும் நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் வள்ளுவர், கம்பர், பாரதி என்ற இலக்கிய ஆளுமைகளின் படைப்புகளில் மூழ்கித் திளைத்ததன் விளைவாக முகிழ்த்த முத்துக்களாக அமைந்துள்ளன. 12 கட்டுரைகள் அடங்கிய இத்தொகுப்பில் ஒவ்வொரு கட்டுரையும் இலக்கிய இன்பத்தையும், கூர்த்த ஆய்வு நுட்பத்தையும் நூல் முழுக்க இழையோடச் செய்துள்ளன எனில் அது மிகையன்று.

பாரதி உலகறிந்த கவிஞர். உயிரோட்டமும், துடிப்பும், காட்சி சித்திரிப்பும், வீறுகொண்ட மொழி ஆளுமையும், தன்னிகரற்ற திறனும் கொண்டவை அவரின் படைப்புகள். சமூக ஆய்வுத் திறமும், கூர்ந்த நோக்கும், வரலாற்று வல்லமையும் அவரது படைப்புகளில் மிகுதி. காலத்தின் தேவை கருதி மொழியைக் கையாள்பவர் மகாகவி. ஆம்! நம் பாரதி ஒரு மகாகவி. இந்த மகாகவி தமிழின் கதியாகத் திருவள்ளுவரையும் கம்பரையும் கருதினார். தாம் ரசித்த பாரதியையும் பாரதி ரசித்த

கம்பரையும் வள்ளுவரையும் தம் பெரும்பாலான கட்டுரைகளின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார் நூலாசியர்.

பாரதியின் பன்முகப் பாங்கு

பாரதி பொதுநோக்குவாதி. பாரதியின் பரந்துபட்ட பாடுபொருட்களையும் மன வேட்கைகளையும் புரட்சி சிந்தனைகளையும் பாரதியின் மனு தர்மம் எனும் கட்டுரையில் சிலாகிக்கிறார் கட்டுரையாளர். மக்களின் மன இருளை அகற்றுவதில் பாரதியின் படைப்புகள் தனித்துவமிக்கவை. பரம்பொருள், இயற்கை, புரட்சி, விடுதலை உணர்வு, உலக உயிர்கள் முதலான எண்ணிலா கருப்பொருட்கள் பாரதியின் படைப்புகளில் உருக்கொண்டு உயிர் பெற்று உலா வருகின்றன. படைப்பாளிக்குக் கற்பனை மட்டும் கைவரப் பெற்றால் போதாது. நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் ஒருங்கே வாய்க்கப்பெற்று இருக்க வேண்டும். அப்படி வாய்க்கப் பெற்றவர் எனப் பாரதியைக் கொண்டாடியுள்ளார். கவிஞர் ரவி அவர்கள். பாரதியின் கவிதைகளில் கவனம் செலுத்தி வியந்து சிலாகித்துப் போன நாம் அவரின் கட்டுரைகளில் போதிய கவனம் செலுத்தத் தவறியதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். பாரதியின் கட்டுரைகள் வகிக்கும் முதன்மைத் தன்மையைக் "கட்டுரை இலக்கியத்தின் அடிப்படைகளே வேறு. சிந்திக்கச் செய்வதும் செயல்படத் தூண்டுவதும் ஆகிய ஆணைகளும், ஆலோசனைகளும், தர்க்கவாதங்களும், விசாரணைகளும் அணிவகுத்து வருவது கட்டுரை இலக்கியத்தின் மாண்பு. அதிலும் மகாகவி பாரதியார் கட்டுரைகள் சிந்தனை உலகுக்கு மகத்தான காணிக்கையாக முன் வைக்கப்பட்ட கருத்துப் பெட்டகங்கள்.[1]" என்னும் கூற்றும் மெய்ப்பிக்கின்றது. பாரதியின் கட்டுரைகளில் வெளிப்பட்டுள்ள நயத்தக்க நாகரிகத்தை, அவரின் துணிவை, நேர்மையை, நற்பண்புகளைப் பாராட்டும் நற்குணத்தை என அத்தனையையும் சான்றுகள் காட்டி மனதில் நிலைநிறுத்திவிடுகிறார் கட்டுரையாளர் ரவி.

மொழியின் நிலைப்பாடு

தமிழ் மொழியின் நிலைப்பாடு இன்றைய நிலையில் என்ன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பாரதியின் தமிழ், தமிழ் பாஷையின் இனிமை, தமிழின் நிலை, தமிழருக்கு முதலான

கட்டுரைகளை நோக்கினால் பாரதியின் மனக்குமுறலைத் தெளிவாக உணர முடிகின்றது. சான்றாக, "தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களில் சிறுபாலார் தமிழ் விஷயத்தில் ஒரு விதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும் இவ்விஷயத்தில் இவர்கள் வசிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பட்சத்தில் இவர்கள் இருக்கும் திசைநோக்கிக் காரியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள்". எனும் பாரதியின் கூற்று அவரின் மனக்குமுறலை வெளிப்படுத்துகிறது. மொழியை இழிவாகக் கருதிய மக்களைச் சற்று கடுமையாகவே பாரதி சாடியுள்ளமையைத் தம் கட்டுரையில் வெளிப்படுத்துவதன் மூலம், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தமிழின் நிலை எத்தகையதாக இருந்தது என்பதைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் வானவில் ரவி. இன்றைய நிலையில் பாரதி இருந்திருந்தால் அவரின் மனக்குமுறல் என்னவாக இருந்திருக்கும் எனும் கேள்விகள் இதனூடாக எழாமலில்லை.

பாரதியின் கவிதைகள், கட்டுரைகள் அவர் கால சமூக நிலைப்பாட்டை வெளிப்படையாய்ப் பறைசாற்றும் தன்மையைத் தெளிவாகத் தம் கட்டுரையில் நூலாசிரியர் பதிவிட்டுள்ளார். தமிழ் மொழியைத் தாழ்வாகக் கருதிய சிறுபான்மை தமிழர்கள், மேல்நாட்டு நாகரீக மோகத்திற்கு அடிமையான தன்மை, சாதிவாரியாகத் தமிழர்கள் பிளவு பட்டிருந்த அவலம் என அத்தனையையும் பாரதியின் படைப்புகள் பதிவு செய்திருந்தமையைச் சுட்டிக்காட்டும் அதே பொழுதில் தமிழ்ப் பற்று மிக்க அறிஞர்கள் தமிழின் செழிப்பிற்கு ஆற்றிய தொண்டினைக் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை. 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்' எனும் கவிதையில் புலவர்களின் காலவரிசையைப் பாரதி மாற்றிக் கூறியுள்ளமைக்கு அனைவரும் ஏற்கத் தகும் காரணத்தை முன்வைக்கிறார் ரவி அவர்கள். தமிழின் தெய்வத்தன்மையை முதன்முதலாக நிறுவத் தலைப்பட்ட வகையில் கம்பனை முதலில் பாரதி குறிப்பிட்டிருப்பதாகச் சொல்கிறார்.

தமிழ், தமிழ்க் கவிகள் என சுவைத்துத் திளைக்கும் பாரதி தம் சமகால மக்களுள் சிலர் ஜாதி எனும் ஏற்றத்தாழ்வுகளால் எத்தகு இடர்ப்பாட்டுக்கு ஆளாகின்றனர் என்பதை மனக்குமுறலோடு நோக்குகிறார். பாரதியைக் குறித்துக் கூறுகையில்

ஒருபுறம் பார்த்தால் அவனொரு மாக்கவி
மறுபுறம் பார்த்தால் அவனொரு மகரிஷி
கவிதையில் பார்த்தால் அவனொரு தீப்பொறி
முழுவதும் பார்த்தால் அவனே பாரதி

என்பது எத்தனை உண்மை. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் எனும் பாரதியின் வரிகளை மகாவாக்கியமாக, பாரதி வேதத்தின் சாரமாகக் குறிப்பிடுகிறார். பாரதியின் சமகால கவிஞர்களுள் பாரதிபோல் ஏழை எளியவர்களுக்குக் குரல் கொடுத்த கவிஞர் வேறு யாருமில்லை என்பதை மிக உறுதியாக ரவி பதிவு செய்துள்ளார் கட்டுரையாளர்.

கம்பனின் கவித்திறம்

நீக்கமற நிறைந்த பரம்பொருளைக் கம்பன் தன் கவிதையில் கட்டமைத்திருக்கும் சிறப்பைக் கம்பனின் கடவுள் எனும் கட்டுரையில் காட்சிப்படுத்தியுள்ளார். பரம்பொருள் குறித்தான நாவுக்கரசர், சித்தர்கள், திருவள்ளுவர் மற்றும் பாரதியின் கருத்துகள் மின்னல் கீற்றுகள் போல் கட்டுரை எங்கும் ஓடிக்கொண்டே, ஒளி வீசிக் கொண்டே இருக்கின்றன.

ராமனின் செயல்கள் சில பின்னாளில் சிலரால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டன. பல கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன. அவற்றிற்கெல்லாம் பதில் அளிக்கும் வகையில் ராமனின் ஆளுமை குறித்த தீர்க்கமான பார்வையை முன்வைக்கிறார் நூலாசிரியர். இவரின் முன்னெடுப்புகள் வாதத்திற்கு வேண்டுமானால் ஒத்து வரலாம் என்று எளிதில் புறந்தள்ளிவிட முடியாதவை. சமயம், தத்துவம், மெய்ப்பொருள் குறித்த ஆழமான பார்வையைப் பரந்த புரிதலுக்கான ஒளிவீச்சை மனதில் ஓடவிடும் வகையில் தொடங்கி நகரும் இக்கட்டுரை மானுடம் வெல்லும் எனும் புள்ளியை மையமிட்டு சுழல்கிறது. இக்கட்டுரையில் கம்பனுடைய உணர்ச்சித் துடிப்பை நம்மால் நன்குணர முடிகிறது. "கவிஞன் தன் கவிதையில் வெளிப்படுத்தும் உணர்ச்சி அக்கவிதைக்கு உயிரூட்டி விடுகிறது. கவிஞன் செய்யும் இதே வேலையைத்தான்

கவிதைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தம் மாணாக்கர்களிடம் உண்டாக்க வேண்டும். இவ்வாறு கவிஞன் பாத்திரங்களின்மீது ஏற்றிக்கூறும் உணர்ச்சிகளையும் மாணாக்கர்களிடையே எழச் செய்துவிட்டால் அதுவே ஆசிரியர் தம் கடமையில் கண்ட வெற்றி[3]" என்னும் கூற்றுக்கு மிகப் பொருத்தமானவர் சொற்களுக்குள் ஏறிக்கொள் என்னும் இந்நூலின் ஆசிரியர். ஏனெனில் வாசகர்களாகிய நம்மைக் கம்பனின் கவித்திறனில் மூழ்கச் செய்துவிடுகிறார்.

கண்ணனும் பாரதியும்

பாரதியின் படைப்புகளில் கண்ணனைச் சீடனாகச், சேவகனாகக், காதலியாகத், தோழனாகப் பலவேறாக நோக்கும் பார்வை நம் அனைவரையும் கவர்ந்த ஒன்று. இதில் எத்தனையோ மரபு மாற்றங்களைப் புகுத்தியவர் பாரதி. பரம்பொருளை நாயகனாகக் கொண்டு, அடியார்கள் தம்மை நாயகியாகக் கொண்டு எழுதிய தமிழ்ப்பாடல்கள் பல பக்தி இலக்கியங்களில் உண்டு. ஆயினும் யாரும் கண்ணனை சேவகனாகக் கருதிப் பாடவில்லை. இப்படி இருக்கையில் கண்ணனைச் சேவகனாகச், சீடனாக, தோழனாகக் கருதிப் பாடியது கவிதையிலே மரபுப் புரட்சி எனக் குறிப்பிடுகிறார் ம.ரா.போ. குருசாமி. ஆக கண்ணனை எல்லாமாக நோக்கியவர் பாரதி என்பது புலனாகிறது. அதில் கண்ணன் என் சற்குரு என்பதைக் கட்டுரையின் கருவாகக் கொண்ட நூலாசிரியர் குருவுக்கும் சீடனுக்குமான உறவை அழகுற விளக்குகிறார். மேலும் குரு என்பதற்குத் தரும் விளக்கமும் குருவின் வகைகள் குறித்துக் கூறும் பான்மையும் ஏற்படுத்தும் புரிதலும் ஆழமானது. இலக்கு எது என்பதைச் சுட்டிக் காட்டுபவர் ஜகத்குரு; இலக்கை அடைய வழி என்ன என்று சொல்லித் தருபவர் ஞானகுரு; அந்த வழியில் கூடவே வந்து கைபிடித்து நடத்திச் செல்பவர் சற்குரு என்பதற்குச் சிறந்ததொரு விளக்கமாக இது திகழ்கிறது.

கவிஞன் நுகரும் கவி இன்பம்

ஒரு கருத்தை அறிவுப்பூர்வமாகவோ அல்லது உணர்ச்சிப்பூர்வமாகவோ வெளிப்படுத்தும் வடிவம் எது என்பது குறித்த அறிமுகம், அதன் தொடர்ச்சியாக ஒரு சொல் மனதில் ஏற்படுத்தும் ஈடுபாடு, அது குறித்தான இலக்கியச் சுவை என

நீள்கிறது 'செஞ்சொற் கவி இன்பம்' கட்டுரை. நளவெண்பா, திருக்குறள், முத்தொள்ளாயிரம், கம்ப ராமாயணம், பாரதி மற்றும் பாரதிதாசனின் கவிதை, புறநானூறு என்று இலக்கிய படைப்புகளில் இடம்பெற்றுள்ள பாடல்களில் குறிப்பிட்ட ஒரு சொல்லை அடிப்படையாகக்கொண்டு அதுகுறித்த சுவையை, அச்சொல் உணர்த்தவரும் பொருள் வளத்தை எடுத்துரைக்கும் முயற்சியில் இலக்கிய வாசகனின் மனதில் புதைந்துள்ள சுவைமிகு பாடல்களை மனக்கண்ணில் வரிசையாக அணிவகுக்க வைக்கின்ற கவி இன்பம் என்பதைக் கடந்து செம்மை தன்மையை முன்வைக்கும் இவரின் பார்வையின் சுவையுணராது அத்தனை எளிதில் இதனை எவரும் கடந்து விட இயலாது. சான்றாக, புறநானூற்றின்

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே (புறநானூறு)

இந்தப் பாடலில் இடம்பெற்றுள்ள முல்லையும் பூத்தியோ என்னும் சொல் உணர்த்தும் பொருளாழம் இழப்பின் வலியுணர்த்தும் ஆற்றல்மிக்கது.

தெள்ளமுதாம் திருக்குறள்

உலகப் பொதுமறையாம் திருக்குறள் உரைக்கும் மெய்ப்பொருள் காண்ப தறிவு கட்டுரையில் முன்பு ஒரு புள்ளியாகத் தொட்டுச் சென்ற மெய்ப்பொருள் குறித்து விரிவாய் அறியும் வண்ணம் அது குறித்து ஆராய்ந்த அறிஞர்களையும் அவர்கள் எடுத்துரைக்கும் கூற்றுகளையும் மிகத் தெளிவாய் எளிமையாய் எடுத்துரைத்து நம்மைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வதாய் அமைகிறது இக்கட்டுரை. தேல்ஸ், டிமாக்ரிடஸ், டேகார்ட், சாக்ரடீஸ், ஜான் டால்டன் போன்ற தத்துவஞானிகளின் கூற்றுகள் ஆக்கப்பூர்வமான விவாத பொருட்கள் ஆனதன் புரிதல் ஏற்படுகிறது. இதனூடாக தத்துவ ஆராய்ச்சியும் அறிவியல் ஆராய்ச்சியும் கை கோர்த்து நடை போடுகின்றன என்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் கட்டுரையில் செயல், தொழில் என்ற இரு சொற்களுக்கான பொருள் புலப்பாட்டைத் திருக்குறள் வழி புலப்படுத்துகிறார். 'முந்தி இருப்பச் செயல்' 'மன்னுயிர்க் கின்னா செயல்' 'செயற்கரிய செயல்' என்னும் திருக்குறள்களின் வழி செய்க அல்லது செய்கை என்ற பொருளையும் 'அனைத்தே புலவர் தொழில்' 'அஞ்சல் அறிவார் தொழில்' 'பேணாமை பேதை தொழில்' என்னும் குறட்பாக்கள்வழி தொழில் என்பது தொடர்ந்து செய்யப்படும் வினையைக் குறிக்கிறது எனும் பொருளையும் உணர்த்துகின்றார். உலக உயிர்கள் அனைத்தும் பிறக்கையில் சமமாகப் பிறக்கவில்லை எனினும் அவற்றைச் சமன்செய்து சீர்தூக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை நூலாசிரியர் வலியுறுத்தும் முன் செய்தொழில் வேற்றுமை என்பதற்கு அவர் தரும் விளக்கம் மிகச் சிறப்புடையது. செய்யும் தொழில் உயர்ந்ததோ குறைந்ததோ அதில் காணலாகும் நேர்மைதான் அப்பணியைச் சிறப்புடைத்தாக்குகிறது எனும் அவரின் கூற்று முற்றிலும் உண்மை. தாம் உணர்த்த வரும் கருத்தியலுக்கு அரண் சேர்க்க ஒரு சொல் குறித்தான தேடல் மற்றும் இலக்கியத்தில் அது வகிக்கும் இடம் என்ன என்பதை உணர்த்துகிறது இக்கட்டுரை. இந்தப் புரிதல் பசுமரத்து ஆணியாகப் பதிந்து விடும் தன்மைத்து. இதேபோல் எண்ணற்ற அரிய கருத்துகளின் பெட்டகமாக, வாழ்க்கை வழிகாட்டி நூலாக விளங்கும் திருக்குறள் உணர்த்தும் மாசிலனாதல், புகழ், பிறவி நோய், மனக்கவலை, அவா அறுத்தல் எனும் கருத்தாழம் கொண்ட குறட்பாக்களின் மேன்மையை உணர்த்துகிறது திருக்குறளில் வீடுபேறு எனும் கட்டுரை. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க இதை நாம் நோக்கலாம்.

இந்த உலகில் பிறந்த மனித உயிர்கள் ஒவ்வொன்றும் விரும்பக்கூடிய ஒன்று புகழ். ஆனால் அது எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதற்கு எல்லாப் புகழும் இறைவனுக்கே எனும் கட்டுரையில் ஆசிரியர் தரும் விளக்கமும் எடுத்துக்காட்டு பாடல்களும் அவற்றில் அவர் உரைக்கும் சொல் ஆழமும் கட்டுரையை வாசிக்கும் பொழுதையும் தாண்டி நம் மனதில் தொடர்ச்சியான சிந்தனையைத் தூண்டிய வண்ணமே உள்ளது என்பதை மறுக்கவியலாது.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

என்னும் குறளுக்கு இவர் தரும் விளக்கம் ஆய்வு பார்வைக்கு ஓர் அருமை சான்று.

பாரதி கலைக் கழகத்தால் வளர்ந்த கவிஞர்களின் கவிதைகள் சிலவற்றை என்ன தவம் செய்தேன் கட்டுரை வாயிலாக அறிமுகம் செய்கின்றார். தன் குருவாக, வழிகாட்டியாகத் திகழ்ந்த பாரதி சுராஜ் குறித்தும் அவரின் பங்களிப்புகள் குறித்தும் கூறியுள்ளார். எங்கோ இருக்கிற ஒருவரைப் பாராட்டத் துடிக்கும் நம்மில் பலருக்கு பல நேரங்களில் அருகில் இருப்பவரின் அருமை கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் இதிலிருந்து விலகி வேறுபட்டு நிற்கிறார் வானவில் ரவி அவர்கள்.

நாட்டு விடுதலைக்கு முன்னுரிமை தந்த பாரதி அதேநேரம் வேல்ஸ் இளவரசருக்கு எழுதிய வரவேற்பு, லார்டு கர்ஸனது மனைவியின் மறைவுக்கு செலுத்திய இரங்கல் போன்றவை மேலோட்டமாக நோக்கினால் ஆங்கிலேய அரசுக்கு எதிரான அவரது கருத்துக்கு முரணாகத் தோன்றும். எனினும் அதனை வேறு கோணத்தில் நோக்க வேண்டிய தேவையை முன்வைப்பதின் ஊடாக பாரதியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகிறார் நூலாசிரியர். பாரதியின் உயரிய கருத்துகளும் சமத்துவ எண்ணங்களும் தன் நிலைப்பாட்டில் கொண்டிருந்த உறுதிப்பாட்டையும் தவறெனின் சுட்டிக் காட்டத் தயங்காத துணிவையும் மீண்டும் மீண்டும் முன்னெடுப்பதன் வாயிலாக பாரதி குறித்த நம் மனப் பிரதி இன்னும் ஆழமாக வேரூன்றுகிறது. சுப்பிரமணிய பாரதி ஓர் யுகத்தின் குறியீடு ஆகிறார் என்றும், சமூக, கால, தள இயக்கங்களின், சுழற்சியின் மையக் கோடு அகஸ்மாத்தாகக் கிடைத்த பாரதி என்ற தனிநபர் வழி ஓடுகிறது என்றும் அறிகிறோம் என்னும் தமிழவனின் கூற்று ஈண்டு நோக்கற்குரியது5.

நம் வாசிப்புத் தளத்தின் பரவலாக்கத் தேவையை உணர்த்துவதாக அமைந்துள்ளன வானவில் ரவியின் கட்டுரைகள். புதிய நோக்கிலான வாசிப்பனுபவத்தை இந்நூல் வழங்குகின்றது. "வாழத் தெரியாவிட்டாலும் உலகை வாழ்த்தப் பிறந்தவன் கவிஞன்" என்னும் வரிகள் எண்ணிலா இலக்கியவாதிகளின்

வாழ்வியலை மனக்கண்ணில் கொண்டு நிறுத்துகின்றது. உலகளாவிய சிந்தனையும் சமத்துவக் கருத்துகளும் சமன்செய்து சீர்தூக்கிப் பார்க்கும் நோக்கும் உடைய நூல் நிலைபெற்றிருக்கும் என்பதற்கு இந்நூல் சான்று. சொற்களுக்குள் ஏறிக்கொள் நூலின் வாசிப்பு அனுபவங்கள் அடுத்த தளத்திலான ஆய்வுக்கு விதையாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உசாத்துணை நூல்கள்

- சிற்பி பாலசுப்பிரமணியம் – மகாகவி பாரதியார் கட்டுரைகள் ஜெயகாந்தன் (தொகுப்பாசிரியர்கள்), சாகித்திய அகாதெமி, 2015 (மூன்றாம் பதிப்பு) ப. 1 மேற்படி, ப.228
- ந. சுப்புரெட்டியார் – கவிதை பயிற்றும் முறை, பாரி நிலையம், முதல் பதிப்பு, 1983. ப.9
- குருசாமி ம.ரா.போ. (ப.ஆ.), பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், 2001 (மூன்றாம் பதிப்பு)
- காவ்யா சண்முக இருபதாம் நூற்றாண்டு கவிதை தமிழவன் கட்டுரைகள் 1 – சுந்தரம்(தொ.ஆ.) காவ்யா வெள்ளிவிழா சிறப்பு வெளியீடு, 2006(முதற் பதிப்பு), ப.283

❖

சொல்லாததைச் சொன்ன கவிஞர்

•

ரூ.கிறிஸ்டோபர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஜேகே கலை அறிவியல் கல்லூரி கோயம்பத்தூர் 641105

ஆய்வுச் சுருக்கம்:

சொல்லாததைச் சொன்ன கவிஞர் என்னும் இக்கட்டுரை கவிஞர் வானவில் கே.ரவி அவர்களின் சொன்னாததும் சொல்லாததும் நூல் இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பதிமூன்று தலைப்புகளில் அவர் எழுதிய நூற்தொகுதி பல்வேறு இலக்கியங்களில் உள்ள சில சிக்கலான தொடர்களை எடுத்துக்கொண்டு அதற்கான விடைகளை தக்க சான்றுகளுடன் நடைமுறைக்கேற்ப விளக்கம் தருகிறார். ஆனாலும் அவர் கையாளும் உத்தி, தான் சொல்வதே சரியென்று நிறுவாமல் அதனை வாசகர் சிந்தனைக்கு விட்டுவிடுகிறார். அவர் கையாண்ட செய்திகள் இக்கடுரையில் ஆய்ந்து விளக்கப்பெறுகிறது.

முக்கிய வார்த்தைகள் : வானவில் கே ரவி, சொன்னதும் சொல்லாததும்,

முன்னுரை

முன்பு என்றோ ஒரு நாள் நான் எழுதிய கவிதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

காணலும் கேட்டலும்
தெரிதலின் அடிப்படை தேடலும் நாட்டமும்
அறிவுக்கு அடிப்படை
தெரிதலும் அறிதலும்
புரிதலின் அடிப்படை
தெரிந்து அறிந்து புரிந்துணர்க..

இந்தக் கவிதைக்கு இலக்கணமாக நான் கண்டது கவிஞர் வானவில் கே. ரவி அவர்களைத் தான். அவருடைய நூல்களில் ஒன்றான சொன்னதும் சொல்லாததும் எனும் நூலினைப் படிக்கும் போது எனது கூற்று விளங்கும். இலக்கியத் தொடர்களைத் தெரிந்து கொண்டு அதற்கான வேறு பார்வைகளை நடைமுறை விளக்கங்களைக் கொண்டு விவரிக்கிறார். தெளிவுற அறிந்து தெளிவுதர மொழிந்து சிந்திக்கவும் வைக்கும் பாங்கு இங்கு போற்றத்தக்கது. அத்தகு சிறப்பன நூல் இங்கு விரிவாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறுகிறது.

இராமாயண முத்து:

கவிகளில் உயர்ந்தவனாக விளங்குகின்ற கம்பரின் படைப்புகளில் மிக உயர்ந்தது இராமாயணம். வடமொழி இராமாயணத்திற்கும் தமிழ் இராமாயணத்திற்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக் கூறி அதற்கான சான்றுகளையும் விளக்குகிறார். தெய்வம் மானிட உரு தாங்கி வந்தாலும் மனிதனுக்குரிய ஒழுக்க நியதிகளைத் தலைமேற்கொண்டு வாழும் தன்மையை விளக்குகிறார். தெய்வமே ஆயினும் மானுடத் தன்மையைத் தாங்கி நடந்த காரணத்தால் தான் வால்மீகி இராமயணத்திலும் கம்பராமாயணம் உயர்ந்ததாகக் காட்டுகிறார்.

இராமன் மீது அவரது பக்தி அவரது எழுத்துக்களாலேயே விளங்குகிறது. அதன் காரணமாக இராமன் என்னும் பெயரே மந்திரமாக அமைந்ததைக் காட்டுகிறார். அதன் காரணமாக அமரர்க்கெல்லாம் அமரனாகிய தன்மையை விளக்குகிறார். அதனைக் கண்டுகொண்டவன் சுக்ரீவன் என,

"தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறியிப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ
ஆறு கொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே"
(நட்புக்கோள் படலம் 19)

இராமன் என்னும் ஈரெழுத்து மந்திரத்தின் உயர்வை விளக்குகிறார். இத்தனைக் காரியங்களை வெளிப்படுத்துவதன் காரணமாகவே கம்பர் கவிச்சக்கரவர்த்தியாக உயர்ந்ததாகக் காடுகிறார்.

மும்மைசால் உலகுக்கெல்லம் மூல மந்திரத்தை முற்றும்
செம்மைசேர் நாமம் தன்னை கண்களில் தெரியக் கண்டேன்
(க.ராகி.கா4117)

இம்மையே இராமவென் றிரண்டெழுத்தினால்
(க.ரா பா.காதிரு.படபா.எண்16)

என்ற அடிகள் முலமாக இராம நாமத்தின் சிறப்பை விளக்கிக் காட்டுகிறார்.

அனுமனைச் சொல்லின் செல்வர் என்று சிறப்பிப்பர். ஆனால் அனுமன் பேசியதாக தனது காவியத்தில் அதனை இயற்றும் கம்பரே சொல்லின் செல்வர் என்னும் சிறப்பிற்குரியவர். அனுமன் சீதையைக் கண்டுவந்த செய்தியினை இராமனுக்குச் சொன்ன செய்தியினை விளக்கும் செய்தியினை அதற்கு எடுத்துக்காட்டுவர். இராம வரலாறு மிகப்பெரியது என்பதால் கம்பர் எவ்வளவு சிக்கனாமாகச் சொற்களைப் பயன்படுத்தமுடியுமோ அவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்தியுள்ளார். அப்படியும் பத்தாயிரம் பாடல்களைத் தொட்டுவிட்டன.

கவிஞர் வானவில் இரவி அவர்கள் இராமன் மீது கொண்ட பற்று அவர்தம் கட்டுரைகள் மூலம் நன்கு அறியப்படுகிறது. அவருக்கு தமிழ் இலக்கியங்கள் மீது மட்டுமல்லாமல் வடமொழி இலக்கியங்களிலும் அவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவும் புலப்படுகிறது.

சைவச் செறிவு:

சொன்னதும் சொல்லாததும் என்னும் இந்நூலின் முதல் முழுப்பாதி இராமகாதையின் சிறப்புகளைக் கூறும்போது, அவர் வைணவத்தில் மட்டும் அறிவு பெற்றவரோ என்ற எண்ணம் தோன்றினாலும் அவருடைய ஏனைய கட்டுரைகளைக் காணும்போது அவர் சைவத்திலும் ஆழங்கால்பட்டவரென்பது அவைகலைப் படிக்கும்போது விளங்குகிறது.

"தென்னாடுடைய சிவனே போற்றி"

என்பதற்குத் தென்னாட்டை இருப்பிடமாகக் கொண்ட சிவன் என்பது பரவலான கருத்தாக இருந்தாலும், இரட்டைப் புலவர்கள் தங்களுடைய பாடல் ஒன்றில்

"ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா
(தனிப்பாடற் திரட்டு

சிவன் ஆடல்வல்லானாகி தென்புலியூராகிய பொன்னம்பலத்தில் ஆடுகின்ற (அதாவது தெற்கில் ஆடுகின்ற) காரணத்தாலும் அவனை தெற்கில் ஆட்டம் –உடைய – சிவன்–தென்னாடுடைய சிவன் என்றாயிற்றோ என்று எடுத்துக்காட்டுகிறார்.

இலக்கியச் செழுமை

இதுவரை கவிஞர் வானவில். கே இரவி அவர்களின் பத்திச் செழுமை எடுத்துக்காட்டப்பெற்றது. அவர் சமய இலக்கியங்களில் மட்டுமல்லாமல் பரவலாகத் தமிழ் இலக்கியங்களில் ஆழங்கால்பட்டவரென்பது இந்நூலை வாசிக்கின்றபோதே விளங்கும். ஒரு எழுத்தாளன் என்பவன் எழுதுவதிலும் அதிக நேரத்தை வாசிக்கப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எழுதும் பேனாவை வாசிப்பு என்னும் அரம்கொண்டு கூர்படுத்த வேண்டும். அப்போது தான் அறிவு என்னும் மை வற்றாமல் வந்து விழும்.

அப்படி வாசிப்பு என்பது மேலோட்டமாக அமையாமல் ஆழமாக அமையவேண்டும். ஆனால் தற்காலத்தில் எழுத்தாளர்கள் என்றும் கவிஞர் என்றும் தங்களைச் சொல்லிக்கொள்பவர்களும் எழுதிக்கொள்பவர்களும் தங்கள் சொல் பொருளைச் சிந்திக்க விரும்புவதில்லை. அப்படி வாசித்தாலும் ஆழ வாசிப்பதில்லை. ஆனால் கவிஞர், அவர்கள் வாசிப்பதில் எவ்வளவு கவனம் செலுத்துகிறர் என்பது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட அவருடைய இந்த ஒரு நூலினை வாசிக்கும்போதே தெரிகிறது.

சிலப்பதிகாரத்தை வாசித்திருப்போம். சிலப்பதிகாரத்தின் சிறப்புகளை, அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை, மன்னர்களின் ஆட்சிமுறைகளை ஆய்ந்திருப்போம். ஆனால் சோழர்களின் தலை நகரமாக இருந்தது ஆரூரா புகாரா என்று இதுவரை யாரும் ஆய்வுக்கு எடுத்திருக்கமாட்டர்கள். அதற்கான விவாதத்தையும் சிலம்பில் இருந்தே தொடங்குகிறார். சான்றுகளை பெரியபுராணத்திலும் எடுத்தியம்பிச் சோழர்களின் தலைநகராக இருந்திருக்கவேண்டியது புகாரிலும் ஆரூரே என்பதைக் காட்டுகிறார்.

கண்ணகியின் சீற்றம் மதுரையை அழித்தது என்பது பரவலான கருத்து. ஆனால் அதெப்படி அவளது கோவம் எதற்காக சாதாரண மக்களைக் கொள்ளவேண்டும் என்னும் ஐயம் எழும் அதற்காக அவர் எழுதிருக்கும் விளக்கக் கட்டுரை மிகச்சிறந்த ஆய்வாளர் இவர் என்பது வெளிக்காட்டுகிறது.

தொல்காப்பியத்தின் பாயிரத்தில் விவாதிக்கும் கட்டுரையில் ஐந்திரம் குறித்தும் அதங்கோட்டாசான் குறித்தும் கூறிச் சிந்திக்கவைக்கிறார்.

முடிவுரை

கவிஞர் வானவில் இரவி அவர்களது சொன்னதும் சொல்லாததும் நூலில் அவரது ஆய்வுக்கட்டுரைகள் குறித்த இக்கட்டுரையில் அவர்களது ஆய்வுத்திறம், அவரது வாசிப்புத்திறம் ஆகியன விளக்கப்பெற்றன. இன்னும் அவர்களுடைய நூல்கள்

வாசிக்க வாசிக்க இன்பம் தரகூடியதாகவும் அறிவு வளர்ச்சிக்குப் பாலம் விடக்கூடியதாகவும் அமைகிரது என்பது வெளிப்படை.

துணைநூல் பட்டியல்

1. முதன்மைச் சான்றாதாரம்

துணைமைச் சான்றாதாரங்கள்

சொன்னதும் சொல்லாததும், ரவி.கே.வானவில்

1. கம்பராமாயணம், விஜயா பதிப்பகம், கோவை.
2. சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.
3. தனிப்பாடல் திரட்டு, இராமநாதபுர சமஸ்தானம்,
4. 12 ஆம் திருமுறை, பெரிய புராணம், தருமபுர ஆதீனம் வெளியீடு, தருமபுரம்
5. பாரதியார் பாடல்கள், விஜயா பதிப்பகம், கோவை.
6. தொல்காப்பியம், தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

❖

‘வானவில்’ கே. ரவி – அறிவியல் தமிழாக்கி

•

முனைவர் ப. கொழந்தசாமி,
அரசினர் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

மொழியும் இலக்கியமும் மனிதனால் மானுட மேன்மைக்காகப் படைத்துப் பயன்கொள்ளப்படுகின்ற சமூக நுகர்பொருட்கள். அதனால், காலத்துக்கேற்ப மனிதத் தேவை மாறுபடும்போதும் வளரும்போதும் புதிய படைப்புகள் தோன்றுகின்றன. அவ்வகையில் பாட்டிலக்கியத்தோடு, பல்துறை சார்ந்த உரைநடைப் படைப்புகள் காலந்தோறும் தமிழில் ஆக்கப்படுகின்றன. இலக்கியம் மனித வாழ்க்கையை இனிமையாக்கும்; உளவியல் சிக்கல்களைக் களைய வழிகாட்டும்; அறிவியல் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி வளமையாக்கும். அத்துடன், இந்த நூற்றாண்டில் கருவிகளின் பயன்பாடு மிகுவதால் அவை பற்றிய புரிதிறன் இன்றியமையாததாகின்றது. எனவே இத் துறைகள் தொடர்பான புதிய படைப்பாக்கங்கள் நிறையத் தேவைப்படுகின்றன. புறநானூறு, திருக்குறள், திருமந்திரம், சித்தர் பாடல்கள் முதலியவற்றில் அறிவியல் குறிப்புகள் தென்படினும், இக்காலத்தில் தமிழில் ஆக்கப்படுகின்ற அறிவியல் விளக்க நூல்கள், மானுட மேன்மைக்கு அடித்தளமிடுவதோடு, மொழி வளமைக்கும், இளைஞர் மேம்பாட்டிற்கும் உறுதுணையாகின்றன. அந்நிலையில் பலதுறைப் படைப்பாளுமை வாய்ந்த ‘வானவில் கே. ரவி’ தமிழில் அறிவியல் நூல் படைத்திருப்பதையும் அறிவியல்

தமிழ் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதையும் விளக்குவதாக இக் கட்டுரை அமைகின்றது.

அறிவியல் தமிழாக்கி

கடந்த சில நூற்றாண்டுகளாக, வாழ்க்கையை வளப்படுத்துகின்ற அறிவியல் கண்டுபிடிப்புகள் வெளியிடப்படுகின்றன. அறிவியல் வளர்ச்சி தொழில்நுட்ப மேன்மைக்கும் பயன்பாட்டுப் பொருட்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் வாய்ப்பாகின்றது. அறிவு + இயல் = அறிவியல்; அதாவது மனித அறிவால் கண்டறியப்பட்ட கண்டுபிடிப்புகளையும் செயல்முறைகளையும் அவற்றால் விளைந்த பயன்களையும் விளக்குவது. கண்டுபிடிப்புகளை ஒப்பவே அறிவியல் வளர்ச்சி வரலாற்றில் கண்டுபிடிப்பாளர்களும் முதன்மையுறுகின்றனர். மின்சாரவியல் துறையினரும் மின்சாரத்தை நுகர்வோரும் 'வாட்ஸ்','வோல்ட்', 'மின்மாற்றி', 'மும்முனை இணைப்பு', 'மின் கடத்தி' முதலிய துறைச்சொற்களையும் அவற்றைக் கண்டறிந்து செம்மைப்படுத்தியோரையும் குறித்து அறிவது தேவையாகின்றது. பெரியசாமித் தூரன், வா.செ. குழந்தைசாமி, மணவை முஸ்தபா ஆகியோரும் 'கலைக்கதிர்,' 'தமிழ் வளர்ச்சிக் கழகம்,' 'யுனெஸ்கோ' போன்ற நிறுவனங்களும் இதற்காகப் பாடுபட்டன. ஆயினும் தேவை அதிகம்; ஆர்வலர்கள் முனையவேண்டும் என்பதனை உணர்ந்த வல்லமையாளர், 'வானவில்' கே. ரவி "இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு" என்னும் நூலை 2002இல், சென்னை 'வானவில் பண்பாட்டு மைய' வெளியீடாக வெளியிட்டுள்ளார். இதனால் 215, 216 – 217ஆம் குறட்பாக்களில் திருவள்ளுவர் பாராட்டுகின்ற குடி தண்ணீர்க் கிணறாகவும் மருத்துவப் பயன்மிக்க மரமாகவும் 'வானவில்' கே. ரவி அறியப்படுகின்றார்.

293 பக்கங்களில் நீண்டுள்ள இந் நூலை ஒட்டுமொத்த அறிவியல் வரலாறாக ஆக்க விழைந்ததாகவும் ஆயினும் இயல்பியலின் அடிப்படைச் செய்திகளையே தந்துள்ளதாகவும் முன்னுரையில் (ப.01) ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரின் இந் நன்முயற்சியினால் தொடர்ந்து, அறிவியல்தமிழ் செழிப்புறும்; ஆக்கம் பெருகும் என நம்பலாம். மேலும், '08–12–1996 அன்று, 'வானவில்' பண்பாட்டு மையத்தின்' பாரதி விழாவில், மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களுக்குப் 'பாரதி விருது' வழங்குகையில் ஏற்பட்ட கிளர்ச்சியால் இந் நூலை எழுதத் தொடங்கி, 1999இல், நிறைவுறுத்தியதாகச் சுட்டியுள்ளார்

(ப.04). இதனால், வல்லோரைப் போற்றுவதும் பின்பற்றுவதும் 'வானவில்' கே ரவியின் பாராட்டத்தக்க உயர்பண்பாக அமைவதை அறியலாம். பள்ளிப் பருவத்தில் அறிவியல் வேட்கையை ஊட்டிய நண்பர் சு.ரவிக்கு இந் நூலை அன்புப் பரிசாகப் படைத்துள்ளார்.

தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல்
அடியனேற்கு இவையனைத்தும் உதவுவாயே

என்னும் பாரதியாரின் விழைவுப் பாடலுடன் நூல் தொடங்குகின்றது. தமிழ்வாணி, 'வானவில்' கே. ரவிக்கு இவை அனைத்தையும் அருளுகின்றாள் என்பதனை, இவரது படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. தமிழன்னையின் தன்னருளால், ஆசிரியரின் மானுடப் பற்றுடனான படைப்பாளுமை மேன்மேலும் மிளிரட்டும்!

நூலின் முன்னுரை, முதல் திருக்குறளுடன் தொடங்கி, நூலை அறிமுகப்படுத்துகின்றது. வெப்பம், ஒளி போன்ற ஆற்றல்களும் அவற்றினால் மாற்றங்களுக்கு உட்படுகின்ற பொருள்களும் வெவ்வேறல்ல; ஒன்றே என்று கண்டறிந்ததால், இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி வாய்ப்பானதை (ப.01) ஆசிரியர் விளக்கியுள்ளார். இந்த இயல்பியல் வளர்ச்சியின் தலைமைக் கதைமாந்தர் 'அணு' என்று குறித்துள்ளார். நடையெளிமை, மொழிவளம், கலைச்சொல் ஆட்சி ஆகிய தளங்களில் இந் நூல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கின்றது. கலைச்சொற்களைத் தானாக உருவாக்கித் தகுதிப்படுத்தியதாக ஆசிரியர் (ப.03) உரைத்திருப்பது, நன்றியோடு பாராட்டத்தக்கதாகும்.

"விறுவிறுப்பான கதைபோல அறிவியல் வரலாற்றைச் சொல்ல முற்பட்டால், அது படிப்போர்க்குச் சுவையாக அமையக்கூடும். ஆனால், நூலின் அளவு இருமடங்காகப் பெருகலாம். மேலும் படிப்பவர் கவனம் சிதறிவிடலாம்" (ப.04) என்று குறித்துள்ளதை நினைவில்கொண்டு, நூலைப் படித்தல் நன்று.

இவ்வாறாக, நூலின் முன்னுரை, ஆசிரியரின் குரலாக இலங்குகின்றது. தொடர்ந்து முப்பது தலைப்புகளில் இயல்பியல் கட்டுரைகள் விரிகின்றன. இவற்றின் தலைப்புகள் படிக்கத் தூண்டுவன; தன்விளக்கப் பாங்கின: போற்றுதற்குரியன. முதல் கட்டுரை 'ஒலிக்குறிப்பு விளக்கம்' பற்றியது. நிறுத்தற் குறியீடுகளைக் கையாண்டு பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்த, 'வானவில்' கே. ரவி கூறியுள்ள புத்தாக்க

முன்மொழிவுகள் கலைச்சொல்லாக்கத்தில் கருதத்தக்கன. இரண்டாவது இயலில், 'தேர்வு', 'அமைவு', 'துணிபு', 'சோதனை', 'தீர்வு' என்ற ஐந்து படிகளையும் கடந்து சென்றுதான் எந்த அறிவியல் கண்டுபிடிப்பும் நிகழமுடியும் என்று (ப.08) வகுத்துரைத்துள்ளார்.

பெரிய அறிவியல் முன்னேற்றத்திற்குக் காரணமான 'எக்ஸ்' கதிர் கண்டுபிடிப்பு வெளியான 01–01–1896ஆம் நாளைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டு, இந்நூல் எழுதப்படுவதாகச் சுட்டி, அதற்கான காரணத்தை, 'முன்கதைச் சுருக்கம்' என்னும் மூன்றாம் இயலில் ஆசிரியர் விவரித்துள்ளார். அன்று தான், 'எக்ஸ்' கதிர்களைக் கண்டுபிடித்ததை ரொண்ட்கென் உலகுக்கு அறிவித்ததாக (ப.08) குறிப்பிட்டுள்ளார். ஆங்காங்கே பட விளக்கங்கள் தரப்பட்டுள்ளதால், கருத்துத் தெளிவு இயல்பாகின்றது. இயல்களின் இறுதியில் தரப்பட்டுள்ள ஆய்வுத் தகைமைசால் குறிப்புகள் நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதுடன் மேல்விளக்கத்திற்கும் வாய்ப்பாகின்றன. இந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கும்போது இயல்பியல் வரலாற்றை எளிமையாக அறியமுடிகின்றது.

நூலின் நிறைவுரையாக அமையும் வியப்புரையில், (ப. 236) "அறிவியல் வரலாற்றுக்கு முடிவுரை எழுத முடியாது; அதன் வளர்ச்சியைக் கண்டு வியக்கவே முடியும்!" என்று பாரதியாரின் கவிதையை மேற்கோளாக்கி, ஆறு வினாக்களை வினவி முடித்துள்ளார்.

பின்னிணைப்பாக வரலாற்றுப் படிகள், தமிழ் ஆங்கிலக் கலைச்சொற்கள், ஆங்கிலம் – தமிழ்க் கலைச்சொற்கள், அறிவியல் அறிஞர்களின் பட்டியல் – புகைப்படங்கள் ஆகியன முறைப்படி பட்டியலிடப்பட்டுள்ளன. இவை பயன்மிகு குறிப்புகளாகும்.

'வானவில்' கே. ரவி, பன்முகப் படைப்பாளுமை மிக்கவர்; மொழிபெயர்ப்பாளர்; பாரதி பரப்புநர்; பண்பாட்டுச் செல்வர் என்பதோடு, 'அறிவியல் தமிழாக்கி' என்பது மேலும் பெருமைக்குரியதாகும்; ஆசிரியரது அறிவியல் தமிழாக்க முயற்சி வளரவேண்டும்! இவர் அமைத்துள்ள பாதை மொழி / அறிவாக்க வளமைக்கு வாய்ப்பானது.

❖

'வானவில்' கே.ரவியின் பன்முகத்திறன்

•

சகோ.பி.சகாய மேரி,
தமிழ் உதவிப் பேராசிரியர், செர்வைட் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டி.இடையபட்டி, தோகைமலை, கரூர் – 621 313

ஆளுமை என்பது தனிமனிதனின் உடலியக்க அறிவு, சிந்தனை, மனவெழுச்சி, சமூக நீதி ஆகிய பண்புகளின் கூட்டமைப்பு ஆகும். ஒருவர், தமக்கே உரிய நடத்தை, சிந்தனை ஆகியவற்றை நிச்சயிக்கின்ற அவரது உள்ளநிலையையும் மற்றும் உடல் சார்ந்த அமைப்புக்களின் கூட்டமைப்பையும் ஆளுமை என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இதனடிப்படையில், 'வானவில்' கே.ரவியின் தமிழ்ப் படைப்புகளை வாசித்து, யோசித்து, நேசித்து, சுவாசித்து ஒரு மாத காலமாக ஒரு வாசகனாகப் பயணித்து அனுபவித்ததை ஆய்வுக் கட்டுரையில் எடுத்து மொழிய விரும்புகின்றேன்.

'வானவில்' கே.ரவியின் பன்முகத்திறன்

தனிமனிதனின் திறன்கள் சமுதாயத்தின் சொத்து;கலைகளின் வித்து. இவ்வாறு, சமுதாயத்தின் சொத்தாக கலைகளின் வித்தகராகத் திகழும் 'வானவில்' கே.ரவி அவர்கள், கவிஞர், வழக்கறிஞர் என்பது சமூகம் அறிந்தது. அவர்களது

படைப்புகளில், 'காற்று வாங்கப்போனேன்' மற்றும் 'சொன்னதும் சொல்லாததும்', என்ற புத்தகத்தின் வழியாக இவற்றையும் தாண்டி, நான் அறிந்தவை,

- அவர் ஒரு பாடகர்
- ஒரு நடிகர்
- ஒரு சொல்லின் செல்வர்
- ஓர் இல்லறத்தை நல்லறம் ஆக்குபவர் என்பவையாகும்!

இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட, பண்பில் சால்புடைய, கவிஞரின் பண்புகளைச் சான்றுகளுடன் எடுத்து மொழிவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

கவிஞரின் வரலாறு

1953 ஆம் ஆண்டு, சென்னையிலுள்ள மருத்துவவமனையில் அன்புப் பெற்றோருக்கு அருமை மகனாகப் பிறந்து, 'இரவீந்திரநாத் தாகூர் போல, பெரிய கவியாக வருவான்' என்று ஆசீர்வதிக்கப்பட்டு, மாமாவால் ரவி என பெயர் சூட்டப்பட்டு,'இட்டும் தொட்டும் குலாவியும், வாழ்ந்தவர். நந்தினி, காளிதாஸ் என்னும் பாசமான சகோதரி சகோதரனின் பாசப்பிணைப்பில் வாழ்ந்து, பன்னிரண்டு வயதிலேயே நடிப்புக்காக முதல் பரிசு பெற்றவர். பதின்மூன்று வயதிலிருந்து இலக்கியங்களை வாசிப்பதில் ஆர்வம் கொண்டு, பல கவிதைகளையும் படைத்தவர். கல்லூரிப் படிப்பில், சட்டம், தத்துவம் போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர். தொழில் ரீதியாக வழக்கறிஞராக இருந்தாலும், வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் இலக்கியங்கள் படைப்பதில் ஆர்வம் காட்டுபவர். தந்தை விஸ்வநாதம் மற்றும் மாமாவின் உற்சகாத்தால் இதழ்கள், அச்சகம் போன்றவற்றை அமைத்துச் செயலாற்றுபவர்.

1994இல், 'வானவில்' பண்பாட்டு மையம் ஏற்படுத்தி, வருடந்தோறும் பாரதியின் விழாவின் போது, பாரதியைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் சென்று, சிறந்த படைப்பாளிகளுக்குப் பாரதி விருதும் வழங்கிக் கொண்டிருப்பவர். 'கானல் நீர்', 'காற்று வாங்கப்போனேன்', 'இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு' போன்ற தமிழ் நூல்களையும் நான்கு ஆங்கில நூல்களையும்

படைத்துள்ளார். இப்படைப்புகளில், நான் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டவை, 'காற்று வாங்கப்போனேன்' மற்றும் 'சொன்னதும் சொல்லாததும்' என்ற நூல்களாகும்.

'வல்லை.காம்' என்ற மின்னிதழில் எழுதிய தொடர்கதை கவிஞரின் சுயசரிதையாக, கவிதை பயண அனுபவத் தொடராக, 'காற்று வாங்கப்போனேன்' என்ற புத்தக வடிவில் நம் மத்தியில் பயணிக்கின்றது.

மானிட வாழ்வில் அறிவாளன் சிறந்தவனா? நல்மனம் படைத்தவன் சிறந்தவனா? என்ற விவாதத்திற்குள் ஈடுபட்டால் அறிவாளனே! நல்மனம் கொண்டவனே! எனப் பல்வேறு மேற்கோள்களைச் சுட்டிக் காட்டி இனிமையாகப் பேசலாம். ஆனால், அறிவும் மனமும் ஒருங்கிணைந்த ஆளுமைத் தன்மை கொண்டவன் மட்டுமே போற்றுதலுக்கும் வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரியவனாக இருப்பான்!

'காற்று வாங்கப்போனேன்' என்ற தொடர்கதைப் புத்தகத்தில், புத்தி சிகாமணியை அறிவுக்கும் மனோன்மணியை மனதிற்கும் குறிப்பிட்டு, இரண்டு மணிகளையும் ஒரு மாலையில் கோத்துக் கட்டியங்காரர்களாக, அதாவது தொடரின் நோக்கும் போக்கும் பற்றி முன்னறிவிப்பவர்களாகப் படைத்துள்ளார். கதாபாத்திரர்களாகக் கவிஞர் ரவி, அவர்களது மனைவி, இரண்டு பெண்பிள்ளைகள், பெற்றோர், உற்றார் உறவினர், நெஞ்சுக்கு நெருக்கமான அறிஞர் பெருமக்களையும் படைத்திருக்கின்றார்.

கவிஞருக்கும் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்திற்கும் உள்ள உறவை நினைத்துப் பார்த்தால், ஔவை அதியமான் நட்பே மனக்கண்முன் நிழலாடுகின்றது. அந்த வகையில், 'சொன்னதும் சொல்லாததும்' என்ற திறனாய்வுப் புத்தகத்தை திரு கு.அ.ராஜாராம் அவர்களுக்குக் காணிக்கை ஆக்கியது, இலக்கிய உலகில் இருவருக்கும் உள்ள ஈடுபாட்டை வெள்ளிடை மலையாக்குகின்றது.

பாடுவதில் வல்லவர்

கவிதை அவரது உயிர் மூச்சு என்றால், பாடல் எழுதுவதும் இசை அமைப்பதும் அவரது இதயத் துடிப்பு.

நான் உன் பாடல், நீ உன் தேடல்
இடையில் ஏன் இந்த மௌனங்கள்

ஆம்! இது ஓர் மெகாத்தொடரின் கதைப்பாடல். தந்தையை இழந்த பிள்ளை தனது வாழ்க்கைப் பயணத்தின் தேடலில் தந்தையைக் கண்டுபிடித்தும் 'அப்பா'என்று அழைக்க முடியாத சூழலில் குழந்தையின் மனக்குமுறல்கள் மௌன கீதங்களாக ஒலிக்கின்றன. இந்த பாடலைக் கேட்டு இரசித்துக் கொண்டிருந்த சூழலில்தான், கவிஞரின் புத்தகமும் எனது கரங்களில் தவழ்ந்தது.

1990ஆம் ஆண்டு, ஏலகிரி மலையில் உள்ள சாந்தாமணி 'லாட்ஜில்' பெரிய பட்டாளத்தோடு தங்கியிருக்கும் போது புழுக்கம் தாங்காமல் காற்று வாங்க வெளியே வந்தது; வெளியில் வந்ததும் காற்று வராததால் 'ப்ருந்தாவணி' இராகத்தில் கவிஞர் பாடிய பாடல் வரிகளைப் பதிவு செய்கின்றேன்.

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுபுட்டுக் காத்து வந்து தந்தனத்தோம் என்று தாளம்
போடணும்
பாடணும் நான் பாடணும்,

என்பதே அந்தப் பாடல். கவிஞர் பாடியதும் காற்றுச் சுழன்று சுழன்று வீசியதாக தனது புத்தகத்தில் பதிவு செய்திருக்கின்றார். ஆம்! கவிஞர் பாடும்போது இயற்கையும் இணக்கமாக பதில் கொடுப்பதே அவரது திறனுக்குச் சான்றாக அமைகின்றது.

பாடல் பாடுவதில் வல்லவராக இருப்பதனால்தான் என்னவோ, பாரதியை ஜதிப்பல்லக்கில் ஏற்றி, விழா எடுத்து, ஜதிக்கு ஜதி சேர்க்கும் இன்னிசை நாதனாகத் திகழ்கின்றார். சோபனா அம்மையாரின் பயிற்சியால், இசையையும் கவிதையையும் நெஞ்சின் இரு கண்களாகக் கொண்டவர் என்பது அவர் தம் படைப்புகள் வழிப் புலனாகின்றது.

நடிப்புத் திறன்

நாடகம் என்ற படைப்பு நாவல், சிறுகதை ஆகியவற்றை விடக் காலத்தால் முந்தியது; இலக்கிய வடிவங்களில் காலத்தால் மூத்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான், சென்னையில், அதாவது 1976 – 1977 ஆம் ஆண்டில்

மிகுந்த வரவேற்பு இருந்ததாகக் கவிஞர் தமது நூலில் பதிவு செய்திருக்கின்றார். அந்த நாட்களில், அம்மையார் சோபனாவுடன் இணைந்து, ஒரு நாடகத்தினை. "கனவுக்கும் நிழல்கள் உண்டு" என்ற தலைப்பில் படைத்து வழங்கியது, அவரது பதிவுகள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

"நாடகத்தைப் படிக்கும் போது, படைத்தவர் நினைவுக்கு வருவதில்லை; படைத்தவரையே மறந்து விடுகின்றோம்", என்று மு.சுதந்திரமுத்து, 'படைப்பிலக்கியம்' என்ற புத்தகத்தில் பதிவு செய்திருக்கின்றார். படைப்பாளன் மறந்திடா வண்ணம், படைப்பாளர்களே நாடகத் தலைவனாகவும் தலைவியாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பின்னாளில் அந்த நாடகம் 'பார்வைக்கு என்ன பொருள்' என்ற தலைப்பில் அரங்கேறியுள்ளது.

இவ்வாறு, நாடக இலக்கியத்தில், தனிப் பெறும் இடத்தைப் பிடிக்க, தன்முனைப்போடு செயல்படுவதற்கு சிறப்பான பின்புலமும் உண்டு. 'வானவில்' கே.ரவி அவர்களது தந்தை பெண் வேடம் புனைந்து நடித்து பலருடைய உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்று 'லேடி விஸ்வம்', என்ற பெயருடன் வாழ்ந்திருக்கின்றார். அப்பனுக்கு தப்பாமல்பிறந்த தவப்பிள்ளை போல, சிறுவயதிலேயே 'மான்விழி' என்ற நாடகத்தில் நடித்து முதல் பரிசையும் 1968ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 'நந்திவர்மன்' நாடகத்தில் நந்திவர்மப் பல்லவனாக நடித்து, அரங்கத்தில் பலத்த கரஓசையையும் பெற்றார் என்பது 'காற்று வாங்கப்போனேன்', என்ற படைப்பின் வழியாகத் தெள்ளத் தெளிவாகப் புலனாகின்றது. அத்தகைய உணர்ச்சிப் பெருக்கை, மெய்ப்பாடுகளை, கடந்த வாரம் நடைபெற்ற காணொளிக் கருத்தரங்கில் கண்டுகளித்தேன். தம்பியோடும் மங்கையோடும் இராமபிரான் காட்டுக்குப் போகும் அழகைச் சொல்ல வந்த கம்பனின் பாடலை விளக்கிச் சொல்லும் முயற்சியில், கவிஞர் வெளிப்படுத்திய மெய்ப்பாடுகள், என் நெஞ்சில் நீங்காத நிழற்படமாகக் காட்சியளித்தன.

வெய்யோனொளி தன்மேனியி(ன்) விரிசோதியி(ன்) மறையப்
பொய்யோவெனு மிடையாளடு மிளையாளடு போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவ(ன்) வடிவென்பதொ ரழியாவழ குடையான்

என்ற பாடல் வரிகள் வழியாக, 'வடிவு' என்பது ஓர்அழியா அழகு என்று பேசும் கம்பனின் உணர்வை எளிமையாக, இனிமையாக, படக்காட்சியாகப் பதித்த பண்பாளர். ஆம்! பாடல் வரிகளின் பொருள், படித்தோர்க்குப் புரியும். நான் பதிவு செய்ய விரும்புவதோ, கவிஞரின் உணர்ச்சி பெருக்கில் எழுந்த மெய்ப்பாடுகளை மட்டுமே. தொல்காப்பியர் சுட்டிக் காட்டும் எண்வகை மெய்ப்பாடுகளையும், ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்தும் திறமையாளர்!

'சொல்லின் செல்வர்'

தமிழ் இலக்கியங்களில் அழகான சொல்லோவியம் படைப்பவர். இனிய, எளிய நடையில், பேச்சு நடையில், வாசகரின் மனதைக் கவரும் வகையில் எழுதும் ஆற்றல் படைத்தவர். கம்பராமாயணக் காப்பியத்தின் உயிர் நாடி சுந்தர காண்டம். அதற்குப் பெயர்க்காரணம் கூறும் நாகோஜி பட்டரின் விளக்கத்தைக் கையாளும் விதமே, அவரது சொல்வன்மையைப் புலப்படுத்துகின்றது.

சுந்தரரே சுந்தரி லங்கா சுந்தரரே கதா
சுந்தரே சுந்தரி சீதா சுந்தரமே கிம் நா சுந்தரம்
(அழகோ அழகு இலங்கை
அழகுக் கழகு சீதை
அதனினும் அழகவள் சிறையிருந்த காதை
எதுதான் இதிலே அழகில்லை சொல்!)

என்ற பாடல் வரிகள் வழியாக, இராமாயணத்தின் மிக அழகான பகுதியாக, சுந்தர காண்டம் விளங்கிடுதலால், அழகான பகுதி என்ற பொருளில் அதற்குச் 'சுந்தர காண்டம்' என்ற பெயரை வான்மீகி சூட்டினார். 'சொல்லின் செல்வன்' 'சுந்தர காண்டத்தின் கதாநாயகன்' என்றெல்லாம் அழைக்கப்படும் அனுமன் போன்று, 'வானவில்' கே.ரவி அவர்களும் சொல்வன்மை மிகுந்தவர். 'சொல்லாளுமையும் சொற்கட்டுக்கோப்பும் எந்தக் கவிஞனுக்கும் இன்றியமையாதவை' என்று அவர் பதிவு செய்திருப்பதே அவரது ஆளுமைக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

இல்லறத்தை நல்லறமாக்குபவர்

இல்லறமானது,

வா' என்ற அழைப்பை ஏற்று
'வாழ்'என்ற கட்டளைச் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து
'வாழ்க்கை' என்னும் பயணத்தைத் தொடர்ந்து
'திரு' என்னும் அடைமொழி பெற்று
'மணம்' எனும் வாசனையில்
'திருமணம்' எனும் பந்தத்தில்.

இணையும்; நல்வாழ்வின் கட்டமைப்பு ஆகும்.

1971ஆம் ஆண்டு, சோபனா அம்மையாரின் சந்திப்பால் எழுந்த காதல் உணர்வு, அன்பின் அலைகளாகி இன்பமயமான வாழ்வைத் தொடங்கிய அனுபவத்தைக் 'காற்று வாங்கப்போனேன்' என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளமையைப் பார்க்கும் போது, எவ்வளவு அடக்கமாக, இலட்சிய நோக்கோடு வாழ்வைத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. சிந்தனைக் கோட்டம் என்ற குழு ஆரம்பித்தவுடன், கவிஞர் எழுதிய பாடலைச் சோபனா அம்மையார் பாடியதாகப் பதிவு செய்துள்ளதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

சிந்தனைக் கோட்டம் வாழ்க
செந்தமிழ்; மணமே சூழ்க
சேர்ந்திருக்கும் யாவருமே பாச உணர்ச்சியில் ஆழ்க

என்ற பாடல் வரிகள் வழியாகவே அவர்களது பாசம் தொடர்ந்து, காதல் வளர்ந்து, அன்பு மலர்ந்து வாழ்வில் நெருக்கத்தை உண்டாக்கி இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

1973ஆம் ஆண்டு, திருமணம் என்னும் பந்த உறவில் இணைந்த இவர்களது வாழ்வுமுறைக்குள் பூத்தது இரு மலர்கள். ஆம்! இரண்டு பெண் பிள்ளைகளுக்குப் பெற்றோரான இவர்கள், இன்பம் துன்பம் அனைத்திலும் உடன் இருந்து, திறமைகளை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து, அறச்செயல்களை வாழ்வாக்கினார்கள் என்பதனை அவர்களது வாழ்க்கைப் பயண அனுபவம் பறைசாற்றுகின்றது.

மானிடப் பண்புகள் முழுவதையும் தன்னகத்தே கொண்ட கவிஞர் அவர்கள், பக்தியில் ஊறித் திளைத்ததனால்தான், பார்போற்றும் மாமனிதராகப் புகழப்படுகின்றார் என்பதனைச் சான்றுடன் கூறி, எனது ஆய்வு கருத்தை நிறைவு செய்கின்றேன்.

'சிந்தனைக்கோட்டம்' என்ற குழுவில், கூட்டு வழிபாடு நடத்தும் போது, செபத்தில் கவிஞர் கூறும் வெண்பா,

ஒற்றுமை ஓங்கிட உள்ளிருள் நீங்கிட
நற்றவை நாளும் நனி சிறக்கக் கற்றவர்க்
கண்வாழும் நாதனே காப்பென்று பற்றினோம்
பண்வாழும் நின்றன் பாதம்,

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, இம்மானிட குலம் முழுவதும் ஒற்றுமையில் ஓங்கி, நற்றவம் செய்து, பாருலகில் பண்பட்டுத் திகழ்ந்திடவும் இறையிடம் அன்புகொண்டு இன்பமயமான வாழ்வு வாழ்ந்திட வாழ்த்தி நல்லோரின் ஆசீர் வேண்டி இவ்வாய்வுக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

❖

தீக்குள் விரலை வைத்தால் அழிக்கும் அருளும்

•

முனைவர் ப.சங்கீதா,
தமிழ் உதவிப்பேராசிரியர், (சுயநிதிப்பிரிவு), வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திண்டல், ஈரோடு – 638 012.

பாரதியின் விழுமியங்களைப் பார் முழுதும் போற்றவேண்டும் என்ற எண்ணத்தில், கவிஞராக, வழக்கறிஞராகத் திகழ்ந்து வரும் 'வானவில்' கே.ரவியின் பாரதியின் பாடல்களில் வெளிப்பட்டுள்ள சித்தாந்தங்களை, முற்கால இலக்கியங்களோடு பொருத்தி ஆழ்ந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

அவ்வகையில், தமது ஆய்வுகளில், நிறைவான மானுட விழுமியங்களைப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார். மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்திட, சங்ககாலம் முதல், பாரதிக்குப் பின்வந்த கவிஞர்கள் வரை, பலர் உணர்த்திச் சென்றுள்ள வகையில், 'வானவில்' கே. ரவி 'கானல் நீரைக் கடந்தும்' உருவாக்கிய படைப்புகளில் ஒன்று, 'தீக்குள் விரலை வைத்தால்'. தீக்குள் விரலை வைத்தால் அழிக்கும், அருளும் என்பது இங்குப் பொருண்மையாகிறது.

இயற்கையை மையமாகக்கொண்டு உருவாக்கபட்ட நெருப்பினைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்திய மனித இனம், தான் வணங்கும் தெய்வங்களோடு இணைத்து, அக்னியைத்

தனிப்பெருந் தெய்வமாகவும், அழிக்கும் ஆயுதமாகவும், தென்கிழக்குத் திசையின் நாயகனாகவும், உலகத்தைச் சூழ்ந்துள்ள ஐம்பெரும் பூதங்களின் வரிசையில் மூன்றாம் நிலையிலும் வைத்து வழிபட்டு வருகிறது, அவ்வகையில், நெருப்புக்குரிய தலமாக விளங்குவது திருவண்ணாமலை. வரலாற்றுக்கு முந்தைய காலங்களில், மனித முயற்சியால் உருவாக்கப்பட்ட நெருப்பு, வரலாற்றுக் காலத்திலும் அதற்கு பிந்தைய காலங்களிலும் முக்கியக் காரணியாக இடம்பெற்றுள்ளது.

நெருப்பின் வேறு பெயர்கள்

நெருப்பு, "அக்னி, தீ, செந்தீ, வேள்வித்தீ, தீச்சுடர், தீபச்சுடர், உள்ளரி, சுடர், சுவாலை, ஒள்ளரி, எரிஅழல், புகைஅழல், ஒள்அழல், சுடலை, முளிஎரி" முதலிய பெயர்களைக் கொண்டு விளங்குகிறது. இவை, அக்னிப்புராணம் சார்ந்த சொற்களாகும். தீ என்பது சமூகம் சார்ந்த சொல்லாகும்.

நெருப்பின் இன்றியமையாமை

அக்னியை, வேள்விகளும் யாகசாலைகளும் அமைத்து வழிபடுவதைப் புராண இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தெய்வ வழிபாட்டின்போது, கற்பூரச்சோதியாகவும் உணவு சமைக்கும்போது, நெருப்பாகவும் மனமாசு நீக்கும் சடங்கில், தீபச்சுடராகவும் தீயசக்திகளை விலக்குகையில், கொள்ளிக்கட்டையாகவும் பயன்படுத்துவதை இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இன்றைய நிலையில், நெருப்பு இல்லாமல் மனித வாழ்க்கையை நினைத்துப் பார்த்தல் இயலாத ஒன்றாகும்!

தீ அருளும்; அழிக்கும்

தீ இறைமையின் வெளிப்பாடாக அருளையும் சீற்றத்தின் வெளிப்பாடாக அழிவையும் தருகிறது. இறைமையுணர்வோடு தீயைக் கையாளும்போது தீ சுடுவதில்லை. இதனால்தான் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" என்று பாடிய பாரதி, "தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா" என்று இனிமையாகப் பாடியுள்ளார். இதே தீ, முறையாகக் கையாளாமல் விடப்படும்போது, இயற்கைச் சீற்றங்கள் தீயசக்திகளாக அழிவையும் தருகின்றன. வெகுண்டெழுந்த பாரதியும் கூட,

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ!
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

(பாரதியார் தனிப்பாடல்கள் -7)

என்று பாடியுள்ளார். தழலாகப் பெருகி, ஒரு காட்டையே அழிக்கக் கூடியது தீ! அதுவே ஒரு சிறிய சுடராகவும் இருந்து ஒளிதரக்கூடும். சிறுபொறியாகவும் தோன்றக் கூடும். ஒரு நெருப்புப் பொறியை வைத்து ஒரு காட்டையே எரித்து அழித்து விடலாம் என்கிறார் பாரதி!

அழித்த தீ

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் கையறு நிலையில் பாடும்போது துன்பமான சூழ்நிலையில்,

கரிபுற விறகின் ஈம ஒள்அழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று **(புறநானூறு-231)**

என்று நெருப்பு உடலை சுட்டு எரிப்பதுபோல மனதினையும் சுட்டெரித்திருக்கிறது. அறிவுடை நம்பி பாண்டிய நெடுஞ் செழியனைப் பற்றிப் பேரெயில் முறுவலார் எனும் புலவர்,

செய்ப வெல்லாஞ் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப்புகழ் வெய்யோன் கலையே

(புறநானூறு-239)

எனும் புறப்பாடலில், இறந்த உடலைச் சுடுவதற்கும் பல்வேறு இடங்களில் ஈமச் சடங்கு செய்யவும், நெருப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் புறப்பாடல்கள் உணர்த்துகின்றன.

தீ நாவினால் சுட்ட வடு

திருவள்ளுவர் நெருப்பின் தன்மையைக் கூறி, நெருப்புச் சுட்டால் புண் ஏற்படும் என்பதனையும் அதுபோலத் தீ நாவினால் கூறிய சொற்கள் மனத்தில் வடுபோல் நின்று தீமைசெய்யும் என்பதனையும்,

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்டவடு (குறள்-129)

என்று தீயின் ஆபத்தினைப் பதிவாக்கியுள்ளார்.

கூடாநட்பு

பிணிப்பான நட்பில்லாதவரது தொடர்பு, வைக்கோலில் பற்றிய தீப்போல் முதலில் பெருகுவது போலத் தோன்றிப் பின்பு சிறிதுநேரமும் நிலைத்திராமல் சுடும் என்பதைப்

பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒரு பொழுதும் சொல்லாதே நந்தும் (நாலடியார்-234)

என்ற நாலடியார் பாடலில், தீயானது ஆபத்தினை வெளிப்படுத்துவதற்காகவே குறிப்பிடப்பெற்றுள்ளது.

தீயினால் வீட்டைக் கொளுத்தும் திறம்போல என்பதிலிருந்து, அந்தக் கால கட்டத்தில் பல இல்லங்கள் தீயில் எரிந்து உள்ளன என்பதை,

தீ இல்லை ஊட்டும் திறம் (பழமொழி நானூறு-59)

என்ற பழமொழி நானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது. போரில் வென்ற அரசர்கள், தாங்கள் கைப்பற்றிய நாட்டைத் தீயிட்டு அழிக்கின்றனர்.

முன்போர் யுகத்தில், திரிபுரம் எரிக்க விரிசடைக் கடவுள் ஏவியது ஒரு தீ. பிறகோர் யுகத்தில், இராம தூதனாய்ச் சென்ற அனுமன், இலங்கை நகரையே தீக்கிரையாக்க ஏவியது இன்னொரு தீ. தன்னைக் கருவுயிர்க்கச் செய்து வளர்த்த அன்னையோ, அடிவயிற்றிலே தீவார்த்தாள். உயிர் நீங்கிய அவள் உடலில், தான் இன்று இடும் தீ, மூண்டெரியட்டும் என்பதைப் பட்டினத்தடிகள்,

முன்னை யிட்ட தீ முப்புரத்திலே
பின்னை யிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை யிட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே (பட்டினத்தார் பாடல்கள்)

என்கிறார். வெவ்வேறு ஊர்களை, வெவ்வேறு சூழல்களில் எரித்த தீ, இன்று என் அன்னையின் உயிரில்லாத உடலை எரிக்கிறது என்று இப்பாடலில் பதிவுசெய்துள்ளார்.

மதுரையை எரித்த தீ

இன்றளவிலும் மக்கள் மனதில் நீங்காமல் இடம்பெற்று இருப்பது, சிலம்பில் கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கியது ஆகும்.

இடமுலை கையால் திருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள்

(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை-43-47)

என்று கோவலன் கொலையுண்டதும், பாண்டிய மன்னனிடம் நீதிகேட்டுக் கோபம் தணியாமல், தனது இடது மார்பினைத் திருகி எரிகின்றாள். அப்போது அக்னிதேவன் கண்ணகிமுன் தோன்ற,

பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவிஎனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க

(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை-53-55)

என்று ஆணையிட்டு, கண்ணகி மதுரையை எரித்த நிகழ்வை இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார். பாரதி குறிப்பிட்ட அக்கினிக்குஞ்சு, நல்லோரை விட்டுத் தீத்திறத்தாரை அழித்து, வெந்து தணிந்தது.

அருளிய தீ

வாழக்கூடிய நெறிபிறழாது, முன்னோர் காட்டிய நன்னெறியில், இறையுணர்வோடு, வணங்கி வாழ்பவருக்குத் தீ அழிவினைக் கொடுக்காமல் அருளிச் செய்கிறது.

முன்னோர்கள், அக்னி வழிபாட்டின் மூலம் தெய்வங்களை இன்புறுத்தி, மழையை வருவித்தனர். அந்தணரால் ஒரு மழையும் அரசரால் ஒரு மழையும் கற்புடைய பெண்டிரால் ஒரு

மழையும் எனமாதம் மும்மாரி பெய்யும் (திரிகடுகம்–42) என்று, நம்பிக்கைகொண்டு, அக்கினியை மக்கள் வழிபட்டமையை,

அந்திஅந்தணர் செந்தீபேண

என்று குறிஞ்சிப்பாட்டு பகர்கிறது.

பத்தினிக்கு அருளிய தீ

மணிமேகலையில் சாதுவன் இறந்ததைக் கேட்ட ஆதிரை நல்லாள், 'தீவினைப் பயனால் என் கணவன் இறந்தான். அவன் சென்ற இடத்திற்கு நானும் செல்வேன் என்று கூறித் தீயில் ஏற ஆதிரை எரிந்து சாம்பலாகாது, கொண்ட கோலம் மாறாமல், உயிருடன் வெளிப்பட்டபோது ஆதிரைக்குத் தீ அருளியிருக்கிறது.

விளக்கொளி ஓரிடத்தில் நுழைய, அவ்விடத்திலுள்ள இருள் மறைவதுபோல, ஒருவனது நல்வினையாகிய தவத்தின்முன் பாவம் தீர்ந்துபோகும் என்பதனை,

விளக்குப் புகஇருள் மாய்ந்துஆங்குஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம் (நாலடியார்-51)

என்றவாறு குறிப்பிடுகிறது நாலடியார். அந்தணர்கள் வேள்வித் தீ பரப்பி, சமயமும் நாடும் மக்களும் நன்னெறிபெற விழைந்தமையை,

வேதவேள்வியர் வேள்வித் தீயென

(பெரியபுராணம், கண்ணப்ப நாயனார் புராணம்-147)

என்ற பாடலடி விளக்குகின்றது. இந்த உலகை ஈன்ற அன்னை உமையாள், தன் பெருமனையாகிய உலகில் ஏற்றும் தீபங்கள் சூரியன், சந்திரன், அக்னி ஆகியவையாகும். (பெரியபுராணம், திருக்குறிப்புத்தொண்டர் புராணம்–60)

நாவுக்கரசருக்கு அருளிய தீ

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து மீண்டு, சைவ சமயத்திற்குத் திரும்பியபோது, சமணர்கள் திருநாவுக்கரசரைச் சுடுகின்ற சுண்ணாம்பு உலையில் தள்ளினர். அப்போது

திருநாவுக்கரசர், "சுடுகின்ற சுண்ணாம்பு உலையும் எனக்குச் சுகமே தரும்!" என்ற பொருளில்,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

(திருநாவுக்கரசர் தேவாரம்)

என்று இறைவனை வேண்டி நின்றபோது, இறைவன் அருளிச்செய்தார். இவ்வாறு பல்வேறு காலகட்டத்திலும் அருளிய தீயினை நம் முன்னோர்கள்,

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடில் அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோக மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

(பெரியபுராணம் - 357)

என்று போற்றி வணங்கியுள்ளனர். மேலும்,

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் சுடருமாகி

(பெரியபுராணம், தில்லைவாழ்-01)

என்று இறைவன் சோதியாகவும் சுடராகவுமே வணங்கப்படுகிறான் என்கின்றனர் நமது அருளாளர்கள்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

(திருநாவுக்கரசர் தேவாரம் - 99)

என்று இல்லத்திலே விளக்கேற்றி வழிபட்டால் இல்லத்திலும் உள்ளத்திலும் உள்ள மாயைகள் நீங்கி நலமும் வளமும் பெருகும்.

இவ்வாறு அழிவும், அருளும் தந்த தீ, சுட்டும், குளிர்ந்தும், எரித்தும், புலவர்களிடம் படாதபாடுபட்ட தீ, பாரதியிடமும் வசமாகச் சிக்கிக்கொண்டது என்கிறார் 'வானவில்' கே.ரவி.

மனத்திலே சக்தியாக
வளர்வது நெருப்புத் தெய்வம் (பாரதியார் பாடல்கள்)

என்று தீயைத் தன் அகத்தில் சுடர்விட்டெறியும் தெய்வ வடிவாகவே பாரதி கண்டுதொழுதான்.

உயிரை விட்டும் உணர்வை விட்டும்
ஓடிவந்தோமே - ஐயோ நாம்
துயிலுடம்பின் மீதிலும் தீ
தோன்றி விட்டானே அம்மாவோ

என்று காலை புலரும் வேளையிலே, அசுர உணர்வுகளை வேள்வித் தீ விரட்டி அழித்துவிடக் கடவுளர் வந்து கை கொடுத்தனர் என்கிற வரிகளை உறுதி செய்துள்ளார் 'வானவில்' கே.ரவி.

தீ, தீயவற்றை அழிக்கிறது. நலமுடையாருக்கு அருளுகிறது. நெருப்பினைச் சோதியாகவும் சுடராகவும் வழிபடும்போது, ஆன்மாவிலுள்ள ஆணவமலம் ஒடுங்கி மறைகிறது. தீ தொட்டால் சுடும்; பணிந்தால் அருளும்.'

❖

வானவில் ரவியின் மொழித்திறன்

•

சங்கீதா

உலகில் பல்லாயிரக் கணக்கான மொழிகள் வழங்கப்படுகின்றன. அம்மொழிகளைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பேசுகின்றனர். ஒரு மொழி பேசும் மக்களிடையேயும், மொழியானது வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றது. இந்த வேறுபாடு உலகில் வழங்கப்படும் மொழிகள் அனைத்திற்கும் பொதுவானது. மேலும் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திலும் ஒரு மொழி, வாழும் அப்பகுதி மக்கள் எடுத்தாளும் விதத்தாலும் வேறுபடுகின்றது. தமிழ் இலக்கியங்களைக் கற்று திறனுரைக்கும் நிலை காலந்தோறும் இருந்து வந்துள்ளது. ஒரே இலக்கியத்தைப் பற்றிப் பல்வேறு விதமான திறனுரைகள் எழுதப்பட்டுள்ளன. அத்திறனுரைகள் எழுதிய எழுத்தாளரின் மொழித்திறனை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. அவ்வகையில் சிறந்த இலக்கியத் திறனாய்வாளரான வானவில் ரவி அவர்களின் மொழித்திறன் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

வானவில் கே ரவி.

ரவி அவர்கள் ஒரு வழக்கறிஞர். சிறந்த இலக்கிய விமர்சகர்; கவிஞர்: கட்டுரையாளர் எனப் பன்முகத் தோற்றம் கொண்டவர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியவர். சட்டம், தத்துவம், சமூகவியல், இலக்கியம் எனப் பல துறைகளிலும் இவர் பல படைப்புகளைத் தந்துள்ளார். வானவில் பண்பாட்டு மையம் என்னும் அமைப்பின் மூலம் 25 ஆண்டுகளுக்கு மேலாகத்

தமிழ்ப் பணியாற்றி வருகின்றார். மேலும் பாரதியின் மீது மிகுந்த பற்று கொண்டவர். அதனால் ஆண்டுதோறும் பாரதியாருக்கு விழா நடத்தி பாரதியின் சிலையை ஊர்வலமாக எடுத்துச் செல்பவர். சொன்னதும் சொல்லாததும் என்பது வானவில் ரவியின் இலக்கிய விமர்சனங்கள் அடங்கியத் தொகுப்பு நூலாகும் இத்தொகுப்பில் 13 கட்டுரைகள் அமைந்துள்ளன இந்நூலாசிரியர் பாரதியின் மீது மிகுந்த பற்று கொண்டவர் ஆதலால்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை

என்னும் கவியின் வரிகளுக்கு ஏற்ப கம்பரின் ராமாயணத்தையும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தையும் வள்ளுவரின் திருக்குறளையும் பற்றிய கட்டுரைகளும் மேலும் வேறு சில கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. இக்கட்டுரைகள் யாவும் முன்னர் நாம் அறிந்த செய்திகளைப் புதுமை கண்ணோட்டத்துடன் நம்மை நோக்க வைக்கின்றன. சொன்னதும் சொல்லாததும் என்னும் இந் நூலின் தலைப்பே கற்போரை ஈர்க்கும் நிலையில் அமைந்துள்ளது. இந்நூல் ஆசிரியர் இந்நூலிற்கு இப்பெயர் இடுவதற்கான காரணத்தை

இந்த நூலுக்குச் சொன்னதும் சொல்லாததும் என்று நான் பெயர் வைத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு அதே தலைப்பில் கம்பனைப் பற்றி ஒரு கட்டுரைப் பகுதி இந்நூலில் இடம்பெற்றுள்ளது என்பது ஒரு காரணம். இந்நூலில் நான் சொல்ல நினைத்த அதில் சிறிதளவே சொல்லிவிட்டு நான் சொல்லாமல் விட்டதை நிறைவு செய்துகொள்ளும் பணியில் வாசகர்களுக்கு விட்டுவிட்டது மற்றொரு காரணம்

என வானவில் ரவி அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆனால் அவர் சொல்ல நினைத்ததைப் பேரளவிற்கு விடாமல் சொல்லி வாசகர்கள் மனதை நிறைவு செய்து இருக்கின்றார்.

மொழித் திறன் :

மக்களுக்கு மக்கள் நடை உடை பாவனை பேச்சு பழக்கவழக்கம் ஆகியவை வேறுபடும். அதுபோல் மொழித் திறனும் ஆளுகின்ற புலவனின் படைக்கின்ற படைப்பாளரின்

எழுதுகின்ற எழுத்தாளனின் நிலைக்கேற்ப மாறுபடுகின்றது. வானவில் கே. ரவி அவர்களின் கட்டுரைகளை நோக்கும் போது அவருடைய ஆழ்ந்த இலக்கிய வாசிப்பும் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாடும் தெற்றெனத் தெரிகின்றது. அறிந்த பாடல் ஆயினும் இவர் அழகுறச் சொல்லும் நயம் போற்றத்தக்கதாய் உள்ளது. செய்யுளின் கவிதைப் பொருளை நயத்துடன் சொல்லும்போது இவரின் மொழித் திறன் செவ்வனே காணப்படுகின்றது. இவரது நடையில் இனிமையும் எளிமையும் காணப்படுவதால் தொடங்கிய வாசிப்பைத் தொடர்ந்திட மனம் எண்ணுகின்றது. இவர் பாடலின் நயம் கூற எடுத்துரை உத்தியைக் கையாளுகிறார்.

கம்பன் கவி உரைத்ததை வானவில் ரவி உரைத்த நிலை :

தமிழ்க் காப்பியங்களுள் கம்பராமாயணம் ஓர் ஒப்பற்ற காப்பியமாகும் கம்பரின் படைப்பாற்றலும் கவித் திறனும் காணும்தொறும், படிக்கும்தொறும் வியக்க வைக்கும் ஆற்றல் கொண்டவை. அவ்வாறு கம்பரை ரவி அவர்கள் சொல்லும் மிகவும் போற்றத்தக்க நிலையில் உள்ளது. கம்பர் தம் காப்பியத்திற்கு ராமகாதை எனப் பெயரிட்டு இருப்பினும் திருமாலின் ராமாவதாரச் சிறப்பையும் நோக்கத்தையும் வசிஷ்டர் தன் ஞானக் கண்ணால் காண்பது அகநோக்கு உத்தியைக் கடைபிடிக்கிறார். கம்பரின் தொலைநோக்கு உத்தியைத் எடுத்துரை உத்தி மூலம் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். பின்வரும் சான்றின் வழி அவருடைய எடுத்துரை உத்தியின் நுணுக்கத்தைக் காணலாம்

வாக்கு கொடுத்த வண்ணம் திருமாலே ராமநாத கோசலையின் மணிவயிறு கர்ப்பவாசம் இருந்து பிறக்கிறார் கர்ப்பவாசம் இருந்து பிறக்கும் எந்த மனிதனுக்கும் பிறக்கும் முன்புதான் இருந்த நிலை நினைவிருக்காது என்பது இயற்கை நியதி ஒரு மனிதன் மட்டுமே ராவணனை வெல்ல முடியும் என்பது அவன் பெற்ற வரத்தின் நியதி இந்த நியதியைப் படைத்துக் காப்பவன் அவற்றை மீறுவது தகுமோ எனவே இந்த நியதிகளுக்கு உட்பட்டு மனிதனாக பிறந்து தான் திருமால் என்ற உணர்வே இன்றி மனிதனாக வாழ்ந்து மனிதனை கேவலமாக எடைபோட ராவணனின் ஆணவத்தை முறியடித்து மனிதனாகவே போரிட்டு ராவணனை வென்று மானிடத்தின்

வெற்றியைக் கடவுளே வந்து நிறுவிய மகத்தான காவியம் தான் ராமாயணம் என்பது அவருடைய இனிமையும் எளிமையும் கலந்த நடை ஆகும். இதில் கம்பரின்

உலகத்தை இவர் எடுத்துரைக்கும் பாங்கு போற்றத்தக்கது உள்ளது இந்நூலின் பெரும்பகுதி கம்பரின் கவிநயம் சொல்லும் பகுதியாகவே உள்ளது.

மர்மத்தைக் கட்டுடைத்தல்

ராம் அவதாரத்தின் நோக்கத்தை வசிஸ்ட்ட முனிவர் கண்ணில் காண்பதாகக் கூறும் கம்பர் அந்த மர்மத்தைக் கிட்கிந்தா காண்டம் நட்புகள் படலத்தில் தான் கட்டுகின்றார் என்பதை

தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே
மாறி இப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ
ஆறுகொள் சடிலத் தானும் அயனும் என்று இவர்கள்
ஆதி வேறு உள்ள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே

என்னும் பாடலின் வழியே ரவி எடுத்துரைக்கின்றார், இப்பாடலுக்கு அவர் தரும் விளக்கம் மிகவும் சிறப்புடையதாக உள்ளது, முதலடி என்ன சொல்கிறது என வினவி பின் பதில் கூறும் அவர் நடை கற்போரைச் சிந்திக்கத் தூண்டுகிறது, மேற்கூறிய பாடலில் அன்றே என்னும் சொல் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரவி அவர்கள்

ஒரே பாட்டில் ஒரே சொல் தேவையின்றி இருமுறை வருவதைக் கவிஞர்கள் தவிர்ப்பார்கள், இந்த (இறுதியில் வந்த) அன்றே என்ற சொல்லின் பொருள் அப்பொழுதே, ஆம் சிவனும் பிரம்மனும் இந்திராதி தேவர்கள் சென்று திருப்பாற் கடலில் இருந்த பெருமாளிடம் முறையிட்டது தந்த வாக்கை நிறைவேற்ற அவர் மானிடனாக கோசலையின் மணிவயிறு கர்ப்பவாசம் செய்ய புகுந்து அன்றே மானுடம் வென்றது என்பது பொருள், மானிடப் பூச்சி என்று கேவலமாக நினைத்து வரம் கேட்கும்போது மனிதனை அதிலிருந்து ஒதுக்கிய ராவணனின் அகந்தையைத் தகர்த்து மானுடம் வெற்றிபெற்றது ராவண வதம் நடந்தேறிய நாளில் இல்லை.

அதற்கு முன்பே ராமவதாரம் நடைபெற்ற அன்றே மானுடம் வென்று விட்டது, இந்தத் தேவ ரகசியத்தை எவ்வளவு தெளிவாகக் கம்பர் குறிக்கின்றார், எல்லை ஒன்று எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று சும்மாவா சொன்னான் பாரதி

என்று விளக்கம் தருகின்றார், கம்பரின் கவி நயத்தைச் சொல் நயத்துடனும் பொருள் நயத்துடனும் சொல்வதோடு தான் பற்றுக்கொண்ட பாரதியையும் தொட்டுச் என்று கூறியுள்ள விதம் மிகவும் அருமையாக உள்ளது,

கம்பன் சொன்னதும் சொல்லாததும்:

கவி சொல்ல முற்படும் கவிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான உத்திமுறைகளைக் கடைபிடிக்கின்றனர், ஆனால் கவிஞர்கள் அனைவரும் ஒருசேரக் கடைப்பிடிக்கும் உத்திகளில் ஒன்று, தான் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லாமல் வாசகரின் வசம் விட்டு அவனைச் சிந்திக்கத் தூண்டுதல் ஆகும், இவ்வகை உத்தியைக் கம்பர் பல இடங்களில் கையாண்டுள்ளதை ரவி அவர்கள் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார், இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் முடித்து நாட்டிற்கு திரும்பிய உடன் அவனுக்கு முடிசூட்டு விழா நடைபெறுகின்றது,

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணையூர் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்
மௌலி

என்பது அப்பாடல், இதில் யார் யார் என்ன செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இருவரும் கவரி வீச என்பதற்கு இருவர் யார் எனக் கம்பர் குறிக்கவில்லை, அதைச் சொன்னதைக் கொண்டு சொல்லாததை உய்த்துணர வைத்துவிட்டார் கம்பர். இதற்கு ரவி அவர்கள்

ஏன் ஐயா இந்த சிக்கனம்? இலக்குவனும் சத்ருக்னனும் கவரி வீச என்று சொல்லாமல் இருவரும் கவரி வீச என்று

குறிப்பாகச் சொல்லிவிட்டாரே என்று கேட்கத் தோன்றுகிறதா? அதுதான் கம்பன். அதுதான் அவனுடைய கவிதை உத்தி என்று விளக்கம் அளிக்கின்றார். கம்பன் மட்டுமல்ல கவி உரைக்கும் கவிஞர்கள் அனைவரும் இவ்வழியைப் பின்பற்றுகின்றனர். வானவில் ரவி அவர்களின் கவிதை வாயிலாகவே இதற்கு இலக்கணத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சொல்வது ஒரு பாதி அவன் சொல்வதில்லை மீதி
சொல்லியதே சொல்லாததை உணர்த்தும் நீதி

என்று மாக்கவிஞருக்கான இலக்கணத்தை இரவி அவர்கள் வரையறை செய்கின்றார். கவிஞனின் வேலை, வெளிப்பட்டுக் கிடப்பவற்றை உள்ளே வைப்பது திறனாய்வின் வேலை, மறைந்து கிடப்பவற்றை வெளிப்படுத்திக் காட்டுவது என்ற கருத்திற்கேற்ப கம்பர் உள்ளே மறைத்து வைத்ததை ரவி அவர்கள் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார்(திறனாய்வுக் கலை

இலங்கை வெற்பு:

இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு என்பது அனைவரும் அறிந்த ஒரு செய்தியாகும். ஆனால் கம்பர் அதை இலங்கை வெற்பு என்று அனுமனின் கூற்றாகக் குறித்துள்ளார். கம்பனது காப்பிய மூலமான வால்மீகி ராமாயணத்தில் இலங்கை முன்பொரு காலத்தில் மலையாக இருந்து பின் கடலில் அமிழ்ந்து போய் தீவாகக் காட்சி அளித்ததையும் ராமன் கூற்றாக விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கம்பர் இச் செய்தியை மிக எளிமையாக அனுமனின் கூற்றாக வெளிப்படுத்தியுள்ளார். கம்பர் சொல்லி உள்ள விதத்தை ஆசிரியர் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்

விரிவாக வால்மீகியில் சொல்லப்பட்ட ஒரு செய்தியை வெகு அனாயசமாக ஒரே சொற்றொடரில் இலங்கை வெற்பு என்று சொல்லியும் சொல்லாமலும் சொல்லிவிடுகிறான் கம்பன். படிப்பவன் சிந்தித்து பார்த்து உணரும் உத்தியில் கம்பனின் கவித்துவம் மிக்க காண்கிறோம்

என்னும் சான்றின் வழியே கம்பன் சொன்னதையும் சொல்லாமல் விட்டதையும் ரவி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்

மனிதன் மனம் எல்லையற்றது. அவன் தான் நினைப்பதை எல்லாம் சொற்களால் உணர்த்திவிட முடியாது. எனவே தன் கருத்தை வெளிப்படுத்தப் பல்வேறு திறன்களை அவன் கையாளுகிறான். அவற்றுள் சிறப்புமிக்க ஒன்று சிலவற்றைச் சொல்லிச் சிலவற்றை வெளிப்படச் சொல்லாமல் மறைப்பது. (ப சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கிய கொள்கைகள் தமிழண்ணல்)

என்னும் தமிழண்ணலின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கதாய் உள்ளது. இவ்வாறு கம்பர் சொன்னதையும் சொல்லாமல் விட்டதையும் வானவில் ரவி அவர்கள் தன்னுடைய மொழித் திறன் வழியாக மிக நேர்த்தியாக எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

மேற்கூறிய இக்கட்டுரையின் வாயிலாக வானவில் கே. இரவி அவர்களின் மொழித்திறன், மொழியாளுமை, நடைச் சிறப்பு ஆகியவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ரவி அவர்கள் நடை கன்னல் சுவையோடு கற்கண்டு கலந்ததைப் போன்று இனிமையாக இருக்கின்றது. பல்வேறு பணிச் சூழல்களுக்கு இடையிலும் அவர் படைத்துள்ள படைப்புகளைக் காணும் போது இலக்கியங்களின் மீது அவருக்கு இருக்கின்ற ஈடுபாட்டை நம்மால் உணரமுடிகின்றது.

❖

கே.ரவியின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனை

•

முனைவர் பா.சங்கீதா
தமிழ் உதவிப்பேராசிரியர், கொங்கு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி) ஈரோடு – 638107.

இலக்கியம் மனித வாழ்வின் பிரதிபலிப்பு, மாறிவரும் சமூகச் சூழல் அவலக் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. அதிலும் கவிதை இன்றைய நவீன யுகத்தின் செல்வாக்கு பெற்ற ஊடகமாகத் திகழ்கிறது. கவிஞனின் எண்ண ஓட்டங்களையும், சிந்தனைகளையும் தன்னுள் தாங்கி வெளிவருகிறது. புதுக்கவிதை எழுதுவோர் பொது நலனில் அக்கறைக் கொண்டு தாங்கள் படைக்கும் படைப்புகளில் சமூகத்தின் சூழலை ஆதரித்தும் எதிர்த்தும் எழுதும் பொழுது சமூக நிலைப்பாடுகள் அழகாய் உணர்த்தப்படுகின்றன. சமூகம் நெறிபிறழின் அதைத் தட்டிக் கேட்கவும் செய்கின்றன. இதனடிப்படையில் புதுக்கவிதைகளில் சமூகத்தில் நடக்கும் செயல்களைக் கவிஞர்கள் பாடுபொருளாகப் படைத்துக்காட்டியதோடு மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்வைக் ஏற்படுத்தி உள்ளார்.

கவிஞரும் சமுதாயமும்

சமுதாயம் என்பது தனிமனிதனின் கூட்டமைப்பு. சமுதாயத்தின் துணை இல்லாமல் எந்த மனிதனாலும் தனித்து

வாழ இயலாது ஏதாவது ஒன்றை ஏதாவது ஒரு காலகட்டத்தில் சார்ந்து தான் வாழ்ந்தாக வேண்டும். அப்படிச் சார்ந்து வாழும் பொழுது சமுதாயத்தில் தனி மனிதனின் பங்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. சமுதாயத்தை, சமுதாயத்தின் உணர்வுகளை, சமுதாயத்தில் காணப்படும் அவலங்களை ஆராய்ந்து நல்லதொரு வழி காட்டுபவரே சிறந்த கவிஞன் ஆவான். கவிஞன் என்ற மனிதன் அவன் வாழ்க்கை சொல்லும் அனுபவங்கள் அவன் உணர்ச்சிகள், அவன் கையாளும் மொழியின் சொற்கள் இவற்றை அடிப்படையாக வைத்தே கவிதைகள் படைக்கின்றான். அத்தகைய சிறந்த கவிதைகளைச் சமுதாயத்திற்கு வழங்கும் கவிஞர்களில் ஒருவராக கே.ரவி திகழ்கிறார். இவருடைய 'அணையாத சுடரேற்றுவேன்' என்ற கவிதைத் தொகுப்பில் இவர் சமூக அக்கறையோடு தமக்கிருக்கும் பந்தத்தை உணர்த்துவதோடு, இந்த சமூகம் எப்படி இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதோடு, எப்படி அதை மாற்றம் பெறச் செய்ய வேண்டும் என்பதனையும் மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் பதித்துக் காட்டி தம் எழுத்து உலகத்தை இயக்கி வருபவர். இவரின் கவிதைகளில் காணப்படும் சமுதாய சிந்தனையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சமுதாயத்தை உயர்த்திய தலைவர்கள்

இன்றைய மனிதர்களுக்கு வாழும் வழியினைச் சொல்லிக் கொடுத்தவர்கள் நேற்றைய தலைவர்கள். அவர்களின் வாழ்க்கை முறையும் கருத்துகளும் சமுதாயத்தை நெறிப்படுத்தும் ஊன்றுகோலாக அமைந்திருக்கின்றன. சிறந்த தலைவர்களின் செயலையும் புகழையும் உணர்ந்த கவிஞர், இன்றைய மனிதர்கள் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள சிறந்த தலைவர்களை தம் கவிதைகளில் எடுத்துக்காட்டியுள்ளார். நம் நாட்டின் தேசத் தந்தையான காந்தியடிகள் அகிம்சை வழியில் நின்று ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதந்திரம் பெற்றுத் தந்தார். அவரது வழியைப் பின்பற்றி மக்களும் அமைதியாக வாழ்ந்து நல்ல நிலை அடையவேண்டும் என்பதை, 'கருணை நடந்தது' என்ற கவிதையில்,

இத்தரையில் ஒரு விந்தை நிகழ்ந்தது
கைத்தடி யூன்றிக் கருணை நடந்தது
சென்ற இடமெல்லாம்

வென்றது சத்தியமே
புன்னகை முன் பீரங்கி தோற்றது
புவியெல்லாம் அதன் ஒளியை ஏற்றது
மனிதனின் தெய்வநிலை
மரணம் அதற்கு இல்லை *(ப. 153)*

என்று காந்தியடிகள் காட்டிச் சென்ற பாதையைப் பின் தொடர்ந்து சென்றால் மக்கள் சிறப்புநிலை எய்தலாம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். நாட்டு விடுதலைக்காகப் பாடிய தமிழ் கவிஞர்களில் முதலில் நிற்பவர் முண்டாசுக் கவிஞர் பாரதி தம்முடைய அனல் கக்கும் கவிதைகளைக் கொண்டு மக்கள் மனதில் சுதந்திர வேட்கையை ஊட்டியவர். நாட்டையும் நாட்டு மக்களையும் நேசித்த பாரதியின் மேன்மையினை எங்கள் பாரதி என்ற கவிதையில்

தேசபக்தியும் தெய்வபக்தியும்
கண்ணி ரண்டெனக் கொண்டவன்
பெற்ற தாயென இந்த நாட்டினைப்
பேணுகின்ற சுதந்திரம்
ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகம்
முழுவதுமே அழித்திட
உலுக்கினான் குரல் எழுப்பினான் உலகு
உறக்கம் நீயே விழித்திடு
எங்கள் பாரதி எங்கள் பாரதி
என்று போற்றும் உலகமெல்லாம் *(ப. 146)*

என்று விளக்குகிறார். இவ்வாறாக நேற்றையத் தலைவர்கள் இன்றைய சமுதாயத்திற்கு வழிகாட்டிகள் என்பதைக் கவிஞர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமுதாயத்தில் பெண்கள்

சமுதாயத்தில் மனித இனத்தின் தோற்றத்திற்குக் காரணமான பெண்கள் தங்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியப் பங்காற்றி வருவதோடு தம்முடைய இருப்பின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டும் படியாகத் திகழ்கிறார்கள். இன்றைய சமுதாயத்தில் பெண்ணுக்கு, ஆணுக்கு இணையான உரிமைகள் வழங்கப்பட்ட போதும் கூட ஒரு சில இடங்களில் பெண்கள் வலிகளை அனுபவித்து வாழ்ந்து வருவதைக் காணலாம். அப்படிப்பட்ட சூழலிலும் கூட

பெண்கள் தைரியத்துடன் தலைவணங்காது போராடி வாழ வேண்டும் என்பதையும் எந்த சூழலிலும் தைரியம் மிக்கவர்களாக வலம்வர வேண்டும் என்பதையும்"தலைவணங்காத தோழி "என்ற கவிதையில்

தர்மம், நீதி கடவுளோடு
பெரியவர்கள் யாவர் முன்னும்
பணிவுடன் இரு -ஆனால்
துணிவுடன் இரு
மதிப்பவரை மதித்து நட
மிதிப்பவரை எதிர்த்து நட
எதிலும் விழி கூர்மையுடன்
எச்சரிக்கையோடு தடம்
பதித்து நட *(ப. 183)*

என்று பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டாலும் அதை நடைமுறையில் பின்பற்ற முடியாத நிலையே நிலவி வருவதை உணர்ந்த கவிஞர் அவர்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டி உள்ளது சிறப்பானதாகும்.

நாட்டுப்பற்று

ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நம் தேசத்தை தங்களுடைய இன்னுயிர் தந்து விடுதலை பெற்றுத்தந்த தேச தலைவர்கள் பலர் அவர்களின் தியாகத்தையும் நாட்டுப்பற்றையும் இன்றைய இளைஞர்களிடம் எடுத்துக்காட்டும் விதமாக 'விடுதலை' என்னும் கவிதையில்

வந்தே மாதரம் என்ற மந்திரம்
வாங்கித் தந்த விடுதலை
எத்தனை மக்கள் தடியடி பட்டும்
வீரத்தோடு தாங்கியது
எத்தனை இளைஞர் ரத்தம் சிந்தி
இன்னுயிர் ஈந்து வாங்கியது *(ப. 82)*

என்று கூறியுள்ளார். மேலும் நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காக அல்லும் பகலுமாகப் பாடுபட்ட தலைவர்களின் உண்மைநிலையை எடுத்துக்காட்டும் விதமாக 'சுதந்திரம்' என்ற கவிதையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

பாட்டினிலே வெள்ளையரின்
ஆட்சியை பந்தாடியவன்

பத்திரிக்கை மூலம் தேச
பக்தியினைத் தூண்டியவன்
கப்பலோட்டிய ஆங்கிலேயர்
கதிகலங்க செய்தவனும்
கடைசிவரை கொடி பிடித்து
தடியடியில் செத்தவனும்
வாழ்ந்த காலம் ஏது சுதந்திரம்
அவர்கள் வருந்தியதால் வந்த சுதந்திரம் (ப. 194 - 195)

என்று நாம் இன்று நிம்மதியாக வாழ அன்று தங்களையே வருத்திய தேசத் தலைவர்களை எடுத்துக்காட்டி இன்றைய இளைஞர்கள் மனதில் தேசபக்தியைப் புகுத்தியுள்ளார் எனலாம்.

அரசியல் நிலை

சமுதாயத்தில் அரசியல் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது அரசியல் தனி நிறுவனமாக மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வந்தது. கால மாறுபாட்டால் அரசியல்வாதிகள் சிலர் பதவி வெறி, லஞ்சம், சமுதாய அக்கறை யின்மை போன்ற தீய சக்திகளுக்கு அடிமையாகி விட்டனர் இந்த நிலை மாற வேண்டுமென்றால் நேர்மையான எண்ணம் கொண்டவர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை 'கைகுவித்து வேண்டுகிறேன்' என்ற கவிதையில்

நெஞ்சைப் பிழிந்து கண்ணீர்மல்கக்
கெஞ்சிக் கேட்கிறேன்
அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும்
அடிமையாகி வீழ்ந்தது போதும்
நேர்மை, துணிவு, பணிவெல்லாம்
தேர்வு செய்து வாக்களியுங்கள் (ப. 56)

என்கிறார். மக்கள் சரியான முறையில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும் மக்கள் நாட்டை ஆளும் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் பொழுது விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதை 'படுகுழியில் விழுகின்றோம்' என்ற கவிதையில்

மக்கள் நாமே
மந்தைகளாய் உள்ள நிலை மாற வேண்டும்
ஒரு விரலால் ஆட்சிகளை மாற்றுகின்ற
உயர் பதவி நம் பதவி உணர்ந்து கொள்வோம் (ப. 179)

என்கிறார். மேலும் ஒரு சிலர் மட்டுமே அரசியலில் வலம் வந்து கொண்டிருக்கும் அவல நிலைகள் இனி மாற்றம் பெறவேண்டும் என்பதை மிக அழுத்தமாக கவிதையில் பதிவு செய்துள்ளார்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று
பாரதி சொன்னதை சொல்கின்றேன் - அதை
வேதம் என்றே நான் ஓதுகிறேன்
ஒவ்வொரு பதவியும் ஒருமுறை
வரையறை அவசியமான தன்றோ
முப்பது நாற்பது ஆண்டுகள் ஒருவரோ
ஆள்வது அடிமைத் தளையன்றோ. (ப. 58)

என்று சமுதாயத்தில் நடக்கும் அவலங்களைப் பற்றி வருத்தத்தோடு கோடிட்டு காட்டுகின்றார். ஆனால் சுட்டிக் காட்டுவதோடு தம் பணி நிறைவுற்றதாகக் கருதாமல் அவற்றைக் களைந்தெரிவதற்கான வழிவகைகளைத் தேடித்தேடி தெளிவுபடுத்துவது இவரின் தனித்துவமாகும். இன்றைய சமுதாயத்தில் அரசியல் மிகப்பெரிய சிக்கலாக வலம் வருகின்றது இதனால் கவிஞர்களின் சிறப்பான கவனத்தைப் பெறுகிறது அரசியல் பற்றிய விழிப்புணர்வு கருத்துகளை மக்கள் முன் திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

இன்றையத் தமிழ் இலக்கியத்தில் வளர்ந்து வருகின்ற உயிரோட்டமுள்ள வடிவமாகக் கவிதை வடிவம் விளங்குகின்றது மக்களுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை எடுத்துக்காட்டி சமூக உணர்வோடு புதுக்கவிதை நடை போடுவது போற்றுதலுக்கு உரியதாக உள்ளது. காலத்திற்கேற்ற கருத்துகளை மக்கள் மனதில் விதைக்கும் பணியைக் கவிதைகள் செம்மையாகச் செய்து வருகின்றன. அதிலும் குறிப்பாக கே.ரவி அவர்கள் இனிமையும், அக்கறையும், பொறுப்பும் நிறைந்த பண்பாளர் படைப்பாளர். இவரின் சொல்லாக்கம் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. பயன் உடையச் சொற்களை எளிய இனிய தெளிந்த முறையில் வெளிப்படுத்தும் போக்கை அவர் எழுத்துகளில் பார்க்க முடிகிறது. இனிவரும் காலங்களில் கவிஞர் கே.ரவி அவர்களின் படைப்புகள் உயரங்களில் பறந்து ஆழங்களில் மூழ்கி அதிசயங்கள் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

- சிறந்த தலைவர்களின் கருத்துகளையும் அவர்கள் பின்பற்றிய பண்புகளையும் இன்றையச் சமுதாயத்தில் உள்ள மக்கள் புரிந்து கொள்ளும்படி எடுத்துக்காட்டியுள்ளார்.

- இன்றையச் சமூகத்தில் உள்ள அரசியல்வாதிகளின் உண்மையான போக்குகளையும் செயல்பாடுகளையும் எந்தவித தயக்கமுமின்றி கவிஞர் கவிதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.
- பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளையும் அவர்கள் விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும் என்பதையும் கவிதையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

❖

வானவில் கே. ரவியின் படைப்பில் கலைஞனின் கவிநயம்

•

திருமதி. மு. சண்முகவடிவு, எம்.ஏ., எம்.எட், நெட், டி.எப்.ஏ, டி.சீ.டி., எப்.எச்.எல்.சி.
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், நா.ம.ச.சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை–12

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை ஏற்றமும் எழிலும் பெற்றுச் சிறந்து விளங்குகிறது கவிதை இலக்கியம். ஆயகலைகள் அறுபத்து நான்கு அமிழ்தினும் மேலான தமிழ் மொழியில். செம்மொழித் தகுதி பெற்று உலகமெங்கும் புகழ்மாலையை சூடியவள் தமிழன்னை. அவளுக்கு அணி சேர்க்கும் வகையாக கவிகளைப் படைத்து, கட்டுரைகளை இயற்றி பாரதிக்குத் தேரிழுத்துப் பழமை மாறா கவிஞனாய்ப் பாரினில் வலம் வரும் ஏழு வண்ணங்களுக்குச் சொந்தக்காரர் வானவில் கே.ரவி. ஆவார் அவர் படைப்பில் கலைஞனின் கவி நயத்தை ஆராயும் விதமாக இந்த ஆய்வு அமைகிறது.

கலையும் கவிஞனும்

கலைகள் மனிதவாழ்வின் ஓர் அங்கம். அவை இல்லாமல் வாழ்க்கையும் இல்லை, வளமையும் இல்லை. வான்புகழ் கொண்ட வள்ளுவனையும், தேன் கவிபாடும் கவிஞர்களையும் உருவாக்கிக்

கொடுத்தது கலையே. பிறப்பு, இறப்பு என இரண்டிற்கும் அப்பாற்பட்டவர்கள் கவிஞர்கள். "கவிதை நல்கும் உள்ளுணர்வு மறைமுகமானது." இந்த உள்ளுணர்வினால் உடலின்கண் தோன்றும் மாற்றங்களை விட அக்கவிதையினின்றும் பெறும் உணர்ச்சியினால் ஏற்படும் உடல் மாற்றங்கள் மிகுதியானவை என்று வில்லியம், கே.விம்சாட், கிளீன்த், புரூக்ஸ் ஆகியோர் கூறுகின்றனர். (இ.தி.–85) –1 இக்கருத்திற்கு ஏற்ப அவர்கள் படைப்பாளர்.

"வெள்ளை தாடி கந்தல் ஆடை
வேறு லோகம் என்னும் பார்வை!
உள்ளம் உண்டு கள்ளம் இல்லை
கவனம் உண்டு சலனம் இல்லை!
ஓடெடுத்துச் சென்று வாங்கி
உண்டதே நாம் கண்ட கோலம்
வீடுதோறும் தீபமாகிக் கொண்டதோ ஒரு ஜோதி ரூபம்!"

– (ம.பா.பா–28)

என்று கடவுளின் கருணை உள்ளத்தைத் தண்மையுடன் அழகாய்ச் சுட்டுகிறார் கவிஞர். அவர்கள் மேலும்

"மாடு முட்டி கோபுரங்கள் சாய்வதில்லை
மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை"

என்ற வரிகளின் மூலமாக 'யாரையும் யாரும் நிந்திக்கவும் முடியாது, யாரையும் யாரும் வெல்லவும் முடியாது' என்று இயல்பாக நடக்கும் செயல்களை எளிமையாக ஆழமான கருத்துகளுடன் தம் கவியில் வெளிப்படுத்தி இருப்பது கலைகளும் கற்பனைகளும் ஒன்றென்பதை உணர்த்துகிறது.

கற்பனைக் கலைஞன்

கலைஞனின் உள்ளத்தில் தோன்றும் கற்பனைக்கு எல்லை ஏது? இவ்வளவுதான், அவ்வளவுதான் என்ற அளவு கிடையாது. கற்பனை இல்லா மனிதன் உலகில் வாழவும் முடியாது. கிடைத்த பொருள், கிடைக்கும் பொருள், வரும் பொருள் அனைத்தையும் தன் கற்பனை சக்தி மூலம் பெறத்துடிக்கும் ஆன்ம ஆற்றல்

கொண்டவன் கலைஞன். அவ்வகையில் படைப்பாளர் அவர்களின் கற்பனை, ஆற்றல் வாய்ந்தது. அவற்றில் அகிலமே அடங்கி இருக்கின்றது, அக்கற் பனையின் துவக்கமாக

"காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம் - இது
காணக்கிடைக்காத வைபோகமாம்!
பூத்துக் குலுங்கும் பல தோட்டங்களாம் - அங்குப்
பூவெல்லாம் பொறி வண்டுக் கூட்டங்களாம்
தோளுக்குப் பட்டாடை அருவிகளாம்
தொங்கட்டான் போலச்சிறு குருவிகளாம்
காலுக்கு நீரோடை கொலுசுகளாம்
அலங்காரத்தில் பலநூறு தினுசுகளாம்." (ம.பா.பா-49)

காகத்திற்கும் குருவிக்கும் கல்யாணம், அதனால் தான் வெயிலோடு மழை பெய்கிறது என்று நம் முன்னோர்கள் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் ரவி காற்றையும் பூமியையும் இணைக்கும் விதமாக, தம் கற்பனையில் திருமண ஊர்வலத்தில் நிகழும் அத்தனை நிகழ்வையும் இயற்கையோடு இயைந்து வியந்து கூறும் விதம் போற்றத்தக்கது.

அன்றலர்ந்த தாமரை வாடாமல் இல்லையே-வெறும்
சித்திரத்துத் தாமரைக்கோ வாசமில்லையே - கம்பன்
சித்திரத்துத் தாமரைக்கு வாசமுண்டு வாடாது - என்
சிந்தையிந்தப் பூவையன்றி வேறெதுவும் சூடாது
(ம.பா.பா.பக்-52)

இயற்கையைப் படைத்த இறைவன் வேறு இயற்கை வேறு, என்றில்லை இரண்டும் ஒன்றே. என்பதை உணர்த்த இராமனின் முகம் அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற செய்தியை அழகாகக் கூறுகிறார். கம்பனின் கவிதைச் சிந்தையில் பூத்த பூவாக படைப்பாளர் ரவியின் அவர்களின் கற்பனை முன்மொழிகிறது.

செஞ்சொல் வித்தகர்

செம்மையான சொற்களைக் கம்பரை போல, வள்ளுவரைப் போல, பாரதியைப் போல பாங்காகக் கையாண்டுள்ளார் ரவி.

"சொல் புதிது பொருள் புதிது சோதி மிக்க நவகவிதை "என்ற கூற்றுக்கிணங்க

இல்லை என்று சொல்வதே இல்லையானவன்
எல்லையொன்றும் இல்லாத தில்லை யானவன்!
சொல்லில் உள்ள சூட்சுமத்தில் நீதி யானவன்
சொந்தமென்று வந்தவர்க்குப் பாதியானவன்!
கல்லினுள்ளும் காணுகின்ற சோதியானவன்
கருணையால் வளரும் ராஜ வீதியானவன்!
எல்லார்க்கும் எல்லாம் என்றுமுள்ளவன்
ஏந்துகின்ற கையில் தன்னை யேகொடுப்பவன்!

(ம.பா.பா-82)

இல்லை, தில்லை, நீதி, பாதி, சோதி, வீதி, தன்னையே கொடுப்பவன் என்ற அடைமொழிகளை அருமையாகக் கையாண்டுள்ளது சிறப்பு. இறைவனின் இயல்பு அனைவரையும் ஒன்றாகப் பார்ப்பது. ரவியும் அனைவரையும் ஒரே முகமாகப் பார்க்கிறார். அவர் பார்வையில் பேதமில்லை என்பதை இக்கவிதை உணர்த்துகிறது. மேலும்

மாடு நம்ம சாமி டா டோய் -இது
மரியாதை பூமிடா டோய்!
நாடு வாழ நாமும் வாழ
நல்லவழி சேரடா - இது நம்பிக்கைத் தேரடா!

(ம. பா. பா-86)

என்று நல்ல வழியை நயமுடன் காட்டி உள்ளார். நாம் வாழ்ந்தால் நாடு வாழும் என்பதை ஔவையார் வரிகளுக்கு இணையாகக் கூறியுள்ளார்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்

அவ்வையார் பாடல் வேளாண் அறிவியலை உணர்த்துகிறது. ரவியும் நம்பிக்கைத் தேரை நயமுடன் இழுத்துச் செல்கிறார்.

சந்தத்தின் சொந்தம் கலைஞன்

இசைக்கு மயங்காத பொருளும் உலகில் உண்டோ. யாவருக்கும் பிடித்த ஒன்று இசை. தாலாட்டில் தொடர்கின்றது நமது இசை. கருவறை பந்தம் கடைசி வரை சொந்தம். ஆம் சந்தம் பாட்டிற்குச் சொந்தம். மக்கள் பாடும் பாட்டு என்ற கவிதைகள் அனைத்தும் நாட்டுப்புறச் சந்த நயத்தை அடியாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. சிறந்த கவித்துவத்தின் மேன்மையை உணர்த்துகிறது. "எந்தக் கவிஞனுடைய படைப்புகளில் பெரும்பான்மை யாரால் என்று படிக்கப் பட்டாலும் சுவை தரக் கூடுமோ அந்தக் கவிஞன் உலகக் கவி என்று ஒரு பொருள் கொள்ளலாம்" (கா.நீ.க–83)

துட்டுக்கு பாடலே டா - எந்த
மெட்டுக்கும் பாடலே டா - கை
தட்டல் பாராட்டு பொன்னாடைக் கெல்லாம்
நான் கண்டிப்பாப் பாடலே டா!
தாளம் கொடுக்குது காத்து - நின்னு
தலையசைக்குது தென்னைமரம்
ஓலமிடுது!
நீலக்கடல் - ஒளி பொங்கிச் சிரிக்குது வானம்

என்று பொட்டில் அடித்தது போலப் புலப்படுத்துகிறார். சிந்து வகைப்பாட்டில் நெஞ்சைத் தொடுகிறார் கவிஞர். "உண்மையான கவிதை விளங்கிக் கொள்ளப்படும் முன்பே தொடர்பு கொள்ள வல்லது" டி. எஸ். எலியட் – இவரின் கூற்று உண்மையே. அதை படைப்பாளர் தம் கவியில்

இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே
நேற்றென்பது காற்றோடு
நாளைவெறும் எதிர்பார்ப்பு
இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே (ம.பா.பா-133)

என்ற வரிகளின் மூலம் ஒலிப்பு முறைகள் நயமுடன் சந்தத்திற்குச் சொந்தம் கொண்டாடும் வகையில் அமைந்துள்ளதைக் கூறியுள்ளார்.

கவிஞனும் கவிதையும் கற்பனையும் இருக்கும் வரை உலகம் வாழும். கடவுளையும் கனிந்து உருகச் செய்யும் ஆற்றல் கலைஞனுக்கும் இசைக்கும் உண்டு. வானவில் கே. ரவி இசை வித்தகர். ஈடில்லா எண்ணற்ற நூல்களைப் படைத்து இன்முகத்துடன் வாழ்பவர். படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வர் அவர். கவிஞரின் கவிதையில் அறுபத்து நான்கு கலைகளும் சங்கமித்து உள்ளன. அவை அனைத்தையும் ஆராய ஒரு யுகம் போதாது எனவே நான் எடுத்துக் கொண்ட சிறு துளிக்கே இவ்வளவு வலிமை. ஆகவே இவர் போல நாமும் பல படைப்புகளைப் படைப்போம் நலமுடன் வாழ்வோம்.

உசாத்துணை நூல்கள்

1. திரு.சந்திரன் – இலக்கிய வரலாறு
2. தி.சு.நடராசன் – இலக்கியத் திறனாய்வு
3. ரவி. கே. மக்கள் பாடும் பாட்டு
4. ரவி. கே. கானல் நீரைக் கடந்து

❖

இசைக்கவி ரவி

•

முனைவர் ஆ. சந்திரபுஷ்பம்
அறிவிப்பாளர், அகில இந்திய வானொலி நிலையம்,
திருநெல்வேலி.

இசையால் வசமாகா இதயமெது? உலகம் இசை வடிவானது. இயற்கை, இசையோடு இயைந்தது. பஞ்ச பூதங்களுடனும் கவிதைப் பல்லாங்குழி ஆடியுள்ளார், 'வானவில்' ரவி அவர்கள். ஆகாயத்தில் தோன்றுவதை அணிந்துள்ளார் பெயராக. விழிகள் பருகியதை விசாலமாய் விதைக்கும் போது, கவிதைச் சிதறலாய் கலந்து சிரிக்கிறது. கவிஞர், இயற்கையோடு பேசியதை, இல்லை பாடியதை, நமக்கு இசை விருந்து ஆக்கியுள்ளார் எனலாம் சிந்தனை மேடையில் சிங்கார நடை பயின்று, எளிய உடை அணிந்து, எழிலான கவிதைப் பெண் உலா வருகின்றாள் பேச்சு வழக்குச் சொற்களின் வீச்சுக் கவிதைகளை மெட்டமைத்துப் பாடினால், இழுத்த இழுப்புக்கு எங்கெல்லாமோ வரும் என்பது உண்மை.

வான் உலா

அந்தி வானின் அழகைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் போதா. வெற்றாகப் பார்ப்பதற்கும் உற்றுப் பார்ப்பதற்கும் வேறுபாடு மிக அதிகம். கவிஞர் பூமியில் நிகழ்வதை, ஆகாயத்தில் நிகழ்த்திக் காட்ட ஆசை மிகக் கொண்டு கவி புனைகிறார். தனக்கு உந்து சக்தியாக இருந்த கவிஞரையும், பாடலையும்

சுட்டிக்காட்டவும் தவறவில்லை. கவிப்பேரரசு வைரமுத்துவின் முதல் பாடலான பொன்மாலைப்பொழுது பாடலைக் குறிப்பிடுகின்றார். "வானம் எனக்கொரு போதி மரம், நாளும் எனக்கது சேதி தரும்" என்ற வரிகளைச் சுட்டிக்காட்டுகின்றார் ஆளுக்கொரு சேதி, நாளுக்கு நாளாக ஆகாயம் தந்து மகிழும்! காண்போரின் விழிகளைப் பொறுத்து செய்திகள் மாறுபடும். இயற்கை, ரசிகனுக்கு ஒரு தோற்றம், இளமை, ரசிகனுக்கு இன்னொரு தோற்றம், ஆராய்ச்சியாளனுக்கு, ஆழமான தோற்றம், கற்பனை, கவிஞனுக்கோ சொற்றுணை வரும்படியான தோற்றம்! இதில் நம் கவிஞர் ரசித்த விதம் வேறு. தன்னுடைய கற்பனைக் குதிரையைப் பறக்க விடுகின்றார்.

"வானத்துல தான் என் வயலிருக்கு, வாரி இறைச்ச மணி வெளஞ்சிருக்கு, வேலி கட்டத் தேவையில்லை, வெளச்சலுக்கும் பஞ்சமில்லை" வானத்தை வயலாக்கி, நட்சத்திரக் கூட்டத்தை நெல்மணிகள் ஆக்கி கற்பனை செய்கிறார். வெள்ளாடு மேயாது. வேலியும் தேவையில்லை. ஆண்டவன் பாதுகாப்பில், அழகான விளைச்சல். வானத்து வயலின் இரவுக்காட்சி, பகலிலும் கண்முன்னே படம் போல் விரிகிறது!

"வானவில்'லு மேல நின்னு ஏத்தம் எறப்பேன், வாள மீனப் போல நானும் துள்ளிக் குதிப்பேன், சூரியன் ஏரு பூட்டிக் கொண்டு நடப்பேன், தாகத்துக்கு மழைத்தண்ணி மொண்டு குடிப்பேன்!" மழைக்கால 'வானவில்'லை மகிழ்வாய் ரசித்து, மனதோடு மழைக்காலத்தை வரவழைக்கிறார். அதிக நேரம் நின்றிறைத்தால் கால் கடுக்கும் என்றெண்ணி, சற்றுநேரம் தோன்றி மறையும் 'வானவில்' மீது நின்று, ஏற்றம் இறைப்பதாகக் கவி புனைந்துள்ளார். ஒவ்வொரு கவிதையையும் படிக்கும்போது சூரியன் ஏரு பூட்டி நடக்கிறதோ இல்லையோ, இசை ஏரு பூட்டி நம்மோடு பயணிப்பதை உணரமுடிகிறது! நட்சத்திரப் பெண்கள் நாற்று நட, அம்புலிப் பெண் காவல் இருக்க, அழகுற கவிதை அடி எடுத்து வருகிறது.

இயற்கையும் கவிஞரும்

இயற்கையை அனுபவித்தவர்கள், இளமைக்கு விருந்தாக கவிதையைப் பரிமாறுகிறார்கள். நெருங்க முடியாக் கதிரவனில் நீராடி மகிழ்ந்ததாகவும், சந்திக்க வந்த சந்திரனை, ஆரத்தழுவி

அங்கமெல்லாம் சந்தனமாய்ப் பூசிக் குளிர்ந்ததாகவும் கற்பனை செய்கிறார்.

"சந்திரனுக்கொரு சறுக்கு மரம் சந்தத்தில் அமச்சேன் – அவன் சந்திக்க வந்ததும் கட்டிப்புடிச்சு சந்தனம் பூசிக்கிட்டேன்" சறுக்கு மரத்தைக் கூட சந்தத்தில் அமைந்ததாகச் சொல்வது கவியிசை பயணத்திற்குக் கனிவான ஒரு சான்று. கட்டிலில் மலர் பரப்பி, கல்யாணத் தொடக்க நாளில் துயில் கொள்ள மறந்திருப்போர் பலர். மொத்த மலர்களையும் மெத்தையில் கொட்டி, சித்தம் மயக்கில் ஆழ்வது வாடிக்கை. ஆனால், ஒத்த மலருக்குள் மெத்த விரிச்சிப் படுத்து, சிட்டுக்குருவி சத்தத்தில் கண்விழித்ததாக இசை நயம் மிக்க கவிதை யாத்துள்ளார்

'கடல் நொரையில் மெதந்துகிட்டே காத்தை அள்ளிக் குடிச்சேன்–மழைத் தூறல்களில் நூறு தூணெழுப்பி கோட்டை கட்டி முடிச்சேன்"

அலை கடலில் ஆனந்த சயனம் ஆண்டவனுக்கு. அலை நுரையில் மிதந்த பயணம் கவிஞனுக்கு. உப்பு நீரைத் தப்பாய்க்கூட அள்ளி தாகம் தணிக்க முடியாது. அதனால், காற்றை அள்ளி, வாயின் வாசல் வழிப் பருகுவதாகக் கற்பனை செய்திருக்கும் பாங்கு சிறப்பு! தூறல் தூணில் கோட்டை கட்டி அழகு பார்த்திருப்பது வியக்க வைக்கிறது. 'கடல் நீர் நடுவே பயணம் போனால் குடிநீர் தருவது யாரோ?"– என்ற 'படகோட்டி' பாடல் நினைவுக்கு வருகிறது.

"தென்றல் தொட்டுத் தெறக்குற மொட்டுக்குள்ள நான் மெத்த விரிச்சு படுத்துக்கிட்டேன் – அந்த சிட்டுக்குருவி செறகடிக்குற சத்ததுலதான் முழிச்சுக்கிட்டேன்" இவரது கவிதைகளைப் படிக்கும் போது, தெம்மாங்கு மெட்டுக்குப் பாட்டு இட்டுக் கட்டியது போல் ஓர் இசை எழுகிறது. படித்துக்கொண்டு இருக்கும் போதே, மலருக்குள் துயில்வதாய் ஒரு மன பிரமிப்பு.

மாய மனிதர்கள்

பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருந்தால், பஞ்சு பற்றி எரியும் என்பது பாரறிந்த செய்தி. இதனைக் காதலுக்கு உவமை கூற காலம்காலமாய்க் கேட்டிருப்போம். ஆனால், மனிதச் செயலுக்கு ஒப்புநோக்கிப் புனைந்த கவிதை நெஞ்சுக்குள் தகிக்கிறது.

“நெஞ்சமிருக்குது, நேரம்தடுக்குது நெனச்சுப்பாருங்கள் சாமி–இது பஞ்சுப்பொதியில் நெருப்ப வச்சி பார்த்து ரசிக்கிற பூமி”

அடுத்தவர் துயர் கண்டு ஆனந்தக்களிப்பு எய்துவதுதான் உலகம்! ‘பற்றவைத்தல்’ என்பது, இவர்களுக்குப் பழகிப்போன ஒன்று! எதுகை மோனையோடு, இசை நயத்தோடு, கவிதை,: இல்லை நான் பாடலாகவே காண்கிறேன் “உறவுக் கல்லுல உரசிப்பாத்து ஞாயத்துக்கு வெல பேசும், ஊசி முனையில் உக்காந்த படி உண்மைக்கொரு வலை வீசும், நியாய விலைக்கும் உண்மை விலைக்கும் கல்லும் ஊசியும் உறவோடு உறவாடுகிறது. அடுக்கி வரும் சொற்கள் அழகு இசை நடைபயின்று தாளமிட வைக்கின்றன.

உயிர்களின் ஓசை இசையாக

தனிமையில் அமர்ந்து, தவளைச் சத்தம் கேட்டால் தலையாட்டித் தாளமிட வைக்கும். மழைத் தவளைக் குரல், மாலை நேரத் தவளைக் குரல், அரவின் வாய்க்குள் அகப்பட்ட தவளைக் குரல் என்று ஒவ்வொரு ஓசையும், இசையாக எழுவதை, தனிமையில் அமர்ந்து ரசித்தவர்களுக்கே தெரியும். இசைக்கருவிகளை வாசித்து கானகத்து மேடையில் கச்சேரி, களை கட்டுவதாகக் கவிதைகள் விழுகின்றன.

“மனசுக்குள்ள மொசலுக்குட்டி மத்தளம் வாசிக்கும் அத மலங்க மலங்க பார்த்துகிட்டே நண்டு யோசிக்கும் வண்ணாத்திப்பூச்சி எல்லாம் வரிசையாக வந்து – ஒங்க கண்ணு மேல நின்னுகிட்டே கரகம் ஆடும்.”

நல்ல மனங்களில், நல்ல விதை விதைத்தால் வளரும் விருட்சம், வரும் சந்ததிக்கு பலனளிக்கும். அதுபோன்று, கவிதையை மக்கள் உள்ளத்தில் விதைத்து, சந்தத்தோடு சிந்திக்க வைத்த இசைக்கவி ரவி என்பது உண்மை. இயற்கையோடு இயைந்து, வாழ்வைப் படம்பிடித்து இசை நயத்தோடு யாத்த கவிதைகள், அவற்றோடு நம்மையும் பயணிக்கச் செய்கின்றன.

❖

காற்றில் ஏற்றிய அணையாச்சுடரின் ஒளிக்கீற்றுகள்

•

முனைவர் ஜெ. சந்திரிகா
தமிழ்த்துறைத்தலைவர் ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,
அண்ணாநகர், சென்னை–40.

உலகில் மொழி தோன்றியபோதே கவிதையும்பிறந்துவிட்டது. மனிதன் கண்டு உணர்ந்ததை உள்வாங்கி அனுபவத்தைப் பாதையாக்கிக் கற்பனைச் சிறகுகொண்டு சிந்தனையாகிய ஊற்றில் பிறந்ததே கவிதை. இது முடிவில்லா தொடர்கதையாய்ப் பலப்பல பொருண்மைகளைப் பொதிந்துகொண்டு எல்லை யில்லா பெருவெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கவிஞனின் தாகம் தீரும் வரை கவிதைக்கு அழிவில்லை. வானவில் கே.ரவி எனும் கவிஞரின் கவிதைகள் வெவ்வேறு படிநிலை வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. கவிதை எனும் வித்து அவருக்குள் முளைவிட்டுத் தன் கிளைகளைப் பரப்பி விருட்சமாய் உயர்ந்த காட்சியை அவரது, "காற்று வாங்கப் போனேன்" எனும் நூல் புலப்படுத்துகிறது. அவரது கவிதைப் பயணத்தின் சுவடுகளை அதில் காணலாம். அதே வேளையில் "அணையாத சுடரேற்றுவேன்" எனும் கவிதைத் தொகுப்பு நம்மைக் கவிதையில் சரணடைய வைக்கிறது. அனுபவத்தின் ஆழத்தில் கருத்தூன்றி உள்ளம் கசிந்து உருகவைக்கும் சக்திப் பிழம்பான அணையாச் சுடரை இந்நூல் நம்முள்

ஏற்றிவைக்கின்றது. இவ்விரண்டு நூல்களின் கருத்திசைவை இக்கட்டுரையில் காணலாம்.

கவிதையும் கவிஞரும்

ஒரு முழு நீளத் திரைப்படத்தைப் பார்த்த திருப்தி "காற்று வாங்கப் போனேன்" எனும் நூலைப் படிக்கும் வாசகனுக்குத் தோன்றுகிறது. காற்றுவாக்கில் கவிதை, தனக்குள் எழுப்பிய மர்மத்தைச் சொல்லத் தொடங்குகிறார் கவிஞர் ரவி. மானுடனாய்ப் பிறந்த பயன், கவிதையுடன் வாழ்வது என்பதே கவிஞரின் கருத்து. அதனை,

எப்பொழுதோ ஓரிரண்டு கவளம் ஊட்டி
வதைக்கின்ற கவிதையுடன் வாழ்கிறேனே
மானுடனாய்ப் பிறந்தபயன் வேறுண் டோசொல்

எனும் அவரது கவிநடையில் காணலாம். "நல்லதோர் வீணைசெய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்" என்ற பாரதியின் கர்வத்தை ரவியிடமும் காணமுடிகிறது. காற்றில் கலையவிடமாட்டேன் அணைய விடமாட்டேன் எனும் உறுதியை நமக்கு ஊட்டி, "ம். கவிதைசொல்" என ஆழ்மனதைத் தட்டி எழுப்புகிறார். ஒருநாள் ஒரு நண்பர் கவிஞரிடம் இன்று கவிதை எதுவும் வரவில்லையா என்று கேட்டவுடன் பொங்கி பிரவாகம் எடுக்கிறது கவிஞருக்குக் கவிதை. "இன்று நேற்று வந்ததில்லை என் கவிதை" என ஆவேசத்துடன் தொடங்குகிறார். "உண்மையில் ஊறிக் காதலில் கசிந்து சொற்களும் வார்த்தைகளும் பொருள் பொதிந்து சோர்வகற்றித் தோழமையுடன் உலாவரும் வாகனம் தமது கவிதை" என்பதைப் பக்குவமாய் உணர்த்துகின்றார்.

ஒரு கட்டத்தில் கனவுகள் விம்மிப் புதைந்து மனக்கதவைத் தட்டித் திறக்கும்போது கவிதைகள் தமக்குப் போதவில்லை என்று பெருமையாய்ப் பறைசாற்றுகிறார். பின்னர், அவரே அதனை மிகையாய் உணர்ந்து, உள்ளத்தின் உள்ளே கடும்பசியோடு கவிதையே திரிகிறதென்பதை கண்டுகொண்டு கவிதைக்கு நான் போதவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறார். கவிஞருக்கேயுரிய ஆழ்மனப் போராட்டங்களை இவ்விடத்தில் நன்குணரமுடிகிறது. தேநீர் அருந்திக்கொண்டு படிக்கையில் தம்மைத் தேடிக் கவிதை வருகிறது. தேநீரில் சூடும் சுவையும் இருப்பதுபோல் கவிதையில் இரண்டும் கலந்திருக்கிறது.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

என்றார் வள்ளுவர். கவிஞரோ ஒருபடி மேல்போய், கவிதையில் உலகம் சுழன்றுகொண்டிருக்கிறது என்கிறார். கவிதையைப் பெண்ணாக உருவகிப்பது கவிஞர்களின் இயல்பு. பாரதிதாசனும்

கோல இன்பத்தை யென்உள்ளத்திலே - வந்து
கொட்டிவிட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்

என்கிறார். சோலையாகிய பெண்ணோடு நான் வசப்பட்டிருக்கையில் செந்தமிழ்ப்பத்தினிப் பெண்ணானவள் வந்து இன்பம்தரும் கவிதைஎழுத தன்னைத் தூண்டியதாக குறிப்பிடுகிறார். இதனையே கவிஞர் ரவியும்,

கொஞ்சி அழைக்கும் குயிலா இனிமையெல்லாம்
தஞ்சம் அடையும் தமிழா கவிதையிதா

எனக் கேள்வி எழுப்புகிறார். கவிதை நங்கை நான் அழைக்க வருவாளா நான் சொல்லும் உடையை உடுத்துவாளா என்று முதலில் ஐயம் கொள்பவர், இறுதியில் மோனநிலைக்குள் அமர்ந்து கொண்ட மோடி வித்தைக்காரிக்கே தான் வாக்கப்பட்டுவிட்டதாகக் கூறுகிறார். கணம்தோறும் கவிதைகள் புதியதாய்த் தோன்றுவதால் கணம்தோறும் கற்பனையில் தீபமேற்றி உள்ளொளியில் தோய்வதால் கணம்தோறும் கவிஞருக்குத் திருநாளாய் அமைகின்றது. கவிதை எந்த வடிவத்தில் வருகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்வதே சிறப்பு. பிறக்கப்போகும் குழந்தையின் வடிவத்தைத் தாய் எப்படி நிர்ணயிக்க முடியாதோ அதுபோல் கவிஞனும் தன்கவிதையின் வடிவத்தை மரபுக்கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ தீர்மானித்து எழுத இயலாது. கவிதை எப்படி அமையவேண்டும் என்பதைக் கவிஞர் ஓரிடத்தில்,

"அடுத்தவரியில் என்ன சொற்கள் வருமோ என்று தெரியாமல் முதல் வரியில் தொடங்கி, அந்த வரிகள் எங்கே போய் முடியப் போகின்றன என்று புரியாமல் அந்தக் கவிதையின் போக்கில் சென்று, முடிந்த பிறகு அதைப் படித்துப் பார்த்துப் புரிந்துகொள்ள முயன்று, முயன்று, முழுதாகப் புரிந்துகொள்ள முடியாமல் தோற்றுப் போய்க் கொஞ்சம் புரிந்து விட்டதுபோல் கற்பித்துக்கொண்டு மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி மகிழும் கவிதைகளின் சுகமே தனி" என்று தெளிவுபடுத்துகிறார். கவிதையின் பிறப்பு ரகசியத்தைச் சொல்ல வரும் கவிஞர்,

"உயிர்த்துடிப்பு உயர உயரப் பறந்து செல்கையில் சலன அலைகளைச் சந்திக்கும் யுகச்சந்திப்பின் சங்கமத்தில் உயர்கவிதை பிறப்பதாகக் கூறுகிறார்." "கவிதை தன் உயிர். அது தேனும் வண்டுமாய் ஒளியும் நிழலுமாய் கானமும் கவியுமாய் தானும் கவிதையும் இரண்டறக் கலந்திருக்கிறோம்" என்கிறார் கவிஞர் ரவி. பொதுவெளியில் சமூகச் சீர்கேட்டை வேட்டையாடக் கவிஞரிடமே கவிதை வேல் கேட்கிறது. அவரும் தன் உதிரத் திலிருந்து ஒரு பொட்டு வைக்க அது புறப்பட்டுத் தீப்பிழம்பாகக் களியாட்டம் போடுகிறது. கவிதை எப்போதும் கவிஞர் ரவிக்கு, "வஞ்சமின்றி வார்த்தைகளை வாரியிறைக்கும் வள்ளலாக, எஞ் சியிருக்கும் காலமெல்லாம் துணைநிற்கும் சக்தியாக, அவரை எந்நிலையிலும் தளராமல் நிமிரவைக்கும் மகத்தான சக்தியாகத் திகழ்கின்றது."[0]

காற்றில் கலந்த கவிஞர்

பஞ்சபூதங்களில் காற்று இன்றி நாம் ஒரு கணமும் வாழ இயலாது. உயிர் மூச்சாம் காற்றுக்காய் சிலிண்டரைத் தேடி தவித்த உயிர்கள் எத்தனை? அவை கிட்டாமல் மரித்த உயிர்கள் தாம் எத்தனை? உயிர்கொடுக்கும் காற்றுக்கு உலைவைக்கும் மனிதனுக்குப் புயலாய் பாய்ந்து, பனியாய் நடுங்கி, அனலாய்க் காய்ந்து தம் கோபத்தை அவ்வப்போது சீறினாலும், தென்றலாய் வசந்தமாய் வந்து வாழ்விப்பதும் அக்காற்று தான். கவிஞரின் கற்பனை ஊற்றுக்குத் தூண்டுகோலாய் இருப்பதும் காற்றின் தீண்டலே. காற்றின் இயல்பு வீசுவது. வீசாமல் இருந்தால் அது கம்பமா? எனும் கேள்வி கவிஞருக்குத் தோன்றுகிறது. அதனால்

காற்றென்றால் வீசவேண்டும்
கலகலப்பாய்ப் பேசவேண்டும்
கம்பம் போல் நிற்கலாமா
கண்சிமிட்ட மறுக்கலாமா

என்று கேட்கிறார். காற்றில்லையேல் அரசமரம் உம்மென்றிருக்கும். அதனால் குருவிகளுக்கும் குழந்தைகளுக்கும் திண்டாட்டம் என்று பதறுகிறார். காற்றல்லவா கார்மேகத்தை ஜதி போட்டுக் குதித்தாடச் செய்கின்றது. பசுமையால் இவ்வுலகத்தைச் செழிக்கவைக்கின்றது. காற்றுதேவனின் கண்விழிப்பில் கவிதைஓசை விண்ணை நிறைத்தது எனக் கவிதை பூரணத்துவம் பெறுகிறது.

எட்வர்ட் கார்ப்பெண்டர் எனும் அமெரிக்கக் கவிஞர் எழுதிய "ஜனநாயகத்தை நோக்கி" எனும் கவிதையானது, "ரவி, மதி, தாரகைக்கு வணக்கம்" என தொடங்குகிறது. இக்கவிதை, உலகசிருஷ்டியில் நம்மைப் போல் செல்லும் சகப்பிராணிகள் இருப்பதையும் அவர்களும் சேர்ந்து ஒரே நோக்குடன் தோழமையுடன் இயங்குவதையும் சுட்டிக்காட்டி குசலம் விசாரித்து வணக்கம் செலுத்துகிறது. சிருஷ்டி எனும் மகத்தான கூற்று தான் கவிதை என்பதை நமக்கு உணரவைக்கிறது. இந்த அகண்ட இசைவைத்தான் பாரதியின் காட்சி எனும் வசனகவிதையில் காண்கின்றோம். கவிஞர் ரவி எழுதிய, ஓம்! பஞ்சபூதங்களை வணங்குகிறேன் எனத் தொடங்கும் கவிதையிலும் பஞ்சபூதங்களிடம் தனது ஒவ்வொரு அணுவையும் அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றி தம்மை முழுதுமாய் அர்ப்பணிக்கிற ஆத்ம இசைவை கண்டுணர்கிறோம்.

பக்திப்பாதையில் கவிஞர்

பாரதியின் பாசறையிலிருந்து பட்டைதீட்டி எழுந்த ஒளிக்கீற்று கவிஞர் ரவி என்பதைத் தெளிவாக உணர்த்துவதில் அவர் எழுதிய பக்திசார் கவிதைகள் முதலிடம் பெறுகின்றன. பாரதி கண்ணன், மஹாசக்தி, சரஸ்வதி, லட்சுமி, முருகன் என்று பாடியதைப் போல் ரவியும் சகலகலாவல்லிமாலை, புருஷோத்தமன் பதிகம், மதுரை மீனாட்சி உமையே, நிலவாய் முளைக்கும் மனோன்மணி, கல்லானாலும் காளி, மாரித்தாய், அன்னையைப்பாடுவோம், நடத்துகிறான் நாடகத்தை, நலம் தருகின்ற அன்னையே, தேவதை, திருப்பாத தரிசனம் என்று தனது ஆன்மீகப்பயணத்தின் சுவடுகளைப் பதிவுசெய்துள்ளார். முதலில் ஆன்மீக எண்ணம் இல்லாதிருந்த கவிஞர், சாயிராம் குறித்தபாடலையும் பம்பைநதி பற்றியும் சந்தர்ப்பச்சூழலில் பாடநேர்கிறது. பின்னாளில் அவர், டாக்டர் நித்யானந்தத்தைக் குருவாக ஏற்றுக்கொண்டு ஆன்மீகத்தில் ஆழங்கால் பட்டு காடெல்லாம் பாட்டுக்கனல் எனும் தலைப்பில் 51 வெண்பாக்கள் பாடும் அளவிற்கு அவரது ஆன்மீகத் தேடல் உயர்ந்தது. கவிஞரின் வாழ்வில் பின்னாளில் ஏற்படவிருந்த தாங்கமுடியாச் சோகத்தை முன்னரே அவரது ஆழ்மனம் அறிந்துகொண்டு எழுந்த கவிதையே அவரது பக்தி மார்க்கத்திற்கு வித்து.

அந்தி வானச் செந்தழல்போல் விழிசிவந்திடு
அர்த்த ஜாமக் காரிருள்போல் குழல்விரித்திடு
நீலம்பாய்ந்த அலைகடல்போல் வடிவெடுத்திடு
பிச்சியென்றும் பேதையென்றும் பேரெடுத்திடு
சொற்களுக்குள் அடைபடாதே சூலமேந்திப் புறப்படு[13]

என்னும் கவிதை வரிகளைத் தற்போது நினைத்தாலும் உள்ளுக்குள் இனம்புரியா நடுக்கம் ஏற்படுவதாக கவிஞர் கூறுகின்றார். அதேபோல் இன்னொரு கவிதை,

கண்கள் கூப்பிக் காத்து நிற்கிறேன்
கவிதையாகவே அழுகிறேன்
எண்ணம் என்பதே ஏக்கமாக - நான்
இருப்ப தென்பதே மறந்து போக
நந்தன் வந்துவிட்டேன் - இன்னும்
நந்தி விலகவில்லை

இவையெல்லாம் கவிஞரின் அறிவுக்கும் ஆழ்மனதுக்கும் இடையில் நடந்த ஆன்மீகப் போராட்டத்தை வெளிப்படுத்தும் சாளரங்கள். அவரது ஆழ்மனதில் எங்கோ ஓரத்தில் இவ்விதமாய் ஒளிந்திருந்த பக்தித்துளி ஒருகட்டத்தில் பிரவாகமாகிப் பொங்கிப் பெருகிப் பாரதியை விஞ்சும் அளவிற்கு பக்திப்பாடல்களை எழுதவைத்தது.

"மண்ணில் புதைவதற்கா இப்புவி வாழ்வு. இருக்கும்போதே விரிந்திடுவோம் இதுவே ஆன்மஒளிவீச்சாம். எல்லாமாகும் ஒரு விரிவே, அல்லா கடவுள் பரமபிதா" என்று கவிஞரை சர்வசமய சமரச ஞானத்திற்கு அவரது புத்தி சிகாமணியும் மனோன்மணியும் அழைத்துச் சென்றுவிட்டனர்.

சமூகச்சாடலில் கவிஞர்

கவிஞர் ரவிக்குச் சுதந்திரம் மிக முக்கியமான விஷயமாகிறது. எவ்வுயிருக்கும் சுதந்திரம் இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். கவிஞனைப் பொறுத்தவரை அவனது கற்பனாசக்திக்கும் அனுபவப்பிழிவுக்கும் உரம் கொடுக்கும் மூலமே சுதந்திரம். அதனால் தான் சுதந்திரம், விடுதலை எனும் பெயர்களில் இரண்டு கவிதைகளை ஒரே பொருண்மையில் எழுதியுள்ளார். சுதந்திரம் எனும் கவிதையில், "வெள்ளையனை வெளியேற்றியதால் சுதந்திரம் கிடைத்தது என்பது வெறும்

மாயை. பேச்சுரிமை வாக்குரிமை தந்த சுதந்திரத்தால் ஊழல் பெருச்சாளிகளை, ஊளையிடும் நரிகளைப் பதவியில் அமர்த்தி அழகு பார்க்கிறோம். சாதிமத பேதத்தைத் தாராளமயமாக்கி சரித்திரத்தில் இடம்பிடிக்கச் சண்டையிடச் சுதந்திரம் பெற்றோம்" என்று தம் மனக்குமுறலைக் கொட்டித் தீர்க்கிறார். "பாட்டினிலே வெள்ளையரின் ஆட்சியைப் பந்தாடிய பாரதியும், கப்பலோட்டி ஆங்கிலேயரை கதிகலங்கச் செய்தவரும் கடைசிவரை கொடிபிடித்துத் தடியடியில் செத்தவரும் அரையாடைப் பக்கிரியாய் அகிம்சைவழி போதித்தவரும் வருந்தி பெற்றதல்லவா சுதந்திரம்" எனும் கவிஞரின் ஆற்றாமையில் முடிகிறது அக்கவிதை. ஆனால் விடுதலை என்ற கவிதையில், கொதிக்கும் எண்ணைக் கொப்பறை தப்பி முட்புதரில் தான் வீழ்ந்தோம் முட்களுக்கிடையே மலர்களும் உண்டே முன்னேற்றம் தான் தம்பி என்று நம்பிக்கையுடன் பேசுபவர்,

பொய்வேற்றுமைகள் போயொழியட்டும்
உறுதி பூண்டு நிற்போம்
நம்மை நாமே ஆளும் பாடம்
நாளும் இங்கே கற்போம்

என உத்வேகத்தை ஊட்டுகிறார். இவ்விடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் விடுதலை குறித்த சிந்தனை நோக்கத்தக்கது. அவர், தனது கவிதையில்,

கற்றார் கல்லார் கழனியில் உழல்வார்
சிற்றாள் கொல்லர் சிறுதொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்

என்பார்.குற்றமின்றி வாழ்வில் இன்பமாய் இருத்தலைச் சுதந்திரமாய் சொன்னவர் கலைஞர். அறிவிழந்து பேதமையால் சிலர் தமிழை நாசம் செய்வதைப் பொறுத்துக்கொள்ள முடியாத கவிஞர் ரவி,

வள்ளுவர், இளங்கோ, ஆண்டாள், கம்பன், மாணிக்கவாசகர், அருணகிரியார், பாரதியார் ஆகியோர் வளர்த்ததைத் தம் பேதமையால் சிலரழிக்க முயலலாமா? என்று வினா எழுப்புகிறார். நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால் எனும் பாரதியின் வருத்தத்தை, ஏலாக்கோபத்தை ரவியிடமும் காணமுடிகிறது.

“தான் எனும் கர்வத்தைத் தொலைத்துவிட்டு எந்த நன்மைக்கும் நல்வாய்ப்புக்கும் நானில்லை காரணம் என்று உரைத்துவிட்டு இறைவனே காரணம் என அறிந்துகொண்டால் மின்மினி போல் வெளிச்சத்தில் பலியாகாமல் விதைபோல் ஒளிச்சத்தில் மலரலாமே” என்று மானுடருக்கு அறிவுறுத்துகிறார். கையூட்டு வாங்குவதும் கொடுப்பதும் சட்டப்படி குற்றம். இதனைச் சாடும் வகையில் கையூட்டம்மா கையூட்டு எனும் கவிதை அமைந்துள்ளது.

கிழவி காலை அமுக்கிவிடக்
கேட்டாயே நீ சாக்லேட்டு
அன்று முதல் இன்று வரை
எங்கும் எதிலும் கையூட்டு

என வாழ்வின் நிதர்சனத்திலிருந்து துவங்குகிற கவிதை, இறுதியில்

நாடுவாழ நாம் வாழ
லஞ்சப்பேயை நீயோட்டு
லஞ்சம் கேட்டு நீட்டுகிற
கையையெல்லாம் எரியூட்டு

என அக்கினிஜுவாலையாக முடிகிறது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. கவிஞர் ரவியோ, “உன் அடுப்பு நெருப்பின்றி அவிந்து கிடந்தாலும் உள்ளக் கனலை ஊதி வளர்க்கிறேன். அந்தக் கனலை அள்ளிக்கொண்டு நிமிர்ந்துநட. சூழும் இருட்டைச் சுட்டுப் பொசுக்க இதோ நெருப்புவிதை” என ஜகத்தை அழிக்க நெருப்பைஅள்ளிக் கையில் கொடுக்கிறார்.

“கைகுவித்து வேண்டுகிறேன்” “உண்மையைச் சொல்ல அச்சம் எதற்கு?” “தர்மம் எங்கே?” ஆகிய கவிதைகள் அரசியல், வாக்குரிமை குறித்துப் பேசுகின்றன. பணத்துக்காக வாக்கை விற்பது ஒரு விபச்சாரம் என்று கூறும் கவிஞர், “சின்னம் பார்த்து ஓட்டு போடுவதை விட்டுவிட்டு தலைவர்களின் எண்ணம் பார்த்து ஓட்டு போடவேண்டும். சோறளிக்கும் விவசாயி பசியிலே வாட, சூழ்ச்சியிலே வலைபின்னி நாட்டை ஆளும் தகவில்லார் தலையில் ஏறி மிதிக்கவேண்டும்” என்று மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறார். ”நிஜத்துக்கு வேலி இல்லை” எனும் கவிதையில் சாதிகளை முன்னிறுத்தியே சமத்துவம் பேசி திரிபவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டுகிறார். சாதி எனும் சமுதாய அவலம் தீர ஒரு கோடி வீரர் தேவை என்கிறார்.

பாலியல் வன்கொடுமை பற்றி "புயலாய் வர வேண்டும்" எனும் கவிதையில்,

வீட்டில் அன்னை சகோதரிகள்
தொலைந்து போயினரா - இல்லை
காட்டில் இருந்து வந்தனரா
காமுகர் ஆயினரா

என்று குமுறுகிறார் கவிஞர். "சமூகக்கொடுமைகளைக் களைந்தெறிய சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளையெல்லாம் சுட்டுப் பொசுக்கி எரித்திட, இச்சமுதாயத்திற்கு நல்வழி காட்டி என்சிறு பங்கை நான் ஆற்றிடவே என் கவிதைகள் என்னை உறங்கவிடாது மேலேழும்புகின்றன" என்னும் ரவியின் மொழியில் சமூகத்தின் மீதான கவிஞருக்கேயுரிய அக்கறை வெளிப்படுகிறது.

"கவிதைத் தலைப்புகள் ரசனை மிக்கவை. வித்தியாசமான தலைப்புகள் சில நேரங்களில் கவிதைகளைவிட அழகாக அமைந்துவிடுகின்றன." என்பார் பா. செயப்பிரகாசம். கவிதைகளுக்குத் தலைப்பு கொடுத்து அதற்குள் வாசகனைத் திணிக்க கவிஞர் ரவி விரும்பவில்லை. கவிதையைப் புரிந்துகொள்ளும் உரிமையுடைய வாசகனே கவிதையின் தலைப்பைத் தீர்மானிக்கவேண்டும் என எண்ணுபவர். இருப்பினும் அணையாதசுடரேற்றுவேன் எனும் தொகுப்பிலுள்ள 146 கவிதைகளுக்கு கவிதையின் முதல் வரியையோ, உள்வரியையோ தலைப்புகளாகத் தந்திருக்கிறார். அதற்குக் காரணமும் வாசகனே. கவிதையைத் தேடிக் கண்டுபிடித்து நுகர்வதற்காக இதனைச் செய்திருப்பதாக அவரே முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அவரது தலைப்புகளில், "அந்த நிழலுக்கென்ன அவசரம், விரல்நுனிகளில் தீ, ஏடேறத்தான் ஏழுநிமிடம், பூத்திரியில் ஏற்றி வைத்தக் கனலே, வாதாபி காத்திருக்கிறேன், நல்லிசைத்தேநீர்" ஆகியவை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சிறந்து விளங்குகின்றன.

உள்ளத்து உள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெளிந்து உரைப்பது கவிதை

என்றார் கவிமணி. கவிஞர் ரவிக்கோ கவிதை அவரது சுவாசம். காற்றுவாங்கப்போனேன் என்னும்நூல் கவிஞரின்

வாழ்வில் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருடன் நிகழ்ந்த சம்பவங்கள், அவற்றிலிருந்து கற்ற பாடங்கள், உதித்த புதுப்புதுகவிதைகள், புத்தி சிகாமணி, மனோண்மணி எனும் இரண்டு பாத்திரங்களுடன் உரையாடிக்கொண்டே அவர் கவிதையின் சூட்சுமத்தை உணர்த்திய விதம் முதலியன, அந்நூல், பிரபஞ்சத்துக்கும் கவிஞருக்கும் இடைப்பட்ட கவிதை வரலாறு என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

"அணையாத சுடரேற்றுவேன்" எனும் நூலில் ஆன்மீகம் சரிபாதி இடத்தைப் பிடித்தது. மீதியைச் சமூகச்சாடலும், தத்துவமும், நரேந்திரரும், பாரதியும் வள்ளுவரும் ஷெல்லி, வோர்ட்ஸ்வொர்த்தின் மொழிபெயர்ப்பும் நிரப்பிக்கொண்டன. இவ்விரண்டு நூல்களின் கருத்தாழத்தைக் கூர்ந்து நோக்கும் போது கவிஞர் ரவியின் அகத்திலிருந்து புறப்பட்ட ஒளிக்கீற்று, இப்புவியில் நிலவும் சமூகச் சீர்கேடுகளை வேரறுக்கக் கிளர்ந்தெழுந்து, மெல்ல உயர்ந்து பஞ்சபூதங்களில் ஊடுருவி, அகண்டப்பெருவெளியில் பக்திப்பரவசம் பெற்று, ஆகாசவானில் வானவில்லாகப் படர்ந்திருக்கின்றன. இவை புறத்தில் மறைந்துபோகும் வானவில் அல்ல. வாசகனின் அகத்தில் அசையாமல் அச்சாரமிட்டு அமர்ந்திருக்கும் அற்புத வானவில்.

❖

கவிச்சக்கரவர்த்தியின் சொல் முடிச்சுகளும் வானவில் கே. ரவியின் அவிழ்ப்புகளும்

•

முனைவர் அ. சர்மிளா,
தமிழ் உதவிப் பேராசிரியர், ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–2.

மக்களின் தொன்மைகளைப் பாதுகாத்து பின்வரும் சந்ததிகளுக்கு எடுத்துக்காட்டும் நல்சான்றாகத் திகழும் காப்பியங்கள் அச்சமுதாயத்தின் அறிவு மாட்சியைப் புலப்படுத்தும் மிக உயரியக் கலையாகும். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி என்பது அதன் பொழுபோக்குகளையே எவ்வாறு அறிவார்ந்த ஆற்றலாக மாற்றிக் கொள்ளுதல் என்பதைப் பொருத்தே அமைகின்றது. அவ்வகையில் தமிழர்கள் தங்களது வாழ்வியலையே தாலாட்டு முதல் ஒப்பாரி என்ற கலை நுட்பத்தில் உள்ளடக்கினார்கள். அவ்வகையில் மிகப்பெரும் களம், மாந்தர்கள், நிகழ்ச்சிகள், கருக்கள் நம்ப முடியாத புனைவுகள், புராணச் செய்திகள் என்பவான பலக் கூறுகளைக் கொண்ட இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணம் 'குறித்து சொன்னதும் சொல்லாததும்' நூலில் வானவில் கே. ரவி அவர்களின் பார்வையில் கண்ட செய்திகளைப் பகிர்ந்து கொள்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

அ. மானிடம் வென்றது
ஆ. அன்றலர்ந்த செந்தாமரை முகத்தான்
இ. இலங்கை வெற்பு
ஈ. மலரிருந்த அந்தணனும் தனை வணங்கும்
உ. சுந்தரகாண்டம் – பெயர்ப்பொருத்தம்
ஊ. சொல்லின் செல்வன்

என்ற கதைக்களங்களில் கம்பர் கையாண்ட சொல் முடிச்சுகளை வானவில் கே. ரவி அவர்கள் அவிழ்க்கும் பாங்கினைப் பின்வருமாறு காண்போம்.

அ. மானிடம் வென்றது

கடுந்தவமிருந்து தேவர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள், விலங்குகள் மூலமாகத் தனக்கு அழிவு நேரக்கூடாது என்ற வரத்தினைப் பெற்று அதன் அகந்தையில் தேவர்களுக்குக் கொடுமை புரிந்த இராவணனை அழிக்கவே இவன் கேட்காத மதிக்காத மானுடப் பிறவியைத் திருமால் எடுத்தார். மனிதனாகப் பிறக்க கர்மவினை சேர்த்துக் கொள்ளாமல் கர்ப்ப வாசம் புக முடியாது என்ற நியதியை மீறாமல் வேடன் வடிவேற்று இணைகளில் ஒரு புறவை மட்டும் கணையெய்தி கொன்றுவிடுதல், சாபம் பெறுதல் என்று தன்னையும் ஒரு மானிடப் பிறப்பின், இயற்கை நியதிகளுக்கு உட்படுத்திக் கொண்டார். கிருத்துவத்திலும் தேவ குமாரன் தனது மக்களுக்காகவும் அவர்கள் செய்த பாவத்திற்குப் பரிகாரமாகவும் "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்." என்று மனிதப் பிறப்பு ஏற்று அவமானச் சின்னமாம் சிலுவைச்சாவை ஏற்றது ஒப்புநோக்கத்தக்கது. ஆகவே, திருமால் எனும் கடவுளுக்கும் அவனால் உருவாக்கப்பட்ட இயற்கை நியதிகளை மீறாமல் தர்மத்தை நிலைநாட்ட விதியாகிய இறைநீதி தடையாக இருக்கவே முடியாது என்ற காப்பிய முடிச்சை ராமாவதாரம் தோன்றிய நாளிலேயே என்று வானவில் கே.ரவி அவர்கள் அவிழ்த்துக் காட்டுகின்றார்.

ஆ. அன்றலர்ந்த செந்தாமரை முகத்தான்

மேற்சுட்டிய உவமை பரதன் நாடாள்க நீ காடாள்க இது அரசக்கட்டளை எனக் கைகேயியும் "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ" என்ற ராமர் கூற்றிற்கும் இடையில் நிற்கும்,

இப்பொழுது எம்ம னோரால் இயம்புதற் (கு) எளிதே யாரும்
செப்பருங் குணத்து) இராமன் திருமுகச் செல்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு(து) அலர்ந்த செந்தா மரையினை வென்ற (து) அம்மா

என்ற பாடலில் அமையும் முன்பு பின் என்ற சொற்களே அப்போது அலர்ந்த செந்தாமரையினை வென்றது ஒத்த முகமாய் இராமனின் முகம் கைகேயின் வாசகம் கேட்பதற்கு முன்பும் கேட்டதற்குப் பிறகும் பொலிந்தது என்பதாம். ஆகையால் கைகேயின் வார்த்தையைக் கேட்ட பின் அல்ல என்றுமே அவன் முகம் அன்றலர்ந்த தாமரையாய்த் திகழ்ந்தது என்று வானவில் கே.ரவி அவர்கள் தெளிவிக்கிறார். இது எவ்வாறெனில்,

விலங்கிவில் லுமிழும் பூணான் விழுச்சிறைப்பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னான்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலு மகிழ்வு நெஞ்சிற் பொலிதலு மின்றிப் பொன்னார்ந்து
உலங்கலந் துயர்ந்த தோளா னுழ்வினை என்று விட்டான்

கட்டியங்காரனால் சிறை செய்யப்பட்டதற்கும் வருத்தம் கொள்ளவில்லை. இப்போது சுதஞ்சனனால் மீட்கப்பட்ட போதும் மிகுதலும் இல்லை என்று எப்போதும் ஒரே நிலை உடைவனாய் சீவகனைத் திருத்தக்கத்தேவர் காட்டுகிறார். இதுபோன்றே கம்பரும் எப்போதுமே இராமனது முகம் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற முகமாய்த் திகழ்வது என்று கூறுகிறார் என வானவில் கே. ரவி அவர்கள் கூறுவதும் பொருத்தம் உடையதேயாகும்.

இ. இலங்கை வெற்பு

சொற்சுருக்கம் பொருளாழம் இதுவே சிறந்த நடையாகும். இவ்வகையில் பாண்டிய நாட்டைக் கடந்து மகேந்திர மலை அருகே மலைகள் பல சூழ்ந்து நிமிர்ந்து நின்ற இலங்கை காலப்போக்கில் கடலில் அமுங்கியதால் அதன் மேற்பகுதி மட்டும் ஒரு சிறிய தீவாக காட்சியளிக்கின்றது என்ற வால்மீகியின் நீண்ட

விளக்கத்தை இலங்கை வெற்பு' என்ற இரு சொற்களிலேயே கம்பர் உணர்த்தி விட்டார் என்று கூறும் வானவில் கே. ரவியின் நுண்மான் நுழைப்புலம் பாராட்டிற்குரியதாகும். இவ்வாறே மணிமேகலை காப்பியத்திலும் உவவனத்தில்

உறையும்,

முதியோள் கோட்டத்து அகவயின் இருந்த
அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்

பொன்திகழ் தெடுவரை உச்சித் தோன்றி
தென்திசை பெயர்ந்த இத்தீவத் தெய்வதம்

என்ற பாடலடிகளில் மேருமலையின் உச்சியில் தோன்றி தென்திசை வந்து நாவலந்தீவின் இயற்கையையும் மக்களையும் காவல் காத்த பெண் தெய்வம், காந்தமன் என்பான் நீரவேண்டி தவமிருந்த போது அகத்தியர் தன் கமண்டத்திலிருந்த காவிரியைப் பாயவிட்டார். அது சம்பாதி உறையும் கோவிலுக்கு முன்பாகப் பாய்ந்தோடிய போது சம்பாவதியைக் காவிரிப் பெண் வணங்கியவிடத்து, உலகினை உண்டாக்கியப்போதே தன்னையும் உண்டாக்கி இவ்வூருக்குத் தன் பெயரினை நிலைநாட்டினார் பிரம்ம தேவன். ஆனால் இனி இவ்வூர் உன் பெயராகிய காவிரிப்பூம்பட்டினம்' என்றே அழைக்கப்படும் என்ற வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியது 'முதியோள் கோட்டம்' என்ற சொல்லும் என்பதை மணிமேகலை காப்பியமும் மொழிந்து காப்பிய ஆசிரியர்களின் ஆளுமைகளின் புலமையினைப் புலப்படுத்துகின்றன.

ஈ. மலரிருந்த அந்தணனும் தனை வணங்கும்

தாமரை மலர்மீது வீற்றிருக்கும் அந்தணன் பிரம்மா. இப்பிரம்மாவாக ராமாயணத்தில் அவதரித்தவர் பரதன் ஆவார். கங்கையின் தென்கரையின் நின்ற குகன் முதலில் தவறாக கணித்து பின்பு மரவுரியை அணித்த கோலத்தைக் கண்டு எம்பெருமான் பின்பிறந்தார் பிழைசெய்வாரோ என்று தெளிந்து பரதன் நிற்கும் அக்கரைக்கு சென்று பரதனைத் தொழ,

வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனுமவன் அடிவீழ்ந்தான்

என்ற அடிகளில் அமையும் சொற் முடிச்சுகளை வானவில் கே. ரவி அவர்கள் அவிழ்க்கும் பாங்கு எண்ணி மகிழத்தக்கதாகும்.

குகன் தோழ மலரிருந்த அந்தணனும் வழங்கினான் என்றால் பிரம்மாவால் வணங்கத்தக்கவர்கள் சிவன், திருமாலுமே ஆவார்கள். அவ்வாறிருக்க மலரிருந்த அந்தணன் குகனை வணங்கினான் என்பதில் குகன் முருகனின் அம்சமாவார். முன்பொருநாள் பிரம்மாவின் படைத்தல் அகந்தையை அகற்றும் வேளை முருகனின் திருவிளையாடலில் சிவனைச் சந்திக்க வந்த பிரம்மன் மற்றவர்களை வணங்கி முருகனைப் பாலகன் என மதிக்காமல் சென்றார். அதனால் முருகன் பிரம்மாவை நோக்கி நீர் யார்? என, 'ஓம் எனும் மந்திரத்தைக் கொண்டு படைத்தல் தொழில் புரிபவன் நான் எனக் கூற, 'ஓம்' மந்திரத்தின் பொருள் யாது? என முருகன், கேட்கத் தெரியாது விளித்த பிரம்மாவைச் சிறை வைக்க, முருகனிடமிருந்து பிரம்மாவை மீட்க எண்ணிய சிவன் உமக்குத் தெரியுமோ? என வினவ, எனக்குத் தெரியும் என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டுமெனில் நான் இருக்குமிடமான சுவாமிமலையில் வந்து நீ சீடனாகி அம்மந்திரத்தின் பொருளைக் கற்றுக் கொள் எனத் தந்தைக்கே ஆணையிட, சிவபெருமான் திருவையாறு வழியாக செல்கிறார். இங்கேயே,

பிறையிளங் கண்ணியி னானைப்
பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக்
.....
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

மலரிருந்த அந்தணனாகிப் பிரம்மா எனும் பரதன், குகன் எனும் அவதாரத்தில் இருக்கும் முருகனை வணங்கினான் என நாவுக்கரசர் மொழியும் வரலாற்றையே வானவர் கே.ரவி அவர்களும் வெளிப்படுத்தி மறைபொருளை உணரவைக்கின்றார்.

உ. சுந்தரகாண்டம் - பெயர்ப்பொருத்தம்

மனைவியானவள் தன்னில் ஒரு பாதி என்ற அக அழகைப் புற அழகாகிக் கொண்ட மெய் (உண்மை) அழகு சுந்தரர் சிவபெருமான் ஆவார். இப்பேறு கொண்ட சிவபெருமானே அனுமனாக திருமாலுக்கு ஏற்ற தோழராக அவதரித்து "ராம' மந்திரத்தைக் கொண்டே அனைத்து செயல்களிலும் வெற்றியடையும் அனுமனைப் பற்றியே பேசுவது சுந்தரகாண்ட

நிகழ்ச்சிகள் ஆகும். ஆகவே அனுமனின் செயலழகு என்று பொருள் கொள்ளாது, அனுமனாக அவதரித்த சுந்தரர் எனும் பெயருடைய சிவபெருமானைக் குறித்து நின்று சுந்தரகாண்டப் பாராயண' என்பது 'சிவதுதியே' எனும் நுண்பொருள் முடிச்சை அவிழ்த்து நம் எல்லோரையும் வானவில் கே.ரவி அவர்கள் மகிழச் செய்கின்றார்.

வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல்
சீர்த்த மதுரகவி செய்கலையை - ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து

என்ற பெரியதிருமந்திரம் எனப்படும் 'நம' பதத்துக்கு இணையானது மதுரகவி ஆழ்வாரின் 'கண்ணிநுண் சிறுதாம்பு' பாசுரம் எனக் கூறப்படுவதன் காரணம் இதில் திருமாலை நம்மாழ்வார் வழியே காண்கிறேன் என்றே உணரும் இவரின் நினைவும் சுந்தரகாண்டப் பாராயணம் ரகசியத்தோடு ஒத்ததேயாகும்.

ஊ. சொல்லின் செல்வன்

காப்பிய முடிச்சுகளை ஆங்காங்கே வைத்து விட்டு தகுந்த இடத்தில் அவிழ்த்து சுவை ஏற்படுத்துபவர்களே சிறந்த காப்பிய ஆசிரியர்களாக வலம் வருகின்றனர். அவ்வகையில் கம்பக்கவிச்சக்கரவர்த்தி கையாளும் முடிச்சுகளும் அதில் பொதிந்துள்ள பொருள் நுட்பங்களும் மிகவும் ஆழமானவைகளும் சுவை மிகுந்தவைகளுமாகும். இத்தலைப்பில் அமையும் சொல்லின் செல்வன்' என்ற தொடரும் அனுமனைக் கண்ட முதலே இராமன் கூறுவதாகக் கம்பர் காட்டும் பெயரடையாகும். இச்சிறப்புப் பெயரடை 'தன் நாமமாகிய செல்வத்தைப் பெற்றவன் அதை வைத்தே இவன் தன் பராக்கிரமங்களையெல்லாம் சாதிப்பவன். மேலும் வெறும் சொற்கள் செல்வமாகா. ஆனால், சர்வ வல்லமை மிக்க, எல்லா இடர்களையும் களையத்தக்க, பிறவிநோய் தீர்க்கக் கூடிய ராமநாமமே செல்வம். அச்செல்வத்தை அபரிமிதமாகப் பெற்றவன் அனுமன் என்ற பொருட் நுட்பமும் காப்பிய முடிச்சும் கொண்ட தொடர் போலவே, என்று கூறி வானவில் கே.ரவி அனைவரையும் வியக்க வைக்கின்றார்.

காதலர் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்

நிரம்பிய காதலர்களான கோவலன் கண்ணகிப் பிரிவார். அவர்களின் இணைந்த கரங்கள் பிரியும் என்ற மனையறம் படுத்திய காதையின்' முடிச்சு 'அரங்கேற்று காதையில் 'அவிழ்க்கத் துவங்கி 'கொலைக்களக் காதையில் ' முற்றிலும் அவிழ்க்கப்பட்டுவிடுகின்றது. இவ்வாறே சொல்லின் செல்வன்' என்ற முடிச்சும் சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் போன்றவற்றிலேயே அவிழ்க்கப்படும் என்ற வானவில் கே. ரவியின் கூற்று எண்ணி வியக்கத்தக்கதாகும்.

தொகுப்புரை

மேற்குறித்த தலைப்புகளில் முடிச்சுகளாய் இருந்த கருத்து நுட்பங்களையும் சொல்லழகுகளையும் தெளிவான விளக்கங்கள், சரியான மேற்கோள்கள் என்பவைகளைக் கொண்டு சாதுர்யமாய் அவிழ்த்த வானவில் கே. ரவி அவர்களின் பணி சிறப்புடையதாகும். மேலும் இவர் போன்ற படைப்பாளர்களின் படைப்புகள் தமிழ் ஆர்வலர்களுக்கு மாறுபட்ட சிந்தனையும் நுட்பப் பார்வையும் தந்து புதுப்புதுப் படைப்புகள் தோன்றுவதற்கு வழிகோல்வதாய் அமைவன என்பது திண்ணமே.

உசாத்துணை நூல்கள்

1. விவிலியம் (புதிய ஏற்பாடு, மத்தேயு 1:21)
2. கம்பராமாயணம்
3. சீவக சிந்தாமணி
4. மணிமேகலை
5. நாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, திருவையாற்றுப் பதிகம்.
6. உபதேச ரத்தினமாலை

❖

கவிஞர் வானவில் கே. ரவியின் 'நமக்குத் தொழில் கவிதை'

•

கவிஞர் இல. சாந்தா
முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல் உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்

என்னும் மும்மந்திரத்தினை உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்பவர் வானவில் கே, ரவி. பாரதியின் கவிதை வரியினைக் கருப்பொருளாக வைத்து வனப்பு மிக்க நூலினை உருவாக்கியுள்ளார். 'நமக்குத் தொழில் கவிதை' என்ற இந்நூலில் வானவில் கே.ரவி அவர்களின் மிடுக்கான கவிதை மொழியினையும் கவிதையியல் உருவாகின்ற சிந்தனைத்துளிகளையும் நாம் இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

கவிதை மொழிப்பாங்கு

கவிதை எந்த மொழிவழிப் பாடப்படுகிறதோ அந்த மொழி அறிந்தோர் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு அமைய வேண்டும். அந்த மொழி பேசும் அனைவரும் அன்றாடம்

பயன்படுத்தும் சொற்களில் அமைய வேண்டும். அவற்றிற்கு மொழித் தூய்மை தேவை என்பது பாரதியின் எண்ணம். இச்சிந்தனையைக் கருத்தில் கொண்டவராய் அவர் இயற்றிய கவிதைளில் பிறமொழிச் சொற்கள் சேராமல் பொரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களையே கையாண்டு இருப்பதைக் காண முடிகின்றது.

ஒரு காட்சி அல்லது புலன் நுகர்ச்சி உள்ளொளியைத் தூண்டும் பொழுது ஒருவருக்குச் சரியான மொழி வடிவச்சொற்கள் தோன்றுமேயானால் அது கவிதையாகப் பிறக்கிறது. அந்தக் கவிதை சாகாவரம் பெறுகிறது என்கிறார். எந்தச் சொல், கேட்பவர் மனத்தில் கிளர்ச்சியுறச் செய்கிறதோ அந்தச் சொல்லே கவிதையில் இடம் பெறும் தகுதி பெறுகிறது. நிலைத்த உயிர்ப்புடன் பிறந்த கவிதை அனைவராலும் பாராட்டப்படுகிறது என்று கூறாமல் "சாகாவரம்" பெற்ற கவிதையாக உருவாகிறது என்று கூறுகிறார். அமிழ்தம் எவ்வாறு இறப்பில்லாமல் உயிர்வாழச் செய்யும் ஆற்றல் பெற்றதாக இருக்கிறதோ அது போன்று சொற்கள் கவிதையில் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அதற்குச் "சாகாவரம்" என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். "பேறு" என்ற சொல்லுக்கு மாற்றாக "வரம்" என்ற நடைமுறையில் உள்ள சொல்லை உரைநடையில் பயன்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

நான் எழுப்பும் ஓசைதான் இந்த
மாநிலம் எங்கும் மோதிச் சிதறா
வானம் பூமி என வையம் பிளந்து
இடைப்பட்ட வெளிஎங்கும் இடிமின்னல் மழையாகிக்
காற்றைச் சொடுக்கிக் காதல் நினைவுகளை
ஆற்றங்கரையில் அழகு மலர்களாய்
அடுக்கி வைத்துப் பச்சைப் பசேலென்ற
புன்னகையின் ஊடே புகுந்து விளையாடி
உங்களுக்கென்றோர் உலகம் படைத்து
உங்கள் மனத்துக்குள் ஊழிக் கன லெழுப்பி
திங்கள் பகலென்று தேகம் எடுத்தபடி
எங்கும் பரவி எக்காளம் இடுவதெல்லாம்
நான் எழுப்பும் ஓசை தான்
ஓசை எழுப்பும் உத்வேகம் தான் என்
ஆசைக் கடையாளம் ஏக்கத்துக் காதாரம்

இக்கவிதையின் ஊடே, சொடுக்குதல், எக்காளம், ஏக்கம் என்னும் தூயத்தமிழ்ச் சொற்களையும், தேகம், உத்வேகம் என்னும் நடைமொழியில் கையாளப்படுகின்ற சொற்களையும் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது. "பச்சை பசேலென்ற" "புன்னகையின் ஊடே புகுந்து விளையாடி" இவ்வரியில் இடம் பெற்றுள்ள ஊடே என்னும் சொல்லிலும் புகுந்து என்னும் சொல்லிலும் கவிதை புகுந்து வருவதைக் காணமுடிகிறது.

கவிதையைப் படிப்பவரின் உள்ளத்தில் பதிய வைப்பதற்கான மற்றொரு புதிய உத்தியை ஆசிரியர் கையாண்டிருப்பது சுவையைக் கூட்டுவதாக இருக்கிறது. "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று மகாகவி பாரதி கேட்டார். அப்படிபட்ட சொற்கள் கவிஞனுடைய உள்ளொளியின் அதிர்வுகளை எதிரொலிக்கும் சொற்கள். படிப்பவருடைய உள்ளத்திலும் அதிர்வுகளை ஏற்படுத்த வல்ல சொற்களைக் கையாள வேண்டும் என்று கவிதை எழுதுவதற்குப் பயன்படுத்தக் கூடிய சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறார் வானவில் கே. ரவி.

கவிதை ஒளியும் ஒலியும்

புறக்காட்சியில் தோற்றம் கொள்ளும் ஒரு சிறு பொறி ஓர் ஒளித்துகள் ஒரு கவிஞனுடைய உள்ளொளிச் சுடரைத் தாக்கித் தூண்டும். எந்தக் கற்பனை ஒரு புறம் காட்சியாகவும் இன்னொருபுறம் உள்ளொளியின் மாட்சியாகவும் வளர்நிலை பெறுகிறதோ, அந்தக் கற்பனையே காலம் வென்று நிற்கும் கவிதையாகிறது.

உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின் வாக்கினிலே
ஒளியுண்டாகும்

புறத்தே, புலன்களைத் தாக்கும் அதிர்வுகளை மட்டும் மொழியாக்கம் செய்பவன் கவிஞனாக இருக்கலாம். அந்த அதிர்வுகளைத் தன் உள்ளொளியின் அதிர்வுகளோடு இழைத்து சுருதி எனப்படும் பண்நிலை சேர்த்து வெளிப்படுத்துபவனே மகாகவிஞன் ஆகிறான் என்று கவிதையின் தோற்றுவாயான ஒளியும் ஒலியும் பெறும் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

ஒரு காட்சி அல்லது புலன் நுகர்ச்சி ஒருவன் உள்ளொளியைத் தாக்கும் போது தான் "உள்ளூக்கம் பெறுகிறேன்" என்று சொல்கிறான். விழியையும் விழிச் சுடரையும் வேறுபடுத்தி, ஒன்றை வானக் கருமை என்றும், இன்னொன்றைச் சூரிய சந்திரர்களின் சுடரொளி என்றும் நுட்பமாகப் பிரித்துப் பார்க்கும் திறன் புறக் கண்களுக்கு இல்லை. அது அகத்தூண்டுதல் அல்லது உள்ளூக்கம் எனப்படும். உள்ளூக்கத்தால் மட்டுமே உள்ளொளி தூண்டப் பெறுகிறது என்று கவிதை பிறப்பதற்கான வழியினை இங்கே கவிதை பிறப்பதற்கான தோற்றுவாயாக எடுத்துரைத்துள்ளார்.

எவன் ஒருவன் தன் புலன்களைத் தாக்கும் புற அதிர்வுகளைத் தன்னுள் ஆழ்ந்து, ஊடுருவிச் செல்ல அனுமதிக்கிறானோ, அவனுடைய உள்ளொளி அந்த அதிர்வுகளால் தூண்டப்படுகிறது. இந்த அதிர்வுகளை உலகுக்கு அறிவிக்கும் வேட்கை மேலோங்குமேயானால் அவன் மகாகவியாக முடியும். அதற்கு மொழித்துணை தேவைப்படுகிறது என்று கவிதை பிறப்புக்கான இலக்கணத்தை வகுக்கிறார்.

'கவிதைக்கு வடிவம், கவிஞனால் முன் முடிவு செய்யப்படுவதில்லை. தன் வடிவைக் கவிதை தானே முன் முடிவு செய்து கொள்கிறது' என்று அரவிந்தர் எழுதியதை மேற்கோளிட்டு மேலும் கவிதை வடிவத்திற்குச் சான்று தருகிறார்.

"உண்மையான கவிதை விளங்கிக் கொள்ளப்படும் முன்பே தொடர்பு கொள்ள வல்லது" என்று டி.எஸ்.எலியட் கூறிய கருத்தினை எடுத்திக்காட்டிக் கவிதைக்கு விளக்கம் தருகிறார்.

சில கவிதைகள் புரிவதே இல்லையே என்று கேட்கிறார்கள்.

கவிதை புரிய வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்று
சொல்வேன் ஒரு கவிதை என்பது அனுபவக் கடத்தல்

என்று கூறி சுஜாதாவின், கவிதை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான விளக்கத்தையும் விளக்கி, கவிதையை ஒரு யோகமாகப் பயிலும் வேட்கையை வளர்த்துக் கொள்வோம்; அண்டப் பெருவெளி அனைத்தையும் பாதிக்கும் ஓர் பெரிய பொறுப்பு கவிஞர்களுக்கு இருக்கிறது. அதை உணர்ந்து கவிதை படைக்க வேண்டும் என்கிறார்.

இதயம் வெடித்துக் சிதறுண்டு போனாலும்
உதயக் கதிரழகை உற்றுக் கவனியுங்கள்

உலகப் பரப்பே உதிர்ந்து போனாலும்
புலனறிய வாருங்கள் புலனழிந்து போனாலும்
புதிய வடிவங்கள் பூண்டு மகிழுங்கள்
சிந்தை அழிந்தாலும் செவி மலர்ந்து நில்லுங்கள்
வாழ்க்கைப் புயல் என்ன செய்யும் அப்போது?

சிந்தை அழிந்தாலும் செவியால் இன்புற்று நில்லுங்கள் என்னும் கவிதை மொழியில் திருவள்ளுவர் மெல்ல எட்டிப் பார்க்கிறார்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை (குறள் 411)

என்னும் கருத்தினைச் செவியால் உணர்ந்து உள்ளத்தே ஏற்றோமானால் உள்ளத்தின் உள்ளொளியின் அதிர்வுகளைத்தாங்கி, கவிதையைப் படைக்க முடியும். அந்தக் கவிதை உயர்ந்த கவிதையாக முன்முடிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாக வலிமையுடையாத இருக்கும் என்கிறார்.

நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற சொற்றொடரை ஆராய்கிறார். இங்கே "தொழில்" என்ற சொல் பொருளீட்டலைக் குறிக்கவில்லை என்பதற்கான சான்றினை விளக்குவதன் மூலம் வருவாயை ஈட்டச் செய்ய கவிதையைப் படைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. கவிதையைப் படைத்துக் கொண்டு இருந்தாலே கவிதையின் நற்கருத்தின் தாக்கம் படிப்பவரின் சிந்தயை ஒளிரச் செய்யும். அக்கவிதை கவித்துவம் பெற்று, தானே பொருளை ஈட்டித் தரும் என்கிறார்.

நீர்இன்(று) அமையா(து) உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்(று) அமையா(து) ஒழுக்கு (குறள் 20)

நீரின்றி உலகு அமையாது. அந்த நீர் இல்லையானால் ஒழுக்கம் உலகில் நிலைபெறாது என்பது போல் நமக்குத் தொழில் கவிதை என்ற சொற்றொடரில் தொழில் என்ற சொல் பொருளீட்டலைக் குறிக்கவில்லை என்றாலும் வயிற்றுப் பிழைப்புக்காக வேறு தொழில் செய்யும் கட்டாயத்துக்குத் தள்ளாமல் தம்குடியை வாழ்விக்க வேண்டிய பொருளைத் தர வேண்டும் என்ற வேண்டுதலே பாடலின் ஆதாரப் பொருளாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

பசிக்கு உணவு கேட்பது உடல் அமைப்பின் கட்டாயம். ஆனால் பசிக்கும் பொழுது கூழ் வேண்டாம். இனிப்பே வேண்டும் என்பது சிந்தையின் வேலை. தேவைகளை ஆசைகளாக மாற்றி அலைக்கழிக்கும் சிந்தைக்குக் கட்டளை இட்டு சோர்வு இன்றிப் பயனுள்ள கவிதைகளைப் பொழிய வேண்டும். அதன் மூலம் நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்ற ஒருமித்த ஆர்வம் உடையவராக இருக்கும் கவிஞனே மகாகவியாக உருவாக முடியும். எனவே தான் பாரதி மகாகவியாகத் திகழ்கிறான் என்று மகாகவிஞர் எப்படி உருவாகிறார் என எடுத்துரைத்துள்ளார்.

பாரதியின் வரிகள்

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்"

"பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட
வேண்டும்''

மேற்காணும் கவிதை வரிகளின் வாயிலாக இடைவெளியில்லாச் சக்தி வெள்ளமாய்க் கவிதைகள் பொழிய வேண்டும் என்னும் பாரதியின் கூற்றை ஏற்கிறார். பொருள் தேடும் தொழிலாக இல்லாமல் நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோர்வின்றிப் பயனுள்ள கவிதைகளைப் பொழிந்து கொண்டே இருப்பதே நாட்டிற்கு உழைத்தல் என்று ஒருமித்தலே கவிதை படைப்போருக்கு முழுச்சிந்தனையாக இருக்க வேண்டும் என்கிறார்.

யுக்தியும் பக்தியும்

தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றின் மூலம் தெளிவு செய்யும் யுக்தியே உவமை, உருவகம் போன்ற அணிகளாக வெளிப்படுகிறது. ஒரு கவிதையின் உயிரோட்டம் அதில் கையாளப்பட்டுள்ள யுக்தி இல்லை. ஒரு கவிதையின் உயிரோட்டம் அதை உண்டாக்கித் தந்த பக்தியே என்று கவிதையில் யுக்திக்கும் பக்திக்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

புத்தியைக் கொண்டு புனைகின்ற கவிதைகள்
பூஜைக்கு சேர்வதில்லை கவி
ஒத்திகையில் கொஞ்சம் பக்திசேராவிடில்
உள்ளம் தொடுவதில்லை.

என்கிறார் பேராசிரியர் வ.வே.சு. வானவில் கே. ரவியின் கருத்தும் பேரா. வ.வே.சு. கருத்தும் ஒன்றாக இருப்பதைக் காண முடிகிறது.

பக்தி என்பது ஒரு குறிப்பிட்ட வடிவத்தை மட்டும் குறிப்பதன்று. இயற்கை அழகில் மெய்மறந்து ரசிப்பது கூட பக்தியே என்கிறார். மெய்மறத்தல் என்ற சொற்றொடர் இரு பொருளைத் தருகிறது. ஒன்று மெய் எனப்படும் உடலை மறத்தல். மற்றொன்று புறநிகழ்ச்சி, சூழலை மறத்தல். இவற்றின் காரணமாய் நிகழ்வின் தாக்கத்தில் தன் நிலை மறந்து அந்நிகழ்வில் மூழ்கிய நிலையில் பிறக்கும் கவிதை. நிகழ் உண்மைக்கு அல்லது புற உண்மைக்கு ஒவ்வாத சில கவிதை, பொய்யாகத் தோன்றினாலும் அக உண்மை ஒளிச்சுடரில் தோற்றம் கொண்டு வெளிப்பட்டால் இறவா நிலை பெற்று உயர்வு நவிற்சி எனப் புதுவடிவம் பெற்று வெளிவருகிறது.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற (குறள் 300)

என்ற குறளில் வாய்மையை விட நன்மை பயக்கும் பொருள் அல்லது நிகழ்ச்சி எதுவுமே இருந்ததில்லை என்கிறார்.

எனவே, மெய்மறந்து போகும் பக்தியில் கவிஞன் பாடலாமே தவிர தன் உள்ளத்தின் உண்மை ஒளியை மறந்து, மறைத்துப் பாடுவதெல்லாம் சிறந்த கவிதைகளாக விளங்குவதில்லை என்று யுக்திக்கும் பக்திக்கும் உள்ள வேறுபாட்டை மிகச் சரியான கோணத்தில் விளக்கியிருக்கிறார்.

விட்டு விடுதலையாகி நிற்பாய்

மோட்சம், முக்தி என்றெல்லாம் வடமொழியில் கூறப்படுவது தமிழில் வீடுபேறு அல்லது வீடு என்று வழங்கப்படுகிறது. ஒருயிர் பல்வேறு பிறவிகள் எடுத்து, இறுதியில் விடப்பட்டு முக்தி நிலை அடையும் என்ற நம்பிக்கையைப் பெரும்பாலான மதங்கள் மற்றும் மெய்யியல் நூல்கள் அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளன. இக்கருத்தினைப் பல கவிஞர்களின் வரிகளின் மூலம் விவரிக்கின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீத்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் (குறள் 10)

என்று திருக்குறள் சொல்லியதையும்

கள்ளப் புலக்குரம்பைக்
கட்ட விழ்க்க வல்லானை *(திருவாசகம் 147)*

என்று மாணிக்கவாசகர் பேசியுள்ளதையும்,

பழைமையைப் போற்றும் கவிஞர்கள் அதில் உள்ள தீய கருத்துகளையும், சமூக அமைப்பிற்கு ஒவ்வாத கருத்துகளையும் கடுமையாகச் சாட வேண்டும் என்பதற்குப் பாரதியை உதாரணக் கவிஞராக ஏற்று அவர் கவிதைகளை மேற்கோள் காட்டி விளக்குகிறார்.

முக்தி அல்லது வீடுபேறு என்பது எங்கோ சென்று தேடிப் பெறுவதன்று. இயல்பு நிலையிலும் மேன்மையாக வாழ்வோர்க்கு இந்தப் பிறவியிலேயே விடுதலையுண்டு என்ற கருத்தை ஜீவன் முக்தி என்ற தலைப்பில் பாரதியார் பாடிய வரிகளின் மூலம் விளக்கம் தருகிறார்.

ஐயமுண்டு பயமில்லை மனமே இந்த
ஜன்மத்திலேவிடு தலையுண்டு நிலையுண்டு

நம்பிக்கையும், நற்சிந்தனையும் இருந்தால் என்றும் வெற்றியே என்ற பாடலின் கருத்தை எடுத்துக்காட்டி, பாரதி எந்நிலையிலும் சிறந்த மகாகவிஞனே என்பதை விட்டு விலகி விடு என்ற தலைப்பில் பல இடங்களில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்.

வெல்லும் சொல்

கவிதையின் சிறப்புக்குச் சொல்வளம் இன்றியமையாதது.

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து *(குறள் 645)*

என்ற குறளில் திருவள்ளுவர் சொற்சிக்கனத்தையும் சொற்பெருமையையும் விளக்குவதை எடுத்துக்கூறி, கவிதைக்குச் சொற்சுவை தேவை என்பதைக் கூறுகிறார். சொல்லழகு என்பது அடுக்குமொழியோ, எதுகை, மோனை, இணையடி போன்ற அணியழகோ இல்லை. இந்த இடத்தில் இச்சொல்லிற்கு மாற்றாக வேறொரு சொல்லை அமரச் செய்தால் என்னும் சிந்தனை எதுவோ அதுவே வெல்லும் சொல். அவற்றாலேயே கவிதையின் சிறப்பு கூடுகிறது என்று வெல்லும் சொல்லுக்கு இலக்கணம் தருகிறார்.

மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்

என்பது பாரதி வாக்கு.

சிறந்த சொல்லாட்சிக்குத் திருவள்ளுவர், பாரதி, பாரதிதாசன், மாணிக்க வாசகர், இளங்கோவடிகள், கம்பர் ஆகியோரின் கவிதை வரிகளை எடுத்துக்காட்டி, திறன் ஆய்வு செய்து இருப்பது போல் நயம் கவிதையில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகக் கவிதை சிறக்கும் இடத்தை உணர்த்தியுள்ளார்.

சில இடங்களில் சொற்களுக்கு மாற்றாக ஒலிக்குறிப்புகளும், ஒலி நயத்துடன் உணர்ச்சியைத் தூண்டுவதாகக் கவிதையில் இடம் பெற்றுச் சிறப்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

வெய்யோன் ஒளி தன் மேனியின்
விரிசோதியில் மறைய
பொய்யா எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ
மழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்தோர்
அழியா அழகுடையான்

என்ற பாடலில் ஐயோ என்ற வார்த்தைக்குப் பொருள் சொல்ல முடியாது. அந்தச் சொல் தான் உணர்வுகளை ஊடுருவி உயிர் நிலைக்குள் சென்று ஒளி அளாவி நிற்கிறது.

பார்அடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட்டெரிவன ஓகோ

என்னும் அடிகளில் ஓகோ என்னும் சொல்லையும் ஒலிக் குறிப்பாகப் பயன்படுத்தி, பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் உணர்ச்சியை அப்படியே வெளிப்படுத்தியுள்ளான்.

கவிதைச் சுவை

கவிதை ரசனைக்குரியது. பார்வைக்குப் புலப்படும் பொருள்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா விதமான புலனும் நுகர்ந்து பார்க்கக் கூடிய விதத்தில் 'அழகு' என்ற சொல்லைப் பொருள் செய்து கொண்டால், கவிதை நடை அழகியல் பெறுகிறது.

ஒண்பான் சுவை என்று தொல்காப்பியம் கூறுகிறது.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப *(தொல். 1197)*

புல்லினில் வயிரப் படைதோன்றும் கால்
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே

புல்நுனியில் புன்முறுவல் பூக்கும் எழிலும் பூவின் விளிம்பில் மலரும் வியப்பும் அன்றாடப் புலப்பாட்டிற்கு ஆளாவதில்லை. விண்வெளியென்றாகும் விந்தையும் அப்படியே. இந்த நிலையையும் கடந்து புலப்பட முடியாத அகப்பாட்டினை எல்லாம் புலப்படுத்த முயல்வது கவிதை.

ஐந்து புலன்களாலும் உணரப்படும் அனைத்தையும் கவிஞன் தான் உணர்ந்தவாறே மற்றவர் உணர வெளிப்படுத்தவதும் அப்படிப்பட்ட வெளிப்பாட்டில் காட்சி முதலான புலப்பாடுகள் மட்டும் அன்றி, அவை ஏற்பட்ட முறையையும் அவற்றைக் கவிஞன் அனுபவித்த விதத்தையும் இணைத்து வெளிப்படுத்துவதும் கவிதையால் மட்டுமே இயன்றதாகிறது. ஆகவே பகிர்வுச் சாதனங்களில் கவிதை முதன்மை பெறுகிறது என்னும் சுவையியற் கூற்று விளக்கத்தை வழங்கியுள்ளார் கவிஞர் வானவில் கே. ரவி.

முடிவுரை

வானவில் கே. ரவி, நமக்குத் தொழில் கவிதை என்ற நூலில் கவிதை ஒளியும் ஒலியும், யுக்தியும் பக்தியும், நமக்குத் தொழில் கவிதை, வெல்லும் சொல். விட்டு விடுதலையாகி நிற்பாய், கவிதைச் சுவை என்னும் பொருண்மைகளில் கவிதை மரபு, கவிஞனின் மனநிலை, கவிதை அழகியல் ஆகியவற்றிற்கு விளக்கம் தந்திருக்கிறார். அவற்றிற்கான விளக்கத்தைத் திருவள்ளுவர், கம்பர், பாரதி ஆகியோரின் கவிதை வரிகளை எடுத்துக்காட்டி விளக்கிய விதம் நேர்த்தியாகவும் எம்போன்ற ஆய்வாளருக்கு முழுமையான புரிதலைத் தரும் விதத்திலும் அமைந்துள்ளது.

❖

வானவில் கே. இரவியின் அணுவைத்துளைத்த இயல்பியல் வரலாறு

•

முனைவர். சித்திரவேலு கருணாணந்த ராஜா
இலண்டன்.

எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும் என்கிறார் ஔவையார், எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு என்கிறார் திருவள்ளுவர். இங்கு எண் அறிவியலாகவும், எழுத்து கலைகளாகவும் விரிவடைந்துள்ளதால் அறிவியலும் கலைகளும் தமிழன்னையின் இருகண்களாகத் தற்போது திகழ்கின்றன.

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில்லை
சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை!..
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்தவசையெனக் கெய்திட லாமோ
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!
தந்தை அருள் வலியாலும் - என்னைச்

சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை யென்றும் இருப்பேன்

என்று தமிழன்னையின் கூற்றாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார் பாரதி.

அதனை மெய்யாக்கும் நோக்கில் பாரதிமீது நிரம்பப் பற்று கொண்டிருந்த கிழக்கிலங்கை தந்த தவமுனி சுவாமி விபுலானந்தர் அவர்கள் இயல்பியல் எனப்படும் பௌதீகத்துறையிலும் கலைத்துறையிலும் பட்டம்பெற்றவர் பல்துறை விற்பன்னரானார். ஆனால் தமிழ்ப் பேராசிரியராகவே தன் தொழிலை ஆற்றினார். அதனால் சுவாமி விபுலாநந்தரின் தலைமையில் கலைச் சொல்லாக்கக் கழகம் 1934 இல் அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் அயராத பணியினால் 'கலைச் சொற்கள்' என்னும் அகராதி நூல் 1938 இல் சென்னைத் தமிழ்ச்சங்கத்தினால் வெளியிடப்பட்டது.

வானவில் கே.ரவியவர்களும் தமிழன்னையின் இரு கண்களான அறிவியலையும், கலைகளையும் போற்றிப்பாதுகாக்கும் அரும்பணியில் தம் தொழிலுக்கு அப்பால் ஈடுபட்டுவருகிறார். தொழிலால் அவர் ஒரு சட்டவல்லுநர், அதற்கு மேல் சிறந்த கவிஞர், கலைஞர், அறிவியல் ஆய்வுகளில் ஈடுபடும் எழுத்தாளர் என்ற பன்முகப் பரிமாணங்களோடு வலம் வரும் அறிஞர். அதற்கும் மேலாகப் பாரதியின்மீது தீராத பித்தராகித் தமது வானவில் இலக்கிய அமைப்பினூடாகப் பாரதியை ஆண்டுதோறும் ஜதி பல்லாக்கில் சுமந்து விழா நடத்தி நினைவுறுத்தி வருபவர். இங்குத் திரு. வானவில் கே. ரவியின் "இருபதாம் நூற்றாண்டின் இயற்பியல் வரலாறு" என்னும் நூலே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

கருப்பொருள்

இயற்பியலை இயல்பியல் என்றே ரவி குறிக்கிறார் எனினும் பழக்க தோஷத்தினால் இக்கட்டுரையில் அது இயற்பியல் என்றே குறிக்கப்படுகிறது. எமது காலத்தில் பௌதிகம் – அதாவது பிஸிக்ஸ் என்றே அதைக் கூறிவந்தோம். இயற்பியலின் பிரிவுகள் பல ஒலி, ஒளி, மின்சாரம், இயக்கம், காந்தம் என்று பல விடயங்களை அது ஆராய்கிறது. இங்குக் குறிப்பாக அணுவும், அண்டமுமே ஆசிரியரின் வரலாற்றுப் பார்வைக்குள்

வீழ்த்தப்பட்டுள்ளன. குறிப்பாக அணுவின் வரலாற்றையே அவர் கையிலெடுத்திருக்கிறார்.

இங்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் அதாவது 1886 இல் எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றைய கணினி யுகம் வரையான காலத்திற்குட்பட்ட வரலாறே ஆசிரியரின் ஆய்வுப் புலத்தினுள் கொண்டுவரப்பட்டுள்ளது. எக்ஸ் கதிர்கள் கண்டு பிடிக்கப்பட்டது முதல் அதன் பாவனை உலகெங்கும் பரவியது. குறிப்பாக மருத்துவத்தில் உடலின் உள்ளுறுப்புகளைப் படம்பிடித்து அவற்றிலுள்ள கோளாறுகளை உய்த்தறியும் ஸ்கானிங் முறைகளும் விருத்திபெற்றதால் நோய்களும், நோய்க்கான காரணிகளும் கண்டறியப்பட்டு அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் விருத்தியடைந்தன. இவ்வாறு மனித குலத்திற்குப் பெரும் நன்மையளித்த விடயங்களைக் கருத்திற்கொண்டே ஆசிரியர் எக்ஸ் கதிர்களின் கண்டுபிடிப்பை இயல்பியலின் மூலப்புள்ளியாக வைத்துக்கொண்டு அதிலிருந்து தமது வரலாற்றுப் பார்வையைத் தொடங்குகிறார்.

நூலாசிரியர் தமது கட்டுரைகளில் தமிழ்க் கலைச்சொற்களைப் பாவித்து மக்கள் மத்தியில் தமிழில் அணுவிஞ்ஞானம் கொண்டு செல்லப்படுவதை ஊக்குவிக்கிறார். ஆயினும், சர்வதேச மாநாடுகளில் பங்கு பெற்றும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த நூல் மூலம் கிடைக்கும் அறிவு ஓர் அடிப்படையாக இருக்க வேண்டுமென்பதற்காக நூலிலுள்ள பதங்களுக்கான ஆங்கில விளக்கங்களையும் அனுபந்தமாகத் தந்திருக்கிறார்.

உதாரணமாக – அணுக்கருவொன்றைச் சுற்றியோடும் இலத்திரன்கள், நியூத்திரன்கள், புறோட்டன்கள் ஆகியவற்றுக்கு அவற்றிலுள்ள மின்னேற்றங்களைக் கருதி முறையே எதிரான், சீரான், நேரான் என்னும் பொருத்தமான தமிழ்ச்சொற்கள் பதிலீடு செய்யப்படுகின்றன. இருப்பினும், தற்காலத்தில் இவ்வாறு ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களை முழுமையாக மாற்றுவது மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உதவிகரமானதாக இருக்குமா என்ற கேள்வி எழுகின்றது. கட்டுரைகளை வாசிக்கும்போது பல சொற்களின் பொருள்கள் இலகுவில்

மறந்துபோய் விடுவதால் அடிக்கடி கலைச்சொல்லகராதியைப் பார்த்து நினைவூட்டிக்கொள்ள வேண்டியேற்படுகிறது.

எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலப்பகுதியைத் தொடக்கப்புள்ளியாக வைத்து நூலை நகர்த்திச் செல்லும்போது பலராலும் அதை எளிதில் புரிந்து கொள்ள முடியாதென்பதால் ஆசிரியர் முன்கதைச் சுருக்கம் என்றவோர் பகுதியினூடாகச் சிலவிடயங்களைத் தெளிவுபடுத்துகிறார். அவற்றில் பிரதானமானவை இரண்டு விடயங்களாகும்.

அது காலவரை சர் ஐசாக் நியூட்டனின், முடிந்த முடிவாகக்கருதப்பட்ட ஒளித்துகள் கூற்று, அடுத்தது டால்டனின் பொருட்கள் அனைத்தும் அணுக்கள் எனப்படும் அடிப்படைத்துகள்களால் ஆனவை, அவற்றை மேலும் பிளக்க முடியாது என்பது. இதனைப் பொதுவாக அணுக்கொள்கையென்பர். சர் ஐசாக் நியூட்டனின் ஒளி துகள்வடிவமானது என்ற கொள்கையினடிப்படையில் பலர் செய்த பரிசோதனைகளால் ஒளி துகளுமல்ல, அலைவடிவமுமல்ல இரண்டிற்குமிடைப்பட்டது என்ற முடிவு பெறப்பட்டது. அவ்வாறே, டால்ட்டனின் அணுக்கொள்கை – மாற்றப்பட்டு அணுக்கள் இலத்திரன், நியூத்திரன், புரோட்டோன் என்னும் உப துணிக்கைகளாகப் பிளக்கப்படக் கூடியவை என்பது கண்டு பிடிக்கப்பட்டது.

எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட கையோடு கதிர்வீச்சைப்பற்றியும் அல்பா, பீற்றா, காமாக் கதிர்களைப் பற்றியும் புதிய புதிய ஆய்வுத்தகவல்கள் வெளிவரத் தொடங்கின. அவற்றிற்கெல்லாம் துணைசேர்ப்பதாக வேதியலாளர்களால் கண்டு பிடிக்கப்பட்ட ரேடியம், யூரேனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களும் அவற்றின் உப்புக்களும் உபயோகப்படுத்தப்பட்டு. அவற்றின் கதிர்வீசும் தன்மை உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு கதிர்வீச்சு மூலகங்கள் கண்டு பிடிக்கப்பட்டபோது தோரியம், ரேடியம் போன்ற அத்தகைய மூலகங்களை மேடம் கியூரி அம்மையாரும் அவரது கணவரும் சேர்ந்து கண்டு பிடித்ததனால் மருத்துவத்துறையில் மேலும் முன்னேற்றங்கள் உருவாயின. அதுவரை காலமும் புற்று நோய் போன்ற கொடிய

நோய்களுக்கு உரிய வைத்தியம் என்னவென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த மருத்துவ விஞ்ஞானிகளால் ரேடியோ தெராபி எனப்படும் கதிர்வீச்சுச் சிகிச்சை மூலம் வளர்ந்து வரும் புற்று நோய் இழையங்களை அழிக்கும் வழிவகை காணப்பட்டது.

மனித குலம் பெரும் பயனடையும் வகையில் எக்ஸ் கதிர்கள், கதிர்வீச்சு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகளான பெக்ரல், மேடம் மேரி கியூரி, அவரது கணவர் பியேர் கியூரி ஆகிய மூவருக்கும் பௌதிகத் துறையில் 1903 இல் நோபல் பரிசு கிடைத்தது. பின்னர் கணவர் இறந்து விட்டார் ஆனால் கியூரி அம்மையார் சோர்ந்து விடாமல் தொடர்ந்து தனது ஆய்வுகளைச் செய்து வேதியியல் துறையில் மீண்டும் நோபல் பரிசைப்பெற்றார். நீண்டகாலம் இவ்வாராய்ச்சிகளால் கதிர்வீச்சுக்கு உட்பட்டதால் குருதிப் புற்று நோய்க்கு ஆளாகித் தன் 67வது வயதில் மரணடைந்தார். உலகம் அவர் மானுடத்திற்காற்றிய சேவையை மறவாமல் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கதிர்வீச்சு மூலகமொன்றிற்கு 'கியூரியம்' எனப் பெயர் சூட்டியுள்ளது.

கியூரி அம்மையாரின் மரணத்தின பின்னரும் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்ட அவரது புதல்வியும் கணவரும் தங்கள் ஆய்வுகளுக்காக நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டனர். அவர்களது குடும்பமே இவ்வாறு சேவை செய்தமை உலகம் வியக்கும் வரலாறாகும்.

கண்ணுக்குப் புலனாகா நுண்ணலைகளின் கண்டுபிடிப்பால் உலகடைந்த நற்பயன்கள் எண்ணிலடங்கா. அவ்வளவு காலமும் தந்திகளின்மூலம் கடத்தப்பட்ட செய்திப் பரிமாற்றம், மின்காந்த அலைகள் கண்டு பிடிக்கப்பட்டதால், கம்பியில்லாத் தந்தி எனப்படும் வயர்லெஸ் முறைமையில் அனுப்பப்பட ஏதுவா யிற்று. இத்தகைய ரேடியோத் தகவல் பரிமாற்றத்திற்குக் கால்கோளிட்டவர் 'குக்ளில்மோ மார்க்கோனி' என்னும் இத்தாலியராவார். இவ்வாறாக 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி பல பயன்தரத்தக்க கண்டுபிடிப்புகளை உலகக்கு அளித்த காலமாகக் கருதப்படுகின்றது. இந்தச் செய்திகள் திரு வானவில் ரவியவர்களின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

மிகப் பழங்காலத்திலிருந்தே சைவ சித்தாந்தம் நாம் காணும் பேரண்டமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமென்னும் ஐந்து பூதங்களாலானது, அதிலிருந்து உற்பத்தியானதே நமது உடலாகிய பிண்டமுமென்ற அடிப்படைக் கருத்தியலைக் கொண்டிருந்தது. மேலைநாட்டு அறிவியல் தனது வேதியியல், இயல்பியல் ஆய்வுகளால் தற்போது 120 இற்கும் அதிகமான தனிமங்களைக் கண்டு பிடித்து விட்டதுமல்லாமல் அத்தனிமங்களில் கதிர் வீசும் தன்மையுடையனவற்றைப் பல்வேறு ஆக்க, அழிவுத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் நுட்பங்களையும் உலகுக்களித்துள்ளது. ஆயினும் தனிமங்களாலான அண்டகோளங்கள் தங்கி நிற்கும் ஊடகம் எதுவென்பதற்கு விஞ்ஞானம் "ஈதர்" என்னும் பதிலையே அளித்து வந்தது. சைவ சித்தாந்தமோ வெற்றிடங்களனைத்தையும் நிரப்புவது ஆகாயமே என்று பதிலளிக்கிறது. தற்போது இந்த ஈதர்க் கொள்கை தவிர்க்கப்பட்டு விட்டது. சடமும் சக்தியுமான அண்டமானது விரிவடைகின்றது அவ்விரிவோடு சேர்ந்து ஆகாயமும் விரிகின்றது, இது ஒரு ஆரம்பப்புள்ளியிலிருந்து (Singularity) வெடித்துச் சிதறிப் பரவிக்கொண்டிருக்கிறது என்பதே தற்கால பிரபஞ்சத் தோற்றம் பற்றிய கொள்கையாகவுள்ளது. இதனையே பெருவெடிப்புக் (பிக் பாங்க் தியறி) கொள்கையென்கிறார்கள். இதை முதலில் வெளிட்டவர் ஜார்ஜஸ் லேமாய்ற்றர் (Georges Lemaître) என்னும் பெல்ஜியத்தைச் சேர்ந்த மதகுரு ஆவார். தற்காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரபஞ்சங்கள் (மல்ட்டி யூனிவர்ஸ்) இருக்கக்கூடுமோ என்னும் சிந்தனை வலுப்பெற்று வருகின்றது.

இயற்பியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர்களில் பலர் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாவர். ஆனால், அவர்களுக்கெல்லாம் தலையாய ஆய்வாளராக வெளிப்பட்டவர் ஒரு சாதாரண காப்புரிமை உதவிப் பரிசோதகராகப் பணியாற்றிய பேரறிஞர் ஆல்பிரட் ஐன்ஸ்டீன் ஆவார். பொருட் திணிவிலுள்ள ஆற்றல் அல்லது சக்தியின் அளவை E=MC2 – அதாவது பொருளின் திணிவாலும் ஒளியின் வேகத்தின் தற்பெருக்கத்தாலும் (வர்க்கம்)பெருக்குவதன் மூலம் கணிப்பிடும் நுட்பமான சமன்பாட்டை அவர் கண்டறிந்தார். இங்கு ஒளியின் வேகம் ஒரு மாறிலியாகும், அது நொடிக்கு 186,000 மைல்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பிரமாண்டமான சக்தி,

கதிர்வீசக்கூடிய மூலகங்களில் இலகுவாக வேதியியல் முறைகளால் வெளிப்படுத்தப்படக் கூடியது. உதாரணமாக யூரேனியம் எனப்படும் தனிமத்தில் இக்கதிர்வீச்சுக் காணப்படுகின்றது. இதனை உய்த்துணர்ந்த ஐன்ஸ்டீன் யூரேனியத்தைக் கொண்டு சக்திமிக்க குண்டுகளைத் தயாரிக்கலாமென்று முன்மொழிந்தார். அதன் விளைவே இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானில் வீசப்பட்ட அணுக்குண்டுகளாகும். மனித குலம் போற்றி வணங்க வேண்டிய ஐன்ஸ்டீனே அழிவாயுதமான அணுக்குண்டைக் கண்டு பிடித்தார் என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. அதனைக் கண்டு பிடித்தவர் றெபட் ஒப்பன் ஹைமர் என்னும் அமெரிக்கராவார். அதற்குக் கால்கோளிட்டவரே ஐன்ஸ்டைன்.

$E=MC^2$ என்ற சமன்பாட்டையும் இதனோடு தொடர்பு பட்ட பல கணித நிறுவுதல்களையும் பொதுவாக ஐன்ஸ்டீனின் சார்புக் கொள்கை என அழைக்கின்றனர். இன்றுவரை சார்புக் கோட்பாட்டை முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் அறிவியல் உலகில் மிகச்சிலரே என்று கருதப்படுகின்றது. மேலும் சிலர் அக்கோட்பாட்டின் சில அம்சங்களை விமர்சித்தும் உள்ளனர். அதற்கான காரணம் அது புரிந்து கொள்ளக் கடினமானதாகக் காணப்படுவதுமாகும். உதாரணமாக அண்டத்தில் பயணப்படும் ஓர் ஒளிக்கதிரானது நேர்கோட்டில் போகுமென்ற கூற்றை மறுத்த ஐன்ஸ்டீன் அண்டத்திலுள்ள பாரிய திணிவுகளால் – அதாவது கோள்கள் சூரியன்கள், கருந்தொளைகளால் – ஈர்க்கப்பட்டு வளைந்து நெளிந்தே போகுமென்றும் அண்டம் கோளவடிவானதால் அவ்வடிவில் சுற்றியே செல்லுமென்றும் கருதினார். ஓரிடத்திலிருந்து புறப்படும் ஒளிக்கற்றையானது அண்டத்தைச்சுற்றி மீண்டும் அது புறப்பட்ட இடத்திற்கு வருமென்ற கருத்து இருந்தாலும் அதனை பரிசோதனைகள் மூலம் வாய்ப்புப் பார்க்க யாதொரு வழியுமில்லை. காரணம் மிகப் பெரிய அண்டத்தில் ஒளி தனது இயல்பான வேகத்தில் சென்றாலும் கோடிக்கணக்கான ஆண்டுகளின் பின்னரே தான் புறப்பட்ட இடத்தை அடைய முடியும்.

ஐன்ஸ்டீனின் கோட்பாடுகளில் மற்றொன்று நான்காவது பரிமாணமாகும். பொருள்களுக்கு நீளம், அகலம், உயரம் என்னும் முப்பரிமாணங்களோடு நேரம் அல்லது காலம்

என்னும் நான்காவது பரிமாணமும் உண்டென்பதாகும். இதுவும் புரிந்து கொள்ளச் சற்றுச்சிக்கலானதே. உதாரணமாக ஒளியின் வேகத்தை நாமடைந்து விட்டால் காலத்தைக் குறுக்கிவிட முடியும் அதாவது – இன்று புறப்படும் நாம் நேற்றுப் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால் ஒளியின் வேகத்தை எய்துவதென்பது இலகுவானதல்ல. அந்த வேகத்தில் எதுவும் சடநிலையிலிருந்து சக்தி நிலைக்கு மாறிவிடும், திணிவில்லாத நிலையேற்பட்டுவிடும்.

இவ்வாறான பல விந்தையான விஞ்ஞான உண்மைகளைக் கணிதமுறைகளால் நிரூபித்த ஐன்ஸ்டீனை சிந்தனையாளர்களின் உச்சமென்று அறிவியலாளர்கள் வியக்கின்றனர். வானவில் ரவி தமது இயற்பியல் வரலாற்றில் ஐன்ஸ்டீனைப் பெரிதும் சிலாகித்து அவரது கோட்பாடுகளுக்குள் ஆழச்சென்றுள்ளமை சிறப்பாயுள்ளது.

அடுத்து அணுவுக்கு வருவோம். தாம்சன் என்பார் முன்மொழிந்த இலத்திரன்களைப் பற்றிய கோட்பாடுகளைத் தொடர்ந்து நியூசிலாந்தைச் சேர்ந்த இங்கிலாந்தில் மான்செஸ்டரில் ஆய்வுகளை மேற்கொண்ட ரதர் போட்டென்னும் அறிஞர் அணுவின் மையக்கருவிலிருக்கும் நேர்மறை ஏற்றமுடைய புரோட்டான்கள், ஏற்றமற்ற நடுநிலையான நியூத்திரன்களை பற்றிய ஆய்வு முடிவுகளைத் தெரிவித்தார்.

அதுவரை காலமும், அணுக்கருவைச்சுற்றித் துணிக்கைகளாக இலத்திரன்கள் தனித்தனிப் பாதைகளில் சுற்றுகின்றன என்றிருந்த கோட்பாடு கைவிடப்பட்டு இலத்திரன்கள் ஓரிடத்திலில்லாது அணுக்கருவைச் சுற்றியுள்ளவோர் கட்டுப்பாடான மேலோட்டினுள் புகாராகப் பரந்து அலைகின்றன என்ற கோட்பாடு மேலோங்கியது. இந்த அனுமானம் அவர் அல்பாத் துணிக்கைகளை ஓர் தங்கத்தகட்டில் மோதவிட்டு தெறித்துத் திரும்பிவரும் துணிக்கைகளை அவதானித்ததால் பெறப்பட்டது. தெறிப்பு அணுக்கருவில் அல்பா துகள்கள் மோதியதால் ஏற்பட்டது. இலத்திரன்கள் அலையும் புலத்தினூடாகச் சென்ற அல்பாத் துகள்கள் ஊடறுத்துச் சென்றுவிட்டன. அவை எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்தன.

தொடர்ந்து செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அணுவுக்குக் கரு உண்டென்றும் அதில் நேர்மின்னேற்றமுடைய புரோட்டான்களும், ஏற்றங்களற்ற நியூத்திரன்களும் கட்டப்பட்டுள்ளன என்பதையும் நிரூபித்தது. எதிர்மின்னேற்றமுடைய இலத்திரன்கள் ஏன் நேர்மின்னேற்றம் கொண்ட புரோட்டான்களால் கருவை நோக்கிக் கவரப்படவில்லையென்ற கேள்விக்கு அணுக்கருவுக்கும் இலத்திரன்கள் சஞ்சரிக்கும் அணுவின் வெளியோட்டிற்கும் இடைப்பட்ட தூரம் மிகப்பெரிதென்ற பதில் கூறப்பட்டது. உதாரணமாக ஒரு உதைப்பந்தாட்ட மைதானத்தின் நடுவில் வைக்கப்பட்ட பந்தைப் போன்றதே அணுக்கருவென்றும் இலத்திரன்கள் உலாவுமிடம் மிகப்பரந்த அந்த மைதானமென்றும் அனுமானிக்கப்பட்டது. எவ்வாறு ஒரேவகை சமமான நேர் மின்னேற்றமுள்ள புரோட்டான்கள் அணுக்கருவுக்குள் கட்டிவைக்கப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு அணுக்கருவிலுள்ள கட்டும் சக்தியும் அதாவது மைய சக்தியும் (nuclear strong force) மின்காந்த சக்தியும் காரணமெனக் கூறப்பட்டது. இச்சக்திகளின் விளைவால் நியூத்திரன்களும் புரோட்டான்களும் சுழற்சி நிலையில் அணுக்கருவில் உள்ளன, அதனால் ஒன்றையொன்று தள்ளும் ஒத்த ஏற்றங்களின் வெளியேறும் ஆற்றல் தவிர்க்கப்படுகிறது என்று முடிவு செய்யப்பட்டது. இவ்வாய்வுகள் இன்றும் முடிவிலாது தொடர்கின்றன.

ரதர் போட்டின் ஆய்வுகளைத் தொடர்ந்து பல 'பாட்டிக்கிள் அக்சலறேற்றர்ஸ்' எனப்படும் துகளூக்கிகள் உருவாக்கப்பட்டுப் பல்வேறு உலோகத்தகடுகளில் வேறுபட்ட வேகங்களில் மேற்குறித்த துகள்கள் மோதவிடப்பட்டதில் இன்னும் பல துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிற்குப்பல பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன. திரு ரவியவர்கள் அவற்றிற்குப்பல தமிழ்ப் பெயர்களைச் சூட்டியிருக்கிறார். அவற்றில் மணி, சிலம்பு, பாலை, நெய்தல், மருதம் என்று பல பெயர்களும் உள்ளன.

ஆங்கிலத்தில் போட்டோன்கள், நியூற்றினோக்கள் மூவோன்கள், பொசித்திரோன்கள், அல்பாத் துணிக்கைகள், குவாக்குகள் என்று குறிப்பிடப்படும் இவ்வகைத் துகள்களைத் தொடர்ந்து, குவாண்டம் தியரி எனப்படும் நுண்துகட் கொள்கை, அவற்றினுள் உள்ள ஸ்ரிங் – அதாவது நுண்இழைகளின் அதிர்வுக் கோட்பாடு என அணு தொடர்பான ஆய்வுப்பரப்பு

விரிந்து கொண்டே செல்கின்றது. தற்போது இத்துகளாய்வு "ஹிக்ஸ்போசான்" எனப்படும் கடவுட் துகள் ஆய்வுவரை வந்துள்ளது.

அணுக்களிலுள்ள புரோட்டான்களுக்குத் திணிவைக் கொடுக்கும் மர்மத் துகளொன்றைப்பற்றிப் பலர் சிந்தித்துக்கொண்டிருந்தனர். ஹிக்ஸ் என்பார் சுவிட்சர்லாந்து சேர்ண் ஆராய்ச்சி மையத்தில் 27 கிலோமீட்டர் நீளமான குகையொன்றில் புரோட்டான்களைப் புரோட்டான்களுடன் மோதவிட்டு ஆராய்ந்தபோது இத்துகள் இருப்பது உண்மையென்று நிரூபிக்கப்பட்டது. இத்துகள் போஸான்கள் என்னும் குடும்பத்தைச் சேர்ந்த துகளாயிருந்ததால் ஹிக்ஸ் போஸான் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இந்தச் சோதனைக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்ற போது சமீபத்தில் மறைந்த விஞ்ஞானி 'ஸ்டீவன் ஹாக்கிங்' இதனால் நமது பிரபஞ்சத்தில் ஒரு அழிவுதரும் வெற்றிடம் ஏற்பட்டுவிடக்கூடும். ஒரு பெருவெடிப்பு நிகழ்ந்து மாற்றுப் பிரபஞ்சமொன்று உருவாகிவிடவும் கூடும், ஜாக்கிரதையென்று நகைச்சுவையாகக் கூறினார்.

யாவையுமாய் அல்லையுமாய், சோதியன், துன்னிருள், தோன்றாப்பெருமையன், ஆதியன் அந்தம் நடுவாகி அல்லான், உள்ளான், இல்லான் என்றெல்லாம் மணிவாசகர் இறைவனைப் பாடுகிறார். இந்தக் கடவுட் துணிக்கைகளை எண்ணித்தானோ. நூலாசிரியரும் அதற்கேற்ப அத்துகள்களுக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டியிருக்கிறார். மணிவாசகர் இறைவனைத் துன்னிருள் என்றார். அதுவும் தற்போது விஞ்ஞானிகளின் சிந்தனையைத் தூண்டிவரும் கரும்பொருள் அல்லது டாக் மற்றர் பற்றியோ தெரியவில்லை. ஈர்த்தென்னையாட்கொண்ட எந்தையென்றார், அண்டம் முழுவதும் வியாபித்து நிற்கும் ஈர்ப்புச்சக்தியைத்தான் அப்படிக் கூறினாரோ தெரியாது. முதல் இடை கடையென்ற முக்காலமுமற்ற ஊழியின் ஆரம்பத்தைப் பெருவெடிப்புக் கோட்பாட்டை விஞ்ஞானிகள் கூறுமுன்னரே நம்மவர்கள் கூறிவிட்டனர். அது பக்தியின் பாற்பட்டதாயினும் அறிவியல் அங்கே புதைந்து கிடக்கின்றது. அதனாலேயே இந்திய அரசு நடராஜர் சிலையைச் சேர்ண் ஆய்வுமையத்திற்குப் பரிசாக வழங்கியது.

இப்போது கிட்டத்தட்ட 99.99 வீதம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது கடவுட்துணிக்கையே என்று உறுதிப்படுத்தக் கூடியதாயிருப்பதால் நாம் கடவுளைத் துணிக்கை ரூபத்தில் அல்லது அவர் சிருஷ்டிப்புக்குப் பாவித்த மூலப்பொருளைக் கண்டுபிடித்திருக்கிறோம். ஆனால் எப்போது அறிவியல் சாட்சாத் கடவுளை அவருடைய நிஜ ரூபத்தில் கண்டுபிடித்துச் சொல்லப் போகிறதோ தெரியவில்லை. நாம் கண்டு பிடிக்கும் துகள்களுக்காவது அத்தகைய பெயர்களைச் சூட்டி மகிழலாம்.

கட்புலனுக்கும், உணர்திறன்மிக்க மானிகளுக்கும் புலனாகக்கூடிய சடப்பொருளியல்புகளுக்கும் அப்பால் இப்பிரபஞ்சத்தைக் கிட்டத்தட்ட 90 சதவீதம் நிரப்பிக் கொண்டிருப்பது டாக் மற்றர் எனப்படும் கரும்பொருளேயென்ற கருத்து மேலோங்கி வருகின்றது. அதை விட டாக் எனேர்ஜி – கரும் சக்தி பற்றிய கருதுகோளும் உருவாகியுள்ளது. இவைபற்றிய ஆய்வுகள் போதிய பரிசோதனைகள் மூலம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வகையில் திரு ரவியவர்களின் நூலில் அணுக்கள், உப அணுத்துணிக்கைகள், அண்டக் கதிர்கள் பற்றிய விளக்கங்கள் மேலும் மிகத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்களும் கற்பிப்போரும் அறிந்து பயனடையலாம்.

ஒரு வேண்டுகோள்

அறிவியற் தமிழை நாம் நமது எதிர்கால சந்ததிக்கு இலகுவாக எடுத்துப்போக வேண்டுமாயின் ஓர் பொதுமைப்பாடு அவசியமானதாகும். சூரிச்சைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச விஞ்ஞானக் கழகத்தின் – இயற்பியல், வேதியியல் பிரிவுகள் பொதுப்படையான கிரேக்க, லத்தீன்வழி ஆங்கிலச் சொற்களை அங்கீகரித்திருப்பதால் உலகளாவிய ரீதியில் அவற்றைப் பாவிப்பதே சிறந்தது. உதாரணமாக – அல்பா, பீற்றா, காமாக் கதிர்களை அகர, உகர, மகரக் கதிர்களெனப் பதிலீடு செய்யாமலும், ஐதரசன், நைதரசன், ஒட்சிசன் போன்ற

தனிமங்களையும் சேர்வைகளையும் அதே லத்தீன் வழிப்பெயர் கொண்டே குறிப்பிடுவதும் உகந்ததென்பது எனது கருத்து. மேலும் இலங்கையிலும் இந்தியாவிலும் விஞ்ஞானச் சொற்களை வேறுபடாமல் வைத்திருக்க முயற்சிப்பதும் நன்மை பயக்கும் – ஏற்கெனவே பல சொற்கள் புழக்கத்திலுள்ளன. புதிய சொற்களை உருவாக்குவது தவிர்க்கப்படலாம்.

சுவாமி விபுலானந்தர் சென்னையிலிருந்து உருவாக்கிய கலைச் சொற்கள் தற்போது பாவனையிலில்லை. உதாரணமாக, அவர் நைதரசனைக் காலகமென்றார், ஒட்சிசனைத் தீயகமென்றார், நைதரசனொட்சைட்டை (NO) காலகத் தீயதை என்றார் நைதரசனீரெட்சைட்டை காலகத் தீயசையென்றார் (NO_2). ஆனால் சர்வதேச விஞ்ஞானக்கழகம் உருவாக்கப்பட்டதால் தற்போது எல்லோரும் பொதுவான சொற்களையே பயன்படுத்துகிறார்கள். அதிதீவிரமாக உலகமயமாக்கல் நடைபெறுகையில் நாமும் அறிவியலில் சமாந்தரமாக முன்னேற இது அவசியமானதாகும்.

திரு. ரவியவர்கள் தனது இயற்பியல் வரலாற்றைக் கூறும் நூலில் தகுந்த கலைச் சொற்களையுருவாக்கிப் பாவித்திருப்பதோடு அச்சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களையும் அனுபந்தத்தில் தனியாகக் குறித்து விளக்கமளித்திருக்கிறார். ஆயினும் கட்டுரைகளில் தேவையான இடங்களில் ஆங்கிலச் சொற்களையும் சேர்த்துவிடுவது படிப்பதிலுள்ள சிரமத்தைப் பெரிதும் குறைக்கும்.

காலவரிசைப்படி இயற்பியல் விஞ்ஞானிகளின் பெயர் விபரங்களையும் அவர்கள் கண்டுபிடித்தவற்றையும் ஆசிரியர் நூலில் குறித்திருப்பது நூலுக்கு அணிசேர்க்கின்றது. கண்டு பிடிக்கப்பட்டுள்ள பல அணுத்துகள்களுக்கு ஆங்கிலப் பெயர்களே சூட்டப்படாது கிரேக்க அரிச்சுவடியிலிருந்து பலதுகள்களுக்குப் பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், அவற்றிற்குத் தமிழ் பெயர்கள் சூட்டப்பட்ட அட்டவணையொன்றும் தரப்பட்டுள்ளது. அவற்றின் எதிர்காலப் பயன்பாடு தமிழ் அறி வியலில் உதவக்கூடும்.

மனிதன் தனது இயற்பியல் அறிவை ஒளி, ஒலி கதிர் ஆராய்ச்சிகள் மூலமாகவும், வேதியியல் வழிமுறைகளிலும், தர்க்க ரீதியான சிந்தனைகளாலும் வளர்த்துக்கொண்டே செல்கின்றான். நாம் யார்? நம்மை இயக்கும் சக்தியின் தோற்றுவாய் என்ன என்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகண்டுவிட வேண்டுமென்று தவியாய்த் தவிக்கின்றான். அவ்வாய்வு முடிவுகள் மருத்துவம், அணுமின்சார உற்பத்தி, விண்வெளி ஆய்வுகள் போன்ற ஆக்கப்பாதைகளிலும், அணுக்குண்டுகள், ஐதரசன் குண்டுகள், நியூத்திரன் குண்டுகள், லேசர் தாக்குதல் கருவிகள் என்ற பல்வேறுபட்ட அழிவுப் பாதைகளிலும் அவனை இட்டுச் செல்கின்றன. இவற்றிற்கும் மேலாய் சிருஷ்டிப்பின் மூலத்தை அறிவியலால் கண்டுபிடித்து விடவேண்டுமென்னும் ஆன்மீக இலக்கும் மனிதர்களிடம் குடிகொண்டுள்ளது.

எவ்வளவுதான் அலைகளையும் கடவுட் துகள்களையும் கண்டுபிடித்தாலும், ஒன்றுமற்ற வெற்றிடமாகிய சூனியப் பெருவெளியே அனைத்திற்கும் ஆரம்பமென்று நம்மனைவருக்கும் தெரியும். இந்தச் சாதாரண மிகவெளிய பகுத்தறிவுக்கு மேலாக எதுவும் எதையும் நமக்கு உணர்த்திவிட முடியாது. நம் முன்னே நமக்குப் பிரத்தியட்ஷமாகக் காட்சிதரும் அண்டப் பெருவெளிக்கும் மேலாக நாம் கண்டுணரக்கூடிய அற்புதப்பொருள் வேறொன்றுமில்லை. விண்ணில் மனிதன் பறக்கவிட்ட வயேஜர் விண்கலம் தற்போது நமது சூரிய மண்டலத்தையும் கடந்து சென்று கொண்டிருக்கின்றது, அது எடுத்தனுப்பும் படங்களில் நமது சூரியன் ஓர் கடுகினும் சிறிய புள்ளியாகவே தோற்றுகின்றது. அதுவும் இன்னும் சில காலங்களில் மறைந்துவிடும். நாம் மிகமிகச் சிறியவர்களே. “பெரிது பெரிது புவனம் பெரிது” என்றார் ஔவையார்.

இராமன் பரிசளித்த முத்துமாலையைக் கடித்துத் துப்பிப் பரம்பொருளைத் தேடிய அனுமார் போல நாமும் தேடுகிறோம். உலகம் உள்ளளவும் தேடிக்கொண்டேயிருப்போம். ஆனால் நம் கண்முன்னே எல்லையற்ற அண்டசராசரமும், நம் சிந்தையிலே நம்மில் ஒன்றுமில்லையென்ற பேருண்மையும் துலாம்பரமாகத் தெரிகின்றன.

20ம் நூற்றாண்டின் இயற்பியல் வரலாறு என்ற தனது மிகவுயர்ந்த அறிவியல் நூலை எனக்குத்தந்து இன்னும் அறிய வேண்டியவற்றையும், சிந்திக்க வேண்டியவற்றையும் உணர்த்திய நண்பர் திரு ரவி கல்யாணராமன் அவர்களுக்கும், அவரது ஆக்கங்களை முன்னிலைப்படுத்திப் பல ஆய்வுக்களங்களையுருவாக்கிப் பயன்மிக்க இணையவழி மாநாடுகளை நடாத்திக் கொண்டிருக்கும் டாக்டர் பேராசிரியர் இராஜாராம் அவர்களுக்கும் துணைநிற்பவர்களுக்கும் செவிமடுத்த அனைவருக்கும், இச்சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்காக அன்புடன் நன்றி கூறுகிறேன். எனது உரையில் உள்ள குறைகள், தவறுகள், குற்றங்களை மன்னித்து ஏற்றருளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

❖

வானவில் கே. ரவியின் "பாரதியார் உலககவி" ஒருமதிப்பீடு

•

முனைவர் **ச.சிவமணி** உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு

"நமக்குத்தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"
"ஓராயிரம் இந்த

என்று கம்பீரத்தோடு தம் குறிக்கோளை வெளிப்படுத்தியவன் பாரதி. வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த மாமணியாய் வந்தவன். நூற்றாண்டின் கவிதை இலக்கியத்திற்குக் கால்கோள் நாட்டியவன். பண்டிதர்கள் அகராதிச் சொற்களில் கவிதை புனைந்து கொண்டிருந்த காலகட்டத்தில், எளிய தமிழில் ஏற்றமிகு பொருண்மைகளில் கவிதைகளை அடையாளப்படுத்திய மகாகவிஞன்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய் மொழிக்கு புதிய உயிர் தருவோனாகிறான்" என்பது பாரதியின் இலக்கியக் கொள்கை இதன் அடிப்படை

யிலேயே தமது கவிதைப் பயணத்தைத் தொடர்ந்தவன்.

"எட்டையபுரத்தில் இரட்டைப் பிரசவம்
ஒன்றுபாரதி! இன்னொன்று புதுத்தமிழ்!''

என்றும்,

"பாவலர்கள் கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைத்
கண்டுபிடித்துக் கொடுத்த காவல் நிலையம்"

என்னும் இன்றைய கவிஞர்கள் சிலர் பாரதியின் புதுத்தமிழைப் போற்றுவர். பாரதி எட்டையபுர ஜமீந்தாருக்கு இவ்வாறு சீட்டுக்கவி எழுதினானாம்.

"சுவைபுதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது,சோதிமிக்க
நவ கவிதை,எந்நாளும் அழியாத மகாகவிதை"

தந்த தன்னை ஜமீன்தார் ஊரெல்லையில் எதிர் கொண்டழைத்துத் தனக்கு சால்வை, பொற்பை, சுயபரிவாரங்கள் தந்து ஜதிபல்லக்கில் அழைத்துச் செல்லவேண்டும் எனக் கேட்டிருந்தாகக் குறிப்பிடுவர். அந்த யுகக்கவிஞனின் கனவு அப்போது நிறைவேறவில்லை: ஆனால் அக்கனவை இக்கட்டுரையாசிரியர் வானவில் கே. ரவி அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். வானவில் பண்பாட்டு மையம்" ஒன்றை 1994 ல் நிறுவி அதன் வாயிலாக 20 ஆண்டுகளாக பாரதியின் பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் கவிஞர் விழாவாக நடத்தி வருகிறார். அன்றைய தினம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் இருந்து பாரதி இல்லத்திற்கு அவனது திருவுருவச் சிலையைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து, சால்வை போர்த்தி, பொன்முடிப்புக் காணிக்கையாக வைத்து சிறுவர் சிறுமிகள் ஜதி சொல்லிக் கொண்டு நடனமாடி வர கவிஞர் கூட்டம் புடைசூடி, "ஜதிபல்லக்கு நிகழ்ச்சி" என்னும் ஒரு நிகழ்ச்சியை நிகழ்த்தி வருகிறார்.

வானவில் கே. ரவி அவர்கள் அடிப்படையில் ஒருவழக்கறிஞர் எனினும் கவிதைப் புனைவதில் ஆர்வமுடையவர். "நமக்குத் தொழில் கவிதை', "உன்னோடு நான்' என்னும் இரண்டு

கவிதை நூல்களுக்குச் சொந்தக்காரர். மாணவப் பருவத்திலேயே "மாணவரினம்" என்னும் கையெழுத்துப் பத்திரிக்கை ஒன்றை நடத்தியவர். மாணிக்கவாசகரின் ஞானத்தாழிசையை "ஏநசளநள ழக றுளைனழஅ" என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர். "ஸ்பர்சம்" என்னும் திரைப்படத்திற்கு இசையமைத்துள்ள இசையமைப்பாளர். தெய்வகானாமிருதம், அமரத்வனி என்னும் இரு இசைப்பேழைகளை வெளியிட்டவர். நாடகம் படைப்பதிலும் நடிப்பதிலும் பயிற்சியுடையவர். சட்டநூல் வல்லுநர்ளு இயற்பியல் வரலாறு எழுதிய அறி வியலாளர். இவ்வாறு பல்துறை ஆளுமைத் தன்மைகொண்ட இவர், "கானல் நீரைக் கடந்து.." என்னும் கட்டுரைத் தொகுப்பு ஒன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

"கானல் நீரைக் கடந்து.." என்னும் தொகுப்பில் இடம்பெறும் "பாரதியார் உலக கவி" என்னும் தலைப்பிலான கட்டுரையை மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

உலகக்கவி எனப் போற்றப்படுவோரின் படைப்பாளுமை, பாரதியின் சொற்தேர்வு, பரந்துபட்ட இலக்கிய அணுகுமுறை, தேசிய ஒருமைப்பாடு ஆகிய கூறுகளை எடுத்துக 'காட்டி கட்டுரையாளர் விளக்கியுள்ளார். பாரதி உலகக் கவியாகப் போற்றப்படுவதற்கு மூன்று வரையறைகளை வகுக்கிறார்.

எந்தக் கவிஞனுடைய படைப்புகளில் பெரும்பான்மையானவை, யாரால், என்று படிக்கப்பட்டாலும் சுவை தரக் கூடுமோஅந்தக் கவிஞனே "உலககவி" என்று பொருள் கொள்ளலாம்.

எந்தக் கவிஞன் தன் இனம், தன் மொழி, தன் நாடு என்று மட்டும் சிந்தித்திராமல், மற்ற இனங்கள், மொழிகள், நாடுகள், உயிர்க்கூட்டங்கள் குறித்துச் சிந்தித்தும் கவலைப்பட்டும் தன் படைப்புகளில் அந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறானோ, அவனே "உலககவி" என்று இன்னொரு பொருள் கொள்ளலாம்.

எந்தக் கவிஞனுடைய படைப்புகள் அவன் நாட்டினரால் அவன் மொழியினரால் மட்டுமன்றி பிறராலும் மதிக்கப்படுகின்றனவோ, அந்தக் கவிஞனே "உலககவி" என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒரு கவிஞனின் படைப்பு காலம் கடந்தும் நிலைத்து நிற்க வேண்டும் உலகளாவிய பார்வை கொண்டதாக இருக்கவேண்டும் இனம், மொழி, நாடு கடந்து சிந்திக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை இவ்வரையறைகளின் வாயிலாகப் புரிந்து கொள்ளமுடியும்.

எப்போது வாசித்தாலும், சொல்லிலும் ஓசையிலும் காணக் கூடிய உணர்ச்சி வடிவங்கள், உவம உருவகங்கள், ஆர்வத் தூண்டல்கள் முதலியன அதிகமாக அனுபவிக்கப்பட்டு, சுக அனுபவம் பெறுகின்ற நிலைக்கு ஒரு வாசகனைக் கொண்டு சேர்ப்பதையே இவரது முதல் வரையறை குறிப்பிடுகிறது.

"குயில் பாட்டு" குறுங்காவியத்தில் இடம்பெறும் வான்வெளிக் காட்சியை,

"தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?.. (ப.81)

என்று பாரதி வியக்கும் தன்மையினைக் கட்டுரையாளர் எடுத்துக் காட்டி அக்கவிதையில் இடம்பெறும், "தழல் குறைத்து" "இங்கிதம்", "கவர்தல்", "விண்ணை அளக்கும் நிணீவீஜிவி போன்ற சொல்லாட்சிகளைப் பாரதி பயன்படுத்தியுள்ள நுட்பங்களை அழகியலோடும், அறிவியலோடும் ஆன்மீகத்தோடும் ஒப்பிட்டு விளக்கியுள்ளமை நோக்கத்தக்கது.

நாட்டு விடுதலைக்குப் போராடிய தேசபக்தர் லாலா லஜபதிராய் ஆங்கிலேயரால் நாடு கடத்தப்பட்ட செய்தியை அறிந்து பாரதி துயருற்றுப் பாடிய பாடலின் உள்ளீடாகப் பொதிந்துள்ள நம்பிக்கையைக் கட்டுரையாளர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"விண்ணகத்தே இரவிதன்னை
வைத்தாலும் அதன் கதிர்கள்
விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளிதருதல்
காண்கிலலோ நின்னையவர்
கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது
புறம் செய்தும் யாங்களெலாம்

மறக்கொணா தெம்
எண்ணகத்தே லாஜபதி
இடையின்றி நீவளர் தற்
கென் செய் வாரோ” (ப. 9)

என்று பாரதி பாடியுள்ளதை எடுத்துக்காட்டி இங்கு “லஜபதீ” என்று விளிக்காமல் முதல் எழுத்தை நீட்டி “லாஜபதி” என்று விளிப்பதன் மூலம், அவலச்சுவையை வீரச்சுவையாகவும் பெருமித உணர்வாகவும் மாற்றியுள்ள பாங்கினைக் கட்டுரையாளர் பொருத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாரதியின் படைப்புப் பார்வை உலகளாவிய விசாலமானது தன் நாடு, மொழி, இனம் என்னும் குறிப்பிட்ட எல்லை கடந்தது என்பதை அவரது,

“மாகாளி பராசக்தி உருசியநாட் டினில் கடைக்கண்
வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி” (ப92)

என்னும் கவிதையைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்தாக பாரதி பாடிய பாடலையும் சான்று காட்டியுள்ளார். பாரதியின் பரந்த உலகப்பார்வையை, அவனது மதநல்லிணக்கப் பாடல்கள் வாயிலாகவும் எடுத்துக்காட்டியுள்ளார்.

மூன்றாவது வரையறையான படைப்பாளியின் படைப்பை, பிறநாட்டினரால் மதிக்கப்பட வேண்டும் என்பதனைப் பாரதியின் பாடல்களுக்குக் கிடைத்த அங்கீகாரத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

பாரதி வாழ்ந்த காலத்திலேயே தனது கவிதைகள் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, அந்தமொழி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன என்பதைப் பாரதியின் கூற்றாகவே கட்டுரையாசிரியர் பதிவு செய்துள்ளார்.

“பிரான்ஸென்னும் உயர்நத்தபுகழ்
நாட்டிலுயர் புலவோரும்
பிறரும் ஆங்கே
விரவுபுகழ் ஆங்கிலத்தீங்

கவியரசர் தாமும் மிக
வியந்து கூறிப்
பராவி என்றன் தமிழ்ப்பாட்டை
மொழிபெயர்த்துப் போற்றுகிறார்'' (ப. 97)

என்று பாரதி குறிப்பிட்டுள்ளதைப் பொருத்தமாகத் தெரிவு செய்துள்ளார். கவிஞன் என்பவன் காற்றைப் போன்றவன் கட்டுப்பாடுகளற்றது சுதந்திர வானில் கற்பனைச் சிறகடிப்பவன் என்று வரையறுத்து, பாரதியை உலகக்கவியாக நிறுவுகின்றார். அதற்குச் சான்றாக,

"பாரதியார் உலககவி அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்
ஒருருக் கொருநாட்டுக் குரியதான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர் மற்றும்
வீரர் அவர் மக்களிலே மேல் கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மை நலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்" (ப99)

என்ற பாரதிதாசனின் கவிதையை எடுத்துக்காட்டி, தனது கட்டுரையை நிறைவு செய்கிறார்.

பாரதியாரின் படைப்புகளில் தோய்ந்து போன கட்டுரையாசிரியர், அவரை "உலகமகாகவி" என்று நிறுவுவதற்கு முயற்சித்துள்ளார். அதற்காக சில வரையறைகளை வகுத்துக் கொண்டு, அதனடிப்படையில் "பாரதியார் உலகக்கவி" என்ற இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார். இவரது சிந்தனைகள் பெரும்பாலும் ஆழ்ந்த வாசகனின் அடிமனதில் தேங்கிக் கிடக்கும் அழகியல் கூறுகளின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. எனினும் கவிதைத் தேர்வு, சொல்லாட்சியின் நுட்பத்தைப் புலப்படுத்துதல் புலப்படுத்துதல் ஆகியவற்றின் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டுரையானது குறித்த பொருளில் வெற்றி பெற்றுள்ளது என்பதனைத் துணிந்து கூறலாம்.

❖

உலக மகாகவி –
'வானவில்' ரவியின் படப்பிடிப்பு

•

முனைவர் க.சுப்புலட்சுமி,
தமிழ் இணைப் பேராசிரியர், ஏ.பி.சி மகாலட்சுமி
மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

"பாரதியார் உலக கவி அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்
ஓரூருக்கு ஒருநாட்டுக்கு உரியதான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்"

என்ற பாரதிதாசனின் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் கவிஞர் 'வானவில்' ரவி 'கானல் நீரைக் கடந்து' என்ற தமது தொகுப்பில் மகாகவி பாரதியை, உலக மகாகவியாக்கித் தாம் உயர்வு கொள்கிறார்.

உலகம் எனத் தொடங்கும் கவிகள்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த நோக்கை உலகுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தமிழ்ப்புலவர் அறிவித்து விட்டார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் 'உலகம் யாவையும்' எனக் காவியத்தைத் தொடங்குகிறார். சேக்கிழாருக்கு, இறைவன் 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தார். நக்கீரர்

திருமுருகாற்றுப் படையை, 'உலகம் உவப்ப' என்றே தொடங்குகிறார். உண்மைக் கவிஞர்கள் அனைவரும் உலக நோக்கு உடையவர்கள் என்பதற்கு, இவற்றைச் சான்றுகளாக்குகிறார் கவிஞர் ரவி.

கவிஞன் என்பவர் யார்?

'கவிஞன்' என்பவர் யார் என்பதற்குக் கவிஞர் ரவி, பாரதி மூலம் விளக்கம் தருகிறார்.

> **மண்ணுலகத்தில் நல்லோசைகள் காற்றென்னும்**
> **வானவன் கொண்டு வந்தான்**

என்கிறார் பாரதி. கவிஞர் ரவியோ, "நல்லோசைகளில் எல்லாம் மிகச் சிறந்தது கவிதை. அக் கவிதை வான்வெளியின் பரிசு கவிதையை எழுதும் கவிஞனோ, வானத்துக்கும் அண்டப் பெரு வெளிக்கும் உரியவன்" (கா.நீ.க–ப.98) என்று கவிஞனைப் பிரபஞ்சத்தோடு ஒப்பிடுகிறார்.

பகுப்புமுறை

உலகக்கவி என்றால், யார் என்பதனை மூன்று பகுப்புகளுக்குள் அடக்குகிறார் கவிஞர் ரவி

- "எந்தக் கவிஞனுடைய படைப்புகளில், பெரும் பான்மையானவை, யாரால், என்று படிக்கப்பட்டாலும், சுவைதரக் கூடுமோ, அந்தக் கவிஞனே உலகக்கவி என்று ஒரு பொருள் கொள்ளலாம்.
- எந்தக் கவிஞன், தன் இனம், தன்மொழி, தன் நாடு என்று மட்டும் சிந்தித்திராமல், மற்ற இனங்கள், நாடுகள் உயிர்க் கூட்டங்கள் எனவும் சிந்தித்துக் கவலைப் பட்டுத் தன் படைப்புகளில் அந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறானோ, அவனே உலகக்கவி என்று இன்னொரு பொருள் கொள்ளலாம்.
- எந்தக் கவிஞனுடைய படைப்புகள் அவன் நாட்டினரால், அவன் மொழியினரால் மட்டுமன்றிப் பிறராலும் மதிக்கப்படுகின்றனவோ, அந்தக் கவிஞனே உலகக்கவி என்று பொருள் கொள்ளலாம்". (கா.நீ.க–பக்83,84) என்கிறார் கவிஞர் ரவி.

தான் எழுதப் புகுந்த 'பாரதி உலகக்கவி' என்ற கட்டுரையின் கருப்பொருளுக்கு, எல்லை வகுத்து நடைபோடும் கட்டுக் கோப்பு கவிஞர் ரவியின் தனித்துவமாகிறது.

கடந்து செல்லும் கவி

நாடு, மதம், சாதி, இனம், மொழி அனைத்தையும் தன் படைப்பால் கடந்து சென்று, 'உலகம்' என்ற ஒற்றைப் புள்ளியில் குவித்தவர் பாரதி எனச் சான்றுகளுடன் பகர்கிறார் கவிஞர் ரவி.

மகாகவி பாரதியின் காலத்திலேயே, அவரது கவிதைகள் கண்டம் விட்டுக் கண்டம் தாண்டிச் சென்று விட்டன என்பது கண் கூடான உண்மை என்று சான்று காட்டி நிறுவுகிறார் ஆசிரியர்.

உலக மகாகவியில் கலந்த கவி

கவிதையால் நாடு, இனம், சாதி, மதம், மொழி கடந்ததால் மட்டும் உலக மகாகவி அல்லன் பாரதி.

"கற்பனை வளம், புலமைச் செறிவு, பொருள் நுட்பம், உண்மையில் நாட்டம் – தமது அனுபவச் சூழலுக்குப் படிப்பவரைக் கடத்திச் செல்ல எத்தனை சாதனங்கள்! இவை அனைத்தும் பாரதியின் கவிதைகளில் அளவாகக் கலந்திருக்கும் நயம், படிப்பவரை மலைக்கச் செய்கிறதே!" (கா.நீ.க–ப.89) என மலைத்து நிற்கும் கவிஞர் ரவியின் கற்பனை வளம், புலமைச் செறிவு, பொருள் நுட்பம், தமது அனுபவச் சூழலுக்குப் படிப்பவரைக் கடத்திச் செல்லும் பாங்கு மலைக்கச் செய்கிறது.

ரசனைமுறைத் திறனாய்வாளர் ரவி

"பாரதி பாடல்களில் பெரும்பாலானவை தனிக் கவிதை ஆர்வலர்க்குச் சுவையூட்டும் பாடல்களாய் உள்ளன. தனிக்கவிதை ஆர்வலர் என்றால், வேறெதற்காகவும் இன்றிக் கவிதைத் தன்மைக்காக மட்டுமே கவிதைகளை ரசிப்பவர்கள் என்று பொருள்" (கா.நீ.க–ப.84) என்கிறார் ரசனை முறைத் திறனாய்வாளர் ரவி.

இயற்கை என்பது உலகப் பொதுமை. இயற்கையையும் கவிதையையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித்து விட

இயலாது. இயற்கைதான், கவிதையின் தாய்! 'குயில்பாட்டு' என்ற குறுங்காப்பியத்தின் ஒரு சிறு சோலையை எடுத்துக் கொண்டு, அங்குள்ள ஒவ்வொரு அடி மலரிலும் ரசனைத் தேன் அருந்துகிறார் ரவி. அதிகாலைப் பொழுதின் நுழைவாயிலைச் சொற்சித்திரமாக்கித் தருகிறார்.

"இளம் காலைப் பொழுது. கதிரவன் கீழ்த்திசையில் மெல்ல உதிக்கிறான். அப்பொழுது கதிரவனைக் கண்ணாரக் கண்டு களிக்கலாம். கண் கூசாது. ஏனென்றால், இன்னும் வெம்மையடையாத தணிவு கதிரவனிடம் இருக்கும். பாரதி இதை நயம்படச் சொல்கிறான்".(கா.நீ.க–ப.85) என்று கவிஞர் ரவி கூறுவதே மிக நயமாக இருக்கிறது. தேர்ந்தெடுத்த சொற்களை இங்கிதமாக மலர்த் தொடையல் தொடுப்பது போல் தொடுத்துத் தரும்போது இளங்காலை கண்முன்னே மலர்கிறது.

வாழ்வியல் உவமை

தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமே

காலைக் கதிரொளி தங்கம் உருக்கி, தழல் குறைத்து வான வெளியெங்கும் இங்கிதமாகப் பரப்பி வைத்தது போல இருந்தது என நயம் இழைத்துச் சொல்கிறார் மகாகவி பாரதி

தழலை எப்படிக் குறைக்க வேண்டும் என்பதற்கு வாழ்வியல் நிகழ்ச்சியை உவமையாக்குகிறார் கவிஞர் ரவி.

"வீட்டில் எரிவாயுவில் சமைக்கப்படும் காற்றடுப்பில் 'ஸிம்மர்' எனப்படும் தழல் குறைப்புச் செய்வது போல், தங்கக் குழம்பின் வெம்மை தணியத் தழல் குறைப்புச் செய்ய வேண்டும்!" கா.நீ.க.ப.5 என விளக்கம் தருவது ரசனைக்குரியது.

மேற்கோள் எடுத்துரைக்கும் பாங்கு

கவிதையைச் சுவையாகப் படைக்கும் படையல்காரன் பாரதி என்பதனை நிறுவ, சில மேற்கோள்களை எடுத்தாள்கிறார். மேற்கோள் திறத்தால், கவிதைச் சுவை மேலும் கூடுகிறது.

வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர் மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ

சோதியானது வான்வெளியை எப்படிக் கவர்ந்து களவாடியது என்று கூறும் கவிஞர் ரவி, அதற்குச் சான்றாகக் காமத்தையும், கடவுளையும் காட்டும் திறன் வியக்கத்தக்கது.

காதலி காதலனைச் சிறுநோக்கு நோக்குகிறாள்; அந்தச் சிறு நோக்கிலேயே தலைவனின் கண் களவாடப்படுகிறது. கண் நிறைய காதலி மட்டுமே! அதனால், காணும் இடமெல்லாம் காதலி மட்டுமே தெரிகிறாள்! இது காமம்.

கோவிந்தனைக் கண்ட பாரதி "கோவிந்தா உன்னைக் கண்டதும், என் கண்களை மறந்தேன்! என் அகக் கண்ணிலும், புறக் கண்ணிலும் நீதான் நிறைந்துள்ளாய்! உன் கண்ணால் பூமியைப் பார்க்கிறேன்! பூமி முழுவதும் நீ தான் நிறைந்திருக்கிறாய்!" என்கிறார். இது ஆன்மீகம்.

"இதே போலச் சோதியானது, வான் வெளியை எப்படிக் கவர்ந்து களவாடியது என்றால், வான்வெளியெல்லாம் தானேயாகிச் சோதி நிறைந்ததாம்" (கா.நீ.க–ப.87) எனக் கவிஞர் தகுந்த மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டும் போது, பாரதியின் பாடலான 'வான்வெளியை', கவிஞர் ரவியின் சோதி விளக்குகிறது.

இரவியின் உரை வீச்சு

புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான் தொழுதேன்

என்ற மகாகவி பாரதியின் கவிதைக்கு, ரவியின் ஒளி வீச்சு போல, உரை வீச்சு நல்குகிறார் கவிஞர் ரவி.

சிலேடை நயம்

"புல்லில் உள்ள பனித்துளிகளில் ஒளி விழுவதால் அத்துளிகள் சுடர் வீசும் அன்றோ? அப்பொழுது புல் எல்லாம் சிரிப்பன போல் தோன்றக் கூடும். 'நகையுறுத்தி' என்ற சொல்லுக்கு, இது ஒரு பொருள். அதனை வேறு விதமாகவும் பொருள் கொள்ளலாம். சுடர் வீசும் பனித்துளிகள் என்ற நகை பூட்டிப் புல்நுனிகளை வைர, வைடூரிய அணிகலன்களால்

ஒளி அலங்காரம் செய்வதாகவும் கொள்ள இடம் உண்டு. (கா.நீ.க–ப.89) புல்லை நகையுறுத்தி' என்பதில் உள்ள 'நகை' என்பதற்குப் புன்னகை என்ற பொருளையும், அணிகலன் என்ற பொருளையும் சிலேடையாகப் பூட்டுகிறார்.

கற்பனைப் பூக்கள்

'பூவை வியப்பாக்கி' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகையில், "கதிரொளியால் மொட்டெல்லாம் மலரும் காட்சி, பாரதிக்கு வியப்பில் விரியும் கண்களை நினைவு படுத்தியதோ? அல்லது பார்த்தவர் வியக்கும் வண்ணம் பூக்கள் மலர்ந்திருந்தன என்று அவன் சொல்கிறானோ?" (கா.நீ.க.ப.89) என்கிறார் கவிஞர் ரவி.

மலர்ந்தும் மலராத பாதிமலர் போல வளரும் விழி வண்ணமாகக் கற்பனை செய்வது ரசனை மிகுந்தது. இயற்கையை ரசிப்பது உலகப் பொதுமை.

ரவி சொல்லும் ரவி பேதம்

பிள்ளைத் தமிழின் அம்புலிப் பருவத்தில் சந்திரனை நோக்கிச் சாம, பேத, தான, தண்ட முறைப்படி பாட்டுடைத் தலைவனோடு ஒப்பிடுவர்.

நாட்டு விடுதலைக்குப் போராடிய தேசபக்தர், லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்ட செய்தி அறிந்து, பாரதி மிகவும் துயருற்று, சூரியன் வானில் இருந்தாலும், மண்ணில் இருக்கின்ற எங்கள் கண்ணுக்கு ஒளி தருகிறான். அதுபோல, "லஜபதி உம்மை நாடு கடத்தினாலும், நீ சூரியன் போன்று எமக்குள் ஒளி வீசுகிறாய்!" என்று கூறுகிறார்.

லாலா லஜபதிராயைச் சூரியனோடு ஒப்பிட்டுக் கூறும் பாடலை நுணுகி ஆராய்ந்து, தன் அறிவுத் திறனால் பேதப் படுத்துகிறார் கவிஞர் ரவி.

எண்ணகத்தே லாஜபதி
இடையின்றி நீ வளர்தற்கு
என் செய்வாரோ

"சூரிய ஒளி, விண்ணிலிருந்து மண்ணுக்கு வரச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளும். ஆனால், லஜபதியாகிய சூரியனிலிருந்து நம் எண்ணங்களை வந்தடைய, ஒளிக்கு இந்த அளவு கூட

நேரம் தேவைப்படுவதில்லையாம். 'இடையின்றி' என்ற சொல் இதைத் தானே குறிக்கிறது" (கா.நீ.க–ப.92) என்று நுண்பொருள் விளக்கம் தந்து, ரவியை விட, சற்று மேலானவர் லாலா லஜபதிராய் என்று பேதப் படுத்துகிறார் இந்த ரவி. இக் கற்பனை உலகத் தலைவர்களுக்கும் பொருந்தும்.

நுண்மாண் நுழைபுலம் :

பாரதியின் தேசபக்திப் பாடல்கள், உலக அரங்கில் இலக்கிய மதிப்போடு, உயர்ந்த கவிதைகளாய் ஒளி வீசுகின்றன எனக் கூறும் கவிஞர் ரவி..

"முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடைவில் - எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்''

"சாகும் பொழுதில் இருசெவி குண்டலம்
தந்த தெவர் கொடைக்கை - சுவைப்
பாகு மொழியில் புலவர்கள் போற்றும்
பாரத ராணியின் கை"

என்று ஒரு பாடலின் இரு பகுதிகளை எடுத்துரைக்கிறார். அதற்குள் நிலவும் பொருளை, நுண்மான் நுழை புலத்தோடும் ஆராய்கிறார்.

"போர் என்றதும் அண்டை நாட்டுடன் மோதிய செயலையும், கொடை என்றதும் உள் நாட்டில் நடந்த நிகழ்ச்சியையும் நினைத்துப் பார்க்கும் சீர்மையை வியப்பதா?' (கா.நீ.க–ப.90) என்று வியக்கும் கவிஞர் ரவியின் சீர்மை, வியக்க வைக்கிறது! தானே கொண்டு, கூட்டிப் பொருள் உரைக்கும் விதம் வியப்பில் ஆழ்த்துகிறது.

இரு வேறு உலகங்கள்

பாரதி காணும் உலகத்தை, இரண்டாகக் காண்கிறார் கவிஞர் ரவி.

ஒன்று உள் உலகம் இரண்டாவது வெளியுலகம்

விண்ணை வெளியாக்கி விந்தை செய்யும் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான் தொழுதேன்

என்ற பாரதியின் அடிகளுக்கு விளக்கம் கூறப் புகும் கவிஞர்

"விண்ணை வெளியாக்குகிறதாமே! எப்படி? வானத்தை விண்வெளி என்றும் அழைக்கிறோம். இல்லையா? இதைச் சொல்கிறானா பாரதி? இல்லை, இதில் வேறு நுட்பம் இருக்கிறதா? இரவில் உறக்கத்தில் கனவு காண்கிறோம். அப்பொழுது மனம் எங்கே உலவுகிறது? 'ஆழ்ப்ரக்ஞை' எனப்படும் உள்ளுணர்வுக் களத்தில்தானே மனம் அப்பொழுது உலவுகிறது. அதிலிருந்து விடுபட்டுத் தனக்கு வெளியே மனம் உலவத் தலைப்படுவது, உறக்கம் கலைந்த பிறகுதானே? அப்பொழுது தானே, உள்ளிருந்த 'விண்' புறத்தே புலப்பாடாகிறது? விண் வெளியாவது இதுதானோ?' (கா.நீ.க–ப.89)

என்று விவரிக்கும் போது, அடி மனம் விண் வெளிக்குள் பறக்கிறது இது உள் உலகு. உலக கவி, உலக மகா கவியாவது ரவியைப் போன்ற ஆழ்மன ரசிகர்களால் தான்.

மேலுமாகி கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணும் மண்ணும் ஆன சக்தி வெள்ளம் - இந்த
விந்தையெல்லாம் ஆங்கது செய் பள்ளம்

"இப்படி மேலுணர்வுக் களத்துக்கும், உள்ளுணர்வுக் களத்துக்கும் அவ்வப்போது நடக்கும் போக்குவரவை அறிந்தவர்களே சித்தர்" (கா.நீ.க–ப.72) என வார்த்தைச் சித்தர் ரவி, உள் உலகத்தை அறிந்து சொல்கிறார்.

வெளியுலகும் அறிவியல் பார்வையும்.

வெளியுலகு எப்படித் தோன்றியது என்பதற்குப் பாரதியின் பாடலை மையமிட்டு விடையிறுக்கிறார் கவிஞர் ரவி.

வெடிபடும் அண்டத்து இடிபல தாளம் போட - வெறும்
வெளியில் இரத்தக் களியொடு பூதம்பாட - பாட்டின்
அடிபடு பொருள் உன் அடிபடும் ஒலியில் கூட - களித்
தாடும் காளி, சாமுண்டீ, கங்காளீ
அன்னை, அன்னை ஆடும் கூத்தை
நாடச் செய்தாய் என்னை

"கோடானு கோடி அணுக்களால் ஆனது வியனுலகம். கோடானு கோடி மைல்கள் நீள, அகல, உயரங்கள் என்ற

மூன்று அளவு நிலைகளில் அது விரிந்து பரந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட வியனுலகம், கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்னால் விரிவு எதுவுமற்ற ஒரு புள்ளியாக இருந்து, வெடித்துச் சிதறி, விரிந்து, விரிந்து, இன்று வியனுலகமாய் உள்ளதாம்! "பிக்பேங்' கொள்கையின் கூற்று இதுதான். பாரதி நினைவாக இக்கொள்கையை "வெடிபடு அண்டக் கொள்கை" என்று கூட அழைக்கலாம்."(கா.நீ.க–ப.74) என அறிவியல் பார்வையால் பாரதி கூற்றை அலசி ஆராய்ந்து மகாகவியை 'அண்டக் கொள்கை கூறிய அறிவியல் ஆசான்' ஆக்குகிறார் கவிஞர் ரவி.

"ஞான ஆகாசத்து நடுவே நின்று நான்" என்று பேசுபவன் உலகமகாகவி. அது அவனது உள்ளுலகப் பயணம்.

பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக துன்பமும் மிடிமையும் நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்த பல் உயிரெலாம்
இன்புற்று வாழ்க என்பேன்

என்று பேசுபவனும் உலக மகாகவி. இது அவனது வெளியுலகப் பயணம்.

ஆன்மாவால் இணையும் உலக மகாகவி

எல்லைகளுக்குள் கட்டுப்படாதவன்
சுவர்களுக்குள் முட்டுப் படாதவன்
வானம் போல் பரந்த மனம் படைத்தவன்
வர்ணங்களைக் கடந்த குணம் படைத்தவன்

என்று அடுக்கிக் கொண்டே வருகின்ற 'வானவில்' ரவி முத்தாய்ப்பாய் ஒன்று சொல்கிறார். பாரதி,

எல்லா உயிர்களையும் தன் உயிர்போல எண்ணினான்
உயிரற்ற பொருட்களையும் தனக்கு ஈடாய் எண்ணினான்

என்று கூறி, அதற்குச் சான்றாக.

காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாடலை எடுத்துரைக்கிறார்.

காக்கை, குருவி, மனிதன் என உடல்கள்தாம் வேறு வேறே தவிர, உள்ளிருக்கும் ஆன்மா ஒன்றுதான் என்ற உயர் தத்துவத்தை உலகிற்கு உரைத்தவன் மகாகவி.

ஆண் அலை, பெண் அலை, ஆண் கல், பெண் கல் என்று உயிரற்ற பொருளுக்குள்ளும், 'ஆன்மா' உண்டு என்று அறிந்த மகான் மகாகவி பாரதி.

தன்னை மறுதலிக்கும் தகைமை

"ஒரு சிற்றூர் அல்லது நாடுபற்றியும், ஒரு குறுநிலத்துக்கு உரிய ஒருவனைப் பற்றியும், ஓர் அரசனைப் பற்றியும், ஒருவனுடைய வீரதீரச் செயல்கள் அல்லது கொடைத்தன்மை பற்றியும் பாடிய புலவர் பலர் உண்டு. இப்படிப்பட்ட கருப் பொருள்கள் பற்றி மட்டுமே பாடிச் சென்ற புலவர்கள் காலம் வென்று நிற்கும் கவிஞர்களாக, மஹாகவிகளாக உலக அரங்கில் நிலை பெறுவதில்லை" (கா.நீ.க–ப.80)

என்று கூறும் கவிஞர் ரவி, அதே சமயம் தனிமனிதனைப் பற்றிய பாடல்களிலும் பொதுமை உணர்ச்சி வெளிப்பட்டால், அது உலக கவியாக நிலைபெறும் என்றும் தனது கூற்றை நடுநிலையோடு மறுதலிக்கவும் செய்கிறார். அதற்குச் சான்றாக, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு மரணமடைந்த போது கண்ணதாசன் எழுதிய பாடலை எடுத்துரைக்கிறார்.

சாவே உனக்கொரு நாள்
சாவு வந்து சேராதே
சஞ்சலமே நீயும் ஒரு
சஞ்சலத்தைக் காணாயோ
தீயே உனக்கொரு நாள்
தீமூட்டிப் பாரோமோ
போதிமரப் புத்தன் அவன்
போய் விட்டான் என்றிருந்தோம்
பாதி வழி சென்ற மகன்
பண்டிதனாய்த் திரும்பி வந்தான்

இப்பாடலை எந்தத் தேசத்தின் தலைவன் இறந்தாலும் அவனுக்காகப் பாடலாம். இந்தப் பொதுமையால்தான் இன்று

வரை, இந்தக் கவிதை உலகக் கவியாக நிலை பெற்றுள்ளது என்றுரைக்கிறார் கவிஞர்.

சிறு தொடர்களால் பெரும் பொருள் கூறல்

மண்திணித்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பொருள் பூதத்து இயற்கை போல
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்

என முடி நாகனார் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பாடுகிறார். தனிமனிதப் புகழ்பாடும் இந்தப் பாடல் சங்க இலக்கியப் பாடலுள் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. காரணத்தைக் கவிஞர் தனக்கே உரிய எளிய நடையில் எடுத்துரைக்கிறார்.

நிலம் போன்ற பொறுமை
விரிந்த வானம் போல் அகன்ற அறிவு
காற்றைப் போன்ற வலிமை
நெருப்பைப் போன்ற படைத்திறமை
நீர் போன்ற குளுமையான அருள்தன்மை

இத்தகைய இயல்புடையவனாம் அந்த அரசன்'' (கா.நீ.க–ப.82) என்று கூறி உலகத்தில் உள்ள அரசரெல்லோரும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் கூறுவதால் இது உலக கவியாகிறது என்று எடுத்துரைக்கிறார். சிறு சிறு தொடர்களால் பெரும் பொருள் கூறும் வல்லமை கவிஞருக்குக் கைவரப் பெற்றிருக்கிறது.

கவிதை உணர்த்துவது தனிமனித உணர்வாக இருக்கலாம். ஆனால், அது உலகிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தனக்குரிய உணர்வாகத் தோன்ற வேண்டும்.

தனிப்பட்ட அரசனின் புகழாக இருக்கலாம். ஆனால், அது உலகிலுள்ள தலைமை அனைத்திற்கும் பொதுவான தத்துவமாக இருக்க வேண்டும்.

'கானல்நீரைக் கடந்து' என்ற தனது தொகுப்பில், கவிஞர் ரவி 'பாரதி உலக கவி' எனக் கட்டுரைக்கிறார்.

யாராலும், எந்தக் காலத்திலும் சுவைக்கத் தகுந்த கவிதைகள், நாடு, மொழி, மதம், இனம் கடந்து, உலகப் பொதுமை நோக்கும் கவிதைகள், உலக மகாகவிதைகள் என்கிறார்.

உள் உலகையும், வெளி உலகையும் உணர்ந்து சொல்லும் சித்தன் கவிஞன். அவன், விண்ணையும் மண்ணையும் கடந்த பிரபஞ்சத்தின் தூதுவன் எனப் பறைசாற்றுகிறார்.

தனிமனிதரைப் புகழ்ந்தாலும் அது உலகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருந்துமாறு சொன்னால், அவனும் உலக கவியே என ஓங்கிச் சொல்கிறார்.

உலகிற்குப் பொதுவான இயற்கையோடு இயைந்த கவிதைகள், மனிதகுலம் சுவைக்கத்தக்கது என, கவிஞர் ரவி தனது சொல்லாட்சி, கற்பனைநயம். நடைத்திறன், சிலேடை நயம், மேற்கொள் எடுத்தாளும் சீர்மை ஆகியவற்றால் பாரதியை உலக கவி என நிறுவுகிறார்.

'வானவில்' கவிஞர் ரவி போன்ற ரசனை முறைத் திறனாய்வாளர்களாலும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்களாலும் மிகச் சிறந்த கவிஞர்கள் உலக மகா கவிகளாகின்றனர் என்பது முற்றிலும் உண்மை.

❖

காற்று வாங்கப்போனேன் – தொகுப்பில் கவிதை மொழி

•

முனைவர்மு.செந்தமிழ்ச்செல்வி,
தமிழ் உதவிப்பேராசிரியை, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர்
கலைக்கல்லூரி, பழனி – 624615.

ஒரு படைப்பாளன், தன்மொழி ஆளுமையைக் கொண்டு தனது உணர்ச்சிகளைப் பிறர் உள்ளத்திலும் உண்டாக்குமாறு செய்யும் போதே, அப்படைப்பு சிறந்ததாகிறது. தனது அனுபவத்தை, கற்பனை மூலம் எண்ணிப்பார்த்து, செய்யுள்நடையில் தரும் போது, அப்படைப்பு சுவையுடையதாகிறது. அவ்வகையில், வழக்கறிஞர் 'வானவில்' ரவியின் 'காற்று வாங்கப்போனேன்' தொகுப்பில் இடம்பெறும் 'கவிதைமொழி' நடைச்சிறப்பை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

படைப்பாளர் அறிமுகம்

'காற்று வாங்கப் போனேன்' தொகுப்பின் ஆசிரியர் ரவி, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, இலக்கியத் துறையில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறார். சட்டம், தத்துவம், இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் கட்டுரைகளை வழங்கியுள்ளார். 'வானவில்' பண்பாட்டு மையம்' என்னும் அமைப்பை நிறுவி, பாரதியின் புகழைப்போற்றி வருகிறார். இவரது கட்டுரைகள் பல்வேறு இலக்கிய இதழ்களில் இடம் பெற்றுள்ளன. சூழல் தகவமைப்பில் கவிதைபாடுவதில் வல்லவர்.

பல்வேறு ஆங்கில நூல்களை இயற்றியுள்ளார். இவரது ஆங்கிலக் கட்டுரைகள் ஆங்கில நாளோடுகளில் இடம்பெற்றுள்ளன. 'நமக்குத் தொழில் கவிதை' 'உன்னோடு நான்', 'மின்னற்சுவை' 'சொற்களுக்குள் ஏறிக்கொள்', 'வள்ளுவன் வாயில்' போன்றவை இவரது கவிதைப் படைப்புகளாகும்.

கவிதையின் தோற்றுவாய்

கவிதை இலக்கியத்தின் தோற்றுவாய் பற்றி, நெட்சன் என்னும் அறிஞர்,

> **கவிதை காவியத்தில், அமைப்பு அல்லது நடையும் பொருள் அல்லது பாவமும் சேர்ந்து அமையவேண்டும். எந்த ரஸத்தைக் கையாண்டாலும், ரஸங்களும் பாவங்களும் கேட்போரின் உள்ளத்தில் அகண்ட பொருளின் சாணை விழும்படி செய்யவேண்டும். தர்மத்தை அடிநாதமாகக் கொண்டு அறிவின் பகுதியாகின்ற கற்பனா சத்திக்கு நல்லுணர்வைத்தந்து மனிதனுடைய உள்ளத்தில் எழுச்சியைத் தரவேண்டும்.**
>
> **(தா.ஏ.ஞானமூர்த்தி,'இலக்கியத்திறனாய்வியல்' ப.184)**

என்று குறிப்பிடுகிறார். இக்கூற்றினை முதன்மைக் கருவாக்கிக் கொண்டு, 'காற்று வாங்கப் போனேன்' தொகுப்பில் இடம் பெறும் கவிதைகள் ஆராயப்படுகின்றன. அவ்வகையில், கவிதையின் பொருண்மை பற்றி ரவி,

> **கவிதையொரு மனோதர்மம் கலைந்த கூந்தல்**
> **கற்பனைகள் சிறகடித்துப் பறக்க வேண்டும்**
> **புவியெல்லாம் புதுமெருகு தோன்றக் கண்டும்**
> **புலப்படாது திடீரென்று நடுங்கும் நெஞ்சில்**
> **தவிக்கின்ற உணர்வுகளில் தனிமையூற்றில்**
> **தாகத்தால் மனம் வறண்டு தளரும் போதில்**
> **சுருக்கென்று முள்குத்திச் சிரித்துக் கொள்ளும்...**
> **புரியாத நுணுக்கங்கள் புலனாகின்ற**
>
> **புதுப்பார்வை உலகாளும் புலமையோகம்**
> **தரிசனக் கடலாடிவிட்டு வார்த்தைத்**
> **தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை**
> **உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை**
> **எங்குமே செல்லாத பாதை**
>
> **(கே.ரவி.காற்றுவாங்கப்போனேன் பக்.8-9)**

என்று குறிப்பிடுகிறார். இக்கவிதை அகண்ட பொருளாய், கற்பனா சத்தியின் உற்றாய் விளங்குகிறது.

கவிதை அனுபவம்

படைப்பாளனின் கவிதை மூலம் வாசகன் பெறும் அனுபவமானது, அவனுக்குத் தெள்ளறிவை வழங்க வேண்டும் இதற்கு,

கலையும் இலக்கியமும் அது பிறந்த நாளைய
சமூகநிர்பந்தம், சூழ்நிலை, தேவை ஆகிறவற்றைத்
தன்னுள் அடக்கியது. சமூகம் கலைஞனிடத்தில்
ஏற்படுத்திய தாக்கத்தின் எதிரொலியாக
கலைஞன் சமூகத்தினிடையே ஏற்படுத்தும்
சலனம் அவனது கலைப்படைப்பு

என்று வெங்கட்சாமிநாதன் கூற்றே சான்றாகிறது. இக்கருத்தின் வடிவாய்,

காற்றுப் பல்லக்கிலே - செல்லும்
கார்த்திகைத் தீபங்களே - உங்கள்
காதல் வளர்ப்புகள் ஆடிகளித்திட
ராகங்கள் நான் தருவேன்....

புரியாத புதிரோடு சுகமான ஜதியோடு
நதியாக வந்தாலும் நான்பாடுவேன் - இன்னும்
புலராத பொழுதுக்குப் புகைபோடும் மார்கழிப்
பனியாக வந்தாலும் பாட்டிசைப்பேன்

முடியாத பாட்டுக்கு முதலாக என்னுயிரை
முழுதாக நான்தந்து விளையாடுவேன் - அந்தப்
பாட்டுக்குக் கருவாகிப் பண்ணென்ற உருவாகிப்
பாரெங்கும் காற்றாகப் பறந்தோடுவேன்
(கே.ரவி.மு.கு.நூ.பக்.19-20)

என்ற கவிதை அமைகிறது. இயற்கையின் வனப்பு, கலைஞனிடத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின்' விளைவாய், தானே இயற்கையாய் மாறி, என்றும் நீங்காத இன்பத்தைச் சுவைஞனுக்குத் தருவதாய் இக்கவிதை அமைகிறது.

கவிதையின் எழுச்சி ஒரு கலைப்படைப்பின் தாக்கமானது சமூகத்தில் எழுச்சியைத் தோற்றுவிக்கவேண்டும். இதனை,

கலைஞன் தன் சீரிய அனுபவத்தைச்
செம்மையானவடிவத்தோடு படைக்குங்கால் அப்படைப்பு
தன்னைத்தானே உணர்த்தும் ஆற்றலைப் பெறும்

(தா.ஏ.ஞானமூர்த்தி, மு.கு.நூ.ப.169) என்று I.A. ரிச்சர்ஸ் குறிப்பிடுகின்ற கூற்று வழி அறியலாம்.

கவிதையைச் சக்தியின் வடிவாய் உருவகிக்கும் கே.ரவியின்,

"சொற்களுக்குள் அடைபடாதே சூலமேந்திப் புறப்படு!

நிச்சயத்தை நிர்ணயத்தை நீயுடைத்திடு
அச்சமென்ற திரைவிலக்கி ஆர்ப்பரித்திடு...
மௌனமென்ற கானகத்தில் மூண்டுவிட்டதீ
மூங்கிலோடு மோதவந்த காற்று மோகினி;
மொழிச் சதங்கை சிதறிப்போக நடனமாடு நீ
விழியெதற்கு மொழியெதற்குள் உலகமே தனி
உன்னைப்
பிரதிபலிக்கக் காத்திருக்கும் சிறிய பனித்துளி
நானுன்னைப்
பிரதிபலிக்கக் காத்திருக்கும்; சிறிய பனித்துளி
(கே.ரவி.மு.கு.நூ, ப.184)

என்ற கவிதை, சொற்களுக்குள் அடங்காத சூட்சுமமாய் விளங்கி புதியதோர் எழுச்சி சிந்தனையைத் தூண்டும் விதமாய் அமைந்துள்ளது.

கவிதைப்பயன்

இலக்கியத்தின் தோற்றுவாய் பற்றி, ஹட்சன்,

- *"தன் அனுபவத்தை தானே வெளியிட வேண்டும் என்ற மனிதனின் விருப்பம்*
- *மனிதன் வாழும் உண்மை உலகிலும் கற்பனை உலகிலும் அவன் கொண்ட ஈடுபாடு*
- *ஏனைய மக்களிடத்திலும் அவர்தம் செயல்களிடத்தும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எண்ணம்" (தா.ஏ.ஞானமூர்த்தி. மு.கு.நூ.ப.189)*

இவையே கலைப்படைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமாய் அமையும் என்கிறார். இதன் வடிவாய்,

அணையாத சுடரேற்றுவேன் - நெஞ்சில்
அலைமோதும் சொந்தங்களை அக்கினியில் தோய்த்துத் தீக்
கணையாக உருமாற்றுவேன் - இமைக்கும்
கணத்திலிப் பேரண்டம் உருவான மையத்தில்
அணையாத சுடரேற்றுவேன்!...

பொய்சூழும் நெஞ்சங்களைத் - துளைத்து
போகின்ற அணியுலகில் இல்லையே என்ற மொழி
பொய்யாகிப் போய்மறைய - எந்தப்
பொல்லாங்கும் இல்லாமல் எல்லாருமே மகிழ
அணையாத சுடரேற்றுவேன்!

மாயை விரித்த வலையோ - ஜனன
மரணத்திலே சுழலும் புரியாத மர்மமோ
தீயை உமிழும் சொற்கள் - பட்டுத்
தீப்பற்றி எரியட்டும் சூழ்ச்சிகள் முறியட்டும்
அணையாத சுடரேற்றுவேன்...

அகிலமெல்லாம் உண்மை ஒளிகூட்டுவேன்!
அனைவர்க்கும் ஒரு நீதியே - என்ற
அருளாட்சி மலர நான் அறைகூவியே
அணையாத சுடரேற்றுவேன்- (கே.ரவி.மு.கு.நூ.ப.278)

என்ற கவிதை அமைகிறது. இதன்மூலம், மக்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் உணர்ச்சிப் பயனாய், இக்கவிதை அமைவதை உணரலாம். அவ்வகையில் 'காற்று வாங்கப்போனேன்' தொகுப்பு, கவிதை உலகில் புதியதோர் எழுச்சியைத் தூண்டுவதாய் அமைகிறது.

❖

‘வானவில்’ கே.ரவியின் படைப்புகளில் புதிய சிந்தனைகள்”

•

முனைவர் க. செல்வராணி
கௌரவ விரிவுரையாளர் தமிழ்த் துறை. ‘பாரத ரத்னா’, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பாலக்கோடு

கவிஞன் என்றாலே சிந்தனை பிறக்கும். இதில் திருக்குறளிலும் புராணங்களிலும் பாரதியார் பற்றிய செய்திகளிலும் தமது உணர்வுகளைப் புகுத்தி, ‘வானவில்’ கே.ரவி அவர்கள் கூறியுள்ள புதிய சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரை வழிக் காண்போம்.

திருக்குறள் பற்றிய சிந்தனைகள்:-

உலகிலேயே மிகவும் பொதுத்தன்மை வாய்ந்த செய்யுள் நூல்களுள் திருக்குறள் முதன்மையானது. ‘உலகப் பொதுமறை’ என்று போற்றப்படும் திருக்குறளில் கூடச் சில கருத்துகள் தற்காலச் சிந்தனைக்கு ஏற்புடையன அல்லன போல் தோன்றுகின்றன.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை *(குறள்: 55)*

இதன் பொருள்,

தெய்வங்களைத் தொழாதவளாகித் தன் கணவனைத் தொழுது எழும் மங்கை, பெய் என்று சொன்னதுமே மழை பெய்யும். "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் என்று கூறிக் கூறிப் பெண்களை கருத்துமுடம்படவைத்து அடிமைகளாய் நடத்தி வந்த காலம் மாறிவிட்டதே!

இவ்விடத்திலே, பெண்களை முடம் என்று கூறியிருந்தால், அத்துணை சிறப்புற்றிருக்காது. ஆனால், கருத்துமுடம் என்ற வார்த்தையில் நம்மைச் சிந்திக்கச் செய்கிறார். இக்காலச் சூழலில், வள்ளுவர் சொன்ன கருத்தை ஏற்க முடியுமா? கணவனை மனைவி தொழ வேண்டும் என்ற கருத்தை எப்படி ஏற்பது? இதுவே, மேற்கண்ட குறளின் பொருள் என்றால், அக்கருத்து ஏற்கத் தக்கதில்லை என்று துணிந்து கூறுதல் தவறில்லை.

ஆனால், இக்கருத்தை மறுப்பவர்களும் உண்டு. அவர்களுக்காக, இந்தக் குறளின் நுட்பமான மெய்ப் பொருள் வேறாக இருக்கக் கூடும் என்று அவர்கள் சிந்திக்க முயலலாம்.

"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே"என்று கூறிய நக்கீரர் போல், திருக்குறளாக இருப்பினும், இக்கருத்து தற்பொழுது, ஏற்றதல்ல எனத் துணிந்து கூறியதை, நான் இவ்விடத்தில் புதிய சிந்தனையாகவே பார்க்கிறேன்!

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (குறள்: 228)

இக்குறளில் "ஈத்துவக்கும்" என்பதற்கு ஐயா அவர்கள் புராணக் குறிப்பைக் கூறியது மிக அருமை.!

கர்ணனிடம் வந்து, அவன் உடலோடு ஒட்டிப் பிறந்த கவச குண்டலங்களை இந்திரன் யாசகமாகக் கேட்கிறான். கவச குண்டலங்களைத் தந்துவிட்டால், போரில் பாண்டவர்கள் தன்னை எளிதில் வென்றுவிட முடியும் என்று கர்ணனுக்குத் தெரியும். ஆனாலும், கொடுத்துச் சிவந்த கரங்களால் கவசத்தையும், இருசெவிக் குண்டலங்களையும் அறுத்தெடுத்துத் தருகிறான் கர்ணன்! புறத்தே மகிழ்ச்சி தரவே முடியாத இச்செயல், கர்ணன் அகத்தே இன்பம் விளைவித்தது ஏன்?

அதனயே, "ஈத்துவக்கும்" இன்பம்!" என்று அடையாளம் காட்டுகிறார்.

கவிஞன் அடையாளம்

ஒரு மஹாகவி மஹான் இல்லை. தெய்வபக்தி உள்ளவன் மட்டும் தான் மஹாகவி ஆக முடியுமோ? இல்லை. சமயம் சாராத ஒருவன் கூட, மஹாகவியாக முடியும். எவன் ஒருவன், தன் புலன்களைத் தாக்கும் புற அதிர்வுகளைத் தன்னுள் ஆழ்ந்து, ஊடுருவிச் செல்ல அனுமதிக்கின்றானோ, அவனுடைய உள்ளொளி, அந்த அறிவிக்கும் வேட்கை அவனுள் மேலோங்குமேயானால், அவன் மஹாகவியாக முடியும்!

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் உள்ளம் இத்தகையதே!

ஒரு மஹாகவியின் தன்மை இன்னதென்று யாராலும் எடுத்துரைக்க முடியாது. ஒரு சமயம் தாயின் அணைப்புக்காக அழும் குழந்தையாக, சற்று நேரத்தில் அந்தத் தாயே ஆக, குழப்பமாக, தெளிவாக, பித்தனாக, பக்தனாக, சித்தனாக, யாவும் உள்ளவனாக, எதுவும் அற்றவனாக, எதையும் நம்ப மறுப்பவனாக, இறைவனுமாக, மாறி, மாறி அவதாரம் எடுத்துத் தனக்கென்று தனித்தன்மை ஏதுமின்றி வெளியைப் போல் புகும் பாத்திரமாகப் பூரணமுமாகி இருப்பான். அவனே கவிஞன்!

எந்தக் கவிஞனுடைய, படைப்புகளில் பெரும்பான்மையானவை யாரால், என்று படிக்கப்பட்டாலும் சுவைதரக் கூடுமோ, அந்த கவிஞனே உலகக்கவி என்று பொருள் கொள்ளலாம்.

கவிதை

கவிஞனுக்கான அடையாளத்தைக் காண்பித்த ஆசிரியர், கவிதைக்கான அடையாளத்தையும் கூறுகிறார்.

சின்ன சின்ன சொற்கள் எப்படி மெல்ல, மெல்ல விரிந்து, சிறந்த கருத்துகளையும், காட்சிகளையும் படிப்போர் சிந்தையில் பதிய வைக்கின்றன. சொல்லின் வலிமை இத்துடன் நிற்பதில்லை.

மனிதனை தெய்வ மாக்கும் மகத்துவம் கவிதை! நெஞ்சில் புனிதமே உயிர்க்க வைக்கும் புண்ணியம் கவிதை! உள்ளத் தனிமையைத் தகர்த்துவாசல் அமைப்பதும் கவிதையன்றோ இனியுமேன் தயங்குகின்றாய் எழுந்துவா கவிதை சொல்வோம்

- பாரதிக்குள் நான்

சில நேரங்களில், பாரதியின் பதில்கள் எப்படி இருக்கும் என்பதனைக் கவிஞர்,'ஒரு குழந்தையிடம் ஒரு பெரியவர் விளையாட்டுக் காட்டுகிறார். "இதோ பார் கையில் காசு, கையை மூடிக் கொள்கிறார், பெரியவர். "சூ மந்திரக் காளி! கையைத் திறக்கிறார். காசு இல்லை! குழந்தை கைக்கொட்டிச் சிரிக்கிறது. பிறகு குழந்தை கேட்கிறது. எப்படி மாமா செய்தீர்கள்? பதில்:– "அது தான் சூ மந்திர காளி!" குழந்தை, மலங்க மலங்க விழிக்கிறது.

பாரதியின் பதிலும் அப்படித்தான்! 'சூ மந்திர காளிக்குப்' பதில், "தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்". அவ்வளவுதான்! நாமும் மலங்க மலங்க விழிக்கலாம்.!

தீக்குள் விரலை வைத்தால், சுடும்! சுடாது! கண்ணனைத் தீண்டும் இன்பம் தோன்றும்! என்ன ஒன்றுமே புரியவில்லையே புரியாது. புரிய வேண்டாம் கவிதை புரிவதற்காக இல்லை. ஆனால், அது புரியும் மாயத்திற்கோ எல்லை இல்லை.!

"சூ மந்திரக் காளி! கண்களை மூடிக்கொள்! கவிதைத் தீ! கொழுந்து விட்டு எரிகிறது. அதற்குள் விரலை வைத்துப் பார். ஏன், அதற்குள் அப்படியே இறங்கி நீராடத் துணிந்து விடு!"

கவிதையில், ரசிகனாகக் கேள்விகளைக் கேட்கிறார். கவிஞராக, அவரே பதிலையும் அளிக்கிறார்!

சற்றே புதுமையான சிந்தனை

கேள்வி : கவிதை வருகிறது என்கிறாயே, அது வரப்போவதை முன் கூட்டியே, நீ உணர்வதுண்டா?

பதில் : சில சமயம் அப்படி வருவாள்

கேள்வி : வருவாளா? யார் அவள்? அதில் வந்து ஒயிலாகப் படுத்துக் கொள்வாளாம். வரட்டும், அந்த கவிதா!

ஏனிந்த விளையாட்டு என்று கேட்டுவிடுகிறேன். அடடே வருகிறாளோ!

கேள்வி : தினமும் கவிதாவை வரவேற்பதே உன் வேலையா?

பதில்: பொறாமைப்படாதே! சில நேரம் அவள் அடம் பிடிப்பாள், நான் கொஞ்சுவேன், சில நேரம் நான் அடம் பிடிப்பேன். அவள் கொஞ்சுவாள்.

கேள்வி: காட்சியோ ஓசையோ கவிதை தரலாம் அப்படித்தானே!

பதில்: ஏன்? வாசனை கூடக் கவிதை தரலாமே!

கேள்வி: எப்படி?

பதில்: வா காட்டுகிறேன், இருட்டாக இருக்கிறதா? நகரம் முழுவதும் மின்சாரக் கோளாறு. தோட்டத்தில் சென்றமர்வோம். உதிர்ந்து கிடக்கும் பல விதமான மலர்களின் வாசம், திசைகளைக் காட்டவில்லையா? ஆங்கே பார் ஒரு மின்மினி! பார்த்துக் கொண்டே இரு, காலை வந்துவிடும்.!

ஆசிரியரின் கற்பனை ஊற்று, கேள்வி, பதிலாக இன்னும் நீண்டு கொண்டே செல்கிறது.

மானுடம் வெல்லும்

"தானே அனைத்துமாய் உள்ள பரம்பொருள், எல்லாவற்றையும் கடந்தும், எல்லாவற்றுக்குள்ளும் இருக்கும் கடவுள், ஏன் மனித வடிவில் பிறவியெடுத்து வரவேண்டும்? அப்படியே வந்தாலும், ஏன், காதல் மனைவியைப் பிரிந்து துன்பப்பட்டுப் புலம்ப வேண்டும்? தம்பி மூர்ச்சை ஆனாலும், ஏன் அழுது புரள வேண்டும்? ஒரு குரங்கினத் தலைவனை ஏன் மறைந்திருந்து தாக்கிக் கொல்ல வேண்டும்? உலகறியக் கற்பை நிரூபிக்கச் செய்ய, மனைவியை அக்கினிப் பிரவேசம் செய்ய ஏன் கட்டளையிட வேண்டும்? விடை கிடைக்கிறதா, என்று முயன்று பார்ப்போம்!" என்கிறார் ஆசிரியர்.

இராமாவதாரத்தின் நோக்கம் என்ன? ராவணனை மாய்ப்பது. ராவணனுடைய கடுந்தவத்தைப் பாராட்டி அவன் கேட்கும் வரம் தருவதாக, ப்ரும்ம தேவர் வாக்களித்து விடுகிறார்.

ராவணனோ, இயற்கை நியதியே தோற்கும் வண்ணம் சாகா வரம் கேட்டுவிடுகிறான். அப்படி ஒரு வரம் தரும் அதிகாரம் தனக்கில்லை, என்றும் குறிப்பிட்ட சிலவற்றால் தர இயலும் என்று ப்ரும்ம தேவர் சொல்லிவிடுகிறார். ராவணன் சிந்திக்கிறான், தனக்குக் கந்தவர்களால், கின்னரர்களால், தெய்வங்களால், விலங்குகளால் மரணம் சம்பவிக்கக் கூடாது என்று வரம் கேட்டுப்பெற்று விடுகிறான். தனக்கு மரணம் ஏற்படுத்தக் கூடிய வலிமை எந்த மனிதனுக்கும் இருக்க முடியாது என்ற கர்வத்தில், மனிதனை அந்தப் பட்டியலில் அவன் சேர்க்கவில்லை. எனவே, ராவணனை வதம் செய்யும் வல்லமை மிக்க மனிதன் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது, ராவணனுடைய அட்டகாசத்தாலும் செயல்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட முனிவர்கள் அப்படி ஒரு மனிதன் வரத் தவமிருக்க வைக்கக் கடவுள் மனமிரங்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

மனிதனால் தனக்கு மரணம் நேரிடக் கூடாது என்று ராவணன் வேண்டவில்லை, அதற்குக் காரணம், கேவலம் மனிதன், தன்னை என்ன செய்யதுவிட முடியும் என்ற எண்ணமே! அந்த இறுமாப்பைத் தவிடுபொடியாகச் செய்து, அவனை வதம் செய்வதே ராமாவதாரத்தின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால், 'தான் கடவுள்' என்ற பிரக்ஞையின்றி, மனிதனாக மட்டும் இருக்குமாறு, பரம்பொருள் மண்ணில் வந்து பிறக்க வேண்டும்; தரப்பட்ட வரமும் பொய்க்கக் கூடாது. ஆனால், ராவணனையும் வதம் செய்ய வேண்டும். அப்படியானால், கடவுள் சாதாரண மனிதனாகவே வந்து பிறக்க வேண்டும்! அவனுக்குத் தான், கடவுள் என்ற உணர்வு ஒரு துளியும் இருக்கக் கூடாது. இது தான் இராமாவதாரத்தின் கட்டாயம்.

மனிதனை மிகவும் தாழ்வாக ராவணன் எடைபோட்டான். அதனைப் பொய்யாக்கியது ராமாவதாரம், அதனால்தான் "மானுடம் வென்றதன்றே" என்று கம்பன், "மனிதனை வெற்றி பெற்றது எப்போது? மனிதனை மிகவும் இழிவாக மதித்த ராவணனை, பிரம்மன் முதலான தேவர்களால் வெல்லப்பட முடியாதவாறு வரங்கள் பெற்ற ராவணனை, முனிவர்களையும், தேவர்களையும் கொடுமை செய்து கொண்டிருந்த ராவணனை, ராமன் வதம் செய்த போதா? இல்லை, அப்படி வதம் செய்யும்

பொருட்டுத் தானே மனிதனாகப் பிறந்துவரப் பரம்பொருள் முடிவு செய்த அன்றே மானுடம் வென்றது!" என்று சுக்ரீவன் வாய்மொழியாகக் கம்பன் சொல்கிறான். அதுவும் மும்மூர்த்திகள் முதலாக, கந்தர்வர்கள், கின்னரர்கள், தெய்வங்கள், விலங்குகள் போன்ற வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதாம். அதாவது யார் யாரால் தனக்கு மரணம் நேரிடக் கூடாது என்று ராவணன் வரம் பெற்றானோ, அவர்களால் அவன் அட்டகாசத்தை அடக்க முடியவில்லை! அப்படிப்பட்ட அட்டகாசத்தை அடக்கி, ராவணனை வதம் செய்ய, ஒரு மானுடனாக, ராமபிரான் பிறவியெடுத்து வந்தால், சிவன், பிரம்மா உட்படக் கந்தர்வர்கள், கின்னரர்கள், தெய்வங்கள், விலங்குகள் போன்ற வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதாகக் கம்பன் பாடுவது சரிதானே!

'தான், கடவுள்', 'என்ற உணர்வே இல்லாமல் மனிதனாகவே பிறந்து வாழ்ந்தவன் ராமபிரான். அதனால்தான்', அந்த அவதாரத்தில் அவன் எந்த அதிசயச் செயல்களும் செய்து காட்டவில்லை! வலிமை மிக்க மனிதனால் செய்ய முடியாத எந்தச் செயலையும், அவன் செய்யவில்லை! கல் மங்கையானதும், கல் மிதந்ததும் அவனுடைய உணர்வுத் தொடர்பின்றியே நிகழ்ந்த செயல்கள்! ராமனுடைய திருவடிப் பெருமை கருதியே, அவன் திருவடிகள் இம்மண்ணில் பல இடங்களிலும் பதிய வேண்டும் என்று முனிவர்கள் விரும்பியதாலே, பரதன் மூலமாக அவன் பாதுகைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று கூட ஓர் எண்ணம் தோன்றுகிறது.

இராமாவதார நிகழ்ச்சிகளை அணுகி, ஆராய்ந்தால் நாம் எழுப்பிய பல கேள்விகள் எழலாம். விடையின்றித் திணறலாம். காரணம் என்ன? ஒரு காலச் சூழ்நிலைக்கு பொருந்தும் விதி வேறொரு காலச் சூழலுக்குப் பொருந்தாமல் போகலாம்!

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று சில விதிகளை நாம் வகுத்துக் கொண்டுள்ளோம்! அந்த விதிகள் இயற்கை யிலேயே உள்ளவையா? இல்லை, அவை நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட விதிகள்! காலச் சூழலுக்கேற்ப, அந்த விதிகள் மாறக்கூடும்! அப்படி மாறக்கூடிய தன்மையாலேயே, வாழ்க்கை ஒரு விளையாட்டாகவும் தீராத விளையாட்டாகவும் உள்ளது. தன் விதிகளைத் தானே மாற்றிக் கொள்ளக் கூடிய

ஆற்றல், எல்லாப் பொருள்களுக்கும் உள்ளதால் தான், பரிணாம முன்னேற்றம் நிகழக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது! அந்த ஆற்றல், உயிர்களுக்கு மட்டுமின்றி, பொருள்களுக்கும், பொருட் துகள்களுக்கும் உண்டு என்பதே தற்கால அறிவியல் உணர்த்தும் உண்மை! மாறக்கூடியவாறும், மாற்றப்படக் கூடியவாறும் தம் விளையாட்டின் விதிகளை வகுத்துக் கொண்டு விளையாடும் விளையாட்டே வாழ்க்கை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

கருத்து, கவிதையை உருவாக்குகிறதா?

கவிதை, கருத்தினை உருவாக்குகிறதா?

கருத்து – பூசல் தரும்!

ஆனால், கவிதை – ஒன்றுபடுத்தும்

சொல்பவன், கேட்பவன் – இருவருக்கும் ஒரே உணர்வு வந்தால், அங்கு கவிதைக்கு வெற்றி!

❖

கானல் நீரைப் பருகும் கவிதைக் கதிரவன்

•

முனைவர் சௌந்தர மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,
திருநெல்வேலி – 627 011.

"பாட்டினில் அன்பு செய். நூலினைப் பகுத்துணர்" என்றான் மகாகவி பாரதி. கவிஞர் 'வானவில்' ரவி அவர்களின் படைப்புலகை இவ்விரு ஆத்திசூடிகளுக்குள் அடக்கிவிட முடியும். எதனையும் "ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? எதனால்?" என்று ஆராய்ந்து, நுட்பமான பார்வையில் ஆழமாக உய்த்துணர்ந்த தேர்ந்த மொழியால் அவரது படைப்புலகம், சமுதாயத்தின் உண்மை முகம் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கிறது. "உள்ளத்துள்ளது கவிதை இன்பம் உருவெடுப்பது கவிதை. தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை தெரிந்துரைப்பது கவிதை" என்றாரே கவிமணி. அவரது கூற்று 'வானவில்' ரவி அவர்களின், "கானல் நீரைக் கடந்து" கவிதைகளுக்குப் பொருந்துகிறது.

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தருவது கவிதை. செவியுறத் தெளிந்த அக்கவிதை வரிகள், ஒளிவீசும்! அகக்கவிதை வரிகளில், தண்ணெனக் குளிர்ந்த ஒழுக்கம் நிரம்பி வழியும். கம்பன் வரிகளில் எது கவிதை எனச் சொல்வதானால்.

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறியளவில்
செவியுறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தாங்கி
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

கம்பனை விட, ஒருபடி தாண்டும் பாரதி, ''நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்கிறான். இந்த அளவுகோல்களைக் கொண்டு, 'வானவில்' ரவி அவர்களின் "கானல்நீரைக் கடந்து எனும் கவிதை" நூலைத் திறனாய்வு செய்யலாம்.

வெப்பமான காலக்கட்டத்தில் ஒளி விலகல் மற்றும் அகத்தெறிப்பு நிகழ்ந்து, வானின் எதிரொளிப்பால் தோன்றும் மாயத் தோற்றமும் கானல் நீராகும். 'கானல் நீர்' எனும் போலித் தோற்றப்பாட்டினைக் கடந்து, வாழ்வின் மெய்ம்மையை 'வானவில்' ரவியின் கவிதைகள் தாக்கப் பார்வையோடு முன் வைக்கின்றன.

'நமக்குத் தொழில் கவிதை', 'உன்னோடு நான்', 'மின்னற்சுவை', 'சொற்களுக்குள் ஏறிக் கொள்', 'வள்ளுவரின் வாயிலில்', 'காற்று வாங்கப் போனேன்' ஆகிய நூல்களில், கானல் நீரைப் பருகிய கதிரவனாக 'வானவில்' ரவி அவர்களின் எழுத்துலகைக் காண முடிகிறது.

இங்கிலாந்து நாட்டின் கவிஞன் வில்லியம் வேட்ஸ்வொர்த், அகத்திணைக் கவிதைகளைத் தொடங்கி வைத்து விட்டு, "என்னுடைய குரல் பறைசாற்றுகிறது. மனித மனம் எத்தனை நேர்த்தியானது. அது கருவானாலும் மனிதர்களிடத்தில் கொஞ்சம்தான் கேட்கக் கிடைக்கிறது. வெளி உலகம் மனித மனத்தோடு பொருந்தி விடுகிறது'' என்று சொன்னார். 'வானவில்' ரவியின் கவிதைகள், நுட்பமான மனித மனத்தின் மொழிப் பிரதிபலிப்பாய் அமைகின்றன. குறியீடுகள் சார்ந்து அவர் கட்டமைக்கும் அகமன உலகம் வேறுபட்டதாயிருக்கிறது. கவிஞன்–ரசிகன் உரையாடல் உத்தி, மிக எளிமையாகத் தாக்கத்தை முன் வைத்து வளைந்து நெளிந்து, வாசகன் மனத்திற்குள் சட்டென்று ஒட்டிக் கொள்கிறது.

என் சொற்களுக்குள் ஏறிக் கொள்
சொர்க்கத்தைக் காட்டுகிறேன்
என் கற்பனைப் புரவியை உன்
கண்களில் பூட்டுகிறேன்

சொர்க்கத்தைக் காட்டுவதும் கற்பனைப் புரவியைக் கண்களில் பூட்டுவதும் எதுகைக்காக எழுதப்பட்ட வரிகளாக மட்டும் கொள்ளாமல், அவரது கவிமொழி தரும் அனுபவம், வாசகனை அச்சொற் செட்டோடு பயணிக்க வைக்கிறது. பாரதியின், "ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" எனத் தொடங்கும் கவிதையை, இக்கவிதையோடு ஒப்பிடலாம். பிருந்தவனி ராகத்தில் பாரதி இயற்றிய இப்படலில்,

சொல்லுக்கடங்காவே பராசக்தி
சூரத்தனங்கள் எல்லாம்
வல்லமை தந்திடுவாள் பராசக்தி
வாழி என்றே துதிப்போம்

என்று சொல்லுக்கு அடங்காதனவும் உலகில் உண்டு எனப் பாரதி காட்டுகிறார். 'வானவில்' ரவி மாறுபட்டு, என் சொற்களுக்குள் ஏறிக் கொள் உனக்கு நான் சொர்க்கத்தைக் காட்டுகிறேன் என்பது திருக்கோட்டியூர் நம்பியிடம் உபதேசம் பெற்ற எட்டெழுத்து மந்திரத்தை எல்லோர்க்கும் உபதேசம் செய்து, எல்லோருக்கும், சொர்க்கம் புக வழிவகுத்த இராமானுஜரின் சொற்றொடரோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

'வானவில்' ரவியின் கவிதைகளில் ஒளி உமிழும் வரிகள் மிகுதியாக இருக்கின்றன. நாமக்கல் கவிஞர் வரிகளில் சொல்ல வேண்டுமானால்,

எண்ணியெண்ணித் திட்டமிட்டு எழுதினானோ?
எண்ணாமல் எங்கிருந்து கொட்டினானோ?

என்று வியக்கத் தோன்றுகிறது.

உயிர்க் கருவுக்குள் ஊடுருவிப் போய்
உண்மை அறிந்திடலாம் - அங்கு
வடிவம் எடுத்து வளரும் புதிய
மாயம் உணர்ந்திடலாம்
உலக விளிம்புக் கோடிச் சென்றே
உருண்டு விழுந்திடலாம்

விழுந்து கொண்டே வீரக்கதைகள்
பேசிக் களித்திடலாம்.

எனும் கவிதையின் இறுதிப் பகுதி கானல் நீரைக் கடந்து மெய்ம்மை தேடுகிறது. என் சொற்களுக்குள் ஏறினால் மீண்டும் வர மாட்டாய். சொற்களோடு சொற்களாய்க் கரைந்து போய்விடுவதாய், விழி தொடாத இடமெல்லாம் என் மொழி நுழைந்து செல்லும் எனச் சொல்லி, இறுதியில், "கானல் நீரைக் கடந்து சென்றால், கற்பகச் சோலை வரும்" என முடிக்கிறார். எதிரெதிர் முனைகளில் இருக்கும் கானல் நீரையும் கற்பகச் சோலையையும் கவிஞர் அடுத்தடுத்து வைத்துப் பார்க்கிறார். அமைப்பு வாதத்தில் இவை துருவ எதிர்வுகள் எனப்படும். இருண்மையை விலக்கி ஒளியைப் பாய்ச்சும் இக்கவிதை 'வானவில்' ரவியின் குறிப்பிடத்தகுந்த கவிதை. ஒன்றைக் கடந்தால்தான், இன்னொன்றை அடைய முடியும் எனும் தத்துவத்தை அழகான சொல்லடுக்கில் இக்கவிதை விளக்கிறது.

'வானவில்' ரவி அவர்களின் அனைத்துக் கவிதைகளும் காலம், களம் எனும் இரண்டினையும் தெளிவுபடுத்துகின்றன. சங்க அகப்பாடல்களில், எத்திணை சார்ந்து எழுதப்பட்டவை என்கிற திணை, துறை குறிப்பு இடம்பெறும். கவிஞர் ரசிகர் உரையாடலில் அக்குறிப்பை, நம்மால் தெளிவாக உணர முடிகிறது. அவரது கவிதைகள் அவரது ஆளுமையின் அடையாளமாய் உள்ளன. ஆழ்ந்த பொருளனுபவம் தருவதாகவும் அழகியலின்பத்தைத் தருவதாகவும். அவர் ஆழ்மனக் குறிப்பேடாகவும் "கானல் நீரைக் கடந்து" கவிதைகள் அமைகின்றன. கவிஞர் பதிவு செய்யும் காட்சியனுபவம், வாசகர் மனத்தில் பரவசத்தை உண்டாக்கி விடுகிறது.

"காமம் இனிது" எனத் தொடங்கி, "பொங்கி வரும் நதி கடலுக்குள்ளே சங்கமிப்பது சத்தியம் தானே" என்கிறார். அவரது கவிதைகளில் தொடர்ந்து வரும் கவிஞனும் ரசிகனும் இருவரல்லர், ஒருவர்தான். தத்துவ விசாரணைக்காக அவர் தன்னையே, இரு துண்டுகளாக்கித் தன்னோடு தன்னைப் பேச வைத்து, மோத விட்டு, ரசிக்க விட்டு வேடிக்கை பார்க்கிறார். 'நான்', 'நாமாக' மாறும் நுட்பமான புள்ளி அது! அவர் பார்க்கும் கோணம், முற்றிலும் புதிதானது, முற்றிலும் புதிருமானது.

அவர் முன்னிறுத்தும் குறியீடும் படிமமும் உள்ளுறையும் இறைச்சியும் வாழ்வின் உண்மையான அடையாளத்தை நயத்தோடும் உணர்த்துகின்றன. அவரது சொற்சேர்க்கை, வசன கவிதையை ஓசை ஒழுங்குமிக்க கவிதையாக்குகிறது.

சிரித்த முகத்தைப் பார்த்துக் கொண்டே
சிறிது நேரம் இருந்தால் சிறகு
விரித்துப் பறக்கும் மனமோ எல்லை
மீற இயலும் அந்தச் சலனம்
சரியில்லை தவறுமில்லை
சரியா தவறா சர்ச்சை எதற்கு
காதல் என்பதே பெரிய வழக்கு

எனும் கவிதையின் ஓசை ஒழுங்கும், உள்ளாடும் தத்துவ விமர்சனமும் கடைசி வரியில் முடிவுக்கு வருகின்றன.

கால வரிசையில் 'வானவில்' ரவியின் கவிதைகளை வாசித்துப் பார்க்கும்போது, கவிதையின் பல்வேறு வடிவங்களில் அவர் முயன்ற முயற்சிகள் தெளிவாகின்றன. வழக்குப் பட்டியல் தாளில், நீதியரசர் ஸ்வாமிக்கண்ணு அவர்கள் முன்னிலையில் எழுதிய,

ஆசையில் அலைந்து கெட்டேன்
அனுபவம் பழுது பட்டேன்

எனத் தொடங்கும் கவிதையைச் சொல்ல முடியும். நாட்டார் இலக்கியத்தின் பேச்சு மொழியை, கவிதை அழச் செய்யுமா?" எனத் தொடங்கும் கவிதையில் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

முண்டாசுக் காரன் கொண்டாந்த வெளக்கு
முணுக்கு முணுக்குனு எரியுதடா
முன்னால பாத்தா முச்சந்தி நடுவிலே.
பொன்னான ஒலகம் தெரியுதடா

என்ற கவிதை மக்கள் வழக்கில் அமைகிறது. 'தான்' என்பதை விடுத்து, தமிழாக நின்று, இயற்கையை ஆராதிக்கின்றன 'வானவில்' ரவியின் கவிதைகள். அவர் வரிகளில், கனவுப் பயிர்கள் காற்றிலாடும் காட்சி தெரிகிறது. "அவனுக்காகக் கொஞ்சம் அழக் கூடாதா? நட்சத்திரங்கள் மண்ணில் விழக் கூடாதா?" எனும் கேள்வி. கவிதையாய் மலர்கிறது.

எல்லை கடந்த மொழிப் பிரவாகமாய் அவரது கவிதைகள் அமைகின்றன. ஒரு வரியும் அடுத்த வரியும் பேசிக் கொள்ளும் மொழி நெருக்கத்தோடு அவரது கவிதைகள் அமைகின்றன.

வால்ட் விட்மன், டி.எஸ்.எலியட், எஸ்ரா பவுண்ட் ஆகிய படிமவியல் கவிஞர்களின் போக்கோடு, 'வானவில்' ரவியின் போக்கு ஒன்றுபடுகிறது. சொற்சிக்கனம், ஆழமான

உட்பொருள், தேர்ந்த வாசக அனுபவம், அவரது கவிதைகளைச் செம்மையாக்குகின்றன.

எதுகையும் மோனையும் சந்த நயமும் அவரது கவிதைகளில் இயல்பாக அமைகின்றன. பாரதியின் காட்சிகள் கவிதை நோக்கிலும் போக்கிலும் இன்றும் புதிதாகக் காட்சி தருவதைப் போன்று. 'வானவில்' ரவி அவர்களின் கவிதைகள் முப்பதாண்டுகளுக்குப் பின்னும் புதிதாகவே அமைகின்றன. அவரது கவிதைகள் இயற்கையை இரசிக்கச் சொல்கின்றன; வாழ்வின் இனிமையை தாக்க நோக்கில் அழுத்தமாகச் சொல்கின்றன.

"சோகத்தில் கூட சுகம் உண்டு தோழி" என்று எதிர்மறையையும் நேர்மறையாய் ஆக்குகின்றன. "நிழல் நீண்டு கொண்டே போகிறது, நான் தாவிப் பிடிக்கும் முன்பே என்னைத் தாண்டிச் செல்கிறது, என் ஆவிப் பிடிப்பை, ஆற்றாமையைத் தான் எள்ளி நகைக்கிறது" என்று எதார்த்தத்தை வாசகனுக்குக் கவிநடையால் உணர்த்துகின்றன.

கண்ணிமைக்கும் நேரத்தில் கவிதை பாடு
காத்திருக்க முடியாது காதலோடு
பண்ணமைக்க வந்து நிற்கும் தென்றல் வேறு
பாதைமாறிப் போவதற்குள் கவிதை பாடு

என்று இசையமைத்துப் பாடும் வகையில் 'வானவில்' ரவி அவர்களின் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை, காற்றும் இனிமை,

தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது, ஞாயிறு இனிது, திங்களும் நன்று, வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது, கடல் இனிது, மலை இனிது, காடு நன்று, 'வானவில்' ரவி கவிதைகள் இனியன என்று சொல்லி உரையை நிறைவு செய்கிறேன்.

❖

பெண்களின் வாழ்க்கையே ஒரு கானல் நீர்

•

முனைவர் செ. திலகவதி,
தமிழ் உதவிப் பேராசிரியர், வேளாளர் மகளிர் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு – 12.

பெண் சக்தியின் அம்சம். தாயகவோ, மனைவியாகவோ, சகோதரியாகவோ, மகளாகவோ இருந்து, ஆண்களுக்குச் சக்தியை அளித்து, அவர்களின் வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கின்றாள். இல்லற வாழ்க்கையில் ஆணைவிட பெண்ணுக்குச் சற்று அதிகமான பொறுப்புகள் உள்ளன. குழந்தை வளர்ப்பில் தொடங்கி, குடும்ப வாழ்க்கை தடுமாறாமல் ஓட தன் சக்தி முழுவதையுமே செலவழிக்கிறாள் பெண். ஆனால், ஆணாதிக்க சமுதாயத்தில் இன்னமும் சரிநிகராய், சமத்துவமாய் செயல்பட இயலாமல் உள்ளர். அதற்குக் காரணம், ஆண்களுக்கு இடையே உருவான அச்சம். பெண் என்பவள் தலைமைப் பொறுப்பிற்குத் தகுதியானவள் என்பதை அறிந்தும், அவளை அடக்கி வைத்துள்ளது ஆணாதிக்கச் சமுதாயம். இல்லறம் நமக்கேயுரிய சிறந்த பண்பாட்டின் சின்னம். மரபு வழிகளினால் பின்னப்பட்டு உறவுமுறைகளினாலும், சொந்தபந்தங்களினாலும் செதுக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு. நல்ல மனைவி நல்ல பிள்ளை, நல்ல குடும்பம் தெய்வீகம் என்றும், குடும்பம் ஒரு கோயில் என்றும், குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்றும் போற்றிப் பெருமைப்படத்தக்க ஒன்று. இத்தகைய இல்லற வாழ்வு பெருமை பெறவேண்டும் என்றால், அறத்தோடு பொருந்தி வாழ

வேண்டுமென்பதைக் கவிஞர் 'வானவில்' கே. ரவி அவர்கள் இக் கட்டுரையின் மூலம் விளக்குவதை அறியலாம்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

மேலோட்டமாகப் படித்தால் இதன் பொருள், தெய்வங்களைத் தொழாதவளாகித் தன் கணவனைத் தொழுது எழும் மங்கை, பெய் என்று சொன்னதுமே மழை பெய்யும்.

'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று கூறிக் கூறிப் பெண்களைக் கருத்துமுடம்பட வைத்து அடிமைகளாய் நடத்திவந்த காலம் மாறிவிட்டதே! இந்தச் சூழ்நிலையில், மேற்சொன்ன கருத்தை ஏற்க முடியுமா? பெரும்பாலான ஆடவர்கள் குடிகாரர்களாவும், மனைவியை அடக்கியாள முயலும் ஆணவக்காரர்களாகவும், தீய வழிகளில் நாட்டமுற்று அலைபவர்களாகவும் இருக்கும் போது, கணவனை மனைவி தொழ வேண்டும் என்ற கருத்தை எப்படி ஏற்பது? இதுவே, மேற்கண்ட குறளின் பொருள் என்றால், அக்கருத்து ஏற்கத் தக்கதில்லை என்று துணிந்து கூறுதல் தவறில்லை. இப்படிச் சொல்லத் தயங்குவோர்க்கு இன்னோரு வழியுண்டு. இந்தக் குறளின் நுட்பமான மெய்ப்பொருள் வேறாக இருக்கக்கூடும் என்று அவர்கள் சிந்திக்க முயலலாம்.

உலகப் பொதுமறை எனப்படும் திருக்குறளிலேயே இப்படி இடர்ப்பாடு உண்டாகிறதே! திருவள்ளுவர் எய்திய உயர்ந்த நிலையை எட்டாத, சாதாரண ஆசிரியர்களின் படைப்புகள் இன்னும் எத்தனை இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும்! என்று கவிஞர் 'வானவில்' கே. ரவி கூறியுள்ளார்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்?

மனதைச் செம்மைப்படுத்தி, பண்படுத்தி, அலைய விடாமல் ஒருமைப்படுத்தி தன்னைக் காத்துக் கொள்ளும் மன உறுதியே கற்பாகும்.

கற்பு பெண்ணுக்கும் ஆணுக்கும் மாந்தர் அனைவருக்கும் பொதுவானது. நாம் வாழும் சமுதாயம் பெரும் மாற்றம் பெற்று வளர்ந்து வருகிறது. பெண்கள் வீட்டுக்குள் அடைந்து கிடக்காமல், ஆண்களைப் போல, வெளியில் கடமை

உணர்வோடு வேலை செய்யும் சூழல் ஏற்பட்டுள்ளது. குடும்பத்தை, மனைவியைக் கணவன் மட்டுமே காப்பாற்றுதல் என்ற கொள்கை மாறிவருகிறது. திருக்குறளில் வள்ளுவர் மனையறத்திற்குக் கணவனைத் 'துணை' என்று கூறவில்லை. மனைவியைத்தான் 'வாழ்க்கைத் துணை நலம்' என்று கூறுகிறார்.

மனைவி தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையவளாக இருக்க வேண்டும். தன்னைத் துணையாக நம்பி மணம் செய்துகொண்ட கணவனைத் தன் கடமைகளாலும், தொண்டுகளாலும் காப்பாற்றும் திறன் படைத்தவளாக இருக்க வேண்டும். தன்னை நேசிக்கும், நம்பியிருக்கும் கணவனை அன்பினால் இணைத்துக்கொண்டு அவனே எல்லாம் என்று அவனிடம் கொண்ட உறவு ஒன்றிலே ஒன்றி நிற்கும் மன உறுதியே, மனத்திண்மையே கற்பாகும்! இம் மனஉறுதியே, மனத்திண்மையே அவளுக்குக் காவல். எந்தச் சூழலிலும் பிற ஆண்களிடமும் தன் மனத்தில் எதிர்பாராது தோன்றும் ஆசைகளிலிருந்தும், சலனங்களிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்வதுதான் மனத்திண்மையாகிய ஒழுக்கம் மிகுந்த கற்புடைமை ஆகும். கணவன், குடும்ப நல்வாழ்வு, பிறந்த குடி, புகுந்த குடி இவற்றின் மேன்மைக்காகப் பெண்ணானவள் தன்னையே அர்ப்பணித்துக் கொள்கிறாள்.

தன்னையும், தன்னை மணந்தவனையும், தன் குடிப்பெயரையும் காப்பாற்றியும், எக்காலத்திலும் அப்பெருமையில் சிறிதுகூட வழுவிவிடாத 'சோர்விலாத' பெண்ணே பெருஞ்சிறப்புப் பெற்றவள். வாழ்க்கைக்கு இவளைத் தவிர துணை வேறு யாதும் இல்லை. இத்தகைய பெண்ணை ஒருவன் மனைவியாக அடையும் பேற்றினை விட மிக உயர்ந்த பேறு வேறு ஒன்றும் இல்லை.

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி

பெண் என்பவள் எப்போதும் கணவனின் நல்வாழ்வு ஒன்றையே கருதி வாழ்பவள், அந்நினைவிலே ஒன்றிவிடுவதால், தவம் செய்பவர்களின் ஆற்றலைப் பெற்றுவிடுகிறாள்! சாதாரணப்பெண், இவ்வொன்றிய உணர்வால் மாற்றம் பெற்று, அளப்பரிய ஆற்றல் பெற்றுவிடுகிறாள். சக்தி

வடிவாகிவிடுகின்றாள். அவள் எண்ணியதை எண்ணியபடி பெறும் தவ ஆற்றல் பெறுகின்றாள்.

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்
பகை பாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்

பெண்களுக்குக் கற்பு எவ்வளவு அவசியமோ அதே போல ஆண்களுக்கும் கற்பு அவசியம் என்று வலியுறுத்துவார் வள்ளுவர்!

பெண்களின் கற்பு நிலைக்க வேண்டுமானால், ஆண்களும் தங்கள் கற்பைக் காப்பாற்ற வேண்டும். அதனால்தான் ஆண்களுக்கும், பெண்களுக்கும் கற்பைப் பொது நெறியாக வைக்க வேண்டும் என்று பாரதியும் வலியுறுத்துவார். 'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்று பிறன்மனை நோக்காத ஆண்மையே பேராண்மை என்றும் மற்றவையெல்லாம் ஆண்மையன்று என்றும் வள்ளுவர் கூறுவார். மனத்தை அலையவிட்டு, ஒழுக்கமில்லாமல் தீயஆசை என்ற புதைமணலில் சிக்கி, மயக்கம் காரணமாகத் தீய செயலில் இறங்குபவன் இனிய இல்லற வாழ்வைச் சிதைத்து விடுகிறான். சமுதாயத்தின் புனித அமைப்பைச் சீர்குலைத்து விடுகிறான். சமுதாயப் புற்றுநோய் ஆகிவிடுகிறான். தானும் அழிந்து பிறரும் அழிவதற்கும் காரணமாகி விடுகின்றான் என்று கடிந்து பேசுவார் வள்ளுவர்.

பெண்ணின் கற்பு என்பது பெண்ணின் மனத்திண்மை, சுயகட்டுப்பாடு, மனவுறுதி ஆகும். புறக்கட்டுப்பாடு, சிறை காக்கும் காப்பு, காப்பு அன்று, பாதுகாப்பு அன்று, குடும்பப் பொறுப்பும், மான உணர்வும்,சுயகௌரவமுமே பாதுகாக்கும் அரண்கள். இவ்வுண்மைகள் ஆண்களுக்கும் பொருந்தும். வாழ்க்கையில் நாம் பல காரியங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டியதிருக்கிறது. ஓர் ஆண் தன் மனைவியைத் தேர்ந்தெடுப்பதாயினும், ஒரு பெண் தனது கணவனைத் தேர்ந்தெடுப்பதாயினும், ஆய்ந்து பார்க்க வேண்டும். தகுதியும் பொருத்தமும் இல்லாதவரை அன்பு காரணமாக, உறவு காரணமாக, நட்புக் காரணமாக முகதாட்சண்யம் கருதித் தேர்ந்து எடுத்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் துயரம் அடையநேரிடும். என்பதனைக் கவிஞர், 'வானவில்' கே. ரவி விளக்கியுள்ளார்.

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது

காதலியின் சிறுநோக்கம் எப்படிக் காதலன் கண்களைக் களவு கொண்டது? காதலி நோக்கிய பிறகு, காதலனுடைய கண்கள் காதலியைத் தவிர வேறெதையும் பார்க்க முடியவில்லையாம். காரணம், தன் சிறுநோக்கத்தின் மூலம், காதலி தன்னையே காதலன் கண்களில் நிறைத்துவிட்டாள். அதன் பிறகு, காதலன் எதைக் கண்டாலும், அதில் காதலியே தெரியுமளவுக்கு அவனுடைய கண்களைத் தன்மயமாக்கிக் கொண்டுவிட்டாள். இந்தச் சிறு நோக்கம் மூலமாக ஒருத்தித் தன் காதலன் கண்களையும், அவன் அவளுடைய கண்களையும், ஒரே நேரத்தில் களவுகொண்ட குறிப்பைத் தானே கம்பரும் வியக்கிறார்.

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்

காமம் கண்ணை மறைக்கச் சிறைகொண்ட சீதையைப் பார்த்து, இராவணன் கூறும் மொழியாகக் கம்பர் சொல்லும் சில வரிகள் இங்கே குறிப்பிடத் தக்கவை:

பெண்எலாம் நீரே ஆக்கி பேரெலாம் உமதே ஆக்கி
கண்எலாம் நும்கண் ஆக்கி....

என்பதனைக் கவிஞர் 'வானவில்' கே. ரவி அவர்கள் நூல்கள் வழியாக அறியமுடிகிறது.

நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ!

என்று 'புதுமைப் பெண்' கவிதையில் பாரதி கூறுகிறான். நாணம், அச்சம் என்றெல்லாம் பெண்ணியல்புகளைக் கூறியே, அவர்களை ஆணினம் அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அந்தப் போலிப் பண்புகளை உதறிவிட்டு, ஞானம், நல்லறம், வீரசுதந்திரம் பேணல் ஆகிய பண்புகளையே, பெண்ணியல்புகளாகக் கொள்ள வேண்டும் என்று பெண்மைத் தெய்வம் பேசுகிறதாம். அப்படியானால், இப்பேச்சுக்கு எதிரிடைக் கருத்தைக் கூறுவது பிசாசாகத் தானே இருக்க முடியும்! இந்தப் பிசாசுகள் நீங்கி நன்மையுண்டானதென்று கும்மியடிக்கச் சொல்கிறான் பாரதி.

பெண்களைப் புதுமைப் பெண்களடி, பூமிக்கே கண்களடி எனக் குறிப்பிட்டார் ஒரு கவிஞர். பூமிக்கு, அவர்கள் கண்கள் மட்டுமல்ல, பூமிக்கு ஆதாரமே பெண்கள்தாம்! பெண்களை ஏறக்குறைய அடிமைகளைப் போன்று நடத்திய காலத்தில் மகாகவி பாரதியார் பெண்மையைப் போற்றுவதைத் தன் மனைவி யிடமிருந்தே தொடங்கினார். 'செல்லம்மா எனக்குச் சமமாக பக்கத்தில் அமர்ந்துகொள். உடலமைப்பில் மாறுபட்டாலும் ஆணையும், பெண்ணையும் சமமாகவே இறைசக்தி படைத்துள்ளது. எண்ணங்களும், உணர்வுகளும் ஒன்றே ஆகும்' எனப் பேசி அக்ரஹாரத்திலேயே அதிசயத்தைத் துவக்கினார். அவர் விதைத்த விதை, விருட்சமாய் வளர்ந்து, பெண்கள் ஆண்களுக்கு இணையாகவும், சில துறைகளில் அவர்களையும் தாண்டிச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்களைத் தெய்வமாக போற்றுவதுதான் நம் பண்பாடு. நதிகளுக்குக் கூட கங்கை, காவேரி, யமுனா, சரஸ்வதி எனப் பெண்களின் பெயர்களையே சூட்டி பெருமைப்படுத்தியிருக்கின்றனர்.

இல்லறமல்லது நல்லறமன்று

என்பது சான்றோர் தம் வாக்கு. அத்தகைய இல்லறம் சிறப்பதற்கான பல நெறிகளைத் திருக்குறள் வழங்கியுள்ளது. உலகளாவிய பொது நோக்குடையதாகவும் தமிழர்தம் பண்பாட்டின் சிறப்பைப் பறைசாற்றுவதாகவும் அமைந்த நூல் திருக்குறள். வாழ்க்கைத் துணையோடு அறநெறிகளில் இருந்து பிழையாமல் இல்வாழ்க்கை நடத்துபவரே, இல்வாழ்க்கையால் வரும் பயனை அடையக் கூடியவர்கள். இல்வாழ்க்கை வாழ்கின்றவன் தன்னலம் துறந்து பிறர்நலம் பேணி வாழ்கின்றவன். தன்னுடைய மனைவி, பிள்ளைகள்,பெற்றோர், சுற்றத்தார், வறியவர்கள், மூதாதையர், சமுதாயத்தில் ஆதரவற்றவர்கள், துறவு மேற்கொண்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்து வாழ்பவன் இல்லற வாழ்க்கை வாழ்பவனுக்கு இத்தகைய மூவகையாரையும் காத்தல் கடமையாகிறது.

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்
குறைவி லாது முழுநிகர் நம்மைக்...

என்ற பாடலில், பெண்களாகிய நாம் நம் ஆற்றலால் இவ்வுலகில் உயர்நிலை அடைவோம். நாம் அடைந்த முந்தைய கொடிய அவமானங்களையெல்லாம் போக்கிக் கொள்வோம். ஒரு சதவீதமும் குறைவின்றி நூறு விழுக்காடு

நம்மைத் தங்களுக்குச் சமானமானவர்களாக ஆண்கள் ஏற்றுக் கொண்டால், நாம் அவர்களோடு இணைந்து, நம் அன்னை தேசத்தின் இழிநிலை நீங்கும்படி அதனை மறுபடியும் நமக்கு உரிமையாக்கும் போராட்டத்தில் சேர்ந்து பாடுபடுவோம். ஆணோடு ஒப்பிடும்போது, பெண் ஒரு விலங்கினைப் போல் தாழ்வாகக் கருதப்படக் கூடியவள் என்னும் பண்டைய சமூக வழக்கம் அடியோடு ஒழிந்துவிட்டது. இனிமேல், பெண்களாகிய நாம் ஆண்களுக்குச் சமமாகச் சமூக நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டும்.

அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்...

என்ற பாடலில், ஆறறிவு படைத்த மானுட ஜாதியினரை அடிமைப்படுத்த முனைபவர்கள் பைத்தியக்கார்களாவர். தர்ம மார்க்கங்கள் எல்லாவற்றிலும் உயர்நிலை அடைந்து, சத்தியத்தைக் கடைப்பிடித்து மனிதர்கள் தேவநிலையை அடைய வேண்டுமெனில், இழிவான சேவகத் தொழில்களை நீக்கி, அடிமைத் தளையை நெருப்பில் போட்டுச் சாம்பலாக்க வேண்டும்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கிஇவ் வையம் தழைக்குமாம்
பூணும் நல்லறத் தோ(டு) இங்குப் பெண்ணுருப்...

போன்று நிற்பது சிவசக்தியாம்.

என்ற பாடலில், ஆடவரும் மகளிரும் சமம் என்பதை ஏற்றுக் கொண்டால், இந்த உலகம் அறிவில் மேம்பட்டுச் செழிப்படையும். சிறந்த தர்மத்தைக் கடைப்பிடிப்பவளாய், இவ்வுலகில் பெண்ணின் வடிவமெடுத்து வந்து நிற்பவள் அன்னை சிவசக்தியேயாவாள். வெட்கமும், பயமும் நாய்களுக்குத்தான் தேவை. பெண்களுக்கு அவை அவசியமில்லை. மெய்யறிவு, மேலான தர்மம், தைரியமான சுதந்திரம் ஆகிய இவையெல்லாம் நல்ல குலத்தில் பிறந்த பெண் கடைப்பிடிக்கின்ற பண்புகளாகும். இறைசக்தியைக் கூட சிவசக்தியாக, அர்த்தநாரீஸ்வரராக போற்றினார்கள், போற்றிக்கொண்டும் இருக்கின்றனர். இறைவன் ஒவ்வொரு வீட்டிற்கும் எழுந்தருள முடியாது என்பதற்காகவே, தாய் வடிவில் ஒவ்வொரு பெண்ணையும் ஒவ்வொரு வீட்டிற்கும் அனுப்பிப் பராமரிப்பதாகக் கூறி, பெண்ணை இறைவனுக்குச் சமமாகப் போற்றுகிறார்கள்.

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது, பெரும்பான்மை ஆண்களின் வாழ்க்கை அனுபவம். அந்தப் பெண் தாயாகவும், தாரமாகவும் இருப்பாள். கணவனுக்காகவும், குழந்தைகளுக்காகவும் பெண்கள் தங்கள் வாழ்வையே தியாகம் செய்கிறார்கள். ஆண்கள் குடும்பத்திற்காக உழைக்கிறார்கள். எல்லா பாசத்தையுமே துறந்துவிட்ட பட்டினத்தார், தாய்ப்பாசத்தை மட்டும் துறக்க முடியாமல் தவித்துப் புலம்பிப் பாடியது, தாய்மையின் சிறப்புக்கு ஓர் உதாரணமாகும்.

படித்த பெண்கள் ஆண்களுக்குச் சமமாகப் பணியாற்றிக் குடும்ப முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறார்கள். அதிகப் படிப்பு இல்லாத பெண்கள் சித்தாள், சாலை போடும் பணி போன்ற கடுமையான வேலைகளில் ஈடுபட்டு குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். ஆண்களின் வருமானம் தீயவழிகளில் செலவாகும் வாய்ப்புண்டு. ஆனால், பெண்களின் வருமானம் ஒவ்வொரு ரூபாயும் அவர்களது குடும்ப நலனுக்கே பயன்படும். குடும்பப் பெண்களின் சிரமங்களைவிட, வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக வேலை பளுவுடன் நடைமுறையில் சில சிரமங்களையும் சந்திக்கின்றனர். குடும்பப் பெண்களைக் கிரகலட்சுமி என்றே போற்ற வேண்டும்.

வரதட்சணைக் கேட்பதும் குற்றம், தருவதும் குற்றம் என சட்டம் கூறினாலும். வரதட்சணை நகை, சீர் கேட்டு வாங்குவது இன்னும் மாறவில்லை இது பெண்களை இழிவுப்படுத்தும் செயலே ஆகும். மக்களின் மனமாற்றமே இதற்குத் தீர்வாக அமையும். ஆணாதிக்க சமூகத்தில், கணவர்கள் மனைவிமார்களைக் கொடுமைப் படுத்தும் சம்பவங்களும், ஆண்கள் பெண்களைப் பாலியல் தொந்தரவு செய்வதும், ஆண்கள் சிறார்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதும், இளம் சிறுமிகளை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொடுப்பதும், அத்துடன் தேவதாசி முறையும், விதவைத் திருமண மறுப்பும், பலதார மணமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. கற்காலத்தில், ஸ்காண்டிநேவியாவினன் நாட்டில் எடுக்கப்பட்ட ஆறு பெண்களின் மண்டை ஓடுகளில் ஒரு ஓட்டில் அடிபட்ட காயம் இருந்திருக்கிறது இது எதனைக் காட்டுகிறது என்றால், காலங்காலமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறை நடந்து கொண்டுதான் வந்துள்ளது என்பதனையே! அரசியல், சமுதாயப் பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து

பெண்கள் விலக்கி வைக்கப்பட்டனர். பெண்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு வீட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

இந்திய நாட்டின் அரசியல் சட்டம், 1950ல் பெண்களுக்கான சமத்துவ உரிமையினை உறுதி செய்தது. அதில் சதி தடுப்புச் சட்டம், சீதன ஒழிப்புச் சட்டம், பாலியல் தொழில் ஒழிப்புச் சட்டம் போன்றவை முக்கியமானவையாகும்.

அரசியல் சட்டம் பகுதி நான்கில், 'டிரெக்டிவ் ப்ரின்ச்பில் ஆப் ஸ்டேட் பாலிசி' என்ற அரசின் கொள்கையினை வழிச் செலுத்தும் நெறிகள் என்ற பகுதியில், வேலையில், பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான ஊதியம், கருவுற்ற நேரத்தில் பெண்களுக்கான சலுகைகள், பெண்களை மதிக்கும் விதமான அறிவிப்புகள் மற்றும் பெண்களுக்கு அவமான காரியங்களிலிருந்து விலக்கம் போன்ற நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. அதிலும், மனித உரிமையைக் காப்பதிலும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதிலும் இந்திய நாட்டு நீதி மன்றங்களின் பல்வேறு தீர்ப்புகள் மெச்சத் தகுந்ததாக உள்ளன.

சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான கருத்து, பொருளாதாரம், கல்விச் சுதந்திரம் இன்று வரையிலும் பெண்களுக்குக் கிடைக்கவில்லை. இன்று, பெண்கள் பல துறைகளில் நுழைந்துள்ள நிலையிலும், அவர்களின் திறமைக்கேற்ற வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை. திறமையை வெளிப்படுத்தி வாய்ப்புகளைப் பெற்றாலும், அவற்றை இழித்துப் பேசுவதற்கான வாய்கள் எப்போதும் மூடுவதேயில்லை. அரசியல் துறையில் ஆணுக்குச் சரிநிகராய் இட ஒதுக்கீடு கேட்கவில்லை. 33 சதவிகிதம் கேட்டும் கூட, அதற்காக வழி இன்னமும் திறக்கப்படவேயில்லை என்பதுதான் வேதனை. என்றைக்கு அனைத்து மகளிரும் மனிதர்கள் என்ற அளவில் சுய மரியாதையோடு, சமூக, பொருளாதார, பண்பாட்டு சுதந்திரம் பெற்று சம உரிமை பெறுகின்றனரோ, அன்றைக்குத்தான் உண்மையான மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் அர்த்தம் விளங்கும் என்று கவிஞர் 'வானவில்' கே. ரவி இக்கட்டுரையின் மூலம் விளக்குகிறார்.

❖

‘வானவில்’ கே. ரவியின் இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு காட்டும் நோபல் பரிசு நாயகர்கள்

•

வி.திவ்ய தர்ஷ்னா,
இளநிலை இரண்டாம் ஆண்டு தாவரவியல்,
வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) ஈரோடு –12

தேடிச் சோறு நிதந் தின்று,
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி,
மனம் வாடித் துன்பமிகு உழன்று,
பிறர் வாடப் பல செயல்கள் செய்து,
நரை கூடி கிழப்பருவமெய்தி
கொடுங்கூற்றுக் கிரையெனப் பின்மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போல
நானும் வீழ்வேன் என நினைத்தாயோ

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப தம் வாழ்நாளை அறிவியல் வளர்ச்சிக்காக அர்பணித்த நோபல் பரிசு பெற்ற நாயகர்களைப் பற்றி, ‘வானவில்’ கே. ரவி, அவர்களின் ‘இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு’ புத்தகத்தின் வழிநின்று காண்போம்.

கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை, அறிவியல் வளர்ச்சி என்னும் கட்டடத்தின் முதல் தளம் மட்டுமே கட்டி முடிக்கப் பட்டதென்று சொல்லலாம். மீதிப் பத்தொன்பது தளங்களும் இருபதாம் நூற்றாண்டில்தான் கட்டி முடிக்கப்பட்டன.

ஆற்றலும் பொருளும் அடிப்படையில் ஒன்றே என்ற ஒருமைப்பாட்டை மனிதன் உணரத் தொடங்கியதே, இந்த வளர்ச்சிக்குக் காரணம். அதனைச் செவ்வன எடுத்துரைக்கும் இந்நூலில் இடம்பெற்றுள்ள நோபல் பரிசு பெற்ற சில அறிஞர்களைப் பற்றிக் காண்போம்.

ரொன்ட்கென் கோன்ராட் வில்ஹெல்ம் (Rontgen, Conrad wilhslm) (1901)

1901 – ஆம் ஆண்டு 'எக்ஸ்' கதிர்கள் கண்டுபிடிப்புக்காக இயல்பியல் துறைக்கான முதல் நோபல் பரிசு ரொட்கென் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

எதிர்மின் கதிர்கள் பற்றிய சோதனைகளில் ஈடுபட்டிருந்த போதுதான், எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார். எதிர்மின் கதிர்கள் தாக்கினால் "பேரியம் ப்லேட்டினோ சையனைட்" என்ற வேதியால் பூசப்பட்ட கருவி ஒளிரும் என்பது தெரிந்த செய்தி. ஆனால், தாம் மேற்கொண்ட சோதனை அமைப்பில், எதிர் மின் கதிர்கள், தாள் திரையைத் தாக்கியிருக்க முடியாது என்பதனை அவர் கண்டு அறிந்து இருந்தார். பின், அதன் ஒளிர்வு, மின்சார ஓட்டம் நிகழ வைத்த போது மட்டும், நிகழ்வதைக் கண்டார். ஆகவே, அந்த நுட்பமான கதிர்களுக்கு 'ஓ' கதிர்கள் என்று பெயரிட்டார்.

பெக்ரல், க்யூரி தம்பதியர் (1903)

'ரேடியம்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அடிப்பொருளைக் "கதிரியம்" என்றே தமிழில் அழைக்கலாம். கதிரியம் கண்டுபிடிப்பால் கதிரியக்கம் உறுதியாக நிறுவப்பட்டது. கதிரியக்க கண்டுபிடிப்புக்காக, 1903 ஆம் ஆண்டு, இயல்பியல் துறைக்கான நோபல் பரிசு, பெக்ரலுக்கும், கியூரி தம்பதியருக்கும்

பகிர்ந்தளிக்கப்பட்டது. கதிர்வீச்சின் அருகாமையிலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செல்வமளித்ததால், க்யூரி அம்மையார் குருதிப் புற்று நோய்க்கு ஆளாகித் தமது 67 ஆவது வயதில் காலமானார். பிறகு கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அடிப்பொருளுக்கு இந்த மங்கையர் திலகத்தின் நினைவாக "க்யூரியம்" என்று பெயர் சூட்டப்பட்டது.

ஐன்ஸ்டைன் (ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்) 1921

ஐன்ஸ்டைன் 1921 – ஆம் ஆண்டு ஒளிமின் விளைவு கோட்பாடு குறித்த ஆய்வுக்காக நோபல் பரிசு பெற்றார். 1905 – ஆம் ஆண்டு "ஒளிமின் விளைவு" என்ற கொள்கையை அறிவித்தார். வெப்பம், ஒளி போன்ற கதிர் வீச்சுகளாக வெளிப்படும் ஆற்றல் பற்றியே, இக்கொள்கை அமைந்துள்ளது. பல சோதனைகளின் விளைவாக, குழப்பங்கள் எழுந்தன. இதற்கெல்லாம் தீர்வு, ப்லங்க் அறிமுகப்படுத்திய "துளிக்கொள்கை" தான் என்று அறிந்து, ஆய்வில் வெற்றி பெற்றார்.

அவருடைய ஆய்வின் முக்கியமான முடிவுகள்

1. ஒளி என்பது, சிறிய துகள்களால் ஆனது
2. ஓர் ஒளித்துகளின் ஆற்றலும், அதன் அதிர்வெண்ணும் நேர்பங்குத் தொடர்புடையவை.

ஆனால், அலை நீட்டத்துடன் எதிர்பங்குத் தொடர்புடையவை.

நீல்ஸ் போர் (1922)

அணுக்களின் அமைப்பு குறித்தும் கதிரடுக்குகள் குறித்தும் வெற்றிகரமாக விவரித்ததற்காக, நீல்ஸ் போருக்கு 1922 – ஆம் ஆண்டு, நோபல் பரிசு வழங்கப்பட்டது. போர் துணிபில் குறைபாடுகள் இருந்தாலும், அது ஒரு புரட்சிகரமான பாதையில் எடுத்து வைக்கப்பட்ட முதல் அடி என்பது மறுக்க முடியாத உண்மை. பொருள்களுக்குள்ளேயே ஆற்றல் நிலைகள் உண்டு என முதலில் துணிந்து மொழிந்த புரட்சியாளர், நீல்ஸ் போர் எனலாம்.

ஜேம்ஸ் ப்ரேங்க், ஹெர்ட்ஜ் (1925)

1912 – 1914 ஆம் ஆண்டுகளில், பர்லின் பல்கலைக்கழகத்தில் ஜேம்ஸ் ப்ரேங்க் என்பவரும் ஹெர்ட்ஜ் என்பவரும் இணைந்து சோதனைகள் நிகழ்த்தினார்கள். அந்தச் சோதனைகளில் பாதரச அணுக்களை மின்துகள்களால் தொடர்ந்து தாக்கினார்கள். இதன் மூலம் குறிப்பிட்ட அளவுகளிலேயே அணுக்களால் ஆற்றல் உட்கொள்ளப்படுவது நிறுவப்பட்டது. போர் வகுத்த அணுப்படிவத்தை, இது ஒரு விதத்தில் நிறுவியது எனலாம். ஃப்ராங்க், ஹெர்ட்ஜ் இருவரும், 1925 ஆம் ஆண்டில் இக்கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு பெற்றனர்.

டேவிஸன், ஜார்ஜ் தாம்ஸன் (1937)

டேவிஸன் என்பவர் கேர்மர் என்பவருடன் சோதனை நடத்திக் கொண்டிருந்தார். நிக்கல் தகட்டை நோக்கிச் செலுத்தப்படும் எதிரான்கள், அத்தகட்டில் பட்டுத் தெறித்துப் பரவும் நிகழ்ச்சியை ஆய்வு செய்வதே அச்சோதனையின் குறிக்கோள். அத்தகட்டைத் துலக்க ஒரே வழி, அதனை நீண்ட நேரம் சூடேற்றுவதுதான். அப்பொழுது அந்த அணுக்கள் உள்சீர்மை பெற்றுவிடுகின்றன. அவை படிகத் தன்மை பெறுகின்றன. ஆகையால், செலுத்தப்பட்ட எதிரான்கள் படிகத் தன்மை பெற்ற அந்த அணு அமைப்பை ஊடுருவி, மறுபுறம் சென்று, அலைபரவுதல் என்ற நிகழ்வைப் புலப்படுத்தின.

1927 – ஆம் ஆண்டு அவர் முடிவுகளை அறிவித்தார். அதே ஆண்டு, டேவிஸன் நிகழ்த்திய ஆய்வு பற்றி அறியாமல் ஜார்ஜ் தாம்ஸன் என்பவர், தப்ராக்லியின் பொருளலைகள் துணியைச் சோதித்து அதே முடிவுக்கு வந்தார். அவர் ஒரு புகைப்படத் தகட்டில் அலைபரவு வளையங்கள் தோன்றிய நிகழ்வைக் கண்டறிந்தார். 1937 – ஆம் ஆண்டு, இச் சோதனைகளுக்கான இயல்பியல் துறை நோபெல் பரிசை தாம்ஸனும், டேவிசனும் பகிர்ந்து கொண்டனர்.

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா

என்ற பாரதியின் வார்த்தைக்கு இணங்க, இயற்பியல் துறையின் நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சியாளர்களின் சிறப்பினை விவரித்த நம் எழுத்தாளர் 'வானவில்'. கே. ரவி அவர்கள் இலக்கியத்திற்கான சிறந்த பரிசுக்குத் தேர்ந்தவர் என்பதனை அவரின் '20 ஆம் நூற்றாண்டின் இயல்பியல் வரலாறு' என்னும் நூலில் இருந்து அறிய முடிகிறது. அப்படிப்பட்ட அறிவியல் வியப்புகளை, மானுடர் அனைவரும் அறியச் செய்த ஐயா அவர்களுக்கு நன்றி கூறி, திகைப்பூட்டும் அறிவியல் உலகம் நமக்கு ஏற்படுத்தும் வியப்புகளை உட்கொணர்ந்து, நாமும் சாதனைகள் படைப்போம்.

❖

மக்கள் பாடும் பாட்டில் – சிறுவர் பாடல்கள்

•

முனைவர் ச. துர்கா,
தமிழ் உதவிப் பேராசிரியர், ஸ்ரீமதி தேவகுன்வர் நானா லால் பட் மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை 600 044.

வானவில் ரவி என்ற பெயருக்கு ஏற்றார் போல் பல பரிமாணங்களைப் பெற்றவர். கம்பன் முதல் பாரதி வரை தமிழ்ப் புலவர்களின் மொழிநடை, கருத்தாளுமை ஆகியவற்றை உள்வாங்கிக்கொண்டு பல கவிதைகள், கட்டுரைகளை நமக்கு கொடுத்த பெருமைக்குரியவர். இவரது தொழில் வழக்கறிஞர் என்ற போதிலும் கவிதை இலக்கியத்திலும், சட்டத் துறையிலும் சிறந்து விளங்கக் கூடியவர். இவர் பல்துறை வித்தகராகவும் பன்முகப்பார்வை கொண்டவராகவும் திகழ்கிறார். கல்லூரியில் படிக்கும்போதே இதழியலாளராகப் பரிணமித்தவர். 1972– ம் ஆண்டு 'மாணவரிசம்' – என்ற பத்திரிக்கையை நடத்தி இருக்கிறார். இதழியலாளர், கவிஞர், திரைப்படத் தயாரிப்பாளர், இசையமைப்பாளர், நாடக நடிகர், திறனாய்வாளர் மொழிபெயர்ப்பாளர் இவை போன்ற எண்ணற்றத் துறைகளில் சாதனை படைத்தவர், படைத்துக் கொண்டிருப்பவர்.

கவிதை, கட்டுரை ஆகிய நூல்களை மட்டுமன்றி அறிவியல் நூலையும் எழுதிய பெருமைக்குரியவர். 'இயல்பியல்' என்னும்

பல புதிய தனித்தமிழ்க் கலைச் சொற்களோடு கூடிய ஓர் முன்னோடி பாட நூலையும், 'இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு" என்ற அறிவியல் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் எழுதிய ஞான தாழிசை என்ற நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதற்கு ஆங்கிலத்தில் விரிவுரையும் எழுதி உள்ளார். (Verse of Wisdom) என்றப் பெயரில் அதை நூலாக வெளியிட்டார்.

திரைப்பட தயாரிப்பாளர் கல்யாண்ராமன் அவர்களின் மகன் தான் K. ரவி. இவரது ஆர்வத்தின் காரணமாக தான் வானவில் பண்பாட்டு மையம் 1994–ல் பிறந்தது. ஆண்டுதோறும் இப்பண்பாட்டு மையத்தின் சார்பில் பாரதி திருவிழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் பாரதியின் கனவு மெய்ப்படத் தொண்டாற்றியவர்களுக்கு பாரதி விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகிறது.

மக்கள் பாடும் பாட்டு

மக்கள் பாடும் பாட்டு என்ற பாடல்கள் அடங்கிய இத்தொகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்ததொரு இடத்தைப் பிடித்துள்ளது. ஐந்தாறு வயதிலேயே இசைப் பாடல்களால் கவரப்பட்ட இந்நூலாசிரியர் பதிமூன்று வயதில் தன் அக்காவிற்கு (பெரியப்பா மகள்) இசைப்பாடலாகவே ஒரு கடிதம் எழுதுகிறார். இவ்வாறு தொடங்கிய இவரது இசைப்பயணம் புதுமுக வகுப்பில் பயிலும் போது ' பாதுகா பட்டாபிஷேகம்' என்ற நாட்டிய நாடகத்திற்கு இசைப் பாடல் எழுதச் வித்திட்டது. இவரது இசை ஆர்வத்தை செப்பனிட்டு வளர்த்தவர் இவர் நண்பர் வ.வே.சு . இவரையே தனது இசைப் பயணத்தின் வழிகாட்டியாக கொண்டார். வானவில் ரவியின் இசை ஆர்வத்தில் எழுந்ததே' மக்கள் பாடும் பாட்டு என்ற நூல்.

"மெட்டுக்கு பாடலா பாடலுக்கு மெட்டா" என்ற விவாதத்தில் நான் சிக்கிக் கொண்டதில்லை. என் பாடல்கள் அனைத்துமே மெட்டோடு பிறந்த பாடல்கள்" – என்று ஆசிரியரே இந்நூல் பிறந்த விதத்தை கூறி தெளிவுபடுத்தியுள்ளார்.

மிக எளிமையான மக்கள் பேசும் பேச்சு நடையில் இசையோடு பாடக் கூடிய முறையில் இக் கவிதை நூலை படைத்துள்ளார். இவரது இசைப் பயணத்தில் தொடக்க காலம் முதலே இவரோடு குழலூதியும், தாளமிட்டும் ஆராதித்த உடன்பிறந்த தம்பி காளிதாசுக்கு இந்நூலை காணிக்கையாக்குவதாகக் வானவில் கே. ரவி கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட 243 தலைப்புகளைக் கொண்ட இந்நூலில்– 11 சிறுவர் பாடல்கள் இடம் பெற்றுள்ளது. இச்சிறுவர் பாடல்களின் அமைப்பு நோக்கத்தை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுவர் இலக்கியம்

இவ்விலக்கியம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

1. பேசத் தொடங்கும் குழந்தை முதல் ஏழு வயது வரை யிலானவருக்கு உள்ள இலக்கியம் குழந்தை இலக்கியம்.

2. 7 வயதிலிருந்து 14 வயது வரை உள்ளவர்களுக்கான இலக்கியம் சிறுவர் இலக்கியம் என்றும் வகைப்படுத்தப்படுகிறது. பாரதியை முன்னோடியாகக் கொண்டு கவிதைகளில் சிறுவர் பாடல்களை எழுதியவர்கள் ஏராளம்.

சிறுவர்களுக்கான பாடல்கள் சந்த நயத்துடன் பாடப்படும் சிறுவர் பாடல்கள் பாடுபவருக்கும் அதைக் கேட்பவருக்கும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தரக்கூடியது. இசைப் பாடலுக்கான ஆரம்பம் தாயின் தாலாட்டுப் பாடலின் தான் துவங்குகிறது. இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்ட முதல் சிறுவர் பாடலாகக் கருதப்படுவது H.A. கிருட்டிணப் பிள்ளையின் இரட்சிண்ய மனோகரம்.

சிறுவர்களுக்கான பாடல்களில் ஔவை முதல் அவர் வழியே வந்த பாரதியும், அவருக்குப் பிறகு கவிமணி, பாரதிதாசன், வாணிதாசன், தமிழ் ஒளி , அழ.வள்ளியப்பா, தணிகை உலகநாதன் இவர்களை அடியொற்றி வானவில் கே. ரவி அவர்களும் தனது மக்கள் பாடும் பாட்டில் சிறுவர்களுக்கான கவிதைகளை இயற்றி அதை சிறுவர் இசை என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்பாடல்களை இவர் முதன்முதலில் முகநூலில் தான் பதிவிட்டார்.

மக்கள் பாடும் பாட்டில் சிறுவர் பாடல்கள்

இவரது முதல் சிறுவர் பாடல் இசை இன்பத்தைத் தரும் அதைக் கேட்டும், பாடியும் குழந்தைகள் மகிழ்வோடு இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பாடம் படிப்பது போல்
பாட்டு படிக்க வேணுங்க - வாழ்க்கைப்
பாடத்தைச் சொல்லித் தரும் பாட்டுங்க- நல்ல
பயனுள்ள கருத்தை நிலைநாட்டுங்க

(ம.பா.பா-ப- 266)

என்று கூறிச் செல்வது பாரதியின் பாப்பா பாடலின் வரிகளை நமக்கு நினைவு கூறத் தவறவில்லை.

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு-என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

(பாரதியார் கவிதைகள்- பாப்பா பாட்டு-156)

படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது மகிழ்வோடு கற்கும் பாடம் மனதில் பதியும் என்பதையே ஆசிரியர் உணர்த்துகிறார். வாய்ப்பாட்டைக் கூட ஆசிரியர்கள் பாடல்களாகச் சொல்லிக் கொடுக்கும் பொழுது எளிமையாக மனனம் ஆகி விடும் என்ற நிதர்சனத்தை இப்பாடல் வழி உணர்த்துகிறார் கவிஞர்.

தாய் மொழியையும், தாய் நாட்டையும் இரு கண்களாகப் போற்றி அதை வளரும் குழந்தைகளின் மனதில் பதிய வைத்தவர் நம் கவிஞர். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற முதுமொழிக்கு ஏற்ப சிறுவயதில் சிறுவர்களுக்கு சொல்லக்கூடிய அனைத்துச் செய்திகளும் அவர்கள் மனதில் பசுமரத்தாணியாய் பதியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. வளரும் பருவத்தில் செய்ய வேண்டிய, ஆற்றவேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும் அறிந்து கொண்டால் வாழ்வில் வெற்றியாளர்களாகத் திகழ்வார்கள் என்ற எண்ணத்திலேயே கவிஞர் இக்கவிதையை எழுதியுள்ளார்.

ஏடு தூக்கும் சிறுவர் நாளை
நாடு காக்கும் மறவர்-என்று
பாட்டுச் சொல்லித் தந்தார் எங்கள் வள்ளியப்பா

தாய் நாடும் தாய் மொழியும்
இரண்டு கண்களாம்
தாலாட்டுப் பாட்டில் தாய் சொல்லித் தந்ததாம்
(ம.பா.ம.பா- ப -267)

என்று நாடும் மொழியும் இருகண்கள் என போற்றிச் சிறுவர்களை உயர்த்த உதவும் பாடலாக இப்பாடல் அமைகிறது.

"ஏடு தூக்கி பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு போற்றும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்"

அழ வள்ளியப்பாவின் சிறுவர் பாடல் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக உயர்வார்கள் என்றப் பாங்கில் அமைந்துள்ளது.

தாய் மண்ணை காப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் நம் உயர்த் தொழிலான உழவுத்தொழிலை காப்பதும்.

"சுழன்றும் ஏர் பின்னது உலகம் உழன்றும் உழவே தலை
இடத்திற்கு ஒத்ததாகவே இவரின் பாடலும் அமைகிறது."

என்ற குறளை ஒத்ததாகவே.

"போர் முனையும் ஏர்முனையும் ஒன்று போலவாம்
வீரர்களும் உழவர்களும் வெல்ல வேண்டுமாம்"

"மற்றவருக்கு உதவி செய்யும் பண்பை வளர்ப்போம் பெற்றவரை பெரியவரை மதித்து நடப்போம் கற்றுக்கொள்ளும் கல்வியை உழைப்போம்"

(ம.பா.பா – ப–267)

எல்லையில் தாய் மண்ணைக் காப்பவர்களும், உழவுத் தொழில் செய்பவர்களும் ஒன்று என்று சிறுவர்களுக்கு உரக்கச் சொல்லி உரைக்கச் செய்கிறார். சுற்றுச்சூழல், அடுத்தவருக்கு உதவும் பண்பு, பெற்றவரையும் பெரியவர்களையும் மதித்து நடத்தல் இவை அனைத்தும் கற்கும் கல்வியால் நமக்கு கிடைப்பது என்பதை சிறுவர்களுக்கு தன் பாடல் வழி உணர்த்துகிறார்.

"உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்"

என்ற திருக்குறளின் கருத்திற்கு ஒத்ததாகவே இவரின் பாடலும் அமைகிறது.

பட்டாம் பூச்சி என்ற பாடலில் பட்டாம்பூச்சியைப் போல நாம் வாழ்வில் எவ்வாறு அழகாக உயர வேண்டும் என்பதையும் ஒரு நொடிகூட நில்லாமல் சுறுசுறுப்பாகச் சுற்றி வருவதையும் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் என்றும் கூறுகிறார்.

"பறக்குது பாருங்கள் தேனெடுக்கப்
படபட வென்று சிறகடிக்க
சுறுசுறுப் பாகச் சுற்றி வரும்-அதைப்
பார்த்த நமக்கும் புத்தி வரும்
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டியிருந்தே எண்ணுங்கள்"

இன்றைய சிறுவர்கள் இதையெல்லாம் பார்த்து ரசிக்கவோ அல்லது இவற்றில் இருந்து பாடம் கற்கவோ இயலாத சூழலில் வீட்டுக்குள் கணினித் திரையின் முன் தங்கள் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே இன்றைய நிதர்சனம். நாம் அறிவியலில் படித்த வண்ணத்துப்பூச்சியின் பரிணாம வளர்ச்சியை இங்கு பாடலாய் தந்துள்ளார். கவிஞரின் வார்த்தைகளில் தான் எத்தனை அழகு.

கண்ணுக்கும் அழகு கருத்துக்கும் அழகு
பட்டாம்பூச்சியை பாருங்கள்
புழுவாய் இருந்து பூச்சியும் - ஆகிப்
பறக்கும் கதையைக் கேளுங்கள்
இன்றைய சிறுவர்களே நாளைய மன்னர்களாம்

என்று பட்டாம்பூச்சியை போல வாழ்வில் சுறுசுறுப்போடு வாழ வேண்டும் என்றும் வாழ்வில் துன்பப்பட்டால் உயர்வை அடையலாம் என்றக் கருத்தை இன்றைய தலைமுறைக்குச் சொல்லிச் செல்வது கவிஞருக்கே உரித்தான அழகு.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

புறநானூற்று வரிகளை அடியொற்றி இப்பாடலை கவிஞர் நமக்கு தந்துள்ளார் என்றால் அது மிகையல்ல கல்வி கற்றுத்

தரக்கூடிய ஆசிரியரின் குணநலன்களையும், பண்புகளையும் சிறுவர்களுக்கு எடுத்துக் கூறும் மாண்பு போற்றுதற்கு உரியது.

கல்வி தரும் ஆசிரியர் கடவுள் போலவாம் - அவர்
சொல்லித் தரும் பாடம் என்றும்
துணை இருக்குமாம் நல்ல விதம்
நம்மை எல்லாம் நடத்திச் செல்லுவார்- நாம்
வழி தவறும் போது
கொஞ்சம் புத்தி சொல்லுவார்

நாலும் மூனும் ஏழென்று
நாம் புரிந்து கொள்ள
நாலாண்டு காலம் பொறுமை காத்திருந்தவர்
வீரக் கதைகள் சொல்லி நெஞ்சில் விளக்கேற்றினார்- நாம்
தைரியமாய் வாழ நல்ல வழி காட்டினார்

(ம.பா.பா-ப-269)

நல்ல ஆசிரியர் எவ்வாறெல்லாம் திகழ்வார் என்பதை இப்பாடல் வாயிலாக நமக்கு உணர்த்துகிறார்.

குடும்பம் என்பது கோவிலுக்கு நிகரானது உறவுகளோடு பேசி, மகிழ்ந்து ,விளையாடி ஒன்றாய் அமர்ந்து உணவு உண்டு மகிழ்வதே வாழ்க்கை இப்படி ஒரே குடும்பமாக சேர்ந்து வாழும் போது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் தன்மை வளரும் என்பதை இக்கவிதையில் உணர்த்துகிறார்.

அண்ணன் தங்கை அக்கா தம்பி
எங்கள் குடும்பம் பெரிசு ஒண்ணா படிச்சு
விளையாடக் கடவுள் தந்த பரிசு-இது
கடவுள் தந்த பரிசு

(ம .பா.பா - ப-270)

இப் பாடலைப் படிக்கும்போது தங்கப்பதக்கம் படத்தில் வரும்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
அன்பு மணி வழங்கும் சுரங்கம்
வாழ்க!வாழ்க!

என்ற கண்ணதாசனின் வரிகள் நினைவில் வந்து செல்கிறது.

ஆனால் இன்று சிறுவர்கள் உறவுமுறை தெரியாமல் வளர்க்கப்படுகிறார்கள் பெரியம்மா, சித்தி, அத்தை, மாமி என்ற அத்துணை உறவுப்பெயர்களும் ஆன்ட்டி என்ற ஒற்றைப் பெயரால் அழைக்கப்பட்டு உறவுகள் மடிந்து போய்விட்டது என்பதே உண்மை. உறவுகளின் உன்னதத்தைக் கண்டிப்பாக வளரும் தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கட்டாயத்தில் இன்று நாம் இருக்கிறோம்.

வள்ளுவன் இளங்கோ கம்பர் பாரதி
எங்களுக்குள் உண்டு
காந்தி நேரு வ.உ.சி யும் உருவாகின்றார்
இங்கு மருத்துவர் உண்டு ஓவியர் உண்டு
ஆசிரியர் உண்டு
நாளை உலகம் எங்கள் கையில்
நம்பிக்கை உண்டு

(ம.பா.பா-ப-270)

என்று சிறுவர்களின் மனதில் இப்பாடல் நம்பிக்கை விதையை விதைக்கிறது என்றால் அது மிகையல்ல.

அச்சம் என்பது மூடருக்கு வேண்டும் என்ற பாரதியின்

"பாதகஞ் செய்பவரைக் கண்டால்
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" **(பாரதியின் கவிதை)**

பாடலை அடியொற்றி

தப்புக் கண்டா தட்டி கேட்கும் தைரியம் வேணும்
எப்பவும் நியாயத்தின் பக்கம் நிக்கணும்
அக்கம் பக்கம் எல்லாம் வம்புக்கெல்லாம் ஒதுங்கி
போகணும்
ஆனா அக்கிரமம் நடந்த நீ எதுத்துப் பேசணும்

(ம.பா.பா.ப-272)

இப்படிக் கருப்புக் கோட்டுப் போட்ட சாமி சொன்னதை சிறுவர்கள் இடத்தில் அழகாக கொண்டு சேர்க்கிறார் கவிஞர்.

தாய் நாட்டுப்பற்றை வளர்கின்ற பருவத்தில் விதைக்கிறார் கவிஞர். எல்லாவற்றிலும் சிறந்தது நம் தாய்நாடு என்று

எண்ணி நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இரத்தம் சிந்த வேண்டும். அயல்நாட்டு மோகம் இன்றி நம் நாட்டுக்காக உழைக்கும் உன்னதப் பணியை சிறுவர்களாகிய வளரும் இளம் தலைமுறையினர் மேற்கொள்ளவேண்டும் என்பதை இப்பாடலில் ஆசிரியர் நமக்கு உணர்த்துகிறார்.

அன்னை பூமியிது-எங்கள்
அன்னை பூமி இது
மண்ணும் கல்லும் மட்டும் இல்லை
மனித வியர்வை கலந்தது மலைகள் நதிகள் மட்டும்
இல்லை
காவியங்கள் நிறைந்தது

(ம.பா.பா.ப-273)

என்று எல்லா வளங்களும், சரித்திரங்களும் நிறைந்தது நம் தாய்த் திருநாடு என்பதை சிறுவர்கள் இடத்தில் ஆணித்தனமாக எடுத்துரைக்கிறார்.

பாட்டும் படிப்பு மட்டுமல்ல விளையாட்டும் சிறுவர்களுக்கு முக்கியம் என்பதை

கோலிக் குண்டு பம்பரம் தட்டாமல ஐஸ் பாய்
தாண்ட வாடா பச்சக் குதுரை- அட
நான் தாண்ட பேட்டைக்குச் சின்னதுரை
மழை பேஞ்சாக்கா அந்தாக்ஷரி
கேரம்போர்டு செஸ்ஸீ இது மாதிரி
எத்தனை எத்தனை ஆட்டம்- நம்ப
மூளைக்கும் உடம்புக்கு ஊட்டம்
புத்தகம் படிப்பு விளையாட்டு-நாங்க
புத்தம் புதுமலர்த் தோட்டம்-மகிழ்ச்சி
பொங்கும் சிறுவர் கூட்டம்

(ம.பா.பா.ப–274)

நம் பழமையான விளையாட்டுக்கள் எவ்வளவு முக்கியம் என்பதையும் அவற்றை விளையாடும் போது உடலும், மனமும் உற்சாகம் பெறும் என்ற உண்மையையும் நமக்கு உரைக்கிறார். இன்றைய குழந்தைகள் கைப்பேசியில் அமர்ந்து பப்ஜி விளையாடி தங்கள் உடலையும், உள்ளத்தையும் இன்னலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய விளையாட்டுகள் சிறுவர்களிடம் ஞாபகத்திறனையும், உடல்

ஆரோக்கியத்தையும் மேம்படுத்தியது ஆனால் இன்றைய சிறுவர்களின் ஆரோக்கியமும், ஒழுக்கமும் கேள்விக்குறியாகவே உள்ளது.

'நிலா நிலா ஓடி வா' என்ற பாடலை கவிஞரின் இந்தப் பாடல் க்கச் செய்கிறது பாட்டி முதல் பேரன் வரை அனைவருக்கும் தெரிந்த பாடல் தெரிந்தக் கதை நிலாவில் பாட்டி வடை சுடுவதையும், ஆம்ஸ்ட்ராங் நிலவுக்குப் போனதையும், சிவனின் தலையில் அமர்ந்தப் பாங்கையும் ஒப்பிட்டுப் இப் பாடலைப் பாடி இருக்கிறார் கவிஞர்.

அந்த நிலாவுக்கு முயல்குட்டி போனதும் எப்படியோ
ஆம்ஸ்ட்ராங் எடுத்துச் சென்றரா-இல்லை
ஆண்டவனே கொண்டு வைத்தாரா
நிலா நிலா - ஓ நிலா நிலா
வட்ட நிலாவில் சுட்ட வடைகளை
என்ன செய்தாரோ பாட்டி - நூறு
காக்கா வந்து கொத்திக் கொண்டு
போனதோ போக்குக் காட்டி
நிலா நிலா ஓ நிலா நிலா
மலை மேலே ஏறி வா
மல்லிகைப் பூவும்கொண்டு வந்ததோ வெண்ணிலா- சிவன்
முடிமேல் இருந்து முல்லைச் சரமாய்
விழுந்ததும் நம் கண்ணிலா
நிலா நிலா ஓ நிலா நிலா

(ம.பா.பா-ப-275)

பள்ளியில் படிக்கும் பாடத்தோடு இயற்கையும் நமக்கு சில பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது மற்றவர்களிடத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் உள்ளது. அவற்றையும் நாம் கற்க வேண்டும். இளம் வயது முடிந்து கட்டிளம் காளை ஆகும்போது ஓட்டுரிமை வரும் அதையும் சேர்த்து இப்போதே கற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் சரியானத் தலைவர்களை உங்களால் தேர்ந்தெடுக்க முடியும்.

பாட்டு செய்யுள் நன்னடத்தை
பாடம் கற்றுக் கொள்வீரோ
வீட்டுப்பாடம் விட்டுவிடாமல் விளக்கேற்றிய பின் பயில்வீரோ
தோட்டத்தில் உள்ள பூவெல்லாம்

சொல்லித்தரும் சில பாடங்கள்
கூரையில் மேயும் கோழிகள் ஆடுகள்
பூனைகளிடமும் கேளுங்கள்
நாட்டுக்காக நல்லது செய்யும்
நாட்டம் வளர்த்துக் கொள்ளுங்கள்- நீங்கள்
ஓட்டுப்போடும் வயது வரும் அதை யோசிப்பதற்கும்
பழகுங்கள்

(ம.பா.பா.ப276)

கல்வி ஏட்டுச்சுரைக்காயாய் இல்லாமல் படிப்போடு பட்டறிவும் சேரும்போது சிறுவர்கள் இன்னும் மிளிர்வார்கள் என்ற கருத்தை இளைய தலைமுறையினரிடம் பதியத் தவறவில்லைக் கவிஞர்.

மக்கள் பாடும் பாட்டு என்ற இவ்விசைப்பாடல் நூலில் சிறுவர் இசை என்றப் பாடல்களின் வழி தாய்மொழி, தாய்நாடு ,உறவுகளின் உன்னதம், வண்ணத்துப்பூச்சிகளின் வழி நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள், போர் அற்ற , பகைமை அற்ற புது யுகத்தை வளரும் தலைமுறையால் தான் உருவாக்க முடியும் என்பதை அறிந்த கவிஞர் அவர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய செய்திகளை வெறும் கவிதையாக மட்டுமல்லாமல் இசையோடு கூடிய பாடல்களாகத் தந்துள்ளது சிறப்புக்குரியது. இப்பாடல்களைப் பள்ளி படிக்கும் சிறுவர்களுக்குப் பாடமாக வைத்தால் அதை படிக்கும் சிறுவர்கள் வாழ்வில் உயர இது வழிவகுக்கும் என்பது திண்ணம். கவிஞரின் கவிதைகள் வானவில்லைப் போன்று பல வண்ணக் கருத்துகளையும் அக்கருத்துகளை ஏற்று நடப்பவர்கள் வானவில்லைப் போல பார்ப்பவர் வியக்கும் வண்ணம் வாழ்வார் என்பதும் உண்மை.

❖

கவிஞர் வானவில் கே. ரவியின் "காற்று வாங்கப் போனேன்"– ஒரு பார்வை

•

ஆ.தேவிகா
ஹிந்தி உதவிப் பேராசிரியர் –
ஏ.ஜே.கே. கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர்

கவிஞர் வானவில் கே. ரவியின் "காற்று வாங்கப் போனேன்" என்ற புத்தகம் வல்லமை.காம் என்ற மின்னிதழில் ஐம்பத்தி மூன்று பகுதிகளாக வெளிவந்த தொடர். இதில் காற்றுக்கும், கவிதைக்கும் உள்ள உறவை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார் கவிஞர். தன் கவிதைகளுக்கு முத்தாய்ப்பாக அமைந்த பல நிகழ்வுகளையும், உயிருக்கு உயிராக நேசித்த நட்புகளையும், பல மொழி கவிஞர்களையும், திரைப்படக் கலைஞர்களையும், வாழ்க்கையோடும், கவிதையோடும் இணைத்து கவி பாட அவர் மறக்கவில்லை. கவிதைகளுக்கு அவர் கொடுத்த மிக அருமையான எடுத்துக்காட்டுகளும், பிற கலைஞர்களை மனம் திறந்து பாராட்டும் அவருடைய பண்பும் மற்றுமொறு சிறப்பு. இந்த சுயசரிதையில் தன் வாழ்க்கைப் பயணத்தைக் கவிதையாக வடித்துக் கவிதையாகவே வாழ்ந்திருப்பது என்பது அவர் எழுதிய வரிகளின் சிறப்பு. இப்படிப் பல சிறப்புகள் கொண்ட கவிஞரின் கவிதைகளோடு பயணம் செய்து, ஆய்வுச் செய்து அதன் சிறப்பை மேலும் உயர்த்துவதுதான் "காற்று வாங்கப் போனேன்"– ஒரு பார்வை என்ற இந்த கட்டுரை.

காற்றே, வா.
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை மயலுறுத்து
கின்ற இனிய வாசனையுடன் வா.
இலைகளின்மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண- ரஸத்தை எங்களுக்கு கொண்டுகொடு
காற்றே, வா. *(1)*

என்று அழைப்பது பாரதியாரின் காற்று என்ற தலைப்பில் எழுதிய வசன கவிதையின் வரிகள். காற்றை பல கவிஞர்களும் பாடியுள்ளார்கள் என்றாலும் பாரதியின் பார்வையில் காற்று பல பரிமாணங்களைக் கொண்டது. கவிஞர் வாலியின் காற்று வாங்கப் போனேன், ஒரு கவிதை வாங்கி வந்தேன் என்ற பாடல் வரிகளும் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் கொண்டது.

"கவிதை எனக்கு பயன்படுகிறது என்பதை விட, அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதை விட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையை ஒரு கருவியாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்து பார்க்க முடியவில்லை. என்னை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன்" என்ற அவரின் வரிகள் முற்றிலும் உண்மை என்பதை "காற்று வாங்கப் போனேன்" என்ற கவிஞரின் இந்த படைப்பு பறைச்சாற்றுகிறது.

"காற்று வாங்கப் போனேன்"

வானவில் கே.ரவி அவர்கள் ஒரு கவிஞராக மட்டுமல்ல, வழக்கறிஞர், நடிகர், திரைப்படப் பாடலாசிரியர், இசையமைப்பாளர், பன்மொழிப் புலவர் எனப் பல திறமைகள் உள்ளவர். பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், வாலி, ஷெல்லி, கீட்ஸ், பைரன், வொர்ட்ஸ்வொர்த், கோல்ர்ட்ஜ் போன்ற கவிஞர்களின் படைப்புகளில் தோய்ந்து, தன் கவிதை உலகை மேலும் சிறப்படையச் செய்திருக்கிறார் என்பதும் பெருமைக்குரியதும், மதிப்பிற்குரியதுதான்.

"காற்று வாங்கப் போனேன்" – ஒரு பார்வை என்ற தலைப்பு கொண்ட இக்கட்டுரையில் ஒவ்வொரு கவிதை உருவான விதமும், அதற்கான பின்னணியும் கொண்ட அவருடைய கவிதைப் பயணத்தில் சில கவிதைகளை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

‘சொல்லும் சொல்லும் சேரும் போது’

தன் உணர்வுகளை எப்படியாவது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பேக் கவிதை எழுதத் தூண்டுகோல் ஆகிறது என்று சொல்லும் கவிஞர் செய்யுள் தோன்றிய வரலாற்றை கூறி “மனிதன் என்பவன் தெய்வமாகலாம்” என்ற பழைய திரைப்பாடல் மெட்டில் ஒரு அழகான பாடலையும் ஒலிக்க செய்கிறார்.

சொல்லும் சொல்லும் சேரும் போது கானமாகலாம்
சொல்கடந்து செல்லும் போதுமோனமாகலாம்
சொல்மலர்ந்து சுடரெழுந்து ஞானமாகலாம்
செய்யுள் என்பதும் கவிதை ஆகலாம் (2)
கரவொலிகள் ஓய்ந்துவிடும் ராக்காலத்தில்
கரவொலிகள் ஓய்ந்துவிடும் ராக்காலத்தில்
காதருகே வந்து சில கவிதை சொல்லிப்
பறந்துவிடும் தென்றலை நீ பார்த்த் துண்டா

என்று தொடங்கும் கவிதையில் அதன் கண்ணாமூச்சி விளையாட்டை மிக அழகாக வருணித்திருக்கிறார்.

கவிதையொரு மனோதர்மம் கலைந்த கூந்தல்,
வந்த சுவடுகளே தெரியாமல் விரைந்து செல்லும்,
புதுப்பார்வை உலகாளும் புலமை யோகம்

என்ற வரிகளுடன்

தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை (3)

என்று கவிதையின் தன்மையை மிக எளிதாக பாடியிருக்கிறார்.

மனமலரைத் தென்றல் வருடிவிடும்

காற்றுக்கும் கவிதைக்கும் இருக்கும் நெருகத்தைப் பாடலாகவே பாடியிருக்கிறார் கவிஞர். “மனமலரைத் தென்றல் வருடிவிடும்” என்று தொடங்கும் பாடலில் –

‘சில கவித்துளிகள் – எட்டுத் திசைகளில் விழும் சுடர்ப்பொறிகள்’,

‘ஒவ்வொரு துளியும் ஒரு விதையாய்ச் சில உள்ளங்களில் சென்று விழுந்திடலாம்,

வண்ணமும், வாசமும் போலல்லவோ நம் எண்ணமும் கற்பனையும்,
அடிப்படையில் நாம்ஒருயிரே-என் குரல் உந்தன் உயிர்த்துடிப்பே *(4)*

போன்ற வரிகள் மிகவும் ஆழமானவை, காற்றும் கவிதையும் ஒன்றோடு ஒன்று கலந்து கவிஞரோடு கைகுலுக்கிக் கொண்டதில் எந்த வியப்பும் இல்லை.

கிராமிய சாயலில் பாடல் -‘பாடணும் நான் பாடணும்’

கோடை விடுமுறையில் குடும்பம், நண்பர்களோடு சுற்றுலா சென்றபோது அங்கு நடந்த ஒரு நிகழ்வை நினைவுப்படுத்திச் சொல்கிறார்கவிஞர். புழுக்கம் காரணமாகத் தோட்டதில் போய் அமர்ந்து காற்று வாங்கப் போன அவருக்கு ஏமாற்றம்.மனைவியும், நண்பரும் காரணம் கேட்க “காற்று வாங்க வந்தேன் ஆனால் காற்றே இல்லை” என்று சொல்லிவிட்டுப் பாடத் தொடங்குகிறார்.–

பாடணும் நான் பாடணும் - அதக்
கேட்டுப்புட்டு காத்துவந்து தந்தனதோம் என்று தாளம்
போடணும் நான் பாடணும் *(5)*

பிருந்தாவனி ராகத்தில் வட இந்தியக் கிராமியச் சாயலில் அமைந்த பாடலை அவர் பாட, பின்னணி இசையாகக் காற்று சுழன்று சுழன்று அடித்துவிட்டு களைத்துப் போய் மெல்ல விசையிழக்கும் வரை, நாங்கள் எதுவும் பேசிக்கொண்டதாக நினைவில்லை என்று நினைவு கூறுகிறார் கவிஞர். அந்தக் கனத்த மௌனத்திற்கு காரணம் கவிதையும் காற்றும்தானே!

நினைத்துக் கொள்ள நிமிடம் போதும்

அதே சுற்றுலாவில் நடந்த மற்றொரு சம்பவத்தையும் குறிப்பிடுகிறார் கவிஞர். சிவரஞ்சனி ராகத்தில் அமைந்த ‘நினைத்துக் கொள்ள நிமிடம் போதும்’ என துவங்கும் பாடலைப் பாடிய பாடலாசிரியர்

மனைவி மக்கள் என்பதெல்லாம்

மரணம் வரையிலே
மனையும் பொருளும் தேகத்தை நான்
மறக்கும் வரையிலே - நீ (6)

என்று அடுத்த வரிகளைப் பாட முடியாமல் திணற, அவருடைய நண்பர் சிவகுமார் கவிதைத்தாளை எடுத்து

ஏற்றி வைத்த தீபம் மட்டும்
அணைவதில்லையே - எந்தக்
காற்று வந்து மோதினாலும்
கலைவதில்லையே (7)

என்று மிக அழகாகப் பாடியிருக்கிறார். சிவகுமார் பாடிய அந்த மெட்டு கவிஞரை மிகவும் ஈர்த்தது. "நானே அந்த வரியைப் பாடி யிருந்தால் அவ்வளவு பொருத்தமான மெட்டு அமைந்திருக்க வாய்ப்பில்லை. என் மனதில் எழுந்த இசை காற்றைச் சற்றே திசைத்திருப்பி, மலையமாருதமாய் வளையவரச் செய்த சிவகுமாரை மறக்க முடியுமா?"என்று நண்பரை பாராட்டியும் இருக்கிறார்.

காற்றே வா கவிதை தா

கவிஞர் தன் நண்பர் இசை கவி ரமணனைச் சந்தித்த ஒரு நிகழ்வினை நினைவு கூறுகிறார். தன் வாழ்வில் காற்றும் கவிதையும் எப்படி உறவாடியிருக்கின்றன என்பதையும் இதில் குறிப்பிட்டு இருக்கிறார். இருவரும் முதல் மாடியில் முற்றத்தில் காற்றாட நின்று பேசச் செல்கிறார்கள். ஆனால் காற்று வரவில்லை. கவிஞர் சலித்துக் கொள்ள ரமணன் பாடுகிறார்.

காற்றே வா கவிதை தா
ஆற்றமை அதை நீ மாற்றாமல்
தாகம் என்ற யாகம் பெருகத்
தண்ணீர் ஊற்றிவிடு
காற்றே வா கவிதை தா (8)

என்று பாடி முடிக்கும் முன் காற்று வந்ததுஎன்கிறார். முரண்பாடன அழகானகவிதை வரிகள்.தாகத்தை தணிக்கவும், யாகத்தை அணைக்கவும் தண்ணீர் ஊற்றுவதுதான் வழக்கம். ஆனால் கவிஞன் தாகம் என்ற யாகம் பெருகக் தண்ணீர் ஊற்றச் சொல்கிறான் காற்றை! கவிஞன் சொல்லுக்கு இயற்கை செவி சாய்க்குமோ? காற்று மட்டும் இல்லை, நிலம், நீர்,

காற்று, நெருப்பு, ஆகாயம்ஆகிய பஞ்சபூதங்களும் கவிதைக்குக் கட்டுப்பட்டவை என்பதையும், அருட்குறள் மூவாயிரத்தில் ரமணனின் பாடல் வரிகளையும் இணைத்துச் சொல்கிறார் கவிஞர் –

தீயென்றால் காடெரியத் தேநென்றால் பூ மகிழ
வாய்நின்ற பேரருளே வாக்கு *(9)*

"காற்றுப் பல்லக்கிலே"

வீடுதோரும் ஏற்றப்பட்ட கார்த்திகை அகல் விளக்குகளின் வரிசையைப் பார்த்து அவருடைய மனம் பாட்டிசைக்கிறது.

"காற்றுப் பல்லக்கிலே – செல்லும் கார்த்திகைத் தீபங்களே" என தொடங்கும் கவிதையில் முதிராத மொட்டுகள், பனி முத்துக்கள், நதி, மார்கழி பனி என இயற்கைக்குப் பாட்டிசைப்பதாகச் சொல்லும் கவிஞர்

முடியாத பாட்டுக்கு முதலாக என்னுயிரை
முழுதாக நான் தந்து விளையாடுவேன் - அந்த
பாட்டுக்கு கருவாகிப் பண்ணென்ற உருவாகிப்
பாரெங்கும் காற்றாக் பறந்தோடுவேன் *(10)*

என்று உருகி எழுதியிருக்கிறார் கவிஞர். இந்த பாடலை நண்பர் வ.வே.சு.வுக்கு பாடி காட்ட அவர் என்ன ராகம் என்று கேட்க 'சுபபந்துவராளியில் ஒரு ஸ்வரம் மட்டும் நீங்கல்' என்று பதில் சொல்லி இருக்கிறார்கவிஞர். ஏதோ காதிருக்கிறது, காற்றடிக்கிறது, வாயசைகிறது, பாடல் வருகிறது.அம்புடுதேன், ஆனால் அம்புட்டும் தேன் என்று மிக எளிமையாக கவிதையின் நுட்பத்தை சொல்லியிருக்கிறார்.

தனக்குள் இருக்கும் புத்தி சிகாமணியும், மனோண்மணியும் அவரிடம் விவாதிப்பதும், அதற்கு அவர் சொல்லும் விளக்கங்களும் அருமை. புத்தி சிகாமணி அடிக்கடி கவிஞரை கேள்வி கேட்பதும் அதற்கு அவர் பதில் அளிப்பதும் வழக்கமான ஒன்று.

காற்று வந்துகைப்பிடித்து
காற்று வந்துகைப்பிடித்து கூட்டிச்செல்வ தெவ்விடம்
காதல் கவிதை பாடல் நெஞ்சில் கண்சிமிட்டும் ஒவியம்
தோற்றம் என்பதா - ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா *(11)*

காற்று வந்து உன் கைபிடித்து எப்படிக் கூட்டிப் போக முடியும், காற்றுக்குக் கையுண்டு என்று கதை அளக்கிறாயா என்று சிகாமணி கேள்வி எழுப்ப, வில்லிபுத்தூர் ஆழ்வாரின் காவியத்தில் இருந்து ஒரு பாடலைச் சொல்கிறார் கவிஞர். பாரதப்போர் தொடங்கும் முன் கண்ணனைத் தன் பக்கம் வரச் செய்வதற்கு துரியோதனன் மதுராபுரிக்குச் செல்கிறான். அவன் மதுராபுரியைநெருங்கியதும் கோட்டை மதில் மேல் பறந்துக் கொண்டிருந்த கொடிகள் போ போ என்று சொல்வது போல் துரியோதனனைக் கைகளால் தடுத்தன என்று புலவர் பாடுகிறார்.கொடிகளுக்கும் கையுண்டு என்கிறாரே புலவர் என்று விளக்குகிறார்.

ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லால் படைத்துணையாக மாட்டன்
மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறும்
காண்தகு பதாகை யாடை கைகளால் தடுப்ப போன்ற. *(12)*

"காற்றும் கவிதையும்"

"காற்றும் கவிதையும் ஒன்றா"? என்ற சிகாமணியின் குரலுக்கு கவிஞர் பாட்டாலேயே பதில் சொல்கிறார். கவிமாமணி தேவநாராயணன் வீட்டில் நடந்த கவியரங்கத்தில் பாடப் பட்டது இந்த பாடல்.

காற்று வேறு கவிதை வேறு
இரண்டும் ஒன்றாய் இணையும் போத
பாடல் உருவாகும் - அதில்
பார்வை தெளிவாகும் *(13)*
என்று தொடங்கும் பாடலை
"தூண்டிலுக்குள் துவளும் மீனின்
தோல்வி எங்கள் பாடலே
காண்டிபத்தில் இடி முழக்கம்
வெற்றி எங்கள் பாடலே
மலரில் வண்டு துயிலுகின்ற
மர்மம் எங்கள் பாடலே
தனிமையுளுளும் தர்க்கம் செய்யும்
தர்மம் எங்கள் பாடலே *(14)*

என்று எழுதியிருக்கிறார் கவிஞர். அனைத்தும் கவிதைதான் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார் கவிஞர்.

கீதா மதிவாணனின் "நாம் காற்றை தேடுவது போல் காற்றும் கவிதை தேடுகிறதோ, "கவிதைப் புத்தகத்தின் வெற்று பக்கங்களை படபடப்போடு புரட்டிக் கொண்டிருந்தது காற்று". என்ற வரிகள் கவிஞரின் "காற்று வாங்கப் போனேன்" (ஒரு) பல கவிதை வாங்கி வந்தேன்" என்ற வரிகளுக்கு மிகப் பொருத்தமானவை என்று சொன்னால் மிகையல்ல.

கவியரசின் பெருந்தன்மை

விவேகானந்தா கல்லூரியில் கவிதைப் போட்டிக்கு நடுவராக சென்றிருந்தார் கவிஞர்."நான் எதையும் மறைப்பதில்லை குடிப்பழக்கம் உட்பட" என்று முன்னுரையில் பேச அவர் முன்னிலையில் வாய்மையே வெல்லும் என்ற தலைப்பில்

-குடித்தாலும் குடிக்கின்றேன் என்று சொல்லிக்
-குடிப்பதுதான் வாய்மையெனச் சொல்லி விட்டார்
-குடியாலே குழறுகிற நாவில் உண்மை
-குடியிருக்க முடியாது மறந்து விட்டார்
-பிடிவாதம் செய்யாமல் விடச்சொல் கின்றேன்
-பிழைதிருத்த வரவில்லை விண்ணப் பம்தான் *(15)*

என்று குறும்பு கலந்து படித்த கவிஞரின் கவிதைக்குப் பரிசும் அறி வித்தார் கவிஞர் கண்ணதாசன். கவிஞரின் பெருந்தன்மையையும், அவர் முதலில் ஒரு பெரிய ரசிகர் என்பதையும் குறிப்பிட்டு அந்த நிகழ்வினை நினைவு கூறுகிறார் கவிஞர் ரவி. இதைத் தொடர்ந்து திரைப்பட உலகில் பெரிய ஜாம்பவான்களான வாலி, எம்.ஜி.ஆர், சிவாஜி, நாகேஷ், ஸ்ரீதர், எஸ்.பி.பிபோன்ற பல கவிஞர்கள், நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள் மற்றும் இயக்குனர்கள் பற்றிய பலச் சுவையான நிகழ்வுகளையும் குறிப்பிட மறக்கவில்லை கவிஞர்.

இசையும், கவிதையும்

கவிஞரோடு இசையும், கவிதையும் கைகோர்த்துக் கொண்டு வளர்ந்தன. 'இசையா, கவிதையா என்று பட்டிமன்றம் வைத்தால் நீ எந்த கட்சி'? என்று சிகாமணி கேட்க, பாட்டாகவே பதில் சொல்கிறார் கவிஞர்.

-உனக்குத் தெரியும் கவிதை என்றால்
-உயரப் பறப்பதென்று
-எனக்குத் தெரியும் இசையென் றாலது

-என்னை இழப்பதென்று
-பறந்து கொண்டே இழந்தது பாதி
-இழக்க இழக்க வளர்ந்தது மீதி *(16)*

என்று பாடியிருகிறார். 'தென்றலே மலர் சூடவா – கொடி மின்னலே வளை போடவா', 'ஆயிரம் மலர்கள் பனியில் நனைந்து ஆனந்த வெளியில் முகில்கள் திரிந்து' என்ற திரைப்பட பாடல்களுக்கும் மிக இனிமையாக இசையமைத்தும் இருக்கிறார் கவிஞர்.

பாரதியும், கவிஞரும்

பாரதிகலைக்கழகத்தில், ஹா.கி.வாலம்அம்மையார் நினைவுக் கவியரங்கத்தில் முண்டாசுக் கவிஞன் பாரதிக்காகக் கவிஞர் கண்ணீர் மல்க படித்த கவிதையின் சில வரிகள் –

அவனுக்காக கொஞ்சம் அழக்கூடாதா
புதைமண லில் சில விதைகள் தூவப் புறப்பட்டானே
போகும் வழியில் எல்லாம் நெஞ்சு மிதிபட்டானே
அதையும் மீறிச் சென்றே கனவு பயிர் வைத்தானே
அதற்குத் தன்னை ஆகுதி யாக்கி உயிர்விட்டானே
அவனுக்காக கொஞ்சம் அழக்கூடதா *(17)*

இவளொரு புதுக்கவிதை

மாணவரிஸத்தில் 'பகலவன்' என்ற பெயரில் கவிதைகள் எழுதிய காலத்தில் மரபு மீறாத ஒரு புதுக்கவிதை எழுதியிருக்கிறார் கவிஞர்.

இவளொரு புதுக்கவிதை என்று தொடங்கும் பாடலில் சுரதாவின் கவிதையைப்போல் சுகமான நளினங்கள் சுழலும் பார்வை, எலியெட்டின் புதிரான உள்ளம் கொண்ட கவிதைபோல், தத்துவங்கள் கனக்கின்ற தாகூரின் கவிதைப்போல் தழைந்த கூந்தல் இவளிடம் இருப்பதால் மட்டும் அல்ல

தென்றலைக் குழைத்துத் தேக்கில் இழைத்து
மின்னலின் வடிவில் மெல்ல வளைத்து (அதை)
இடையெனச் சொல்லும் இரகசியத் தாலும்
இவளொரு புதுக்கவிதை *(18)*

என்ற வரிகளோடு கவிஞர் சொன்ன உவமைகளும் மிக மிக அழகு.

ஆன்மீகமும், கவிஞரும்

ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்த பிறகு மொட்டை மாடியில் இயற்கையை பார்த்து மனதளவில் கஷ்மீருக்கு சென்ற அனுபவத்தை கூறுகிறார் கவிஞர். கஷ்மீர் பள்ளதாக்கில் பேருந்து நுழைந்த போது அவர் மனைவி அவரை எழுப்பி காணச் செய்த காட்சியை, மலைத்தொடரோ சிவனோ என மலைக்க வைத்த அனுபவத்தை கவி பாடியிருக்கிறார். அவரே இசையமைத்து இருக்கும் இந்த பாடலை பாடியவர் எஸ்.பி.பி அவர்கள். இயற்கையும், சிவனும் இணைந்த அழகான அந்த பாடலில் இருந்து சில வரிகள் –

-நிலவை அணிந்து கொண்டு - சடை
-புரளப் புரளவிழி நிறைந்து வானம்
-மின்னல் த்ரிசூலம் - எட்டுத்
-திசையும் அதிரநகை குலுங்கிய தேகம்
-புலரும் போது சாம்பல் - பனிப்
-புகையப் புகையமெல்ல படர்ந்தது வெள்ளி *(19)*

இதை தவிர ஐயப்பன், சாய்பாபா, அம்மன், திருமலைவாசன் போன்ற கடவுள்களைப் பற்றிய பல பக்திப்பாடல்களையும் எழுதி பலரின் பாராட்டையும் பெற்று இருக்கிறார் கவிஞர்.

கனவும் கவிதையும்

கவிதையின் பிறப்பு ரகசியத்தை புரிந்து கொண்ட கவிஞருக்குத் தூக்கத்தில் பாடுவதாகக் கனவு. இதைப் பற்றி அவர் ஆபோகி ராகத்தில் ஒரு பாடலும் எழுதி இருக்கிறார். 'உனக்கொரு சிலை நான் செய்வதற்குள்' என்று தொடங்கும் பாடலில் சில வரிகள்–

தூக்கத்தில் ஒரு பாடல் எழுதி
துயில் கலைந்ததும் அதை மறந்து விட்டேன் - பனித்
துளிகளிலே ஒரு மாலை தொடுத்துச்
சூரியன் வந்ததும் தொற்று விட்டேன் *(20)*

கவிஞன் என்பவன்

கவிதை ரசிகராகவும், குழந்தை எழுத்தாளராகவும் இருக்கும் அமரர் பூவண்ணனைச் சந்தித்த ஒரு நிகழ்வினைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் கவிஞர். சென்னை மைய நூலக வளாகத்தில்

நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கவிஞரின் கவிதை ஒன்றை மனப்பாடமாகச் சொல்லி அவரை மகிழ்வித்திருக்கிறார். அவர் சொன்ன கவிதை இதுதான் –

தீப்பிழம்பைக் கையில் அள்ளி சாறெடுக்கும் போது
தேன்வடிந்த தென்று சொல்லித் துள்ளுபவன் யாரு
தேன்வடிந்த துளிகளிலே பூவாசம் வைத்துத்
தென்றலிலே தூவியிசை கொள்ளுபவன் யாரு
கனவென்ற தேர்கொண்டவன் - ஒரு
கவிஞனெனப் பேர்கொண்டவன் *(21)*

இலக்கிய ரசனை

"இலக்கிய ரசனை என்பது, தன் வாழ்வில் தன் அனுபவமாக வராதா ஒரு நிகழ்வை, இன்னொருவர் அனுபவித்த ஒன்றை, அந்த இன்னொருவருக்குள் எப்படியோ நுழைந்து, ஏறக்குறைய அவர் அனுபவித்தபடியே அனுபவிப்பது". என்று கூறுகிறார் பாடலாசிரியர்.

இலக்கிய ரசனை என்பது வெறும் மகிழ்ச்சியான சமாச்சாரம் மட்டுமல்ல, சோகத்திற்கும் அது பொருந்தும் என்று சொல்லும் கவிஞர் கோவலனை இழுந்த கண்ணகியின் அந்தச் சோகமான அனுபவ களத்துக்குள் அழைத்துச் செல்லும் இளங்கோவடிகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அந்த வேதனையை அப்படியே, கொஞ்சமேனும் அனுபவிக்க வைப்பதுதான் புலவனின் வேலை என்று கூறும் கவிஞர் "சோகத்தில் கூட சுகம் உண்டு தோழி" என்று தொடங்கும் பாடலில் சோகத்தின் உணர்வினையும் பாடியிருக்கிறார் –

இதயத்தை பிழிந்துவிடும் சோகத் தாலே
இருக்கின்றசுமையெல்லாம்கண்ணீ ராகி
உதிர்ந்துவிடும் நீயாக மட்டும் உன்னை
உள்ளுக்குள் நீகாண முடியும் நெஞ்சின்
அதிர்வுகளை நீவிவிடும் அனுபவத்தை
அரைனொடியில் ஏற்படுத்தும் இசையி னாலோர்
அதிசயத்தை உருவாக்கும் அதற்கும் மேலே
அமரநிலை உண்டென்று நினைவுறுத்தும் *(22)*

காத்திருந்த கவிஞர்

"என் மூலமாக என்னென்ன படைப்புகள் உருவாக வேண்டும் என்பது இறைவன் திட்டமோ அது உருவாகியே

தீரும். காத்திருப்பது மட்டுமே என் பணி" என்று கூறும் கவிஞர் 'வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்' என்று தொடங்கும் வரிகளில் தன் காத்திருப்பை வழிமொழிகிறார் –

கனவு கடலில் நடுவினிலே நான்
காகிதப் படகாய் மிதந்திருந்தேன்
கலங்கரை விளக்கங்கள் மூழ்கியாதால்
காற்றின் கருணையை பார்த்திருந்தேன்
கரைவரும் என்று காத்திருந்தேன்
காத்திருந்தே மெல்ல கரைகின்றேன் *(23)*

சொற்களுக்குள் ஏறிக்கொள்

"சொல் ஒன்று வேண்டும்" என்ற பாரதியின் வேண்டுதல் "தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ!"என்ற கம்பராமாயணத்தின் வரிகள், "சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை!" என்ற கவியரசரின் சொற்களைச் சுட்டி காட்டி "என் சொற்களுக்குள் ஏறிக்கொள்" என்ற கவிதையில் சொற்களின் பண்பையும், வலிமையையும் உணர்த்துகிறார்.

"ஆனால் என்

சொற்களுக்குள் ஏறிக்கொண்டால் மீண்டுவர மாட்டாய்
சொற்களோடு சொற்களாகக் கரைந்துபோய் விடுவாய்
விழிதொடாத இடமெலாமென் மொழிநுழைந்து செல்லும்
அழிவிலாத அட்சரங்கள் அமரவாழ்வு நல்கும் *(24)*

அணையாத சுடரேற்றுவேன்

2001– ஆம் ஆண்டு எழுதிய "அணையாத சுடரேற்றுவேன்" என்ற வரிகளில் தொடங்கும் கவிதையுடன் "காற்று வாங்கப் போனேன்" முதல் பாகத்தை நிறைவு செய்கிறார் கவிஞர்.

அணையாத சுடரேற்றுவேன்"- இந்த
அகிலமெல்லாம் உண்மை ஒளிகூட்டுவேன்!
அனைவருக்கும் ஒருநீதியே - என்ற
அருளாட்சி மலரநான் அறைகூவியே
அணையாத சுடரேற்றுவேன்! *(25)*

'சொல்லும் சொல்லும் சேரும் போது' என்ற வரிகளில் செய்யுளின் விளக்கத்தோடு தொடங்கி 'கரவொலிகள்

ஓய்ந்துவிடும் ராக்காலத்தில்' என்ற பாடலில் தென்றலின் சிறப்பையும், "மனமலரைத் தென்றல் வருடிவிடும்", 'பாடணும் நான் பாடணும்', "காற்றே வா கவிதை தா" "காற்றுபல்லக்கிலே", "காற்று வந்து கைப்பிடித்து" என்ற பாடல்களில் காற்றுக்கு, கவிதைக்கும் இருக்கும் நட்பை மிக நன்றாக தன் கவிதை வா யிலாக உணர்த்தியிருக்கிறார் கவிஞர். கவியரசுக்கு கவிதையும், பாரதிக்காக அழுதும், திரைப்பாடலுக்கு இசையமைத்தும், புதுக்கவிதை புனைந்தும், பள்ளத்தாக்கில் சிவனை தரிசித்தும், சோகத்தை பிழிந்தும், கவிஞனின் இலக்கணத்தையும், சொற்களின் வலிமையும் கூறி, காத்திருந்துப் பெற்ற கவிதை வளத்தை அணையாத சுடறேற்றுவேன் என்றுக் கூறி தன் கவிதை தொகுப்பான "காற்று வாங்கப் போனேன்" முதலாவது பாகத்தை நிறைவுச் செய்கிறார் கவிஞர்.

"கவிதை ஒரு வாசல், அனுபவ வாசல். அதை திறந்து கொண்டு உள்ளே நுழையத் துணிந்தால், அது உதித்த அதே அனுபவக் களத்துக்கு, அதற்குள் பதுக்கி வைக்கப் பட்டிருக்கும் அதே அனுபவ களத்துக்குச் செல்ல முடியும்" என்ற கவியின் வார்த்தை முற்றிலும் உண்மைதான் என்பதற்கு அவர் எழுதிய "காற்று வாங்க போனேன்" கவிதைப் பயண அனுபவமே மிகப் பெரிய சான்று என்று சொன்னால் அது மிகையல்ல.

உசாத்துணை நூல்கள்

1. (https://eluthu.com>kavingar&kavithai
2. வானவில் கே.ரவி "காற்று வாங்கப் போனேன்"
3. பாரதியாரின் "காற்று" என்ற தலைப்பில் எழுதிய வசன கவிதையின் வரிகள் – பாடல் 6 (https://eluthu.com>kavingar&kavithai
4. வானவில் கே.ரவியின் "காற்று வாங்கப் போனேன்" பக்கம் – 6

❖

சொன்னதும் சொல்லாததும் – ஓர் மீள் பார்வை

•

இரா.நாகராணி
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி தி.நகர்

"கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றொரு முதுமொழியே உண்டு. அந்த அளவிற்கு, கம்பரது புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. 'கவிப்பேரரசர் கம்பர்', 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்', 'கல்வியில் பெரியவர் கம்பர்' என்றெல்லாம் அவரது கவித்திறனைப் பறைசாற்றும் அளவிற்கு அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வன்மை கொண்டவராக இருந்த அவர், ஆழமான கவிதை அனுபவமும், கற்பனை ஆற்றலும், புலமைத் திறனும் பெற்றவர். 'கம்பராமாயணம்', 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும். இதில், 'கம்பராமாயணம்', தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்த காவியமாகக் கருதப்படுகிறது. கம்பனின் கவி வண்மையின் சொல் திறனில் ஈர்க்கப்பட்ட ஆசிரியர் ரவி அவர்கள் "சொன்னதும் சொல்லாததும்" எனும் நூலில் "அவனே கவிச்சக்கரவர்த்தி" எனும் தலைப்பில் கம்பனின் அறிவையும்

ஆற்றலையும் வியந்துள்ள திறத்தினை மீள்பார்வை செய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

சொன்னதும் சொல்லாததும்

இந்நூல் மொத்தம் பதின்மூன்று(13) கட்டுரைகளை உள்ளடக்கியது. இதில் "அவனே கவிச்சக்கரவர்த்தி" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில் ஒன்பது தலைப்பிட்டு கம்பனது கவித்திறத்தை ஆங்காங்கே தொட்டுச் சென்றுள்ளார் ஆசிரியர் ரவி.

மானிடம் வென்ற தன்றே

உலகமே ஒரு நாடக மேடை, அதில் நாமெல்லாம் நடிகர்கள் என்றார் ஷேக்ஸ்பியர். இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் கம்பநாடனும், "உலக நாடகத்தை ஓர் அலகிலா விளையாட்டாகவே நடத்தும் ஒரே தலைவனுடைய நாடகப் பாங்கும் , அந்த நாடகத்தில் விளையாடும் லீலா பாத்திரங்களின் தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும்" என்ற நோக்கில் பெரு முயற்சியை மேற்கொண்டு அதைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறான் என்றுரைக்கிறார் நூலாசிரியர் ரவி.

ஆசிரியர் வால்மீகி ராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் வேறுபடுத்திக் கூறுகிறார். வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படாத செய்திகளைக் கம்பர் தனது நூலில் கூறியுள்ளார். மானிடம் வென்ற தன்றே என்ற கட்டுரைத் தொகுப்பில் ஆசிரியர் ரவி வால்மீகிக்கும் கம்பனுக்கும் ஒரு வேறுபாடு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

- வால்மீகி காட்டும் இராமன் உத்தமமான மனிதன்
- கம்பன் காட்டும் இராமன் மனித நிலையில் உள்ள கடவுள்

இராவணன் கடும் தவம் இருந்து பிரம்மதேவனிடம் தேவர்கள், கின்னரர்கள், கந்தவர்வர்கள், விலங்குகள், பறவைகள் முதலானவற்றின் மூலம் தனக்கு அழிவு நேரக் கூடாது என்று வேண்டி வரம் பெற்றான். மனிதனால் தனக்கு அழிவு வரக்கூடாது என்ற வரத்தைக் கேட்கவில்லை. மனிதர்களை மனிதப் பூச்சிகளாகக் கருதினான். ஏளனமாக எண்ணினான். வரம்

பெற்ற ஆணவத்தால் தேவர்கள் முதலானோர் வன்கொடுமைக்கு ஆளாயினர். கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டி தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். திருமாலும் இராவணனைக் கொல்வதாக உறுதியளிக்கிறார்.

திருமால் மனிதனாகக் கோசலையின் மணி வயிற்றில் வந்துதித்தார். கடவுள் என்ற நிலையை மறந்து மனிதனாகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து காட்டினார். மனிதனாக இருந்து இராவணனைக் கொன்று அவன் ஆணவத்தை அழித்தார். மனித இனத்தின் வெற்றியைக் கடவுளே மானிடனாகப் பிறந்து மனித இனத்தின் ஆற்றலை வெளிப்படுத்திய காவியமாக இராமாயணம் திகழ்கிறது.

வால்மீகி அயோத்தி இராமனாக, ராஜாராமானாக, தசரத ராமனாக, சீதா ராமனாக மனிதனாகத் தோன்றிய இராமனை மனிதனாகவே குறிப்பிடுகிறார். ஆனால் கம்பனோ பரம்பொருளாகக் காட்சியளிக்கும் தன்மையினைக் காப்பியத்தைப் படிக்கின்றபோது நம்முள் ஓர் உணர்வினை ஏற்படுத்தி விடுகின்றான்.

கிட்கிந்தா காண்டத்தில், நட்புக்கோள் படலத்தில் இராமனைக் கண்டதும், அவனே பரம்பொருள் என்று சுக்கிரீவன் அறிந்து கொண்டதாகக் கம்பர் பாடலொன்றில் விளக்கிச் சொல்வதை நூலாசிரியர் குறிப்பிட்டு, பரம்பொருளே மானிடனாக அவதரித்து,

ஆறு கொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே

சிவபெருமான், பிரம்மன் முதலான குழுவை எல்லாம் மானிடம் வென்ற சிறப்பை இவ்விரு அடிகள் மூலம் குறிப்பிடுகின்றார். இறையாக இருந்தாலும் மானுட நியதிகளுக்கு உட்பட்டு, இராவணனை வென்று மனித குல மாண்பினை உலகறியச் செய்த இராமனை தனித்தன்மை கொண்ட இராமனாக வால்மீகி கூறுவதும் கம்பர் இறைநிலையில் இராமனைக் குறிப்பிட்டாலும் மானுட நிலையில் நின்று இராவணனை அழித்த வெற்றிச் சிறப்பைக் கூறுவதும் வேறுபட்டத் தன்மையுடையதாகக் காணப்படினும் மானுடம்

வென்றது என்பது தான் உண்மையாகும். இக்கருத்தைத் தான் நூலாசிரியர் "மானுடம் வென்ற தன்றே" என்கிறார்.

இராம நாமம் - விளக்கம்

ராம = ரா + ம – ரா என்பது பரத்துவத்தையும் ம என்பது மானுடத்தையும் குறிப்பதாகும். அத்துடன் மட்டுமன்றி, அனைத்துத் தெய்வங்களுக்கும் மந்திரச் சொல் வெவ்வேறாக இருக்கும். ஆனால் ராம நாமமே ராம மந்திரமாகும். அனுமன் துதிக்கும் மந்திரம் 'ராம்' என்பதாகும். தமிழ் இலக்கண மரபுப்படி 'இராம' என்று எழுதப்பட்டாலும் 'ராம' என்பதே மந்திரமாகும் என்பதை இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

அறமும் கர்ம வினையும்

பரம்பொருள் மனிதப் பிறப்பெடுத்து, மண்ணுலகில் அவதரித்து, மனிதனால் மட்டுமே மரணம் அடையக் கூடிய தீய சக்தியை அழித்து உலக இருளை நீக்கி ஒளியேற்றி, மீண்டும் பரம்பொருள் நிலையை அடைந்து விடும் நாடகமாக இராமாயணம் திகழ்கிறது. "தர்மத்தை நிலைநாட்டமனிதன் இயற்றும் சட்டங்கள் உதவவில்லை என்றால் சட்டங்களும் மீறப்படலாம். சட்டங்களை மீறித்தான் தர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற நிலை பெரும்பாலும் எதேச்சாதிகார ஆட்சியில் தான் உண்டாகும்." இறைவன் வகுத்த சட்ட நியதிகள் தர்மத்துக்கு எதிராகவோ, முரணாகவோ இருப்பதில்லை.

வால்மீகி இராமாயணத்தில் ஒரு வேடன் கணை எய்து ஒரு பறவையை வீழ்த்திவிட, இதன் ஜோடிப்பறவை துடிக்கும் நிகழ்வே காப்பியத்தின் தொடக்கமாகச் சொல்லப்படுகிறது. இறைவன் மனிதனாகப் பிறப்பெடுக்க, கர்மவினை சேராமல் கருவில் உதிக்க முடியாது என்ற நியதியை மீறாமல் பிறப்பெடுத்தார். ஜோடிப்பறவையின் வருத்தத்தைப் போல இராமனும் சீதையைப் பிரிந்து வருத்தம் அடைந்தனர் என்ற கர்மவினைக்குள் ஆட்பட்ட திறனை அறிந்து கொள்ளமுடிகிறது.

அனுமன் சீதையை அசோகவனத்திலிருந்து மீட்டு எடுத்திருக்க முடியும். ஆனால், சீதை இதனை விரும்பவில்லை. இராமனே இராவணனை அழித்துத் தன்னை மீட்க வேண்டும். அது தான் தர்மம். இராமனின் வீரத்துக்குப் புகழ் சேர்க்கும்

என்று சொல்லி மறுக்கும் சீதை அவளது மனத்துணிவு பதி தர்மத்தின் நியதிக்கு உட்பட்டது

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (குறள் 37)

அறத்தைச் செய்வதால் வரும் பயன் இது என்று நூல்களைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டியது இல்லை. பல்லாக்கைத் தூக்கிச் செல்பவனையும் அதில் பயணிப்பவனையும் கண்ட அளவில் பயனை அறியலாம். இது திருவள்ளுவர் தரும் விளக்கமாகும். அதர்மத்துக்கும் அநீதிக்கும் விதி காரணமாகவோ, துணையாகவோ இருக்க முடியாது என்பதைக் குறள் வழி அறிந்து கொள்ளமுடிகிறது. அதைப்போல,

கரும வினை என்பார், பிரம்மன் எழுத் தென்பார், கடவுள்
மேல் குற்றம் என்பார்

என்றார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார். பிறர் மீது குற்றம் சுமத்துவதையே வேலையாகக் கொண்டிருக்கும் திண்ணைப் பேச்சு வீணர்களின் வார்த்தைகளை இடித்துரைக்கின்றார் பொதுவுடைமைக் கவிஞர். மனிதனின் அறம் தவறிய செயலுக்கு விதியைக் காரணம் காட்டக்கூடாது என்பதை இப்பாடலடிகள் அறிவுறுத்துகின்றன. இக்கருத்தை அடியொற்றியே பரம்பொருளான இராமனும் மனிதனாக மண்ணுலகில் தோன்றி, மனித இயல்புகளுக்குக் கட்டுப்பட்டு அவனது சட்டதிட்டங்களுக்குட்பட்டு நீதியை நிலைநாட்டினான். விதிவழியே நடந்து, இடியே ஆனாலும் தாங்கிக் கொள்ளும் மனவுறுதி உடையவனாக இராமன் விளங்கினான். விதி மீது குற்றம் சுமத்தாது அறத்தினை, நீதியினை நிலைநாட்ட நம்பிக்கை என்ற உறுதி இருந்தால் மனித குலம் வெற்றிக் கனியைச் சுவைக்கும் என்ற கருத்தினை இந்நூல் வலியுறுத்துகின்றது.

அன்றலர்ந்த தாமரை முகம்

கைகேயி இராமனிடம் 'ஆழி சூழ் உலக மெல்லாம் பரதனே ஆள, நீ கானகம் செல்ல வேண்டும்' என்று ஆணை இடுகின்றாள். இதைக் கேட்ட இராமன், 'மன்னவன் பணியன்றாகில் நும் பணி மறுப்பனோ' எனக் கூறுகின்றான். அவ்வாறு கூறுகின்ற போது இராமன் முகம் வாடவில்லை. அன்றலர்ந்த தாமரை மலர் போல் இன்முகத்துடன் இருந்தது என்று கம்பன் காட்சிப்படுத்துகிறான். மேலும், தாய் கைகேயி

உரையைக் கேட்கும் முன்னும், கேட்ட பின்னும் அவன் முகம் மலர்ந்திருந்த காட்சி தாமரையை வென்று விடுவதாக இருந்தது என்று இரசனையுடன் கூறியிருப்பது கம்பனின் ஆழ்ந்த பொருள் ஞானத்தை வெளிப்படுத்துகிறது. இக்காட்சியைப் பார்க்காத சீதை, அசோகவனத்திலிருந்து இராமனை நினைத்துப் பார்க்கின்றாள்.

மெய்த்தி ருப்பதம் மேவுகின்ற போதிலும்
இத்தி ருத்துறந்து ஏகென்ற போதிலும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்

சித்திரத் தாமரை போல இராமன் முகம் இருந்தது என்று கம்பன் காட்சிப்படுத்துகிறார்.

சொற்கட்டால் சொக்க வைக்கும் கம்பன்

சொல்லால் சொக்க வைக்கும் கம்பன் சொல் சிக்கனத்தைப் பல இடங்களில் காணமுடிகிறது. அவை,

- இலங்கைத்தீவில் சீதையைக் கண்ட அனுமன் இராமனிடம் தெரிவிக்கின்றான். அப்போது 'இலங்கை வெற்பு' என்று அனுமன் வாயிலாகக் கம்பன் கூறுகின்றான். வால்மீகி எழுதிய இராமாயணத்தில், பாண்டிய நாட்டைக் கடந்து, மகேந்திர மலைப்பக்கம் சென்றால் மலைகள் சூழ்ந்த ஒரு தீவாக இலங்கை இருந்த செய்தியை சீதையைத் தேடப் புறப்படும் வானர வீரர்களுக்கு இராமன் உரைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் கம்பன் ஒரே சொற்றொடரில் 'இலங்கை வெற்பு' என்று சொல்வது சிந்தித்துப் பார்க்கும் கம்பனின் கவித்துவத்தை உணர வைக்கிறது.

- "அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச" என்ற பாடலில் இருளை உருக்கி ஊற்றிய மேனி அழகன் இராமன் என்றால் அவள் என்பது சீதையைக் குறிக்கிறது. இதில் கம்பனுடைய சொல் சிக்கனத்தைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

- இராமனுக்குப் பட்டாபிசேகம் நடக்கிறது. அரியணையை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாளை ஏந்த, பரதன் வெண்கொற்றக் குடையைக் கவிக்க, இருவர் கவரி வீசினர்.

இங்கே, இருவர் என்பது இலக்குவன், சத்துருக்கனையும் குறிக்கிறது. பெயரைக் குறிப்பிடாமல் இருவர் கவரி வீச என்று குறிப்பாகச் சொல்லி இருப்பது கம்பனின் கவிதை உத்தியைச் சுட்டிக்காட்டுகிறது.

- கம்பன் திருவவதாரத்தில் இந்திரன், சிவன் முதலான தேவர்கள் யார் யார் என்ன வேடம் பூண்டனர் என்பதை விவரமாகக் கூறிய கம்பன் குகனைப் பற்றிய ரகசியத்தைக் குறிப்பால் உணருமாறு செய்கின்றான். "மலர் இருந்த அந்தணனும் தலை வணங்கும் அவனும் அவன் அடி வீழ்ந்தான்" என்று குறிப்பிடுகையில் பிரம்மதேவனால் வணங்கப்பட்ட குகனும் பரதன் தன் காலில் விழுந்து வணங்கியவுடன் தானும் வீழ்ந்து வணங்கினான். இங்கே குகன் முருகப்பெருமான் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றான் கம்பன். இதனால் தான் "சொல்லியதே சொல்லாததை உணர்த்தும் நீதி" என்று கம்பனின் கவித்திறத்தைப் போற்றுகிறார் ஆசிரியர் ரவி.

பக்திச் சுவையைப் பதிய வைக்கும் சுந்தர காண்டம்

படிப்போர் உள்ளத்தைத் தைப்பதும் பக்திச் சுவையைப் பதிய வைப்பதும் கம்பனுடைய சுந்தர காண்டம். மற்ற காண்டங்கள் யாவற்றிற்கும் கதை நடந்த இடத்தின் பெயர்களே சூட்டப்பட்டன. ஆனால், சந்தரகாண்டம் என்று பெயர் வைக்கக் காரணம், இராமாயணத்தின் மிக அழகான பகுதி என்பதால் சுந்தர காண்டம் எனப் பெயர் சூட்டினார் வான்மீகி என்று கூறுவர்.

மாருதி எனப்படும் அனுமன் தன் அம்சம் என வாயு தேவன் சொன்னதாக வரும் பாடலில், திரிபுரங்களை எரித்த சிவபெருமான் தானே, வாயு மைந்தன் அனுமன் என்று சொன்னதாகக் கம்பன் குறிப்பிடுகிறான். இது வால்மீகி இராமாயணத்தில் இல்லாததைக் கம்பன் பார்த்து எழுதிய பகுதியாகும்.

இராமனுக்குப் பக்கபலமாக இருந்து அனுமனாகப் பேருதவி செய்தவர் சிவபெருமான். அதனால் காப்பியத்தின் நிறைவில் இராமன் அனுமனிடத்தில் நெகிழ்ந்து பேசியதாகக் கம்பன் காட்சிப்படுத்துகிறார்.

சிவபெருமானுக்குச் சுந்தரர் என்று மற்றொரு பெயர் உண்டு. சுந்தர காண்டத்தின் நாயகன் அனுமன். இராமன் இல்லை. அனுமனின் வீரச்செயல்களைக் கூறும் காண்டம் சுந்தர காண்டம். சிவபெருமானே அனுமன் என்பதை நினைவூட்டும் வகையில், அனுமன் கடலைத் தாண்டும் போது நிகழ்ந்த நிகழ்வுகளைக் கம்பன் விரித்துச் சொல்லுகின்ற இடத்தில், குன்றில் அனுமன் காலூன்றி அழுத்தியதும் அக்குன்று அமுங்கிவிடும். இக்காட்சி, முன்னொரு நாள் இமயமலையை இராவணன் தாக்க முற்பட்டபோது, தன் கால் விரலால் சிவபெருமான் அழுத்தியதும், அமுங்கியது போல அக்குன்று அமுங்கியது என்கிறான் கம்பன்.

சிவபெருமான் தான் அனுமன் என்பதை வால்மீகி கூறாது விடுத்தார். ஆனால் கம்பன் சொல்லி விடுகிறான். அதைச் சொல்லாமல் விட்டால் சுந்தர காண்டத்தின் பெருமையும் பெயர்க்காரணமும் தெரியாமல் போய்விடும் என நினைத்து அவர்அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியிருப்பான் என்று ஆசிரியர் ரவி தனது கண்ணோட்டத்தில் குறிப்பிடுகிறார். சொல்லாதைச் சொல்லும் திறத்தால் கம்பன் கவிச்சக்கரவர்த்தியாய் வலம் வருகிறான்.

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

இராமனும் சீதையும் ஒருக்கொருவர் நோக்கும் திறத்தைக் குறிப்பிடுகையில் கம்பனின் சொல்லாளுமை வெளிப்படுவதை உணரமுடிகின்றது. நோக்குதல் என்பதற்குப் பார்த்தல் என்று பொருள். ஆனால், பார்ப்பது எல்லாம் நோக்குதல் ஆகிவிடாது. ஒரு நோக்கத்தோடு பார்ப்பதே நோக்குதல் எனப்படும். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது காதல் அல்ல. அதனால் தான் திருவள்ளுவரும்,

> **கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
> **என்ன பயனும் இல.**

என்கிறார்.

காதலரில் ஒருவர் கண்ணோடு மற்றொருவர் கண்ணும் நோக்கினால் பேசிவிட்டால் அதற்குப் பிறகு வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை. இதனை உள்வாங்கிக் கொண்ட கம்பனும்

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்ற கருத்தை முன் வைக்கின்றான்.

தத்துவம்

வடிவம் என்பது அழிவற்றது. அந்த வடிவில் அமைந்த உருவங்கள் அழியலாம். இத்தத்துவத்தை உணர்ந்தவன் கம்பன். இராமனின் வடிவத்தைச் சொல் ஆளுமை செய்கிறான். தம்பி, மனைவி, ஆகியோருடன் இராமன் காட்டுக்குச் செல்கின்ற போது இராமன் அழகைச் சொல்ல வந்த கம்பன், "வடிவு என்பதோர் அழியா அழகு" என்கிறான். இராமனின் கணைக்கு இரையான வாலி இராமனைப் புகழுகின்ற போது, "ஓவியத் தெழுத ஒண்ணா உருவத்தாய்" என்கிறான். ஓவியம் மற்றும் சதை, எலும்பால் ஆன உருவம அழியக் கூடியது. இருட்டுக்கு இருள் சேர்க்கும் ஜோதி வடிவமானது அழிவிலாத் தன்மையுடையது என்று கூறுகிறான்.

"அழியக் கூடிய உருவத்துக்குள், அழியாத ஜோதி வடிவம் அவதரிக்க முடியும் என்பதை உணரத் தொடங்கினால், அழியும் உடலுக்குள் அழியாத ஜோதி வடிவமான ஆன்மா தான் பரப்பிருமம்" என்ற வேதாந்தத்தைப் புரிந்து கொண்டவன் கம்பன்.

இயற்கை நிகழ்வுகள்

வானத்தில் நிகழும் இயற்கை நிகழ்வுகளைத் தன்காப்பியத்தின் போக்குக்குச் சித்திரமாகத் தீட்டியுள்ளான். உதாரணமாக,

- இராமன் பட்டாபிசேகத்தைத் தடை செய்யும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகையில், ராமனுக்கு முடிசூட்டு விழா என்பதற்காக வானம் போட்ட நட்சத்திரப் பந்தலை வானமே பிரித்தது.

- கானகத்திற்கு வழியனுப்ப வந்த சுமந்திரனை வழியனுப்பி விட்டுக் கானகத்துக்குள் இராமன் தம்பி இலக்குவன், சீதை ஆகியோருடன் நடந்து செல்கின்றபோது சந்திரன் உதித்ததைக் கம்பன், அரக்கர்களை அழிக்க வந்த இராமனுக்கு வழிகாட்ட, வானமே கைவிளக்கு எடுத்ததைப் போல் கடவுள் திங்களாகிய நிலா மலர்ந்தது என்று பாடுகிறான்.

இயற்கை நிகழ்வுகளைக் கதைமாந்தர்களுடன் ஒப்பிட்டு, தற்குறிப்பேற்றமாகக் கூறிச் செல்கிறார்.

கடவுள் வாழ்த்து

வால்மீகியாரிடமிருந்து கம்பன் தெய்வ வாழ்த்தில் வேறுபடுகிறான். ஒவ்வொரு காண்டத்துக்கும் தனித்தனிக் கடவுள் வாழ்த்துப்பாடல்களை அமைத்துள்ளான். இதில் மிகச் சிறப்பாகச் சொல்லப்படும் தோத்திரப் பகுதிகள் மூன்று.

1. விராதன் துதி
2. கவந்தன் துதி
3. கருடன் துதி

இத்தகைய துதி வால்மீகி இராமாயணத்தில் இல்லை. கம்பனுக்கு மட்டுமே இப்பெருமை உண்டு என்று நிறுவுகிறார் ஆசிரியர் ரவி. இதனை நாமும் சொல்லி வாழ்வில் நலம் பல பெற்று ஏற்றமடைவோம் என்று கூறி "அவனே கவிச்சக்கரவர்த்தி" என்ற கட்டுரைத் தொகுப்பை முடித்துள்ளார்.

சொன்னதும் சொல்லாததும் என்ற நூலிலுள்ள கட்டுரையைப் படிக்கின்றபோது சில கருத்துகளைப் புரிந்து கொள்ள முடிந்தது.

1. வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்படாத செய்திகளைக் கம்பன் எடுத்துரைத்துள்ளான்.

2. வால்மீகி உரைக்காத சொல் சிக்கனம், சொல்லாளுமை கம்பனில் காணமுடிகின்றது.

3. தனிச்சிறப்பு வாய்ந்த மனிதனான இராமனைக் கடவுள் நிலையில் கம்பன் பார்த்துள்ளான்.

4. பிரம்மதேவன் ஜாம்பவானாகவும், மற்ற தேவர்களின் படைப்புகளையும் சொன்ன வால்மீகி குகன், அனுமன் பற்றி சூசகமாகக் குறிப்பிட்டார். ஆனால் கம்பனோ குகனை முருகனாகவும், அனுமனை சிவபெருமானாகவும் வாயு தேவனின் மகனாகவும் குறிப்பிட்டு சுந்தர காண்டத்தின் நாயகனாக கம்ப வடிவமைத்துள்ளான்.

5. ராம நாமம் மற்றும் நோக்கு, இயற்கை நிகழ்வுகளைக் கதை நிகழ்ச்சியோடு இணைத்துச் சொல்லப்பட்ட சொல்லாட்சித் திறன் சிறப்பாக எடுத்துச்சொல்லப்பட்டுள்ளது.

கம்பன் சொல்லால், வருணனையால், கற்பனை ஆற்றலால், சொல் சிக்கனத்தால், சொல்லாளுமையால் "அவனே கவிச்சக்கரவர்த்தி" என்று நிறுவுவது ஆசிரியர் கம்பன் மீது கொண்ட தணியாத காதலை வெளிப்படுத்துகிறது.

❖

அகண்ட வெளியில் அகத்தைத் தேடும் வானவில் கே.ரவியின் படைப்பாளுமை

•

முனைவர்.ர.நித்யா
தமிழ் உதவிப்பேராசிரியர் ஸ்ரீ கிருஷ்ணா
கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை – 08

ஒளியும் உணர்வுகளின் வெம்மையும் இவர் கவிதைகளில் பிரதிப்பலிக்கின்றன. கவிஞன் தன்னை கவிப்பித்தன் என்று கூறும் கூற்றை மெய்ப்பிக்கும் கவிதை வரிகள் இவருக்கே உரியதாயின . அகண்ட வெளியில் அகத்தைத் தேடும் படைப்புகளால் கவிஞரின் பார்வையில் 'நிலா' என்ற கருப்பொருள் உருவெடுத்துள்ளது .என் கவிதைகளின் பெரும்பகுதியை களவு கொண்டது நிலா என்கிறார் கவிஞர். நிலாவினை இவ்வளவு அழகாக யாரும் ரசிக்க முடியாது. மானுட இருப்பிடமாய் அண்டத்தை மட்டும் ரசிக்க மனம் இடம் கொடுக்கவில்லை. அண்டச் சூழலில் நடைபெறும் முரண்பாடுகளையும் சமூக அக்கறையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆய்வு நோக்கம்

தன் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளுக்கு இடையே தான் ரசித்த தான் கண்ட இந்த அண்டவெளி பகுதி அகண்ட

பார்வையில் கவிதையாக்குகிறார். இயற்கையின் ரசிகனாய் தன்னை அறிமுகம் செய்யும் கவிஞன் அண்டவெளியில் அகத்தைத் தேடும் படைப்பாளுமை இக்கட்டுரை வெளிக்கொணருகிறது.

உற்றுப்பார் ஒரு கணமே போதும்
வெட்டவெளியில் பற்றி எரியும்
புரண்டு படுக்கும் பூமித்தாய்க்கு
புதிய கனவுகள் தோன்றும் நேரம்...

இதுதான் சமயம் இதயம் திறக்க என்று மனம் திறக்கிறார் கவிஞர். அகத்தில் கவிதைகள் இப்படித்தான் வந்து போகுமா? என்ற வினாவிற்கு விடையாக மனிதர்கள் வருவார்கள். போவார்கள் .. கவிதை வரும் போகாது என்று விடை கூறுகிறார்.

"பல்லாயிரம் பல்லாயிரம் கோடியண்டங்கள்
எல்லாத்திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது
சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்.."

என்ற பாரதியின் வாக்கினை மெய்ப்பிக்க கவிஞரின் பார்வையில் அண்ட காட்சிகள் கவிதையாக மெய்யுருவம் பெருகின்றன.

ஆய்வு மூலங்கள்

வானவில் கே.ரவி அவர்களின் படைப்புகளில்' உன்னோடு நான்' எனும் கவிதை நூலில் தன் ஆழ்மன வெளிப்பாட்டினை தன் அன்றாட வாழ்வுகளுக்கு இடையே ரசித்து எழுதிய கவிதை தொகுப்புகள் ஆய்வு மூலமாகும்.

துணை ஆய்வு ஆதாரங்கள்

ஆய்வுப்பொருள் குறித்த வானவில் கே.ரவியின் அவர்களின் படைப்புகள், கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் ஆகியன துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

பகுப்புமுறை, விளக்கமுறை, ஒப்பீட்டுமுறை ஆகியவை ஆய்வு அணுகுமுறைகள் ஆகும்.

அகம் - புறம் - அண்டம்

மனிதனின் உள்ளம் ஓர் பன்முகப் புதிர் போன்றது. இப்புதிருக்கானத் தேடலைத் தொடங்கியவர்கள் கிரேக்கத் தத்துவவாதிகளே ஆவார். உளவியல் என்ற ஆங்கில வார்த்தையேக் கிரேக்க மொழிலிருந்துப் பெறப்பட்டதே ஆகும். "இரு கிரேக்க வார்த்தைகள் கலந்து உருவாகிய சொல்தான் உளவியல் அல்லது மனவியல்(மனம் பற்றிய அறிவியல்) என்பதாகும்.

"எண்ணத்தால் உள்ளம்" என்பது தத்துவம்."உள்ளத்தால் எண்ணம் என்பது அறிவியல். இரண்டையும் மேலோட்டமாகப் பார்த்தால் முரண்பட்டதாகவே தெரியும். ஆனால் ஒன்று மற்றொன்றைச் சார்ந்தே உள்ளது எனலாம்.

மனிதனின் தொடக்கக் காலச் சிந்தனைகள் இயற்கைப் பற்றியதாகவே இருந்தது. தத்துவவியலாளர்களின் சிந்தனையும் இதுவே. மனிதன் இயற்கை மீதுக் கொண்ட அச்சமே அவனைச் சிந்திக்கத் தூண்டியது எனலாம். சிந்தனைகளின் முன்னோடியாக ஊகங்கள் தோன்றின. ஊகங்கள் நீருபிக்கப்பட்டால் அறிவியல் என்றானது.

அகம் புறம் என்பன காரணப்பெயர். அகப் பொருளாவது" நுகர்ச்சியாகலான் அதனான ஆன பயன் தானே அறிதயின் அகம் "என்றார். புறப் பொருளாவது "மறஞ் செய்தலும் அறஞ் செய்தலும் ஆகலான் அவற்றான் ஆன பயன் பிறர்க்குப் புலனாதயின் புறம்" என்றார் என்று இளம்பூரணர் விளக்குகிறார். அதாவது தானே அறிதல் பிறர் அதன் என்ற அடிப்படையில் அகம் புறம் வேறுபடுவதாகக் கூறுகிறார்.

ஆற்றல் அறத்துக்கே அர்ப்பணிப் பீர்உலகு
தோற்றம் எடுக்கும் தொடர்பறுப் பீர்அகத்தை
ஆற்றுப் படுத்தி அமைவீர் உயிர்மூச்சுக்
காற்றை ஒடுக்கிக் கரைசேரும் நற்கதிக்கேஞ்

என்று கவிஞர் அகத்தை ஆற்றுப்படுத்தும் உயிர் மூச்சான காற்றை ஒழுங்குபடுத்தி தியான நிலை செல்வோம் என்கிறார். கவிஞர் தியானத்தில் இருந்து எழும்பொதெல்லாம் கவிதை உதித்துக் கொண்டிருந்தது.

உயிர்வீணை மீட்ட வந்தேன்
உருகத் தெரிந்த உள்ளங்கள் தோறும்
ஒருகோடி தீபங்கள் ஏற்றவந்தேன்

பருகத் துடிக்கும் செவியெங்கும் நாதப்
பரவசம் விளைவித்துப் பாடவந்தேன்
பாடவந்தேன்

ஏட்டுச் சுவடிகளில் ஏழிசையில் ஏகாந்தப்
பூட்டை உடைத்துப் புகுந்து புலனழிந்து
மீட்க முயன்று மிகமுயன்று யாருமே
பாட்டுச் சுவடு பதிந்த கனவுகளை
கேட்க முடியாமல் கிளர்ந்தெழுந்த மௌனத்தின்
ஆழத்தி லேபோய் அமர்ந்து சிலையாகி
வாழத் தெரிந்துகொண்டேன்ஞ்

தீயின்கண் ஓடும் பொன்னுக்கு அது சுடத் தன்னோடு கலந்தக் குற்றம் நீங்கி ஒளி மிகுமாறு போல, நலம் செய்ய வல்லார்க்கு அதனால் வரும் துன்பம் வருத்தத் தம்மொடு கலந்தப் பாவம் நீங்கி ஞானம் மிகும் என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க,

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குறள் - 267)

தியானத்தில் இருந்து மீண்டு "நானே என் பாட்டின் நடை" என்று ஏட்டில் உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் கவிதையாய் படைக்கிறார்.

அண்டம் என்பது வெளி மற்றும் காலம் ஆகியவற்றின் முழுமையாகும். அனைத்து வடிவத்திலுள்ள பருப்பொருள், ஆற்றல், உந்தம், இயற்பியல் விதிகள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் மாறிலிகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாக வரையறுக்கப்படுகிறது. கவிஞரின் இந்த அண்டவெளி பார்வையானது முற்றிலும் வேறுபட்டதாகவே அமைகிறது.

வானம் எங்கும் பரந்த வெள்ளமாய்
எறும்புகளோடு செல்லும் உள்ளமாய்
அட!

நான் மட்டுமா இந்த
அண்டப் பெருவெளி அனைத்திலும்
நான் மட்டுமா

கவிஞர் தன்னை இயற்கையின் ரசிகனாய் அடையாளப்படுத்துகிறார். கவிஞருக்கு இயற்கையிலிருந்து தன்னை பிரித்தாள மனம் கொள்ளவில்லை. அண்ட வெளிப்பகுதியில் தனியொருவனாய் உள் ஊக்கத்துடன் வெளிப்படும் கவிதைகள் எல்லாமே வானத்து மேகங்கள் போல் உலகைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறும் கூற்று அவரின் படைப்பாளுமையினை நன்கு புலப்படுத்தும்.

வார்த்தைகளால் ஓர் உலகம் படைத்தேன்
வாழ்க்கை என்றேன் அதில் மூழ்கிவிட்டேன்
அந்த

உலகத்திலே நான் எனக்கொரு வடிவம்
செய்ய நினைத்தேன் செயலிழந்தேன்
நிலவொளி கொண்டு கதிரவனைத்
தேடுகின்றேன் எங்கும் ஓடுகின்றேன்...

மேற்கண்ட கவிதை வரிகள் அந்த அகத்தின் தேடலை மெய்ப்பிக்கும் . வார்த்தைகளால் கவிதை படைக்கும் கவிஞர் தன் தேடலுக்கான விடை காணும் முயற்சியில் வெற்றிக் கண்டவர்.

பிளோட்டாவின் தத்துவம்

உடலையும், உள்ளத்தையும் பிரித்துணர்த்திய முதல்வர் என்பர். உடலைப் போலவே உள்ளத்திற்கும் இயக்கங்கள் உள்ளன என்று கண்டறிந்தவர். இவரின் கருத்துப்படிப் பொருளும் அப்பொருளுக்குரிய அழகும் வேறானவை. பொருள் என்பது புறவுலகில் இருப்பது. அழகு என்பது உள்ளத்துணர்வு என்பதே இவரின் வாதம். உள்ளமும் , பொருளும் வெவ்வேறானவை. இடத்திற்குத் தகுந்தாற்போல் இவை தமக்குள் ஒன்றிச் செயல்படுகின்றது என்பது இவரின் கருத்தாகும். அவ்வாறு ஒன்றி செயல் படும் போதே கவிதைகள் பிறக்கின்றன என்று கவிஞர் தம் படைப்பாளுமையில் வெளிகொணருகிறார். அதற்கு உதாரணமாக,

ஒருதிரி போதும் விளக்கேற்றி வைக்க
ஒருபொறி போதும் ஒருகா டழிக்க
ஒருவரி சின்னஞ் சிறுவரி உள்ளே
கருவம் அழிக்கும் கவிதையாய் ஆகாதஞ்.

என்ற நோயின் வேரை வெட்டிச் சாய்க்கும் நம்பிக்கையைக் கொடுக்கும் கவிஞனின் கவிதை வரிகள் .

ஐம்பூதங்களிலும் படைப்பாளுமையின் வெளிப்பாடு

ஒரு செயலைச் செய்யக் கூடியதாக ஆக்கும் ஆற்றல், திறன் இவையே சக்தியாகும். இயற்கையில் காணும் பொருள்களினூடே சக்தி கலந்துள்ளது. இதனால் தான் பாரதி,

இயற்கையென் றுனையுரைப்பார் - சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள் என்றிசைப்பார்
செய்கையின் சக்தியென்பார் - உயிர்த்
தீயென்பர், அறிவென்பர், ஈசனென்பர் *(சிவசக்தி - 1)*

என்று சக்தியை இயற்கை, ஐம்பூதம், தீ, அறிவு, கடவுள், வானம், பூமி, நான்கு திசைகள் ஆகிய அனைத்திலும் பார்க்கிறார். கவிஞரின் அக நோக்கும் மகாகவி பாரதியின் சக்திப் பிழம்பை போன்று உருவெடுத்துள்ளது.

ஏட்டில் எழுத்தில் இனிவரப் போகும்
எழுச்சிகள் எல்லாம் பாரதி

என்ற தேவநாரயணனின் கவிதை வரிகளை மெய்ப்பிக்கும் சாட்கிகளாக அமைந்தன. கவிஞரின் இந்த நோக்கு அண்டத்தை தன் அகக் கண்ணால் உற்று நோக்கும் சாட்சிகள் .

நெருப்புக்கு நீர்தந் தணைக்கலாம் அன்றி
நெருப்பை வளியால் பெருக்கலாம் உள்ளே
நெருப்பை விதைக்க நிலம்தரலாம் தீயில்
உருவாரம் செய்துவெளி ஊதலாம் அன்றேஞ்

ஐம்பூதங்களை போற்றிப் பாடும் வரிகள் உற்று நோக்கத்தக்கது.

குஞ்சென்ப தாலே குளிருமா
அக்கினி நஞ்சோ அமுதோ பருகி
நயந்திடு நெஞ்சோ டொருமுறை

நீயே படித்திடு பஞ்சபூ தங்களும்
வந்து பணியவே.

ஐம்பூதங்களையும் தன் கவிதையின் கருப்பொருளாக கொண்டு இயற்கை அன்னையின் பிறப்பிடத்தில் தான் கவிதை உருவாகுகிறது என்றக் கூற்றை மெய்ப்பிக்கின்றார்.

படைப்பாளரின் சமூக வெளிப்பாடு

மனிதனை தெய்வாக்கும் மகத்துவம் கவிதைக்கு உண்டு என்று கூறுகிறார் கவிஞர். அரிசி வாங்க காசு இல்லாத ஒருவனின் வறுமையில் முகமலர்ந்து சிரிக்கும் சிரிப்பில் அழகைக் கண்டார். அவனது உணவைத் திருடியது யார்? என்று கவிஞரின் சமூகத்தின் மீதானச் சாடல்கள் அனைவரையும் சிந்திக்க வைக்கும்.

பூமத்திய ரேகையென்றால் புரிந்துகொள்ள முடிகிறது
வானவில் கூடத் தெளிவாகத் தெரிகிறது - ஆனால்
வறுமைக் கோடு வரைந்தவன் யாரு

அரிசிவாங்கக் காசிலாத வறுமையிலே கூட
அரைநிமிடம் முகமலர்ந்து சிரிப்பவர்கள் உண்டே
சிரிப்பெல்லாம் முத்துமுத்துப் பச்சரிசிச் சோறு
தின்னஉண வில்லையென்றால் திருடியவன் யாரு
வறுமைக் கோடு வரைந்தவன் யாரு...

தொகுப்புரை

கவிஞன் தான் காலையில் எழுந்து தன் கண்ணனின் திருமுகப்படத்தை காணும் போது ஒவ்வொரு நாளும் புதியதாய் தன் மனக்கண்ணில் உதிக்கும் கவிதைகள் தொடங்கித் தன் அன்றாட வேலைப்பளுவிற்கு இடையில் தான் கண்ட அனுபவங்களை எழுதுகோல் கொண்டு கவிதைப் படைக்கும் அத்தருணம் படைப்பாளனின் ஆளுமை வெளிப்பாடு அகண்ட வெளியில் அகத்தை உற்று நோக்கும் பார்வைகளாய் புலப்படுகின்றன. மனிதனின் எண்ணங்களை முகச்சுருக்கங்களுக்கு இடையே கண்டு அகமனதில் தோன்றிய அக்னிப் பிளம்பை கவிதையாக்குகிறார். கவிதையினை நீ ரசிகனோ? , ரசிகையோ? ரசிகா' என்று பொதுவில் அழைப்பதிலிருந்து அதனை அறிந்துக்

கொள்ளலாம். என் அகவாழ்வின் அடிச்சுமையில் இருக்கும் கவிதையை உனக்கு மட்டும் சொல்கிறேன் அந்தரங்கத்தை அலங்கரிக்க வந்த தீபங்கள் என்று புத்தகத்தின் நுழைவாசலில் குறிப்பிடுகிறார்.

இன்று மட்டும் என்னோடு நீ
பிறகு என்றென்றும் உன்னோடு நான்!

என்ற புத்தகத்தில் கவிஞனின் படைப்பாளுமை இயற்கை வருணனைகளில் இதயத்தை தோயவிடும். இக்கவிஞனின் உருவகச் சிறப்பிற்கும், உவமை நலத்திற்கும் பல வரிகள் சான்று பகரும்.

உசாத்துணை நூல்கள்

வானவில் கே.ரவி, உன்னோடு நான் - கவிதைத் தொகுப்பு, நிவேதா பதிப்பகம், விருகம்பாக்கம், சென்னை - 92.

எஸ்.கௌமாரீஸ்வரி திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை -14.

அப்துல்-நஹீம்- தமிழில் வெற்றியும் மகிழ்ச்சியும்

ஜேம்ஸ் அல்லன் யுனிவர்ஸல் பப்ளிவுர்ஸ்ரூபுக் செல்லர்ஸ் 25, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001, நான்காம் பதிப்பு - 1987.

தமிழண்ணல். ஆய்வியல் அறிமுகம்

இலக்குமணன்.எம்.எஸ் செல்லப்பா பதிப்பகம் 48, தானப்ப முதலி தெரு மதுரை - 625 001

இராமலிங்கம் பிள்ளை உரை. சாரதா பதிப்பகம், சாந்தி அடுக்கம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் இராயப்பேட்டை, சென்னை-14

சுப்புரெட்டியார். ந. கல்வி உளவியல் கோட்பாடுகள்
டாக்டர். மணிவாசகர் பதிப்பகம் லிங்கி தெரு,சென்னஒ-01 முதற்பதிப்பு -1989

❖

வானவில் கே. ரவியின் 'சொன்னதும் சொல்லாததும்'

•

முனைவர் வெ.நிர்மலா
தமிழ் உதவிப்பேராசிரியர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி
அரசுக் கலைக்கல்லூரி, திருத்தணி–631209,
திருவள்ளூர் மாவட்டம்.

*வா*னவில் கே. ரவி, சென்னை உயர்நீதிமன்றத்தில் புகழ்பெற்ற வழக்குரைஞர். சிறந்த கவிஞருமாவார்! இளவயதிலேயே, இவர் 'மாணவரிசம்' என்ற கையெழுத்து இதழை நடத்தியவர். நாடகங்கள் எழுதித் தயாரித்து, நடித்தும் இருக்கிறார். திரைப்படங்களுக்கு இசை அமைத்திருக்கிறார். இசை ஆல்பங்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். 'நமக்குத் தொழில் கவிதை', 'உன்னோடு நான்', 'மின்னற் சுவை', 'சொற்களுக்குள் ஏறிக்கொள்', 'இருபதாம் நூற்றாண்டு இயற்பியல் வரலாறு', வள்ளுவரின் வாயிலில்' போன்ற இவரது நூல்கள் குறிப்பிடத்தகுந்தன.

ஆங்கிலத்திலும் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய Justice Vs Natural Justice', 'Law, Logic and Liberty' போன்ற நூல்களை எழுதியிருக்கிறார். ஆண்டுதோறும் பாரதிக்கு 'ஜதிப்பல்லக்கு' எடுத்துப் பிறந்தநாள் விழா கொண்டாடும் இவர் 'வானவில்' பண்பாட்டு மையத்தின் நிறுவனர். தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை உள்ளவர். எனக்குக் கொடுத்திருக்கின்ற தலைப்பு, 'சொன்னதும் சொல்லாததும்'. இக்கட்டுரையில் 'கவிதைக்குப் பொய் அழகு' என்ற ஒன்றினைத் தவிர, மற்ற அனைத்தும்

முகநூலில் 2015 முதல் 2019 வரை பல்வேறு சூழலில் அவ்வப்போது எழுதிப் பதிவு செய்த கட்டுரைகள் என்று இந்நூலின் முன்னுரையில் கவிஞர் ரவி குறிப்பிட்டுள்ளார். பல்துறை வித்தகர். பல்வேறு கோணங்களில் இலக்கியத்தைக் கண்டு தம் எண்ணங்களைப் பதிவு செய்பவர் இவர். இக்கட்டுரையில் இலக்கியம் சார்ந்தவை மட்டுமே பதிவு செய்துள்ளதாகக் கூறுகிறார்.

"எனது கருத்துகள் மட்டுமே சரி என்ற நோக்கில் இக்கட்டுரைகளை நான் எழுதவில்லை. இப்படியும் சிந்திக்கலாமே என்று நண்பர்களை அழைக்கும் முயற்சியே இவை. மாற்றுக் கருத்துகளையும் கருதத் தயாராக இருக்கும் திறந்த மனத்தோடு தான் நான் இந்தக் கட்டுரைகளை எழுதினேன். இன்றும் அப்படியே இருக்கிறேன் என்றும் அப்படியே இருக்க விரும்புகிறேன்!" என்று குறிப்பிட்டுள்ளார் கவிஞர் ரவி.

அவனே கவிச் சக்கரவர்த்தி

கவிஞர் ரவி அவர்களின் இக்கட்டுரைத் தொகுதியை பொற்றாமரை இலக்கிய அமைப்பின் கூட்டத்தில் கம்பராமாயணம் குறித்து முனைவர். தெ.ஞானசுந்தரம் அவர்கள் உரையாற்றிய சொற்பொழிவின் உள்ளூக்கத்தில் மலர்ந்தது என்கிறார். இக்கட்டுரைத் தொகுப்பு உள்ளே 9 கட்டுரைகள் உள்ளன. முதலாவதாக, 'மானிடம் வென்றது அன்றே' என்னும் கட்டுரையில், வால்மீகி காட்டும் இராமனுக்கும், கம்பன் காட்டும் இராமனுக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்காட்டுகிறார். வால்மீகி காட்டும் இராமன் ஓர் உத்தம மனிதன். கம்பன் காட்டும் இராமனோ கடவுள். இரண்டு இராமர்களா என்ற கேள்வியை எழுப்புகிறார் கவிஞர். சிவனொடும் பிரம்மனொடும் இந்திராதி தேவர்கள் திருப்பாற் கடலில் இருந்த பெருமானிடம் முறையிட்டதும், தந்த வாக்கை நிறைவேற்ற, அவர் மானிடனாக, கோசலையின் மணி வயிற்றில் கர்ப்ப வாசம் செய்யப் புகுந்த அன்றே மானிடம் வென்றது என்பது பொருள் என்கிறார் கவிஞர். மானிடப் பூச்சி என்று கேவலமாக நினைத்து, இராவணன் வரம் கேட்கும்போது மனிதனை அதிலிருந்து ஒதுக்கிய இராவணனின் அகந்தையைத் தகர்த்து மானுடம் வெற்றி பெற்றது. இராமாவதாரம் நடைபெற்ற அன்றே மானுடம் வென்றுவிட்டது; இராவணவதம் நடந்தேறிய நாளில்

இல்லை! இதனைக் கம்பர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் என்று கவிஞர் ரவி அவர்கள் பதிவு செய்கிறார். இதனால் கம்பன் கவிச்சக்கரவர்த்தி என்பதை நிறுவும் பல சான்றுகளில் ஒன்றினைக் கண்டோம். இன்னும் இதுபோன்று நிறைய இருக்கின்றன என்கிறார் கவிஞர்.

இராம நாமம்

இக்கட்டுரையில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியே மந்திரங்கள் உண்டு. ஆனால், இராம மந்திரம் என்பது அவனது பெயரே! இராம நாமமே, இராம மந்திரமாகும்! இராம மந்திரத்தின் பெருமையைக் கம்பன், வாலி வதத்தில் பேசுகிறார். தன்னைத் துளைத்துக் கொன்று கொண்டிருக்கும் கணையை, வாலி உருவி எடுத்து, உற்று நோக்கி, அதை விடுத்தவன் யார் என்பதைக் கண்டு கொள்கிறான் என்பது கம்பனின் துணிவு என்கிறார் கவிஞர்.

"மும்மைசால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை.

கம்பராமாயணம் ஒரு காவியம் மட்டுமன்று, மந்திர ஸ்வரூபமான மறைநூலும் என்பது தெளிவாகிறது. காவியப் போக்கில் மந்திரம், தந்திரம், பக்தி, சந்தம், கவிச்சுவை என பலவிதமான ஆளுமைகளையும் புலப்படுத்துவதால் தான், கம்பனைக் 'கவிச்சக்கரவர்த்தி' என்று இங்கும் பதிவு செய்கிறார் கவிஞர்.

அறமும் விதியும்

சீதாபிராட்டியின் வாயிலாகக் கம்பன் காட்டும் நம்பிக்கைக்கு அடையாளமாக அசோக வனத்தில், துயரமே வடிவமாக வீற்றிருக்கும் அன்னை, அத்துணை துயரத்திற்கு நடுவிலும் நம்பிக்கை இழக்காமல் காத்திருந்தாள் என்று அவர் குறிப்பிடுவதனைக் கூறலாம்! மனிதனின் அறம் தவறிய செயலுக்கு, விதியைக் காரணம் காட்டக்கூடாது என்பது அவர் விடுக்கும் எச்சரிக்கை. இதுவே, சீதாபிராட்டியின் வாயிலாக கம்பர் காட்டும் நம்பிக்கை! இராமகாதையின் தந்திரமாவது, தீமை மிதமிஞ்சிப்போகும்போது இறைவன் அவதரித்து நீதியை நிலை நாட்டுவான் என்ற நம்பிக்கை. விதி ஒருபோதும் நீதியை நிலைநாட்டத் தடையாக அமையாது என்ற நம்பிக்கை,

மனிதனாலேயே விதி வழிநடந்து நீதியை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கை. இதுவே மானுடத்தின் வெற்றி! அந்த நம்பிக்கைதான், படைக்கும் காதையின் தந்திரமாக, அக்கதை முழுவதையும் நெய்து முடிக்கும் தறியாக, ஊடுபாவி நிற்குமாறு காப்பியம் படைக்கக் கவிச்சக்கரவர்த்தியால்தான் முடியும்; வேறு யாராலும் படைக்க முடியாது! என்று ஆணித்தரமாகப் பதிவு செய்கிறார் கவிஞர்.

கேட்டதும் பார்த்ததும்

இராமனுடைய முகம் எந்த நிலையிலும் மாறாத சித்திரத் தாமரை முகம் என்கிறார் கவிஞர். முடிசூடிக்கொண்டு நாட்டை ஆள வேண்டும் என்று சொன்னபோதும், சற்று நேரத்தில் முடிசூடவிருக்கும் இராமனைக் கைகேயி அழைத்து, "நாட்டை இனி பரதனே ஆளட்டும், நீ கானகம் செல், இது மன்னவன் கட்டளை!" என்று கூறியபோதும் இராமனின் முகம் அன்று மலர்ந்த தாமரை போல் இருந்தது என்கிறான் கம்பன். அவன் எப்படிப்பட்டதொரு களிப்புடன் இருந்தான் என்பதற்கு, கவிஞர் உருள்கிற சக்கரம் கொண்ட வண்டியில், வண்டிக்கு உடையவனால் கட்டப்பட்ட காளையை, இரக்கம் மிகுந்த யாரோ அவிழ்த்து விட்டதும், கட்டறுந்த களிப்புடன் காளை எப்படி இருக்குமோ அப்படியே கைகேயியின் உரை கேட்டதும் இராமன் களிப்புற்றான் என்கிறான் கம்பன். அதனால், அவன் செப்பருங்குணத்தவன், விசனத்திற்கு வசப்படாதவன், இதுதான், பார்த்துப் பார்த்து எழுதும் கம்பரின் காப்பியச் சிறப்பு. அவரே கவிச்சக்கரவர்த்தி என்று இக்கட்டுரையிலும் நிரூபித்துக் காட்டுகிறார் கவிஞர்.

சொன்னதும் சொல்லாததும்

கவிஞன் எப்படிப்பட்டவன் என்பதற்கும் மற்றும் மாகவிஞன் என்பதற்கும் இரு வரிகளில் விளக்குகிறார் கவிஞர்.

சொல்வதொரு பாதியவன் சொல்வதில்லை மீதி
சொல்லியதே சொல்லாததை உணர்த்தும் நீதி

என்பது மாகவிஞனுக்கு இலக்கணம் என்று எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு நூறு மதிப்பெண்ணைப் பெறுகிறார் கம்பன் என்று கவிஞர் கூறுகிறார். சில எடுத்துக்காட்டுகளைக் கூறியிருக்கிறார் '

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்.

இலங்கைத் தீவு என்றுதான் நாம் அறிவோம்! இலங்கை வெற்பு என்று அனுமன் வாயிலாகக் கம்பன் சொல்லியிருக்கிறார். வெற்பு என்றால் மலை. வால்மீகி இராமயணத்தில் பாண்டிய நாட்டைக் கடந்து, மகேந்திர மலைப் பக்கம் காணக்கூடிய மலைகள் பலவும் சூழ்ந்த ஒரு தீவாக, இலங்கை இருந்த செய்தியும், முன்பொரு காலத்தில், மலையாக நிமிர்ந்து நின்று கடலில் அமுங்கிப்போய் அது தீவாகிவிட்ட செய்தியும், பிராட்டியைத் தேடப் புறப்படும் வானர வீரர்களுக்கு இராமபிரானே சொல்வதாக அமைந்துள்ளது. இலங்கைத் தீவு பற்றி வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்ட செய்தியை, கம்பன் இலங்கை வெற்பு என்று ஒரு சொற்றொடரில் சொல்லியும் சொல்லாமலும் விடுகிறார் என்கிறார் கவிஞர். குகனைப் பற்றிக் கூறும்போது, பிரம்ம தேவன் வணங்கும் குகன் என்று சொன்னது சரியா என்ற கேள்வியைக் கேட்கிறார் கவிஞர். மும்மூர்த்திகளில் தன்னைத் தவிர மற்றை இருவரை மட்டுமன்றி இன்னொருவரையும் பிரம்ம தேவன் வணங்கியதாகப் புராணம் சொல்கிறது. அந்த இன்னொருவர் யார்? அவர் முருகப்பெருமானே ஆவார்! முருகப்பெருமானுக்கு பிரணவ மந்திரத்தின் தகுந்த விடை சொல்ல முடியாமல் அவர் கையால் குட்டுப்பட்டவர் பிரம்ம தேவன்! பிரம்ம தேவனையே சிறை வைத்தவர் முருகப்பெருமான்! மலர் இருந்த அந்தணனால் வணங்கப்பெற வேண்டுமானால், குகன் அந்த முருகக் கடவுளின் அம்சமாகவே இருக்க வேண்டும் என்கிறார். சிவன், இந்திரன் முதலான தேவர்கள் யார் யார், இராம காதையில் என்னென்ன வேடம் பூண்டு வந்தனர் என்பதை விவரமாக, திருஅவதாரப் படலத்தில் சொன்னபோது, இந்த இரகசியத்தை மட்டும் கம்பன் ஏன் சொல்லவில்லை என்ற கேள்வியைக் கேட்கிறார் கவிஞர். "சொல்லியதே சொல்லாததை உணர்த்தும் நீதி', புரிகிறதா, அதனால்தான் சாமி, கம்பன் என்ற மானிடனை கவிச்சக்கரவர்த்தி என்று போற்றுகின்றோம்!" என்கிறார் கவிஞர்.

அறிவும் அநுபூதியும்

கம்பனிடம் மிகுந்திருந்த பக்திச் சுவையைப் பதியவைப்பது சுந்தர காண்டமே! அதுவே, காப்பியத்தின் உயிர்நாடியான பகுதி

என்று சொல்லப்படுகிறது. இராமாயணத்தின் மிக அழகான பகுதி என்ற பொருளில் அதற்குச் சுந்தர காண்டம் என்ற பெயரை வால்மீகி சூட்டினார் என்கிறார் கவிஞர். வால்மீகி சொல்லாத ஒரு செய்தியைக் கம்பன் கூறியிருப்பதாகக் கவிஞர் சொல்வது என்னவென்றால், இராமகாதையில் இராமனுக்குப் பக்கபலமாக இருந்து அனுமனாகப் பேருதவி செய்தவர் சிவபெருமானே! அதனால்தான், காப்பியத்தின் நிறைவில் இராமபிரான் அனுமனிடம் நெகிழ்ந்து பேசுகிறார். சிவனே அனுமன் என்பதை வால்மீகி வேறு காரணத்தாலோ அதைச் சொல்லவில்லை. கம்பன் அதனைச் சொல்லிவிடுகிறார். அதைச் சொல்லாமல் விட்டால், சுந்தர காண்டம் என்பதன் பெயர்க் காரணமே தெரியாமல் போய்விடுமோ என நினைத்து அவர், அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கக்கூடும் என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறார் கவிஞர். வால்மீகி சொல்லாததைச் சொல்லி விளக்கும் திறத்தாலும், கம்பன், 'கவிச்சக்கரவர்த்தி' என்று இக்கட்டுரையிலும் பதிவு செய்கிறார் கவிஞர். அனுமனாகிய சுந்தரனே, தியாகராஜராக வந்துதித்தார். அவர் பாடிய மொழி, சுந்தரத் தெலுங்கு. அறிவும் அநுபூதியும் இயைந்து கவிபடைப்பவர்களே மகாகவிகள். அதனால் கம்பன் ஒரு மகாகவிதான் என்கிறார் கவிஞர்.

வடிவமும் உருவமும்

கவிஞனுக்குச் சொல் ஆளுமையும் சொற்கட்டுக் கோப்பும் இன்றியமையாதவை என்கிறார். கம்பன் இந்த இரண்டிலும் சிறந்து விளங்குவதாகக் கவிஞர் கூறுகிறார். 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' – இவ்வரியை உரையாசிரியர்கள் பலரும் வியந்து போற்றியுள்ளனர். இப்படி பல எடுத்துக்காட்டுகள் கம்பன் காப்பியத்தில் சொல்லலாம். கம்பன் தன் சொல் ஆளுமையைப் பயன்படுத்தி அதன்மூலம் விளங்கவைக்கும் ஒரு பேருண்மையைப் புரிந்துகொள்வதே நம்முடைய நோக்கம் என்கிறார் கவிஞர். அவதார மர்மத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சி, அப்படியொரு முயற்சியைத்தான் கம்பர் மேற்கொண்டார். அழியும் உடலுக்குள் அழியாத ஜோதி வடிவமான ஆன்மா தான் பரப்பிரம்மம் என்ற வேதாந்த சாரத்தைப் புரிந்துகொள்வது கைக்கூடலாமே என்கிறார் கவிஞர். சாதாரணக் கவிஞனா? கம்பன் ஒரு 'கவிச்சக்கரவர்த்தி' என்று மெய்ப்பிக்கிறார் கவிஞர்.

கதிரும் நிலவும்

கம்பன் கடைப்பிடிக்கும் இன்னுமொரு உத்தியைக் குறிப்பிடுகிறார் கவிஞர். கம்பர் தம் காவியத்தின் முக்கியக் கட்டங்களிலெல்லாம் வானில் நடக்கும் இயற்கை நிகழ்வுகளைத் தன் காப்பியப் போக்குக்கு ஏற்ற சித்திரமாகத் தீட்டிக் காட்டும் தற்குறிப்பேற்ற அணியைக் கையாள்கிறான் கம்பன். வானும், கதிரவனும், நிலவும் அவனுடைய காப்பியப் பாத்திரங்களாவே மாறிவிடுகின்றன. உயிரற்ற பொருள்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பொருள்களையும் உயிருள்ள பாத்திரங்களாகத் தன் காப்பியத்தில் உலவவிட்ட காரணத்தாலும் கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக உயர்ந்து நிற்கிறான். இந்த இடத்திலும் அதனை நிரூபிக்கிறார் கவிஞர்.

துதியே கதி

வால்மீகியில் இல்லாத சில பகுதிகளைக் கம்பன் தன் காவியத்தில் அமைக்கின்றான். தேவை கருதியும், தான் மேற்கொண்ட பொருள் கருதியும், குறிப்பாக, கம்பனின் காப்பியத்தில் மிகச் சிறப்பாகச் சொல்லப்படும் தோத்திரப் பகுதிகள் மூன்று. விராதன் துதி, கவுந்தன் துதி, கருடன் துதி. கம்பன் காப்பியத்தில் பாலகாண்டத்தில் முன்வரும் பாயிரப் பகுதியில் முதல் மூன்று பாடல்களும் கடவுள் வாழ்த்தெனக் கொள்ளலாம். அதன்பிறகு வரும் ஐந்து காண்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. மொத்தம் எட்டு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன. மேற்சொன்ன மூன்று துதிகளையும் கடவுள் வாழ்த்தென்றே கருதலாம். விராடன் துதியில் 24 பாடல்கள், கவுந்தன் துதியில் 8, கருடன் துதியில் 11 என மொத்தம் 51 கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கம்பனின் காப்பியத்தில் காண்கிறோம் என்று பட்டியலிட்டுக் காட்டுகின்றார் கவிஞர். கம்பனின் நோக்கம் தெளிவாகிறது, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட ஒரு காவியம் படைப்பதே அவன் நோக்கம். கம்பன் தந்துள்ள மூன்று துதிகளும் சிந்தை ஒன்றி மனமுருகி உரக்கப் பாராயணம் செய்ய வேண்டிய பாடல்கள். புரியக்கூடத் தேவை யில்லை. வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள், சொல்லச் சொல்ல இனிக்கும்! அண்டத்தின் ஓங்கார நாதமே, உயிரை ஊடுருவிப் போய் ஓயாமல் ஒலிக்கும் ஜோதி வடிவமே, அகக்கண்ணில்

ஒளிக்கும்! வியாக்கியானங்களையும், விளக்கங்களையும் ஓரங்கட்டிவிட்டுத் துதியைக் கதியாய்த் தொழுது நிற்போமே என்கிறார் கவிஞர்.

கம்பனின் அடைமொழிகள்

1. சொல்லின் செல்வன்

பாவலர் வரதராசனார் முகநூற் குழுவில் 'யார்கொலிச் சொல்லின் செல்வன்' என்ற பாடலை ஆராய்ந்து நல்லுரை பதிந்திருந்தார். அந்தப் பதிவைப் படித்துவிட்டு, கவிஞர் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அந்தப் பாடலை, இவர் வேறு கோணத்தில் அணுகியிருக்கிறார். அந்தப் பாடல்

இல்லாத உலகத் தெங்கும் ஈங்கவன் இசைகள் கூர..

இந்தப் பாடலின் களம், வாலிக்கு அஞ்சி மறைந்திருக்கும் சுக்ரீவன் தன் இருப்பிடம் நோக்கி இராமனும் இலக்குவனும் வரக்கண்டு, அவர்கள் வாலியின் ஆட்களோ என்ற ஐயத்தினாலும் அச்சத்தினாலும் ஒளிந்துகொள்கின்றான். அவ்வாறே அவனது வானர வீரர்களும் ஒளிந்துகொள்கிறார்கள். அனுமன் மட்டும் அச்சமின்றி வருவோர் முகக்குறி கண்டு, அவர்தம் நற்பண்பைத் தெளிந்து, மாணவ வடிவம் கொண்டு அவர்களை வணங்குகிறான். இராமன் அனுமனைப் பார்த்து நீ யார் என்று கேட்டதும் அனுமனும் தான் யார் என்று சொல்லிமுடித்த பிறகு, இலக்குவனிடம், இராமபிரான் 'யார்கொல் இச்சொல்லின் செல்வன்' என்று இன்னொரு முறை கேட்பது போல இப்பாடல் அமைகிறது. "வியப்பின் வெளிப்பாடே அன்றி, கேள்வி அன்று!" என்பது கவிஞரின் கருத்தாகும். இந்தப்பாடலில், மூன்று சொற்கள் முத்தாய்ப்பாக நிற்கின்றன. அவரின் நெஞ்சில் விசுவரூபம் எடுத்து வளர்ந்து நிற்கின்றன என்கிறார். சொல்லின் செல்வன் என்ற சொற்றொடரையும் விளக்கிக் காட்டுகிறார் கவிஞர்.

இராமநாமத்திற்கு மாற்றாக வேறு எதுவும் இல்லை என்பது அனுமனின் உறுதி என்று கம்பன் சொல்வதாகக் கவிஞர் கூறுகிறார். அனுமன் செய்யும் வீரதீர சாகசங்களுக்கெல்லாம் உறுதுணையாக அடிப்படையாக அமைவது இராம நாமமாகும்.

இராம மந்திரத்தின் மகிமையை முதலில் தெரிந்தவன் அனுமனே! அனுமனைப் பற்றி உள்ளுணர்வால் தெளிந்த இராமன், 'யார்கொல் இச்சொல்லின் செல்வன்!' என்று வியக்கிறான். வெறும் சொற்கள் செல்வமாகா. ஆனால், சர்வவல்லமைமிக்க எல்லா இடர்களையும் களையத்தக்க பிறவி நோய் தீர்க்கக்கூடிய இராமநாமமே செல்வம். அச்செல்வத்தை அபரிமிதமாகப் பெற்றவன் அனுமன் என்கிறார் கவிஞர். "அனுமன் ஏதோ பிரம்மச்சாரி என்று நினைத்துவிடாதே! இவன் இவ்வுலகுக்கெல்லாம் ஆணி. இவன் பெருமையைத் தெரிந்துகொண்டேன். பிறகு நீயும் உண்மையைக் காண்பாய்!" என்று இலக்குவனிடம் இராமன் அப்போதே சொல்லிவிடுகிறான் என்பதே கம்பச்சித்திரம். அனுமனுடைய சொல் திறம் மும்மூர்த்திகளுக்கும் கூட அரியது என்றும் இராமன் சொல்வதாக அமைகிறது அந்தக் காட்சி. அனுமன் சிவனே என்ற குறிப்பை பல இடங்களிலும் கம்பன் வெளிப்படுத்துகிறான். வெளிப்படையாகவே சுக்ரீவனிடம் சென்று, இராமபிரானுடைய வரவைச் சொன்ன அனுமன், களியாட்டம் போட்டதனை, ஆலம் உண்டவன் அன்று ஆடியதைப் போல், இன்று ஆடுகிறான்!" என்று பாடுகிறான் கம்பன். இந்த இடத்திலும் ஒரு கம்பன் 'கவிச்சக்கரவர்த்தி' என்பதை வெளிப்படையாகச் கூறியிருக்கிறார் கவிஞர்.

சிறியன சிந்தியாதான்

வாலிக்கு, கம்பன் தரும் ஓர் அடைமொழியாக அதிகமாகப் பேசப்படுவது, 'சிறியன சிந்தியாதான்' என்பதே அது! யாரால் தரப்படுகிறது என்றால், மறைந்து நின்று தன்னைக் கொன்றது எவ்வாறு தர்மமாகும் என்று வாதிட்டபிறகு, இராமன் எய்த அம்பில் இருந்த மூலமந்திரத்தை அடையாளம் கண்டுகொண்டு இராமனைத் துதித்தபிறகு, தன் தவறுகளை மன்னிக்கும்படி வாலி இராமனை வேண்டும் பாடல் அடிகள், வாலி என்ற கவிக்கூற்றாக இல்லை. 'கவிச்சக்கரவர்த்தி' கம்பனின் கூற்றாக வருகின்றன என்கிறார் கவிஞர் அப்பாடல்.

தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்..

தான் செய்த தீய செயல்களை எண்ணி வாலி வருந்தும் கட்டம் இது! அப்படி, வருந்திய வாலியைத்தான் மேற்சொன்ன 'சிறியன

சிந்தியாதான் என்று கம்பர் குறிப்பிடுகிறார் எனக் கூறுகிறார் கவிஞர். கம்பனின் சொல் ஆளுமை, நினைந்து நினைந்து போற்றத்தக்கது! கம்பனின் அடைமொழிகள் கருத்துமிக்கவை, பொருத்தமானவை, கவிச்சுவை தருபவையுங்கூட! இந்தக் கூற்றுகளையெல்லாம் எடுத்துக்காட்டுகளாகக் கவிஞர் நன்றாக விளக்கியிருக்கிறார். கம்பன் 'மகா கவிச்சக்கரவர்த்தி' என்று பதிவு செய்திருக்கிறார்.

இந்நூலுக்கு, 'சொன்னதும் சொல்லாததும்' என்று பெயர் வைத்ததற்கு இரண்டு காரணங்களைத் தந்திருக்கிறார். ஒன்று, அதே தலைப்பில் கம்பனைப் பற்றி ஒரு கட்டுரைப் பகுதி இந்நூலில் இடம் பெற்றுள்ளது என்பது. மற்றொன்று இந்நூலில் தான் சொல்ல நினைத்ததில் சிறிதளவே சொல்லிவிட்டு, தான் சொல்லாமல் விட்டதை நிறைவு செய்துகொள்ளும் பணியை வாசகர்களுக்கே விட்டுவிட்டது என்று கவிஞர் சுட்டிக்காட்டியுள்ளார். வால்மீகி இராமாயணத்தில் சொல்லாமல் விடுத்ததை, கம்பராமாயணத்தில் கம்பர் சொல்லியிருப்பதையும் கம்பராமாயணத்தில் கம்பர் சொல்லாமல் விடுத்ததை வால்மீகி இராமாயணத்தில் சொல்லியிருப்பதையும் கவிஞர் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இக்கட்டுரையிலிருந்து, கவிஞர் கம்பராமாயணத்தில் ஆழங்கால் பட்டிருக்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதுமட்டுமன்றி, பல்துறை வித்தகராகவும் கவிஞர் விளங்குகிறார் என்பதும் புலனாகிறது.

❖

அறிவியல் சிந்தனைக் களஞ்சியம் ‘வானவில்’ ரவி

•

முனைவர் ஆர். நிர்மலா தேவி
தலைவர் தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு – 638 012

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிக ளின்மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடும் தனிப்பரம் பொருளே

என்ற பாரதியாரின் கனவினை நனவாக்கியவர், முனைவர் ‘வானவில்’ கே.ரவி அவர்கள்.

கல்லூரியில் பயிலும்போதே, அறிவியல் கருத்துகளைப் பரப்ப வேண்டும் என்று கனவு கண்டவர். தாம் கண்ட கனவினை நனவாக்கும் விதமாக, அறிவியலில், பல துறைகளில் சிறுவர்களுக்காகவும், வளர்ந்தவர்களுக்காகவும், பொது மக்களுக்காகவும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார். இனிமை, எளிமை, தெளிவு ஆகியவை இவர் தம் நூலின் சிறப்பியல்புகள். தத்துவங்கள், நடைமுறை உண்மையோடு

மோதுகின்ற சூழல்களை உணர்ந்தவர். பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கியம், அறிவியல் என்ற பல செயற்பாடுகளின் கலவைதான் மனித வாழ்க்கை என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டோடி கண்ணே உள *(குறள். 1101)*

The Sensual pleasures of looks, speech, smell, touch and taste அதாவது மனிதனின் ஐந்து படிகளாக, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்தல், உற்று அறிதல் ஆகிய ஐந்தினையும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். தமிழ் அறிஞரும், அறிவியல் ஆர்வலருமான ரவி அவர்கள், 'ஐந்து படிகள்' என்ற தலைப்பில் அறிவியல் வரலாற்றினை அறிந்து கொள்ளும் படிநிலைகளை விளக்கியுள்ளார். அறிவியல் துறை சார்ந்த நூல்களைக் கற்று, நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளைப் படைத்த பண்பாளர். அறிவியல் என்ற பெயராலே அழைக்கப்படுகிற செயற்பாடுகளின் ஒட்டு மொத்தக் கலவை தான் மனித வாழ்க்கை என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்.

"கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்பதற்கேற்ப, நம் தமிழர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கினர் என்பது வரலாற்று அறிஞர்கள் ஒப்புக் கொண்ட உண்மை. இயற்கைச் சூழலிலே வாழ்ந்த தமிழர், இயற்கை நிகழ்வுகளைக் காண்பதிலும், அவற்றின் காரணம் அப்படி இருக்குமா, இப்படி இருக்குமா என்ற ஐயமின்றித் துணிவதிலும், அடுத்துத் தோன்றும் சான்றுகளைக் கொண்டு, துணிந்ததை உண்மையெனத் தெளிவதிலும் காலத்தைப் பயன்படுத்தி வந்தனர். காட்சி, ஐயம், துணிவு, தெளிவு (Observation, Interpretation, Prediction and Realisation) என்பன பேகனின் அறிவியலின் அடிப்படை ஆய்வு முறையாகும். அறிவியல் வழி நின்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்திருந்த தமிழர்கள் வானையும், விண்மீனையும், நாளையும், கோளையும், பொருளின் இயல்பையும், இயக்கத்தையும் பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பதனை அறிய இன்று கிடைக்கும் இலக்கிய நூல்கள் பல.

பண்டைய நாளில் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில், அறிவியலின் பயன்முறையினை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. புறநானூற்றில், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர், அறிவியல் அறிவு பெற்றும் அக்காலத்தில் திகழ்ந்து வந்தனர் என்பதனை,

செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தார் போல என்றும்
இனைந்துஎன் போரும் உளரே (புறம்: 30)

கதிரவன், வானம், காற்று இயங்கும் திசை இவைகளைப் பற்றி ஆய்ந்தறிந்த புலவர்கள் பண்டைக் காலத்திலும் இருந்ததை அறியலாம். அறிவியல் வரலாற்றை விளங்கிக் கொள்ள, அறிவியல் முறை பற்றி அறிதல் அவசியம்.

அறிவியலின் ஐந்து படிகள்

ஒரு வடிவத்திலிருந்து வெளிப்படும் ஒளியோ, ஒரு வடிவத்தைத் தாக்கி மீளும் ஒளியோ, ஒருவருடைய விழித்திரையில் பட்டு அதிர்வு ஏற்படுத்தியவுடன் அவ்வடிவத்தின் தன்மை உணரப்படுகிறது என்பது அறிவியல் தத்துவம். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஐஸக் நியூட்டன் (1642–1727), ஒளியின் பண்பை ஆராய்ந்து வெண்ணிற ஒளி என்பது பல நிறங்களின் கலவை என்றும், 'வானவில்' நிறப்பிரிகையினால் ஏற்படும் என்று கூறியதைப் பெரும்பாணாற்றுப்படையிலும்,

உறைகால் மாறிய ஒங்குயர் நனந்தலை
அகலிரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப (பெரும்.291-292)
என்பதனை விளக்க, ஔவையார் தனிப்பாடலிலும்,
விடுகதிரான் கதிர் வீழ்புயன்மேல் விழுந்தால்
தனுவாம் அதன் தத்துவம்

என்ற வரிகளால் அறியலாம்.

சில சமயம், வடிவம் கவனத்தில் ஏற்படாமல் இருக்கலாம். கவனம் கலந்தாலன்றிப் பொருள் – விழித் தொடர்பு என்ற முழுமையான இயக்கம் ஆவதில்லை. பார்த்தல்

மட்டுமின்றிக் கேட்டல், உண்ணுதல், உயிர்த்தல், உற்றறிதல் ஆகிய புலனுகர்ச்சிகளுக்கும் கவனம் தேவைப்படுகிறது. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் ஐம்புலச் செயல்பாடுகளின் அமைப்பாக அமைகிறது.

கவனம் கலந்த முழுமையான புலன் நுகர்ச்சியைப் புலத்தேர்வு எனலாம். பல்வேறு நுகர்ச்சிகளில் ஒன்றையோ, சில நுகர்ச்சிகளையோ மட்டும் தேர்ந்தெடுத்துத் தனிமைப் படுத்தி நோக்குவதே கவனம். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் புலப்பாடே புலத்தேர்வு. புலத்தேர்வு செய்யப்பட்ட நுகர்ச்சிகளைப் புலத்தெரிவுகள் எனலாம். தெரிந்து கொள்ளப்படுவது புலத்தெரிவு. புலத்தேர்வு மூலம் கிடைக்கப்பெறும் புலத்தெரிவுகளைப் பகுத்தும், தொகுத்தும், ஓர் அமைப்பின் கீழே கொண்டு வருவதை, அமைவொழுக்கம் செய்தல், அல்லது, சுருக்கமாக அமைவு செய்தல் எனலாம்.

யூகம் எனப்படும் அடிப்படையற்ற கணிப்பாக இல்லாமல், சான்றுகளின் அடிப்படையில் எடுக்கப்படும் ஒரு தற்காலிக முடிவே துணிபு. சான்றுகளின் அடிப்படையில் துணியப்பட்ட முடிவாதலால் அது துணிபு எனப்படுகிறது. ஒரு துணிபு, பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, ஐயமின்றி நிறுவப்பட்டால் அது தீர்வு. தீர்வுதான் அறிவியற் கூற்றுகளின் முடிவுகள். எனவே தேர்வு, அமைவு, துணிபு,சோதனை, தீர்வு என ஐந்து படிகளையும் கடந்தால்தான், அறிவியலில் கண்டு பிடிப்பு நிகழ முடியும்.

பொருள்களின் வகைகள்

டால்டன் காலத்துக்கு முன்பே, மூன்று வகைகளான பொருள்கள் இருந்தன.

1. எந்த ஒரு பொருள், புலப்பாட்டு எல்லைக்கு உட்பட்டுப் பிளவுபடப் பிளவுபட, அப்பொருளாகவே பிரிகிறதோ அது அடிப்படைப் பொருள். எவ்வளவு நுட்பமாக பிளவு பட்டாலும், வேறு பொருளாகத் திரிபடையாத பொருள்களே அடிப்பொருள்கள். இதனை அடிப்பொருள் என்றும் சொல்லலாம். எடுத்துக்காட்டு சட்டென்று தீப்பற்றிக் கொள்ளும் தன்மை கொண்ட பொறியியம்

என்று வழங்கப்படும் ஃபாஸ்பரஸ். சின்னஞ்சிறிய பொறி, வில்லைகளாகப் பிளவுபடுமேயன்றி, அதிலிருந்து வேறுபட்ட பொருளாக மாறாத தன்மை கொண்டது.

2. இரண்டாவது, கூட்டுப் பொருள்கள். சோதனைக் கூடத்தில், தக்க சாதனங்கள் மூலம் மின்சாரம் பாய்ச்சி, நீரை உயிரியம் என்ற வளிமமாகவும், நீரியம் என்ற வளிமமாகவும் பிரிக்கலாம். பிரிக்கக்கூடிய தன்மை கொண்டவைக் கூட்டுப்பொருள்கள்.

3. எளிதாகப் பிரிக்கக்கூடிய தன்மை கொண்ட பொருட்கள் கலவைகள்.

அடிப் பொருள்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. அணுக்கள் மேலும் பிளக்கப் படவோ, பிரிக்கப் படவோ முடியாதவை. ஓர் அடிப்பொருளின் அணுக்கள் எல்லாம் ஒரே எடை கொண்டவை. ஓர் அடிப்பொருளின் அணுக்கள், மற்ற அடிப்பொருள்களின் அணுக்களிலிருந்து எடையில் வேறுபட்டவை. அதாவது, ஒரே எடையுள்ள அணுக்களுடன் வேறு வேறு அடிப்பொருள்கள் இருக்க முடியாது. இதனை ஒப்புக் கொண்டால், மின்சாரமும், அதாவது எதிர் மின்சாரம், நேர் மின்சாரம் இரண்டுமே குறிப்பிட்ட சில அடிப்படைப் பகுதிகளாக பிரிந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரமுடியும். அவற்றிற்கு 'ஆல்பா' கதிர்கள், 'பீட்டாக் கதிர்கள்' என்றும், காந்தப்புலத்தில் திசைமடக்குக்கு உள்ளாகாத, மூன்றாவது வகைக் கதிர்களைக் கண்டுபிடித்து, அவற்றுக்கு காமாக் கதிர்கள் என்று பெயரிட்டனர். இதனையே, கம்பர் சூரியனின் துல்லியமான அணுக்கதிர்கள் தாக்குவதால் ஒளியற்ற கிரகங்கள் கூட சிறியதாக மின்னுகின்றன என்பதனை,

தன்னடி ஆழித லோடும் தாமரைத் தடங் கணானும்
பொன்னுடை வாளை நீட்டிப் நீயது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் எத்தின இறந்து வாள
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து உலகம் ஆனான்

அப்புறத்து உலகம் என்பது அண்டங்களைக் குறிக்கிறது. சிலப்பதிகாரத்தில், பறக்கும் தட்டு அதாவது ரேடாரைக் குறிக்கிறது.

பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாள் ஓர்திருமா பத்தினிக்கு
அமரர்க்கு அரசன் தமர்வந்து ஈண்டிஅவள்
காதல் கொழுநனைக் காட்டி அவளொடும் எம்
கட்புலம் காண விண்புலம் போயது
இறும்பூது போலும்.

எலெக்ரான், புரோட்டான், நியூட்ரான் ஆகிய மூன்று உட்பொருள்களின் சேர்க்கையே அணு. இவை வெடித்துச் சிதறுவது, "பெரு வெடிப்புக் கொள்கை" என்று பிரபஞ் சத்தைப் பற்றி, ஜார்ஜ் லாமேத்தர் என்பவர் வெளியிட்டார். ஓர் அணுவில் இருக்கும் என்பதனை முதலில் கூறியவர் ஜே.ஜே. தாம்ஸன் ஆவார். மறை வகுத்துத் தந்தவர்களின் எண்ணிக்கைக் கணக்கிட, முதன் முதலாக 1940 இல், வித்துவான் ப. இராமசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட நூல் 'அறிவு நூல் வழிகாட்டி". அதில், பௌதீக சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், இயற்கை சாஸ்திரம் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து, பாமாலையாகப் பாடல்களைப் புனைந்துள்ளார். அதில், பௌதீக சாஸ்திரப் பிரிவு, இலகு இயந்திரங்கள் பற்றிக் கூறுவதாகும்.

இரிசில் சுழன்று விளிம்பில் பள்ளம்
சார்ந்த சக்கரம் கப்பியாம்; இதுவே
இயக்கக் கப்பி, நிலைக்கப்பியென
இருவகையாக இயம்பவும் படுமே

ஒளியைப்பற்றி,

ஒருபொருள் தன்னை, உவப்புடன் பார்க்க
உதவும் சக்தியே ஒளியெனப்படுவது

எனப் பாடியுள்ளார்.

புவிஈர்ப்புத் தானம் என்பதை ஏண்மையம் எனக் குறிப்பிடுகிறார்

ஒருபொருள் அணுக்களில் நிறையெல்லாம் ஒன்றாய்ச்
சேர்ந்தொரு புள்ளியின் மூலமாய்த் தாக்கிப்
பொருளை, பூமியை நோக்கி இழுப்பதாய்,
எண்ணும் புள்ளியே ஏண்மையமாமே;

இவ்வாறு பாமாலையாக, அறிவியல் தத்துவங்களைப் பாடியுள்ளார்.

தொல்காப்பியர் நாம் வாழும் புவியை, நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஐந்தும் கலந்த மயக்கமாக (பொருள் 135) பஞ்சபூதங்களாலானது எனக் கூறியதை, புறநானூறு

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பம்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீருமென் றாங்கு
ஐம்பெரு பூதத் தியற்கை போல

புவி குறித்தும் வான மண்டலம் குறித்தும் தொலைநோக்குப் பார்வையுடன் நம் முன்னோர்கள் அறிந்திருந்ததையும் தமிழ் இலக்கியங்கள் மணம் கமழும் பசுஞ்சோலையாகத் திகழ்கின்றன என்பதனையும் அறிவியல் கண் கொண்டு தமிழர்கள் ஆராய முன் வந்தால், தமிழ் சிறப்படையும், தமிழர்களும் சிறப்படைவார்கள் என்பது திண்ணம்!

❖

வானவில் கவிஞரின் வள்ளுவப் பாதை

•

முனைவர் பா. பத்மபிரியா,
தமிழ் உதவிப் பேராசிரியர், ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–2.

இலக்கியங்கள் அன்றும் இன்றும் என்றென்றும் தன்னுள் தன்னிகரில்லாச் சுவையினைப் பதுக்கிக் கொண்டுள்ளன. அத்தகு பதுக்கல்களை இனங்கண்டோருக்கு இலக்கியங்கள் என்றும் கழிப்பேருவுவகையைக் கரையின்றித் தந்து கொண்டே யிருக்கின்றன. இவ்வாறு இலக்கியச் சாகரங்களுக்குள் அமிழ்ந்து கிடப்பதான சொற்சுவைகளை அனைவரிடத்திலும் சென்றடையச் செய்வதான முயற்சியினை வானவில் கவிஞர் கையில் எடுத்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது. கவிஞர் அவர்கள் பல்வேறு விதமான இலக்கிய இன்பங்களைத் தொகுத்திருந்தாலும் எனது தேடலின் சிறுமுயற்சியாக வள்ளுவத்தை வசப்படுத்திக் கொண்டுள்ளேன் எனலாம். வள்ளுவம் என்றும் வாழ்க்கையின் தத்துவம், மக்களின் அனைத்துத் தேவைகளுக்குமான விடிவெள்ளி போன்று விளங்குகிறது. ஏனெனில் உன்னதமானக் கருத்துகளை உயர்சிந்தனைகளோடு முன்வைக்கும் பொழுது சமூகம் அதனை தணியாப் பற்றுடன் தனதாக்கிக் கொள்கிறது. அவ்வகையில் வள்ளுவத்தைப் புதிய கோணத்துடன் அணுகுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

சொற்களும் சுவையும்

சொற்சுவை இலக்கியத்தில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இலக்கியங்களில் அமைகின்ற சொற்கள் தன்னிகரற்ற தன்மையுடன் இருக்கும் பொழுது அதன்சுவை மேலும் மெருகேறி விடுகின்றது. இந்த சுவையின் தாக்கம் திருக்குறளில் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றது. இதனையே வள்ளுவர்.

கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

என்கிறார்.

மனித மனங்களைச் செம்மையாக்கிச் செதுக்கிக் கொள்வதற்கான திறவுகோலாக இலக்கியம் அமைகின்றது. சொற்சுவை இலக்கியங்களின் சுவையூக்கிகளாக விளங்குவனவாகும். அவ்வகையில் திருக்குறளின் சொற்சுவைகளைக் கவிஞர் நம்மிடையே சுவைகுன்றாமல் வேறு கோணத்தில் சுவைக்குமாறு தனது கருத்தினைப் பதிவிடுகின்றார். சான்றாக,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறட்பாவில் பயின்று வருகின்ற பகவன் என்ற சொல்லினை கடவுளைக் குறிக்கும் சொல் என பொருள் கொண்டால் அது கடவுள் மறுப்புக் கொள்கைக்கு முரணாகும் என்று பகவன் என்பதனை பகவு + அன் எனப் பிரித்து பகலவன் எனப் பொருள் சொல்லும் பாங்கினைச் சுட்டியிருப்பது சிறப்பானதாகும். இதனைப் போன்றே நாவுக்கரசர் தேவாரத்தில்,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தன் இணையடி நீழலே

என்ற பாடல் சொற்சுவை குன்றாமல் அமைந்து, கேட்போருக்கு செவிநுகர் கனியாக விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் ஓரிடத்தை நினைவு கூறுதல் நலம் பயக்கும். கண்ணகியோடு மதுரை வந்த கோவலன் சிலம்பினைப் பொருளாக்க முற்பட்டு புறப்படும் வேளையில்,

சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான்போய்
மாறி வருகுவன் மயங்கா தொழிக

எனக் கூறிச் செல்வான். இவ்விடத்தில் மாறி வருவன்' என்ற சொல் உயிரோடு செல்கின்ற தான் உயிரற்றவனாக மாறி வருவேன் என்பதனைக் குறிப்பால் உணர்த்துகின்றது. இதனைப் போலவே, யசோதர காவியத்தில் அமைகின்ற,

ஆக்குவதெனில் அறத்தை ஆக்குக
போக்குவதெனில் வெகுளி போக்குக
நோக்குவதெனில் ஞானம் நோக்குக
காக்குவதெனில் விரதம் காக்கவே

என்ற பாடல் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து இலக்கிய இன்பம் அளிக்கிறது. இதனையே வள்ளுவர், 'செவிக்கு உணவு இல்லாத பொழுது மட்டுமே வயிற்றுக்கான உணவு வேண்டும்' எனக் கூறியிருப்பார். இவ்வாறு இலக்கியம் என்றும் சொற்சுவைகளின் புதையலாகவே அமைந்துள்ளது.

திருக்குறளும் சொற்சுவையும்

இலக்கியம் என்பது பொதுவாக பல பாத்திரங்களின் உணர்ச்சிகளைப் படைத்துக் காட்டும் தன்மையுடைத்தாய் விளங்குகின்றது. அதனை வெளிப்படுத்துவதற்கான கருவியாகவே சொற்கள் மிளிர்கின்றன. ஏனெனில் இலக்கியம் இன்று பெருகி இருக்கின்றதே தவிர அது உரிய பார்வையோடு அணுகப்படவில்லை. எவ்வளவுதான் பாடலைப் பிரித்துப் பொருள் கூறினாலும், மேற்கோள்களைக் கையாண்டாலும் இலக்கியப் பயன் என்பது முழுமையாக ஒவ்வொருவரையும் சென்று சேர்ந்துவிடுவதில்லை.

நிலத்தில் கிடந்தவை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்

மேற்கூறப்பட்ட இவ்விரண்டு குறட்பாக்களில் எதனை எக்கோணத்தில் நோக்கினாலும்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பொதுமை நோக்கில் பொருள் கொள்வதில் சிற்சில முரண்பாடுகள் தோன்றவே செய்கின்றன.

இத்தகைய கருத்துப் பிறழ்ச்சி முகிழ்க்கும் பொழுதும் நாம் வள்ளுவப் பேராசனையே கையிலெடுக்க வேண்டும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற குறட்பா நமக்கு எடுத்துரைக்கக் கூடிய கருத்தினை நினைவில் நிறுத்திக் கொள்வது இவ்விடத்திற்கான மெய்ப்பொருளை நாம் உணர்ந்து கொள்ளுதற்கு எளிதாகிவிடுகின்றது.

ஏனெனில் இக்குறட்பாவில் 'மெய்ப்பொருள்' என்ற சொல். கையாளப்பட்டுள்ள பன்முகச் சிறப்பினை நாம் உய்த்துணர்ந்து கொள்ளுதல் காலத்தின் கட்டாயமாக அமைகின்றது. மெய்ப்பொருள் என்பது மறைபொருள். மறை என்பது வேதம். ஆக, சொற்களால் பின்னப்பட்ட திரையை விலக்கி உட்பொருளைக் காணத் தூண்டும் ஆவல் நிறைந்த சொற்கள் மறைபொருளின் உட்கிடக்கை என்பது தெளிவு. சான்று தேவையெனில் **'மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே'** என்ற பாடலைத் துணைக்குக் கொள்ளலாம். மறைபொருளாக, மெய்ப்பொருளாக, உய்த்துணரும் பொருளாக என்றென்றும் அழியாத் தன்மையுடையது இறைவனின் திருநாமமே என்ற முடிவுக்கு வந்துவிடலாம்.

எனவே கவிஞர், வள்ளுவம் குறித்த கட்டுரைகளில் எடுத்துரைத்து இருப்பது என்னவென்றால், அறிவு வேறு பொருள் வேறு, இரண்டு புள்ளிகளும் சந்தித்து சிக்கலை உண்டாக்கி, அதனை அலசி ஆராய்ந்து மெய்ப்பொருளை வெளிப்படுத்தும் நிலை சமூகத்தின் வளர்ச்சியடைந்த நிலையாகும் என்கிறார்.

சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியாது
சிலரேனும் சாகாமல் பகை வெல்ல முடியாது

என்ற அறிஞர் சாலை இளந்திரையனாரின் அரிமா முழக்கத்தின்படி, இலக்கியச் சாகரத்தில் சிக்காமல் சிதறாமல் பொருட்சுவை உணர முடியாது. ஒன்றினைப் பற்றிய முழுமையான தேடல் துவங்கும் பொழுதுதான் அதிலிருந்து ஒரு புதிய பாதை தென்படுகிறது. அதுவரை மறைவாகக் கிடந்த ஒரு புள்ளி ஆராயும் பொழுது பருப்பொருளாக உருமாறுகிறது. எனவே,

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற குறளின் பொருளையே இவ்விடத்தில் கைக்கொண்டு நோக்குவோமானால் தெளிந்த பொருளினை உணர்ந்து சுவைக்கலாம்.

தேடலின் திறவுகோல்

இக்கட்டுரையில் தனது உரையாக வானவில் கவிஞர் அவர்கள் சிந்தனை என்ற வறண்ட பாலைவனத்தில் சிக்குண்டு வழிதவறித் திண்டாடும் போது ஆங்காங்கே தென்படும் சோலைகளாக, நீருற்றுகளாக, கவிதையே பல வடிவில் தன்னை ஆட்கொண்டு விட்டதாகவும் கவிதையே பராசக்தி – பராசக்தியே கவிதை என்று குறிப்பிடுகிறார்.

இக்கூற்று " எமக்குத் தொழில் கவிதை இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்பதனை நினைவூட்டுகின்றது. மேலும் தனது விருந்தோம்பலில் கூட குறையிருக்கலாம். ஆனால் அதற்காக கனிகளின் (இலக்கியம்) சுவை சிறிதளவும் குன்றிப்போகாது எனக் குறிப்பிட்டிருப்பது அவரது செம்மாந்த சிந்தனையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

'சொற்களுக்குள் ஏறிக்கொள்' என்ற இந்நூலின் அணிந்துரையில் சொல்வேந்தர் சுகி. சிவம் அவர்கள் மனிதனிடத்தில் எதிர்எதிரான இருவிசைகள் உண்டு. ஒன்று மனம், மற்றொன்று, புத்தி, புத்தியில் எத்தனை மேன்மை இருந்தாலும் ஒரு வறட்சி உண்டு. ஆனால் மனத்தில் எத்தனை குறை இருந்தாலும் ஓர் ஈரம் உண்டு" எனச் சுட்டிக்காட்டி யிருப்பது இல்லறத்திலும் துறவறம் வேண்டும் துறவறத்திலும் இல்லறம் வேண்டும் என்பதனைக் கோடிட்டு காட்டுவதாக அமைகின்றது. இவ்விடத்தில்

மனத்தை அடக்க நினைத்தால் அலையும்
அறிய நினைத்தால் அடங்கும்

என்ற வேதாத்ரி மகரிஷியின் கருத்து நினைவுகூறத் தக்கதாய் உள்ளது. இப்படியாக அமைகின்ற கருத்தோட்டங்களுக்கிடையே சொற்களுக்குள் ஏறிக்கொள் என்ற நூலானது மிளிர்கின்றது. எக்கோணத்தில் நோக்கிடினும் தனிக்கோணம் பெற்றுத் நிகழும் தன்னிகரில்லாச் சிறப்புடன் சொல்நேர்த்தி உடைத்தாய் கவிஞரின் கட்டுரைகள் அமைந்துள்ளன. சொற்சுவைகள் நிரம்பப் பெற்றதான காப்பியங்களையும் வாழ்வியல் கருத்துப்

பெட்டகமான வள்ளுவத்தையும் தனது சொல் ஆளுமைகளால் நம்மிடையே உலா வரும்படி செய்திருப்பது நம் அனைவருக்குமான ஒரு மிகச் சிறந்த வரம் என்று கூறினால் கூட அது மிகையன்று.

எனவே வள்ளுவப் பேராசானை வாழ்வின் எச்சூழலில் கைக்கொண்டாலும் நாம் பல்வேறு சூழல்களையும் வென்று வெற்றி கொள்ளலாம் என்பதனை ஆசிரியர் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெளிவுறக் கூறியிருக்கிறார்.

வள்ளுவமே வாழ்வியல்
வாழ்வியலே வள்ளுவம்

உசாத்துணை நூல்கள்

1. சீனிச்சாமி து. தமிழில் காப்பியக் கொள்கை
2. மாணிக்கம் வ.சு.ப. காப்பியப் பார்வை
3. வெற்றித் திசைகாலாண்டு இதழ் (தொகுப்பு)
4. திருக்குறள் பரிமேலழகர் உரை
5. விமலானந்தம் மது. ச. தமிழ் இலக்கிய வரலாறு

❖

வானவில் கே. ரவியின் வெல்லும் சொல் ஒரு பார்வை

•

முனைவர் கோ.பத்மவிலாசினி
இணைப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர்
வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை, சென்னை– 44.

கவிதை என்ற சொல் கவி, விதை, கதை என பிரிந்து பொருள் தருகிறது. அதாவது ஒரு கவிஞன் கதையை விதையாக்கிக் கொடுப்பானென்றால் படிப்பவர் நெஞ்சில் விருட்சமாய் கவிதை விரியவேண்டும். அதாவது கவிதையில் வரும் சொற்கள் சுருங்கி நின்று விரிந்த பொருள் தரும் தன்மை உடையனவாக அமைதல் வேண்டும். இந்த கட்டுரையில் நூலாசிரியர் தாம் கற்ற கவிதையில் வெல்லும் சொல் என்ற தலைப்பில் இன்று பல கவிஞர்களின் வென்று நின்ற சொற்களைப் பற்றி சொல்லிச் செல்கின்றார். ஒரு கவிதையின் சிறப்பிற்குச் சொல்வளம் இன்றியமையாததோ அதே போல அந்த சொல் படிப்பவர்களை எவ்வளவு ஆள்கிறது என்பதையும் அதில் நூலாசிரியரின் சிந்தனை எவ்வளவு சிக்குண்டுள்ளது என்பதையும் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சொற்களை நூலாசிரியர் கையாளும் விதம்

பன்னிரு வயதில் கவிதையால் ஆட்கொள்ளப்பட்ட நூலாசிரியர் பாரதியின் மின்னற் கவிதைகளாலும் கம்பனின்

கன்னற் கவிதைகளாலும் இளங்கோவின் செம்மைத் தமிழாலும் குறளின் நேர்த்தியாலும் ஆங்கிலக் கவிதைகளாலும் அரவணைக்கப்பட்டுத் தம்மைத் தாமே வளர்த்த சிறப்புக்குரியவர். "ஊற்றெடுக்கும் ஜீவநதி ஊற்றுக் கண்ணுக்கு ஆற்றும் வழிபாடே கவிதை" எனத் தெளிந்தவர். நூலாசிரியர் நமக்குத் தொழில் கவிதை என்ற கவிதை இயல் கட்டுரைகள் என்ற தன் நூலில் மொழிப் பாங்குப் பற்றிச் சொல்லிச் செல்கிறார். தம் கட்டுரைகள் யாருக்காக எழுதப்படுகின்றன என்ற கேள்விக்கு "உயர்கல்வி பயின்ற பின் இலக்கிய ஆய்வில் ஈடுபடுவோரும் முறையான கல்விச் செறிவின்றியும் கவிதை இன்பத்தில் மூழ்க தெரிந்துக் கம்பனையும் பாரதியையும் கண்ணதாசனையும் வைரமுத்துவையும் படித்து இன்புறத் தெரிந்தவர்கள் தம் நூலைப் படிப்பார்கள்.அவர்களுக்காக மொழித்தூய்மை எழுத்துத் தமிழில் தனித்தன்மை காக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கூறிச் செல்கின்றார். அத்தோடு தமிழில் இனிய எளிய சொற்கள் இருக்கும்போது அதற்கு ஈடான வேற்றுமொழிச் சொற்கள் வேண்டுமென்றே பயன்படுத்தாமல், அதே நேரம் பல நூற்றாண்டுகளாக இலக்கியத் தகுதி பெற்று விட்ட வேற்று மொழிச் சொற்களுக்கு மாற்றுச் சொற்கள் தமிழில் தென்படாத போது அவற்றை தமிழாக்கம் செய்ய முற்படாமல் தம் கட்டுரையை வடித்துள்ளதாக ஆசிரியரே முன்னுரையில் கூறியுள்ளார். ஆக சொற்கள் எவ்வளவு வலிமை உடையன என்பதை ஆசிரியரின் உரை வாயிலாக அறிய முடிகின்றது.

கவிதைகளில் சொல்வளம்

கவிதையைக் கற்பது வேறு. கற்பதில் மூழ்கித் திளைப்பது வேறு. இங்கு நூலாசிரியர் தாம் கவிதையில் மூழ்கித் திளைப்பதோடு மட்டுமல்லாமல் அதில் என்ன மாயங்கள் சுமந்துகொண்டு இருக்கின்றது என்ற சிந்தனையையும் தன் வெல்லும் சொல் கட்டுரையில் கூறியுள்ளார். சொற்களுக்கு அனைத்தையும் மாற்றும் சக்தி உண்டு. 'இதுவும் கடந்து போகும்' என்ற ஒற்றைச் சொல் புறமுதுகிட்டு ஓடிய அரசனை நிறுத்தச் செய்து எதிர்த்து போராடி மீண்டும் அரியணை ஏற்றியது. அதே சொல் ராஜ வாழ்வு நிலையில்லாதது என்பதையும் உணர்த்தி அவனின் ஆணவத்தை அழித்தது என்பதனைக் குழந்தைப் பருவம் முதலே சொற்களின் வலிமையைப் படித்துள்ளோம்.

சொற்களைக் கையாளுவது ஒரு கலையாகும். கவிஞர்களின் சொற்களை ஆற்றல், ஆட்சி, ஆளுமை, நயம் என பல திறன்களில் அடக்கலாம். பாரதி "மந்திரம் போல் வேண்டுமடா சொற்கள்" என்பான். இந்த பாரதியின் சொற்கள் நம்மை ஆட்சி செய்யும் திறன் பெற்றவை.

வெல்லும் சொல் விளக்கம்

ஒரு கவிதையின் சிறப்புக்குச் சொல்வளம் இன்றியமையாதது. சொல்லழகு என்றால் வெறும் அடுக்கு மொழியோ, எதுகை, மோனை, இயைபு போன்ற அணியழகோ இல்லை. "இந்த இடத்தில் இதுவே சரியான சொல். இதை எடுத்துவிட்டு இதற்குப் பதிலாக வேறு சொல்லை இங்கு அமரச் செய்தால் கவிதையின் சிறப்பு குறைந்துவிடும்" என்று எந்தச் சொல்லைப் பற்றிச் சொல்ல முடியுமோ, அதுவே அழகிய சொல்; அதுவே வெல்லும் சொல் பிறிதொன்றிலாதது என்கிறார் ஆசிரியர். இதனையே வள்ளுவர்

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து *(133)*

என்கின்றார். இன்பத்துப் பாலில்

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

தலைவன் போகவில்லை என்றால் என்னிடம் சொல். நீ போகிறாய் என்றால், யார் நீ வரும்போது உயிருடன் இருப்பாரோ அவரிடம் சொல்லிக் கொண்டு செல் என்ற குறிப்பில் வல்வரவு என்ற சொல் மூலம் தலைவன் சென்ற பிறகு மீண்டும் வருகையில் தலைவி உயிரோடு இருக்க இயலாமையைக் குறிக்கப்பட்டது. இது சிறந்த சொல்லாட்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஓர் இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதற்குக் காரணம் அதன் கவிதைப் பண்பே ஆகும். கம்பராமாயணம் காலம் கடந்து வாழ்வது அதன் கதை அமைப்பு மட்டுமல்லாமல் அந்த கதையைச் சொன்ன விதமுமாகும். கதை நம்முள் என்றும் சிறக்க சொற்கள் நம்மை ஆள வேண்டும் என்று கம்பன் தன் கம்பராமாயணத்தில் இடத்திற்கும் சூழலுக்கும் காலத்திற்கும்

தக்கவாறு சொற்களைக் கவிதையில் அமைத்த விதம் படித்து இன்பம் அடையச் செய்கிறது.

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய
பொய்யோவெனும் இடையாளோடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்

இதில் ஐயோ என்ற வார்த்தைக்குப் பொருள் சொல்ல முடியாது. ஆனால் அந்த சொல் தான் நம் உணர்வுகளை ஊடுருவி நம்மை ஆளுகிறது. அதாவது தினமும் பலமுறை நம் வாழ்வில் வழங்கும் அர்த்தமில்லாதச் சொல் ஒரு கவிஞனின் கவிதைக்கு உட்படும்போது வலிமை வாய்ந்த உணர்ச்சி சொல்லாக உரு பெறுகிறது. இதனை சொல் ஆளுமை எனலாம். விவேகானந்தர், சிகாகோ நகரில் நடந்த மாநாட்டில் அவர் பேசிய 'அமெரிக்க சகோதர சகோதரிகளே' என்ற வார்த்தை அரங்கத்தையே அதிர வைத்தது என்றால் அதுதான் சொற்களின் ஆளுமைத் திறன் என்று கூற முடியும்.

சொல் திறன்

சொற்கள் ஒருவர் வாயிலிருந்து வெளிவரும் போது அது மதிப்படைகிறது. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் 'கொண்டு(பிடித்து) அச்சிலம்பைக் கொணர்க' எனக் கூற வந்து, 'கொன்றச் சிலம்பைக் கொணர்க' என்று சொல்லி விடுவதன் காரணத்தை இளங்கோ 'வினைவிளை காலம்' என்று விளக்குகிறார். இது முக்காலத்துக்கும் பொருந்தும் வினைத்தொகையாக அமைந்துள்ளது. ஊழ்வினை என்ற விதிக்கு விதையாவது வினை. அதாவது செயல்களே. விதியாவது நமக்கு நாமே, நம் மனம், மொழி, செயல் ஆகிய இயக்கங்களால் இயற்றிக் கொள்ளும் சட்டம் என்கிறார். எந்த விதையிலிருந்து என்ன விளைச்சல் பெறுவார் நம் செயலுக்கேற்ற பலன் என்பதே விதி என்று மிகத் தெளிவாக விளக்குகிறார். விளை என்ற சொல்லுக்குத் தக்க மாற்றுச்சொல் எதுவும் இல்லை என்பது நூலாசிரியர் கருத்து.

நயமான சொற்கள்

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது

'கண் களவு கொள்ளும் சிறுநோக்கம்' என்ற தொடரில் வள்ளுவர் நயமான சொற்களைச் சிக்கனத்தோடு கூறுவதைப் பார்க்க முடிகிறது.

"கூடத்தி லேமனப் பாடத்தி லேவிழிக் கூடிக் கிடந்திட்ட ஆணழகை..."

என்று ஆணழகைத் தலைவி ஓடைக் குளிர் மலர்ப் பார்வையினால் உண்ணத் தலைப்பட்டாள். அப்பொழுது படம் படித்து நிமிர்ந்த அவன் விழி பட்ட வேகத்தில் அந்த ஒரு கணத்தில் அவனது விழி வீச்சில் ஆயிரம் அணுக்கள் தோன்றும். ஓராயிரம் மின்னல் ஒளி சிதறல்களாகப் பட்டுத் தெறிக்க, அவள் துவண்டு சரியும் ஆடையைச் சரி செய்து நிற்கின்றாள். இதனைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார் கவிஞர்.

சொற்களுக்குள் ஏறிக்கொள்

கம்பனையும் பாரதியையும் மட்டுமல்ல தம் நண்பனையும் உயர்த்தும் எண்ணம் கொண்டவர் நம்மாசிரியர். நண்பருடைய கவிதையையும் ஊரறியச் செய்யும் வன்மையுடையவர். நம்முடைய நூல் ஆசிரியர் 'இமயம் கொடுத்த நிலவே' என்ற கவிதை தொகுப்பின் ஆசிரியர் கவிஞர் கோ. மணிவண்ணனைத் தம்முடைய கட்டுரையில் பறைசாற்றியுள்ளார். ஆச்சரியப் பார்வையில் மெய்மறந்து போய் தன்னை இழக்கின்ற தவம் புரியும் கவிஞனுக்கு வான் தரும் வரமே சொற்கள். தன் முனைப்பில் உதிக்கும் அதிர்வுகளில் இருந்து சற்று விலகி, விரிந்து வானத்தின் அளவுகளில் பங்கேற்று மீளும் போது அவன் அள்ளிக் கொண்டுவரும் அதிர்வலைகள், தாமே சொற்களாய் அவனின் மீது வெளிப்பட்டு அணிவகுத்து ஒரு கவிதையாக அமைகின்றன. அப்படி வரும் சொற்களே பல புதுமைகளை நிகழ்த்தி காட்டும் வல்லமை உள்ளவை. இதனையே ஆசிரியர்

என் சொற்களுக்குள் ஏறிக்கொள்
'சொர்க்கத்தைக் காட்டுகிறேன்' என்கிறார்.
ஆனால்

சொற்களுக்குள் ஏறிக்கொண்டால்
மீண்டு வர மாட்டாய்
சொற்களோடு சொற்களாகக்
கரைந்து போய்விடுவாய் - உன்
விழி தொடாத இடம் எல்லாம் என்
மொழி நுழைந்து செல்லும்
அழிவிலாத அட்சரங்கள்
அமர வாழ்வு நல்கும்

என் சொற்களுக்குள் ஏறிக்கொள் சொர்க்கத்தைக் காட்டுகிறேன்" என்கிறார்.

இந்த வெல்லும் சொல் என்ற நூலின் ஆசிரியர் ஒவ்வொரு கவிஞர்களின் சொற்கள் எவ்வாறு வெற்றி பெற்று வெல்லும் சொற்களாக மாறிவிட்டது என்பதை அழகாக எடுத்துரைத்துள்ளார். நமக்கு தொழில் கவிதை என்ற இந்த கவிதை இயல் கட்டுரைகள் நிச்சயமாக ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய ஒன்று. கற்பது வேறு கற்பதில் மூழ்கித் திளைப்பது வேறு. அப்படி கவிதைகளைக் கற்று அவை எப்படி என்ன மாயங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன என்பதனை சிந்தனை செய்து, தன் கருத்துகளை நம்மிடம் பகிர்ந்துள்ளதை இதன் வழி அறிய முடிகிறது. இனிமையும் நளினமும் பொருந்திய சொற்களாலானது கவிதை என்று கூறுவர் நம் ஆசிரியர். அவரின் கூற்று அவருடைய இந்த கட்டுரைக்குச் சாலப் பொருத்தமுடையது என்பதை இதன் வாயிலாக அறிய முடிகிறது. ஒவ்வொரு மாணவர்களும் நிச்சயமாக படிக்க வேண்டிய நூல் இது என்பது என்னுடைய கருத்தாகும்.

❖

‘வானவில்’ கே.ரவியின் பார்வையில் கம்பரின் படைப்புலகம்

•

சி.பரமேஸ்வரன்
தமிழ் கௌரவ விரிவுரையாளர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர், எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பாலக்கோடு – 636808

திருமாலின் மானுடஅவதாரமே, இராமாவதாரமாகும். இந்நூலில், வைணவ சமயக் கருத்துகள் விரவிக் கிடைக்கின்றன. மேலும் உயர்த்த இலட்சியங்களை முன்னிறுத்தி, இராமனை, மனித நிலையிலிருந்து தெய்வநிலைக்கு உயர்த்திக் காட்டும் இலக்கியமே கம்பராமயணமாகும். பல உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டு பாடப்பட்ட சமய நூலாக இந்நூல் விளங்குகிறது. இக்கட்டுரையில், ‘வானவில்’ கே.ரவியின் பார்வையில், கம்பரின் படைப்புலகம் பற்றிக் காண்போம்.! கல்வியில் பெரியவர் கம்பர் என்றும், கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்றும் வழங்கும் மொழிகள் அவரது கவித்திறனைப் பறைசாற்றும். பாரதியார், தமது பாடலில், புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று போற்றியுள்ளார்.

“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே கண்டதியில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை” என்று பாரட்டியுள்ளார்.

மானிடம் வென்ற தன்றே

வால்மீகி காட்டும் ராமனுக்கும், கம்பன் காட்டும் ராமனுக்கும் ஒருவேறுபாடு இருப்பதுபோல் தெரிகிறது. வால்மீகி காட்டும் ராமன், ஓர் உத்தம மனிதன், கம்பன் காட்டும்; ராமனோ கடவுள். இரண்டு ராமர்களா?

இங்கே தான் ராமகாதையின் மர்ம முடிச்சை நாம் அவிழ்க்கவேண்டியிருக்கிறது. தன் தலை ஒவ்வொன்றாகக் கொய்து, யாக குண்டத்தில் போட்டுக் கடுந்தமிருந்த ராவணனுக்கு என்ன வரம் வேண்டும் என பிரம்ம தேவர் கேட்டதும், ராவணன் கேட்ட வரம் என்னதெரியுமா? தேவர்கள் முனிவர் அசுரர் மூலமாகத் தனக்கு அழிவு நேரக் கூடாது என்பதே அவன் கோரிய வரம். மனிதனை அந்தப் பட்டியலில் அவன் சேர்க்கவில்லை. வரம் பெற்ற பிறகு, அவன் வன்கொடுமைக்கு ஆளாகித் தேவர்கள், அல்லலுற்று, பிரம்மதேவன், சிவபெருமான், இந்திரன் ஆகியோருடன் சென்று திருப்பாற்கடலில் இருந்த விஷ்ணுவிடம் முறையிட்டனர்.

இராவணனைக் கொன்று தங்களைக் காக்கும்படி தேவர்கள் வேண்டியதும், தாமே மனிதனாகப் பிறந்து, ராவணனை கொல்வதாகத் திருமால் உறுதியளிக்கிறார். இதற்கான ஓர் பாடல்...

வான் உளோர் அனைவரும் வானரங்கள் ஆய்
கானினும் வரையினும் கடி தடத்தினும்
சேனையோடு அவதரித் திருமின் சென்று என
ஆனை மீமலர்ந்தன அருளின் ஆழியான்
(தேவர்கள்-குரங்குகளாகவும்-காடு-மலைபிறக்கவும்)

இராவணன் பிரமனிடம் வரம்பெறும் போது, மனிதர், குரங்குகளை நினைக்காமல் விட்டு விட்டான்! திருமால், தான் மனிதனாகவும் தேவர்கள் வானரங்களாகவும் செல்வதே ராவணனை அழிக்கும் வழி என எண்ணிக் கூறினார் என்பதனை வசிட்ட முனிவர் ஞானக்கண்ணால் கண்டு கூறிய செய்தியை, 'வானவில்' கே.ரவி அவர்களின் கட்டுரைவாயிலாக அறியமுடிகிறது.

சொன்னதும்சொல்லாததும்

"கவிஞனைப் பேர்கொண்டவன்" என்ற கவிதை நூலில் இடம்பெற்ற இரண்டு வரிக்கவிதை

சொல்லதொரு பாதியவன் சொல்வதில்லை மீதி
சொல்லியதே சொல்லாத தையுணர்த்தும் நீதி

இதையே ஒருமாக் கவிஞனுக்கு இலக்கணம் என்று எடுத்துக் கொண்டால்; அந்த இலக்கணப்படி நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறுகிறான் கம்பன்; சொல்ல வந்ததை போட்டுடைக்காமல், பூடகமாகச் சொல்லி படிப்பவரை சிந்திக்கச் செய்து தன் கவிப் போக்கில், காவிய நோக்கில், பங்கேற்க வைக்கும் அபாரஉத்தியையும், பல இடங்களில் அவன் கையாளுகிறான் என்பதனை 'வானவில்' கே.ரவி அவர்கள் கம்பனைத் தன்பார்வையில் பார்க்கும் எடுத்துக்காட்டு வரிகள் இதோ!–

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேன் இல்லேன்
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்

இந்தப் பாடலை அடிக்கடி பல சொற்பொழிவு மேடைகளில் கேட்டிருப்போம். தனியே அமர்ந்து, இதை வாய்விட்டுச் சொல்லிப்பார்த்தால், சற்றே திடுக்கிடுவோம்! இலங்கையைத் தீவு என்றே அறிவோம்! சடார் என்று, இலங்கை தன்னை, வெற்பு என்று அனுமன் வாயிலாகக் கம்பன் சொல்லிவிடுகிறானே! வெற்பு என்றால், மலையாயிற்றே! இதுவரை, இதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோமே! இப்படியாக நம்மைச் சிந்திக்க வைக்கிறது அந்தச் சொற்றொடர். வால்மீகி எழுதிய இராமாயணக் காவியத்தை எடுத்தால், அதில், விரிவாக, பாண்டிய நாட்டைக் கடந்து மகேந்திர மலைப் பக்கம் சென்றால் காணக்கூடிய மலைகள் பலவும் சூழ்ந்த ஒரு தீவாக, இலங்கை இருந்த செய்தியும் பிராட்டியைத் தேடப் புறப்படும் வானர வீரர்களுக்கு இராமபிரானே சொல்வதாக அமைந்துள்ளது. ஒரு மலை, அதாவது, வெற்பு, கடலில் அமுங்கிப் போனதால் அதன் மேற்பகுதி மட்டும் ஒரு சிறிய தீவு போல் கடல் நடுவே காட்சி தருகிறது என்று இலங்கைத் தீவு பற்றி இவ்வளவு விரிவாக, வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியை ஒரே சொற்றொடரில் 'இலங்கை வெற்பு' என்று சொல்லியும் சொல்லாமலும் சொல்லி விடுகிறான் கம்பன்! படிப்பவன் சிந்தித்துப் பார்த்து, உணரத்தரும் உத்தியில் கம்பனின் கவித்தத்துவமே பொழியக் காண்கிறோம்! என்று 'வானவில்'

கே. ரவி அவர்களின் கட்டுரைத் தொகுப்பான 'சொன்னதும் சொல்லாததும்' என்ற நூலின் வழி கம்பரின் கவித்திறத்தை காணமுடிகிறது.

அழகனும் அவளும்

இராமனின் அழகையும் அவனோடு உறங்கும் சீதை பற்றி ஒரு பாடலைக் காண்போம்,

அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும் வேய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்;

இருட்டையே உருக்கி ஊற்றிய மேனி அழகன் என்றால் இராமன் என்று புரிகிறது. அவள் என்பது யாரைக் குறிக்கும் சொல்? இந்தக் கேள்வியே அபச்சாரம். இராமபிரானும் அவளும் ஒன்றாக உறங்கினார்கள் என்று சொன்னாலே, அவனோடு படுத்து உறங்கக் கூடிய தகுதி உடைய ஒரே பெண் சீதாபிராட்டி மட்டுமே என்று கூடப் புரியாமல் இராமகாதையை வாசிக்கலாமா? இங்கே அவள் என்றாலே சீதை, சீதை மட்டுமே. என்ன சொற்கட்டு இப்படிப்பட்ட சொற்கட்டை வைத்து நம்மைச் சொக்கவைப்பவன் கம்பன் என்று 'வானவில்' கே.ரவி அவர்களின் கட்டுரைத்தொகுப்பின் மூலம் அறிய முடிகிறது.

இராமனுக்குப் பட்டாபிசேகம்

வனவாசம் முடித்து வரும் இராமனுக்குப் பட்டாபிசேகம் நடக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த பாடல் ஒன்று கம்பனின் கவித்திறத்தை வெளிப்படுத்தும் பாடல்

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரிவீச
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெய்யூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

என்ன ஒரு சொற் சிக்கனம்? இலக்குவனும் சத்துருக்கனனும் கவரி வீச என்று குறிப்பாகச் சொல்லி விட்டாரே, என்று கம்பனைக் கேட்கத் தோன்றுகிறதா? அதுதான் கம்பன் அதுதான் அவனுடைய கவிதை உத்தி என்று, 'வானவில்' கே.ரவி

அவர்கள் கம்பனின் கவித்திறத்தைத் தன்னுடைய, 'சொன்னதும் சொல்லாததும்' என்ற நூலின் மூலம் குறிப்பிடுகிறார்.

குகனே முருகப்பெருமான்

இப்பொழுது, ஒரு முக்கியமான செய்திக்கு வருவோம். இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வரும் முனைப்பில், பரதன் பரிவாரங்களோடு கங்கைக் கரைக்கு வருகிறான். முதலில், அது கண்டு பரதனுடைய நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் "நாடு கொடுத்த என் நாயகருக்கு இவர் நாம் ஆளும் காடு கொடுக்கிலாராகி" இங்கும் படையெடுத்து வந்துவிட்டாரோ என்று கோபத்துடன் பேசும் குகன், இன்னும் நெருங்கிப்பார்த்ததும்; அடடா, இவனும் மரவுரி தரித்தன்றோ வந்துள்ளான்; எம்பெருமான் பின் பிறந்தார் பிழைசெய்வாரா? என்று தெளிவு பெறுகிறான். ஒரு படகில் அக்கரை செல்கிறான். இப்பொழுது, வரும் பாடலைப் பாருங்கள்,

வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனுமவன் அடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினார் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்

ஒழுங்கா முறையா யார் வந்தது? யார்? யாரை வணங்கினார் அப்படித் தெளிவாகச் சொல்லாமல் வாசகனைப் புலம்பவைக்கும் புதிர்ப்பாடல் இது. நாவாயில் குகன் தனியொருவனாகவே பரதன் இருந்த இடம் நோக்கி வந்தான் என்று இதற்கு முந்தைய பாடல் முடிகிறது. அதனால், வந்து எதிரே தொழுதவன் குகனே என்பது தெளிவாகிறது.

வந்து எதிரே தொழுத குகனை பரதன் வணங்கினான். அடுத்து, அவன், அப்பப்பா மலர் இருந்த அந்தணனும் தனைவணங்கும் அவனும் அவன் அடி வீழ்ந்தான். வரிசைக் கிரமப்படி பார்த்தால் வந்து எதிரே தொழுத குகனை பரதன் வணங்க, உடனே குகன், பரதனின் அடிவீழ்ந்து வணங்கப்படும் தகுதி மற்ற இருவர்களான திருமால், சிவன் ஆகியோருக்கே உண்டு. பிரம்ம தேவன் வணங்கும் குகன் என்று சொன்னது சரியா? கேள்வி எழத்தானே செய்யும்!

மும்மூர்த்திகளில் தன்னைத் தவிர, மற்ற இருவரை மட்டுமன்றி இன்னொருவரையும் பிரம்மதேவன் வணங்கியதாக புராணம்

சொல்கிறது, அந்த இன்னொருவர் யார்? முருகபெருமானுக்கு தக்கவிடை சொல்ல முடியாமல், அவர் கையால் குட்டுப்பட்டவர் பிரம்மதேவன். பிரம்ம தேவரையே சிறைவைத்தார் முருகக் கடவுள், எனவே மலர் இருந்த அந்தணனால் வணங்கப் பெற வேண்டுமானால், குகன் அந்த முருகக் கடவுளின் அம்சமாகவே இருக்கவேண்டும்! சிவன், இந்திரன் முதலான தேவர்கள் யார், யார் இராமகாதையில் என்ன வேடம் பூண்டு வந்தனர் என்பதனை விவரமாகத் திருவவதாரப்படலத்தில் சொன்னபோது, இந்த ரகசியத்தை மட்டும் கம்பன் ஏன் சொல்லவில்லை? அதாவது சூட்சமமாக விட்டுவிடுகிறான். ஆனால், பரதனும் குகனும் சந்தித்துக்கொள்ளும் கட்டத்தில், அதைக் குறிப்பால் உணர்த்தி விடுகிறான். குகன் என்பதே முருகப்பெருமானின் பெயராயிற்றே! சொல்லியதே, சொல்லாததை உணர்த்தும் நீதி புரிகிறதா? அதனால்தான் கம்பன் என்ற மானிடனை 'கவிச்சக்ரவர்த்தி' என்று போற்றுகிறோம். என்ற உண்மையை, 'வானவில்' கே.ரவி அவர்களின் கட்டுரைவழியே அறிய முடிகிறது.

அனுமனே சிவபெருமான்

சுந்தரகாண்டத்தில் நாயகன் இராமபிரானே அல்லன், அவன் அனுமனே! அதனால், சுந்தரகாண்டத்தின் நிறைவுப்பகுதில் மட்டுமே, இராமபிரான் வருகிறார். முழுக்க முழுக்க அனுமனின் வீரச் செயல்களே கூறும் காண்டமே சுந்தரகாண்டம் ஆயிற்று. இதில், அனுமனே சிவன் என்பதை உணர்த்தும் பாடல்

வெயில் இயல் குன்றம் கிண்டும் வெடித்தலும் நடுக்கம் எய்தி
மயில் இயல் கை மாதர் தழீவி கொளப் பொலிந்த வானோர்
அயில் எயீற்று அரக்கன் அல்லாத் திரிந்த நாள் அணங்கு புல்லக்
கையிலையில் இருந்த தேவைத் தனித் தனி கடுத்தல் செய்தார்.

கடவுள் மனித வடிவில் வந்து தேவர்களைக் காத்த செய்தி, இக்கட்டுரையின்வழி அறியப்படுகிறது. குகன் முருகப்பெருமானின் அவதாரம் என்பதும் தெளிவாகிறது. சிவபெருமானை, அனுமன் என்று கம்பர் சொல்வதையும் 'வானவில்' கே.ரவி அவர்களின் படைப்பின் வாயிலாகக் காணமுடிகிறது.

❖

வானவில் கே.ரவியின் – கவி(தை) எனும் அணையாத சுடர்

•

திருமதி. க.பாண்டிச்செல்வி
தமிழ்த்துறைத் தலைவர், நா.ம.ச. சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி, மதுரை.12.

தமிழ்மொழியின் வளத்திற்கும் வாழ்த்துக்கும் சான்றாகத் திகழ்பவை கவிதைகள். தமிழ்க் கவிதை யென்றும் இனிமையும் எளிமையும் பெருமையும் உடையது. கவிதை என்றும் பேசும் ஓவியம். அவை, கவிஞர்கள் உள்ளத்தை உள்ளபடி காட்டும் கண்ணாடி போன்றவை.

எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்து
கொள்ளக் கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு
இவற்றினை யுடைய காவிய மொன்று தற்காலத்திலே
செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப்
புதிய உயிர் தருவோனா கிறான்

என்று கவிஞரைப் பற்றிக் கவிதை பாடுவார் பாரதி. பாரதியின் கூற்றுப்படி நிகழ்காலத்தில் தமிழ்மொழிக்குப் புதிய உயிர் தரும் கவி(தை) எனும் அணையாத சுடரை கவிஞர் ஏற்ற முற்படுகிறார் என்பதைக் காணும் முகமாய் இக்கட்டுரை அமைகிறது.

கவிதை பிறப்பு

கவிஞன் கருத்தூன்றுபவன்; ஒன்றில் கருத்தூன்றி பாடுபவன் கவிஞன். அத்தகைய கவிதை கவிஞர் உள்ளத்தில் உருவெடுத்த தன்மையை,

ஓங்காரக் கடலில் உருவாகும்
சுடர் பேரொளி தான்
அந்தக் கடலில் சின்ன துளியாய்
அலைமோதும் மனமே (அ.சுடர்.கவி.ப-135)

எனக் காண முடிகிறது.

அனுபவத்தை உள்வாங்கி ஒவ்வொரு நாளும் கவிச்சுடராய் உதித்த தன்மையைக் கவிஞர் பாடியுள்ளார். இதில் மனதின் பார்வை ஒரு சேரச் செயல்படக் கவிஞனும் பிறக்கிறான்; கவிதையும் பிறக்கின்றது என்பதைப் பதிவு செய்துள்ளார்.

கவி(தை)யின் இயல்புகள்

உணர்ச்சியிலே கவிதை தொடங்கும். உணர்ச்சிகளிலே கவிதைகள் அடங்கும். உணர்ச்சிகளைக் கவிதை உள்வாங்கும். உணர்ச்சிகளைக் கவிதைகள் உருவாக்கும். கவிஞர் தம் உணர்ச்சிகளில் கவிதையை,

உனக்கு மட்டும் தானவளா
ஊருக் கெல்லாம் தாயவளே (அ.சுடர்.கவி.ப-61)

என்றும், கவிதை சினந்து பொங்கும் தீம்பிழம்பு. கனத்த இதயத்தின் உள்ளிருந்து வழியும் கண்ணீராகப் பொழிபவள். கவிஞன் உணர்ச்சிக்கேற்ப இசைந்து கொடுக்கும் தாயவள் என்கிறார். மேலும், கவிஞர் கவிதையைப் பெண்ணாக இல்லை இல்லை, கவிஞன் காளியாகக் காண்கிறார்.

கவிதை யென்றாலும் காளி யென்றாலும்
காதுகளில் ஒரு ரீங்காரம்
செவி கடந்துயிர் ஊடுருவிச் சென்
றோசை எழுப்பும் ஓங்காரம்
புவி நனைத்துப் புதுமை செய்யும் (அ.சுடர்.கவி.ப-94)

எனும் வரிகளில் கவிதை உலக உயிர்களை உயிர்ப்பிக்கும், உய்விக்கும் 'பிரணவ மந்திரம்' என்பதை, "விடை சொல்லாத மௌனம்" என்ற கவிதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தகைய கவி வளத்தை எந்நாளும் பெருக்க, "புவியைப் புரக்கும் புதுச்சொற்களால் என் கவிதையை ஒளி செய்கவே" என்ற வரிகளில் உலகில் அன்பு, அறம், அமைதிசிறக்க கவிப்பணியாற்றிட இறைவன் கவிச்சுடரை ஏற்றி அருள் செய்ய வேண்டுமென வேண்டுகிறார். இதன் மூலம் கவிஞர் உலகில் மாற்றம் நிகழ கவி(தை)யால் மட்டுமே பெருமளவு உருவாக்க முடியும் என்பதைத் தெள்ளிதின் உணர்த்தியுள்ளார்.

கவி(தை) சொற்கள் அநீதிக்கு எதிரான எரிகற்கள் என்கிறார். கவிதையின் ஒவ்வொரு சொல்லும் ஒருயுகப் புரட்சியை மனப்புரட்சியை உண்டாக்கும் சொற் சுடர்கள். கவிதை இந்த உலகையே சுழற்றுகின்ற வாள் என்கிறார். அதைத் திறம்படக் கையாள சிறந்த கவிஞரால் மட்டும் இயலும் என்பதையும் உணர வைக்கின்றார்.

"வாள் முனையைக் காட்டிலும், பேனா முனை கூர்மையானது." ஆம்! கவிஞர் கையில் உள்ள கவிதைச் சொற்கள் புவியைச் சுழற்றுகின்ற வாள் என்பதை, வெற்றுச் சொற்களா? என்ற கவிதை வாயிலாகச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், கவி(தை)யின் இயல்பினை,

என்னை மீட்டுவது விரலில்லை மூச்சுக்காற்று
வீணையிசை ஒலியில்லை உயிர் துடிப்பு
காட்டுவது கனவில்லை வருங் காலத்தின்
உருவுக்குள் உருவாகும் புதிய வார்ப்பு

எனும் வரிகளில் கவிஞருக்குக் கவிதை தான் உயிர் மூச்சு என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார். மேலும், கவிஞர் தம் கவிதைகள் வருங்காலத்தை வார்க்கும் புதிய வார்ப்பாகவும் புதுக்கவி(தை)களை மீட்டு வரும் பூபாளமாகவும் அமையக்கூடும் என்பதைக் கவிஞர் கே.ரவி குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

கவிஞரின் ஆற்றுப்படை

கவிஞர் தம் கவிதை வாயிலாக கவி(தை)க்கு ஆற்றுப்படுத்துகிறார். "பாரதி நாள் இன்றடா, பாட்டிசைத்து ஆடடா" – என்றார் கவிஞர் வாணிதாசன். ஆனால், கவிஞரோ கவிஞர் பெருமக்களைப் பாரதியாரின் திருவிழாவிற்கு அழைப்பு விடுப்பதுடன் நில்லாது,

வாழ்த்தினால் போதாது வரவேண்டும் - வந்து
பாரதிக்காக வொரு நாள் - அவன்
பாட்டுக்கெல்லாம் சேர்ந்தொரு நாள் - பட்ட
பாட்டுக்கெல்லா மொரு நாளென (அ.சுடர்.கவி.ப-43)

மூன்று நாட்கள் பாரதியாரின் திருவிழாவை முத்தமிழ் விழாவாக மாற்ற தமிழ்க் கவிஞர்கள் தன்முனைப்போடு வரவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். மேலும், "ஆற்றுதல் இல்லை ஆற்றுப்படை" எனும் கவிதையில்,

ஒருவார்த்தை சொல் அவ்வார்த்தைக் குள்ளே
ஒளியாக வருவாளே பாடப்பா நீ (அ.சுடர்.கவி.ப-52)

கவிஞர் தம் இனிய நண்பரின் அன்புத்துணைவியார் இறையடி சேர்ந்த போது கவியுள்ளம் கொண்ட நண்பரை கவிதைக்கே ஆற்றுவிக்கும் திறம் போற்றத்தக்கது. இதில், கவிஞர் உள்ளத்தின் ஒளிச்சுடர் உயிர்ச்சுடரான கவிச்சுடரை அணையாது காப்பது கவிகளின் கடமையென நெறிப்படுத்திய திறத்தில் கவிஞர் வானவில் கே.ரவியின் கவித்திறம், புலனாகிறது.

கவிஞர் உள்ளம்

கவிஞர் தன்னுடைய எண்ணங்களை அல்லது சிந்தனையை இலக்கிய உணர்வோடு வெளிப்படுத்தியுள்ளார். கவிஞரின் உள்ளத்தைக் கவிதை ஆட்கொண்ட திறத்தை, தம்மை கவிஞனாக மாற்றிய தன்மையை, 'வீடென்றேன்' கவிதையில், "விதையாய் இருந்தவள் விருட்சமாய் வெளியும் ஒளியும் பனியின் துளியும் சுடராய்த் தோன்றினாள்" (அ.சுடர்.கவி.பக்–103)

என்பதை அழகாகக் கவிஞர் புலப்படுத்தியுள்ளார். கவிஞர் கவிதையோடு வாழும் தன்மையை,

மோன நிலைகுள்ளே அமர்ந்து கொள்வாள் அந்த
மோடி வித்தைக் காரிக்கே வாக்கப்பட்டேன்
(அ.சுடர்.கவி.ப-53)

நானழைக்க வருவாளா?

என்ற கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இயற்கை நுகர்வே சாதாரண மனிதனைக் கவிஞனாக்குகிறது. சிறந்த கவிஞராக நிலை நிறுத்துவதும் இயற்கை நுகர்வே.

'கவிதைகள் எனக்குப் போதவில்லை' கவிதையில் கவிஞர் இயற்கையின் அழகு அற்புதங்களைக் கண்டு திகைத்துள்ளார்.

புல்லின் நுனியில் வானம் விரிந்து
கண்சிமிட்டி நகைக்கிறது
எங்கே எதற்குள் யாரென்றே (அ.சுடர்.கவி.ப-40)

இதில், கவிஞர் இயற்கை அற்புதங்களும் கவிதையும் அட்சய பாத்திரங்கள் அள்ள அள்ளக் குறையாது சுரப்பவை, அதற்கு நான் தான் போதவில்லையென கவிஞர் உள்ளம் தவிக்கிறது. மற்றும் கவிதையான, 'மௌனம் கலைத்து விடு மரண தேவதையே!' என்ற கவிதையில்,

உலகை திருத்த உதித்ததாய் என்னுள்ளே
கலகம் நடத்துகிற கர்வம் அடங்கட்டும்
கம்பன் கவிவீச்சில் கால்வாசியேனும் நான்
எம்பிப் பிடிக்கின்ற ஏக்கம் மறையட்டும் (அ.சுடர்.கவி.ப-79)

என மரண தேவதையிடம் கவிஞர் வேண்டுகிறார். இதன் மூலம், வானவில் கே.ரவி, கவிதை மீது கொண்ட தீராக் காதல் புலப்படுகிறது. கவிஞர்களின் ஆற்றலை, 'கவிஞர் கவிஞர் கவிஞர்களால்" (அ.சுடர்.கவி.ப–107) கவிதையில் அழகாக எடுத்துரைத்துள்ளார். இதனைப் படிக்கும் போதே உள்ளத்தில் ஒரு உத்வேகம் தோன்றப் பாடியுள்ளார். மேலும், "என்றேனும் தம் கவிதை சிறு வெளிச்சம் எவர்க்கேனும் காட்ட முடிந்தாலும் போதும், என்றன் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் உண்டாகும்" அதற்கு இறைவன் அருள் தரவும் வேண்டுகிறார்.

கவிதைத் தமிழ் கவிஞர்களின் காவலில் தான் வளர்ந்து செழிக்க இயலும் என்பதை 'போரூர் ராணி'(அ.சுடர்.கவி.ப–101) கவிதையில் கவிஞர் தீர்க்கமாகக் கூறியுள்ளார். மேலும், கவிதை வாழும் காலம் வரையில் கவிஞனும் வாழ்கிறான் என்பதையும் உணரவைக்கின்றார்.

சமுதாயச் சிந்தனை

சமுதாயச் சிக்கலைப் பாடாத கவிஞர்கள் இருக்கவே முடியாது. சமுதாய உயர்வுக்குப் பாடுபவரே மக்கள் விரும்பும் கவிஞராகத் திகழ முடியும். தம் படைப்புகள் மூலம் மக்களைச் சீர்படுத்துவதே அவர்களின் தலையாய பணியாகிறது. கவிஞரும் அதில் சளைத்தவர் அல்ல. வீரத்தின் விளை நிலமான இம்மண்ணில் வெறும் வெத்து வேட்டு வீரர்களாய்ப்

பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பும் அவலத்தை, 'வீரமாம் வீரம்' (அ.சுடர்.கவி.ப–50) என்ற கவிதை வழி அவர்களைச் சாடுகின்றார்.

மக்களாட்சி மலர்வதும், தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்வதும் உங்கள் கைகளிலே உள்ளது சிந்தியுங்கள் என்பதை. 'கைகுவித்து வேண்டுகின்றேன்' (அ.சுடர்.கவி. ப–56) 'உண்மை சொல்ல அச்சம் எதற்கு?' (அ.சுடர்.கவி. ப–58) போன்ற கவிதைகள் வாயிலாகச் சமூக விழிப்புணர்வுக்கான சிந்தனைகளை விதைத்துள்ளார்.

சமூக அவலங்களான சாதி, மதம், இனப்பாகுபாடு, எல்லைப் பிரச்சினைகள் குறித்து, 'நிஜத்துக்கு வேலி இல்லை' (அ.சுடர். கவி. ப–77) எனும் கவிதையில் மனம் கொந்தளிக்கிறார். சமூகச் சீரழிவுக்குரிய காரணியான சமூக ஊழலை, 'கையூட்டம்மா கையூட்டு' (அ.சுடர்.கவி. ப–98) கவிதை மூலம் மக்களுக்கு அடையாளம் காட்டுகிறார். சமூகத்தைச் சீர்திருத்தும் வழி வகைகளையும் மனதை நல்வழிக்கு மாற்றும் வாழ்க்கை மாறும் எனும் சீரிய சிந்தனைகளை, 'உறங்கவிடுவாளா' (அ.சுடர். கவி. ப–143) கவிதையில் அறிவுறுத்தியுள்ளர். இதன்மூலம், கவிஞர் தன்னை ஒரு சமுதாய உறுப்பினராகவும் காட்டியுள்ளார்.

கவிஞரின் அனுபவம் நினைத்ததைச் சொல்கின்ற கவிதையில் முடிகின்றது. கவிதையை அறிந்தவரே ஆய்வு செய்ய இயலும். கவிதைக் கலையில் தோய்ந்தவரே தேர்ந்தவரே கவிஞரின் கவிதையை வெளிச்சம் போட்டுக் காட்ட முடியும். கவிஞர் அருந்தமிழர் அறிய வேண்டியவற்றை எல்லாம் அள்ளி வழங்கியுள்ளார். இவர்தம், கவிதையில் தோயும் போது நிச்சயம் மற்றுமொரு கவிஞன் பிறப்பது திண்ணம். கவிஞர்களின் மனவோட்டத்தை, கவித்திறனைத் தெளிவாகக் கவிதையில் புனைந்துரைத்துள்ளார்.

புதுமையை விரும்பும் ஆய்வாளர்கள், புரட்சியை விரும்பும் தமிழ்க்கவி உள்ளங்களைக் கவிஞர் இனங்காணத் துடிக்கும் தன்மை புலப்படுகின்றது. கவி(தை) எனும் அணையாத சுடர் வழி மீண்டும் ஒரு பாரதியை இந்த யுகத்தில் காண, உருவாக்க எத்தனிக்கிறது கவிஞர் உள்ளம் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

❖

‘வானவில்’ கே. ரவி அவர்களின் இயற்பியல் கருத்தாய்வுகள்

•

இ.பிரியங்கா
முதுகலை ஆங்கில இலக்கியம், இரண்டாம் ஆண்டு, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு – 12.

‘என்னால் நெடுந்தொலைவு காண இயன்றது நான் மாபெரும் மனிதர்களின் தோள்களின் மேல் நின்றதாலேயே”

– சர் ஐசக் நியூட்டன்

மிகப் பழமையான கல்வித் துறைகளுள் ஒன்று பௌதிகம் எனப்படும் இயற்பியல். வானியலையும் உள்ளடக்கியுள்ளது இயற்பியல். கடந்த 2000ஆண்டுகளாக, வேதியியல், கணிதத்தின் சில கூறுகள் மற்றும் உயிரியலுடன் மெய்யியலின் பகுதியாக, இயற்பியல் இருந்து வந்துள்ளது. இருப்பினும், 17ஆம் நூற்றாண்டு அறிவியல் புரட்சிக்குப் பின்னர், இயற்கை அறிவியல் தனித்தன்மையுடன் தங்களுக்கே உரித்தான ஆய்வு நெறிகளுடன் வளர்ந்துள்ளது.

ஒரு வடிவத்திலிருந்து வெளிப்படும் ஒளியோ, அல்லது, ஒரு வடிவத்தைத் தாக்கி மீளும் ஒளியோ, ஒருவருடைய விழித்திரையில் பட்டு அதிர்வுகளை ஏற்படுத்திய கணமே. அந்த வடிவத்தை அவர் பார்த்து விட்டார் என்று கூற இயலாது. ஏனெனில்,

சில நேரங்களில் விழித்திரையில் ஏற்படும் அதிர்வுகளை நாம் கவனிக்காமல் இருக்கலாம். கவனம் கலந்தாலன்றிப் பொருள். விழித்தொடர்பு மட்டுமே "பார்த்தல்" என்ற முழுமையான இயக்கம் ஆவதில்லை.

ஐந்து வகைப்பட்ட புலனுகர்ச்சிகளில், எதுவுமே கவனச் சார்பின்றி முழுமை அடைவதில்லை. ஐந்து புலனுகர்ச்சிகளையும் தனித்தனியே நுகரத் தருபவை, ஐந்து பொறிகள். அவை. மெய், வாய், கண், மூக்கு, செவி. இதன் பொருள், பொறித் தொடர்பைப் பொருளுள்ள புலனுகர்ச்சியாக அறிவுக்கு அறிமுகப்படுத்துவது கவனமே ஆகும்.

ஒரு மனிதன், மிகச் சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பினை நிகழ்த்த ஐந்து படிகளைக் கடக்க வேண்டும். கவனம் கலந்த முழுமையான புலன் நுகர்ச்சியைப் "புலத்தேர்வு" எனலாம். பல்வேறு நுகர்ச்சிகளில் ஒன்றையோ, சில நுகர்ச்சிகளையோ மட்டும் தேர்ந்தெடுத்துத் தனிமைப்படுத்தி நோக்குவதே கவனம். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் புலப்பாடே "புலத்தேர்வு.' புலத்தேர்வு செய்யப்பட்ட நுகர்ச்சிகளைப் "புலத்தெரிவு' எனலாம். தெரிந்து கொள்ளப்படுவது தெரிவு. புலன்களின் மூலம் தெரிந்து கொள்ளப்படுவது புலத்தெரிவு. புலத்தேர்வு மூலம் கிடைக்கப்பெறும் புலத்தெரிவுகளைப் பகுத்தும், தொகுத்தும் ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வருவதை "அமைவாக்கம் செய்தல்". அல்லது "அமைவு செய்தல்" எனலாம். யுகம் எனப்படும் அடிப்படையற்ற கணிப்பாக இல்லாமல், சான்றுகளின் அடிப்படையில் எடுக்கப்படும் ஒரு தற்காலிக முடிவே துணிபு. இன்னும் இறுதியாக நிறுவப்படாத போதும், சான்றுகளின் அடிப்படையில் துணியப்பட்ட முடிவாதலால், அது "துணிபு' எனப்படுகிறது.

ஒரு துணிபு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு. ஐயமின்றி நிறுவப்பட்டதும். அதுவே "தீர்வு' எனப்படுகிறது. இப்படிப் பெறப்படும் தீர்வுகளே, முடிவான அறிவியல் ஊற்றுகளாய் அமைகின்றன. எனவே, "தெரிவு' "அமைவு' "துணிவு, "சோதனை". "தீர்வு' என்ற ஐந்து படிகளையும் கடந்து சென்றுதான், எந்த அறிவியல் கண்டுபிடிப்பையும் நிகழ்த்த முடியும்.

1895இன் இறுதியில், டிராண்ட்டிகன் என்பார் ஒளிக் கதிர்களைக் கண்டுபிடித்தார். ஐந்து புலன்களுக்கும் உட்படாத ஒன்றைப் புலப்படுத்தும் விளைவுகளைக் கொண்டது ஒளிக் கதிர் என்பதனை உணர்த்தினார். இயற்பியலைப் பொறுத்தவரையில், கடந்த நூறாண்டுகளில் இரண்டு விதமான ஆய்வுகள் பரவலாகப் பேசப்பட்டன.

முதலாவது - மூலப்பொருள் ஆய்வு
இரண்டாவது - ஒளித்தன்மை ஆய்வு

மூலப்பொருள் ஆய்வு, வேதியியல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின் விளைவுகள் இயற்பியல் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. ஒளித்தன்மை ஆய்வு என்பது, இயற்பியல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இது, வேதியியலின் வளர்ச்சிக்கு உதவுகிறது. இப்படி இயற்பியலும், வேதியியலும் ஒன்றிணைந்து அறிவியலில் ஒரு மாபெரும் புரட்சியை நிகழ்த்தி வருகின்றன.

டால்டன் காலத்துக்கு முன்பே, பொருள்கள் மூன்று வகைகளாகப் பகுக்கப்பட்டிருந்தன. பொருள்களில் சில அடிப்படையானவை. எந்த ஒரு பொருள், புலப்பாட்டு எல்லைக்கு உட்பட்டுப் பிளவுபடப் பிளவுபட அந்தப் பொருளாகவே பிரிகிறதோ, அது "அடிப்படைப்பொருள்". அடிப்பொருள்கள் பற்றிய ஒரு விளக்கமாகவே, டால்டன் வகுத்த அணுக்கொள்கை அமைந்திருந்தது. அக்கொள்கையில்.

1. அடிப்பொருள்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை.
2. அணுக்கள் மேலும் பிளக்கப்படவோ, பிரிக்கப்படவோ முடியாதவை என்றார்.

இக்கொள்கையினை விரிவுபடுத்தி, ரஷ்ய வேதியியல் அறிஞர் மின்டிலெடியஹப் டிகூர்மன், ஆராய்ச்சியாளர் மையர் இருவரும் டால்டனின் அணுக்கொள்கையை, ஒரு சில மாற்றங்களுடன் ஒப்புக் கொள்கின்றனர்.

1897 ஆம் ஆண்டு, ஜெ.ஜெ.தாம்சன் என்பவரால் மின்துகள் கண்டறியப்பட்டதும், பிளக்கப்படவே முடியாதவையாகவும். பகுதிகள் அற்றவையாகவும் காணப்பட்ட அணுக்கள் அப்படிப்பட்டவை அல்ல என்பது நிருபிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இயற்பியலில் உறுதி

செய்யப்பட்ட ஆய்வுகளுள் ஒன்று அணுக்கொள்கை. பொருள்கள் அனைத்தும் மேலும் பிளக்க முடியாத "அணுக்கள்" என்ற சிறுதுகள்களால் ஆனவை என்ற கூற்று, அறிவியலாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு, உறுதி செய்யப்பட்ட கூற்றாகும். நமது சங்க இலக்கியங்களில் அதற்கு முன்பே சொல்லப்பட்டிருப்பது நமது மொழிக்கும் இலக்கியத்திற்கும் கிடைத்த தனிச்சிறப்பு. கூர்மன் ஆய்வாளரும். ரஷ்ய ஆய்வாளரும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடித்து நிரூபித்ததை, நமது 'இயற்கை அறிவியல் ஔவை' திருக்குறளின் பெருமையை விளக்கும் வரிகளில் உணர்த்தி விட்டார்.

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் (ஔவையார்)

அதாவது. அணு என்பது கண்களுக்குப் புலப்படாத மிகச்சிறிய மூலக்கூறு என்பது அறிவியலின் கண்டுபிடிப்பு. ஆயினும், பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த ஔவை அதனை அறிந்திருந்ததும், அணுவைப் பிளப்பது குறித்து பாடல் இயற்றி இருந்ததும் தமிழ் இலக்கியத்தின் மேல் உலக ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இடையின்றி அணுக்க ளெல்லாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்

என்று பாரதி, அணுக்களின் அசைவுகளைக் குறித்து அழகுதமிழில் படைத்திருக்கிறார்.

திருமந்திரம் என்னும் நூலில் திருமூலர்.

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே

அணுவுக்கும் அணுவான அடிப்படைத் துகள்களை ஆயிரம் துண்டாக்கி, அதில் ஒரு துண்டுக்குள், நுண்ணியதாக உள்ள பரமாணுவை நெருங்கிடின் அடியவர்களுக்குப் பரம்பொருளை அடைதலும் கைகூடும் என்கிறார்.

சாணினும் உளன் ஓர் தன்மை
அணுவினைச் சத கூறுஇட்ட
கோணிலும் உளன் - கம்பராமாயணம்

என்று கம்பர் இரணியனுக்கும் அவன் மகன் பிரகலாதனுக்கும் நடைபெறுகின்ற உரையாடலில் அணுவைப் பற்றிய கருத்தினை வெளிப்படுத்துகிறார்.

அறிவியல் வரலாற்றுக்கு, முடிவுரை எழுத முடியாது. அது முடியாத தொடர்கதை. பாரதி வியந்ததுபோல், வியந்துகொண்டே இருக்கத்தான் முடியும். அந்த அளவிற்கு, நமது அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தங்களது துறையில் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்தி வருகிறார்கள்.

கணந்தொறும் வியப்புக்கள் புதிய தோன்றும்!
கணந்தொறும் வெவ்வெறு கனவு தோன்றும்!
கணந்தொறும் நவநவமாங் களிப்பு தோன்றும்!
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ, ஆங்கே
கணந்தொறும் ஒரு புதிய வண்ணம்காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்
கணந்தொறும் அவள் பிறப்பாள் என்று மேலொர்
கருதுவதன் விளக்கத்தை இங்கு காண்பாய்

என்பது போல், இன்றைய அறிவியல் ஆய்வாளர்கள் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்தி, அறிவியல் துறையின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து வருகிறார்கள். அவர்களின் சாதனைகளை, நுட்பமான முறையில் ஆராய்ந்து எழுதியுள்ளார் எழுத்தாளர் 'வானவில்' கே. ரவி. இவரால் எழுதப்பட்ட '20ஆம் நூற்றாண்டின் இயப்பியல் வரலாறு' என்னும் இந்நூல், தமிழின் தொன்மையையும் இயற்பியலின் வரலாற்றையும் அறிய முன்வரும் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக உள்ளதால், நம் வருங்கால அறிவியல் ஆய்வாளர்களின் வளர்ச்சி சிறக்கும் என்பது உறுதி!

❖

சொன்னதும் சொல்லாததும் பற்றிய திறனாய்வு

•

முனைவர் ஆ.பெ.மகேஸ்வரி,
தமிழ் உதவிப் பேராசிரியர், ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர் – 628 216.

*"சொ*ன்னதும் சொல்லாததும்" என்ற நூலில் வானவில் ரவி என்பவர் தான் சொல்ல வந்த கருத்துகளை மிகத் தெளிவாகத் துணிவுடன் கூறுகிறார். சொல்லாத செய்திகளை இந்நூலைப் படிக்கும் வாசகரிடம் விட்டு விட்டு அவர்களின் சிந்தனையைத் தூண்டி அவர்கள் நினைக்கும் கருத்துகளையும் கூற வழிவிடுகிறார். அதையும் தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறுவ திலிருந்து அவரின் பெரிய மனதை நாம் இந்நூல் முழுமையும் காண முடிகிறது. இவ்வாறாக இந்நூல் முழுமையையும் நான் அறிந்து கொண்டதையும், ஆசிரியர் கூறியதையும் மிகச் சுருக்கமாக ஆராய்ந்து கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆசிரியரின் கம்பராமாயணப் புலமை

ஆசிரியர் கம்பராமாயணத்தைப் பற்றி இரண்டு கட்டுரையைக் கூறியிருக்கிறார். முதல் கட்டுரை அவனே கவிச்சக்கரவர்த்தி. இக்கட்டுரையில் கம்பனின் கவித்துவத்தையும், பக்தியின் திறத்தையும் மிக அழகாக விளக்குகிறார். கம்பன் காட்டும் இராமாயணத்திற்கும், வால்மீகி இராமாயணத்திற்கும்

வேறுபாடு உண்டு. கம்பன் இராமனைக் கடவுளாகவும், வால்மீகி இராமனை உத்தம மனிதனாகவும் காட்டுகிறார். மேலும் வால்மீகி இராமாயணத்தை நாரதர் கூற எழுதியதாகவும் அவ்வேளையில் அயோத்தியில் இராமகாவியம் அங்கு நடந்து கொண்டிருந்தது என்றும், கம்பர் இராமகாதை எழுதும் போது அவருடைய மனத்திரையில் இராமாயணத்தை ஓட விட்டு ஒவ்வொரு காட்சியையும் தான் ரசித்து ரசித்து இராமாயணத்தைச் சீரிய முறையில் செதுக்கித் தன் கவித்திறத்தால் அதைத் திறம்பட இயற்றியுள்ளதை ஆசிரியர் வானவில் ரவி கூற அறிய முடிகிறது. மேலும் ஆசிரியர் இராமனிடம் கையேயி நீ கானகம் செல், பரதன் நாட்டை ஆளட்டும் என்று கூறிய அந்தச் செய்தியில் "ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள" என்ற பாடலுக்கு நடுவில் இருக்கும் பாடலை அழகாகச் சுட்டிக் காட்டி முந்தைய பாடலையும் பிந்தையப் பாடலின் பொருளையும் கூறி நமக்கு விளக்கியிருப்பதும் பின் அக்காட்சியைக் கம்பர் அங்கு இருந்து பார்த்திருந்தால் தெரியும் என்று கூறியிருப்பது தனக்கு மின்னலாக மின்னிப் பளிச்சிட்டது என்று ஆசிரியர் கூறியிருந்தார். அதுவும் எனக்கும் அக்காட்சியை நினைத்து பார்க்கும்போது மின்னலாக என் மனதிலும் பளிச்சிட்டது.

கம்பர் தன் காப்பியத்தில் சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லும் உத்தி காவியத்தை அழகாக நகர்த்துவதைப் பார்க்க முடிகிறது. இதை வானவில் ரவி தன் மனதில் பட்டதையும் கூறி கம்பனுடன் இணைவதைக் காண முடிகிறது.

கம்பனின் சொல்லாளுமையும் அவனின் சொற்கட்டுக் கோப்பையும் வானவில் ரவி தகுந்த எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கியிருப்பது சிறப்பு. இதன் மூலம் கம்பனின் கவிநயத்தையும் அறிய முடிகிறது.

கம்பனின் அடைமொழிகள் என்ற கட்டுரையில் இராமனின் மேனி, விழி இரண்டையும் கம்பர் வர்ணனை செய்ததைக் கூறியிருக்கும் பாங்கும் கல்லாத கலை என்று கூறி அனுமன் கல்லாத கலையே இல்லை என்று கூறியிருக்கும் விதமும் சுந்தரகாண்டம் ஏன் சுந்தர காண்டம் என்ற பெயர் வந்தது என்று கூறியிருக்கும் அழகும் ஆசிரியரின் அனுபவ அறிவை அறிய முடிகிறது.

திருவாசகத்தில் புலமை

கல்லும் சொல்லும் என்ற கட்டுரையில் கவிஞர் வானவில் இரவி திருவாசகத்திலுள்ள பாடலைக் கூறி அதில் "கல்லா மனிதராய்" என்ற ஒரு சொற்றொடரை மட்டும் விவாதப் பொருளாக்கி தன் கருத்தைக் கூறியிருப்பது அழகு. இதில் என் கருத்தைக் கூற விரும்புகிறேன் "கல்லா மனிதராய்" என்ற சொற்றொடரை பாரதிதாசன் கல்வி கற்காத மனிதர்கள் என்று கூறுவதைக் கூற விரும்புகிறேன்.

சிலப்பதிகாரத்தில் ஆளுமை

கண்ணகியின் அறச்சீற்றம் கட்டுரையில் சிலப்பதிகாரத்தைப் பற்றி பாயிரத்தில் தொடங்கி அதன் கதை முடியும்வரை ஆசிரியர் வானவில் ரவி ஆய்வு செய்திருப்பதைக் காண முடிகிறது. இக்கதையில் பாயிரத்தில் கூறியிருக்கும் குன்றக் குறவர் இளங்கோ குடக்கோச் சேரலுக்குக் கண்ணகியின் கதையைக் கூறினார்கள். பின் அருகில் இருந்த தண்டமிழ்ச் சாத்தான் சீத்தலைச் சாத்தனார் கண்ணகியின் கதையைக் கூறியதாகப் பாயிரம் கூறுகிறது என்றும் பின் 25வது காதையில் பேரியாற்றங்கரையில் சேரன் செங்குட்டுவன் கூடாரம் இட்டிருந்தான். அங்கு வந்த குறவர்கள் கண்ணகியின் கதையைக் கூறினார்கள் என்றும் பின் சாத்தனார் கண்ணகியின் கதையைக் கூறினார் என்றும் இரண்டு முரண்பட்ட கருத்தை ஆசிரியர் வானவில் ரவி எடுத்துக் கூறியிருக்கும் விதம் அருமை. இதனால் வாசகர்களுக்கும் கதையை இப்படியும் பார்க்கலாம் என்ற ஆய்வுப் பார்வையை நமக்குத் தருகிறார் ஆசிரியர்.

பின் வழக்குரைக் காதையில் கண்ணகி பாண்டிய மன்னனிடம் தன் கணவனுக்காக வழக்குரைத்த பிறகு மன்னன் தன் தவற்றை உணர்ந்து பின் உயிரை விட்டதையும் மன்னன் மனைவி கோப்பெருந்தேவியும் உயிரை விட்டதையும் அறியாத கண்ணகி தொடர்ந்து வழக்குரைத்ததாக ஆசிரியர் கூறியிருப்பது சிறப்பு.

திருக்குறளில் புலமை

திருக்குறளில் ஆசிரியர் வானவில் ரவியின் புலமைத் திறன் வியக்க வைக்கிறது.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

இக்குறளுக்கு திருவள்ளுவப் பெருந்தகையார்,

1) அவள் விட்டுச் செல்லும் சந்ததிகளை வைத்து

2) அவனுக்குப் பின் எஞ்சி நிற்கும் அவனுடைய புகழ் பழி

ஆகியவற்றை வைத்து ஒரு மனிதனின் தகுதியை அளந்து விடலாம் எனக் கூறியிருக்கிறார். இதே குறளுக்கு ஆசிரியர் வானவில் ரவி (1) அவன் விட்டுச் செல்லும் கருத்து கருவூலத்தை வைத்து, (2) அவன் நிறைவேற்றாமல் விட்டுவிட்ட பணியின் நிலை, தன்மை, அளவு ஆகியவற்றை வைத்து, (3) அவன் விட்டுச் செல்லும் பூத உடலை வைத்து, ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையை மேற்சொன்னவாறு அளக்கலாம் என்று கூறியிருப்பதன்மூலம் அவரின் திருக்குறளின் புலமையை அறிய முடிகிறது. இதன்மூலம் நாமும் திருக்குறளை இவ்வாறு வேறு வேறு கோணங்களில் ஆய்வு செய்யலாம் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும்,

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை

என்ற குறளில் எல்லாவற்றையும் அறிவைக் கொண்டே உணர்ந்து விடலாம் என்றும் அடுத்த உயிருக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வந்ததாக எண்ணாவிட்டால் அறிவைப் பெற்றதால் ஆகும் பயன் என்ன? என்று திருவள்ளுவர் கூறிய விளக்கத்திற்கு ஆசிரியர் வானவில் இரவி சொன்னதும் சொல்லாததும் என்ற, நூலுக்குத் தகுந்தவாறு தன்னுடைய கருத்தை மிக விரிவாகச் சொல்லி யிருக்கிறார். அதாவது அறிவு என்பது காக்கும் கருவிதான் தவிர அது ஆக்கும் கருவியில்லை என்று தன்னுடைய கருத்தை ஆணித்தரமாகவும், மேலும் மனித நேயத்தைப் பற்றிப் பல்வேறு சான்றுகள் கூறியிருப்பதும் அதிலும் மனுநீதிச் சோழனின் மனிதநேயத்தைப் பற்றிக் கூறி மனுநீதிச் சோழன் சிலை நீதிமன்றங்களில் வைத்துக் கொண்டாடப்படுவதைக் கூறுவது ஆசிரியர் தான் அறிந்ததை சொன்னது சிறப்பு என்று கூறலாம்.

ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் சிறந்த திறனாய்வாளர் என்பதை,

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

விளக்கும்போது இறைவன் "தென்னாடு உடையவன்" என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு ஆசிரியர் பலிதமான விளக்கங்களைக் கூறியிருப்பது நமது சிந்தனையைத் தூண்டும் அளவு உள்ளது. மேலும் தொல்காப்பியப் பாயிரத்தை விவாதப் பொருளாக அவர் எடுத்துக் கொண்டு அதை ஆராயும்போது தான் சொன்னக் கருத்தையும் சொல்லாத சில செய்திகளையும் வாசகர் சிந்திக்க விட்டு விட்டார் ஆசிரியர் இக்கட்டுரையின் பாயிரப் பகுதியில் நான்முறை முற்றிய அதங்கோட்டாசான் என்பதையும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பதையும் அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். தொல்காப்பியர் ஐந்திரம் இயற்றிய பாணினிக்கு முற்பட்ட வடமொழி இலக்கண நூலில் தேர்ந்தவர் என்பதும் தொல்காப்பியர் காலத்தில் வடமொழியில் நான்கு வேதங்கள் என்று தொகுப்பு இருந்திருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். பின் ஆசிரியரே தொல்காப்பியம் ஆரிய வருகைக்கு முற்பட்டது எனக் கொள்ளலாம் என்று கூறுகிறார். இதில் என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் ஆசிரியர் கட்டுரையின் இறுதியில் யாமறியோம் பராபரமே என்று கூறியதால் என் கருத்தைக் கூற விரும்புகிறேன். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம் எனக் கூறுவதை நோக்கும் போது ஐந்திரம் என்பது மூலம் – முப்பொருள், சீலம் – ஒழுக்கம், காலம் – காலத்தை; குறிப்பது, கோலம் – வடிவம், ஞாலம் – உலகம் இவ்வாறு ஐந்து குணங்களும் நிறைந்தவர் தொல்காப்பியர் என்று கூறியிருக்கலாம். மேலும் தொல்காப்பியம் இலெமூரியாக் கண்டத்தில் இருந்த இரண்டாம் தமிழ்ச் சங்கம் தோன்றிய இடமான கபாடபுரத்தில் தோன்றிய நூல் என்றும் அங்குதான் அதங்கோட்டாசன் முன் தொல்காப்பியத்தை அரங்கேற்றி யிருக்கலாம் என்றும் கூறலாம். மேலும் ஆரிய வருகை என்பது இந்தியாவில் நடந்த ஒரு வரலாறு. இந்தச் செய்தி இலெமூரியாக் கண்டத்தில் உள்ள கபாடபுரத்தில் நடந்தது, இது என் கருத்து.

வானவில் கே.ரவிக்கு பாரதியின் மீது பக்தி

பாரதிதாசன் பாரதி மீது எவ்வாறு பக்தி கொண்டு இருந்தாரோ அதுபோல வானவில் கே.ரவி அவர்களும் பாரதி மீது கொண்ட பற்றைப் பார்க்க முடிகிறது. ஏனென்றால் பாரதியின் கவிதைக்குள்ளே தன்னைத் திளைத்து இருப்பதைக் கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல அவரின் கவிதையையே அணுஅணுவாக ரசித்துத் தன்னுடைய கருத்தைக் கூறி யிருக்கிறார். ஒரு இடத்தில் வானவில் கே.ரவி பாரதிதாசன் பாரதி மீது தன் மனதைப் பறி கொடுத்ததை ரவிவர்மாவின் பரமசிவப் படம் போல் பாரதி அங்கே அமர்ந்திருந்த காட்சி தமிழாசிரியரின் மனதை ஆட்கொண்டு விட்டது என்றும், யார் என்று தெரியாமலேயே அவர் அந்த பரமசிவமாகிய பாரதியாரிடம் மனம் பறிகொடுத்தார் என்றும் கூறுவதைக் காண முடிகிறது. இந்தச் செய்தியைப் பார்க்கும் போது வானவில் கே.ரவி அவர்களும் பாரதிதாசன் போல் தன் மனதைப் பாரதியாரிடம் பறிகொடுத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. பின் பாரதியார் எவ்வாறு தமிழ் மொழி மீது பற்று வைத்திருந்தாரோ அது போல பாரதிதாசனும்

தாய்மொழிக்கும் பழி வந்தால் சகிப்பதுண்டோ
.....
உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்
தமிழ்மொழியை உயிரென்று நினைத்திருந்தார்.

அதை ஆசிரியர் எடுத்துக்கூறிய விதம் சிறப்பு. அடுத்து கடவுள் இருப்பதாக நாம் ஏன் நம்ப வேண்டும் என்று கேட்டு நாத்திகவாதி போல அன்பு, அழகு, பராசக்தி இவையெல்லாம் கடவுள் என்று பாரதிதாசன் கூறியிருப்பதை,

அன்னையைக் கண்டோர் அன்னை அன்பினைக் கண்ணில்
காணார்
என்னினும் உயிர்க்கூட்டத்தை இணைத்திடல் அன்பே
அன்றோ

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

வானவில் கே.ரவியின் ஆளுமை தன்மை

மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற நகரம் பூம்புகாரா, திருவாரூரா என்ற கேள்வியைக் கவிக்கோ ஞானச்செல்வன் எழுப்பி அவரே அதற்குத் திருவாரூரில் தான்

நிகழ்வு நடைபெற்றது என்று பெரிய புராணப் பாடலைத் தக்க சான்றுடன் கூறியிருப்பதை ஆசிரியர் வானவில் கே.ரவி தன்னுடைய வழியிலும் அதை ஆராய்ச்சி செய்து பின்னர் திருவாரூரில் கல்தேர் இருப்பதையும் ஆதாரமாகக் கூறுவது ஆசிரியரின் அனுபவத்தைப் புலப்படுத்துகிறது. இவ்வாறு சிலம்பில் இளங்கோவடிகள் கண்ணகியின் வாயிலாக மனுநீதிச் சோழனின் நகரம் பூம்புகார் எனக் கூறுவதையும் பெரிய புராணத்தில் சேக்கிழார் மனுநீதிச் சோழன் திருவாரூருக்கு அரசனாகினான் என்று கூறுவதை,

அன்ன தொல் நகருக்கு அரசு ஆயினான்
துன்னு செங் கதிரோன் வழித் தோன்றினான்
மன்னு சீர் அநபாயன் வழி முதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே

இப்பாடல் மூலம் அறிய முடிகிறது. இதிலிருந்து இளங்கோவடிகள், சேக்கிழார் ஆகிய இந்த இரண்டு பெரியோர்களில் யார் சொல்லுவது உண்மை என ஆசிரியர் வானவில் கே.ரவி வாசகரை சிந்திக்க வைத்து ஆராய்ச்சி செய்ய வைத்துள்ளார்.

காற்று வெளியிடை கண்ணம்மா என்ற கட்டுரைப் பகுதியில் ஆசிரியர் அறிவு என்பது அறிந்து கொள்ள உதவும் சாதனம். அது மட்டுமே இல்லை வேறு சாதனங்களும் உண்டு எனக் கூறி அறிவை சிற்றறிவு, பேரறிவு என்று குறிப்பிடுகிறார். மேலும் அறிவுக்கு எல்லைக் கோடுகள் இருக்கின்றன, என்று இம்மானுவெல் கண்ட் கூறுகிறார் என்று எடுத்துக்கூறி அந்த அறிவைப் புலன் வழியில் அறிந்துகொள்ள முடியும் என்றும் ஆசிரியர் விவரித்துக் கூறுவதை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் பாரதி தன் கண்ணம்மாவை அணுஅணுவாக ரசித்து கண்ணம்மா தனக்கு உயிர் என்றும் தனக்கு மிகப்பெரிய சக்தியாய் ஊடுருவிப் பாயும் சக்தி என்றும் கூறியதை வானவில் கே.ரவி அவர்களும் பாரதியையும், கண்ணம்மாவையும் ரசித்துக் கூறுகிறார்.

சொல்லோவியமும், உயிரோவியமும் என்ற கட்டுரையில் குமரகுருபரர் எழுதிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் "தொடுக்கும் கடவுள் பழம் பாடல் எனத் தொடங்கும் பாடலின்

உச்சக்கட்டமாக "எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே" என்ற வரியில் "எறிதரங்கம் உடுக்கும் புவனம்" என்ற சொற்றொடரில் கடல் சூழ்ந்த உலகத்தையும் மற்றொரு பார்வையில் முதல் வெடிப்பில் உருவான அண்டத்தைப் பற்றியும் குமரகுருபரர் கூறியிருந்தாலும் அதை ஆசிரியர் வானவில் கே.ரவி விளக்கிக் கூறியிருப்பது சிறப்பு.

கவிதைக்குப் பொய் அழகு என்ற கட்டுரையில் வில்லி பாரதத்தில் ஒரு பாடல் காட்சியில் பாரதப் போரில் கண்ணனைத் தன் பக்கம் இழுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் துவாரகாபுரிக்கு வருகை தரும் துரியோதனனை நீ இங்கு வர வேண்டாம், நீ வந்தாலும் எந்தப் பயனும் உனக்குக் கிடையாது என்று அந்நகரிலுள்ள கோட்டைச் சுவரில் பறந்து கொண்டிருந்த கொடிகள் கைகள் போன்று அசைந்து வரவேண்டாம் என்று கூறியதாம் என்று கவிஞர் வானவில் கே.ரவி இப்பாடலைக் கூறி விளக்கியிருப்பது அருமை. இது சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி பூம்புகாரை விட்டு மதுரைக்கு வரும்போது மதுரை மாநகரில் வந்தால் கோவலன் கொலை செய்யப்படுவான் என்று இளங்கோவடிகள் தன் குறிப்பைக் கொடிகள் மீது ஏற்றிக் கூறி யிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து கடற்கரை மணலில் நண்டுகள் நாம் பார்க்கும் போது வளைக்குள் சென்று ஒளிந்து கொள்ளும். இது நாம் அடிக்கடி பார்க்கின்ற காட்சிதான். அதை ஒரு புலவர் தன் கற்பனைத் திறத்தால் நளவெண்பாவில் நாயகன் நள்ளிரவில் நடுக்காட்டில் தன் காதல் மனைவியைக் கைவிட்டு ஓடிவிட்ட காட்சியை அவர் மனத்திரையில் ஓடவிட்டு இந்த நண்டு இத்தகைய காட்சியை நாம் பார்க்கக் கூடாது என்று வளைக்குள் ஒளிந்து கொண்டதாகப் புலவர் கூறியிருப்பதை வானவில் கே.ரவி எடுத்துக் கூறி கவிதைக்குப் பொய்யழகுதானே என்று கூறுகிறார்.

ஆக, வானவில் கே.ரவி அவர்கள் தன்னுடைய கட்டுரைகளை மிக ஆழமான கருத்துகளை மூலநூல் எழுதிய ஆசிரியர்கள் கருத்துகளுடன் இணைத்து அதை விவாதப் பொருளாக உருவாக்கிப் பின் அதற்குத் தானே தீர்வைக் கூறியிருப்பது சிறப்பு. சொன்னதும் சொல்லாததும் கட்டுரையில் நிறைய

கருத்துகளைக் கூறி சில கருத்துகளின் முடிவுகளை வாசகரிடம் விட்டு விட்டு வாசகரைச் சிந்திக்க வைத்தது சிறப்பு. இந்நூலைப் படிப்பவர்களையும் இந்த நோக்கிலும் கட்டுரைகள் எழுதலாம் என்று சிந்திக்க வைத்தது புதுமை. மேலும் அனைத்துக் கட்டுரைகளிலும் வானவில் கே.ரவி தன்னை கட்டுரைகளுக்குள் தான் திளைத்து எழுதியிருப்பதைப் பார்க்க முடிகிறது. மேலும் வானவில் கே.ரவி ஒரு சில இடங்களில் வடமொழி வார்த்தைகளைத் தவிர்த்து எளிய தமிழ் நடையில் கூறியிருந்தால் இன்னும் இந்த நூல் சிறப்பாக அமைந்திருக்கும்.

வானவில் கே. ரவியின் 'மக்கள் பாடும் பாட்டில்' சமூகப் பார்வை

•

முனைவர். ர. மங்கையர்க்கரசி
தமிழ் விரிவுரையாளர், அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
நிலை, கொடைக்கானல் 624101

படைப்பாளி தான் வாழுங்காலத்தைப் பிரதிபலிப்பவன், படைப்பாளி சமுதாயத்தின் கடந்த காலத்தின் உரம், நிகழ்காலத்தில் காலூன்றி நின்று, நிகழ்காலப் பிரச்சினைகளைக் கண்டு கோபம் கொண்டு அதைத் தீர்விற்குக் கொண்டு வர செயல்படக் கூடிய சமூக உணர்வு கொண்டவனே சுமுக உணர்வு கொண்ட எந்த படைப்பாளியும் சமூகத்திலிருந்து விலகிப் போக விரும்பவில்லை. மன்னர்களையும் புரவலர்களையும் பாடிவந்த தன்மைபோய் பாரதிக்குப் பின் மக்களைப் பாடுகின்ற மக்கள் கவிஞர்களும் உலாவத் தொடங்கினர். அந்த வகையில் சமூகச் சிந்தனையோடு கவிதை இலக்கியங்களைப் படைத்தவர் இவர். தமிழறிஞராகவும், வழக்கறிஞராகவும் திறமையாக இக்கால கவிஞராகவும் வலம் வந்து கொண்டிருக்கின்ற வானவில் கே. ரவியின் படைப்பில் மக்கள் பாடும் பாட்டு என்னும் கவிதை நூலில் சமுதாயத்தை எங்ஙனம் படைத்துக் காட்டுகின்றார் என்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்கிற அடிப்படை உண்மை தெரிந்திருந்தாலும்

விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று இதுவரை நினைத்திருந்த சாமானியனும் இன்று பிரச்சினையின் தீவிரத்தை உணர ஆரம்பித்திருக்கின்றான். அவர்களுக்காக முற்படுகிறான். அந்த வகையில் அன்று முதல் இன்று வரை விவசாயிகளின் வாழ்க்கை, போராட்டமாகத் தான் உள்ளது என்பதனைத் தெரிவிக்கும் வகையில்

வயலுல எறங்கி உழைக்கிறவன் உண்மைத் தொழிலாளி -
அவன்
வயத்துல அடிச்சுப் பொழைக்கிறவன் ஊழல் பெருச்சாளி

என்ற கவிதை மூலம் விவசாயிகள் படும் பாட்டினை எடுத்துக் காட்டுகின்றார்.

உழைப்பவர் நலனில் தான் நாமும் வாழ்கின்றோம். நாடி, புலங்கள் உழுவார் கரத்தில் கலைமகள் உறைவாள் என்பதன் மூலம் பாருலகில் உழைப்பாளர்களின் உள்ளத்தை உலகறியச் செய்கின்றார்.

மக்களின் வறுமை நிலையைச் சுட்டிக்காட்டி மழையிடம் வேண்டி பசி பஞ்சம் போக்கிட

வயத்துப் பொழப்புக் காகக்
கயத்து மேல நடக்கும்
கழக்கூத் தாடி கஞ்சி கேக்குறான்
மழைக் கூத் தாடு மகமாயி
வறண்டு கிடக்கும் வயலுக்கெல்லாம் வெறும்
கண்ணீராலே பாசனமா?
வாழ முடியாம சனங்களெல்லாம்
சாவது தான் உன் சாசனமா?
இரக்கம் வேணும் கண் திறக்க வேணும் நான
எடுத்து சொன்னேன் கொஞ்சம் சூசகமா

"மழை பொழிஞ்சுடு படியளந்திடு" என மழைக்கூத்தாடு மகமாயி என்னும் கவிதை மூலம் எடுத்துக்காட்டுகின்றார். மேலும் 'காத்தாயீ; ஒ காத்தாயீ' என்னும் கவிதையில்

நீ
சிரிச்சாத்தான் எங்க வயல் செழிச்சிருக்கும்
சீறிப்புட்டாக் கடல் கூடத்
கொந்தளிக்கும்

பயிரெல்லாம் காப்பாத்து காவல்நின்னு - எங்க
உயிருக்கும் நீ தானே ஊத்து கண்ணு
காத்தாயீ ஓ காத்தாயீ

என்னும் வரிகளில் விவசாயம் இல்லையென்றால் நாம் உயிர் வாழ முடியாது என்று தன் உன்னதமான கவிதை வரிகளின் மூலம் புலப்படுத்திக் காட்டுகின்றார்.

சமுதாயத்தில் ஊழலின் நிலை

நாம் வாழும் நாட்டில் சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை போன்றன இல்லாமல் வாழ முடியாது என்கிற சூழ்நிலையை உண்டாக்கி அதனை வாங்குவதற்குப் பல இன்னல்களைச் சந்திப்பதுடன் பணம் கொடுத்து வாங்கும் சமூகமாக இன்று மாறிவிட்டது என ஊழல் நிறைந்த நம் நாட்டின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இதனை

பிறப்புச் சான்றிதழ் இறப்புச் சான்றிதழ்
இடையில் சாதிச் சான்றிதழ்
தொட்டில் முதல் சுடுகாடு வரை
எல்லாத்துக்கும் சான்றிதழ்
துட்டு குடுத்தா குடுப்பாண்டா - துட்டு
எங்கிருந்தாலும் எடுப்பாண்டா

என்ற ஊழல் பெருச்சாளி கவிதை வரிகளின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார்.

நம்நாடு, நம் தேசம், இங்கு நடக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்கும் உரிமை நம்மிடத்திலேயே உள்ளது என,

நாம பாத்து ஓட்டுப் போட்டு
வேலைக்கு வச்ச ஆளுங்கடா
யாரு சொன்னாங்க தலைவருன்னு
நெஞ்ச நிமுத்திக் கேளுங்கடா

அறைகூவலிடுகிறார்.

மேலும்

எலவசமாத் தருவதெல்லாம் - இவன்
அப்பன் பாட்டன் தேடியதா
எலும்புத்துண்ட வீசிறதாலே

எசமான் பட்டம் கூடியதா
ஓட்டுச் சீட்டுக் காகிதமா - ஒன்
மானங் காக்கும் ஆயுதமா

என இன்று நம் நாட்டில் நடக்கும் உண்மையான நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதுடன் மக்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் தூண்டுகிறார்.

தேர்தல் நேரம்

வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை என்பது தமிழ்நாட்டில் பராந்தகச் சோழன் காலத்திலேயே குடவோலை முறை மூலம் தொடங்கிவிட்டது எனலாம். அப்படியென்றால் தமிழ்நாட்டில் தேர்தல் விழிப்புணர்வு என்பதெல்லாம் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகால பழைய சமாச்சாரம் தான். ஒவ்வொரு கால கட்டத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் வாக்களிப்பதற்கும் விதிமுறைகள் மாறிக் கொண்டே வந்திருந்தாலும் நம் அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டும் என்றும் மாறியதே இல்லை எனக் கூறுகின்றார். தேர்தல் நேரத்தில் சேரிக்கும் கார்கள் வரும் அதை நம்பி ஓட்டுப்போட்டு உன் சுதந்திரத்தை விட்டுவிடாதே என்பதனை,

சேரிக்கும் காருவரும் தேர்தல் நேரம் - ஒன்னைத்
தேடித்தான் வருவாங்க ஐயா மாரும்
அண்ணாச்சி தங்கச்சீன்னு அழைப்பாங்கடா - கையக்
கும்பிட்ட படியே தான் நடப்பாங்கடா

அதை நம்பிவிடாதே என விழிப்புடன் நடந்துகொள் எனக் கூறுவதனால் அறியலாம்

"கள்ளுக்கடை நடத்துறவனுக்கும் கந்துவட்டி வாங்குறவனுக்கும் கைக்கூலிப்படைய வச்சு காரியத்த முடிக்கிறவனுக்கும் ஓட்டுப் போட்டு இந்த நாடு உருப்படாது" எனவும் தேர்தல் நேரம் என்ற கவிதைப் பாடலில் விளக்கி நாட்டுச் சூழலை நம்முன் எடுத்துக் காட்டுக்கின்றார்.

மேலும் காசுக்காக ஓட்டுப் போடும் மக்களின் அவல நிலையை எடுத்துக் கூறும் வகையில்

ஐந்நூறும் ஆயிரமும்
ஆயுசுக்கும் போதுமா

அதுக்குப் போயி மானத்தை நீ
அடகு வைக்க வேணுமா

எனக் கேள்வி கேட்கிறார்.

"அதனால் ஏற்படும் இன்னல்களினால் நாடும் வீணாய்ப்போகும் வீடும் நடுத்தெருவில் நிற்கும் காசுக்கு ஓட்டு போட்டு ஏமாந்து விடாதே" என இன்று நடக்கும் சமூகத்தில் ஏற்படும் உண்மை நிகழ்வினை எடுத்துக் கூறி

உன்
புள்ளகுட்டி வாழணும்
பேரன் பேத்தி வாழணும்
உலகத்துல நம்ம நாடு
தலைநிமுந்தே ஆகணும்
கனவெல்லாம் நிறைவேற
ஓட்டுப் போடணும் - நீ
திருந்தி யாகணும்

எனச் சமூகத்தை மாற்ற முயலுகின்றார்.

சீரழிவு

பெண்கள் எப்பொழுதும் திருமணத்திறகு முன் தந்தையின் பாதுகாப்பிலும் திருமணத்திற்குப் பின் கணவனின் பாதுகாப்பிலும் முதுமையான காலங்களில் மக்களின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டும் என யக்ஞவல்கியர் கூறுவதாகச் சுதாகர் சட்டோபாத்யாயா எடுத்துரைக்கின்றார். பெண் மணமாவதற்கு முன் தந்தையின் கீழ் வாழ்வது மணமானபின் கணவனின் ஆளுகைக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது என்னும் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டு விட்டாள். ஆனால் அவ்வாறு பாதுகாக்கக் கூடிய ஆண்கள் சாராயம் குடித்து அழிந்து போவதுடன் பெண்களையும் வன்கொடுமைக்கு ஆளாக்குகின்றனர், 'குடி குடியைக் கெடுக்கும்' என்பதை உணர்ந்து அதை வேரோடு அழித்திடவும் வேண்டுவதே தனது கொள்கை என வானவில் கே. ரவி அவர்கள் கூறுகின்றார். நாட்டு மக்கள் நலிவடைவதும் இந்தக் குடிப்பழக்கத்தினால் தான் என்றும் குற்றம் கூறும் மதுவை விற்கவிட்டு தீமைகளை விதைப்பது விந்தையிலும் விந்தையே எனக் குடிப்பழக்கத்தைச் சாடி, அதனால் ஏற்படும் இன்னல்களையும் தெளிவுபடுத்தி நல்வழி காட்டிய நாமக்கல்

கவிஞரைப் போன்று தனக்குரிய பாணியில் கவிஞர் வானவில் கே. ரவி.

சாராயம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே - ஒரு
பேராயம் கூட்டுங்க பெரியோர்களே
தோராய மாற்றங்கள் தோதில்லை - நல்லா
ஆராய வேணுமிதன் அடிப்படையை
வேரோடு சாய்க்கணும் சாராயத்தை - வெட்டி
வேதாந்தம் பேசியொரு லாபமில்லை

எனக் கூறுகின்றார்.

பெண்ணியச் சிந்தனைகள்

பெண்ணியத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார். இன்று பெண்ணறிஞர்களாலும் பெண்ணுரிமை இயக்கத்தினராலும் ஏற்றுப் போற்றப்படும் மாபெரும் பெண் விடுதலைக் கருத்துகளை வெளியிட்டவர். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, கற்பு என்பவைகள் ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக உள்ளதேயொழிய பெண்களுக்கு மட்டும் என்பது நியாயமில்லை. பெரியாரின் சிந்தனையைப் பாரதிதாசனும் நாணமும் அச்சமும் வேண்டும் – எனில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும். அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள். வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும் போகப் பொருளாகக் கருதப்படுவதற்கும் ஆபாசமாக சிங்காரித்துக் கொண்டு வருவதேயாகும் என்ற உண்மையினை உணர்ந்து பெண்கள் பாலியல் தொழில் செய்திருப்பினும் அவர்கள் கீழ்மை இல்லை, அவர்களை மதிப்புடன் நடத்த வேண்டும் எனக் கூறுகின்றார்.

இதனை

வேசி தாசி யாவரும் நம்
அன்னை தங்கை பிள்ளையே
வேறு தொழில்கள் போலவே
மேன்மை கீழ்மை இல்லையே
மாசில்லாத எண்ணங்கள்
மலர வேண்டும் தோழனே

எனப் பெண்ணியச் சிந்தனைகளை முன் வைக்கின்றார்.

சமூகத்தில் செல் பேசியின் தாக்கம்

சமூகத்தில் செல்பேசியினால் மக்கள் தங்களை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்றைய இளைஞர்களின் சக்தி ஆச்சரியமூட்டும். அதிலும் சமூக ஊடகங்களில் இளைஞர்களின் செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைக்கிறது. கைபேசி மூலம் சமூக ஊடகங்களைக் கையாளும் இளைஞர்களில் கணிசமானோர் அதற்கு அடிமையாகி விட்டனர் என்றே தெரிகிறது. அறிவியலின் வளர்ச்சி அதிவேகமாக இருக்கிறது. தினம் தினம் புதுப்புது தொழில் நுட்பங்களில் ஆண்ட்ராய்டு அலைபேசிகள் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. சொல்லப்போனால் கைபேசி இல்லாத நபரே இல்லை என்றே கூறலாம். கைபேசி பயன்படுத்துபவர்களில் கணிசமானோர் இந்த உலகில் வாழவில்லை. அவர்கள் உலகமே கைபேசியாகிவிட்டது. வாழ்வதற்கும் வசிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முன்பு நம் வாழ்வில் மூன்றாவது நபர்போல் இருந்த கைபேசி இன்று முதல் நபராக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது என்பதனை உணர்த்தும் வகையில்,

என்னோடு நான் பேச
நேரமின்றிப் போனதே
எப்போதும் செல்பேசி
என்தோழி யானதே

எனவும்,

காலை எழுந்தவுடன் நட்பு - பின்
கலகலப்பாய் கொஞ்சம் அரட்டை
மாலை முழுதும் பழிச்சண்டை - என்று
வழக்கப் படுத்திக் கொண்டோமே

எனக் கூறுகின்றார்.

காதல் மனைவியோ மழலைச் செல்வமோ
காணவரும் விருந்தாளிகளோ
எதுவும் வேண்டோம் வேறெதையும் தீண்டென்
எப்பொழுதும் என்கையில் செல்பேசி
உலகு முழுதும் நான் உலவி வருகையில்

என்ற பதிவுகளின் மூலம் வானவில் கே. ரவி அவர்கள் சமூகத்தில் மறைந்து கொண்டிருக்கும் சொந்தங்களை நினைவு

கூர்ந்து குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுங்கள். அதை விட மகிழ்ச்சி வேறில்லை. எனக் கூறுகின்றார். நெருக்கமானவர்களிடம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள் எனக் கூறி

செல்தோழி விட்டுச் செல் தோழி
உன்னையும் புறக்கணிக்க இன்னொருத்தி வருவாளே!

என்று சமூகத்தில் செல்பேசியினால் நம் வாழ்வை தொலைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற செய்தியினைச் சுட்டிக் காட்டுகின்றார்.

விடுதலை உணர்வு

மக்களிடையேயுள்ள பயத்தைப் போக்கி எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்களாகத் தமிழர்கள் விளங்க வேண்டும் என்றும் அஞ்சா நெஞ்சம் உடையவராயிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமென்பதில்லையே என வீரமுழக்கம் செய்த பாரதியாரும், பயம் நீங்கிய வாழ்வே உயர்ந்த வாழ்வு எனக் கூறிய பாவேந்தரும் நெஞ்சில் உரமுடையவர்களாக மக்கள் விளங்க வேண்டும் என்று கூறுகின்றனர். அதுபோலவே இங்குச் சமூகத்தில் வாழும் மக்கள் தப்புகள் நடக்கும் இடங்களில் தட்டிக் கேட்டு வாழ வேண்டும் என்ற உணர்வினை ஊட்டுகின்றார். இதனை

தப்புக் கண்டாத் தட்டிக் கேக்கும் தைரியம் வேணும்
எப்பவுமே நியாயத்தின் பக்கம் நிக்கணும்
அக்கம் பக்கம் வம்புக்கெல்லாம் ஒதுங்கிப் போகணும்
ஆனா
அக்கிரமம் நடந்த நீ எதுத்துப் பேசணும; என்றும்
நடுவில் அடிமைப்பட்ட போதும்
நடுக்கம் இன்றி எதிர்த்து நின்றோம்.

எனவும்

போர் முனையும் ஏர்முனையும் ஒன்று போலவாம்
வீரர்களும் உழவர்களும் வெல்ல வேண்டுமாம்

என்றும் எழுச்சி மிக்க அனைவரும் பயம் நீங்கிய வாழ்வுடன் வாழ வேண்டும் என்ற தாரக மந்திரம் மனதில் பதியும் படி பாடுகின்றார்.

அறிவினிலே தெளிவு அகத்திலே அன்பு, நெஞ்சிலே துணிவு ஓயாத உழைப்பு, தளராத தன்னம்பிக்கை இவ்வைந்தினையும் தன் வாழ்வியல் இலக்காகவும் படைப்பியல் நோக்கமாகவும் கொண்டு வாழ்ந்து வருகிறார். நாடும் நாட்டு மக்களும் அடிமைத்தனம இல்லாமல் உரிமை வாழ்வு எய்துவதும் தமிழில் எளிமையும் பயன்தரத்தக்கதுமான படைப்புகளை உருவாக்கி மொழிவளத்தையும் சேர்க்கும் இவரது பாங்கு மிகவும் நேர்த்தியானது. இவரது கவிதைப் பாதையில் பல புதுமைகளையும், புரட்சிகளையும் ஏற்படுத்தி முன்னேற்றம் காண்கிறார். இவரை இக்காலக் கவிதையின் விடிவெள்ளி பாரதி என்றால் மிகையாகாது.

❖

கவிஞர் வானவில் கே. ரவியின் கவிதை உத்திகள்

•

முனைவர் முகிலை இராசபாண்டியன்
மேனாள் பதிவாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

கவிதை என்பது எண்ணத்தின் தனி உலகம். இந்த உலகத்தில் நிற்கலாம்; நடக்கலாம்; மிதக்கலாம். இதில் எதை வேண்டுமானாலும் கவிஞனின் எண்ணம் தீர்மானித்துக் கொள்ளும். அந்த எண்ண உலகத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் கட்டுப்பாடு எதுவும் இருக்காது. கட்டுப்பாடு இல்லாத இந்தக் கவிதை உலகம் என்பது ஓரளவிற்குக் கனவுலகம் போன்றதுதான். கட்டாந்தரையில் படுத்துக்கொண்டு காற்றில் பறப்பது போன்ற உணர்வைப் பெறுவதுதான் கவிதை உலகம். நம்மைச் சுற்றி இருக்கும் எல்லாமும் நம்மை விட்டு விலகிவிட நமது கற்பனை உலகம் நம்மைச் சுற்றிச் சூழ்ந்து விடும். இத்தகையை கற்பனை உலகத்தைக் கவிதையில் காணும் உள்ளத்தைப் பெற்றவராகக் கவிஞர் வானவில் கே. ரவியைப் பார்க்கிறேன்.

கனவுலக உத்தி

கவிஞன் கனவுலகத்தில் இல்லாத நேரம் தான் எது என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கற்பனையான வாழ்க்கையே வேண்டும் என்று எண்ணி எண்ணி வாழ்க்கையைத்

தொலைப்பவர்கள் கவிஞர்கள் என்று சொன்னாலும் அது பொருந்தாது.

கவிஞனும் ரசிகனும் உரையாடுவதாகத் தொடங்கும் கவிதையில் அவரது கவிதை உலகில் சொற்கள் ஒவ்வொன்றும் தேராக அணிவகுத்து நிற்கின்றன. அந்த தேரில் ஏறியபடி கனவுலகில் மிதக்கக் கற்றுக்கொடுக்கிறது கவிதை.

சொற்களுக்குள் ஏறிக்கொள்
சொர்க்கத்தைக் காட்டுகிறேன்என்
கற்பனைப் புரவியை உன்
கண்களில் பூட்டுகிறேன்! (உன்னோடு நான்)

சொர்க்கத்தில் துன்பம் இருக்காது என்ற எண்ணத்தின் ஆழ்மனப் பதிவுதான் இந்தக் கவிதை. அந்தச் சொர்க்கத்திற்குச் சொல் தேரை அழைத்துச் செல்லும் குதிரைகளாகக் கண்களைக் காட்டுகிறார். கண்ணால் பார்த்தபடி கண்களால் பார்க்க முடியாதவற்றைப் பார்க்கச் செய்யும் ஒரு கற்பனைப் புனைவு இது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தானே பறக்க வேண்டும் என்னும் உணர்வு ஏற்படுவது உண்டு. அந்த உணர்வின் வெளிப்பாடாகக் கனவில் பறப்பது போன்ற காட்சி தோன்றும். பறந்து போகும்போது இறங்க இயலாமல் தத்தளிக்கும் உணர்வு ஏற்பட்டு, பெரும்பாலும் கனவு கலையும். கனவு என்று தெரிந்ததும் அப்பாடா எப்படியோ தப்பித்துவிட்டோம் என்ற நிம்மதி பிறக்கும்.

கற்பனை உலகம் மகிழ்ச்சியானதுபோல் தோன்றினாலும் அதில் மகிழ்ச்சி இல்லை என்பதை மனிதனின் அறிவு அவ்வப்போது உணர்த்தும். அதைத்தான்

அதோ! அந்தக்
கானல் நீரைக் கடந்து சென்றால்
கற்பகச் சோலை வரும்

என்று நிறைவுசெய்து காட்டுகிறார் வானவில் கே. ரவி.

கனவுலகத்திலும் நனவுலகத்திலும் மாறி மாறிப் பறக்கிற இயல்பு கொண்ட கவிஞராக விளங்குகிற காரணத்தால் கனவுலகத்திற்குக் கரம் பிடித்து அழைத்துக் கொண்டு போய்,

'பார்த்தாயா... பார்த்தாயா....?' என்று கேட்டுவிட்டு, 'இதுதான் கற்பனை உலகம்' என்று உணர்த்தி இதனை விடவும் உண்மை உலகம்தான் இயல்பானது எனத் தெளிவுபடுத்தும் வகையில் இவருடைய கவிதை அமைந்துள்ளது. கனவில் கிடைத்த இனிப்பைக் கனவில் மட்டுமே உண்டு மகிழ முடியும் என்னும் உண்மையை உணர்த்தும் கவிதைகளாக இவரது கவிதைகள் விளங்குகின்றன.

உதயம் என்ற பெயரில் இங்கே
பிடரி சிலிர்த்தொரு சிங்கப் பறவை
பிறந்து விட்டது பார்!

என்னும் கவிதை மொழியில் சூரியனின் தோற்றமும் அது விண்ணில் தோன்றுவதால் பறவை என்ற விளிக்கும் எண்ணமும் அதன் ஒளிக் கிரணங்களைப் பார்க்கும்போது சிங்கத்தின் பிடரி வண்ணமும் எண்ணத்தை நிறைத்த காரணத்தால் இப்படி ஒரு வித்தியாசமான கற்பனை, கவிஞருக்குத் தோன்றியிருக்கிறது.

ஒற்றைக் கதிரவன் என்ற காரணத்தால் சிங்கத்தை உவமித்த கவிஞர், இருள் கிழித்து எழும் அதன் சிலிர்ப்பை இறக்கை விரிப்புடன் எண்ணிப் பார்க்காமல் பிடரி சிலிர்ப்புடன் பொருத்திப் பார்த்திருக்கிறார்.

உலகப் பந்தின் தோற்றத்திற்கும் இருப்புக்கும் இயக்கத்திற்கும் காரண கர்த்தாவான சூரியனைச் சிங்கமாகச் சிலிர்த்தெழ வைத்திருக்கிறார். அந்தக் காட்சி ஒளியைத் தனது ரசிகனை அழைத்துச் சென்று காட்டுகிறார். சொல் தேரில் ஏறி, கண் என்னும் குதிரையை விரட்டிக் கொண்டு போய்க் கதிரவனைக் காணச் செய்கிறது வானவில் கே. ரவியின் கற்பனை.

சந்திர மண்டலத்தின் இயல் கண்டு தெளிய முடிந்த மனிதனால் இன்னும் சூரிய மண்டலத்தைத் தொட்டுப் பார்க்க இயலவில்லை. அந்த மண்டலத்திற்குள் கற்பனைத் தேரேறிச் சென்று கண்டுவரும் துணிச்சல் கொண்டவனாகக் கவிஞனையும் ரசிகனையும் படைத்துக் காட்டியுள்ளார்.

வானத்துப் பொங்கல் பானை

சூரிய மண்டலத்திற்குச் சென்று வந்த கவிஞனின் கற்பனைத் தேரால் சந்திர மண்டலத்திற்குச் செல்ல இயலவில்லை.

அதனால் குழந்தை மனத்துடன் தூரத்திலிருந்தே நிலாவைப் பார்க்கும் பாட்டினைப் புனைகிறார்.

வானத்துல பொங்கப்பானை வச்சவளக் காணோம்
ஆனமட்டும் தேடிப்புட்டேன் அகப்படலே தாயீ

என்று இயலாமைக்குள் மூழ்கிய முயற்சியை எடுத்துக்காட்டுகிறார்.

வட்ட நிலவைப் பார்த்து யாரோ வைத்துப் போன பொங்கல் என்னும் கற்பனைச் சிறகடிக்கும் கவிஞர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். நிலவுக்கு அருகிலோ அப்பாலோ யாரையும் காணாத காரணத்தால் பொங்கல் வைத்தவரைக் காணவில்லை என்னும் முடிவுக்கு வருகிறார்.

மண்ணுலகில் பொங்கல் வைத்து விண்ணுக்கு அனுப்பும் வீரியம் கொண்டவர்கள் நாம். நம்மால் விண்ணில் பொங்கல் வைத்தவளையா பார்க்க முடியாது. அந்தப் பொங்கல் வைத்தவளாக மகமாயியைக் காட்டும் கற்பனை உள்ளத்தின் வெளிப்பாடாகக் கவிதைக்கு நிறைவு தருகிறார்.

இயற்கைப் படைப்பான சந்திரனை மகமாயியின் அருளுடன் பொருத்திப் பார்க்கும் நம் மனக் கற்பனைக்கு முடிவு கட்டுவது என்பது அவ்வளவு எளிமையானது அல்ல. மகமாயிக்கு ஒரு வடிவம், காளிக்கு வேறு வடிவம், துர்காவுக்கு ஒரு வடிவம், பார்வதிக்கு வேறு வடிவம் என விதவிதமாய் வடிவத்தைப் புனையும் கற்பனைச் சிற்பகர்த்தாவாக இருக்கும் கவிஞனுக்குள் தான் எத்தனை கடவுள் கற்பனைகள்?

வீட்டுக்குள் அமர்ந்துகொண்டு சன்ன லூடே
விண்வெளியும் மண்வெளியும் இணைந்து நின்று
காட்டுகிற நாடகத்தைக் கண்டிருந்தேன்
காளியவள் நடனத்தைக் கவிதை ஏறு

என்று கற்பனையின் உருவத்தை வடிவ நேர்த்தியுடன் வெளிப்படுத்துகிறார்.

காளி என்ற கடவுளின் உருவத்தைக் கல்லிலோ சுதையிலோ உருவாக்கினாலும் உருவத்தின் நிறமாக நாம் எப்போதும் கறுப்பையே கண்டு மகிழ்கிறோம். கறுப்பு உருவம் கொண்ட காளிக்குப் பச்சைப் பட்டோ சிவப்புப் பட்டோ மஞ்சள் பட்டோ கருநீலப் பட்டோ என இடிக்கும் வண்ணத்தில் எடுப்பான

ஆடை கட்டி வணங்குகிறோம் என்னும் கற்பனை உலகத்தில் கவிதைத் தேரைச் செலுத்தி வரும் வானவில் கவிஞரிடம் தத்துவ வெளிப்பாடும் தாவி வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

தத்துவ உத்தி

மெய்யும் வாயும் கண்ணும் மூக்கும் செவியும் என்னும் ஐம்பொறிகளும் நமக்கு ஐந்து அறிவு. இந்த ஐந்து அறிவும் நம்மை அறிவு வழியில் செலுத்தாமல் புலன் உணர்வு வழியில் செலுத்துகின்றன. இந்த ஐந்து உணர்வு வழியையும் அடக்கி ஆள முடியும் என்றால் மௌன உலகில் மனம் போல் வாழலாம் என்னும் உண்மைத் தத்துவத்திற்கு உயிர் கொடுத்துள்ளார் கவிஞர் கே. ரவி.

மேய்ப்பதற்கோ ஐந்து பசுக்கள்
ஓட்டிக் கொண்டு வந்துள்ளேன்
தூக்கிப் பிடிக்க மாமலையாய் வினை
மூட்டை சுமந்து வந்துள்ளேன்
கோபியருடனே என்னையும்நீ
கூட்டிச் செல்வாயா கண்ணா
கூட்டிச் செல்வாயா

என்னும் கவிதைத் தத்துவ வெளியில் தன்னை உலவ விட முயன்றுள்ளார். அந்த முயற்சியின் விளைவாய்க் கண்ணனைச் சரண்டைவதே விடிவுக்கான வழி எனத் தேடிக் கண்டடைகிறார்.

மேய்ச்சலை நோக்கி ஓடும் ஐந்து பசுக்கள் என்னும் ஐம்புலனை ஒரு கயிற்றில் கட்டுவதற்குக் கண்ணனின் துணை வேண்டும் என்று கேட்கிறார்.

தூண் போன்ற ஆணவத்தைத் தூள் தூளாக்க எட்டி உதை
உள்ளேயிருந்து வெளியில் வா உறுமல் சத்தம் கேட்கிறதே
உலகத்தை உன் மடியிருத்தி யோகத்தில் நீ அமைதிசெய்

என்னும் அடிகளில் நரசிம்ம அவதாரத் தொன்மத்திற்குப் புது விளக்கம் தந்துள்ளார். எத்தனை உறுதியான தூணாக ஆணவம் இருந்தாலும் அந்த ஆணவம் ஒரே உதையில் இல்லாமல் போய் விடும் என்னும் உண்மை வெளிச்சத்தைத் தத்துவ வெளிச்சமாய் நம் மீது பாய்ச்சுகிறார். ஒழிகின்ற வேளையிலும் உறுமல் சத்தம்

கேட்கத்தான் செய்யும். அந்த உறுமல் சத்தத்தை யோக நிலையில் அமைதிப் படுத்து என்னும் யோகத் தத்துவத்திற்குப் பாதை போட்டுக் கொடுத்துள்ளார்.

உருவம் இல்லாததை உருவமாக்கல்

கடவுளுக்கு உருவம் இல்லை. எந்த உருவத்திலும் கடவுள் தோன்றுவதும் இல்லை. என்றாலும் உருவத்திற்குள்ளே கடவுள் இருக்கிறார் என்னும் எண்ணம் பெரும்பாலோரிடம் இருக்கிறது. அந்த எண்ணத்தின் வெளிப்பாடாகவே உருவம் இல்லாத கடவுளுக்குப் பல்வேறு உருவங்கள் அமைக்கப்படுவதுடன் அந்த உருவங்களில் கடவுளை அமர்த்துவதையும் காணமுடிகிறது.

நரசிம்மம் என்னும் தோற்றம் ஒரு குறியீட்டின் வடிவம். தொன்மக் கதைக்கு ஏற்ப உருவமைக்கப்பட்ட வடிவம். அந்த வடிவத்தில் வந்தால்தான் இரண்யன் என்ற அரக்கனை அழிக்க இயலும் என்னும் தொன்மத்திற்குப் புனையப்பட்ட அந்த வடிவம், ஆணவத்தை அழிப்பதற்கான வடிவப் புனைவு. மனிதனிடம் குடிகொள்ளும் ஆணவம் என்பது இறுகி இறுகிப் பெருந்தூண் போல் உறுதியாகும்போது அந்த ஆணவத்தை ஓர் உதையின் மூலம் அகற்றும் சிந்தனையின் வெளிப்பாடாக இந்தத் தொன்ம உருவம் புனையப்பட்டுள்ளது. மனித உடலும் சிங்க முகமும் கொண்ட ஓர் உருவத்தின் ஆற்றல், தொன்மத்தின்படி இரண்யனை வதைப்பதற்குத் தேவைப்பட்டிருக்கிறது. அதற்காக உருவமைக்கப்பட்ட இந்த வடிவத்தில் யோகநிலை அமைந்திருப்பதாகக் கண்டறிந்துள்ளார் கவிஞர்.

புலரும் ஒவ்வொரு பொழுதினையும் பொன்னாய் ஆக்கும் உனதுகை
களிப்பு வெள்ளம் பெருகிடவே காலை வணக்கம் சொல்கின்றேன்
ஒளியே வருக ஒளியின் ஊற்றுக் கண்ணானவனே மங்கலமே

என்னும் கவிதை அடிகளுக்குள் உருவாக்கப்பட்ட வடிவத்திற்கு அப்பாற்பட்ட ஒளி வடிவத்தைத் தெரிவித்துள்ள கவிஞர் அந்த ஒளியின் ஊற்றுக் கண்ணாகஒளி தோன்றும் இடமாகக் கடவுளைக் கண்டறிகிறார். அந்த ஒளி வெள்ளத்தில் நனைந்த காரணத்தால் கடவுளின் இருப்பை உருவத்திற்கு அப்பாற்பட்டதாக உணர்த்துகிறார்.

மனத்திற்கு அப்பால்

உடல் என்ற பொருளை இயக்க உயிர் என்ற ஒன்று இருக்கிறது. கண்ணுக்குத் தெரியும் உடலைக் கண்ணுக்குத் தெரியாத உயிர் இயக்குகிறது. இப்படிக் கண்ணுக்குத் தெரியாத உயிர் பற்றிய சிந்தனையின் இன்னொரு வடிவம்தான் கடவுள் வடிவம். உயிருக்கு இதுவரை உருவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் கடவுளுக்குப் பல்லாயிரம் உருவம் கொடுத்திருக்கிறோம். இந்தப் பல்லாயிரம் உருவத்திற்குள்ளும் ஒளியாக உயிராகக் கடவுளைக் காண்கிறோம். இந்தக் கடவுள் காட்சிக்குக் காரணியாக இருப்பது மனம். மனம் எங்கே இருக்கிறது என்னும் கேள்வி, விடைகாண இயலாக் கேள்வியாக நம் முன் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொக்கி நிற்கிறது.

மனம் கண்ணுக்குப் புலப்படவில்லை என்றால் அதன் வாயிலாக நிகழும் செயல்கள் அனைத்தும் கண்ணுக்குப் புலப்படுகின்றன. இந்தச் செயலாக்கத்தினால்தான் மனத்தை நாம் நம்புகிறோம். மனத்தை உருவப் படுத்த இயலவில்லை என்பது ஒரு புறமிருக்க மனம் இருந்து இயங்கும் இடம் எது என்றும் நம்மால் அடையாளப்படுத்த இயலவில்லை. மூளைக்குள் மனம் இருக்கிறதா, இதயத்திற்குள் மனம் இருக்கிறதா என்னும் கேள்வியும் நமது முகத்துக்கு முன்னால் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்
பல்லாயிரம் தெய்வம் அறிவொன்றே காண்

எனப் பாரதியைப் பாட வைத்த மனம் தான்,

வெடிபடு மண்டத் திடிபல தாளம் போடவெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம் பாடபாட்டில்
அடுபடு பொருளில் அடிபடும் ஒலியில் கூடக் களித்
தாடுங் காளீ சாமுண்டீ கங்காளீ

எனக் காளியைப் போற்றி ஊழிக் கூத்து ஆட வைக்கிறது. இப்படி ஒரு நிலையில் நில்லாத காரணத்தால்தான் மனத்தை அடக்கும் வழியறியாமல் பாரதியைப் போல் வானவில் கே. ரவியும் தவித்திருக்கிறார். அந்தத் தவிப்பின் வெளிப்பாடாகவே வெட்ட வெளியான கோவிலுக்குள் செல்வதற்கு மனத்தைக் கழற்றி வைக்க வேண்டும் என்கிறார்.

அந்தப் பக்கம் காலணிகள்
இந்தப் பக்கம் மனங்கள்

மனத்தைக் கழற்றி வைத்தால் மட்டுமே
ஆலயத்திற்குள் நுழைய அனுமதி

எந்தக் கோயிலுக் கிந்தச் சடங்கு
உண்மைக் கோயில் ஒரு குரல் சொன்னது

மனத்தைக் கழற்றி வைத்துச் செல்ல
அடையாள அட்டை தருபவன் இல்லை
மாறிப் போய்விட்டால்....?

கோயிலுக்குள்ளே செல்பவர் யாரும்
மீண்டும் வெளியே வருவதில்லையாம்வெறும்
படிதான் அந்தக் கோயிலேயாம்
படியைக் கடந்தால் பாழ் வெளியாம்

என்னும் பாழ்வெளியை ஞானரதமேறிக் கண்டு பிடித்த கவிஞர் இந்த வானவில் கே. ரவி.

சித்த மனநிலை

சிரிப்பவனைப் பார்த்து எல்லோரும் மகிழ்கிறோம். தனக்குத் தானே சிரித்துக் கொள்பவனைப் பார்த்து எல்லோரும் சிரிக்கிறோம்அவன் நம்மைப் பார்த்துத்தான் சிரிக்கிறான் என்பதை அறியாமல். நமக்கு நாமே சில விதிகளை வகுத்துக்கொண்டு அந்த விதி என்னும் குண்டு சட்டுக்குள் நாம் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். விட்டு விடுதலையாகும் விடுதலை எண்ணம் கொண்ட எந்த மனிதனும் இந்த விதிக்கு உட்பட்டவனாக இருக்க மாட்டான். உலக நியதி என்னும் விதிக்கு அப்பாற்பட்டு இயங்கும் அவனைப் பார்த்து, மனநலம் பாதித்தவன் என மனநலம் பாதித்த நிலையில் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

உலக மனிதர்கள் ஆடை கட்டித்தான் அலைய வேண்டும் என்னும் கட்டாயம் என்ன? அப்படி ஆடை கட்டித்தான் அலைய வேண்டும் என்று கடவுள் நினைத்திருந்தால் ஒரு சட்டையைப் போட்டு அனுப்பியிருக்க மாட்டானா என்னும்

உள்ளுணர்வுத் தூண்டலினால் ஆடையைக் கூடப் பாரம் என்று ஒதுக்கிவிட்டுத் தனக்குத்தானே சிரித்துக் கொள்கிறான்.

குளித்தால் அழுக்குப் போகிறது. குளித்த ஆறு அழுக்காகிறது. ஆற்றை அழுக்காக்கியது அல்லாமல் அழுக்கு முழுவதுமாகப் போய்விட்டதா என்னும் வினா எழுப்பினால், இல்லை என்பதுதான் விடையாக நம் முன் வந்து நிற்கிறது. ஆம்! போன அழுக்கு மீண்டும் வந்து ஒட்டிக் கொள்கிறது. மீண்டும் மீண்டும் ஆற்றை அழுக்காக்கவே குளித்துக் கொண்டிருக்கிறோம் என நினைத்த அவன், குளிப்பதை நிறுத்திவிட்டுத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டிருக்கிறான்.

வயிற்றுக்கு ஏதோ தேவை என்று நினைத்தால் எதையோ கை எடுத்து வாய்க்குள் வைக்கிறது. வாய்க்குள் வைத்த பொருள் நியூட்டனின் விதிப்படி கீழ்நோக்கிச் சென்று முடிவில் வெளியே வருகிறது. இந்தச் சித்தச் சிந்தனையில் அவன் இருப்பதால் உணவுக்குத் தேவை ஏற்படவில்லை. எப்போதும் தனக்குத்தானே சிரித்துக் கொண்டிருக்கிறான்.

இந்த விடைகளுக்கான வினாவாக நம்மிடம் கேள்வி எழுப்புகிறார் வானவில் கே. ரவி.

தனக்குத் தானே சிரித்துக் கொள்ளும்
வழக்கம் உனக்குண்டா?

கணக்குப் போட்டுப் பார்த்தால் இங்கே
கடைசி வரையில் நீ
பிணக்குகளோடே வாழ்ந்து முடிவாய்
பிரச்சினை நீயே தான்
உனக்குப் பிறகும் உலகு தொடரும்
என்ன செய்வாய் நீ
உன்னை விட்டு வெளியே வா, நாம்
உரக்கச் சிரித்திடலாம்

என்னும் தெளிவில் உண்மை நிலை உணர்த்தப்படுகிறது. வாழ்க்கைக் கணக்கில் எப்போதும் பிணக்குத்தான் மிச்சம் என்பதைத் தெளிந்து விட்டாயா? நீ இருக்க மாட்டாய்! இந்த உலகம் இருக்கும்! அப்படி என்றால் உனக்குள் நீ இருக்கிறாயா? இல்லை. உனக்குள் நீ இல்லை, இல்லவே இல்லை. உனக்குள் இருந்து நீ வெளியேறிய பிறகு இந்த உடல் உனக்குச்

சொந்தமில்லை. மண்ணுக்குச் சொந்தம். மண்ணாகிப் போகும் உடலுக்குள் இருந்த நீ எங்கே இருக்கிறாய்? விடை காண முடியா இந்தக் கேள்வியை எழுப்புகிறது வானவில் கவிஞரின் மனம். இந்தக் கேள்விக்கான விடை தெரியாத மாணவனாய்த் தவிக்கின்ற கவிஞர், உன்னை விட்டுவிடு, வெட்ட வெளிக்கு வா எனச் சித்த மனநிலையில் நிறைந்திருக்கிறார்.

வானவில் கே. ரவியின் கவிதைகளுக்கு என்று தனி உத்தி எதையும் அவர் தேடிப் போய்ச் சேர்த்துக் கொள்ளவில்லை. எந்த உத்தியை எந்த விகிதத்தில் கலக்க வேண்டும் என்ற எண்ணக் கலவைக்கு அப்பாற்பட்ட நிலையில் அவரது கவிதைகள் உயிருக்குள் நுழைந்து நுழைந்து வெளியே வருகின்றன. உயர்ந்த எண்ணம், தாழ்ந்த எண்ணம் என்னும் வேறுபாட்டுக்கு அப்பால் வெட்ட வெளியில் அவரது கவிதைகள் தோன்றுகின்றன. இந்தச் சூழலில் இவரது கவிதைகள் தோன்றுகின்றன என எந்தத் திறனாய்வாளனாலும் இறுதியுரை எழுதிவிட இயலாது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடைப்பட்ட ஒரு வெளியில் இவரது கவிதை, சிறகு விரித்துப் பறக்கிறது. கனவு நிலை உத்தி, தத்துவ உத்தி, உருவமில்லாததை உருவாக்கல், சித்த மனநிலை என எதையெல்லாம் நான் எடுத்துச் சொன்னாலும் இந்தச் சிமிழுக்குள் நான் அடங்கமாட்டேன் என்னும் எத்தனிப்புடன் இவரது கவிதைச் சிறகுகள் எப்போதும் படபடவென அடித்துக்கொண்டே இருக்கின்றன.

❖

கவிஞர் ரவியின் கவிதைகளில் – கவிஞர்கள்

•

முனைவர் சு.முருகலெட்சுமி
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஏபிசி மகாலட்சுமி, மகளிர்கல்லூரி, தூத்துக்குடி.

கவிஞர் 'வானவில்' ரவியின் 'கானல் நீரைக் கடந்து', எனும் படைப்பு நூலின் ஐந்தாவது நூல், "சொற்களுக்குள் ஏறிக் கொள்". இதில் 12 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஒன்பதாவது கட்டுரை, 'என்ன தவம் செய்தேன்.' பல கவி அரங்குகளில் ரவியின் மனதைத் தொட்ட கவிஞர்கள் நிகழ்த்திய கவிதைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கவிஞர் ரவி அவர்கள், 1965ஆம் ஆண்டில் கவிதை உலகிற்கு அறிமுகமானவர். இலக்கியத்தில் நாட்டம் கொண்டவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் புலமை உடையவர். சட்டம், தத்துவம், சமூகம், இலக்கியம் எனப் பலதுறைகளிலும் இவரது படைப்புகள் பரவியிருக்கின்றன.

இவர் இருபத்தைந்தது ஆண்டுகளாக, 'வானவில்' பண்பாட்டு மையம்' என்ற அமைப்பின் மூலம், ஆண்டுதோறும், ஜதிபல்லக்கில் மகாகவி பாரதியார் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று, பாரதிக்கு மிகச் சிறப்பாக விழா நடத்தி

வரும் பாரதி அன்பர். இவர் சிறந்த கவிஞர் மட்டுமன்றி, வழக்கறிஞருமாவார்.

கவிஞர் ரவி அவர்கள்

என் சொற்களுக்குள் ஏறிக்கொள்
சொர்க்கத்தை காட்டுகிறேன் - என்
கற்பனைப் புரவியை உன்
கண்களில் பூட்டுகிறேன் (ப.4)

என, 'என்னுரைப் பகுதி'யில் கூறுகிறார். இலக்கியக் கடலில், தாம் ரசித்த கவிதைகளை நாமும் ரசிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கூறுகிறார்.

'என்ன தவம் செய்தேன்' என்கிற கட்டுரை ரவியின் இதயம். அவரது சமகாலக் கவிஞர்களுடனான எவருக்கோ, சமபந்தி விருந்து. எங்கோ இருக்கிற எவருக்கோ ஒருவனைப் பாராட்ட மனம் வரும். ஆனால், பலருக்குப் பக்கத்திலேயே இருக்கிறவரின் மின்னல் கூட கண்ணுக்குத் தெரிவதில்லை! தம் கவிதைத் தோழர்களின் காலத்தை வென்ற கவிதை உணர்வை, பட்டாம்பூச்சியின் பின்னால், விழிகள் நிறைய வியப்புடன் திரியும் குழந்தை மனத்துடன் ரவி சேகரித்து வைத்திருக்கும் நேர்த்தி அபூர்வமானது! "கடந்த கால பாரதியைப் பாராட்டும் பரபரப்பில், பலர் நிகழ்கால பாரதிகளை நிராகரித்து விடுகிறார்கள். ஆனால், ரவி நிகழ்கால பாரதிகளுக்கும் நியாயம் வழங்கி இருக்கிறார்" என சுகி.சிவம் அவர்கள் கூறியுள்ளார். (ப– 607)

மேலும் ரவி "உள்நோக்கம் இல்லாதவர் உள்ளொளி மிக்கவர்" (ப–609) என்றும் கூறுகிறார்.

பள்ளிப்பருவம்

1968ஆம் ஆண்டு, சென்னை மந்தைவெளியில், 'செயிண்ட் மேரிஸ்' சாலையில் ஓர் ஒண்டுக் குடித்தனம், சிறிய அறை. அந்த இல்லத்துக்குரியவர் அழைத்ததால் அங்கே சென்றார். அந்த இல்லத்தில்தான், பாரதி கலைக்கழகம் நடைபெற்றது. அங்கு 25க்கும் மேற்பட்ட கவிஞர்கள் கவி இசைத்தனர். கவிஞர் ரவி, 'சைகையில் பொருளுணர்' என்ற தலைப்பில் கவிதையை வாசித்தார்.

அன்றொரு நாள் ஆலமரம் விரித்தநிழல்
அமைதியுடன் அழகுமிக அமைந்த சூழல் (ப-713)

சிவபெருமானை நினைவு கூர்ந்து, அவர் பாடிய அடிகளில் மகிழ்ந்து, அவரையும் அத்திருக்கூட்டத்தில் இணைத்துக் கொள்ள அந்த அரங்கமும் அவரும் இசைந்தபோது, ரவியின் உள்ளிருந்து "தேவாதி தேவர்கள் பூமாரி பொழிந்தனர். என்ன தவம் செய்தேன்?" என நினைத்துக் கூறுகிறார்.

பாரதிக்கு நிகரானவர்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பாரதி கலைக்கழத்தை நடத்தி வரும் பண்பாளர். நல்ல கவிதைவரி கேட்டால் அதற்காக ஒரு விழாவே கொண்டாட வேண்டும் என்று ஆசைப்படுபவர். தாம் எழுதுவதை மட்டும் மற்றவர்கள் படிக்க வேண்டும், கேட்க வேண்டும் என்று நினைப்பவர் மத்தியில், பிறர் கவிதைகளையும் கேட்டு, ரசித்து, ஒரு கவியரங்கமே நடத்த நினைப்பவர் பாரதி சுராஜ். நேர்மையில், பாரதிக்கு அவர் நிகரானவர் எனக் கூறுவதை,

எதுவானாலும் நினைத்தவண்ணமே நினைத்த
காணமே, நிகழ்த்திச் சொல்லும் நேர்மைத் திறனில்
பாரதிக்கு நிகரானவர், வாக்கிலும் சரி,
வாழ்விலும் சரி, வஞ்சனையின்றி வாடும்
உத்தமர். அவரை மீண்டும் வணங்குகிறேன் (ப-714),

என ரவி அவர்கள் கூறுவதைக் காணலாம்.

இசைப் பாடல்கள் பாடக் காரணமானவர்

பாரதி கலைஅரங்கத்தில் கவிதை வாசித்து, அந்தக் கவிஞர்களுள் ஒருவராக, ரவி அவர்களை மாற்றிய அந்த இல்லத்துக்குரியவர் தேவ நாராயணன். கணீரென்ற குரலில் இவர் பாடும் பாடல்கள் கேட்போர் மனதில் கிளர்ச்சியுண்டாக்கும்.

பாரதியே ஒரு பாரதம் - அவன்
பாட்டெல்லாம் தமிழ் மாருதம்
பாரத மண்ணின் காவிய வளம் தான்
பாரதி தோன்றக் காரணம் (ப-714)

என்று அமீர் கல்யாணி ராகத்தில் தொடங்கிப் பிறகு ராகமாலிகையாக, பாரதியின் சிறப்பையெல்லாம் இவர் பாடக் கேட்கும் ஒவ்வொரு முறையும், ரவி மெய்மறந்து பரவசத்தில் ஆழ்ந்து விடுவார்! அதுவும் இந்தப் பாடலின் உச்சகட்ட வரி, பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியது.

ஏட்டில் எழுத்தில் இனிவரப் போகும்
எழுச்சிகள் எல்லாம் பாரதி

மேலும்,

நிச்சய மானபரிசுச் சீட்டு
என்னிரு கைகளடா *(ப–715)*

என்று முடிக்கும் போதும், கேட்போர் நெஞ்சில் நம்பிக்கை ஒளி பிறக்கும்.

அன்று முதல், இன்று வரை, அந்தக் கழகத்தின் அரங்குகளில் எத்தனை இனிய கவிதைகளைக் கேட்டுள்ளார். எத்தனை நல்ல கவிஞர்களைக் கண்டு, கேட்டு மகிழ்ந்துள்ளார். இதற்கு, "நான் என்ன தவம் செய்தேன்?" எனக் கவிஞர் கூறுகிறார்.

நினைத்தவுடன் கவிபாடுபவர்

கவி அரங்குகளில், சில நேரம், ஒரு பெரியவர், பேருந்துப் பயணச் சீட்டைக் கையில் வைத்துக் கொண்டு அதைப் பார்த்துக் கவிதை படிக்கக்கேட்டு வியந்துள்ளார் ரவி. அந்தப் பெரியவர்தான், தமிழில் காளமேகம் போல், நினைத்தவுடன் கவிபாடும் ஆசு கவி சந்தக்கவிமாமணி தமிழழகன் பேருந்தில் வரும் போது, தமக்குத் தோன்றும் வரிகளைப் பயணச் சீட்டின் பின்புறம் எழுதி வைத்து, அரங்குக்கு வந்ததும் அதைப் படித்துக் காட்டுவார். துண்டுக் கவிதை அல்லது துக்கடாக் கவிதை என்று துச்சப்படுத்திவிட முடியாத கற்கண்டுக் கவிதைகளாகவும் கனமான செய்யுள்களாகவும் அவையிருக்கும். சொல்விளையாட்டு, இவருக்குக் கைவந்த கலை. குழந்தை போல், சில்மிஷங்களும் செய்து மகிழும் குழந்தை மனம் கொண்டவர். தமிழ்த் திரைப்படங்களில், கவர்ச்சி நடனக் காட்சிகளில் 'சில்க் ஸ்மிதா' என்ற நடிகை மிகவும் பிரபலமாயிருந்த காலக் கட்டத்தில் 'சிலுக்கே பெரிதும் சிறப்பு' என்று ஈற்றடியில்

வருமாறு இவர் புனைந்த வெண்பாக்களே இவருடைய சொல் சாதுரியத்துக்குத் தக்க சான்றுகள் (ப–715)

இராமனுக்குக் கனி தந்த சபரி மூதாட்டி, ஒவ்வொரு கனியையும் தான் கடித்துச் சோதித்துப் பார்த்துத் தந்தாள். அந்த எச்சில் கனிகளை அப்படியே ஏற்றுக் கொண்டான் எம்பிரான். இதைச் சொல்கிறார் தமிழழகன்.

தின்றுதின்று பார்த்தவற்றுள் தேர்ந்த சுவையாம் கனியை
அன்று தின்னத் தந்தாள் அரும்சபரி - என்றே
விலக்கேதும் இன்றியுண்டான் வில்ராமன் அவ்வெச்
சிலுக்கே பெரிதும் சிறப்பு

தாயுள்ளம் உடையவர்

பாரதி கலைக் கழகம் என்றால், **அமரர் நா.சீ.வரதராஜன்** என்ற பீஷ்மரை நினைக்காமல் இருக்க முடியாது! நல்ல கவிஞர். பரமரசிகர். இளம் கவிஞர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கும் தாயுள்ளம் கொண்டவர். உலகில் மற்ற இன்பங்களை எல்லாவற்றையும் விடக் கவிதையின்பமே சிறந்தது என்று கவிதையிலேயே பாடியவர் என்பதை,

வானம் இனிது வானத்திலேதவழும்
வண்ண நிலா இனிது மற்றுமங்கு கண்சிமிட்டும்
மீனக் குவையினிது மேகங்கள் நடையினிது
வெளியெல்லாம் ஒளிமேவும் வெய்யோன் வரவினிது
கானப் பறவையினம் காடுமலையருவி
கழனி மரக்கூட்டம் கலகலெனும் சிற்றோடை
ஏன் இப்புவிகாட்டும் இயற்கையெல்லாம் இனிதே
என்றாலும் கவியினிமைக் கிவையெல்லாம் ஈடாமோ (ப.717)

எனக் கூறுவதில், உலகில் உள்ள எல்லா இன்பங்களையும் விடச் சிறந்த இன்பம் கவிதையே எனக் கூறுகிறார்.

அடக்கமே உருவானவர்

பாரதியைப் பற்றி நினைத்ததுமே, நினைவிற்கு வரும் ஒரு சொற்றொடர், அறச்சீற்றம். மண்மகள் அறியாத வண்ணச் சீரடியின் ஒரு சிலம்பை விட்டெறிந்து, மன்னன் முன்வாதாடி, நீதி தவறிய ஊரையே தீக்கிரையாக்கிய கண்ணகியின் கற்புக் கனலில் இருந்து பிரிந்த ஒரு பொறி, பல்லாண்டுக் காலம் சிறிய

அக்கினிக் குஞ்சாய் தவம் இருந்து, பிறகு ஒரு காட்டையே எரித்து நிர்மூலமாக்கும் கவிதை நெருப்பாய்ப் பேருருக் கொண்டு வளர்ந்ததோ என்று மலைக்க வைக்கும். அறச்சீற்றம் அது. அச்சத்தைத் தவிடு பொடியாக்கும் அறச்சீற்றத்தின் உச்சக்கட்டமாகத் திகழ்ந்த பாரதியை, உச்சிமேல் வைத்துப் போற்றும் கவிஞர்கள் நடுவே, அந்த நெருப்பின் மிச்சமாகக் கவிஞர் ரவி பார்த்தது **புதுவயல் செல்லப்பனைத்தான்.** இலக்கணத்துக்கும் கவிதைக்கும் இடையே ஏற்படும் 'போராட்டம்' பற்றி ஆவேசமாகப் பேசுகிறார்.

இயன்ற வரையில் இலக்கணமும்
இருக்கும் மரபில் எழுதிடலாம்
இயலாவிட்டால் உயிர்மட்டும்
இருந்தால் போதும் என விடலாம்

உலகப்புகழ் கொண்டவர்

பாரதியைப் பற்றி எத்தனையோ நூல்கள் வந்துள்ளன. ஆனால், அவற்றுள் முதல் வரிசையில் உள்ள ஒரு சிறிய நூல். பாரதியின் அறிவியல். ஆசிரியர் – ரவியின் இனிய நண்பர், நல்ல **கவிஞர் இலந்தை ராமசாமி.** பொருநை வெள்ளம், சந்த வசந்தம் எனப் பல கவிதைத் திரட்டுகள் இவர் வெளியிட்டுள்ளார். குழந்தைகளும் பாடும்படி பாரதியை இவர் சித்தரிக்கும் அடிகள் பாராட்டுக்குரியவை.

முடுக்கி விட்ட வார்த்தைகள்
மூச்சு விட்டு வாழவே
சொடுக்கி விட்ட சாரதி
சுப்ரமண்ய பாரதி

மேலும், பொருநை நதியைப் பற்றிய இவர் கவிதையில் கவிதையே ஒரு நதியாக ஓடும் லயத்தை உணரமுடிகிறது. 'சந்த வசந்தம்' என்ற இணைய தளம் அமைத்து, உலகமெங்கும் உள்ள தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் தங்கள் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ள ஊடகம் உருவாக்கித் தந்து, உலகப்புகழ் கொண்டவர்.

இளைஞராகவே தோற்றமளிப்பவர்

எப்பொழுதும் சிரித்த முகம், தோற்றத்திலும், கவிச் சீற்றத்திலும் எப்பொழுதும் இளைஞராகவே இருப்பார்.

இவர் கவிதைகளில் நகைச்சுவை கலந்த குறும்பு ஆங்காங்கே இழையோடும். ரவி அவர்கள் நினைத்து நினைத்து வியக்கும் இவரது பாடல் அடிகள்

அப்படி ஒருபுயல் வரவேண்டும் - சில
ஆலமரங்கள் விழவேண்டும் *(ப. 725)*

மற்றொரு பாடல், இக்கவிஞருடைய தேசப்பக்தி பாடல்,

எனது கோத்திரம் பாரத கோத்திரம்
எனது தோத்திரம் தேசிய தோத்திரம் *(ப. 725)*

மேலும் குழந்தைகளுக்கும் செய்யுள்கள் செதுக்கித் தருவதில் இவர் வல்லவர் என்பதற்கு

அழகு மழைக் கப்பல் - அம்மா
ஆசை மழைக் கப்பல் *(ப. 725)*

மேலும் முயற்சி பற்றி இவர் கூறும் அருமையான பாடல்

ஊசிக் காதில் நுழைகிற நூல்தான்
உடையைத் தைத்து முடிக்கிறது *(ப. 726)*

இப்படிப்பட்ட கவிஞர்களின் கவிதைகளைக் கேட்டுக் கேட்டு மகிழாமல், காலத்தைத் தொலைந்து விடலமா? அந்த அற்புதக் கவிஞர் இளையவன், எப்பொழுதும் கவிஞர் ரவியின் இதயத்தின் ஒரு மூலையில் அமர்ந்தபடி, புன் முறுவலோடு ஏதாவது கவிதை சொல்லிக் கொண்டே இருப்பார்.

எளிமையாகச் சித்திரிப்பவர்

விருத்தப்பாவின் வீச்சில் மட்டுமின்றி, தன் உள்ளத்தின் கிளர்ச்சிகளை, உரையாடல் போல் எளிமையாகச் சித்திரிப்பதில் **மதிவண்ணன்** வல்லவர்.

எத்தனை கட்டளை எத்தனை முறைகள்
எத்தனை தடவை சொல்லுவது மனமே
எப்படி உனைநான் வெல்லுவது

நுண்கலை

சொல்லோவியம் தீட்டுவதோடு, நல்லோவியம் தீட்டும் நுண்கலையிலும் வல்லவர் **கவிஞர் மயன்.** பக்திமணம் கமழ,

அன்னை சக்தியைக் கவிதைகளில் போற்றி வணங்கும் இவர், எளிமையான சொற்களில் வலிமையான பாடல்கள் இயற்றுபவர். இவர், பாரதியைப் பற்றிச் சொல்லும் அடிகள் நெஞ்சில் என்றும் நீங்காமல் இருக்கும்!

தேசபக்தி தெய்வ பக்தி
தேர்ந்த ஞான பக்தியும்
நேசமிகத் தமிழில் பக்தி
நெஞ்சில் ஈர்க்கும் கவிதையில்
பாசமிக்க பக்தியோடு
பாரதி பிறந்தனன்
மாசில்லாத மாக்கவியாய்
மண்ணுலகில் சிறந்தனன்

ஆற்றொழுக்கு

கவிதை நூல்களும் பல உரைநடை நூல்களும் படைத்துள்ள **வரத. கோவிந்தராஜன்,** கவிதைகளில், ஓர் ஆற்றொழுக்கம் புலப்படும் அதுவும், அருவி பற்றிய பாடலில்

உச்சி மலையிருந்தே - அருவி
ஓடி வருகுதுபார் (ப. 733)

என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

பக்திக் கவிதை

அமரர் **பாரதி ராகவி** அவர்கள், பக்தி ரசம் ததும்ப எழுதிய நல்ல பெண்பாற் கவிஞர். அதற்குச் சான்றாக ஒரு கவிதை.

இதமே செயலில் எழுக உனது பதமே மனதில் பதிக -
மதமே பதியா நிலையே தருக நிதமும்
சதமா யடைந்தேன் சரண் (ப-738)

இவர், உலகத்தை விட்டுப் போகப்போகிறோம் என முதலிலே – தெரிந்ததோ என்னமோ அவர் உயிரோடு இருக்கும் போதே எழுதியுள்ளார், அதில், இரண்டு அடி கவிதை

"எனக்கு வழிவிடுங்கள் என் பயணம் மிக முக்கியம்
அடுத்த நூற்றாண்டை நோக்கி அவசரமாய்ப் போகின்றேன்"
இரங்கற்பா எழுதியவர்: (ப-738)

கவிஞர் சக்தி ஒரு சிறந்த படைப்பாளி **'சித்தார்த்தன்'** என்ற புனைப் பெயரில் நல்ல சிறுகதைகளும் நாவல்களும் எழுதியவர். 'ஆழிசூழ் அமெரிக்கா' என்ற பயணக்கட்டுரை நூலினைப் படைத்தவர்.

பாடிப் பறந்த குயிலொன்று - வானுள்
ஓடி மறைந்து விட்டதின்று *(ப-739)*

என்று டாக்டர் எம்.எஸ்.சுப்புலட்சுமி பற்றிய இவருடைய இரங்கற்பா, இதயத்தை நெகிழச் செய்தது! நிலநடுக்கத்தில் பல உயிர்கள் பலியான செய்தியை, உள்நடுக்கத்தோடு பாடிய கவிதை உள்ளம் உருக்குது!

அன்னையே பூமியே அதிர்ந்து பொருமுகின்றாய்
அநியாயம், அணியணியாய் விழுங்குகின்றாய் எம்மை"

மூன்று கவிஞர்கள்

ஆசான், அமரர், தண்டமிழ்க் கொண்டல், கவிமாமணி, **சிதம்பரம் சுவாமிநாதன்** அவர்களால், வெண்பா எழுதியவர்கள் **சிவம், அமிர்தலிங்கம், ரவி** ஆகியோர். சிவம் நல்ல கவிதை எழுதக்கூடியவர் என்பதற்கு

கண்ணளந்து நின்றருந்தாள் காதலித்தேன்
கையளந்து நானவளைக் காதலித்தேன்

என்று சுகிசிவம் கனவைச் சொல்லிய பாங்கினை இன்னும் வியக்கிறார் கவிஞர் ரவி.

1966-67இல், சிவத்திற்குக் கவிதையிலும், நண்பன் அமிர்தலிங்கத்திற்குச் சொற்பொழிவுக் கலையிலுமாக ஆர்வம் மிக்கிருந்தது. ஆனால், கதை மாறிப்போனது. சிவம், கவிதை யிலிருந்து, உலகம் போற்றும் சொற்பொழிவுத் திலகம் 'சுகி சிவம்' ஆகவும் அமிர்தலிங்கமோ, எந்தக் கவியரங்கம் எங்கு நடந்தாலும், இவனின்றி இல்லை என்று சொல்லும்படி, **'வசந்தப் பிரியன்'** ஆகவும் மாறிவிட்ட ரச வாதத்தை எண்ணி, வியக்கிறார் ரவி. 'ஆசான்' என்ற தலைப்பில், 'வசந்தப்பிரியன்' வடித்த அடிகள் சிறப்பு மிக்கவை.

"ஐந்தெழுத்துச் சொல்லாகான் எனக்கு மட்டுமா - இந்த
அகிலத்தில் எல்லார்க்கும் அவன் போலக் கிட்டுமா,

ஐந்தெழுத்து மனசாட்சி அடியேனின் ஆசான் - அது
நைந்து விடின் மனவானில் ஓட்டைவிடும் ஓசோன்” *(ப. 745)*

முருகு சரவணன், சக்தி ராஜேஸ்வரி, போஸ்குமார், கடலூர் தேவநாதன், அய்யாறு வாசுதேவன் எனக் கவிஞர்கள் பட்டியல் நீண்டு கொண்டே வருகின்றது. இன்னும், கவிஞர்கள் கலைக்கழகம் என்ற உலைக்களத்தில் அவர்கள் பட்டை தீட்டப்படுகிறார்கள். நாளைய வைரங்களாக ஜொலிக்கப் போகிறார்கள்! இவர்களை வணங்குகிறேன். வாழ்த்துகிறேன்.

புவி வாழ்க்கை கனவென்று புரிந்து கொண்டும்
புத்துணர்வு குன்றாத ஊக்கத்தோடு
கவிதைக்கே குன்றாத ஊக்கத்தோடு
கவிதைக்கே நான் என்றும் மீளா ஆளாய்
கைகூப்பிச் சரணடைந்து வாழ்கின்றேனே

எனக் கவிஞர் ரவி அவர்கள் வாழ்த்துகிறார்.

பாரதிக்கு நிகரானவர் ‘வானவில்’ ரவி. பாரதி பாடல்களில் தம்மைப் பறிகொடுத்தவர். நினைத்தவுடன் கவிபாடும் ஆற்றலுடையவர். இவரது கவிதைகளில் எளிமையும் ஆற்றொழுக்கும் அமைந்திருக்கும்.

❖

காற்று வாங்கப் போனேன் – தன் வரலாற்றுக் கவிதையியல் (கவிதையும் கவிஞரும்)

•

முனைவர் ப.சு. மூவேந்தன்
தமிழ் இணைப்பேராசிரியர், அ.சு.சு. அரசு கலைக்கல்லூரி,
திருத்தணி–631209, திருவள்ளூர் மாவட்டம்.

தமிழ்க்கவிதைகள் பரந்துபட்ட அளவின. அவை காலத்தால், கருத்தால், சொல்லால் மரபினைப் பின்பற்றி வருபவை. தமிழ்க்கவிதைப் பரப்பில் கவிஞர்கள் பலரும் தங்கள் பங்களிப்பினைத் திறம்படச் செய்து. இலக்கிய வரலாற்றில் நிலைத்த புகழைப் பெற்றுத் திகழ்கிறார்கள். அவ்வகையில் பாரதியின் அடியொற்றி, சங்கத் தமிழின் கவிதை மரபு மாறாமல் தமிழ்க்கவிதைகள் படைத்துவரும் கவிஞர் 'வானவில்' கே. ரவியின், 'காற்று வாங்கப் போனேன்' என்னும் தலைப்பில் அமைந்த தன்வரலாற்றுப் பனுவலின்வழி உணர்த்தப்படும் 'கவிஞரும் கவிதையும்' குறித்த கருத்தியல்கள் இக்கட்டுரைக்குப் பொருளாக அமைந்துள்ளன.

கவிதைச் சிறப்பு

தமிழ்க்கவிதை தொன்மையானது. மரபானது. செவ்வியல் தன்மை நிரம்பியது. இயற்கையின் எழிலில், அதன் அழகியல் வனப்பில் தம் மனங்களைப் பறிகொடுத்துத் திளைத்த மானுடச்

சமுதாயம் உருவாக்கிய மிகச்சிறந்த கலை வடிவம் கவிதை ஆகும். சொல், பொருள், உணர்வு, அணி ஆகியவற்றின் அடிப்படையில் படைப்பாற்றல் மிக்க ஆளுமையாளர் செப்பம் செய்து தருவதே செய்யுள் ஆகும். செய்யுள் வடிவத்தில் செப்பம் செய்து எழுதியவற்றிற்குக் கவிதை என்னும் சொல் வழக்காறு உள்ளது. இலக்கிய வடிவங்களில் கவிதையே எளிமையும், அழகும் நிரம்பியதாகும். உலக இலக்கியங்களில் கவிதையே 'கலைகளின் அரசி' என்று போற்றப்படுகின்றது. அது உணர்ச்சியும், கற்பனையும் நிறைந்து, கருத்தியலில் மானுடச் சமூகத்தைப் பற்றியதாக அமைகின்றபோது, காலத்தால் அழியாத நிலைபேறு பெறுகிறது!

கவிதை என்னும் வடிவத்தின் தொன்மை வடிவமான செய்யுளுக்குரிய இலக்கண விதியை,

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

(நன்னூல்.)

என்று நன்னூல் வகுத்துரைக்கிறது. இதில், சொல் என்பது கருவி; பொருள் என்பது கருத்து; உணர்வு என்பது மெய்ப்பாடு; அணி என்பது கவிதையழகு என்ற வகையினில் பொருத்திப் பார்த்தால் கவிதை என்பது சொல், பொருள், உணர்வு, அணி ஆகியவற்றின் ஒருங்கமைவாக விளங்கி நிற்றலை உணரலாம். இதனையே வேறுவகையில்,

உள்ளத் துள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழால் உண்மை
தெரிந்துரைப்பது கவிதை

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ப. 14)

என்று குறிப்பிடுகின்றார் கவிமணி. இது உள்ளத்திலிருந்து பீறிட்டெழுந்து வரும் உணர்ச்சியின் அழகிய வெளிப்பாடு ஆகும். கவிதை, கற்போர் உள்ளத்தே ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, அவர்கள் உள்ளத்தில் அழுத்தமான மன உணர்வுப் பதிவுகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்திட வேண்டும். அதுவே சிறந்த கவிதையின் பண்பும் பயனும் ஆகும்.

காற்று வாங்கப் போனேன்

இலக்கியத்தின் தனித்த அடையாளமாகத் திகழ்வது தன் வரலாற்று நூல்கள் ஆகும். தன் வரலாற்று நூல்கள் பழுத்த அனுபவத்தின் கனியாக விளங்குபவை. தனிமனித வாழ்வியல் வளர்நிலை அனுபவங்கள், கசப்புகள், ஏற்றங்கள், ஏமாற்றங்கள், சுவாரசியமான நிகழ்வுகள், தோல்விகள், வெற்றிகள், போராட்டங்கள் ஆகியனவற்றை எடுத்துரைப்பதே தன் வரலாற்றின் அடிப்படையாக அமைந்துள்ளன.

'காற்று வாங்கப் போனேன்' என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல், கவிஞர், 'வானவில்' கே. ரவியின் கவிதைப் பயணத்தைத் 'தன் வரலாற்றின் வழியாக எடுத்துரைக்கிறது. தான் எதிர்கொண்ட கலை–, இலக்கிய வாழ்க்கை அனுபவங்களை இந்நூலின் வழியாக எடுத்துரைக்கிறார். கவிஞரின் கவிதைக்கலையின் சூழலை, பின்னணிகளை, அதற்குரிய காரணங்களை அறிந்துகொள்வதற்கான கையேடாக இந்நூல் திகழ்கிறது.

இந்நூல் 06.06.2014 முதல் 10.11.2014 வரை 'வல்லமை' மின்னிதழில், 53 பகுதிகளாகத் தொடராக வெளிவந்து, 2018இல் நூலாக்கம் பெற்றுள்ளது.

வழக்குரைஞர் பணியோடு, கவிதைப்பணியே எப் பணிக்கும் முதற்பணியாக, தலையாய பணியாக ஆற்றிவரும் நாடறிந்த நற்றமிழ்க்கவிஞர், இலக்கியம் மீதான தமது கலை ஆர்வத்தையும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் செழித்தோங்கி விளங்கிநின்ற கலைப்பயணத்தையும், இல்லறம், வாழ்வியல், நட்பியல், ஆன்மீகவியல் போன்றனவற்றின் ஊடான வாழ்க்கைப் பயணத்தையும் இந்நூலில் காட்டியுள்ளார் கவிஞர். தனிவாழ்வில் உயர்நிலையை எட்டிய ஒருவர், தாம் கடந்து வந்த பாதையை மீள்பார்வை செய்து, அதில் நல்லனவற்றையும் தீயனவற்றையும், வாசகர் விரும்பும் வண்ணம் இலக்கியப் போக்கில் படைத்தளிப்பதே தன்வரலாறு எழுதுவதற்குரிய பின்னணியாக அமைந்திருக்கிறது. அவ்வகையில், 'வானவில்' கே. ரவி, நாடறிந்த வழக்குரைஞராகத் திகழ்வதால், தமிழின்பால் தளராத ஆர்வங்கொண்டவராகத் திகழ்கிறார். கவிதைகள், கட்டுரைகள், அறிவியல் நூல்கள், மொழிபெயர்ப்புகள்,

நாடகங்கள் எனப் பல்துறைகளிலும் தான் பயணித்த கலைப்பயணத்தை இந்நூலில் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். தான் கடந்துவந்த வாழ்க்கைப் பயணத்தை, இந்நூலின்வழி மீள்பார்வை செய்துள்ளார்.

சமூகத்தில், உயர்நிலையில் விளங்குபவர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள், இலக்கியவாணர்கள், அரசில் பெரும்பதவி வகித்தவர்கள், இன்னோரன்னோர் தன் வரலாற்று நூல்களை எழுதி வந்துள்ளனர். இந்நூல் இலக்கியவாதியின் இலக்கியப் பயணத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இலக்கியப் படைப்பாக்கத்தில் தாம் மேற்கொண்டவை, எதிர்கொண்டவை, தம்மை ஆளுமை செய்தவை ஆகியன தம் வாழ்வில் நிறைந்திருப்பதால்தான், தன்வரலாறு எழுதத் தாம் துணிந்ததாக நூலாசிரியர் குறித்துள்ளார்.

தன் வரலாற்று நூல் எழுதுவதற்குரிய தகுதிப்பாட்டினைத் தாம் அடைந்துவிட்டதாக எண்ணிப் பெருமிதம் கொள்ளும் நிலைப்பாட்டினை,

"நான் ஒரு பெரிய மனிதன் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. சுரதா, ஔவை நடராசன், சுகி. சிவம், இசைக்கவி ரமணன், வ.வே.சு போன்ற பெரிய மனிதர்களோடு என் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பின்னியிருப்பதால், சுயசரிதை எழுதும் அளவுக்கு நானும் ஒரு பெரிய மனிதன்தான் என்ற நம்பிக்கையோடு இத்தொடரைத் தொடர்கிறேன்." (ப. 31)

என்று எடுத்துரைக்கிறார் 'வானவில்' கே. ரவி. உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் இலக்கை, விடாமுயற்சி செய்து, அதில் உச்சத்தைத் தொட்ட யாவரும் தாம் அதுவரை கடந்து வந்த பாதையை நினைவுக்கு உட்படுத்துவதும், மீள்பார்வை செய்வதும், தம்மைப் போல் முயற்சியை மேற்கொள்வோரை ஆற்றுப்படுத்துவதுமே, தன் வரலாற்றுக்கு உரிய அடிப்படைப் பண்புகளாக அமைந்திருக்கின்றன.

நூலில் உறைந்திருப்பவை

படைப்பாளன் சமூகத்தின் உறுப்பினன் ஆவான். ஆதலால், சமூகத்தைச் சித்திரிக்கும் பொறுப்புக்கு உரியவன்

ஆகிறான். சமூகத்தில் தான் அனுபவித்த, சந்தித்த, வாழ்க்கை அனுபவங்களைத் தன் படைப்புகளுக்குப் பொருளாக்குகிறான். தன் வரலாற்று நூல் என்னும் தனிஒரு இலக்கிய வகை, ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் உள்ளங்களில் தவழ்ந்து வந்துள்ளது. காந்தியின், 'சத்தியசோதனை', உ.வே.சா.வின், 'என் சரித்திரம்', பாரதியின் 'பாரதி–66' என்ற இலக்கியத் தொடர்ச்சியின் மரபினை இந்நூலில் காணமுடிகிறது! இந்நூலில், இலக்கியம், அறிவியல், சமூகம், இசையியல், வரலாற்றியல், உளவியல், கலையியல், அறவியல், நாடகவியல், உரையியல், வாழ்வியல், மானுடவியல், மெய்யியல், இறையியல், கவிதை யியல், இலக்கணவியல், பண்பாட்டியல் என்னும் பல்வேறு கலவைகளின் கனிச்சாறு நூலின் பகுதிகள் ஒவ்வொன்றிலும் நிரம்பி வழிதலைக் காணமுடிகிறது.

காற்றும் கவிஞரும்

இயற்கையின் அளப்பரிய ஆற்றல்களில் காற்றே சிறந்தது; முதன்மையானது. காற்று இல்லா உலகில் உயிரினம் எதுவும் வாழ இயலாது. காற்றே உயிரின் ஜீவாதாரம். காற்றே உலகின் ஆதாரம். ஆதலால், காற்றை முதன்மைப்படுத்திக் காட்டுகிறார் ஆசிரியர். நமது சித்தர்கள் காற்றின் சிறப்பினைப் பெருமைப்படுத்திப் பேசியுள்ளனர். காற்றைச் சுவாசிப்பதற்கு மட்டுமல்லாமல், காற்றை உணவாக உட்கொண்டு பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததைச் சித்தர் வாழ்வியல்வழி அறியலாம். காற்றை உயிராகவும், உயிரைக் காற்றாகவும் கண்டு, சித்தம் தெளிந்து, மெய்ஞ்ஞானம் பெற்று உலவுகிறார் கவிஞர்.

நாம் வாழும் உலகம், பஞ்சபூதங்களால் நிறைந்தது. இயற்கைப் பொருள்களான இவை, மானுட வாழ்வின் ஆற்றலாகவும் ஆற்றல் நிறைந்த சக்தியாகவும் போற்றுதலுக்கும் வழிபாட்டுக்கும் உரிய பொருள்களாகவும் விளங்குகின்றன. நீரும் நெருப்பும் காற்றும் நிலமும் பரந்தவெளியும் அளப்பரிய ஆற்றல்களைப் பெற்றவை. உலகப் பொருள்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்தவை. இந்த நீக்கமற நிறைந்த பொருள்களில் ஒன்றான, காற்றைக் கவிதையும், கவிதையைக் காற்றும் ஒன்றை ஒன்று தழுவி நிற்பதாகக் கருதி இந்நூலுக்கு இப்பெயரிட்டுள்ளார் என்று அறியமுடிகிறது.

'நாம் காற்றைத் தேடுவதுபோல், காற்றும் கவிதையைத் தேடுகிறதோ?' என்று சொல்லி, காற்றுக்கும் கவிதைக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுகிறார். காற்றும் கவிதையும் ஒன்றா? என்ற வினாவினை எழுப்பி, அதற்கு விடையாக,

காற்று வேறு, கவிதை வேறு
இரண்டும் ஒன்றாய் இணையும் போது
பாடல் உருவாகும்-அதில்
பார்வை தெளிவாகும்

என்று சொல்லி நம்மை அதிசயிக்கவும் செய்கிறார்!

காற்று, கண்ணால் காணவியலாதது. உணர்வால் மட்டுமே உணரமுடியும். அதுபோல், கவிஞரின் கருத்துகள், கற்பனை வளங்களிலும் தத்துவார்த்தங்களிலும் ஆழ்ந்த பொருள் பொதிந்தவையாக உள்ளன. இந்த நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் கவிஞர் காற்றில் கலந்து, கரைந்து வாழ்ந்துள்ளார்.

காற்றுவந்து கைபிடித்துக் கூட்டிச்செல்வ தெவ்விடம்
காதல் கவிதை பாடல் நெஞ்சில் கண் சிமிட்டும் ஓவியம்
தோற்றம் என்பதா-ஒரு
தொடர்கதையாய் வளர்கிறதா?

என்று சொல்லி, நம்மைக் காற்றோடு கைபிடித்து, தென்றலிடையேயும், வாடையோடும் கொண்டலிடையேயும், சண்டமாருதத்திடையேயும், சூறாவளியோடும் கூட்டிச் செல்கிறார் கவிஞர். காற்று எப்போதும் ஒன்றுபோல் வீசுவதில்லை; தென்றலாக, புயலாக, சூறாவளியாக, சண்டமாருதமாக வீசுவதுபோன்று, மானுட வாழ்க்கையும் இன்பமும் துன்பமும் நிறைந்ததாக விளங்குவதன் பொருட்டே இவ்வாறு தலைப்பிட்டார் என்று அறியமுடிகிறது.

உயிரினங்கள் ஒவ்வொன்றுள்ளும் காற்று நிறைந்திருக்கிறது. காற்று, வாசமாக, சுவாசமாக ஒவ்வொருவருக்குள்ளும் உறைந்துகிடப்பதனைக் காணலாம். காற்றின்வழியாக எழுப்பப்படும் ஒலி அலைகளே, ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்வதற்கு உரிய கருவியாகத் திகழ்கின்றன.

காற்று என்பதனைக் குருவாகவும், காற்றைச் சுவாசிக்கும் அனைவரையும் அவர்தம் சீடராகவும் உருவகித்து, குருவிலிருந்து

சீடனும், சீடனிடமிருந்து குருவும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் உபதேசம் பெற்றுய்யும் காற்றுவழிப்பட்ட செயல்பாட்டினை,

'காற்று வந்து கைப்பிடித்துக் கூட்டிச் செல்வது எவ்விடம்?'

என்ற கவிதை வரியின் பொருள், அந்தக் காற்று குருநாதனின் ப்ராண சக்தியே! குருவின் பிராண சக்தியானது அவருடைய ஸ்வாஸ கதியின் அதிர்வுகளாக மாறிச் சீடனின் ஸ்வாஸ கதியுள் நுழைவதே உபதேசத்தின் முதற்கட்டம். வானொலி நிலையத்தில் எழுப்பப்படும் ஒலியலைகள் வெட்டவெளியில் பரவியிருக்கும் மின்காந்த அலைகளின் அதிர்வுகளாக மாறி மீண்டும் வானொலிப் பெட்டியில் ஒலியலைகளாக மாறி ஒலிக்கின்ற நிகழ்ச்சி அன்றாடம் நடப்பது தானே!"

என்று காட்டுகிறார்.

உணர்வும் கவிஞரும்

கவிஞர் 'வானவில்' கே. ரவி, உயர்நீதிமன்ற வழக்குரைஞராகப் புகழ்பெற்று விளங்கினாலும், கவிதைப்பணியே அவரது சிந்தனை ஓட்டத்திற்குத் தூண்டுகோலாக வழிநடத்திச் சென்றுள்ளது. வழக்குரைஞர், கவிஞர், பாடகர், கதைஆசிரியர், நாடக இயக்குநர், நடிகர், வசன ஆசிரியர், திரைப்படத் தயாரிப்பாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், கட்டுரையாளர், உரையாளர், இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆளுமைகள் ஒருசேர கைவரப் பெற்றவராகத் திகழ்கிறார். இந்தப் பணிகளிலெல்லாம் கிட்டாத ஒரு இன்ப உணர்வும், ஆத்ம திருப்தியும் கவிதையின் வழியாகவே தமக்குக் கிடைப்பதாகக் கூறுகிறார். "செய்யும் தொழிலில் எல்லாம் எல்லோர்க்கும் திருப்தி ஏற்பட்டுவிடுவதில்லை; தமக்குப் பிடித்தமான பணியே மனநிறைவினைத் தருவதாக அமைந்திருக்கிறது. மனநிறைவைத் தரும் பணியிலேயே நமக்கு முழுத்திருப்தியும், ஆன்ம ஈடுபாடும் கிடைக்கிறது!" என்ற வாழ்வியல் தத்துவத்தை இதன்வழியாகத் தெளிவுறுத்துகிறார்.

எந்தவொரு கலை உருவாக்கத்திற்கும் படைப்பாளனின் உள்ளத்தில் எழுகின்ற உணர்வு முதன்மையாக அமைகிறது. அவ்வகையில், கவிதையின் உயிராக அமைவது உணர்வும் எழுச்சிநிலையுமே. படைப்பாளரின் உள்ளத்தில் எழுகின்ற உணர்வு எழுச்சியே, கலைப்படைப்பாக வெளிப்படுகிறது!

இயற்கையில் மனநிகழ்வினைப் பறிகொடுத்து நிற்கும் கலைஞன், தான் பெற்ற இயற்கையியல் அனுபவங்களைப் பிறரிடத்துப் பகிர்ந்துகொள்ளும்போதே அவன் தன்னிறைவு பெறுகிறான். அத்தகு தன்னிறைவே, அவனை மேன்மேலும் கவிதையின்பால் செல்லத் தூண்டுகிறது.

அனுபவப் பகிர்வு

சமூகத்தில், கண்டும் கேட்டும் பெறும் அனுபவங்களே படைப்புகுப் பொருளாக அமைகின்றன. அது படைப்பாளரின் அனுபவ நிலையையும், அனுபவத்தில் அவரது நிலைப்பாட்டையுமே குறித்து வெளிப்படுத்தப்படுவதாகும்.

"அனுபவம் என்பது பயன் கருதி வருவதில்லை. நாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, நுகர்ந்து தொட்டு அனுபவிக்க உலகமே அதன் உள்ளடக்கங்களோடு சார்ந்து கிடக்கிறது. அதனால் பயன் பெறுவதும், பயன் பெறாததும், அனுபவிப்பவரைப் பொறுத்தது"

என்ற கருத்தியல், கவிஞரின் மனத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

தாம் பெற்ற இன்பத்தையும் துன்பத்தையும் வலிகளையும் பிறரிடம் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவே கவிதை எழுதத் தூண்டுகோலாக அமைகிறது. 'வானவில்' கே. ரவி, இயற்கையிலேயே ஏராளமான கவிஞர்களை நண்பர்களாகப் பெற்றிருக்கிறார். அவரது நட்பு வட்டாரம் கவிதைகளால் நிறைந்துள்ளது. கவிஆர்வம் மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்குத் தன் அனுபவப் பகிர்வே அடிப்படையாக அமைந்திருக்கிறது என்ற படைப்பாக்க நிலைப்பாட்டினை,

"எப்படியாவது தன் உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பே கவிதை எழுதத் தூண்டுகோல் ஆகிறது"

என்று வெளிப்படுத்துகிறார். கவிஞரின் உள்ளுணர்வு கவிதையாக வெளிப்படுகிறது. கற்பனை, உணர்வு, வடிவம் ஆகியனவே படைப்புகலைக்கு அடிப்படையானவை என்பதனை, இலக்கியத் திறனாய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளதனை இவ்விடத்தில் ஒப்பு நோக்கலாம்.

கவிதையும் கவிஞரும்

கவிதைகளால் தன் வாழ்க்கையை நிறைத்துக் கொண்டவன் மகாகவி. எழுத்தையும் எழுதுகோலையும் தெய்வமெனக் கருதி, எழுத்தே தொழிலாக, மகத்தான வாழ்க்கையாக வாழ்ந்த மகாகவியின்மீது தீராத காதல் கொண்டவர், 'வானவில்' கே. ரவி. அவர் கொண்ட ஈடுபாடு,

ஏனோ தெரியவில்லை. கவிதையிடம் எனக்கு அப்படியோர் ஈடுபாடு! வெறி!

என்பதன்வழி உணர்த்தப்படுகிறது. இவற்றோடு நில்லாமல்,

"கவிதை எனக்குப் பயன்படுகிறது என்பதைவிட, அதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதைவிட, ஒரு கருவியாகக் கவிதை என்னைப் பயன்படுத்திக் கொள்கிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கவிதையை ஒரு சாதனமாகவோ, வாகனமாகவோ என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. என்னை ஆட்கொண்ட பிரபஞ்ச சக்தி அது என்றே நம்புகிறேன்"

என்று மொழிவதன் மூலம் கவிதையால் கவிஞர் கட்டுண்டு கிடப்பது தெளிவாகிறது. மேலும்,

"நடிப்பைக் காட்டிலும், நாடக ஆவலைக் காட்டிலும் கவிதை வெறியே, என் உயிரணுக்கள் ஒவ்வொன்றிலும் பதிந்து கிடந்தது. நாடகம் என்று யோசித்த போதும், கவிதையே முன்நின்று வழிகாட்டியது"

என்ற வரிகள் மூலம் கவிஞரின் உணர்வாய் உயிராய் நிற்பது கவிதையே என்பது தெளிவுறுத்தப்படுகிறது.

கட்டுரைகள் எழுதுவதிலும், உரைநடைக் காவியங்கள் பலவற்றை எழுதுவதிலும் கிட்டாத இன்ப உணர்வு, கவிதையால் மட்டுமே தமக்குக் கிடைத்துள்ளதாகக் கூறுகிறார் கவிஞர். மனத்தின் ஆற்றாமை கவிதையின்வழியாக வெளிப்படுத்தப்படுவதை,

கவிதை வெறும் ஆற்றல் இல்லை, அதுவோர் ஆற்றாமை
(ப. 35)

என்று எடுத்துரைக்கிறார். ஆற்றாமையின் வடிகாலாகக் கவிதையே திகழ்கிறது என்று கவிஞர் குறிப்பிடுவது, அவரது கவிதைக்கலையின் மீதான அளப்பரிய ஈடுபாட்டினைக் காட்டுகிறது. கவிதை என்பது உள்ளுணர்வின் ஏக்கங்களில் ஒன்றாக அமைவது என்பதனை,

எனக்குக் கவிதை எழுத வராது
ஏக்கம் இல்லாமல் இலக்கியம் ஏது

என்று எடுத்துரைக்கிறார். இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்றாகத் திகழும் கவிதைக்கலை, நம் கவிஞரின் உயிராய், உள்ளமாய், உணர்வாய், ஆதியாய் அந்தமுமாய் எல்லாமுமாய் நீக்கமற நிறைந்திருப்பதனை,

"அடடா! எனக்கு எல்லாமே கவிதை தானா? ஆம். பள்ளியில் கவிதை, பத்திரிகை நடத்தினால் கவிதை, காதலில் கவிதை, களித்தால் கவிதை, கவலைப்பட்டாலும் கவிதை, திரைப்படம் எடுத்தால் கவிதை, நாடகம் போட்டால் கவிதை"

என்னும் அவரது சொற்களே அவருக்கிருந்து வரும், கவிதை மீதான தீராத காதலைப் புலப்படுத்தும். 'நமக்குத் தொழில் கவிதை' என்று சொல்லி, எழுத்தை தெய்வமாகப் போற்றி வணங்கியவன் பாரதி. காண்பன யாவற்றிலும் கவிதைத்துவம் காணும் போக்கு சிலர்க்கே வாய்க்கும். அத்தகு வாய்ப்புக்குரிய கவிஞராகத் திகழ்கிறார் 'வானவில்' கே. ரவி.

"மீண்டும் மீண்டும் சொல்கிறேன். கவிதை என் கைவாள் இல்லை. என் கேடயம் இல்லை. என் ஆயுதமோ கருவியோ, சாதனமோ இல்லை. நானே கவிதையின் கருவி. ஆயுதம், சாதனம். கவிதையே என்னை ஆட்டி வைக்கும் பிச்சி, பேய், பெருந்தெய்வம்"

என்பதில் கவிதைக்குள் கவிஞரும், கவிஞருக்குள் கவிதையும் ஊடாடி நிற்பது தெளிவாகிறது. கவிதையே, கவிஞரை ஆட்டிவைக்கும் மகாசக்தியாகத் திகழும் திறன் இதன்வழி உணர்த்தப்படுகிறது. தென்றலாய்த் தவழ்ந்து வரும் கவிதைகளில் தாம் மதிமயங்கி ஆழ்ந்து கிடக்கும் நிலைப்பாட்டினை,

கரவொலிகள் ஓய்ந்துவிடும் ராக்கா லத்தில்
காதருகே வந்துசில கவிதை சொல்லிப்
பறந்துவிடும் தென்றலை நீ பார்த்த துண்டா?
.....
ஓசைகளின் விளிம்பினிலே ஊஞ்ச லாடும்
உற்சாகம் உள்மனத்தின் இயக்க மெல்லாம்
ஆசைகளாய்ப் பரிணமிக்கும் அர்த்த ஜாமம்
அனுபவங்கள் மலர்கின்ற உதய காலம்
புரியாத நுணுக்கங்கள் புலனாகின்ற
புதுப்பார்வை உலகாளும் புலமை யோகம்
தரிசனக் கடலாடிவிட்டு வார்த்தைத்
தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

என்னும் கவிதைவழி எடுத்துரைக்கிறார்.

பழமையும் புதுமையும் கலந்த வடிவம்

பழந்தமிழ்க் கவிதையில் ஆழ்ந்து தோய்ந்த பழுத்த அனுபவமிக்க படைப்பாளராகத் திகழ்கிறார் நம் கவிஞர். மரபார்ந்த கவிதைகள் யாப்பதிலும், புதுமைப் பொலிவுபெற்றுத் திகழும் புதுக்கவிதைகள் இயற்றுவதிலும் ஆழங்கால் பட்டவராகத் திகழ்கிறார்.

எது சிறந்த கவிதை? என்ற கருத்தியல் நவீன இலக்கிய உலகில் எல்லோராலும் சிந்திக்கப்பட்டு வந்துள்ளது. மரபின் தொடர்பில் இருந்து வெளிப்படும் கவிதை சிறந்ததா? இலக்கணம் மீறிய கவிதை சிறந்ததா? என்ற ஆராய்ச்சிகள் ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருந்தாலும், மரபை விட்டுக் கொடுக்காமல், நவீன காலத்திற்கு ஏற்ற விதத்தில் கவிதைகள் படைத்து வருகிறார் கவிஞர்.

"நான் எழுதும் கவிதை புதுசா, பழசா என்று நானே சொல்வதைவிட அதைப் படிப்பவர்கள் தாம் சொல்ல வேண்டும். இலக்கணக் குடத்துக்குள் கவிதையை அடக்கவும் நான் முயலவில்லை. இலக்கணத்தை மீறி எழுதியே ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததும் இல்லை. நான் எழுதத் தொடங்கும் போது, இப்பொழுது, ஒரு வெண்பா எழுத வேண்டும் அல்லது

விருத்தம் எழுத வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு ஆரம்பிப்பதில்லை. ஏதோ தோன்றுவதை மனத்துக்குள் சொல்லி அல்லது பாடிப் பார்த்து, ஓ! இது வெண்பாவோ! ஓ! இது கட்டளைக் கலித்துறையோ! என்று அடையாளம் காண்பதே என் வழக்கம்"

என்னும் வரிகள் கவிஞரின் கவிதை மீதான சிந்தனையோட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. கவிதைகளில் எந்தப்பொருள்தான் கருப்பொருளாக அமைந்திருக்கின்றது என்பதனை ஆராய்ந்தால், எதைப்பற்றியும் பாடலாம், எல்லாவற்றையும் பாடலாம் என்பதே கவிஞரின் கருத்தோட்டமாகத் திகழ்கிறது. இது,

"எதைப் பற்றி எழுதுகிறேன் என்ற முன்முடிவோடு நான் கவிதை எழுதுவது கிடையாது. அதுவாக உள்ளிருந்து பொங்கி வரும். வந்து வார்த்தைகளாகிச் சிந்திச் சிதறி வெடித்துச் சில சமயங்களில் கோவென்று கதறிய பிறகே அதன் பொருள் என்ன என்று புரிந்துகொள்ள முயல்வேன். சில சமயம் புரிந்து கொள்ளும் முயற்சியில் தோற்றும் போயிருக்கிறேன்."

என்பதன் வழி தெளிவாகிறது. கவிஞரின் கவிதைகளில் தத்துவமும், மெய்ப்பொருளும், அறிவியலும், இயற்கையின் இயங்கியலும், கணினி அறிவியலும் தென்றலெனத் தவழ்ந்து வருவதனைக் காணமுடிகிறது.

பாரதியால் எழுச்சிபெற்ற கவிஞர்

'நமக்குத் தொழில் கவிதை' என்று சொல்லி, 'பாட்டுத்திறத்தால் இவ்வையத்தைப் பாலித்திட விழைந்தவர்' மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பாரதிக்கு மணிமகுடமாகத் திகழ்பவர் நமது கவிஞர் இரவி என்பது இந்நூலினை ஆராயுங்கால் விளக்கமுறுகிறது.

கண்ணதாசன், சுரதா, வாலி போன்ற கவியாளுமைகளோடு நெருங்கிய தொடர்பில் விளங்கினாலும், அவருக்குள் இருந்த கவிதை ஆர்வத்தை வளர்த்தெடுத்ததில் பாரதியே முன்களக் கவிஞராகத் திகழ்ந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும், தற்காலக் கவிதைகளில் தேர்ச்சியும், சமகாலக் கவிஞர்பால் ஈர்ப்பும் ஒருபுறம் நம் கவிஞரிடத்தில் நிறைந்திருந்தாலும், பாரதியே, அவரை முற்றுமுழுதாக ஆட்கொண்டவர் என்பது,

"நளவெண்பா, முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, பாரதிதாசன் என்று தொடங்கி, ஷெல்லி, கீட்ஸ், பைரன்,

வேர்ட்ஸ்வொர்த், கோல்ட்ரிஜ் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் படைப்புகளில் தோய்ந்து, நா.பா., ஔவை நடராசன் போன்ற சமகாலத்து இலக்கிய ரசிகர்களால் செப்பனிடப்பட்டு, சுரதா, முருகுசுந்தரம் போன்ற தற்காலக் கவிஞர்களாலும் பாதிக்கப்பட்டு.... தண்டமிழ்க் கொண்டலால் தட்டி எழுப்பப்பட்டு, பாரதியால் தடுத்தாட்கொள்ளப்பட்டு...." என்பதன்வழி தெளிவாகிறது.

இளமைக்காலத்திலேயே தமிழ்க்கவிதைகள்பால் தீராத காதல் கொண்ட கவிஞரின் கவித்தாகத்தை வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடச் செய்தவர் மகாகவி. மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கவிதைகளால் உந்தப்பட்டு, அவரது கவிதைப் பாணியைப் பின்பற்றிக் கவிதைகள் படைத்தவர்கள் ஏராளம். பாரதியின் கவிதைப் பரம்பரை இன்றைக்கு வரை தொடர்ந்து இயங்கிக் கொண்டு வருகிறது என்பதற்குக் கவிஞர் கே. ரவியே சான்றாளராகத் திகழ்கிறார். பாரதி பரம்பரைக் கவிஞர் என்றுசொல்லி தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் அளவிற்குப் பாரதியின் கவிதைகளிலும் கட்டுரைகளிலும், ஆழ்ந்தும், தோய்ந்தும், வியந்தும், நயந்தும், போற்றியும் பின்பற்றியும் வந்துள்ளார். இளமைக் காலத்தில் கவிஞரின் தமிழார்வத்தை வளர்த்தெடுத்தவர்கள் அவரது நண்பர்களும், அவருக்கு அமைந்த நல்ஆசிரியர் பெருமக்களுமே ஆவர். தமக்குப் பாடம் சொல்லித்தந்த ஆசிரியர்களிடத்துத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் பயிற்சிபெற்று, தேர்ச்சி பெற்றதோடு நில்லாது, அவர்கள் காட்டிய வழியில் இலக்கியங்கள் படைத்தளித்து, தமிழ் அன்னைக்கு அணி செய்துள்ளார்.

"என் கவிதைப் பயணத்தில் இரண்டு திருப்பு முனைகள். பாரதி கலைக்கழகமாகிய அடியார்கள் திருக்கூட்டத்தில் நான் சேர்ந்தது ஒன்று, பாரதியின் விஸ்வரூப தரிசன அனுபவம் நேர்ந்தது மற்றொன்று. இரண்டுக்குமே கவிமாமணி தேவநாராயணன் காரணமானார்"

என்பதன் வழியாகப் பாரதியுடனான தன் கவிதைப் பயணத்தைக் காட்டுகிறார்.

கவியரசர் கண்ணதாசன் தலைமையில் பாரதியாரின் கவிதைகள் குறித்து நடைபெற்ற கவியரங்கில், பாரதியாரின்

கவிப்பெருமையினைக் கவியரசர் வாயிலாக அறிந்து, பாரதியால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டுள்ளார். இதனை,

"பாரதி பற்றி நிறைய கவிதைகள் கேட்டிருக்கிறேன். அதிலும் உணர்ச்சி பூர்வமான அற்புதக் கவிதைகள் நிறையவே கேட்டிருக்கிறேன். அன்று அந்தக் கவியரங்கில் படிக்கப்பட்ட கவிதைகள் மிகச்சிறப்பாக இருந்தன என்று சொல்லமுடியாவிட்டாலும், அக்கவியரங்கம் முழுதும் பாரதியின் உணர்ச்சிப் பெருக்கு, நீறு பூத்த நெருப்புப் போல இழையோடியிருந்தது. அன்று படிக்கப்பட்ட கவிதை வரிகளைக் காட்டிலும், அவை நினைவுபடுத்திய பாரதியின் வரிகளிலும், அவன் வாழ்க்கையில் சந்தித்த சோதனைக் காலங்களிலும், என் மனம் தோய்ந்துவிட்டது. என்னை அறியாமல் அந்தக் கவிதைகளின் நடுவிலிருந்து முண்டாசுக் கவிஞன் முளைத்தெழுந்து என் மனத்திரையை ஆக்கிரமித்துக் கொண்டான்! ஓர் உத்வேகத்தோடு, என் உள்ளத்திலிருந்து, சில கவிதை வரிகள் ஊற்றெடுத்து வந்தன!"

என்று குறிப்பிடுவதன் வழியாக உணரமுடிகிறது. மகாகவி சுப்பிரமணியபாரதியின் எழுத்தாளுமை, கவிஞரைப் பெரிதும் ஈர்த்தமையால், அவரது படைப்புகள் யாவும் பாரதியின் தரிசனங்களாகவே இருப்பதை உணரமுடிகிறது.

பாரதியின் கவியாளுமையையும் அவரது அயராத தமிழ்ப்பணியையும் வாயார வாழ்த்துவதோடு நில்லாது, அவரது வாழ்க்கைப் பயணம் யாவும் துன்பத்தால் நிறைந்திருந்ததை நினைந்து, அவர் பெற்ற துயரில் தானும் பங்கெடுத்துக் கொள்வதாக,

அவனுக்காக கொஞ்சம் அழக்கூடாதா?
புதை மணலில் சிலவிதைகள் தூவப் புறப்பட்டானே
போகும் வழியில் எல்லாம் நெஞ்சு மிதிபட்டானே
அதையும் மீறிச் சென்றே கனவுப் பயிர் வளர்த்தானே
அதற்குத் தன்னை ஆகுதியாக்கி உயிர் விட்டானே
அவனுக்காக கொஞ்சம் அழக்கூடாதா

என்னும் கவிதையைப் படைத்தளித்துள்ளார் கவிஞர். தன்னைப் பற்றிக் கவலை கொள்ளாமல், பொதுநலத்திற்காகத் தன் உயிரை மாய்த்துக் கொண்ட மகாகவி குறித்த கவிஞரின் இக்கவிதை அவரது வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

கவிஞரின் பாரதி மீதான ஈர்ப்பும் அவரது கவிதைகள் ஏற்படுத்திய அதிர்வலைகளும் உந்து சக்தியும் கவிஞரை, பாரதிக்கு விழா எடுக்கும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன. பாரதிக்கு விழா எடுத்தும், பல்வகைச் சிறப்புகள் செய்தும், பாரதியை மக்கள் மனங்களில் உலவச் செய்து அருந்தமிழ்ப்பணி ஆற்றுவதும் மக்கட்கவிஞருக்குச் செய்யும் மகத்தான் பணியாக அமைந்துள்ளது தெளிவாகிறது.

கவிதைக் களங்கள்

கவிதைப் பொருள் பற்றிய சிந்தனை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு நிலைகளில் வழக்காற்றில் இருந்து வந்துள்ளது. 'எதைப் பற்றிக் கவிதை எழுதுவது?' என்பதும், 'எது சிறந்த கவிதை?' என்பதும் பேசுபொருளாகத் திறனாய்வாளர்களிடையே இருந்து வந்துள்ளன. கவிஞர்களிடையேயும் இது குறித்த சிந்தனை காலம்காலமாக இருந்து வந்துள்ளது. இயற்கையும் இயற்கையின் அளப்பரிய ஆற்றலுமே கவிதைக்குரிய பாடுபொருளாக்கலாம் என்ற சிந்தனை சங்க காலத்திலேயே நிலவியிருந்துள்ளது. இயற்கைப்பொருள்கள் காலம் கடந்து நிற்பவை. உலகம் உள்ளளவும் நிலைத்து இருப்பவை. ஆதலால், இயற்கையின் இயங்கியலை மானுட சமூகத்தின் தேவைக்கேற்றவாறு ஏற்றுப் படைப்பதே சிறந்த கவிதையாக விளங்குவதனை அறியலாம். தொல்காப்பியர் கவிதைக்குரிய பாடுபொருள்களைப் பற்றிப் பேசும்போது, 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்று சொல்லி, சமூகத்தில் உயர்வான, பிறருக்குப் பயன்தரத்தக்க, மானுடம் தழைப்பதற்கான செய்திகளே கவிதைகளுக்குப் பொருளாக அமைந்திடல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இயற்கையும் அதன் அளப்பரிய ஆற்றலுமே, 'வானவில்' கே. ரவியின் கவிதைகளுக்குப் பொருளாக அமைந்துள்ளன. இயற்கை என்றும் நிலைத்திருப்பது, யாராலும் மாற்ற இயலாதது. இயற்கையை வெறும் பொருளாகக் காண்பதோடு நில்லாது, அதன் ஆற்றலை அறிவியலோடும், ஆற்றலோடும் தொடர்புப்படுத்திக் காணும் போக்கு புதுமை நிறைந்தது.

கலை கலைக்காக, கலை ரசிகத் தன்மைக்காக, கலை சமூகப் பயன்பாட்டிற்காக என்ற இலக்கியக் கொள்கைகள் உலவுகின்றன. 'கலை கலைக்காகவே' என்ற கருத்தில் அழுத்தமான நம்பிக்கை

கொண்டிருக்கிறார் கவிஞர். இயற்கையும், இயற்கையைப் படைத்த இறைவனும் அவனது அருளாற்றலுமே கவிஞரைக் கவர்ந்ததாய் விளங்குவது தெளிவாகிறது.

"நிஜ வாழ்க்கை என்று நாம் சொல்கிறோமே, அதில் நடக்கும் சம்பவங்களைக் காட்டிலும் என் மனம் சென்று சஞ்சரிக்கும் வேறு நிலைகளில் நிகழும் அல்லது நிகழ்ந்த சம்பவங்களே என் கவிதைகளின் கருப்பொருள்கள் ஆகியிருக்கின்றன. அந்தச் சம்பவங்கள் இன்னவை என்று என் மேல் மனத்துக்குப் பல சமயங்களில் தெரியக்கூடத் தெரியாது"

என்பதில், கவிஞரின் ஆழ்மனத்திலிருந்து வெளிப்படும் உணர்வுகளே கவிதைகளாக மலர்ந்துள்ளமை தெளிவாகிறது. மனம் அல்லது கவிஞரின் எண்ணவோட்டம் எந்நிலையில் இயங்குகிறதோ, அதுவே கவிதையாக மலர்ந்துள்ளதனைக் காட்டுகிறார் கவிஞர்.

படைப்பாளரின் இரசிகத் தன்மை

இலக்கியப் படைப்பாளருக்கு அடிப்படைத் தகுதியாக அமைவது அவரது பரந்துபட்ட இலக்கிய அனுபவமே. அதுவரை வந்துள்ள இலக்கியங்களைப் படித்து அறிந்து கொள்வதன் வழியாகப் புதிய புதிய சிந்தனைப் போக்குகளை அவரால் இனம் காண முடியும். தம் துறைசார்ந்த நூல்களைத் தேடிச் சென்று, அழுத்தமாகப் படித்தறிந்து கொண்டதோடு நில்லாது, தாம் படித்தவற்றைப் பலரிடம் பகிர்ந்தும் கொண்டுள்ளார். அவ்வகையில், 'வானவில்' ரவி அவர்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் ஆழங்கால் பட்ட ஆர்வலராகத் திகழ்ந்துள்ளார் என்பது, அவரது இலக்கியப் பதிவுகளின்வழியாகத் தெரியவருகிறது. சிலப்பதிகாரத்திலும், கம்ப ராமாயணத்திலும், முத்தொள்ளாயிரத்திலும், சித்தர் பாடல்களிலும், நந்திக்கலம்பகத்திலும், தனிப்பாடல்களிலும் தன் மனத்தைப் பறிகொடுத்ததோடு நில்லாது, அவற்றில் ஆழ்ந்துதோய்ந்து அனுபவித்தும் மகிழ்ந்துள்ளார்.

"இலக்கிய ரசனை என்பது தன் வாழ்வில் தன் அனுபவமாக வராத ஒரு நிகழ்வை இன்னொருவர் அனுபவித்த ஒன்றை அந்த இன்னொருவருக்குள் எப்படியோ நுழைந்து ஏறக்குறைய அனுபவித்தபடியே அனுபவிப்பது"

என்ற வரிகள் வாயிலாக, ஆழ்ந்துதோய்ந்து கற்றவரால் மட்டுமே இவ்வாறு கூறஇயலும் என்பது தெளிவாகிறது.

கவிதையைப் போற்றுவது

கலைஞர்கள் தாம் பெற்ற கலையால் தம்மை மகிழ்வித்துக் கொள்வதோடு நில்லாது, மற்றவர்களையும் மகிழ்வித்து மகிழ்பவர்கள். கலைஞர்கள் தாம் படைக்கும் கலைக்கு ஈடாக, அதனை அனுபவிப்பவர் தரும் பொன்னையோ, பொருளையோ உயர்வாகக் கருதுவதில்லை! தங்கள் படைப்பு பிறரால் போற்றப்படுவதனையே, மகிழ்ந்து கொண்டாடப்படுவதனையே உயர்வாகக் கொள்வர்! இது காலம் காலமாக இருந்துவரும் கலைஞர்களின் வழக்காறுகளில் ஒன்றாகும். தன் படைப்புகளைச் சுவைத்து அனுபவித்து ரசிப்பவர்களாலேயே பிறரது படைப்புகளையும் ரசிக்க முடியும். அவ்வகையில், தன் கவிதைகளைத் தாமே புகழ்ந்து கொள்வது தகுமா? என்ற வினாவினை முன்வைத்து, 'தகுதியுடையோர் தம்மை வியந்துரைத்தல் தாம் பெற்ற குழந்தையைக் கொஞ்சி மகிழ்வதனைப் போன்றதாகும்' என்று வியந்துரைக்கிறார்.

"ஒரு கவிஞன் தன் கவிதையையே வியந்து விரித்துரைக்கலாமா? என்ற கேள்வியும், அப்படிச் செய்வது அதிகப் பிரசங்கித்தனம் இல்லையா? என்ற கேலியும் எழக்கூடும். என் படைப்புகளை நானே ரசிக்கவில்லை என்றால் யார் ரசிப்பதற்கு நான் அதை வெளியிடுவது?"

என்ற வினாவினை எழுப்பி, அதற்குப் பாரதியையே சான்றாக்கிக் காட்டுவது சிறப்பு. தன் கவிதைகளைத் தான் பெற்றெடுத்த குழந்தைகளாகப் பாவிக்கும் கவிஞர், தன் நண்பர்கள் சுகி. சிவம், சு.ரவி, தண்டமிழ்க்கொண்டல், ரமணன் ஆகியோரின் கவிதைகளையும் சிறப்பித்துப் பேசியுள்ளமை, கவிஞர்க்கே உரிய சிறப்பியல்பாக அமைந்துள்ளது. 'தாம் பெற்ற குழந்தையின் மழலைச் சொல்லை உயர்வாகக் கருதாதவர்களே குழலையும் யாழையும் இன்னிசை என்று போற்றுவர்' என்ற வள்ளுவக்கருத்தே கவிஞரின் கருத்தாகத் திகழ்கிறது.

'தன்னைப் புகழ்தல் தகும் புலவோர்க்கே' என்ற இலக்கணச் சூத்திரத்தின் இயல்பினை எடுத்துரைத்துத் தன் கவிதைகளின் ரசிப்புத் தன்மையினைச் சுட்டுகிறார்.

கவிதைக்குக் கிடைத்த பரிசு

இந்நூலின் பக்கங்கள் ஒவ்வொன்றும் படைப்பாசிரியரின் அனுபவங்களால் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொருவர் வாழ்விலும் அனுபவங்கள் நிறைந்திருப்பினும் அவை யாவும் பிறருக்குச் சொல்லும் தகைமையனவாக அமைந்து விடுவதில்லை. அனுபவங்களில் சிறப்பாகக் கருதுபவை மற்றும் படைப்பாளரோடு தொடர்புடையன மட்டுமே அனுபவப் பகிர்வுக்கு உரியனவாக அமைந்துவிடுகின்றன. இந்நூலில் கவிஞர் தன் கவிதைப் படைப்பினூடான வாழ்வியலோடு தொடர்புடைய நிகழ்வுகளை மட்டுமே கோவையாக, நிரல்பட வகுத்துக் காட்டுகிறார். குறிப்பாகத் தமது வழக்குரைஞர் தொழிலோடு தொடர்புடைய கவிதை அனுபவங்கள் மட்டுமே குறித்திருப்பது சிறப்பு.

1988ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதி மன்றத்தில் மாண்பமை நீதியரசரசின் முன்பாக வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கவிஞரின் வழக்குக்கு முன்னதாக, மற்றொருவரின் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. காலமோ நீடித்துக் கொண்டிருப்பதனைக் கண்ட கவிஞர் தன் இளையரிடம் (junior) 'வழக்கு முடிய இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?' என்று கேட்கிறார். அடுத்த வழக்கு உங்களுடையதுதான் என்று அலுவலர் சொல்ல, கவிஞரோ நான் பிற்பகலில் வந்து கலந்துகொள்கிறேன் என்று பதிலுரைக்கிறார். 'இன்றைய பிற்பகலில் வழக்கு இல்லை. இன்றைக்கு சிவன் ராத்திரி' என்று அலுவலர் பதிலுரைக்கிறார். இன்றைக்குச் சிவராத்திரி என்ற சொன்ன மாத்திரத்தில், கவிஞருக்குள் சிவம் குறித்த சிந்தனை கவ்விக் கொள்கிறது. சிவன் என்ற சொல்லின் சக்தி, கவிஞரின் மன உணர்வை எழுப்பிவிட, உடனே கவிதை எழுத ஆரம்பித்து விடுகிறார். வழக்கு முடிந்து அடுத்ததாகத் தன் வழக்கு விசாரணைக்கு வந்ததுகூட நினைவுக்கு வராமல் கவிதையில் மூழ்கிவிடுகிறார். தான் வந்த வேலையை மறந்து, இடத்தின், சூழலின், காலத்தின் தன்மைகளையும் மறந்து, கவிதையில் ஆழ்ந்துவிட்ட கவிஞரின் கவிதையார்வத்தைப் பார்த்த நீதியரசர் சாமிக்கண்ணு, கவிஞரின் கவனம் மீண்டு வரும் வரை, பொறுமையுடன் காத்திருந்த நிகழ்வினை நூலில் பதிவு செய்துள்ளார் கவிஞர். இதனை,

ஆசையில் அலைந்துகெட்டேன் அனுபவம் பழுதுபட்டேன்
ஓசையில் உழன்று நொந்தேன் ஒருகணம் உனைநினைந்தேன்
நீசனென் றெண்ணிடாமல் நீயெனைத் தேடிவந்தாய்
ஈசனே எம்பிரானே என்னை ஆளுடைய கோவே.

"மொத்தம் பன்னிரண்டு பாடல்கள் எழுதி முடித்து நிமிர்ந்து பார்க்கிறேன். வழக்கு மன்றம் காலியாக இருக்கிறது. நீதியரசர் நீதிமன்ற அலுவலர், நான் ஆகிய மூவர் மட்டுமே இருக்கிறோம். நீதியரசர் சாமிக்கண்ணு சொல்கிறார். 'உங்களுக்கு முந்தைய கேஸ் முடிந்து உங்கள் கேஸ் அழைக்கப்பட்டபோது நீங்கள் ஏதோ மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தீர்கள். தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நான் காத்திருக்கிறேன். நீதியரசர் சொன்னதைக் கேட்டு நெகிழ்ந்து போனேன்!"

இப்படிப் பல அனுபவங்கள்!

என்னும் பகுதிவழி வெளிப்படுத்துகிறார். கவிஞரின் தமிழ்க்கவிதை ஆர்வத்திற்கு நீதியரசர் தந்த மதிப்பாகவே இந்நிகழ்வு அமைந்திருப்பதனைக் காணமுடிகிறது. அரசுக் கட்டிலில் உறங்கிய மோசிகீரனாருக்கு வெண்சாமரம் வீசிச் சிறப்பித்த மன்னனின் நிலைப்பாட்டினைக் காட்சிப்படுத்துவதாக இந்நிகழ்வு அமைந்திருக்கிறது.

சமூகமும் கவிஞரும்

இலக்கியத்தின் பண்பும் பயனுமாக அமைவது சமூகச் சிந்தனை வெளிப்பாடும் சிக்கல்களுக்குரிய தீர்வுகளைக் காண்பதுமே ஆகும். கவிதை, கட்டுரை, உரைநடை, நாடகம், சிறுகதை, திரைப்படம் எனப் பல கலை இலக்கியச் செயல்பாடுகளிலும் கவிஞர் ஈடுபட்டாலும் கவிதைகளில் தம்மால் சமூகச்சிக்கல்களையும் அதற்குரிய தீர்வுகளையும் இனம்காண இயலவில்லை என்று ஆதங்கப்படுகிறார். கவிதைகளின் வழியாகச் சமூகச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தம்மால் இனம்காட்ட இயலவில்லை என்ற கருத்தினை,

"என் உரைநடைப் படைப்புகளில் சமூகச் சிந்தனைகளும், சமூகப் பிரச்சினை –களுக்கான தீர்வுகளும் விரவியிருந்தும் என் கவிதை மட்டும் சற்றுத் தனித்தே இருந்தது"

என்று எடுத்துரைப்பது, கவிதையைக் கவிதையாகவே ஆசிரியர் ரசிகத்தன்மையின் பொருட்டே பயன்படுத்திக் கொள்வது

தெளிவாகிறது. எழுத்தால் என்ன தான் செய்துவிட முடியும்? என்று கவிதை தன்னை ஏளனம் செய்வதாகக் கூறுகிறார்.

எழுதுகோல் என்னெதிரே ஏளனம் செய்கிறது
எழுதி எழுதி என்னதான் சாதித்தாய்...
பழுதுகளைச் செப்பனிடப் பாதை அமைத்தாயா?

என்று கவிதைகள் தன்னை ஏளனம் செய்வதாகக் கூறுவது சிறப்பு.

'என் கவிதை யாருக்கும் பயன்படப் போவதில்லை; என்றால் நான் ஏன் கவிதை எழுத வேண்டும்?' என்ற வினாவை முன்வைத்து, அதற்கு விடையாக,

என்கவிதை எந்நாளும் பயன்படாது
ஏற்றத்துக்கு இன்பத்துக்கு இடம்தராது
மின்னல் போலத் துள்ளியெழும்
அடுத்த கணமே தடுக்கிவிழும்- ஆனால்
எண்ண அலைகள் எழுப்பிவிடும்
ஏகாந்தத்தில் வளையவரும்
நின்று வரவேற்றால்
நிச்சயம் உங்கள் தளையவிழும்

என்று பதிலுரைத்து, 'தனது கவிதைகள் படிப்பவர் உள்ளத்தை ஏகாந்த நிலைக்கு இட்டுச் செல்லும'; என்று விடையளிக்கிறார். தன் கவிதைகள் அஞ்ஞான இருளை விலக்கி, மெய்ஞ் ஞானத்திற்கு இட்டுச்செல்லும் என்று கூறுவது கவிஞரின் மெய் யியல் ஞானத்திற்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

கவிஞரின் நிலைபேறு

தன் கவிதைகள் காலம் கடந்தும் நிற்கும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டு திகழ்கிறார் கவிஞர். மானுட வாழ்க்கை நிலையற்றது. ஆனால், அவர்தம் புகழோ காலம் கடந்து நிற்பது. கலைஞர்கள் மறையலாம்; அவர் படைத்த கலைகள் மறைவதில்லை. ஆதலால், வாழும் காலத்திலேயே நிலைத்த புகழுக்குரிய செயல்களைச் செய்து நிலைபெற்று நிற்க வேண்டும் என்பதில் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டுள்ளார்.

"பிரபலமாக இருப்பது கொஞ்ச காலத்துக்குத்தான். புகழோ காலம் கடந்தது. இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும்

எம்.எஸ். சுப்புலட்சுமியின் இசை வாழ்ந்து கொண்டிருக்கும். விஸ்வநாதன் ராமமூர்த்தியின் இசையும் வாழ்ந்து கொண்டிருக்கும். ரவிவர்மன், சில்பி போன்ற மேதைகளின் ஓவியங்களும் கோபுலுவின் கோட்டோவியங்களும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ரசிக்கப்படும். கல்கி, நா.பா., இந்திராபார்த்தசாரதி போன்ற வல்லுநர்களின் எழுத்தோவியங்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கும். இசைக்கவி ரமணன், வ.வே.சு., சு.ரவி ஆகியோர் கவிதைகள் போல் என் கவிதைகளும் காலம் கடந்து நிற்கும். ஒரு நம்பிக்கை தான்."

என்ற கருத்தினைச் சொல்லி, தன் கவிதைகளும் காலம் கடந்துவாழும் என்று அழுத்தமாகப் பதிவு செய்கிறார். நம்பிக்கை வயப்பட்ட வாழ்வியலின் தன்னம்பிக்கைப் பதிவாக இப்பகுதி அமைந்துள்ளது. ஒரு படைப்பாளரிடமிருந்து படைப்பு ஒன்று உருவாகிவிட்டால் அது காலகாலத்திற்கும் நிலைபெற்று வாழும் என்ற படைப்பியக்கக் கொள்கையில் உறுதிப்பாடு கொண்டுள்ள திறம் தெளிவாகிறது.

பயிற்சியின் வெளிப்பாடு

படைப்பாசிரியர் பெற்ற அனுபவங்களே தன் வரலாற்றின் வெளிப்பாடாக அமைந்திருப்பினும், இலக்கியப் படைப்பாக்கத்திற்குரிய தனித்தன்மைகளை நூலாசிரியர் இளமைப்பருவம் முதலாகவே பெற்று வந்திருக்கிறார் என்பது இந்நூலின் வழியாகத் தெளிவாகிறது. படித்தது ஆங்கிலவழிக் கல்வி, தத்துவக்கல்வி, வழக்குரைஞர் கல்வி என்றாலும் தமிழில் மிகச்சிறப்பான தேர்ச்சி பெற்று விளங்குவது தமிழின்பால் கவிஞர் கொண்ட ஆர்வத்தைக் காட்டுகிறது.

இளமைக்காலப் பள்ளிப்படிப்பில், கல்வி–, கேள்விகளில் சிறந்து விளங்கி வந்திருப்ப–தோடு, இலக்கிய, இலக்கணங்களிலும் மிகச்சிறந்த தேர்ச்சி பெற்று சிறந்து விளங்கியிருக்கிறார் என்பதனை நூலாசிரியரின் பள்ளிக்கால அனுபவங்கள் காட்டுகின்றன.

தனக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர்களைப் போற்றும் பாங்கு, தவறுகளைத் திருத்திக் கொள்ளும் திறன், சரியெனப்பட்டதை எவ்வாறேனும் நிரூபித்துக் காட்டும் தர்க்கஞானம், இலக்கண, இலக்கியப் பயிற்சியில் நிறைவான கல்விப்புலம் ஆகியன நூலாசிரியரின் தமிழ் மொழிப் பயிற்சிக்குரிய பின்புலமாக

அமைந்திருக்கின்றன. இவை, இக்கால மாணவர்களுக்கு வழிகாட்டும் அறவுரைப் பகுதிகளாக அமைந்துள்ளன.

பள்ளிக்காலத்தில் 'கோழி' என்பதனை, 'கேழி' என எழுதிவிட்டு, அதனால் ஆசிரியரால் அவமானப்படுத்தப்பட்ட நூலாசிரியர், தன் தவற்றைச் சரிசெய்து கொள்வதற்காக, ஒவ்வொரு நூலகமாகத் தேடிச் சென்று, அங்கிருந்த பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களைக் கற்றுத்தேர்ந்து, தமிழ்மொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றமை இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டும் திறம் பெற்றதாகும்.

இதேபோன்று 'ஏந்தெழில் இராமன்' என்னும் சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பு குறித்து, தன் ஆசிரியரிடம் வாதாடி, பின்னர் வெற்றி பெற்றதும் வழக்குரைஞருக்கே உரிய தர்க்க ஞானத்தைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

தன்வரலாற்றின் கதையியல்

தன் வரலாறுகள் கதைப்போக்கில் சொல்லப்படுகின்றன. வாழ்ந்து வளர்ந்த ஒருவரின் பிறப்பு முதல் வளர்ச்சி வரையிலான வாழ்க்கைப் பயணத்தில் அவர்பெறும் எண்ணற்ற அனுபவங்களும், தேடல்களும் கேட்பவர்க்குக் கதைபோன்றே அமைந்திருக்கும். ஆதலால், தன் வரலாறுகள் கதைக்குரிய தன்மையைப் பெற்றுத்திகழ்கின்றன.

ஒரு படைப்பு யாருக்கு யார் மூலமாக முன்வைக்கப்படுகிறது என்பது ஆராயத்தக்க ஒன்று. கேட்பார்க்குத் தகையவான சொற்களைக் கொண்டு, அவர்தம் உள்ளத்தில் உணர்ச்சிகளை உருவாக்குமாறு செய்வதே சிறந்த படைப்பின் தன்மை ஆகும். இதனைத் தமிழ் இலக்கணங்கள் 'நோக்கு' என்று குறிப்பிடுகின்றன.

செய்யுள் உறுப்புகளில் ஒன்று நோக்கு. இந்த 'நோக்கு' என்னும் சொல்லுக்குரிய பொருளை "நோக்கு என்பது மாத்திரை முதலாகிய உறுப்புகளைக் கேட்டோர்க்கு நோக்குபடச் (கருத்தில் படுமாறு) செய்தல்" (கழகத் தமிழ் அகராதி) என்று அகராதி விளக்குகிறது.

படைப்பாளர் தான் வெளியிடவிரும்பும் கருத்தினை எவ்வழியாக, யார்வழியாக, எச்சூழலில், எவ்வாறு

வெளிப்படுத்துகிறார் என்பது ஆராயத்தக்க ஒன்று. தன் வரலாற்று நூலின் படைப்பாளர் தன் உள்ள உணர்வுகளைத் தன்மைக்கூற்றின்வழியாகவே வெளிப்படுத்துவது மரபு. சிலர், தன்மைக் கூற்றாகவும், படர்க்கைக் கூற்றின் வழியாகவும், தான் படைத்தளிக்கும் பாத்திரங்களின் கூற்றின்வழியாகவும் வெளிப்படுத்தும் நிலையினையும் காணலாம். இவற்றோடு மட்டும் நில்லாது, கால வரிசையினை முன்பின்னாக மாற்றியும், பின்னோக்கு உத்தியினைப் பயன்படுத்தியும் படைப்பதனைக் காணலாம். தன் வரலாற்றைக் கதைப்போக்கில் சுவாரசியப்படுத்திக் காட்டுவதற்காக இவை போன்ற பல உத்திகளைக் கையாள்கின்றனர்.

தன் வரலாறு கதை நிகழ்வுகள் வழியாகக் கோவையாகச் சொல்லப்படினும், அதில் கதைசொல்லியாகப் படைப்பாளரே முன்நிற்கிறார். கதை நிகழ்வுகளைக் கால வரிசைப்படி எடுத்துரைப்பதும், நிகழ்வுகளின் வரிசைப் போக்கில் காட்சிப்படுத்துவதும் தன் வரலாற்றின் கதையியலாக அமைகிறது. இதனால் தன் வரலாறுகள் கதைக்குரிய தன்மையைப் பெற்று விளங்குவது தெளிவாகும்.

"ஒரு பனுவலில், கதையென ஒன்று கதைசொல்லியின் மூலமாய் ஒரு காட்சி, கோணத்தின் ஊடாகச் சொற்களால் முன்வைக்கப்படுகிறது" நவீன இலக்கியக் கோட்பாடுகள், என்னும் க. பஞ்சாங்கத்தின் கருத்தியலின்படி இந்நூல் தன்வரலாற்றுக் காவியமாக, கதைப்போக்கில் அமைந்த நாவலாகக் கொள்ளும் தகுதி பெற்று விளங்குகிறது. நூலாக்கத்தில் பின்பற்றப்பட்டுள்ள இலக்கிய நெறிகள் நூலின் தனித்தன்மைக்கும் சிறப்புக்கும் சான்றுகளாக அமைந்துள்ளன.

உலகமே ஒரு நாடக மேடை; அதில் நாம் நடிகர்கள்' என்பது அறிஞர் வாக்கு. இதில், கவிஞர் தன் வரலாற்றுப் பதிவை நாடகப் போக்கில் பதிவுசெய்துள்ளார். சிகாமணி, மனோன்மணி என்ற கற்பனைப் பாத்திரங்களை உருவாக்கி, அதன்வழி கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு சங்க இலக்கியத்தைக் காட்சிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சங்கப்பாடல்கள் கூற்று அடிப்படையில் அமைந்தவை ஆகும். அதில் இடம்பெறும் ஒவ்வொரு பாடலும் பாத்திரங்கள் பேசிக் கொள்வதுபோல், வினா விடை அமைப்பில் அமைந்தவை.

"இந்த புத்திசிகாமணியும், மனோன்மணியும் எப்படியோ பாரதியின் படைப்பிலும் இடம் பிடித்துவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஆம். இரண்டு கயிற்றுத் துண்டுகளுக்குக் கந்தன்–வள்ளி என்று பெயரிட்டு அவன் எழுதிய மிக உயர்ந்த உன்னதமான காதல் காவியத்தின் நாயக, நாயகியரும் இவர்களே என்று எண்ணுகிறேன்."

என்பதன் வழியாக எடுத்துரைக்கிறார். இவ்வாறான பாத்திரத்தின் வழிபட்ட நாடகப் போக்கினைத் தனக்கு மகாகவி பாரதியிடமிருந்தே கிடைக்கப் பெற்றதாகக் கூறுவது, பாரதியின் வழிப்பட்ட கவிஞர் இவர் என்பதனை அறிவதற்குத் துணைநிற்கிறது.

தன் வரலாற்றின் எடுத்துரைப்பியல்

தன் வரலாறுகள் உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் அமையப் பெற வேண்டும். தன் வரலாறுகள் தனிமனிதரின் வரலாறு மட்டுமல்ல; அவை படைப்பாளர் வாழ்ந்த காலகட்டத்தின் சமூக, பண்பாட்டு ஆவணங்களாகவும் விளங்குகின்றன. படைப்பாளர் குறிப்பிடும் காலகட்டத்தில் நாடும் நகரமும் அங்கு வாழ்ந்த மக்களும் எவ்வாறு இருந்தனர் என்பது பதிவாகிறது. ஆதலால், தன் வரலாறுகள் யாவும் தனிமனித வாழ்க்கைப் பதிவுகள் மட்டுமன்றி, சமூக வரலாறாகவும் அமைந்துவிடுகின்றன என்பது தெளிவாகும்.

ஒருவர் தாம் கையாளும் பொருளைக் குறித்துப் பிறரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், கால வரிசையில் கூறினால் அது சரித்திரம் ஆகிறது. மாறாக, அப்பொருள் குறித்த சரித்திரத்தைத் தம்முடைய உண்மைகளின் அடிப்படையில், தம்முடைய விருப்ப வரிசையில், ஒருவர் தெரிவித்தால் கதையாகிறது. இரண்டுமே நடந்து முடிந்த ஒன்றைத் தெரிந்துகொள்ள முனையும் ஒரு புதிய மனிதருக்கு உரைப்பதாகும். ஆக, சரித்திரமும் கதையும் ஒன்றுதான். இதன்வழியாக இந்நூல் நிகழ்காலச் சமூகத்தில் உலவிய கலை, இலக்கிய ஆளுமைகளின் வரலாற்றுப் பதிவுகளாக, அவற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளாகத் தன்வரலாற்று நூல்கள் நிலைத்து நிற்பது தெளிவாகிறது.

அனுபவத்தின் அறம்

தன் வரலாற்றின் மிகச் சிறந்த பகுதியாக அமைவது படைப்பாசிரியர், தன் தவறுகளை எடுத்துரைக்கும் பகுதியாகும். தவறுகளைக் காட்டிக் கொள்வதால் நாயகத் தன்மை பழுதுபடும் என்பதைக் கருத்தில் கொள்ளாமல், தவறுகளையும் காட்டிக் கொள்வது சிறப்பு. மானுட வாழ்வில் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் வீணே கழிப்பதும், காலம் கடந்தபின்னர், கடந்த காலத்திற்காகப் பின்னர் வருந்துவதும் அனுபவத்தின் நிலைப்பாடுகளில் ஒன்றாகும். கவிதையால் பெற்ற இன்பத்தை 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா?' என்று மனமுருகிக் குறிப்பிடும் கவிஞர், இவ்வாறான காலத்தையெல்லாம் வீணான கதைகள் பேசிக் கழித்துவிட்டதாகக் கருதுகிறார். தன் வாழ்வில் கிடைத்த பொன்னான நேரத்தையெல்லாம், இலக்கிய இன்பத்திலும் ஆன்மீக நெறியிலும் செலவழிக்காமல், தர்க்கம் செய்தே வீணாகக் கழித்துவிட்டேன் என்று வருத்தப்படும் நிலைப்பாட்டினை,

"அந்தப் பாடலின் அனுபவக் கனத்தை நினைத்தால் இன்னும் மெய்சிலிர்க்கிறது. இப்படிப்பட்ட சிலிர்ப்புகளும், சிறகடிப்புகளும் இல்லாத வறண்ட பாலைவனம் போன்ற தர்க்கப் பாதையில் சிற்றறிவுப் பட்டறையில் எத்தனை காலம் வீணடித்துவிட்டேன்"

என்று எடுத்துரைக்கிறார். தன் வரலாற்றின் மிக முக்கியமான அறிவுறுத்தும் பகுதி இதுவாகும். காலத்தின் அருமை, அது கழிந்த பின்னரே தெளிவாகும். அவ்வகையில் காலத்தின் சிறப்பினைக் கவிஞர் தான் இழந்த நிகழ்வுகளோடு எடுத்துரைப்பது சிறப்பாகவே அமைந்துள்ளது.

கவிதைகளில் சமூக வெளிப்பாடு

கலைஞன் சமூகத்தின் உறுப்பினன் என்ற நிலையில் சமூகப் பொறுப்புணர்வு மிக்கவனாகிறான். கவிஞன், சமூகத்தில் நிலவும் சிக்கல்களையும், போராட்டங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் காட்டுவதோடு நில்லாது, சமுதாயக் கேடுகளுக்கு உரிய தீர்வுகளையும் வழங்கி, மாற்று மருத்துவம் காணும் போக்குடையவனாகவும் மாற வேண்டிய பொறுப்புடையவனாகவும் ஆகிவிடுகிறான். தமது கவிதைகளில் சமூக நோக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வும்

காணப்படவில்லை என்று ஆதங்கப்படும் கவிஞர், சிற்சில இடங்களில் சமூகப் பிரச்சினைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த பாங்கினையும், சமூகத்தில் புரையோடிவிட்ட சிக்கல்களுக்கு மாற்றுமருத்துவம் காணத்துடித்த நிலைப்பாட்டினையும் இந்நூலின் வழியாகக் காட்டியுள்ளார்.

"பல துன்பங்களுக்கு நடுவிலும் எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா! என்று பாரதியாரால் எப்படிப் பாட முடிந்தது? 'வையத் தலைமை கொள்' என்ற பாரதியின் மகா வாக்கியம், அரசியல் தலைமை பற்றியில்லை என்பதும், தானே, இந்தப் பிரபஞ்ச சக்தி என்ற தெளிவு பெறுதலே அத்தலைமையின் சாரம் என்பதும் புரியத் தொடங்கியது.

இதெல்லாம் புரிந்துவிட்டதாலேயே உடல் வாழ்க்கை, உலக வாழ்க்கை மாறிவிடுவதில்லை. அதில் உழல்வதும் அதன் மேடு பள்ளங்களில் விழுந்தெழுந்து சுழல்வதும் சின்னச் சின்ன இழப்புகளை எண்ணி உள்ளுக்குள் அழுவதும் அற்ப சந்தோசங்களில் ஆழ்ந்து மகிழ்வதும், எதுவும் மாறவில்லை. இவற்றை மாற்றுவது கவிதையின் பணி இல்லை. ஆனால், இவற்றிலிருந்து அவ்வப்போது விடுபட வைத்தும், சிறகு தந்து பறக்க வைத்தும், தான் பறந்து திரிவதற்காகவே விரிந்து கிடக்கும் வானமும் தானே என்ற விரிவை உணர வைத்தும், கவிதை ஏதோ ஒரு வழியில் நம் ஆன்ம பயணத்தின் இலக்கோடு ஒரு தொடர்பை உருவாக்கித் தருகிறது என்று தெரிந்து கொண்டேன்."

கவிதையின் பணி இன்புறுத்தலும் அறிவித்தலும் அறிவுறுத்தலும் என்பதாகவே பல்லாண்டுகளாகப் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. கவிதையால் மானுடத்தில் மலர்ச்சியை ஏற்படுத்த இயலுமா என்ற வினாவை முன்வைத்து, அவற்றின் மூலம் விடைகாண விழைகிறார் கவிஞர்.

"நம் நல்வாழ்க்கைக்குத் தேவையான தளவாடங்களையும் சூழ்நிலைகளையும் இயற்கையிலிருந்து உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு நமதே. அந்தப் பொறுப்பை கவிதை எழுதித் தட்டிக்கழிக்க முடியாது. சுதந்திரம் கிடைத்தபிறகு எத்தனை ஆயிரம் கவிதைகள் சமூகக்கடமைகள் பற்றிய குமுறல்களைக் கொட்டித் தீர்த்திருக்கின்றன? அவற்றால் அந்தக் கொடுமைகள் ஒழிந்துவிட்டனவா? எதைச் சிந்தித்துச் செயல் படுத்திச்

சரிசெய்ய வேண்டுமோ அதை வெறும் புலம்பலால் தீர்க்க முடியாது"

என்பதே கவிஞரின் சமூகம் குறித்த சிந்தனையாக அமைந்திருக்கிறது.

சமூக உணர்வில் கவிஞர்

கவிதைகளைப் போர்முனையில் உழலும் வீரர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு அனுப்பி வைத்த முதல் கவிஞர் நமது கவி ரவி ஆவார். 1999இல் இந்திய நாட்டின் எல்லையான கார்கிலில் நிகழ்ந்த போரின்போது, நமது வீரர்களுக்கு உத்வேகமும் எழுச்சியும் அளிக்கும்பொருட்டு நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களைக் கொண்டு கவித்திருவிழா நிகழ்த்தி, அதன் நூறு கவிதைகளின் ஒலிப்பேழையினை போர்ப்படைத் தளபதியிடம் கொடுத்து, அதை இந்திய இராணுவத்தினரிடம் கொடுக்கச் செய்துள்ளார். தமிழறிந்த இராணுவ வீரர்கள் இதனைக் கேட்டு மேன்மேலும் உற்சாகத்துடன் செயலாற்ற வேண்டும் என்பதே கவிஞரின் அவா.

இதோடு மட்டும்நில்லாது, உலகில் உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் ஆயுட்காலம் என்பதொன்று (தொடக்கமும் இறுதியும்) உள்ளதனைப் போன்று, நாம் அன்றாடம் பயன்படுத்தும் பணத்திற்கும் ஆயுட்காலம் இருக்க வேண்டும் என்று கருத்துரைக்கிறார். இதனால் பணமிழப்பு மற்றும் கருப்புப் பண பதுக்கல் குறையும் என்று அறிவுறுத்துகிறார்.

"பணத்துக்குக் குறைந்த பட்சம் இரண்டு பரிமாணங்கள் இருக்க வேண்டும் என்பதே அந்தப் பரிந்துரையின் சாரம். ரூபாய் அல்லது டாலர் தாளுக்கு அதன் மதிப்பு 1, 10, 100 என்று குறிப்பிடப்படுவதுபோல், அதன் ஆயுளும் அது எந்த நாள்வரை செல்லுபடியாகும் என்ற தேதியும் குறிப்பிடப்பட வேண்டும். அந்தத் தேதிக்கு ஒரு வாரம் முன்பிருந்து காலாவதியாகப் போகும் பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்திப் புதுப்பணம் அதற்குப் பதிலாகப் பெற்றுக் கொள்ளலாம்."

என்பதில் கவிஞரின் நிகழ்காலச் சமுதாயச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் முனைப்பு தெளிவாகிறது.

அறிவியல் நோக்கு

இலக்கியத்தில் அறிவியலும், அறிவியலில் இலக்கியமும் இணைந்தே இருப்பது நுண்ணோக்கிப் பார்ப்பவர்க்குத் தெளிவாகும். இலக்கியப்படைப்புகும், அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் படைப்பாளர் உணர்வில் எழும் கற்பனை உணர்வெழுச்சியே காரணமாக அமைந்திருக்கிறது. இதனால், அறிவியல் தத்துவக் கருத்துகள் இலக்கியத்தின் அடித்தளமாக அமைவது தெளிவாகும். அவ்வகையில், இந்நூலின் பக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொறு துறை பற்றிய அறிவினை நமக்கு அறிவிப்பனவாக அமைந்துள்ளன. தத்துவக் கருத்துகளும் அறிவியல் சிந்தனையும் ஆன்மீகநெறியும் நூலில் இழைந்தோடுவதனைக் காணமுடிகிறது. சான்றாக, கணினி அறிவியலில் கூறப்படும் 'சாஃப்ட்வேர்', 'ஹார்ட்வேர்' என்பதற்குரிய விளக்கங்களை மனித உடலின் உயிரின் செயல்பாட்டோடு பொருத்திக் காட்டியிருப்பது சிறப்பு,

"நமக்கு ஸ்தூல உடல் இருப்பதுபோலவே, சூட்சும சரீரம் என்ற ஒன்று உண்டு. அது திட்ப உடல் போல் சதை, எலும்பு குருதியால் ஆன உடல் இல்லை. அதை எந்தப் புலனாலும் உய்த்துணர முடியாது. 'ஸாப்ட்வேர்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அது போன்ற நுட்ப உடல் அது. பூதஉடல் என்பது 'ஹார்ட்வேர்.' சூட்சும உடல் என்பது 'ஸாப்ட்வேர்'. பின்னது முனைப்புகளால் ஆனது. முனைப்புடன் என்றும் சொல்லலாம்."

என்ற பத்தியில் நவீன அறிவியல் துறைகளில் ஒன்றான கணினியின் செயல்பாட்டினை, மனித உடலியக்கத்தோடு அவர் பொருத்திக் காட்டியுள்ள திறம் எளிமையாகப் புரியும் விதத்தில் அமைந்துள்ளது!

இதேபோன்று, பஞ்சபூதங்களுக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் இடையேயான ஒற்றுமைச் செயல்பாடுகளை, அறிவியல் நோக்கோடு சொல்வது படைப்பாசிரியரின் தனித்திறனுக்குத் தக்க சான்றாக அமைந்திருக்கிறது.

"திடப்பொருள், திரவப்பொருள், ஆவிப்பொருள் ஆகிய மூன்று நிலைகள். அவற்றைக் கடந்த ஆற்றல் நிலை என்ற நாலாவது நிலை. நான்கு நிலைகளுக்கும் நிலைக்களனாக

விளங்கும் வெட்டவெளியாக விரிந்து கொண்டே இருக்கும் ஐந்தாம் நிலை. இப்படி ஐந்து நிலைகளை அறிவியல் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த ஐந்து நிலைகளே, திடப்பொருள் நிலையைக் குறிக்கும் நிலம், திரவப்பொருள் நிலையைக் குறிக்கும் நீர். ஆவிப்பொருள் நிலையைக் குறிக்கும் காற்று. ஆற்றல் நிலையைக் குறிக்கும் நெருப்பு. வெட்டவெளி நிலையைக் குறிக்கும் ஆகாசம் அல்லது வெளிநிலம். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாசம் என்ற பஞ்சபூதங்கள் சரிதானே!"

"தோற்றங்களால் ஆன உலகத்தில் பொருள்கள் இந்த ஐந்து ஐந்தாகத்தான் தோன்ற முடியும் என்ற விஞ்ஞான உண்மையைக் குறிக்க, 'பஞ்சபூதங்கள்' என்ற சொற்றொடர். பஞ்சபூதங்கள் இன்றி உலகம் இல்லை! பஞ்சபூதங்களை நுகரும் பொருட்டே, அவற்றுக்கு ஏற்ப ஐந்து பொறிகளும் அவற்றின் மூலம் புலப்படுகின்ற ஐந்து புலன்களும்."

இவ்வாறு நூலின் ஒவ்வொரு பகுதியிலும் அறிவியலோடு பொருந்திய செய்திகளைக் கோர்வையாக்கிக் காட்டியுள்ளார் நூலாசிரியர்.

அறவியல் நோக்கு

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்னும் நூற்பாவின் வழியாக, நூல்களால் பெறத்தக்க பயன்பாட்டினை எடுத்துரைப்பார் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர். எல்லா இலக்கிய நூல்களும் மானுட அறத்தை மையமாகக் கொண்டே படைக்கப்பட்டு வந்துள்ளன. தமிழ் இலக்கிய மரபின் ஒவ்வொரு பகுதியிலும், இதன் செல்வாக்கினைக் காட்டமுடியும். அவ்வகையில், இந்நூலில் ஒவ்வொருவரும் தம்வாழ்வில் பெற்றோரை மதித்தல், குருவிடம் பக்திசெலுத்துதல், தெய்வத்திடம் பணிந்து நடத்தல் ஆகியன இடையறாது செய்து வந்தால், வாழ்வில் எல்லா வெற்றிகளையும் இயல்பாகப் பெற்று, மகிழ்ச்சியாக வாழலாம் என்று அறிவுறுத்துகிறார். இதனை,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். அதாவது நாம் எந்த விசாரணையும் மேற்கொள்ளத் தேவையில்லாமல் முந்தி அறியும் தெய்வங்கள். இது எவ்வளவு உண்மையோ, அதேபோல, நம் ஒவ்வொருவரையும் தக்க தருணத்தில் ஏதேனும்

ஒரு குருவின் வடிவில், பரம்பொருளே வந்து ஆட்கொண்டு வழிச்செலுத்துவதால் குருவே நம்மை நமக்கு முன்பாகவே அறிந்த தெய்வம் என்பது மறுக்கமுடியாத உண்மை! அன்னையும் தந்தையும் நாம் முன்னறிந்து கொள்ளும் தெய்வங்கள். குருவோ நம்மை முன்னறிந்து கொள்ளும் தெய்வம்"

என்பதின் வழியாகக் காணமுடிகிறது. இதுபோன்று ஒவ்வொரு துறைகுறித்த செய்திகளையும் இந்நூலில் விரிவாகவும் விளக்கமாகவும் புரிந்துகொள்ளும் விதத்திலும் எடுத்துரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

நூலின்வழி அறியப்பெறுவன

இலக்கிய வகைமையில் தன் வரலாற்று நூல்கள் தனிச்சிறப்புப் பெற்றனவாகத் திகழ்கின்றன. சமூகவரலாற்றியல் நோக்கிலும் அரசியல் நோக்கிலும் தன் வரலாறு தனி ஒரு நபரின் வாழ்வியல் அனுபவங்களாகத் திகழ்கிறது.

சமுதாயத்தின் மீதான பொறுப்புணர்வு மிக்க ஆளுமைப் பண்பு நிறைந்த ஒருவர், தன் வாழ்க்கைப் பயணத்தைக் கதைப்போக்கில் எடுத்துரைப்பதன் வழியாக, எதிர்கால நல்வாழ்க்கைக்குத் தடம் அமைத்துக் கொடுக்கிறார். படைப்பாளர் சந்தித்த பிரச்சினைகள், வலிகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், அவமானங்கள் தன் வரலாற்றில் அழுத்தமாக இடம்பெறுகின்றன. இவை, வாசகரை, கதை நிகழும் களத்திற்கே இட்டுச் சென்று, அதனின்று நல்லதோர் அனுபவப் பாடத்தை அவர்களுக்குக் கற்றுத் தருகின்றன.

'வானவில்' கே. ரவி அவர்களால் படைக்கப்பெற்ற 'காற்று வாங்கப் போனேன்' என்ற தன் வரலாற்று நூல், அவரது கவிதைப் பயண அனுபவங்களைப் பதிவு செய்துள்ளது. கவிஞரின் கவிதைகளைப் படித்தறிந்துகொள்வதற்குரிய கையேடாக இந்நூல் திகழ்கிறது. நூலாசிரியர் பெற்ற அனுபவங்களே நமக்குப் பாடமாக, அறிந்துகொள்ளத் தக்கனவாக அமைந்துள்ளன.

தம் இளமைதொடங்கிய பள்ளிக்காலத்திலேயே கவிதை எழுதப் பழகிக் கொண்ட கவிஞர், இலக்கிய இலக்கணத் தேர்ச்சி பெற்று, கவிபாடும் ஆற்றல் மிக்க ஆசு கவியாகத் திகழ்ந்தமை தெளிவாகிறது. இயற்கை, கடவுள், வாழ்வியல்,

தத்துவம், அறிவியல், சமுதாயம் எனத் தான் தேர்ந்துகொண்ட துறைகளில் கவிதைகள் எழுதப் புகுந்த சூழலை இந்நூலின் வழியாகத் தெளிவுறுத்துகிறார்.

கவிதைகளின் வழியாக பாரதியில் தோய்ந்த கவிஞராகத் திகழ்கிறார். 'பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடல் வேண்டும்' என்பதே கவிஞரின் கருத்தோட்டமாக உள்ளது. மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு நின்றுவிடாது, உள்ளத்தில் உணர்ச்சி அலைகளை எழுப்புவதே கவிதையின் சிறப்பு என்பது நூலின்வழியாக உணர்த்தப்படுகிறது.

மகாகவி பாரதியின் எழுத்துகளால் உந்தப்பட்டு, கவிபுனையும் ஆற்றல் பெற்ற கவிஞர், பாரதிக்குத் தன் மனம் மொழி, செயல்களால் சிறப்புச் செய்துள்ளார். பாரதியின் வழித்தடத்தில் அவரது கவிதைப் பயணம் இடையீடின்றித் தொடர்ந்து சென்று கொண்டுள்ளது. பாரதிக்குப் பல்வகையான சிறப்புகளைச் செய்துள்ளதோடு நின்றுவிடாது, அவரது நினைவுநாளைப் போற்றும் செயல்பாடுகளையும் விழாக்கள் எடுத்தும் சிறப்புச் செய்து வருகிறார்.

தன் இளமைப்பருவத்தில் தான் நடத்திய மாணவ இதழ்கள் குறித்தும் மாணவர் அமைப்பால் ஏற்பட்ட தன் வாழ்க்கைத் துணை குறித்தும் பேசும் கவிஞர், தன் ஆற்றாமைக்கு மருந்து, கவிதையே என்று குறித்து, கவிதை எவ்வாறெல்லாம் தமது வாழ்க்கையை நடத்திச் சென்றுகொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நட்புக்கு இலக்கணமாகத் திகழும் கவிஞராக, தமது சமகாலக் கவிஞர்களைப் போற்றும் கவிஞராக, தமது ஏற்றத்திற்குத் துணைநின்ற சான்றோர்களையும் ஆசிரியர்களையும் மறவாத மாணவராக, தமது வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்தோடி வரும் வாழ்க்கைத் துணைவியைப் போற்றும் மணாளராக, தத்துவத்துறையில் தோய்ந்தவராக, ஆன்மீகச் சீடராக விளங்கியுள்ள திறம் இந்நூலின்வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கவிதைத்துறையில் ஈடுபாடு கொண்ட கவிஞர்களும், கவிதையைப் படித்துச் சுவைக்கும் சுவைஞர்களும், கவிதையில் ஆய்வுகள் மேற்கொள்வோரும், திறனாய்வுகள் செய்வோரும்

கண்டிப்பாகப் படித்தறிந்துகொள்ள வேண்டிய நூலாக இந்நூல் திகழ்கிறது.

உசாத்துணை நூல்கள்

1. *கே. ரவி, காற்று வாங்கப் போனேன், நிவேதிதா பதிப்பகம், சென்னை, 2019*
2. *கவிமணி தேசிகவிநாயகம் கவிதைகள், பாரி நிலையம், சென்னை, 1984*
3. *பவணந்தி முனிவர், நன்னூல், கழக வெளியீடு, சென்னை, 1980*
4. *தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1992*
5. *க. பஞ்சாங்கம், நவீன இலக்கியக் கோட்பாடுகள், காவ்யா பதிப்பகம், சென்னை, 2000*
6. *கழகத் தமிழகராதி, கழக வெளியீடு, சென்னை, 1984*

❖

‘வானவில்’ ரவியின் சிந்தனைச்செல்வம்

•

கி. மோகனாம்பிகை அரசு,
தமிழ் உதவிப்பேராசிரியர், வேளாளர் மகளிர் கல்லூரி
(தன்னாட்சி), ஈரோடு–12.

எந்தக் கவிஞனுடைய படைப்புகளில், பெரும்பான்மையானவை, யாராலும், எப்போதும் படிக்கப்பட்டாலும் சுவைதரக் கூடுமோ, அந்தக் கவிஞனே, ‘உலகக்கவி’ என்று அழைக்கப்படுவான்.

எந்தக் கவிஞன், தன் இனம், மொழி, நாடு என்று மட்டுமே சிந்திக்காமல், உலக இனங்கள், மொழிகள், நாடுகள், உயிர்க்கூட்டங்கள் என்றும் சிந்தித்துக் கவலைப்பட்டுத் தன் படைப்புகளில் அந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்துகிறானோ, அவனே, ‘உலகக்கவி’ என்று இன்னொரு பொருள் கொள்ளலாம்.

எந்தக் கவிஞனுடைய படைப்புகள், அவன் நாட்டினரால், அவன் மொழியினரால் மட்டுமின்றிப் பிறராலும் மதிக்கப்படுகின்றனவோ, அந்தக் கவிஞனே ‘உலகக்கவி’ என்றும் பொருள் கொள்ளலாம். எனவே, பாரதி, ‘உலகக்கவி’ என்பது தெளிவாகிறது.

‘வானவில்’ ரவியின் சிந்தனையைத்தூண்டியவர் பாரதி.

குயில்பாட்டு

“குயில்பாட்டு” என்ற குறுங்காவியத்தில் கதை சொல்லிக் கொண்டே வரும் பாரதி, இடையில் கதையை நிறுத்திவிட்டுத் தன் கவிதையுணர்வின் போக்கில் சொல்ல முற்படுகிறான்.

இளம்காலைப் பொழுது, கதிரவன் கீழ்த்திசையில் மெல்ல உதிக்கிறான். அப்பொழுது கதிரவனைக் கண்ணாரக் கண்டு களிக்கலாம், கண்கூசாது! ஏனென்றால், இன்னும் அதிகரிக்காத வெம்மைதான் கதிரவனிடம் அப்பொழுது இருக்கும். பாரதி இதை நயம்படச் சொல்கிறான்.

தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ...

தங்கத்தினை உருக்கி, அதைத் தளதள என்று குழம்பாக்கிப் பரப்பிவைத்தால் எப்படியிருக்கும்? அந்தக் குழம்பு வெம்மை மிகுந்ததாக இருக்குமே! அதன் வெம்மையைக் குறைக்க வேண்டும். தங்கக் குழம்பின் வெம்மை தணியத் தழல் குறைப்புச் செய்ய வேண்டும் என்கிறார். தழல் குறைத்து, வெம்மை தணிந்த தங்கக் குழம்போ தேன்போல் தோன்றுகிறதாம்! அந்தத் தேனை வெட்டவெளி எங்கும் பரப்பி வைத்தால் எப்படி இருக்கும்!

காலைக் கதிரொளி அப்படி இருந்தது என்று பாரதி சொல்லவில்லை. அவன் அப்படிச் சொல்லியிருந்தால், அது கட்டுரை போல ஆகியிருக்கும். ஆனால், அவன் எழுதுவதோ கவிதை. அதில் எதுவும் சொல்லப்படவில்லை. மாறாகத் தன் அனுபவச் சுவையாய் விரிவது அவன் வியப்பு. ஆம்! தழல் குறைந்த தங்கக் குழம்பு தேனாக மாறியதும், அத்தேனை எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ என்று அவன் வியக்கிறான். கடுமையான ஒன்றைக் கடுமை குறைத்து வெளிப்படுத்துதல் தானே இங்கிதம்? “கடிது ஓச்சி மெல்ல எறிக” என்பாரே திருவள்ளுவர்! அதுதானே இங்கிதம்! கேட்டார் மனம் புண்படாமல் இடித்துரைப்பது தானே இங்கிதம்! கணநேரம் பார்த்தாலே, கண்கூச வைக்கும் கதிரொளியை, வெம்மை தணியச் செய்து, தழல் குறைத்துத் தேனாகப் பரப்பி வைத்தலும் இங்கிதம் அன்றோ! கவிஞன் கண்டுவியந்த காட்சியை இப்பொழுது நம் மனக்கண்ணில் விரியச் செய்து, நம்மையும் வியக்கச் செய்யும் ஆற்றல் இந்த வரிகளுக்கு உண்டு என்பதற்குப் பெரும் காரணம்

"தழல் குறைத்து" என்ற சொற்றொடரும் "இங்கிதமோ" என்ற சொல்லாட்சியுமே.

இதே போலச் சோதியானது வான்வெளியை எப்படிக் கவர்ந்து களவாடியது என்றால், வான்வெளி முழுதும் தானேயாகிச் சோதி நிறைந்ததாம். இதைத் தான் பாரதி சொல்கிறான்.

..... வான் வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தை.....

வான்வெளியைக் கவர்ந்து கொண்ட சோதியாகிய ஒளியின் பெருமையை எப்படிப் புகழ்வது? அதைப் புகழ நினைப்பவர்க்கு அதற்குத் தக்க உவமை கிடைக்காதே! அதற்கு ஏன் உவமை கிடைக்காது என்பதற்கான விளக்கத்தைச் சற்றே ஒத்திவைத்து விட்டு, அது விளைவிக்கும் இன்பத்தை விவரிக்க முற்படுகிறான், பாரதி.

.....வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ
கண்ணை இனி தென்றுரைப்பர் கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை அளக்குமொளி மேம்படும் ஓர் இன்பமன்றோ.

கண் இனியது தான். ஆனால், ஒளியில்லாமல் கண் இருந்து என்ன பயன்? கண் என்ற கருவி மூலம் எதைக் காண வேண்டும் என்றாலும் ஒளி தேவை. எனவே, ஒளி என்பது கண்ணுக்குக் கண்ணானது. ஒளியைக் கொண்டுதான், நாம் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறோம். அப்படியிருக்க, ஒளியின் வடிவம் இத்தகையது என்று உவமையால் விளக்க முடியுமா? ஆனால், ஒளியால் பேரின்பம் விளைகிறது என்று சொல்ல முடியும். அந்த இன்பம் மேம்படும் இன்பம். அதாவது, நமக்கு மேன்மை சேர்க்கும் இன்பம். மேலும் மேலும் சுவை சேர்த்துக் கொண்டே இருக்கும் தெவிட்டாத இன்பம். இந்த இடத்தில், ஒளியை "விண்ணை அளக்கும் ஒளி" என்று பாரதி புகழ்கிறான். இதற்கு என்ன பொருள்?

ஒளிக்கீற்று ஒன்று புறப்பட்டால், அது விரைந்து கொண்டேயிருக்கும். ஒளி முழுவதையும் உட்கொண்டு விடக்கூடிய முழுக்கருப் பொருள் ஏதாவது அதன் பாதையில்

குறுக்கிடாதவரை, அந்த ஒளிக்கீற்று விரைந்து கொண்டே இருக்கும். இது அறிவியல் மெய்ம்மை. மிகத் தொலைவில் உள்ள விண்மீன்களில் இருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் புறப்பட்ட ஒளி, இப்பொழுது தான், புவிக்கோளத்தை வந்தடைவதாக விண்ணியலார் கூறுகின்றனர். நாம் பார்க்கும் விண்மீன்களில் சில, இப்பொழுது இல்லவே இல்லையாம்! எப்படி அவற்றை, நாம் இப்பொழுது பார்க்கிறோம்? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், அவற்றிலிருந்து புறப்பட்ட ஒளி, அண்டப்பெருவெளியில், நெடும் தொலைவு பயணம் செய்து, இப்பொழுதுதான் புவிக் கோளத்தை வந்தடைவதால், அந்த ஒளியை விடுத்த மூலங்களான விண்மீன்கள், இப்பொழுது இருப்பவை போலத் தோன்றுகின்றன! விண்ணை அளக்க ஒளியைவிட்டால், வேறு கருவி இருக்க முடியுமா? மெய்யாகவே, ஒளியின் உதவியோடு தான் விண்ணியலார் விண்மீன்களின் தொலைவுகளை அளக்கிறார்கள். (light years) எனவே, "விண்ணை அளக்குமொளி" என்று பாரதி சொல்வது அறிவியற் செறிவு மிக்கது.

மழை பொழிந்திடும் வண்ணத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம், இருட்டுக்கும் புயலுக்கும் ஒளிவடிவம் தருகிறது. இந்த ஒளி, மொழி வடிவம் பெறும்போது கவிதையாகிறது என்று தன்னுடைய முதல் கட்டுரையில் பேசுகிறார் நூலாசிரியர் ரவி. இந்தக் கூற்று கூட, அவருடைய கவிதை அனுபவ வெளிப்பாடு தான்! தான் வழிபடும் தெய்வத் திருமுன் உண்மையான பக்தன் மெய் மறந்து நிற்கும் போது, அவனுள் பொங்கும் கவிதையைப் பற்றி, நண்பர் ரவி பேசும் சொற்களில் புனிதம் நிறைந்து, படிக்கின்ற நம் மனத்தையும் பற்றிக் கொள்ளும் பரவசத்தை ஒவ்வொரு வரியிலும் அனுபவிக்க முடிகிறது.

ஆய்வு நோக்குடன் கவிதையை அணுகுபவர்களால், தங்கள் கவிதை அனுபவங்களைச் சுவையாகப் பகிர்ந்துகொள்ள முடியுமா என்ற ஐயம் உண்டு. ஆனால், இந்தக் கட்டுரைகள் அந்த ஐயத்தைத் தூக்கி எறிந்து விட்டன.

அணிசெய் காவியம் ஆயிரங்கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலர்

என்று பாரதியார் சொல்வார். கற்பது வேறு, கற்பதில்

மூழ்கித் திளைப்பது வேறு. இங்கே ரவி, கவிதைகளில் மூழ்கித் திளைப்பதோடு மட்டுமில்லாமல், தான் அப்படித் திளைப்பதற்கு அந்தக் கவிதைகள் அப்படி என்ன மாயங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன என்பனவற்றையும் சிந்தித்துத் தன் கருத்துகளை நம்முடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

தீயைத் தன் அகத்தில் சுடர்விட்டெரியும் தெய்வ வடிவமாகவே, பாரதி கண்டு தொழுதான்!

தீயினி லேவளர் சோதியே - என்றன்
சிந்தனை யே என்றன் சித்தமே...

தீ வேறாம், தீயின் சோதி வேறாம், சிந்தனை வேறாம், சித்தம் வேறாம்.

தழலாகப் பெருகி ஒரு காட்டையே அழிக்கக் கூடியது தீ. அதுவே, ஒரு சிறிய சுடராகவும் இருந்து ஒளிதரக் கூடியது. சிறு பொறியாகவும் தோன்றக் கூடும். ஒரு நெருப்புப் பொறியை வைத்து ஒரு காட்டையே எரித்து, அழித்து விடலாம்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் எலார்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ!
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

அது என்ன காடு? என்ன பொந்து? என்ன தீப்பொறி?

தீக்குள் விரலை வைத்தால்? சுடும்! சுடாது! கண்ணனைத் தீண்டும் இன்பம் தோன்றும்? என்ன ஒன்றும் புரியவில்லையே. புரியாது புரிய வேண்டாம். கவிதை புரிவதற்காகவே இல்லை. ஆனால், அது புரியும் மாயத்திற்கான எல்லை இல்லை!

"கம்பனையும் கீட்ஸையும் நான் இன்று படிக்கும் போது, என்றோ மறைந்து விட்டவரால் எழுதப்பட்டு, ஏட்டில் உறைந்து விட்ட சொற்களையா படிக்கிறேன்? உயிரோட்டமுள்ள மகாகவிகளுடன் அளவளாவும் அனுபவ இன்பத்தில் அல்லவா மூழ்குகிறேன்!" என்கிறார் ரவி. கவிதை அனுபவம் இது தான். அப்படி மூழ்கும் போது தான், ஆழ்ந்திருக்கும் கவியுள்ளதைக் காண முடியும்!

“அகத்தே விளங்கும் உண்மை, ஒளிச்சுடரில் தோற்றம் கொண்டு வெளிப்பட்டதால், பொய்யாகத் தோன்றும் காட்சி, உயர்ந்த கவிதையாக மலர்ந்து, உண்மை ஒளிவீசி என்றும் வாழும் இறவாநிலை பெறுகிறது” என்ற வரிகளின் மூலம், அனுபவத்தில் திளைத்துக் கொண்டே, ஆனால், கொஞ்சம் விலகி நின்று, ஆய்ந்து பார்க்கும் இவருடைய தனித் தன்மையை நமக்கு உணர வைக்கிறார் ரவி.

புற அனுபவத்தைத் தன் அகச் சுனையில் அமிழ்த்தி எடுத்துக் கவிஞன் வழங்கும் போது, அந்த அனுபவம், நிற வடிவத் தோற்ற மாற்றங்கள் அடையத் தான் செய்கிறது என்று இவர் கூறும் போது, தமது கவிதை அனுபவ வெளிப்பாட்டைத் தான், இவர் மொழி மாற்றம் செய்கிறார் என்று தோன்றுகிறது.

❖

வானவில் கே.ரவியின் 'அணையாத சுடரேற்றுவேன்' கவிதைகள் – உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள்

•

முனைவர் ரா.ரவிச்சிந்திரன்
தமிழ் உதவிப்பேராசிரியர் தமிழ் உயராய்வுத்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம்

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையினை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடி ஆகும். இது சிறந்த செய்திப் பதிவுக் கருவியாகும். இது படைக்கப்படும் காலத்து மக்களின் நிலையினை, நிகழ்வினை தவறாது எடுத்துக்காட்ட வல்லது. படைப்பாளன் தான் கண்ட மக்களையும், அவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் படைப்பில் ஓர் உயிரோவியாமாகத் தீட்டிக் காட்டத் தவறுவது இல்லை. அதனாலீல் தான் இலக்கியம் சமுதாயத்தை ஒட்டி இயங்குகின்ற பெரிய ஆற்றலாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் கவிஞர் வானவில் கே.ரவியின் படைப்பில் உருவான 'அணையாத சுடரேற்றுவேன்" கவிதைகள் உணர்த்தும் சமுதாய நிலைப்பாட்டை இக்கட்டுரை ஆய்வு நோக்கில் எடுத்துரைக்கிறது.

“ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்” சமுதாயம் என்பது மனித இனக் குழுக்கள் வேறுபாடின்றிக் கூட்டமாக வாழும் வாழ்க்கை முறையாகும். மனித வாழ்க்கை பல்வேறு படிநிலைகளை கொண்டு அமைகிறது. மனிதன், பிறப்பு, வளர்ப்பு, வெற்றி தோல்வி போன்ற பல நிலைகளோடு தொடர்பு கொண்டு இயங்குகிறான். ஒரு மனிதன் சமுதயாத்தில் வெற்றி கொள்ளவேண்டுமெனில் தன்னம்பிக்கையுடன் போராடவேண்டும். அதற்கு ஊக்கம் அவசிமான ஒன்றாகும்.

ஊக்கமே உயர்வு

வாழ்க்கையில் மனிதர்கள் ஏழ்மை கண்டு துவண்டு விடக்கூடாது. அதைத் தாண்டி வந்தால் தான் சாதிக்க முடியும். மேலும் நேர்மையான வழியில் ஏழ்மையை வெற்றி கொள்ள வேண்டும் என்பதை கே.ரவி அவர்கள் பாட்டுத்திறத்தாலே.. என்ற கவிதை வழி எடுத்துரைக்கின்றார்.

உன்
அடுப்பு நெருப்பின்றி அவிந்து கிடந்தாலும்
உள்ளக் கனலை ஊதி வளர்க்கிறேன்
அந்தக் கனலை அள்ளிக் கொண்டு
நிமிர்ந்து நட
அந்தக் கனலை அள்ளிப் பருகி
எழுந்துபற
பஞ்சம் என்ற பழைய பொய்யை
நம்பிவிடாதே
வஞ்சம் இழைக்கும் மனிதர்க்கெல்லாம்
வணக்கம் சொல்லாதே! (அணையாத சுடரேற்றுவேன். ப.23)

என ஊக்கத்துடன் வாழ்வில் நின்று வெற்றி காணவேண்டும் எனகிறார் கவிஞர் கே.ரவி அவர்கள்.

மேலும் மின்னற் சுவையும் மெல்லப் புரியும் என்ற கவிதையில்

இருட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தால்
இதயம் கணக்கும்

வெளிச்சத்துக்கு வந்து விட்டால்

மெலிதாய் மிக இனிதாய் விரியும்
மின்னற் சுவையும் மெல்லப் புரியும்
(அணையாத சுடரேற்றுவேன். ப.175)

எனத் துன்ப இருட்டு விலகினாலே நமக்கு இன்பம் கிடைக்கும் என்கிறார் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள். இக்கவிதைக்கு வலுசேர்க்கும் விதமாக,

'இன்பத்தைப் பகிர்ந்தால் இரட்டிப்பாகும்
துன்பத்தை பகிர்ந்தால் பாதியாக குறையும்'

என்ற பொன்மொழி அமைகிறது. இதன் மூலம் வாழ்வில் ஏற்படும் பஞ்சம் பட்டினி, துன்பம் போன்ற நிலைகளை கடந்து வந்தால்தான் எந்த சூழ்நிலையிலும் வெற்றிக் கனியை சுவைக்க முடியும் என்பதை உணரமுடிகின்றது.

தேர்வு செய்து வாக்களியுங்கள்

இன்றைய அரசியல் உலகில் லஞ்சமும் ஊழலும் புரையோடிப்போயுள்ளது. இதனால் மக்கள் தங்கள் வாக்குகளை சிந்தித்து நேர்மையான ஆட்சியாளர்களுக்கு வாக்களிக்கவில்லையென்றால் நேர்மையும் அறநெறியும் கேள்விக்குறியாகும். ஆதலால் பொதுமக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என்பதனை கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள் 'கைகுவித்து வேண்டுகிறேன்' என்ற தலைப்பின் வழி எடுத்துரைக்கின்றார்.

தானம் லஞ்சம் மறுத்து விடுங்கள் - தன்
மானம் காக்க வாக்களியுங்கள்
நேர்மை, துணிவு பணிவெல்லாம்
தேர்வு செய்து வாக்களியுங்கள்

மேலும் ஓட்டு கேட்க வரும் அரசியல்வாதிகளை உங்கள் பிரச்சினைகளை கேட்க வைக்க வேண்டும் என்பதனை கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

பிரச்சாரத்ததை நிறுத்திவிட்டு
பிரச்சனைகளைக் கேட்கச் சொல்லுங்கள்
அடக்கமாக வரச்சொல்லுங்கள்
ஆடம்பரத்தை தவிர்க்கச் சொல்லுங்கள்
(அணையாத சுடரேற்றுவேன். ப.56)

என, மக்களே அரசியல்வாதிகளை திருத்த களம் காணவேண்டும் என்பதனை கவிஞர் வலியுறுத்துகின்றார். மேலும் ஓட்டுச் சீட்டு என்பது வெறும் காகிதமல்ல அது மானம் காக்கும் ஆயுதம் என்கிறார்.

ஓட்டுச் சீட்டு காகிதமா
மானம் காக்கும் ஆயுதமா
முடிவு உங்கள் கைகளிலே
கைகுவித்து வேண்டுகிறேன் - கொஞ்சம்
சிந்திக்கத் தூண்டுகிறேன்.

(அணையாத சுடரேற்றுவேன். ப.56)

என்ற இக்கவிதை வழி இன்றைய காலகட்டத்திலுள்ள நடைமுறை இழிநிலை மாற கவிஞர் வலியுறுத்துகின்றார்.

தர்மநெறி தவறும் அரசியல் வாதிகள்

மக்களின் சேவகர்கள்தான் அரசியல்வாதிகள் மேலும் அறநெறியில் நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அவர்களிடம் உள்ளது. ஆனால் இன்றைய நிலையில் பொய்கூறுதல், மற்றவர்களின் இழிநிலையைக் கூறி தன்னை உயர்த்தி கூறுதல், நாடகமாடுதல், ஆட்சி அமைந்தவுடன் கையூட்டு, ஊழல் செய்தல், அதிகாரிகளை தன சுயநலத்திற்காக பயன்படுத்திக்கொள்ளல் என்ற அரசியல்வாதிகளின் இழிநிலையை தர்மம் எங்கே? என்ற தலைப்பில் கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

மக்களின் சேவகர்கள் மக்களையே புறக்கணித்து
மாவீரர் போல்வேடம் போடுவதா
சொந்தபந்தம் சொகுசாக வாழ்ந்திடவும்
சோறளிக்கும் விவசாய பசியாளே வாடிடவும்
தர்மத்தை எள்ளிநகை யாடுவதா?

(அணையாத சுடரேற்றுவேன். ப.71)

என மக்களை ஏமாற்றி அரசியல்வாதிகள் சொகுசாக வாழ்வதை கவிஞர் சாடுகின்றார்.

சிந்திக்காத மக்கள்

அரசியலில் நேர்மையான அதிகாரிகளை தெரிவு செய்யாததற்கு மக்களே பொறுப்பு எனலாம். சரியான

பொறுப்புள்ள நேர்மையான நபரை ஆட்சியில் அமர வைப்பது மக்களின் கடமையாகும். ஆனால் மக்கள் ஊழல்வாதிகளை ஆட்சிக் கட்டலில் அமரவைத்து ஊழல் செய்ய வழிவகுக்கின்றனர். என்பதை 'நெஞ்சு கொதிக்கிறது' என்ற கவிதை வழி எடுத்துரைக்கின்றார்.

ஊழல் செய்த பேர்வழிகளை நாம்
தலைமேல் தூக்கிக் கொண்டாடுவோம்
ஒவ்வொரு நாளும குடும்பச் சுமையில்
மூழ்கித் திணறித் திண்டாடுவோம்
வாழும் வழியறியோம் - நம்மை
வஞ்சிப்பவர்க்கே வாக்களிப்போம்
வீசும் எலும்புத் துண்டுகளுக்கே
விசுவாசமாகக் குரைத்திடுவோம்
நினைத்துப் பார்க்கும் போதே என்றன்
நெஞ்சு கொதிக்கிறது

என்ற கவிதையில் தவறான தலைவர்களை நாம் தேர்ந்தெடுத்துவிட்டு நம்மை நாமே படுகுழியில் தள்ளுகிறோம் என்ற கருத்தினை உணர்த்துகின்றார் கவிஞர். மேலும் இதனை நினைத்தால் நெஞ்சு கொதிக்கிறது, சினத்தை அடக்கிக் கொள்வது கூடக கடினமாக இருக்கிறது என்ற வரிகளில் கவிஞரின் நியாயமான கோபம் வெளிப்டுகிறது.

மேற்குறித்த கவிதையை படிக்கும் பொழுது பாரதியாரின்

நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்விட்டால்
என்ற கவிதை வரிகள் நினைவிக்கு வரும்
கஞ்சி குடிப்பதற்கில்லார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே - நிதம்
பரிதவித் தேஉயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே
(பாரதியார், பாரத ஜனங்களின் தற்கால நிலைமை)

இப்பாடலில் பாரதியார் நமது பாரத மக்கள் தம் வாழ்க்கை நிலைக்கு காரணம் யார் என்று தெரியாமலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் எனக் கூறுவார். அதே போன்ற

கருத்தினை கவிஞர் நெஞ்சு கொதிக்கிறது என்ற தலைப்பில் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

கையூட்டு

இன்றைய அரசு அலுவலகங்களில் எழுதாச் சட்டமாக பாரபட்சமின்றி கையூட்டு நடைபெறுகிறது.

லஞ்சம் தவிபி! நெஞ்சம் நிமிபி!

என்பதெல்லாம் வெறும் ஏட்டளவிலேயே உள்ளது. கவிஞர் கையூட்டம்மா கையூட்டு என்ற தலைப்பில்,

கையூட்டம்மா கையூட்டு
லஞ்சத்தின் பெயர் கையூட்டு
பிறப்பில் இருந்து மரணம் வரை
பின்தொடரும் நாய் கையூட்டு
ஏழை எளியோர் அடிவயிற்றில்
எட்டி உதைக்கும் கையூட்டு

என்ற வரிகளில் நடைமுறை எதார்த்தத்தை எடுத்துரைக்கின்றார் கவிஞர். பொது மக்கள் எதிர்காலத்தில் கையூட்டை எவ்வாறு தவிர்க்க வேண்டும் என்பதை கீழ்க்கண்ட கவிதை வழி கவிஞர் உரைக்கின்றார்.

லஞ்சப் பேயை ஓட்டிவிட
வைக்க வேண்டும் அதிர்வேட்டு
லஞ்சம் கேட்டு நீட்டுகிற
கையையெல்லாம் எரியூட்டு

(அணையாத சுடரேற்றுவேன். ப.98)

இதன் மூலம் லஞ்சத்தை மக்களே ஒழிக்கவேண்டும் என்பதனை உறுதியாக வலியுறுத்துகிறார்.

மக்கள் விழித்துக்கொள்ள வேண்டும்

அரசியல் வியாபாரத்தில் அரசியல் வாதிகள் சொத்து சுகங்களை நாளும் பெருக்கி சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். தவறுகளை தர்மமாக்கி பொய்யை மெய்யாக்கி மாற்றி விட்டனர். எனவே மக்களே இனி இவற்றை உணர்ந்து விழிப்புணர்வாய் இருக்கவேண்டும். என்பதனை கவிஞர் 'படுகுழியில் விழுகின்றோம்' கவிதையில் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

ஒரு நிமிடம் சிந்தித்தால் போதும் உண்மை
உள்ளங்கை நெல்லியெனப்; புரியும் நம்மால்
உருப்பெற்று மேலெழந்த ஆட்களெல்லாம்
தலைவர்களா இல்லைநம் வேலையாட்கள்
மறுபடியும் சொல்கின்றேன் மக்கள் நாமே
மந்தைகளாய் உள்ளநிலை மாறவேண்டும்
ஒரு விரலால் ஆட்சிகளை மாற்றுகின்ற
உயர்பதவி நம்பதவி உணர்ந்து கொள்வோம்.
(அணையாத சுடரேற்றுவேன். ப.98)

ஆட்சிபொறுப்பேர்பவர்கள் நமக்காக வேலை செய்பவர்கள் என்ற நிலையை மக்கள் உணரவேண்டும் அந்த நிலையை மக்கள் உணர்ந்தாலே இந்நிலை மாறும் என்பதனை இக்கவிதையில் கவிஞர் உணர்த்துகின்றார்.

தொகுப்புரை

சம காலத்தில் வாழ்க்கைச் சூழல் தரும் கருத்துகளை தன் வசமாக்கி அது மக்களுக்கு பயன்தரும் வகையில் வடித்து கொடுப்பது ஒரு படைப்பாளனின் படைப்பு நெறியாகும். அவ்வகையில் அணையாத சுடரேற்றுவேன் கவிதைகள் வழி கவிஞர் வானவில் கே.ரவி அவர்கள் கவித்துவத்தின் சுவை, இயற்கையின் சிறப்பு, தமிழ் இலக்கியத்தின் வளமை, போன்ற செய்திகளை மிக அழகுபட தன் சொல்லாற்றலால் படம்பிடித்து காட்டியுள்ளார். மேலும் இன்றைய நடைமுறையில் உள்ள அரசியல் நிலைகளை எதார்த்தமாக தோலுரித்துக் காட்டும் திறனைப் பார்க்கும்பொழுது கவிஞரின் சமுதாய ஆர்வத்தை உணரமுடிகின்றது.

உசாத்துணை நூல்கள்

இந்திய பல்கலைக்கழகத் தமிழாய்வியல் மன்றம்., பூமணியன் நல்ல நாளில் சமூக சித்தரிப்பு., ப.1393.

பாரதியார், பாரதியார் கவிதைகள்

வானவில் கே.ரவி, அணையாத சுடரேற்றுவேன் (கவிதைகள்)

❖

மகா கவியும் மகா ரசிகனும்

•

முனைவர் ஆ.ரூபா
தமிழ் உதவிப் பேராசிரியர் அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி – 635207.

ஒரு கவிஞனை அனுபவிக்க அவன் கவிதைகளை அப்படியே படிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள கவிஞர் கே.ரவி அவர்கள் மின்னற் சுவை என்ற புத்தகத்தில் பாரதியின் கவிதைகளை அணு அணுவாக ரசித்து ருசித்து எட்டு கட்டுரைகளைத் தந்துள்ளார். அவை தேடியுனைச் சரணடைந்தேன், மின்னற் சுவை. காலமாம் வானத்தில், பாரதியார் உலககவி, பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா, பிழைத்த தென்னந்தோப்பு, அறம் பாட வந்த கவிஞன், தீக்குள் விரலை வைத்தாள் என்ற கட்டுரைகளைப் படைத்தருளியுள்ளார். அவற்றில் இவ்வாய்வு கட்டுரைக்குத் தேடியுனைச் சரணடைந்தேன், பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா. தீக்குள் விரலை வைத்தாள் என்ற கட்டுரைகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தேடியுனைச் சரணடைந்தேன்

மனிதன் தேடுவதிலேயே தன்னுடைய வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறான். இதனை பாரதியார்

தேடிச் சோறுநிதம் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்

என்ற கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிதையில் பாரதியார் சோறு தேடி தின்று வாழ்வது மட்டும் வாழ்க்கையன்று.

உண்மையான கண்களுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளைத் தேடி கண்டடைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் வானவில் கே.ரவி அவர்கள் "புலப்படும் பொருள்களுக்கு அப்பால் புலப்படா அடிப்படை ஆற்றல் ஒன்று உண்டென்று தேடி அலைவது தான் அறிவியல் மனம்" என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தின் மூலம் உண்மையான அறிவைத் தேடுதல் வேண்டும், அது தான் உண்மையான தேடுதல் என்று குறிப்பிட்டுள்ளதை உணர முடிகிறது.

இதற்கு ரவி ஐயா அவர்கள் பாரதியின் வரிகளை மீண்டும் எடுத்துரைத்திருக்கிறார் "தேடித் தேடிச் சலித்தேனே என்று பாரதி குறிப்பிடவில்லை தேடித் தேடி இளைத்தேனே என்று தான் குறிப்பிட்டுள்ளார்" என்று அவர் எழுதியிருப்பது கவிதையை அவர் வாசிக்கவில்லை சுவாசித்துள்ளார் என்பது தெரிகிறது.

பாரதியின் அடுத்த கவிதையைப் பார்த்த கவிஞர் அவர்கள் அறிவு மட்டுமே நாம் தேடித் தேடி அடைதல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாமமும் உருவும் அற்றே - மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய்

என்ற இவ்வரிகளில் உள்ள புந்தி என்ற சொல் அறிவைக் குறிப்பிடுகிறது. இவையும் அறிவினை மையப்படுத்தியுள்ளது.

பாரதியின் அடுத்த வரிகள்

ஆமெனும் பொருளனைத்தாய் - வெறும்
அறிவுடன் ஆநத்த இயல்புடைத்தாய்

அறிவு என்று இங்கே குறிக்கப்படுவது வடமொழியில் சித் என்று குறிக்கப்படுகிறது. பாரதி பிரும்மம் என்பது உள்ளது. அறிவு, ஆனந்தம் என்று குறிப்பிட்டுட்டுள்ளார் ஆனால் ரவி ஐயா அவர்கள் அறிவு தான் அனைத்தும் என்றும் குறிப்பிடுகிறார்.

கட்டுரையின் கடைசியாக

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்

என்ற வரிகளைப் பயன்படுத்தியுள்ளார். இவை அனைத்தும் பாரதி பரம்பொருளுக்குக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கவிஞர் ஐயா அவர்கள் அறிவு தான் ஆயுதம் அவ்வறிவை நாம் பெற்றுவிட்டால் இவ்வுலகத்தில் அனைத்தையும் பெறலாம் என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து இக்கட்டுரையை அளித்துள்ளார்.

மேலும் உலககவி என்பதற்கும் மகாகவி என்பதற்கும் எழுத்தாளர் கொடுத்துள்ள விளக்கம் "எந்தக் கவிஞனுடைய படைப்புகள் அவன் நாட்டினரால், அவன் மொழியினரால் மட்டுமின்றி பிறராலும் மதிக்கப்படுகின்றனவோ, அந்தக் கவிஞனே உலககவி" என்று குறிப்பிட்டுள்ளார்.

மகாகவி என்பதற்கு "உலகமெங்கும் உள்ள மக்கள் எந்தக் காலத்திலும் படித்து உணர்ந்து சுவைக்கத் தக்கவாறு அமைந்த கவிதைகளைப் படைத்தவர்களே மகாகவிகளாக காலம் வென்று நிற்கிறார்கள்" என்றும் விளக்கம் தந்துள்ளார்.

இக்கட்டுரையின் தலைப்பு 'மகாகவியும் மகா ரசிகனும்.' கவிஞர் ஐயா அவர்களை மகா ரசிகன் என்று கூறியதன் காரணம் அவர் பாரதியின் கவிதைகளை அவ்வாறு ரசித்துள்ளார். தம் முன்னுரையில் அவர் குறிப்பிட்டுள்ளது கவிதையை வாசிக்க வேண்டும் என்பதையும் கடந்து பயில வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனில் புதியதாக திருமணம் ஆனவர் தன் மனைவியுடன் சேர்ந்து படுத்துத், துயின்று, நீராடிப், புசித்துச், சிரித்து, அழுது எப்படி எல்லாம் அவனோடு இரண்டற இருக்க முயல்வானோ அப்படி ஒரு வெறியுடன் கவிதைகளோடு இரண்டறக் கலக்க முயன்று தூக்கத்தில் கூட அக்கவிதைகளை உளறினால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். இவை அவருடைய ரசிப்புத் தன்மையை உணர்த்துகிறது.

பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமாடா

நூல் ஆசிரியரிடம் ஒருவர் நேர்காணல் செய்து கேள்விகள் கேட்ட பொழுது நூலாசிரியர் அளித்த விடை

கேள்வி – உங்களுக்குப் பிடித்த கவிஞர்?

பதில் – பாரதி

கேள்வி – உங்களுக்குப் பிடித்த பத்திரிக்கையாளர்?

பதில் – பாரதி

கேள்வி – உங்களுக்குப் பிடித்த அரசியல்வாதி?

பதில் – பாரதி

கேள்வி – எல்லாமே பாரதியா? பாரதி என்று பதில் சொல்ல முடியாதபடி ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களுக்குப் பிடித்த பெண்?

பதில் – பாரதி

ஒரு கவிஞன் அல்லது ஒரு படைப்பாளி தன்னை மறந்து தானே பாடுபொருளாய் அல்லது தான் படைக்கும் ஒரு பாத்திரமாய் மாறிவிட வேண்டும் என்பதை இவர் குறிப்பிட்டுள்ளார். இவையும் ஒரு காரணம் நான் அவரை மகா ரசிகன் என்று குறிப்பட்டதற்கு.

மெய்மறந்து மற்றொன்றாய் மாறும் வகையில் வல்லவர்களே மகாகவி என்று குறிப்பிடுகிறார்.

பெண்விடுதலை இல்லாமல் மண் விடுதலை கிட்டாது என்ற பாரதியின் வரிகளை உணர்ந்து பாரதி நிவேதிதா அம்மையாரை தன் குருவாக ஏற்றுக் கொண்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

புதுமைப் பெண் கவிதையில்

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"

என்று பாரதி குறிப்பிட்டதை கவிஞர் கே.ரவி அவர்கள் பெண்ணை தெய்வம் என்றால் அதற்கு எதிரிடை பிசாசு அப்பிசாசு தானும் ஒழிய கும்மியடிக்க சொல்கிறார் பாரதி என்று விளக்கம் சொல்கிறார்.

பெண்சிசுகொலை, இளம் வயது திருமணம் என்று பெண்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகளைத் தன் கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார்.

அப்புள்ளி விவரம்

வயது	மணம்புரிந்த மாதர்	கைம்பெண்கள்
0 - 1	13212	1014
1 - 2	17753	856

2 - 3	49787	1807
3 - 4	134105	9273
4 - 5	302425	17703
5 - 10	2219778	94240
10 - 15	10087024	223032

இப்படி புள்ளி விவரம் தந்து கைம்பெண்களின் மறுமணம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பெண்விடுதலைக்கு ஆரம்பப்படிகளான கோட்பாடுகளைப் பாரதி குறிப்பிட்டுள்ளதைக் கட்டுரையாசிரியர் தன் கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார். மேலும் கட்டாய திருமணத்தைப் பற்றி பாரதி குறிப்பிட்டுள்ளதை

"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்று குறிப்பிட்டு காதல் திருமணத்தைப் பாரதி உறுதியாக ஏற்றார் என்று பதிவு செய்துள்ளார் கட்டுரையாசிரியர் கே.ரவி ஐயா அவர்கள்.

தீக்குள் விரலை வைத்தால்

இவ்வரி எனக்கு வினா வாக்கியமாக தோன்றுகிறது. ஏனெனில் தீக்குள் விரலை வைத்தால் என்ன நடக்கும் அது சுடுமா? சுடாதா? என்பதை நீயே அறிந்துகொள் என்று உணர்த்துவது போல் தோன்றுகிறது.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குளிவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிப்படைத்தோம்
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்

இந்தக் கவிதையில் பாரதி என்ன சொல்கிறார் என்பதை அறிய முடியவில்லை. அறிவுக் கண் கொண்டு பார்த்தால் தான் அறிவுக்காக இல்லை என்பதும் ஏதோ ஒரு இனம்புரியாத குதூகலத்தில் சிறகடித்துப் பறக்கும் வேகத்தை இக்கவிதை

வாசிக்கும் போது உணர முடிகிறது என்று குறிப்பிடுகிறார். அதுவல்ல! உண்மையில், ஒரு பொருளை பிறர்க்கு எப்படி எடுத்துச் சொல்வது என்று தெரியாமல் தக்க சொல் கிடைக்காமல் தடுமாறும் நிலை என்று குறிப்பிடுகிறார்.

"தீ சுடும் என்பதைச் சொற்களால் விளக்கப் புரிய வைப்பதைக் காட்டிலும், தீயைத் தொடவைத்துப் புரிய வைப்பது எளிமையானது. தீக்குள் விரலை வைத்த போதும் கண்ணணைத் தீண்டுமின்பம் பெற்ற அனுபவத்தைச் சொற்களால் புரிய வைக்க முடியுமா?" என்று குறிப்பிட்டுள்ளார்.

தீ தீபத்தில் இருக்கும் பொழுது தெய்வமாக வழிபடுகிறோம். அதுவே வீட்டுக் கூரையில் இருக்கும் பொழுது தூற்றுகிறோம். இது போல் தான் அறிவும். அறிவை நாம் பெற்றுவிட்டால் அனைத்தையும் அடைந்துவிடலாம் என்பதை ரவி ஐயா கருத்துகளின் வழி உணர முடிகிறது. இதற்கு சிலப்பதிகாரத்தில் தன் கணவன் திருடவில்லை என்றாலும் குற்றம் சுமத்தப்பட்டுக் கொலைக்களத்தில் கண்ட கண்ணகி மதுரையைத் தீக்கு இரையாக்கியது என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும் முத்தொள்ளாயிரத்தில் "அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ" என்ற பாடலில் சேர நாட்டு வீரர்கள் யாருக்காகவும் அஞ்ச மாட்டார்கள். அந்நாட்டில் உள்ள புள்ளினங்கள் மட்டும் அஞ்சும். அதுவும் வெள்ளத்தில் தீப்பட்டதென அஞ்சுகிறது என்று விளக்கம் சொல்லப்படுகிறது. இவ்வாறு நெருப்பிற்கு மட்டுமே அஞ்சும் தன்மைக் குறிக்கப்படுகிறது. இவற்றை வைத்து ரவி ஐயா அவர்கள் அறிவின் மேன்மையை உணர்த்துகிறார் என்று உணரமுடிகிறது.

'மின்னற் சுவை' என்ற இப்புத்தகம் வானவில் கே.ரவி ஐயா அவர்களின் அறிவு தாகத்தையும் பெண்மையை மதிக்கும் விதத்தையும் கூர்ந்து நோக்கும் திறனையும் ஆழ்ந்த ரசிப்புத் தன்மையையும் கவிதையோடு இரண்டறக் கலக்கும் தன்மையையும் விளம்புகிறது.

❖

வானவில் கே. ரவி அவர்களின் பார்வையில் வள்ளுவம்

•

முனைவர் மோ. ரூபா
தமிழ் உதவிப்பேராசிரியர், செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
சென்னை.

முன்னுரை:

வானோர் போற்றும் வள்ளுவம்
தேனாய் இனிக்கும் வள்ளுவம்
ஆன்றோருக்கும் சான்றோருக்கும்
பாரில் வாழும் அனைவருக்கும்
உலக அறிவை அள்ளித் தருவது
வள்ளுவம்

முப்பால், வாயுறை வாழ்த்து, தெய்வநூல், உத்தரவேதம், பொய்யாமொழி, பொதுமறை என்றெல்லாம் பலவாறாகப் பாராட்டப்படுவது திருக்குறள்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள
இதில் இல்லாத எப்பொருளும் இல்லையாம்
(மதுரைத் தமிழ்நாகனார், திருவள்ளுவமாலை)

என மதுரைத் தமிழ்நாகனார் திருக்குறளின் பெருமையைச் சுட்டுகிறார். முக்காலத்து வாழ்வோருக்கு முழுதும் ஏற்றதாய் முற்றும் உணர்ந்து எழுதியுள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

அவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கருத்தும் சமுதாய மேம்பாட்டிற்கும், தனிமனித ஒழுக்கத்திற்கும் ஆற்றுப்படுத்தும் விதத்திலே அமைந்திருப்பது திண்ணம். இத்தகைய சிறந்த திருக்குறளைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலரும் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.

திருக்குறள் பற்றி அறிஞர்கள் கருத்து

அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளில் பாடப்பட்ட முப்பால் குறித்து ஜி.யு.போப் அவர்கள்,

"உலகத்தில் உள்ள இலக்கியங்களுள் திருக்குறளுக்கு இணையான நூல் ஒன்றுமில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். (செ. சுரேஷ், அறிஞர்கள் பார்வையில் திருவள்ளுவம்)

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே (மேலது)

என்று கவிமணி அவர்கள் திருக்குறளின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளுவர் திருக்குறளை விடப் பழமையான நூல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்று பலமொழிகளைக் கற்றுணர்ந்த பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் குறிப்பிட்டுள்ளார்.

தெள்ளுத் தமிழ்நடை
சின்னஞ்சிறிய இரண்டடிகள்
அள்ளுதொறுஞ் சுவை
உள்ளுந்தொறும் உணர்வாகும்
வண்ணம் கொள்ளும் அறம், பொருள், இன்பம்

"அனைத்தும் கொடுத்த திருக்குறள்" (இளங்கோ.ச.சு. பாரதிதாசன் திருக்குறள் உரை ஆய்வும் பதிப்பும்,).

என்று பாரதிதாசன் திருக்குறளின் பெருமையைப் பதிவு செய்கிறார். வள்ளுவனைப் பெற்றதால் புகழ் கொண்டது நம்நாடு என்று பாரதியார் கூறியுள்ளதை,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
(பாலசுப்பிரமணியன். சி., பாரதியும் பாரதிதாசனும்,)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர்
உறைவிடமாய் - வாழ்க்கை வழி
நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய்
அமைந்துள்ளது திருக்குறள்

என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது. (தனராசன். நா., வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி)

இங்ஙனம் திருக்குறளைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலரும் தங்கள் கருத்தைப் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் கவிஞர், வழக்கறிஞர், படைப்பாளர் என பன்முகத் தன்மை கொண்ட வானவில் கே. ரவி அவர்கள் பார்வையில் வள்ளுவம் பற்றி ஆராய இவ்வாய்வுக் கட்டுரை முனைந்துள்ளது.

வள்ளுவத்தின் மீது ஈடுபாடு

பள்ளிப் பருவத்திலிருந்தே திருவள்ளுவரின் மீதும், திருக்குறளின் மீதும் அதிக ஈர்ப்புக் கொண்டவர் ரவி அவர்கள். அவர் திருக்குறளைப் பற்றி கூறுகையில்,

"திருக்குறள் ஒரு மறைநூல் என்பதும், திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதும் என் நம்பிக்கை. திருக்குறளில் உள்ள ஏதேனும் ஒரு குறட்பாவின் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள என் அறிவு தயங்கினால் முதலில் என் அறிவை அதன் உட்கூறுகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவேன். அந்தப் பரிசீலனையில் அறிவு தப்பிப் பிழைத்தால் அது ஏற்கத் தயங்கும் குறட்பாவிற்கான கருத்து வேறாக இருக்கக் கூடுமோ என்று சிந்திக்கத் தலைபடுவேன். விடை கிடைக்கும்வரை போராடுவேன். திருக்குறள் மீது எனக்கு அத்தனை மரியாதை." (கானல் நீரைக் கடந்து, ப. 571)

என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் நுணுகி ஆராய்கின்ற அவரின் நுண்ணறிவுத் திறன் புலப்படுகிறது. குறட்பாவின் கருத்துகளை மறுபரிசீலனை செய்வதும், அதற்காகப் போராடுவதும் அவருடைய ஆய்வுப் புலமையையும், திருக்குறள் குறித்த அவருடைய ஆழ்ந்த சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது.

"ஒரு குறட்பாவின் கருத்தைப் புரிந்துக் கொள்ளும் முயற்சியில், அது இடம்பெற்றுள்ள அதிகாரத் தலைப்பு பெரிய அளவில் குறுக்கிடத் தேவையில்லை" என்று அவர் குறிப்பிடும் போது குறட்பாவின் கருத்தை அப்படியே ஏற்காமல் அதன் உட்பொருளை ஆராய முனையும் அவருடைய ஆய்வுத் துடிப்பு புலப்படுகிறது.

'மறை' என்ற சொல்லுக்கு வ.வே.சு. அவர்களால் விளக்கம் பெற்று அவ்விளக்கத்தைத் திருக்குறளுக்குப் பொருத்தி குறட்பாக்களின் கருத்தை அறிவதில் புதுமுனைப்புக் காட்டியுள்ளார் ரவி அவர்கள். மறை என்றால் வெளிப்படையாக ஒரு பொருளையும் உள்ளுறையாக வேறுபொருளையும் உணர்த்தும் நூல் என்று கொண்டால் திருக்குறள் ஒரு மறைநூல். எனவே இது வெளிப்படையாக ஒரு கருத்தையும், உட்பொருளாக ஒரு கருத்தையும் குறிப்பிடுகிறது என்பதே அவர் கருத்து. இதற்கு அவர் பாரதியின் 'THE OCCULT ELEMENT IN TAMIL SPEECH' என்ற ஆங்கிலக் கட்டுரையைச் சுட்டிக் காட்டுகிறார். இக்கட்டுரையில் அக்கல்டிஸ்ட்ஸ் எனப்படும் மறை ஆன்மீக அன்பர்கள் பயன்படுத்தும் சொற்களில் பொதுப் பொருளும் மறைபொருளும் இருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார். 'உட்கார்' என்ற தமிழ்ச்சொல் உட்கார் என்று பிரிந்து 'உள்ளமைதி பெறுக' என்ற வாழ்த்தாகவும் அமைகிற நுட்பத்தைச் சுட்டிக்காட்டியுள்ளான் பாரதி என்று ரவி அவர்கள் குறிப்பிடுகிறார். இதுபோன்றே திருக்குறளில் புதைந்திருக்கும் மறைபொருளையும் தேர்ந்து வெளிக்கொணர வேண்டும் என்ற ஆர்வமும், அவருடைய ஆய்வு முயற்சியும் திருக்குறளில் அவருக்கு இருக்கும் ஆழங்கால் பதித்த அறிவைப் புலப்படுத்துகிறது.

ரவி அவர்களின் ஆய்வு நுணுக்கம்

ஒரு சொல் கொடுத்தால் அது தொடர்பாக நீண்ட நேரம் பேசக்கூடிய பேச்சாற்றல் நிறைந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரைப் போன்றே ரவி அவர்கள் 'இன்பம்' என்ற ஒற்றை சொல் கொண்டு ஒரு ஆய்வுக் கட்டுரையை உருவாக்கி அதை வாசகர் மனதில் புதிய கோணத்தில் பதியச் செய்தவர்.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (அறன் வலியுறுத்தல் 39)

என்ற குறட்பாவின் மறைபொருளை நுணுகி ஆய்ந்து வெளிக்கொணர்ந்துள்ளார். இக்குறட்பாவின் கருத்தை அவர் விளக்கும் போது,

"இது அறத்தைப் பற்றிய குறள் இல்லை. அறம் என்பது என்ன என்று விளக்கும் முயற்சி, இந்தக் குறளில் மேற்கொள்ளப்படவில்லை. இன்பம் அளிப்பதே அறம் என்று அறத்தின் இலக்கணம் வகுக்கும் குறளில்லை இது. மாறாக, இந்தக் குறள் இன்பம் என்றால் என்ன என்று வரையறுத்து அறிவுறுத்தும் அற்புதக்குறள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்குறள் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் வருவதால் இது அறத்தைப் பற்றிய குறள் என்று எல்லோருடைய பார்வையிலும் பதிவாகி இருக்கும் போது இது இன்பத்தை அறிவுறுத்தும் குறள் என்று இக்குறளுக்கு புது இலக்கணத்தை வகுத்து திருக்குறள் ஆராய்ச்சியின் புத்தொளியாய் ஒளி வீசித் திகழ்கின்றார் ரவி அவர்கள்.

'மயிலையும் ஈரோடும்' என்ற தலைப்பே முரண்பட்ட தலைப்பாக இருந்த போதிலும் அதில் அரிய பல கருத்துகளைக் கூறியுள்ளார். இவருடைய கருத்துகள் சாதி வேற்றுமையைக் களைய வந்த சோதியாகக் காட்சியளிக்கிறது.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (குறள் - 30)

என்ற குறட்பாவில் அந்தணர் என்ற சொல்லுக்கு அதன் உட்கருத்தை, உண்மைக் கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"அறவோனாக, அறநெறியிலிருந்து சற்றும் வழுவாத தன்மையனாக இருப்பதே அந்தணனுக்கு அடையாளம். அப்படி அறவோனாக இருப்பதே அந்தணத் தகுதி அளிக்கவல்லது. தந்தையும் தாயும் அந்தணர்கள் என்பதால் மட்டுமே தானும் அந்தணன் என்று எவனும் சொல்லிக் கொள்ள முடியாது. தந்தையும் தாயும் அந்தணர் குலத்தார் இல்லையென்றாலும் அறவோனாக இருப்பவன் அந்தணனே. அதாவது அந்தணன் என்றால் அறவோன். அறவோன் என்றால் அந்தணன். சொற்கள் இரண்டு. பொருள் ஒன்றே. இது தான் திருக்குறள் நீதி என்று குறளின் உட்பொதிந்த கருத்தை வெளிக்கொணர்ந்துள்ளார். சாதி, மத பேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது திருக்குறள் என்று ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார்.

முடிவுரை:

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள். சிறுவயதிலிருந்தே திருக்குறளின் மீது அதிக ஈடுபாடு இருந்ததால் தான் திருக்குறளைப் பலகோணங்களில் நுணுகி ஆராயும் ஆய்வாளராக வளர்ந்துள்ளார் கே. ரவி அவர்கள். இவருடைய 'மறையும் மறையும்' என்ற ஆய்வுக் கட்டுரை மறை என்ற சொல்லின் எல்லைவரை சென்று அதன் ஆழத்தை வெளிப்படுத்திய ஒரு சுட்டுரை. 'வள்ளுவரின் அறப்புரட்சி' என்னும் தலைப்பு, ரவி அவர்கள் அறம் என்ற சொல் கொண்டு உருவாக்கிய பொருள் புரட்சி, சமூகப் புரட்சி, உண்மைப் புரட்சி, நீதிப் புரட்சி என்று சொல்லிக் கொண்டே போகலாம். 'மயிலையும் ஈரோடும் என்ற தலைப்பில் இவர் ஒரு பகுத்தறிவுப் பகலவன் என்பதும், முரண்பட்ட கருத்தைக் கூட அனைவரும் ஏற்கும் வகையில் நுணுக்கமாக எடுத்துரைக்கும் நுண்ணறிவாளர் என்பதும் புலப்படுகிறது. முடிவாக ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். வள்ளுவத்தைப் பற்றி இவர் எழுதிய சில கட்டுரைகளே அவருள் பொதிந்த அனைத்து திறமைகளையும் புலப்படுத்துகின்றன என்றால்; அவருடைய படைப்பாற்றல் எழுத்துலகிற்கு ஒரு வெள்ளிடை மலையாய் திகழ்கிறது என்பது திண்ணம்.

வாழ்க படைப்பாளர்! வளர்க அவர் தமிழ்ப் பணி!

உசாத்துணை நூல்கள்

1. *இளங்கோ.ச.சு., பாரதிதாசன் திருக்குறள் உரை ஆய்வும் பதிப்பும், பாரி நிலையம், 1992.*
2. *சுரேஷ்.செ., அறிஞர்கள் பார்வையில் திருவள்ளுவம்.*
3. *தனராசன்.நா., வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி, 2004ல் பன்னாட்டு திருக்குறள் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை.*
4. *திருக்குறள்*
5. *திருவள்ளுவமாலை*
6. *பாலசுப்பிரமணியம்.சி., பாரதியும் பாரதிதாசனும்.*
7. *ரவி.கே. கானல் நீரைக் கடந்தும்., தொகுதி.1, நிவேதிதா பதிப்பகம், சென்னை. 2020.*

❖

கானல் நீரைக் கடந்தது புதிதினும் புதிது

•

முனைவர். இர. ரேச்சல் மேனகா,
தமிழ்த்துறைத் தலைவர் புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி -- 627 808

கவிஞர், வழக்கறிஞர் வானவில் கே.ரவி அவர்களின் "கானல் நீரைக் கடந்து" என்ற படைப்பானது 830 பக்கங்களை உள்ளடக்கியது. மின்னற்சுவை, நமக்குத் தொழில் கவிதை, உன்னோடு நான், வள்ளுவரின் வாயிலில், சொற்களுக்கள் ஏறிக்கொள் ஆகிய ஐந்து நூல்கள் அடங்கிய தொகுப்பு, "மின்னற்சுவை" என்ற பாரதியின் கவிதை பற்றிய ஆய்வு நூலிற்கு "கவியரசி" திருமதி கைலாசம் அவர்களும், "நமக்குத் தொழில் கவிதை" என்ற கவிதை இயல் கட்டுரைக்கு "கவிமாமணி" திரு.நா.சீ.வரதராஜன் (பீமன்) அவர்களும், "உன்னோடு நான்" என்ற கவிதைத் தொகுப்பிற்கு முனைவர் வ.வே.சு அவர்களும், சொற்களுக்குள் ஏறிக்கொள் என்ற நூலிற்கு "சொல்வின் செல்வர்" சுகி செல்வம் அவர்களும், அணிந்துரை தந்து மேலும் இத்தொகுப்பிற்கு அழகு சேர்த்துள்ளனர்.

கவிதை என்பது கவிஞனால் படைக்கப்படும் வெறும் சொற்சித்திரம் இல்லை. அதாவது ஒரு ஆதங்கம், ஆற்றாமை, ஆவேசம், அல்லது தன்னை மற்றவர்களுடன் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்ற பரபரப்பு இப்படி ஏதோ ஒரு மனத்துடிப்பு யாருக்கு இருக்கிறதோ, அவனைத்தான் கவிதைப்

பேய் ஆட்டிப் படைக்கிறது. அப்படிப்பட்ட முயற்சியே இந்த நூல். பாரதியின் கவிதைக் கடலில் மூழ்கிட, மூழ்கிக் கரைந்திட அழைக்கும் அறைகூவலாகவும், புதிய படைப்பாளிகளை வெளிக்கொணரும் ஆற்றல்மிகு சக்தியாகவும் இருப்பதை ஆய்கிறது இக்கட்டுரை.

மின்னற் சுவையின் பொருள்

மின்னற் சுவை என்பது மின்னல் போல் வந்து தாக்கும் ஓர் அனுபவச் சுவை" என்கிறார் இந்நூலாசிரியர். தன்னை மின்னல் போல் ஒரு கணம் தாக்கும் அனுபவத்தை, அதன் சூழலோடு சேர்த்துத் தேர்ந்த சொற்களில் கவிஞன் பதிவு செய்கிறான்.

"இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்ததுபோல் மின்னற் சுவைதான் மெலிதாய் மிக இனிதாய் வந்து பரவுதல் போல்.....

என்ற குயில் பாட்டு வரிகளில் மின்னற் சுவை பற்றிக் கூறுகிறான். பாரதி.

அன்றாட வாழ்வில் கேட்கக் கூடிய ஓர் உரையாடல்
இந்தப் புடவை எங்கே வாங்கினே?

நல்லிலே வாங்கினேன். நல்லா இருக்கு. அடடா நல்லின்று சொன்னதும் ஞாபகம் வருது நல்லெண்ணெய் தீர்ந்து போச்சு வாங்கி வான்னு மாமியார் சொன்னது என்பது போன்ற உரையாடலில்...

நல்லிக்கும் நல்லெண்ணெய்க்கும் என்ன தொடர்பு? நினைவுப் பிணைப்பு. அதாவது ஒரு ஒலிக்குறிப்புக் கூட ஒரு நினைவைத் தூண்டக்கூடும். நல்லி என்ற சொல்லிலுள்ள 'நல்' என்ற ஒலிக்குறிப்பு. நல்லெண்ணெய் வாங்கி வர வேண்டும் என்ற நினைவைத் தரக் கூடும். கவிதையின் அடிப்படையும் இதுதான். சரியான சொற்கள் ஒலிக்குறிப்புகள் மூலம் தன்னை ஒரு கணம் தாக்கிய அனுபவத்தை ஒரு கவிஞன் நிலைப்படுத்தி வருகிறான்.

"காலை இளம்பரிதி" எனத்தொடங்கும் பாடலில் மின்னல்சுவை என்பது தன் அனுபவத்தை அதாவது காலை கண்ட கனவு மாலை வரை தன் மனதில் கிடந்து ஒரு கவிதையாக வடிக்கும் நிலை என்றே நூலாசிரியர் கூறுகிறார்.

ஒருவேளை கண நேரம் கண்ட காட்சியைக் கண நேரத்தில் கவிதையாக வடிக்கும் நிலையை மின்னல் சுவை என்று கூறிடலாமா? என்பது எனது கருத்து.

தேடிச்சோறு நிதம் தின்று வாழ்வது முதல்நிலை. தேடியுனைச் சரணடைந்தேன் என்று பரவசமாவது இறுதிநிலை. இந்த இரண்டிற்கும் இடையில் இருப்பது தேடல்களில் பரம் பொருள் என்ற பேருண்மையைத் தேடும் முயற்சியேயாகும்.

நாமமும் உருவும் அற்றே-மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய் -

என்கிறது பாஞ்சாலி சபதப் பாயிரம்

அறிவின் துணை கொண்டுதான் ஒரு பொருளைத் தேட முடியும். நாடுவது மனம். தேடுவது அறிவு, புத்தி என்ற சொல்லுக்கு அறிவு என்றே பொருள்.

அதன் அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்

என்பது ஆத்திசூடி பாயிரம்.

அமரம் என்றால் மரணம் இல்லாதது என்று பொருள்.

இப்படிக் கூறிய பாரதி,

பார்மீது நான்சாகா திருப்பேன் காண்பீர்
மலிவுகண்டீர் இவ்வுண்மை பொய்கூறேன் யான்
மடிந்தாலும் பொய்கூறேன்.....

என்கிறான்

சாகாமல் இருப்பது குறித்துக் கூறிவிட்டு, பின் நான் செத்தாலும் பொய் சொல்ல மாட்டேன் என்கிறான். பாரதியின் தேடலில் மனித வாழ்வில் அவன் மரித்தாலும், அவனது கவிதை வரிகளில் அமர வாழ்வைப் பெற்றுவிட்டான் என்றே கூறலாம். அவனது தேடல் தனது கருத்துகளைப் பதியவைக்கும் கவிதையிலே தான் சாகாமல் இருக்கும் நிலை. அதுவே அமரவாழ்வாகிறது. இறைமைக்கும், இலக்கியத்திற்குமான தேடல் வழி அமர வாழ்வு என்பது விளக்கப்பட்டுள்ளது.

காலமாம் வானத்தில் பாரதியின் அறிவியல் அறிவு புலப்படுகிறது.

அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை

அமைப்பதும் சமைப்பதும் வேறுவேறான நுட்பத்தை உணர்த்துகின்றன. பல பொருட்களை ஒரு முறையில் இருக்கவோ, இயங்கவோ செய்வது அமைத்தல் எனப்படும். பல பொருளைக் கலந்து அவற்றை ஒரே பொருளாக உருப்பெறச் செய்தல் சமைத்தல் எனப்படும். அண்ட கோடிகள் ஒரு முறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அண்டம் ஒவ்வொன்றும் வேகத்தால் சமைக்கப்பட்டுள்ளன. பல கோடி அண்டங்கள் வியனுலகில் இருப்பதாலும் அவை அணுக்களாகப் பிரிந்து ஒரு வெட்ட வெளியாக விரிந்திருக்கும் என்றும் இதுபோன்ற பல அறிவியில் சிந்தனைகளைப் பாரதி தனது கவிதைகளில் குறிப்பிட்டுள்ளமையை நோக்கும் போது தெளிந்த அறிவியல் சிந்தனையோடு, தனது கண நேர அனுபவத்தைக் கவிதையாக வடித்திருக்கலாம் – பாரதிக்குத் தெளிந்த அறிவியல் சிந்தனை யின்றி இத்தகு நுட்பமான கருத்தைக் கூற இயலாது என்றே தோன்றுகிறது.

பாரதி உலகக்கவி. தன் நாட்டிற்கு அப்பாலும் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் அவனைப் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாக்கின. ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட போது அவன் அதை மனமார வாழ்த்தி வரவேற்றான்.

மாகாளி பராசக்தி உருசியநாட் டினில் கடைக்கண்
வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி...

இந்தப் பாடல் வரிகள் தான் புரட்சி என்ற சொல்லை முதலில் பழக்கத்துக்குக் கொண்டு வந்தது என்கிறார் இந்நூலாசிரியர். மேலும் உலகளாவிய சிந்தனைகளைக் கொண்டு பல பாடல்கள் எழுதியமையால் பாரதி உலகக்கவி என்பதைப் புலப்படுத்துகிறது.

பெண் விடுதலை கிட்டாமல் மண் விடுதலை கிட்டாது. கிட்டினாலும் பயன்பாடாது என்பது பாரதியின் கருத்தாக இங்குப் புலப்படுகிறது.

புயல் அடித்து மரங்கள் எல்லாம் வீழ்ந்துவிட, அந்தப் புயலில் விழாமல் தப்பிப் பிழைக்கும் ஒரு சிறிய தென்னந்தோப்பு. அதனைத் தனிமையில் தான் உணர்ந்து அனுபவிப்பதில் அறம் இருப்பதைப் போல, கவிஞனின் அகத்தில் புயல் வீசி, அதில் வீழ்ந்து விடாமல் நிலையாக நிற்கும் உணர்வே கவிதை இன்பம் என்ற பேருண்மையைப் பாட்டாக்கித் தருகிறது. கவிஞனின் இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே உள்ளது.

தீமைகளை வசைபாடுவதால் மட்டும் நன்மை விளையாது. தீமைகள் ஒழிந்து நன்மை மலர வேண்டும் என்ற உள்ளத் துடிப்பை எங்கும் உருவாக்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் அறம் பாடிட வந்தவன் பாரதி. அவலங்களைச் சாடும் வசைக் கவிதைகளுக்குப் பாரதியை மேற்கோள் காட்டிடல் முறையன்று. மாறாகப் பாரதியின் அறம் பாடும் இயல்பினை இலக்கியங்களில் விதைத்தலே சாலச் சிறந்தது.

தீ சுடும் என்பதைச் சொற்களால் விளக்கிப் புரிய வைப்பதைக் காட்டிலும், தீயைத் தொட வைத்துப் புரிய வைப்பது எளிமையானது. தீக்குள் விரலை வைத்தபோதும் கண்ணனைத் தீண்டும் இன்பம் பெற்ற அனுபவத்தை, சொற்களால் சுவைக்கத் துணிவதே கவிதை என்ற கருத்து சிறப்புமிக்கது.

கவிதை ஒளியும் ஒலியும்

மழை பொழியும் போது வண்ணத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம்தான் ஒரு கவிதையைத் தோற்றுவிக்கிறது. ஒரு காட்சி அல்லது புலன் நுகர்ச்சி ஒருவன் உள்ளொளியைத் தாக்கும் போதுதான் "உள்நோக்கம் சரியான மொழி வடிவம் ஏற்றால் அது சாகாவரம் பெற்ற கவிதையாகும்" என்பதும், உயர்ந்த அனுபவச் சூழலுக்குப் படிப்பவரை அழைத்துச் செல்லும் கவிதைகளே உயர்ந்த கவிதைகள் என்ற கருத்தும் ஏற்புடையதே.

நமக்குத் தொழில் கவிதை என்னும் தலைப்பில், பாரதி,

இடையின்றி அணுக்கள் எலாம் சுழலுகென இயல்நூலார்
இசைத்தல் கேட்போம்
இடையின்றி கதிர்களெலாம் சுழலுமென வானூலார்
இயம்புகின்றார்
இடையின்றித் தொழில் புரிதல் உலகிடைப்
பொருட்கெல்லாம்

இயற்கையாயின்
இடையின்றி கலைமகளே நினதருளில் எனதுள்ளம்
இயங்கொணாதோ?

எனவே, "இம்மூன்றும் செய்" எனத் தன் சிந்தையை அவன் பணித்தாலும், மூன்றும் வேறு வேறு தொழில்கள் இல்லை. ஒரு கணமும் சோர்வின்றிப் பயனுள்ள கவிதைகளைத் தந்து கொண்டே இருப்பதன் மூலம் நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் இப்பாடலில் தோன்றுகிறது. தேவைகளை ஆசைகளை மாற்றி அலைக்கழிக்கும் சிந்தைக்கு பாரதி கட்டளை யிட்டான். அதாவது கவிதையை விடுத்து வேறு பொருளில் நாட்டம் ஏற்படுத்தும் நாசவேலையைச் செய்யும் சிந்தையைச் சாடிக் கட்டளையிடும் பாரதி தன் கவிதைத் தொழிலை மாண்புறச் செய்யும் மகாகவி அவன் என்ற சிந்தை சிறப்புமிக்கது.

தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றின் மூலம் தெளிவு செய்யும் யுக்தியே உவமை, உருவகம் போன்ற அணிகளாக வெளிப்படுகிறது. இயற்கை அழகில் மெய்மறந்து போய் ரசிப்பது, கூட பக்தி தான். இயற்கையழகிலும், தம் உள்ளுணர்வைத் தாக்கி ஊடுருவும் புற நிகழ்வுகளிலும் மெய்மறந்து போகும் ஒருவன் அந்த அனுபவத்தை வெளிப்படுத்த முதலில் தோன்றும் கவிதை, நாளடைவில் அவனை ஒவ்வொரு கணமும் மெய்மறக்கச் செய்து அவனை இழக்கச் செய்து, அவனை அமரனாய், நித்திய ஜீவனாய் வாழச் செய்கிறது என்கிற கருத்து ஏற்புடையதே ஆகும்.

"மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்;" என்றான் பாரதி. அப்படி வரும் சொற்களே நிகழ்த்திக் காட்டும் வலிமையுள்ளவை. அப்படிப்பட்ட நிலையில் தீ என்றால் சுட்டெரியும்; தேன் என்றால் உண்மையிலே நாட்டு விடுதலை கிட்டும். இப்படிப்பட்ட சொற்களே வெல்லும் தன்மையுடையவை. அதாவது எந்த இடத்தில் எந்தச் சொல் சரியான சொல் என்பதும் ஆராய்ந்து அழகிய சொல்லைத் தருவதே வெல்லும் சொல் என்பதும், தாங்கள் பயன்படுத்திய சிலப்பதிகார "வினைவிளை காலம்" பற்றிய சொற்றொடர்கள் முதல் அனைத்துமே சிறப்பு எனினும், அதனை வெல்லும் சொல் என்பதை விட,

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

என்ற குறள் கூறுவது போன்று பிறர்க்குத் தீமைதரும் சொற்களை விடுத்து நல்ல சொற்களைக் கூறுவது போன்ற உணர்வைத் தரும் சொற்களே வெல்லும் சொல் என்பது என் கருத்து. அதாவது கவிஞனுக்கு வெல்லும் சொல் என்பது படிப்பவர்க்கு நல்லது, தீயது என்ற பொருளை உணர்த்தும் வகையில் அமையும் என்றே கூறலாம்.

கவிதை ஏன் எழுதப்படுகிறது? என்று சிந்தையைத் தூண்டும் வகையில் கேட்டு, அதற்கு விடைகாண்பதும் ஆகிய நோக்கில், அன்றாடம் நீர்க்குமிழிகள் போல் பல கணங்கள் தோன்றி மறையும் போது, இந்தக் கணம் எனச் சுட்டும் போது இறந்துவிட்ட கணமாய் உணரப்படுகிறது. ஆனால் கவிதையில் சிறைப்பட்ட கணங்கள் மட்டும் உயிருள்ளதாய் நிலைபெறுகின்றன. அக்கணங்களை நிகழ் அனுபவப் பொறிகளாய், உயிர்ப்போடு நிலைபெறச் செய்வதே கவிதையின் நோக்கம். கவிதை என்பது நிகழ்காலத்தோடு உயிர்பெறச் செய்து படிப்பவர்களின் சிந்தையைத் தூண்டி காலம் வென்று நிற்பதே கவிதை என்ற கருத்து ஏற்புடையது.

கவிதை ஒரு கோரிக்கை; அதுவும் தன் அனுபவத்தில் மற்றவரும் பங்கேற்க கவிஞன் விடுக்கும் ஒரு கோரிக்கை. புதுக்கவிதை என்பது கோரிக்கை அளவிலே நின்றுவிடுகின்றது. தீயிட்டதும் பரபரவென்று பற்றிக்கொண்டு தீபரவுதல் போல் அழுத்தமான உணர்ச்சிகளைத் தூண்டும் ஒரு பாடல் பற்றிக் கொண்டு பரவ வேண்டும். கவிதையின் நோக்கமும் ஆக்கமும் சிறந்தவையே. ஆனால் அவை உள்நோக்கம் தரக்கூடிய ஆற்றலில் குறைந்தவையே என்ற முடிவுக்கு வர முடிகிறது.

கவிதை என்பது அணிகளில் இல்லை. கற்பனையில் இல்லை. உணர்ச்சியும் அறிவும், அகமுனைப்பும் ஆன முழுமையும் ஒருமித்த முக்கூடலில் விளைவது அது. உலகனைத்தையும் ஒரு புள்ளியில் ஒடுக்கும் உள்ளொடுக்கம் அல்லது தியானம் போல் கால விரிவை ஒரு நொடிப் பொழுதென்னும் சிமிழுக்குள் ஒடுக்கும் அனுபவம் அது. இந்த உயர்ந்த கவிதைகளில்

அனுபவமாக்கி இறவாநிலை பெறுகிறார்கள் என்பதே உண்மை.

எத்தனை முறை புரிந்து கொண்டாலும், மீண்டும் மீண்டும் இந்த உடற்கூட்டுக்குள் வந்து சிக்கிக் கொண்டு இன்ப–துன்பச் சூழலில் உழல்கிறேன். கவிதை என்னுள் பின்னிப் பிணைந்து மின்னிப் புறப்பட்டு ஒரு கிளர்ச்சியை எழுப்பிப் போராடிக் கொண்டிருக்கும். இப்படி கவிதையும் நானும் ஒருவரிலொருவர் என்ற மனோபாவமே உயர்ந்த கவிஞனின் சிந்தை, அவனது முயற்சி என்றே கூறலாம்.

கவிதை வரம் என்ற பகுதியில் கண்ணனைத் தரிசித்தால் கிடைக்கும் பரவசத்தைப் போல கவிதை என்னுள் புகும் போது ஒரு பரவசத்தை அனுபவிக்க முடிகிறது என்ற ஆசிரியரின் கருத்து கவிதையைப் படிப்பதில், அதை உணர்வதில் இருக்கும் ஆன்மிகப் பூர்வமான நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

உன்னோடு நான் கவிதைத் தொகுப்பு

இந்தக் கவிதையைப் புரிந்து கொள்வதற்காகக் குழந்தையைக் கொஞ்சிக் குலாவுதல் போல, காதலியை ஆரத்தழுவி அடைக்கலம் கொள்வதைப் போல கொஞ்சி, குலாவி, ஆரத்தழுவிக் கொண்டு, முடிந்தால் உங்களை இழக்கத் தயாராகுங்கள் என்று வரவேற்பதாக அமைந்த பகுதி சிறப்பு. இது படிப்பவரின் சிந்தையைத் தூண்டும் வசீகர மொழி.

'உன்னோடு நான்' கவிதைத் தொகுப்பானது ரசிகனும் கவிஞனும் உரையாடுவது போல அமைந்துள்ளது. கவிஞன் தன் ரசிகனுக்குக் கவிதைகளை எழுத்துகளாகச் சொல்ல வில்லை. இவன் மனதில் உதயமான கணங்களின் பரவசத்தில் ரசிகனையும் பங்கேற்கச் சொல்லும் கவிதையே சிறந்தது என்ற நூலாசிரியரின் கருத்து இந்தத் தொகுப்பு முழுமைக்குமான ஆணி வேர், அச்சாரம் என்றே கூறலாம். உயர்ந்த கவிஞனின் சிந்தை இதுவாகவே இருந்தால் பல ரசிகர்களின் உணர்வுகளைத் தூண்டும் கவிதையாகவே அவை இருக்கும், தரமான கவிதைகள் உருவாகிட உறுதுணை புரியும் என்ற எண்ணத்தை இத்தொகுப்பு நமக்கு வழங்குகிறது.

வள்ளுவரின் அறப்புரட்சியில் ஒரு தனி மனிதன் உணவின்றிப் பசித்துக் கிடந்தாலும் உலகையே அழித்திடுவோம் என்ற கோபத்திற்கு வித்தான குறளும், தாயின் பசி கண்டும் அறநிலை தவறாமல் இருக்க வேண்டிய அமிலச் சோதனைக் குறளும் சேர்ந்திருக்கும் நூல் தமிழில் உள்ளது என்ற பெருமிதம் இந்நூலில் எடுத்தியம்பப்பட்டுள்ளது சிறப்பு.

சொற்களுக்குள் ஏறிக்கொள் கவிதைத் தொகுப்பு

"என் சொற்களுக்குள் ஏறிக்கொள், சொர்க்கத்தைக் காட்கிறேன்" என்ற கவிஞனின் வரிகள் தன் கவிதை மேல் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைக்குத் தரும் அங்கீகாரம். சொல்லின் செல்வர் சுகி. சிவம் அணிந்துரையில் தொடங்கிய இத்தொகுப்பு சிறப்பு.

பாரதியின் மனோதர்மத்தைப் போற்றிடும் செயலாக ஆங்கிலேயரை எதிர்த்த பாரதி, பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட போது விக்டோரியா மகாராணியின் சிறப்பை மாதர்களும் முன் மாதிரியாய்க் கண்டிட தான் தொடங்கும் இதழுக்குச் சக்கரவர்த்தினி என்று பெயர் சூட்டியது சிந்திக்கத்தகுந்தது. அதாவது எதிரியிடம் இருந்த நல்ல குணங்களைப் பாராட்டும் குணம் இங்கு இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தன்னைச் சுற்றியிருந்த மக்களை அவன் அவ்வளவு உள்ளன்போடு நேசித்தான். ஏழை, எளியவர்களையும் தன் ரத்தத்தின் பகுதியாவே அவன் கருதினான். நாமறிந்த புலவரிலே பாரதி போல் "எளியவர்களுக்காகக் குரல் கொடுத்த உண்மைக் கவிஞர் வேறு யாரும் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது என்ற ஆசிரியரின் கருத்து மிகவும் சிறப்பானது.

ராமனை ஓர் இலட்சிய மனிதனாகப் பார்த்தது வால்மீகியின் பார்வை. அவனைக் கடவுளின் அவதாரமாகவே பார்த்தது கம்பனின் பார்வை. ஒரு காலச் சூழலுக்குப் பொருந்தும் விதிகள் வேறொரு காலச் சூழலுக்குப் பொருந்தாமல் போகலாம். ஆனால் ராமன் உதாரண மனிதனாக வாழ்ந்து தன் சூழலை, பல விளைவுகள் ஏற்படினும் வென்று வெற்றி கொண்டான்

என்பதே கம்பன் இராமனைக் கடவுளாக்கியதற்குக் காரணம் எனலாம்.

"மெய்ப்பொருள் காண்பது" என்று வள்ளுவர் ஏன் சொல்கிறார்? காண்பது என்று ஒரு பேச்சுக்காகச் சொன்னாலும், கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐந்து வகைப்பட்ட அனுபவத்தையே அச்சொல் குறிப்பதாகக் கொள்ள முடிகிறது.

மெய்யியல் ஆராய்ச்சி அறிவுபூர்வமான ஆராய்ச்சியாக மட்டும் வளர்ந்தது போல் அன்றி, இந்தியாவில் மெய் யியல் ஆய்வு அனுபவத்தின் அடிப்படையிலேயே வளர்ந்த வேறுபாட்டைப் பல அறிஞர்கள் எடுத்துச் சொல்லியுள்ளனர். மெய்யியல் கோட்பாட்டுப் பள்ளிகள் இந்தியாவில் தரிசனங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. "மெய்பொருள் காண்பது அறிவு" என்ற சொற்றொடர் தரிசனம் அல்லது அனுபூதி நிலை என்கிறது. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்ற பாட்டில் மெய்ப்பொருள் செவிநுகர் அனுபவமாய்க் குறிக்கப்படுகிறது. திருக்குறளின் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் என்றெல்லாம் வியந்து பாரதி பரவசப்படுவது முற்றிலும் உண்மை.

கண்ணனையும் சக்தியையும் தனிப் பரம்பொருளாய் வழிபட்ட பருமத்தின் நிலைக்குள்ளாவே ஞானகுருவும், சித்தத்தை நடத்தும் சத்குருவும் கண்ணனே என்ற சங்கம நோக்கைப் புலப்படுத்துகிறான்.

பாடலில் எத்தனை சொற்கள் இடம்பெறினும் உயிர்ப்புநிலையைத் தரக்கூடிய ஒரு சொல்லே கவியின்பம் தரக்கூடியது. "முல்லையும் பூத்தியோ" என்ற புறநானூற்று வரிகளில் உம்மை(முல்லையும்) தான் உயிர்ச்சொல் என்பதை எடுத்துக் கூறி இருப்பது சிறப்பு.

சமூக நோக்கில் ஒரு பொருளும் ஆன்மிக நோக்கில் ஒரு பொருளும் தரத்தக்கதான குறள் பல அமைந்துள்ளன. இரண்டு நோக்கிலும் முரண்பாடு இல்லாமல் குறள்கள் இருப்பதால் உலகப் பொதுமறைகளோடு பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உண்மையை மிஞ்சி நிற்கிறது.

ஒருவரைக் கண்டதும் அல்லது நினைத்ததும் ஏதோ ஒருவிதத்தில் காண்பவர், அல்லது நினைப்பவர் மனதில் மகிழ்ச்சியோ, ஊக்கமோ, கிளர்ச்சியோ ஏதாவது நல்ல உணர்ச்சியோ ஏற்பட வேண்டும் அப்படி வாழ்பவரே புகழ் நிறைந்தவர் என்னும் உடன்பாட்டு உணர்ச்சியை மற்றவர் மனங்களிலே ஏற்படுத்துபவரே புகழுடையவர். இத்தகைய சிறப்புடையவர் இறைவன் என்பதாலே எல்லாப் புகழும் அவருக்கே உரியது என்பது ஏற்புடையது எனினும் இது போன்ற உடன்பாட்டு எண்ணங்கள் தரக்கூடிய மனிதனாக ஒவ்வொரு வரும் மாறிட நல் உணர்ச்சியைத் தூண்டிட ஒரு நூல் ஊன்று கோலாய் வாழ முயற்சிப்பதைச் சொல்லி நிற்கிறது இப்பகுதி.

பல கவிஞர்களின் ஆற்றல் மிகு பாடல்களும் சிறப்பு "ஆயிரம் மேதைகள் பிறந்திடலாம் அதில் ஒருவன் தான் கவியம்மா" என்ற வரிகள் தரும் உண்மை மிகவும் பொருத்தமானது. தன்னை ஒரு கவிஞனாக்கிய சிறப்பும், மேன்மையும் என்ன தவம் செய்தேனோ என்று ஆசிரியரைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

செயற்கரிய செய்தல் என்பது வீடுபேறு அடையும் சாதனையைக் குறிக்கும் என்பது போன்ற துணிவு சிறப்பு.

காளி மீது பாரதி கொண்ட பற்றிற்குப் பல சான்றுகள் இருந்த போதிலும் ராஜாராம் மோகன்ராய் பற்றிய கருத்து கட்டுரையில் பாரதி எழுதியுள்ள உரைநடைவரிகளில் தெய்வம் பற்றிய முரண்பாடானதாக இருந்த போதிலும் தெய்வ வழிபாடு கூட வீர உணர்வின் தூண்டுதலாக இருக்க விரும்பியவன் என்பதும், முரண்பாடுகளைச் சமன் செய்த பேரரறிவாளன் பாரதி என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒவ்வொரு முயற்சியும் தொட முயன்ற தொடுவானம். அந்த முயற்சியால் வெற்றியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் ஒரு புதுக்கவிதையே என்ற சிந்தனை உயர்ந்ததே.

வானவில் ரவியின் படைப்புகளில் "கானல் நீரைக் கடந்து என்ற படைப்பானது மூழ்கி முத்தெடுத்த ஒரு அனுபவத்தைத் தருகிறது. ஒவ்வொரு தலைப்புக்கும் பொருத்தமான, சிறப்பான காரணம், எடுத்துக்காட்டுகள் என அனைத்தும் சிறப்பு. சில

புரியாத வடமொழிச் சொற்கள் பொருள் கொள்ளுவதில் சிரமம். எளிமையாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். சில பகுதிகளின் முடிவை ரசிகனுக்கு விட்டு வைத்து சிந்தையைத் தூண்டும் முயற்சி பாராட்டுக்குரியது. தொடுவானம் தொட்டிடும் புதிய தேடல். கானல் நீரைக் கடந்து என்பது நூலுக்குப் பொருத்தமான தலைப்பு. ஒவ்வொரு பகுதியும் கடந்திட முழுப் பகுதியும் ஆழ்ந்து படிக்கத் தூண்டும் நயம். இன்னும் கவிதையும் கட்டுரையுமாகக் கலந்துள்ளது. தனித்தனியாய் இருந்தால் இன்னும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும், இதைப்படித்த அனைவருக்கும் "மின்னற் சுவை" ஒரு கணம் வந்து தூங்காது எழுதிடத் தூண்டிடும். பல கவிஞர்களை உருவாக்கிடும் அரிய முயற்சி நூலாசிரியர் கே.ரவியினது, அது பாராட்டுமிக்கது. இவை உறுதியாய் நமக்குத் தொழில் கவிதை என்ற உணர்வைத் தந்து உன்னோடு நான், என்று கவிதையில் திளைத்து, சொற்களுள் ஏறிக்கொள்ள ஒவ்வொருவரும் முயல்வர் என்பதே இக்கட்டுரை தந்த முடிவாகும்.

❖

கண்ணன் என் சற்குரு - ஒரு கண்ணோட்டம்

•

முனைவர் சு. லட்சுமி,
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முதுகலைத் தமிழ்த்துறை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை, சென்னை- 44.

பரந்து பட்ட இவ்வுலகம் நற்கல்வி, நற்சிந்தனை, நன்னடத்தை, நல்லாற்றல் பெற்ற சான்றோர்களால் நிறைந்துள்ளது. இதனை வள்ளுவரும்,

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

குறள் 996

என்று பண்புடையார் இருப்பதாலேயே இவ்வுலகம் நிலைத்திருக்கிறது என்கிறார். சான்றாண்மை என்பது,

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

குறள் 981

என்ற குறள் வழி, மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளே என்கிறது வள்ளுவம்.

வானவில் கே ரவி அவர்களை அந்த வகையில் ஒரு மிகச்சிறந்த சான்றோராகவே கொள்ள வேண்டும். இச்சமூகத்திற்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கருத்தில் கொண்டு நூல் பல படைத்துத் தமிழ்க் கூறும் நல்லுலகிற்கு நற்கடமை ஆற்றி வருகிறார். அவர்தம் படைப்புகள் பலவற்றுள் 'சொற்களுக்குள் ஏறிக்கொள்' என்ற நூலில் உள்ள 'கண்ணன் என் சற்குரு' என்ற கட்டுரை ஆய்விற்கான களமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டது.

இக்கட்டுரையில் ஆசிரியர், இந்தியாவில் குருவிற்கு வழங்கப்படும் சிறப்பிடம் குறித்துத் தெளிவுபட விளக்கியுள்ளார். அத்துடன் குரு என்பவர் நம் வாழ்வில் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பதையும் ஆழமாக ஆய்ந்து எளிமையாக விளக்கியுள்ளார். குரு என்பவரைக் கடவுளுக்கு நிகராகவும் சில நேரங்களில் கடவுளுக்கு மேலாகவும் வணங்கும் வழக்கம் தமிழகத்தில் உள்ளது என்கிறார். நாம் குரு என்று பொது நிலையில் கூறுவதைச் சற்றே உள்ளளார்ந்த கோணத்தில் விளக்கியுள்ளார்.

குரு என்பவர், ஜகத்குரு, ஞானகுரு, சத்குரு என்ற மூன்று நிலைகளில் இயங்குகிறார்கள் என்கிறார்.

ஜகத்குரு என்பவர் இவ்வுலகிற்கே வழிகாட்டியாகத் திகழ்பவர் என்கிறார். சான்றாக வேத ரிஷிகள், புத்தபிரான், மகாவீரர், இயேசுநாதர், ஆதிசங்கரர், மத்வாச்சாரியர், ராமானுஜர், நபிகள் நாயகம், குருநானக் தேவர் போன்றோர் இவ்வுலகத்துக்கே பேரொளி காட்டியதால் ஜகத்குரு நிலையில் வைத்து வணங்கப்படுகிறார்கள் என்கிறார்.

இலக்கு ஒன்றினை அடைய பல பாதைகள் இருப்பினும் நமக்கு உகந்த பாதை எது என்பதை தீர்மானித்து நம்முடனே இருந்து வழிகாட்டுபவர் ஞானகுரு என்கிறார். இந்த ஞானகுரு என்னும் தன்மையில் இருப்பவர்கள் நாம் செல்ல வேண்டிய பாதையை முன்பே கடந்து வந்த அனுபவசாலிகளாக இருப்பார்கள் என்கிறார். இப்பிறவிப் பெருங்கடலை நீந்தி ஆன்ம ஞானம் என்னும் பயண இலக்கை அடைந்து விட்ட முன் அனுபவம் கொண்ட பயணி 'ஞானகுரு' என்பவர் என்கிறார். கடந்து வந்த ஒருவருக்குத்தான் பாதையின் அருமையோ

இன்னலோ தெரியும் என்பதால் அனுபவ முதிர்ச்சி பெற்ற ஞானகுரு ஒவ்வொரு மனிதனின் வாழ்விற்கும் நிச்சயம் தேவை என்று வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

ஞானகுரு சுட்டிய பாதை மட்டும் போதுமா? அந்தப் பாதையில் எப்படிப் பயணம் மேற்கொள்ள வேண்டும்? எப்படிப்பட்ட இன்னல்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் நமக்கு அறிவுறுத்தி நம் கையைப் பிடித்து அழைத்துச் செல்லும் ஆத்ம சகாயம் புரிபவர்களே சத்குரு என்று தெளிவுபட விளக்குகிறார் ஆசிரியர்.

ஜகத்குரு, ஞானகுரு, சத்குரு என்ற மூன்று நிலைகளில் இயங்கும் இவர்கள் யார் யார் என்று எல்லோருக்கும் சொல்லப்பட வேண்டுமா என்றால் ஜகத்குருக்கள் இவ்வுலகிற்கே வழிகாட்டுவதால் அவர்களை உலகே அடையாளம் கண்டு கொள்ளும். ஏனைய ஞானகுருவும் சத்குருவும் கண்களுக்குப் புலப்படாமலும் இருக்க வாய்ப்புண்டு. எவரும் வெளிப்படுத்தாத வண்ணம் மனதினால் மட்டுமே உணரக்கூடியவர்களாகவும் அமையலாம்.

"யாருக்கு யார் சத்குரு என்பதை மற்றவர்கள் கணிக்கவும் கண்டுபிடிக்கவும் முடியாது. அது குருவுக்கும் சீடனுக்கும் மட்டுமே தெரிந்த பரம ரகசியம். சீடனே சொன்னால் தான் அந்த ரகசியம் வெளிப்படும் தம் சத்குரு ஞானசம்பந்தர் பெருமானே என்று வள்ளற் பெருமான் அறிவித்துள்ளார். 'கோகழி ஆண்ட குருமணி' என்று தம் சத்குருவைப் பற்றி மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்"

(பக்க எண் 71, 'சொற்களுக்குள் ஏறிக்கொள்')

தொடர்ந்து நம்முடைய அறிவு இயங்கக்கூடிய நிலை பற்றிப் பேசும்பொழுது, "ஜகத்குரு அறிவு நிலையிலும், ஞானகுரு சங்கல்ப நிலையிலும், சத்குரு உணர்ச்சி நிலையிலும் இயங்குவதாகவும் எண்ணிப் பார்க்கலாமே"

(பக்க எண் 71, 'சொற்களுக்குள் ஏறிக்கொள்')

என்று ஒரு மிகப்பெரிய உண்மையை மிகத் தெளிவாக எடுத்தியம்பியுள்ள பாங்கு ஆசிரியர் தம் ஆழங்கால்பட்ட அறிவுத்திறனை வெளிப்படுத்துகிறது.

நம்முடைய மனம் எவரை நோக்கி நகர்கிறதோ, எவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிகிறதோ, எவருடைய செயல்களைக் கண்டு அதையே தன் செயலாக்கிக் கொள்கிறதோ அவரே நம்முடைய ஞானாசிரியன் என்று கொள்ளலாம். இன்னும் எளிமையாக "இலக்கு எது என்பதைச் சுட்டிக்காட்டுபவர் ஜகத்குரு, இலக்கை அடைய என்ன வழி என்று சொல்லித் தருபவர் ஞானகுரு, அந்த வழியிலே கூடவே வந்து கைப்பிடித்து நடத்திச் செல்பவர் சத்குரு" என்று விளக்கப்படுத்துகிறார் வானவில் கே ரவி அவர்கள்.

"ஞானம் என்பது முதுமையில் வருவது அல்ல; அது மனிதனின் உலக அனுபவத்தாலும் அவன் படிப்பினையாலும் அவனுக்குக் கிட்டுவது.

போர்க்களச் சூழலில் பார்த்திபனின் தேர்த் தட்டில் நின்று கொண்டு, தான் செய்த கீதோபதேசத்தால் உலகத்திற்கே ஆச்சாரியனாக விளங்குபவன் கண்ணபிரான். அவனே யமுனைக் கரையில் தடி ஊன்றிக் கிழவனாக, ஒளி கூடும் முகமும், தெளிவு கொண்ட விழியும், சடைகளும், வெள்ளைத் தாடியும் கொண்ட வடிவில் வந்து தன்னை வடமதுரை மன்னனாகக் கண்ணனிடம் ஆற்றுப்படுத்தி, மார்க்க சகாயம் புரிந்தான் என்ற செய்தியோடு பாரதி பாடலைத் தொடங்குகிறான். மதுரையம்பதி சென்றதும் அங்குக் கண்ட காட்சியோ பாரதியைத் திடுக்கிடச் செய்ததாம். தனக்கு ஞான உபதேசம் செய்வான் என்று யாரை நம்பி வந்தானோ அந்தக் கண்ணன் எப்படி இருந்தான் என்று விவரிக்கிறான்:

காமனைப் போன்ற வடிவமும் - இளங்
காளையர் நட்பும் பழக்கமும் - கெட்ட
பூமியைக் காக்கும் தொழிலிலே - எந்த
போதும் செலுத்திடும் சிந்தையும்
ஆடலும் பாடலும் கண்டுநான் - முன்னர்
ஆற்றங் கரையில் கண்டதோர் - முனி
வேடந் தரித்த கிழவரைக் - கொல்ல
வேண்டுமென் றுள்ளத்தில் எண்ணினேன்

என்று கூறுகையில் ஞானத்திற்கு வயது நிர்ணயிக்கப்படுவதில்லை என்பதை விளக்க பாரதியின் கண்ணன் பாடலுக்குள் செல்கிறார் ஆசிரியர்.

கண்ணன், பாரதிக்கு மார்க்க சகாயம் செய்த கிழவனாகவும், ஞான உபதேசத்தால் ஆத்ம சகாயம் அருளிய சத்குருவாகவும், தான் கண்ட கண்ணனே தன் தூய அறிவாகவும் உலகின் ஜோதி நிலையாக உள்ள ஜகத்குரு என்ற உண்மையைப் பாட்டின் நிறைவில் அவன் விளக்குகிறான்.“

(பக்க எண் 74 – 75, ‘சொற்களுக்குள் ஏறிக்கொள்’)

கண்ணனைப் பல நிலைகளில் கண்ட பாரதி அவனையே ஞானகுருவாகவும் சத்குருவாகவும் காண்கின்றான் என்பதை,

தீயினிலே வளர் ஜோதியே - என்
சிந்தனையே என்றன் சித்தமே

என்று இக்கட்டுரையை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

நிலையாமையை,

நீர்வழிப் படூஉம் புணைபோல்
ஆருயிர்முறை வழிப் படூஉம் **(புறநானூறு 192)**

“பழியெனின் உலகுடன் பெரினும் கொள்ளலர்”
(புறநானூறு 11)

என்ற புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. சான்றோர்களின் வழிப்படி வாழ்ந்து குரு அருள் பெற்றால்தான் பிறவிப் பெருங்கடலை நீந்தி, வாழ்வாங்கு வாழ இயலும் என்கிறார் ஆசிரியர். ஆசிரியரின் இந்தக் கட்டுரை வழி குரு என்பவர், ஜகத்குரு, ஞானகுரு, சற்குரு என்ற நிலைகளில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் என்றும், அவர்களின் வழிகாட்டுதல் என்பது நமக்கு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இக்கட்டுரையின் வழி ஆசிரியர் வானவில் கே.ரவி அவர்களின் சான்றாண்மையும், சமூக அக்கறையும், கல்விப் புலமையும், அதனைத் தெற்றென வெளிப்படுத்துகிறது.

❖

உன்னோடு நான்; கவிதைத் தொகுப்பில் புலப்படும் தன்னம்பிக்கைச் சித்தாந்தம்

•

முனைவர் வே. வளர்மதி,
தமிழ் உதவிப்பேராசிரியர், வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (திருக்குறள் - 355)

உலகில் எந்த ஒரு பொருளும் ஆய்வுக்கு உட்பட்டது. இலக்கியங்கள் பல கோணங்களில் ஆராயப் பெற்று வருகின்றன. இலக்கியத்தில் கவிதை வகை சிறந்தது. கவிஞனின் செம்மையான இதயத்தில் கவிதை கருக்கொள்ளும். அவன் இதழில் உருக்கொள்ளும். அவன் ஆளுமைத் திறத்தால் வெளிப்படும் கவிதை வாசிப்பவன் உள்ளத்தில் கால்கொள்ளும் அதுவே காலம் கடந்து வாழும். அப்படிப்பட்ட கவிதை சிறந்த கட்டமைப்பைப் பெற்றிருக்கும்.

உலக அரங்கில் வால்ட், விட்மன், டி.எஸ். எலியட், இரவீந்தரநாத் தாகூர் முதலானோர் புதுக்கவிதை படைப்பதில் புகழ் பெற்றுள்ளனர். தமிலும் ந. பிச்சமூர்த்தி முதல் இன்று வரை புதுக்கவிதைகள் படைக்கப் பெற்று வருகின்றன. அப்துல் ரகுமான், சிற்பி,ஈரோடு தமிழன்பன், மு. மேத்தா

ஆகியோர்களின் புதுக்கவிதை நூல்களுக்குச் 'சாகித்ய அகாதமி' விருது கிடைத்துள்ளது.

இன்றைய காலக்கட்டத்தில், மரபுக் கவிதை மங்கி வருகின்றது. புதுக்கவிதை பொங்கி வருகின்றது. புதுக்கவிதையில் சொல்லப்படாத பொருளில்லை. புதுக்கவிதை எடுக்காத வடிவம் இல்லை. புதுக்கவிதையில் காணப்படாத உத்தியும் இல்லை. அவ்வடிப்படையில், 'வானவில்' கே. ரவியின் படைப்புகளில் தொடாத கருப்பொருளே இல்லை! அவர் தம் கவிதைகள் சமயம் சார்ந்த கருத்துகள், இசைச் சிந்தனை, அனுபவச் சிந்தனை, இயற்கை ஐம்பூதங்கள், கவிதைக்குக் கவிதை, பெண்ணியச் சிந்தனை, முற்போக்குச் சிந்தனை, நடப்பியல், அழகியல், மார்க்சீசியம், பொதுவுடைமை, பாரதியச் சிந்தனை, கவிஞர்களின் போற்றல் எனப் பன்முகத் தன்மை கொண்டதாக விளங்குகின்றன. இவரது கவிதைகளில் பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் சாயலைப் பெரும்பான்மை இடங்களில் காணமுடிகிறது.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

பாரதி, தன் அறிவைச் 'சுடர் விடும் அறிவு' என்பதைச் 'சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்' என்ற வரிகளில் புலப்படுத்துகிறார் அந்த அறிவின் பயன் என்ன என்றால், இந்த மண் பயனுற வேண்டும். அறிவு என்னும் ஆயுதத்தின் மீது, அவன் கொண்ட நம்பிக்கை சிந்திக்கத் தக்கது. ஏனெனில், தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் அவன் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும் என்பதனை

ஒளியின் வாசற் கதவுகளைத்
திறந்து வை! உன் நெற்றியிலே
வெள்ளிப் பொட்டு வைத்துக் கொள்!
அறம் தழல்போல் உதிக்கட்டும்!
அண்டமெல்லாம் துதிக்கட்டும்!
ஒளியின் ஓசை கேட்டவுடன்
உருகிப் போன விண்மீன்கள்
துளிகளாக விழுந்திங்கே

செடிகள் தோறும் உட்கார
வெளியெலாமோர் உற்சாகம்
வெடிக்கப் போகும் எதிர் பார்ப்பில்
நெளியக் கூட மனமின்றிக்
காற்றுத் தேவன் நிற்கின்றான்
கிழக்கு வான விளிம்பில்
கிரண விரல்கள் படரட்டும்!
எழுத ஒண்ணா அதிசயத்தை
எழுதிப் பார்க்க முயலட்டும்! (ப. எண் - 53)

என்று 'வானவில்' ரவி, தம் கவிதை வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார். பாரதி கூறிய தெளிவுச் சிந்தனையை மன ஒளியாகக் கவிஞர் உருவகிப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"துன்பம் வரும் வேளையிலும் சிரிக்கனும், அந்தத் துன்பம் உன்னைக் கண்டு நடுங்கனும்" என்று செந்நாப் புலவன் ஒருவனின் பாடல் வரியைக் கேட்ட ரவி, அவர்களின் சிந்தனையில் உதித்த தன்னம்பிக்கை, பொய் கண்டு மாறக்கூடாது. விழிப்புணர்வோடு மனச் சுமையை ஏற்றாமல் இருந்தால், மகிழ்ச்சிக் கடல் உன்னிடம் நிலைத்திருக்கும் என்ற கருத்தைக் கவிதை வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

மாயம் செய்யும் தென்றலுக்குக்
கண் மயங்கிச் சாயாதே
ஆயன் செய்யும் குழலோசை
வீடு சேர்க்கும் துணிந்து செல்
அவ்வப்போது மனச் சுமையாலே
குன்றிப் போகாதே
கடலன் னைக்குக் களிப்பு வர - முகம்
மலர்ந்து சிரித்திடு (ப. எண் - 40)

"ஐந்தறிவுள்ள ஆயர் குடி வாழும் காளை, பசு, எருமை தனக்குத்தானே மாலைப் பொழுதில் தன் இருப்பிடம் சென்றடையும் போது, ஆறறிவு படைத்த மனிதனே! உன் திறமையை நீ உணர்ந்து செயல்படு! வெற்றி நிச்சயம்!" என்பதனை, இக்கவிதைப் புலப்படுத்துகிறது.

கீழிருந்து பார்த்தால், மலை உயரம்தான். அதன் உச்சியில் நின்று பார்த்தால், மலையும் உன் காலடியில்தான் என்ற

தன்னம்பிக்கைச் சிந்தனையை, ரவி அவர்கள் சூரியனை எட்டிவிட ஏணி போதும். சோம்பல் முறி, துணிந்து எழு! உலகம் புதிது; உனக்கானது என்று மனிதர்களுக்கு உற்சாகம் தரும் பதிவைத் தம் கவிதையில் தெளிக்கிறார்.

புதுப்புது உலகம் புதுப்புது வடிவம்
பொதஞ்சு கெடக்குது மனசுக்குள்ளே
எதுக்கின்னும் ஒறக்கம் எந்திரிங்கடா
ஏணியிருக்கு இங்க சூரியனுக்கே
(ப. எண் - 447)

பாரதி கூற்றிற்கேற்ப, சொல் புதிது, பொருள் புதிது, வளம் புதிது என்பதனைத் தன் அனுபவத்தால் உணர்ந்த கவிஞர் மேற்கண்ட செய்தியைத் தம் கவிதை வாயிலாகத் தெளிவிக்கிறார்.

"மனிதனே, நீ உன்னை உணர்!"

மனித வாழ்க்கையின் தடைக்கற்கள் சோம்பலும் சோகமும் ஆகும். மனிதன் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும், இவ்வுலகம் நம்மைப் பேசும். மனிதனுக்கு மனிதனே எதிரி. அதைவிடச் சிறந்த எதிரி அவனுடைய இயலாமை என்னும் சோகம்! அதை உடைத்தெறிந்தால், கல் பாதை கூடப் பூப்பாதையாக மாறும். பிறர் வாட, பல சின்னஞ்சிறு கதைகள் பேசிப் பொழுதைக் கழிக்கும் மனிதனைப் பாரதி மனிதனே அல்ல எனச் சாடுகிறார். அப்பரம்பரையில் வந்த வைரமுத்துவோ,

உலகம் உன்னைப் பார்த்து -
உன்னைப் பார்த்து
உலகம் உரைக்கும்
தன்னம்பிக்கைத் தளரவிடாதே!
இரட்டைப் பேச்சு பேசும்
உலகம்
மிரட்டும் தம்பி மிரண்டு விடாதே!
ஒவ்வொரு வாயிலும்
ஒற்றை நாக்கு
உலகின் வாயில் இரட்டை நாக்கு

அப்படி இருந்தால் அதுவும் தப்பு
இப்படி இருந்தால்
இதுவும் தப்பு

கத்தும் நாய்க்குக் காரணம் வேண்டாம்
தன் நிழல் பார்த்து
தானே குரைக்கும்

உலகின் வாயைத் தைத்திடு அல்லது
இரண்டு செவிகளை
இறுக்கி மூடிடு!

உலகின் வாயைத் தைப்பது கடினம்
உந்தன் செவிகளை
மூடுதல் சுலபம்

என்ற தன்னம்பிக்கைச் சிந்தனையை உள் வாங்கிய ரவி அவர்கள், தமது பொன் எழுத்துகளால் கீழ்க்கண்ட கவிதையை வடிவமைக்கிறார்.

கனக்கும் சுமையைக் கணப்பொழுதேனும்
இறக்கி வைத்துவிட்டுத்
தனக்குத் தானே சிரித்துக் கொள்ளும்
வழக்கம் உனக்கு உண்டா?

கணக்குப் போட்டுப் பார்த்தால் இங்கே
கடைசி வரையில் நீ
பிணக்குக ளோடே வாழ்ந்து முடிவாய்
பிரச்சனை நீயே தான்
உனக்குப் பிறகும் உலகு தொடரும்
உன்னை விட்டு வெளியே வா நாம்
உரக்கச் சிரித்திடலாம்

(பக். எண் - 362-363)

"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்ற முதுமொழிக்கேற்ப, துன்பம் வந்த வேளையில் சிரித்தால், அந்தத் துன்பமே நம்மைக் கண்டு பயப்படும். புன்னகையும், மௌனமும் மனிதனின் பலம் பொருந்திய ஆயுதம். அந்த ஆயுதத்தைக் கையாண்டால், வெற்றி நிச்சயம் என்பதனைக் கவிஞர் புலப்படுத்தியுள்ளார்.

விடியலே உனக்காகத்தான்

இறந்த கால
பிரமைகளை மறந்து
நிகழ்கால பிம்பங்களை
பிறப்பிக்கிறது

வாழ்வுகள் பிரகாசிக்க
எல்லைகள் வரை
வெற்றிகள் குவிய
பேதமில்லாத
விளக்கின் ஒளி போல
புதிய விடியலில்
பிரகாசிப்போம்

என்ற பிரியத் தமிழில் அவர்களின் கவிதை மனிதனுக்குத் தன்னம்பிக்கை ஒளியைத் தருகிறது. அதைப்போல, 'வானவில்' ரவியும் பொழுது புலர்வது மகிழ்ச்சிக்காக என்று கூறுகிறார். பாரதியார் பொழுது 'புலர்ந்தது யான் செய்த தவத்தால்' என்று, பொழுது விடிவதே தனக்காகதான் என்று தன்னம்பிக்கைத் துளிகளைத் தூவுகிறார். அவர் அடியொற்றியே கவிஞரும்,

பொழுது புலரப் போகிறதே - செய்
புதிய சங்கல்பம்
எழுந்து வாஇக் கணமே நீ - உல
கெங்கும் ஆனந்தம்

(ப. 56)

தமது கவிதையில் விடியல் வெற்றிதரும் என்ற சிந்தனையைப் புகுத்தியுள்ளார்.

வெற்றி வரும் நேரம்

காலம் மனிதனைப் பண்படுத்தும் செயல் வடிவம். அவனைச் சிற்பமாக்கும். முயற்சி, அவனை உலகுக்கே அறிமுகம் செய்யும்! மனிதன் வாழ்க்கையில் காணும் இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பாடத்தை உணர்த்தி நிற்கும். மலர்போன்ற மென்மையும், நதி போல துன்பம் கடந்து போகும் தன்மையும், மண் போல புகழும், இசை போல மகிழ்ச்சியும் கிடைத்தால் வாழ்க்கையே வெற்றி என்பதனைக் கவிஞர் தம் கவிதையில் எடுத்துரைத்துள்ளார்.

மலருதிரும் ஓசையிலும் மனமதிரும் நேரம்
மதகுடைய வேண்டியொரு நதிபுரளும் வேகம்
மண் மரகதங்களும் விண் அதிசயங்களும்
பண் வடிவம் ஏற்கத் தவம் செய்யும் கோலம்
(ப. எண் - 88)

புதிய பாதை

பலர் நடந்த பாதையில் நடந்தால், அது சிறுமைத்தனம். தனக்கென பாதை ஒன்றினை வகுத்து, அதில் பயணித்து வெற்றி கண்டால் மட்டுமே, அவன் சாதனையாளன் என்பதை,

ஓசைகளின் விளிம்பினிலே ஊஞ்சலாடும்
உற்சாகம் உள் மனதின் இயக்கமெல்லாம்
ஆசைகளாய்ப் பரிணமிக்கும் அர்த்த ஜாமம்
அனுபவங்கள் மலர்கின்ற உதய காலம்
புரியாத நுணுக்கங்கள் புலனாகின்ற
புதுப்பார்வை உலகாளும் புலமையோகம்
தரிசனக் கடலாடி விட்டு வார்த்தைத்
தறிகளிலே சிக்குண்டு தவிக்கும் பேதை
உன்மத்தம் உயர்கவிதை உணர்ச்சி போதை
எங்குமே செல்லாத புதிய பாதை

என்று 'வானவில்' கே. ரவி வாழ்க்கைப் புதிய பாதையை அமைத்திட வழிகாட்டுகிறார்.

சோகம் தவிர், மன எழுச்சி பெறு!

மனிதனாகப் பிறந்தவன் தன் சுய சிந்தனையால் துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விட வேண்டும். ஆனால், அது கற்பித்த பாடத்தை மறக்கக் கூடாது. ஏனெனில், துன்பம் என்பது உளி போன்றது. துன்பம் என்ற உளியின் அடிதனை ஏற்க ஏற்க, இன்பம் என்ற அழகிய சிலை நமக்குக் கிடைக்கும். ஆகவே, சோகம் என்ற உளியின் அடிதனை வலி என்று ஒதுக்கி விடாதே! வைராக்கியமாக ஏற்றுக் கொள்! உன்னை நீயே உணர, சிறந்த வழிகாட்டி அது என்பதனை,

சோகத்தில் கூட சுகம் உண்டு தோழி
சோகத்தின் சாரத்தைச் சொல்ல வந்தேன்
தேகத்தில் ஒளிந்திருக்கும் தினவை யெல்லாம்
தீ வைத்துக் கொளுத்துவது சோகம் அன்றோ

சோகத்தைப் பயில்வதற்குத் துணிந்து விட்டால்
சோதனைகள் இல்லை மனம் துள்ளு வதில்லை
இதயத்தைப் பிழிகின்ற சோகத்தாலே
இருக்கின்ற சுமையெல்லாம் கண்ணீ ராகி
உதிர்ந்துவிடும் நீயாக மட்டும் உன்னை
உள்ளுக்குள் நீ காண முடியும்

என்பதை 'வானவில்' ரவி தம் கவிதை வாயிலாகத் தெளிவுபடுத்தி உள்ளார்.

எண்ணத்திற்கு எழுதுகோல் கொடு:
ஆயிரந்தான் கவி சொன்னேன்
அழகழகாகப் பொய் சொன்னேன்
பெத்தவளே ஒம் பெருமை
ஒத்தவரி சொல்லலையே

வறுமையில நாமபட்ட
வலிதாங்க மாட்டாம
பேனா எடுத்தேன்
பிரபஞ்சம் பிச்செறிஞ்சேன்

என்று வைரமுத்துத் தன் தாயிக்காக பேனா எடுத்து தன் இலக்கிய நயத்தால் மடலை வரைந்தார். அதைப் போல 'வானவில்' ரவி அவர்களும் மனம் சோர்ந்து போகும் போது கவிதை படைக்கக் கூறுகிறார். எழுதும் போது, மனம் பாரம் குறைந்து பறவையைப் போல சிறகடிக்கும் நிலையை, உளவியல் நோக்கோடு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

இலக்கியம் ஒன்று படைத்து விடு
இமை நனையாமல் சுமைகளை யெல்லாம்
இறக்கி பிரியாத உணர்வுகளுக்கு
மேடை அமைத்து விடு
கனவுகளை ஒரு தேரில் அமர்த்தி
காற்றில் உலவ விடு - உன்
நிழல் நடனத்தைத் தொடர விடு - நீ
ஒதுங்கி நின்று விடு

(ப. எண் - 439)

இந்தச் சாயல் திரைப்பட இயக்குநர், திரு. பார்த்திபன் அவர்களின் எண்ணத் தூரிகையில் உருவான கிறுக்கல்களோடு ஒப்பிடத் தக்கது. எதுகை, மோனை, யாப்பு, சீர், அடி இல்லாத

மரபு மீறிய கட்டுக்குள் அடங்காதது, புதுக்கவிதை என்பதனை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

மனித வாழ்க்கை

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்துபார் என இறைவன் பணித்தான்
... .
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்
அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்? எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றான்

"அனுபவமே வாழ்க்கை!" என்ற உண்மைத் தத்துவத்தை உரைத்தவன் கண்ணதாசன். எதார்த்த வாழ்வியலை, பெற்ற நிகழ்வை, இலக்கியமாகப் படைத்திட்டவன். தனக்கு அழிவில்லை, தான் நிரந்தரமானவன், மரணமில்லாப் பெருவாழ்வு வாழக் கூடியவன் என்ற இறுமாப்போடு, மார்தட்டித் தன் சிந்தனையால் பாமர மனத்தில் குடிகொண்டவன். அத்தகைய கண்ணதாசனின் இரசிகனாய், ரவி அவர்கள் மாறியதால் வாழ்க்கைத் தத்துவத்தையும் தம் கவிதையில் சித்தரித்துள்ளார்.

புலன்களுக்குள் புயலெழுப்பும் போக வாழ்க்கையும்
புதிரவிழ்க்க முயன்று பார்க்கும் தாக வேட்கையும்
சிலந்தி வலைபோல் சிந்தனைகளைப்
பின்னிப் பின்னி, பிணைப்புச் சூழலில்
சிக்கிக் கொள்வதும்
இவற்றையெல்லாம் எண்ணிப்
பார்க்கும் இறுமாப்போடு
ஆசை கனவு ஆர்ப்பாட்டங்கள்
மனதுக் கெத்தனை வெளிவேஷங்கள்
நானும் எனது நிழலும் இங்கே
ஒன்றையொன்று சுமப்பதில்லை
உலகம் என்னைத் தாங்கிக் கொள்ள
ஒரு பொழுதும் மறுத்ததில்லை
என்னைச் சுற்றி என்னென்ன காட்சிகள்

ஒவ்வொன்றிலும் நான் உருகுவ தென்றால்
ஒரு சில கணமே வாழ்க்கை
ஒரு சில கணமே வாழ்க்கை

(ப.எண் - 116-117)

வாழ்வில் சாதிக்க வேண்டுமெனில், வேறு எதுவுமே தேவையில்லை! முழுமையான நம்பிக்கை, தூய்மையான அன்பு, முயற்சி மட்டுமே போதும்! வாழ்க்கை அழுவதற்காக ஆயிரம் காரணங்களைத் தந்தால், வாழ்க்கைக்கு நீங்கள் சிரிக்க பல காரணங்களைக் கற்றுக் கொடுங்கள். வாழ்க்கைப் பாடத்தைப் போதிக்க, அனுபவத்தைப் போல சிறந்த ஆசான் வேறெதுவும் இல்லை என்பதைக் கவிஞர் சமூகத்திற்குச் சுட்டிக் காட்டுகிறார்.

வாழ்க்கை என்பது ஒரு சந்தர்ப்பம்; நழுவ விடாதீர்கள்! அது கடமை, நிறைவேற்றுங்கள்! ஒரு இலட்சியம், சாதியுங்கள்! ஒரு சோகம், தாங்கிக் கொள்ளுங்கள்! ஒரு போராட்டம் வென்று காட்டுங்கள்! ஒரு பயணம், நடத்தி முடியுங்கள்! தோல்வி, சோகம் என்பன வாழ்க்கையில் தடைகற்கள். எனவே, தோல்விக்குத் துவளாமல், முயற்சித்து, தன்னம்பிக்கையின் வலிமையால் அக்னிச் சிறகுகள் விரித்துப் பறந்து, இலக்கை அடையலாம்!" மனிதனே, தெய்வம் நீ என்று உணர்!" போன்ற தன்னம்பிக்கைச் சித்தாந்தக் கருத்துகளை, 'வானவில்' கே. ரவி தமது படைப்புலகத்தில் விரவிச் சித்தரித்துள்ளார் என்பது புலனாகிறது.

❖

தனிச் சார்புக் கொள்கையும் ரவியும்

•

பெ. வாசுகி,
இளநிலை இரண்டாம் ஆண்டு தாவரவியல், வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு –12.

*'வான*வில்' கே. ரவியின் பார்வையில் தனிச்சார்புக் கொள்கைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சார்புக் கொள்கை

ஒன்றின் இருப்பு, அல்லது, இயக்கம் ஒரு குறிப்பிட்ட முறைப்பாட்டைப் பொறுத்ததாக இருக்கும் தன்மையை அதன் சார்புத் தன்மை எனலாம். நீளம், அகலம், தொலைவு போன்ற அளவைகளும், இயக்க விதிகளும் முறைப்பாட்டுக்கு ஏற்ப மாறும் என்பதே இயற்பியல் கருத்தோட்டத்தில் 'சார்புக் கொள்கை' எனப்படுகிறது.

சார்புக் கொள்கைப் பற்றிய அறிஞர்கள் கருத்து

ஐன்ஸ்டைனுக்கு முன்பே சார்புக் கொள்கை இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இடம், காலம் ஆகிய அளவைகளின் சார்புத் தன்மை பற்றி வியப்புக்கு உரிய சில முரண்பாடுகளை, ஜீனோ போன்ற கிரேக்கச் சிந்தனையாளர்கள் வகுத்திருந்தனர். கலிலேயோ, நியூட்டன்

போன்ற சிந்தனையாளர்களும் ஒருவிதமான சார்புக் கொள்கை பற்றி எழுதியுள்ளனர்.

ஒளியின் விரைவு எந்த முறைப்பாட்டையும் சாராதது என்ற உண்மையை அறிவித்த கொள்கையே, சார்பின்மைக் கொள்கை. 1905 ஆம் ஆண்டு, இரண்டு அறிவியல் தாள்களில், ஐன்ஸ்டைன் தம்முடைய சார்புக் கொள்கையின் முதற்சிந்தனைகளை விவரித்திருந்தார்.

ஊடகத்தின் தேவை

அலைகள் பரவவேண்டுமானால், ஊடகம் ஒன்று தேவை. ஒளியலைகள் பரவ ஓர் ஊடகம் தேவைதானே! காற்றே இல்லாத வெட்ட வெளியில் கூட, ஒளியலைகள் விரைகின்றன. கதிரவன், தொலைதூர விண்மீன்கள், ஆகியவற்றிலிருந்து புறப்படும் ஒளி, பரந்த வெட்டவெளியைக் கடந்துதானே பூமியை வந்தடைகிறது!

சிந்தித்துத் தாங்கள் கற்பித்துக் கொண்ட ஊடகத்துக்கு, 'ஈத்தர்' என்று அக்காலத்து இயல்பியல் அறிஞர்கள் பெயர் சூட்டியிருந்தனர். அதுதான், இந்நூலில் 'நுண்புலம்' என்றழைக்கப்படுகிறது.

நுண்புலம்

வெட்டவெளி உட்பட, எங்கும் நுண்புலம் நிறைந்திருக்கிறது என்பது கற்பித்துக் கொள்ளப்பட்டது. அதனால், இரண்டு சிக்கல்கள் ஏற்பட்டன. பூமி முதலான கோள்கள் சுழலவும், விரையவும் அனுமதிப்பதாக நுண்புலம் இருந்தாக வேண்டும். இது முதற்சிக்கல். கோள்களெல்லாம் தன்னில் நகர்ந்து கொண்டிருக்க, தான் மட்டும் அசையாமல் அது இருக்க வேண்டும். இது அடுத்த சிக்கல்.

மைக் - மார்லி சோதனையின் அடிப்படை

சிந்தனையைக் கீழ்வருமாறு விளங்கிக் கொள்ளலாம். அமைதியான கடலில், சீராக மிதக்கும் கப்பலின் இயக்கத்தைக் கப்பலுக்குள் இருந்து கொண்டே அறிய முடியாது. அதேபோல, நுண்புலக் கடலில் மிதக்கும் பூமியின் இயக்கத்தையும், பூமியின் மேல் இருந்து கொண்டே அறிய முடியாது. கப்பலின் வேகத்தைக்

கப்பலில் சென்று கொண்டே எப்படிக் கணிப்பது? முடிச்சுகள் போட்ட கயிற்றுடன் பிணிக்கப்பட்ட கட்டை ஒன்றைக் கடலில் எறிந்து, கப்பல் இயக்கத்தால் கட்டையிலிருந்து அவிழ்ந்து வரும் முடிச்சுகளைக் கணக்கிடுவதன் மூலம், கப்பலின் வேகம் கணிக்கப்படும் வழக்கம் இருந்தது.

அதைப் பின்பற்றி, மைக்கல்ஸன் – மார்லி, நுண்புலக் கடலில் மிதக்கும் புவிக்கோளத்தின் வேகத்தை அறிய, நுண்புலக் கடலுக்குள் ஒரு கட்டையைத் தூக்கி எறிந்தார்கள். அது வெறும் மரக்கட்டை இல்லை. அது ஓர் ஒளிக்கற்றை! புவிக்கோளத்தில் இருந்து விட்டெறியப் பட்ட ஒளிக்கற்றை, நுண்புலக் கடலில் விழுந்தவுடன், அதன் வேகம், புவியின் இயக்கத் திசையைப் பொறுத்து மாறித் தோன்றக் கூடும். நுண்புலக் கடலில் புவி செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் ஒளிக்கற்றை எறியப்பட்டால், அதன் வேகம், புவியைப் பொறுத்தவரை அதிகரித்துக் காணப்பட வேண்டும்.

பயணப் பாதையைக் கணக்கிடுதல்

புகைவண்டிப் பயணம் செல்லும் ஒருவர், தம் பயணத் தொலைவை ஒரே ஓர் அலகீட்டு முறையில் குறிப்பதுண்டு. அதாவது, 'நீளம்' என்ற அலகு மட்டும் இதில் அடங்கும். கப்பல் பயணம் செய்யும் ஒருவர், 'அட்ச ரேகை', 'தீர்க்க ரேகை' என்று அழைக்கப்பட்டு வந்த, 'நீள்மாயக் கோடு', 'அகல்மாயக் கோடு' ஆகிய இலகுகளையும் வைத்துத்தான் தம் பயணப் பாதையை அளவீடு செய்ய முடியும். ஆகாய விமானத்தில் பயணம் செய்பவர் ஒரு குறிப்பிட்ட நிலையில் தம் இருப்பிடத்தைக் குறிக்க, மேற்சொன்ன ஈரலகுகளுடன் 'உயரம்' என்ற மூன்றாவது அலகையும் சேர்த்துத்தான் பயன்படுத்த வேண்டும். அன்றாடப் பேச்சில், 'மூன்று வாட்டங்கள்' என்று சொல்லப்படுபவையே 'மூன்று அலகுகள்' என்று இங்கே குறிப்பிடப்படுகின்றன.

ஐன்ஸ்டைன் தனிச்சார்புக் கொள்கை

ஒளியின் விரைவு முறைச்சார்பு இல்லாதது. அதாவது, எந்த முறைப்பாட்டிலும் ஒளி ஒரே வேகத்தில் செல்கிறது.

ஒளியின் வேகத்துக்கு ஈடான வேகத்திலோ, மிகையான வேகத்திலோ, எந்தப் பொருளும் நகர முடியாது. இங்கே

'பொருள்' என்பது இம்மியளவேனும் பொருண்மை சிற்றணுத் துகள்களையும் குறிக்கும்.

ஆற்றல் பொருண்மையாகவும், பொருண்மை ஆற்றலாகவும் மாறக் கூடியவை.

மேலே, 'பொருண்மை' எனப்பட்டது, இயக்கமற்ற ஓய்வு நிலையில் கூடச் சற்றேனும் 'கனம்' உடைய தன்மையைக் குறிக்கவே. இனி, இந்த நூலில் 'பொருண்மை' என்பது 'கனம்' என்றே குறிக்கப்படும்.

ஆற்றல் கனமாகவும், கனம் ஆற்றலாகவும் மாறக்கூடும் என்பதனை இந்த விதி நிறுவியது. ஆற்றலும், பொருளும் இவ்விதியின் அடிப்படையில் வெவ்வேறு இல்லை என்று ஒருமைப்பாட்டுக் கட்டத்தினை முன் மொழிந்தார் என்று சொன்னால், ஐன்ஸ்டைன் தனிச்சார்புக் கொள்கையில், அதனை, ஒரு தீர்வாகவே நிறுவினார் என்று கொள்ளலாம். இவ்வாறு அறிவியல் பேரறிஞரின் அறிவியல் சாரங்களையெல்லாம் இன்றைய இளைய சமுதாயத்திற்கு எடுத்துக்கூறி, அவர்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தித் செல்லும் கற்பக விருட்சமாய் கே.ரவியின் படைப்புகள் அமைந்துள்ளன என்பது திண்ணம்.

❖

‘வானவில்’ கே.ரவியின் பார்வையில் வள்ளுவர்

•

திருமதி கி.வான்மதி,
தமிழ்த் துறைத் தலைவர், செர்வைட் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டி.இடையபட்டி, தோகைமலை, கரூர் – 621 313

கவிஞர், எழுத்தாளர் என்ற பன்முகத்திறமை உடையவரான ‘வானவில்’ கே.ரவி அவர்களின் படைப்புகள் பல. அவற்றுள், ‘கானல் நீரைக் கடந்து’ என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள ‘வள்ளுவன் வாயிலில்’ என்ற பகுதியில், படைப்பாளர் ரவி அவர்கள் என்னென்ன கருத்துகளைப் பதிவு செய்துள்ளார் என்பதனைப் பற்றி ‘வானவில்’ கே.ரவியின் பார்வையில் வள்ளுவர் என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

‘வள்ளுவன் வாயிலில்’ என்ற பகுதியில் ஐந்து தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு தலைப்பையும் உன்னிப்பாக படித்து நோக்கும் போது, தம் சிந்தைக்கு எட்டப்படாத பல செய்திகள் இடம் பெற்று சிந்திக்கத் தூண்டுவனவாக உள்ளன. அவற்றை எல்லாம் வகைப்படுத்திக் காட்டுவதே, இவ்வாய்வுப் பொருண்மையின் நோக்கமாகும்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில், 1330 குறட்பாக்கள் உள்ளன. அக்குறட்பாக்களை உள்ளடக்கி, அவற்றிற்கு அதிகாரத்

தலைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத் தலைப்பிற்கேற்றவாறே குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகச் சொல்வோமானால், 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத் தலைப்பில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு குறட்பாவிலும் ஒழுக்கத்தை முன்னிறுத்தியே கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இருக்கும் போது, அதிகாரத்திற்கு ஏன் தலைப்பு, தேவையில்லையே என்று கூறும் கவிஞர் ரவியின் கருத்துகள், முரண்பட்டதாக இருந்தாலும் சிந்திக்கத் தூண்டுவனவாக உள்ளன. குறள்களுக்குள்ளே மாறுபட்ட கருத்துகள் தோன்றினாலும், திருவள்ளுவர் மீதுள்ள பக்தியானது என்றும் குறையாது என்று சுட்டிக்காட்டியுள்ள விதம் அவரின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

ஒரு மனிதன், பல்வேறு பிரச்சனைகளுக்கிடையில் சிக்கித் தவிக்கும் பொழுது, எது சரி? எது தவறு? என்று சிறிதும் யோசிக்காமல் தவறான முடிவுகளை எடுப்பதால், அப்பிரச்சனைகளிலிருந்து மீண்டுவர முடியாமல் அவற்றிற்குள்ளே உழன்று கொண்டு திரிவான். ஆனால், கவிஞர் ரவி அவர்கள் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். என்னவென்றால், "வாழ்க்கையில் சில சமயங்களில் எது சரி? எது தவறு? என்பதில் முடிவு எடுக்க முடியாமல் தடுமாறிய போதெல்லாம், திருக்குறளே தீர்வுகளாக இருந்து என்னை நெறிப்படுத்தின!" என்று அவர் கூறும் செய்தியின் மூலம், திருக்குறள் ஒரு மனிதனை எவ்வாறு நெறிப்படுத்துகின்றது என்பதை அறியமுடிகின்றது. 'வள்ளுவன் வாயிலில்' என்ற பகுதியில் இடம்பெற்றுள்ள இரண்டாவது தலைப்பு மறையும் மறையும் ஆகும். மறையும் மறையும் என்ற தலைப்பு கவிஞரின் சொல் ஆட்சித் திறனை வெளிப்படுத்துகிறது. இத்தலைப்பு எவ்வாறு தம்முள் முளைத்தது என்பதனைத் தம் அனுபவத்தோடு அவர் கூறியுள்ள விதமும், சொல்லாட்சிக்கு விளக்கம் அளித்த பாங்கும் மிகவும் அருமை.

கலையும் கலையும் என்பது ஒன்று, மறையும் மறையும் என்பது மற்றொன்று. அதாவது கலைப் பொருட்கள் கூடக் கலைந்து அல்லது தொலைந்து போகக் கூடும். ஆனால், இயற்கை அழகு எந்நாளும் அழியா அழகு" என்று தாம் எழுதிய கவியைக் கூறும் போது, அருகில் இருந்த வ.வே.சு. மறை என்பது

மறைந்திருப்பது, மறைந்து போவதில்லை என்று விளக்கம் கொடுத்துள்ளார். அன்று அவர் கூறிய கருத்தை உள்வாங்கிக் கொண்டு, அதில் தம் மனதை ஊடுறுத்தி சிந்திக்கத்தொடங்கி, அவற்றை எழுத்துருவாக்கி, மற்றவர்களும் சிந்திக்கும்படித் தூண்டுவனவாக அவர் படைப்பு அமைந்துள்ளது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுகிறேன். மேலும், மறை என்பது வெளிப்படையாக ஒரு பொருளையும், உள்ளுறையாக ஒரு வேறு பொருளையும் கொண்டிருக்கக்கூடிய நூல் என்று பொருள் கொள்ளலாமா என்று அவர் கூறிய விதமும், அதற்கு அவர் எடுத்துக் காட்டிய விதமும் சிந்திக்கத் தூண்டுவனவாக உள்ளன.

திருக்குறள் மறை நூல் என்றால், அதன் குறட்பாக்கள் வெளிப்படையாகச் சொல்லும் கருத்தைத் தவிரவும் அவற்றில், உட்பொருளாக மறைந்து கிடக்கும் கருத்து கருவூலம் உண்டோ? என்ற கேள்விக்கும் குறட்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ள பால் அதிகார முறைப்பாட்டுக்கும் தொடர்புண்டு. "அப்படித் தொகுக்கும் போது, நூலின் மறைத்தன்மைக்கு ஊறில்லாமல், அதன் உட்பொருட் கோவை சிதறுபடாமல் தொகுக்கப்பட்டதா என்பதே என் கேள்வி" என்று மறை என்பதற்கு எடுத்தாளப்பட்டுள்ள விதம், வாசிக்கும்போது, இதுவரை நாம் அறியப்படாத செய்திகளாகவே பொதிந்து கிடக்கின்றன. வாசிப்பவர்களை சிந்திக்கத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன. இவரின் படைப்பில், மேற்கூறியவற்றின் மூலம் குறளை வாசிக்கும் போது, மேலோட்டமாக ஒரு பொருளும், ஆழ்ந்து நோக்கும் போது ஒரு பொருளும் தோன்றும். இதைத்தான் மறை என்று (படைப்பாளர்) கூறியுள்ளார். (எ.கா) உட்கார் என்ற சொல் அமருங்கள் என்ற ஒரு வகைப் பொருளைக் கொடுத்தாலும் அச்சொல்லை உட்கு+ஆர் எனப் பிரித்துப்பார்க்கும் போது உள்ளமைதி பெறுக என்ற மறை பொருளைச் சுட்டுகிறது. மறை என்பதற்கு, அவர் எடுத்தாண்டுள்ள செய்திகள் அவரின் திறமையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. "எத்தனை கோடி இன்பம்" என்ற தலைப்பில் இன்பம் என்றால், என்ன, அவை எவ்விடத்து வரவேண்டும்; எவற்றோடு சார்ந்து வர வேண்டும்; என்று திருக்குறளோடும் பாரதியார் கவிதைகளோடும் ஒப்பிட்டுக் கூறும் முறை மிகவும் அழகானது.

அறத்தால் வரும் இன்பம்

'அறம்' என்பது நீதிநெறி வழுவாத் தன்மையைக் குறிக்கும். 'இன்பம்' என்பது உள்ளக்கிடங்கில் தோன்றும் ஓர் உணர்ச்சியைக் குறிக்கும். அறத்தால் வரும் இன்பம் என்பது, ஒருவர் துன்பப்படும் நிலையைக் கண்டு இரங்கி, மனமுவந்து கொடுத்ததன் விளைவாக மனதில் ஒருவித மகிழ்ச்சி தோன்றுமே, அதுவே அறத்தால் வரும் இன்பமாகும்! எந்த ஒரு அக நிகழ்ச்சி அறத்தால் விளைகிறதோ, அதுவே இன்பம் என்று குறளாசான் தரும் வரையறையாகக் கவிஞர் பதிவு செய்துள்ளார்.

புறத்தே தோன்றும் இன்பம்

அறத்தால் வரும் இன்பத்திற்கு வரையறை செய்தது போல, புறத்தால் வரும் இன்பம் எவை என்பதற்கு இதிகாசப் புராண வாயிலாக எடுத்துக்கூறியமை படைப்பாளனின் நுண்மான் நுழை புலத்தை எடுத்தியம்புகிறது. "கர்ணனிடம் வந்து உடலோடு ஒட்டிப் பிறந்த கவச குண்டலங்களை இந்திரன் யாசகமாகக் கேட்கிறான். கவச குண்டலங்களைத் தந்துவிட்டால் போரில் பாண்டவர்கள் தன்னை எளிதில் வென்றுவிட முடியும் என்று கர்ணனுக்குத் தெரியும். ஆனால், கொடுத்துச் சிவந்த கரங்களால் கவசத்தையும், இருசெவிக் குண்டலங்களையும் அறுத்தெடுத்துத் தருகிறான் என்ற இச்செய்தியில், கர்ணனின் செயலானது மற்றவர்களுக்கு(புறத்தே) மகிழ்ச்சி தராவிட்டாலும் கர்ணன் உள்ளத்தே இன்பம் என்று வள்ளுவப் பெருந்தகை அடையாளம் காட்டுவதாகக் கவிஞர் கூறியுள்ளார்.

மகாபாரதத்தில், தம் உடைமைகளையும் தம்பிகளையும், மனைவியையும் தன்னையும், சூதில் பணையம் வைத்து எல்லாவற்றையும் இழந்த தருமபுத்திரனுக்கு, இன்பம் தரவில்லையே, என்று மேற்கூறிய இரண்டு காட்சிகளில், கர்ணனுக்கு ஈத்துவத்தால் கிட்டிய இன்பம், தருமனுக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தை,

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத் திழக்கும் வன்கணவர் (குறள் எண்-228)

என்ற குறட்பா மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

அறத்தால் வருவது இன்பம், அறமல்லாத புறத்தே வருவதும் இன்பம் என்ற இரண்டு நிலையில் மட்டும், இன்பமானது அமையவில்லை. அறம் அல்லாத செயல்களின் மூலமாக இன்னல்கள் பல நடந்தாலும், வீறுகொண்டு எழாமல், அவர்கள் செய்த தவறை (அ) தீங்கை மன்னித்து விடுவதால், அவர்களது புகழானது சாகும்வரை, (அ) இறந்த பிறகும், இவ்வுலகில் நிலைத்து நிற்கும்.தேவாரம் பாடிய மூவர்களுள் ஒருவரான அப்பரை சுண்ணாம்புக் காளவாயில் இட்ட போது,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று அவர் பாடிய நிலையிலும், இயேசு சிலுவை யிலே சுமத்தப்பட்டு ஆணியால் அடிக்கப்பட்டு முள்முடி தாங்கிக்கொண்டு உயிரை விடுகின்ற நிலையிலும்,

நம்பற்குரியரவ்வீரர் தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்

என்ற பாரதியின் வாக்குப் பலிக்கும் விதமாக, தடியடிப்பட்ட நிலையிலும் தேசியக் கொடியை தூக்கிச் சென்ற குமரன் ஆகியோரின் நிலையைச் சுட்டிக்காட்டி,

ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். (குறள்-156)

என்ற குறளுக்குக் கவிஞர் அவர்கள் புதிய விளக்கம் தந்துள்ளார்.

'திருவள்ளுவரின் அறப்புரட்சி' என்ற தலைப்பில், கவிஞர் முன் வைக்கும் கருத்துகள் எல்லாம் புரட்சிகரமானவையாகவே தோன்றுகின்றன. திருக்குறள் ஒரு நீதி நூல் என்று மட்டும் கூற முடியாது. ஏனென்றால், பொய் சொல்லாமை, திருடாமை, கொலை செய்யாமை போன்ற அடிப்படை விதிகள் நமக்குத் தெரியாதா அல்லது திருவள்ளுவர் வந்து சொன்னால் தான் தெரியுமா என்று கூறி, கவிஞர் விளக்கும் முறை அற்புதம்! திருக்குறள் நீதிநூல் என்றளவில் மட்டும் அல்லாது, தனித்த இடம் பெறுவதற்குக் காரணம் சொல்லாட்சியே ஆகும். ஒரு சொல் எத்தகைய மாற்றத்தை உருவாக்குகிறது. அந்த மாற்றமே புரட்சியாக மாறும் தன்மை வாய்ந்தது என்று

கம்பராமாயணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து விளக்கம் பகர்வது படைப்பாளரின் தனித்திறமையை எடுத்துக்காட்டுகின்றது.

அறப்புரட்சி

ஒவ்வொரு நீதிநூலும் பல அறக்கருத்துகளை எடுத்துக் கூறுகின்றன. அந்த அறக்கருத்துகள் அடங்கிய சொற்கள், வாசிப்பவரின் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, ஒரு வித மாற்றத்தை உணர்த்தக் கூடியதாக இருக்கும். அதுவே, நாளடைவில் புரட்சிக்கு வித்தாகவும் அமையும். இவ்வுலகில் மனிதன் நேர்மையாக வாழ்வதும் கடினம். அதுவும், துன்பம் வரும் வேளையில் நேர்மையாக வாழ்வது என்பது மிகக் கடினம். அவ்வாறு துன்பம் வரும் வேளையிலும், எவன் ஒருவன் நேர்மையோடு வாழ்கிறானோ, அதற்குக் காரணமாக இருப்பது நெஞ்சின் வலிமையும் ஆகும்.

பெற்ற தாய் உணவின்றிப் பட்டினி கிடக்கும் போது, ஒருவன் நல்லவனாக இருக்க முடியாது. ஆனால், இச்சூழ்நிலையில் நல்லவனாக நடந்து கொள்ள முடியும் என்பதை "நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும்" இருந்தால் போதும் என்ற பாரதியின் வரிகளைக் கொண்டு விளக்குவது அற்புதம்.

ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (குறள் எண்-656)

என்ற குறளின் மூலம் ஒரு சோதனை ஏற்படுத்தி, அதற்குத் தீர்வாக, நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும்' என்ற பாரதியின் வரிகள் மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளார் கவிஞர்.தனி ஒருவனுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக, மதுரையைத் தீக்கிரையாக்கிய கண்ணகியின் ஆவேசத்துக்கும், "என் அன்னையின் கற்புத் தீயுடனே மோதத்துணிந்தாய், உன் நகரத்தைத் தீக்கு இரையாக்குகிறேன் பார்!" என்று இலங்கையை எரித்த அனுமன் சினத்துக்கும், தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதியின் சீற்றத்துக்கு,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள் எண்–1062)

என்ற ஐயனின் குறள் வித்தாக அமைந்தது.

'மயிலையும் ஈரோடும்' என்ற தலைப்பு முரண்பாடாக இருந்தாலும், அவற்றிற்கிடையில் சில கருத்துகளைக்

கூறி தெளிவுப்படுத்தும் படைப்பாளரின் சிந்தனைத்திறம் போற்றத்தக்கது.

மயிலை என்பது ஐயன் பிறந்த ஊர். ஈரோடு என்பது வெண்தாடி வேந்தர் பெரியார் பிறந்த ஊர். பெரியார் நாத்திகர். திருவள்ளுவர் பிறந்த ஊரான மயிலாப்பூர் பிராமணர்கள் அதிகமாக வசித்த பகுதியாகும். அவ்வாறு இருக்கும் போது இவர்கள் இருவரின் கருத்துகளையும் இணைத்துப் பார்ப்பது என்பது இயலாத காரியம். ஆனால், கவிஞர் ரவியோ பல கருத்துகளை எடுத்துக்கூறி விளக்குவதன் மூலம் அவருடைய மாறுபட்ட சிந்தனையை அறிய முடிகின்றது. எந்த ஒரு மதத்தையும் சாராமல், எல்லா மதத்திற்கும் பொதுவான செய்திகளை எடுத்துக் கூறுகின்ற காரணத்தினால்தான், திருக்குறள் ஒரு உலகப் பொதுமறை என்று அனைவராலும் போற்றப்படுகின்றது. திருக்குறளில் எந்த ஒரு ஜாதிப் பிரிவு பற்றிய குறிப்புகள் எதுவும் இடம் பெறவில்லை. ஆனால், அந்தணன் என்ற சொல்லும், பார்ப்பான் என்ற சொல்லும் இடம் பெற்றுள்ளன. இச்சொற்கள் இனப் பிரிவைக் குறிக்காமல், கடவுளையும் கடவுளுக்கு நிகராக வைத்துப் போற்றப்படும் குருநாதரையும் குறிக்கிறது.

'அந்தணன்' என்ற சொல் கடவுள் (அ) குருநாதா என்று விளக்கமளித்த கவிஞர், அந்தணன் என்பதற்கு ஒரு வரையறையும் செய்ய முற்படுகிறார். "அறவோனாக அறநெறியிலிருந்து சற்றும் வழுவாத தன்மையனாக இருப்பதே அந்தணத் தகுதி என்று அந்தணன் சொல்லுக்கு விளக்கம் கூறுகிறார். இதைத்தான் ஐயனின் திருக்குறளும் உணர்த்துகின்ற நீதி என்று கூறுவதன் மூலம், படைப்பாளனின் பரந்துப்பட்ட சிந்தனையைக் காணமுடிகின்றது. திருக்குறள் காலத்தில், 'அந்தணன்' என்ற சொல் கடவுளைக் குறித்தது. ஆனால், ஏறக்குறைய 200 ஆண்டுகளில், இக்கருத்து தலைகீழாக மாறி, அந்தணன் வேறு, பார்ப்பான் வேறு என்ற நிலை உருவாகிவிட்டது. என்பதனை,

பார்பார் அறவோர் குழவி, பசு, பத்தினிப்
பெண்டிர் போன்றோரை விடுத்துத் தீத்திறந்
தோர் பக்கம் சேர்க

என்று கண்ணகி நெருப்புக் கடவுளுக்குக் கட்டளையிடுவதாக, இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் படைத்துள்ளார். பார்ப்பான் என்பதற்கும் ஒரு வரையறை செய்துள்ளார். அறம் என்பது ஒழுக்கங்களையும் நெறிகளையும் தன்னகத்தே

கொண்டது என்றாலும், புலால் மறுத்தலை மட்டும் ஓர் அடிப்படை அறமாக அறிவித்தது, திருவள்ளுவரின் 'அறப்புரட்சி' என்றே சொல்லலாம் என்று கவிஞர் கூறுகிறார். அதாவது பார்ப்பான் என்பவன் வேத மந்திரங்களை மறந்து போனாலும் பரவாயில்லை. மீண்டும் படித்து மனனம் செய்து கொள்ளலாம். ஆனால், பிறப்பு ஒழுக்கத்தில் குன்றினால் அவனுக்கு மீட்சியே இல்லை என்பதை 2000ஆண்டுகளுக்கு முந்தைய வள்ளுவரின் எச்சரிக்கையாகும். ஆனால், இவ்வெச்சரிக்கையை மீறிய பார்ப்பான் தங்களை உயர்ந்தவர்கள் என்றும் மற்றவர்களை தாழ்ந்தவர்கள் என்றும் சொல்லி அவர்களை அடக்கி ஒடுக்கும்போது தான், அம்மக்களுக்காக ஈரோட்டிலிருந்து ஓர் குரல் ஒலித்தது. அது தான் பார்ப்பனிய எதிர்ப்புக் குரல். சமுதாயத்தில் புரையோடிக்கிடந்த தீண்டாமைக் கொடுமை, பெண்ணடிமை, சாதிக் கொடுமை போன்றவற்றிற்காகக் குரல் எழுப்பி, அவர்களுக்காகப் போராட்டம் நடத்திச் சிறை சென்று அடிமைத்தளைக் கட்டிலிருந்து இச்சமுதாயத்தை மீட்டு எடுத்தவர், வேரில் பழுத்த பலா என்று அழைக்கக்கூடிய பெரியார் ஆவார் என்பதனை, "மயிலையின் எச்சரிக்கையைப் பார்ப்பனியம் மறந்ததால் அது ஈரோட்டுப் பீரங்கியை எதிர்கொள்ள நேரிட்டது என்பதே வரலாற்று உண்மை"என்று கவிஞர் அடிகோடிட்டுக் காட்டியுள்ளார்.

"கடவுளை நம்புகிறவன் முட்டாள். அவன் ஒரு காட்டுமிராண்டி!" என்ற பெரியாரின் வாசகம் நாடறிந்ததே. ஆனால், இவ்வாசகம் உதிப்பதற்கு முன்னோடியாக இருந்தது திருக்குறள் என்று கூறுவதன் மூலம் கவிஞரின் ஆழ்ந்த புலமை வெளிப்படுகிறது.

மேற்கூறிய செய்திகளின் மூலம் கவிஞரின் வரிகளில் சில முரண்பாடுகள் தோன்றினாலும், அவை சிந்திக்கும் விதமாக அமைந்துள்ளன. கவிஞரின் பார்வையில், பாரதியாரைத் தம் உயிர் மூச்சாகக் கொண்டும், திருவள்ளுவரைக் கண்களாகக் கொண்டும், கண்கள் மூலமாகத் தம் படைப்பில் புதிய பார்வையைத் தந்திருக்கிறார்.

❖

கவிஞர் 'வானவில்' ரவியின் அறிவியல் ஆளுமை

•

முனைவர் உ. விஜி
தமிழ் உதவிப்பேராசிரியர்,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர்க் கல்லூரி,
தூத்துக்குடி.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல், வேண்டும்

என்ற பாரதியின் வாக்கை ஏற்று, பிற மொழிகளில் உள்;ள அறிவியல் கருத்துகளைத் திறம்படப் படைத்திருக்கும் கவிஞர் 'வானவில்' ரவியின் அறிவியல் ஆளுமையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆளுமை

தனித்தன்மை வாய்ந்த தனி மனிதனின் பண்பே ஆளுமையாகும்.

தனி மனிதனின் பிறரைக் கவரும் தன்மை, தனித்தன்மை, ஆழ்ந்த பற்றையும் நிறைந்த நம்பிக்கையையும் தூண்டும் ஆற்றல், செயலாற்றும் ஆற்றல், முழுமையான ஈடுபாடு, பிறரை

ஈர்க்கும் ஆற்றல், முடிவெடுக்கும் ஆற்றல், குறிப்பிடத்தக்க சிறப்பு, மனநிலை, விவேகம், உணர்ச்சி காரணமாக ஏற்படும் சிறந்தகுணம் ஆகிய இவை யாவும் இணைந்ததே ஒருவரது ஆளுமையாகும்.

வாரன்: ஆளுமையை வளர்த்தல் என்பது அறிவு சார்ந்த செயலை முழுமையாக வெளிப்படுத்துவதேயாகும்.

பிரீமேன்: உள்ளத் திறன் பெற்றுள்ள மனிதனுக்கும் அவன் வாழ்ந்து வரும் சூழ்நிலைக்கும் இடையே வினையின் விளைவாக எழும் தனித்தன்மையினையே அவனது ஆளுமை என்கிறோம்.

படைப்பாளுமை

"படைப்பு என்பது அனுபவத்தின் வெளிப்பாடு. நல்ல ஓவியன் அதனை ஓவியமாகத் தீட்டுவான். நல்ல சிற்பி அதனைச் சிற்பமாக வடித்து எடுப்பான். இசைக் கலைஞன் இசையாகப் பாடுவான். நல்ல இலக்கியவாதி இலக்கியமாகப் படைத்து சமூகத்திற்கு அளிப்பான்" என்பதற்கேற்ப, கவிஞர் 'வானவில்' ரவி அவர்கள் தம்முடைய நூல்களில் தமது ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒலிக்குறிப்பு

'பிறமொழிப் பெயர்களில் விரவிவரும் முக்கியமான சில ஒலிக்குறிப்புகளுக்குத் தக்க வரிவடிவங்கள் தமிழில் இல்லை. அணு என்பதன் ஆங்கிலப் பெயரான 'ஆட்டம்' என்பதை இப்படியே எழுதினால் இது ஆடுதல் என்பதைக் குறிக்கும். 'ஆட்டம்' என்பதற்கு வேறுபாடு இல்லாமல் போய் தமிழே ஆட்டம் கண்டுவிடும்'[6] பிறமொழிப் பெயர்களில் இத்தகைய ஒலியைக் குறிக்க 'இட்டாலிக்ஸ்' என்று சொல்லப்படும் எழுத்துகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.'ஆட்டம்' என்பதில் முதல் எழுத்தை மட்டும் இட்டாலிக்ஸ் எழுத்தைப் பயன்படுத்தி எழுதி ஒலி வேறுபாட்டை விளக்குகிறார்.

புலத்தேர்வு

'பார்த்தல்' என்ற சொல்லைக் கவனம் கலந்த முழுமையான புலன் நுகர்ச்சி என்று விளக்குகிறார். ஆகையால், பார்த்தல் என்ற நுகர்ச்சிக்குப் புலத்தேர்வு என்று கூறலாம் என்று விளக்குகிறார். இது அறிவியல் தமிழுக்குக் கிடைத்த புதுமையான சொல்லாகும்.

அறிவியலின் அடிப்படை

அறிவியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையாக தேர்வு, அமைவு, துணிபு, சோதனை, தீர்வு என்ற ஐந்து படிகளையும் கடந்து சென்றுதான் எந்த அறிவியல் கண்டுபிடிப்பும் நிகழ முடியும். இயற்பியலை, 'இயல்பியல்' என்று பெயரிட்டு அழைப்பது சிந்தனைக்குரியதாக அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பாக 'எக்ஸ்' கதிர்கள் கண்டுபிடிப்பைக் குறிப்பிடுகிறார். "ஐந்து புலன்களுக்கும் உட்படாத ஒன்றை, அது புலப்படுத்தும் விளைவுகளைக் கொண்டே நிறுவ முடியும் என்பதை 'எக்ஸ் கதிர்' கண்டுபிடிப்பு உணர்த்தியது." எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிக்கப் பட்ட வரலாறு இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வரலாற்றில் ஒரு மைல்கல் என்பது தெளிவாக விளங்குகிறது.

இயல்பியல் ஆய்வின் வகைகள்

இயல்பியலில் இரண்டு விதமான ஆய்வுகளைக் குறிப்பிடுகிறார். ஒன்று, மூலப்பொருள் ஆய்வு, இன்னொன்று ஒளித்தன்மை ஆய்வு. மூலப்பொருள் ஆய்வு, பெரும்பாலும் வேதியியல் ஆய்வாளர்களாலே மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்த ஆய்வின் விளைவுகள், இயல்பியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. ஒளித்தன்மை ஆய்வு, பெரும்பாலும் இயல்பியல் ஆய்வாளர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு, அதன் விளைவுகள் வேதியியல் வளர்ச்சிக்குப் பயன்பட்டன என்று குறிப்பிடுவது உலகில் மக்கள் மட்டுமன்றி, அறிவியல் வினைகள் கூட ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன என்பதை உணர வைக்கிறது

மூலப்பொருள் ஆய்வு

அடிப்படையான மூலப்பொருள் ஒன்று உண்டு என்ற கருத்து மிகவும் பழமையானது. இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பே, இக்கருத்து லெய்ஸிபஸ் என்ற கிரேக்க அறிஞரால் முன்மொழியப்பட்டது. அடிப்படை மூலப்பொருள்களுக்கு, 'ஆட்டம்ஸ்' எனப் பெயரிட்டவர் டிமாகரிடஸ் என்ற கிரேக்க அறிஞர் ஆவார்.

பொறியியம்

'ஃபாஸ்ஃபரஸ்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பொருள் ஓர் அடிப்படைப்பொருள். சட்டென்று தீப்பற்றிக்கொள்ளும் தன்மை கொண்ட அதனைப் 'பொறியியம்' என்று தமிழில் அழைக்கலாம். பொறியியம் வில்லையொன்றை வெட்ட வெட்ட, அது மேலும் மேலும், சின்னஞ்சிறிய பொறியியல் வில்லைகளாகப் பிளவுபடுமேயன்றி, அதிலிருந்து வேறுபட்ட பொருளாக மாறுவதில்லை. இவ்வாறு, எவ்வளவு நுட்பமாகப் பிளவு பட்டாலும், வேறு பொருளாகத் திரிபடையாத பொருள்களே அடிப்பொருள்கள். 'ஆக்ஸிஜன்' உயிரியம் என்றும் 'ஹைட்ரஜன்' நீரியம் என்றும் நீர் அடிப்பொருள் போன்று தோன்றினாலும், அது ஒரு கூட்டுப்பொருள் என்றும் குறிப்பிடுவது அவரது அறிவியல் ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

அறிவியல் அறிஞர்கள்

ரொன்ட்கென் 'எக்ஸ்' கதிர்களை, 1895 ஆம் ஆண்டு கண்டுபிடித்திருந்தாலும், 1896 இல்தான், இக்கண்டுபிடிப்பு உலகிற்கு அறிவிக்கப்பட்டது. ரதர்ஃபர்ட் என்ற முன்னணி அறிஞர், 'நாற்பதாண்டு இயல்பியல்' என்ற தலைப்பில் உரையாற்றியபோது, இந்த 'எக்ஸ்' கதிர் கண்டுபிடிப்பு மிகப் பெரிய அறிவியல் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமைந்ததாகக் குறிப்பிடுகிறார். அடிப்படையான மூலப்பொருள் பற்றிய கருத்து, இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பே லெய்ஸிபஸ் என்ற அறிஞரால் முன்மொழியப்பட்டது என்று விளக்குகிறார். டிமாக்ரிடஸ் என்ற கிரேக்க அறிஞரால் அது மேலும் விரித்துரைக்கப்பட்டது. இந்த மூலப்பொருளே, தமிழில் அணு என்று விளக்கப்படுகிறது. டால்டன், ந்யூட்டன், யங், க்திமால்தி, ரொன்ட்கென், ரதர்ஃபர்ட் போன்ற அறிவியல் அறிஞர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளை விளக்கிச் செல்வது, கவிஞரின் தமிழ் இலக்கியப் புலமையையும் அறிவியல் ஆளுமையையும் விளக்குகிறது.

ரொன்ட்கென் 'எக்ஸ்' கதிர்கள் கண்டுபிடிக்க,எதிர்மின் கதிர்கள் பற்றி அவர் நடத்திய ஆய்வுதான் வழிவகுத்தது. அதுபோல, எதிர்மின் கதிர்கள் பற்றிய ஆய்வு, தாம்ஸன் மின்துகளைக் கண்டுபிடிக்க வழிவகுத்தது என்பதனை எளிய முறையில் விளக்குகிறார்.

எதிர்மின் கதிர்கள் அலைத்தன்மை உடையவை என்ற கருத்து நிலவிய போது, அக்கருத்தை மறுத்து, அக்கதிர்கள் துகள்களால் ஆனவையே என்று, 1871 ஆம் ஆண்டு முதன்முதலில் மொழிந்தவர் வா(ர்)லி என்ற அறிஞர். இதைத் தொடர்ந்து, வில்லியம் க்ருக்ஸ் என்பவர், அக்கதிர்கள் துகள்களால் ஆனவையே என்று சோதனை மூலம் நிறுவினார். எதிர்மின்துகள்களின் மின்பொதிவுக்கும் கனத்துக்கும் உள்ள தொடர்பைத் தாம்ஸன் கண்டறிந்தார். ஏற்கனவே, லொரென்ஜ் என்பவர் வகுத்திருந்த கணித விதிகளைப் பயன்படுத்தி, தாம்ஸன் மேற்படித் தொடர்பைக் கணித்தார்.

மின்னூட்டம் நிகழ, ஓர் அணு பிளக்கப்படுவது இன்றியமையாதது என்றும் அந்த நிகழ்வில், அணுப்பொருண்மையின் ஒரு பகுதி, மூல அணுவில் இருந்து பிரிந்து விடுபடுகிறது என்றும் தாம்ஸன் அறிவித்திருந்தார்.

ரதர்ஃபோர்ட்

"ரதர்ஃபோர்ட் என்ற இளம் அறிவியல் மாணவர், பேராசிரியர் தாம்ஸனுடன் சேர்ந்து முதலில் 'எக்ஸ்' கதிர்கள் பற்றியும் பிறகு 'மெக்ரம்' கதிர்கள் பற்றியும் ஆராய்ச்சி செய்ய முற்பட்டிருந்தார். 1899இல் வெளியான அவருடைய ஆய்வுத்தாள் ஒன்றில், 'பெக்ரல்' கதிர்கள் ஒரே வகைப்பட்டவை அல்ல என்றும் அவற்றில் இரண்டு வகைகளேனும் உண்டு என்றும் குறிப்பிட்டிருந்தார். வசதி கருதி, 'ஆல்பா' கதிர்கள் என்றும் 'பீட்டா கதிர்கள்' என்றும் அவற்றுக்குப் பெயர் சூட்டியிருந்தார். இவற்றைத் தமிழில் 'அகரக்கதிர்கள்' என்றும் 'உகரக்கதிர்கள்'என்றும் முறையே அழைக்கலாம். இவற்றுள் பொருள்களால் எளிதில் உட்கொள்ளப்படக் கூடியவை 'அகரக் கதிர்கள்' என்றும் பொருள்களால் எளிதில் உட்கொள்ளப் படாதவை 'உகரக் கதிர்கள்' என்றும் குறிப்பிட்டிருந்தார். காந்தப் புலத்தில், அகரக் கதிர்கள் ஒரு திசையிலும் உகரக் கதிர்கள் அதன் எதிர்த்திசையிலும் திசைமடங்கிச் செல்லும் நிகழ்வுகள் புலத்தேர்வு செய்யப்பட்டன. 1900 ஆம் ஆண்டு வில்லார் என்பவர் காந்தப் புலத்தில் திசைமடக்குக்கு உள்ளாகாத மூன்றாவது வகைக் கதிர்களைக் கண்டுபிடித்து, அவற்றுக்கு 'காமாக் கதிர்கள்' எனப் பெயரிட்டார். அவற்றை நாம் 'மகரக் கதிர்கள்' என்றே அழைக்கலாம்"[9] என்று ரவி அவர்கள்

கூறுகிறார். அறிவியல் கண்டு பிடிப்புகளான 'ஆல்பா', 'பீட்டா', 'காமா'க் கதிர்களை, அகர, உகர, மகர என்று பெயரிட்டு விளக்குகிறார்.

மின் அணு ஆக்கல்

"அணுவியல் ஆய்வின் அடுத்த கட்டமாக, ஆசிரியர் மின் அணு ஆக்கலைக் குறிப்பிடுகிறார். 'தோரியத்தின்' கதிர் இயக்கம் பற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டன. இயல்பு நிலையில் அணுக்கள் மின்சாரத்தை வெளிப்படுத்துவதில்லை. அவை மின்சீர்மை நிலையில் இருப்பதே அதற்குக் காரணம். அப்படிப்பட்ட ஓர் அணுவிலிருந்து மின்பொதிவு கொண்ட ஓரிரு துகள்களை வெளியேறச் செய்தோ, அல்லது, அந்த அணுவுக்குள் மின்பொதிவு கொண்ட ஓரிரு துகள்களைச் செலுத்தியோ, அந்த அணுவின் மின்சீர்மையைக் கலைத்து விடலாம். மின்சீர்மை கலைந்த அணு, மின்பொதிவு கொண்ட பொருள் போல் இயங்கும். இப்படி ஓர் அணுவின் மின்சீர்மையைக் கலைக்கும் நிகழ்வுக்கு மின்–அணு ஆக்கல் என்று பெயர் சூட்டலாம். மின்னணு ஆக்கத்தால் மின்சீர்மை கலைந்த அணுவை 'மின்னணு' என்று குறிக்கலாம். கதிர்வீச்சின் தீவிரத்தைப் பொறுத்தே, அதன் மின்னணுவாக்கல் திறன் அமைகிறது. இத்திறனை அளக்கும் கருவியை, 'மின்மானி' என்று அழைக்கலாம்." என்று மின்னணு உருவாக்கல் பற்றி எளிமையாக விளக்குகிறார்.

தொரான் வாயு கண்டுபிடிப்பு

ரதர்ஃபர்ட் அமைத்துக் கொடுத்தபடி அவருடைய மாணவர்கள், 'தோரியம்' என்ற அடிப்பொருளின் மின்னணுவாக்கல் திறனை, 'மின்மானி' மூலம் அளக்கும் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அச்சோதனையில் ஈடுபட்டிருந்த மாணவர் திடீரென்று ஒரு குழப்பத்துடன் ரதர்ஃபர்ட்டை அணுகினார். அந்த மாணவர் நிகழ்த்திய சோதனைகளில், தோரியத்தின் மின்னணுவாக்கல் திறன் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு அளவுகளாக இருப்பதுபோல் அவருடைய 'மின்மானி' காட்டியதாம், குறிப்பாகச் சொல்லப் போனால், அவர் சோதனை நிகழ்த்திக் கொண்டிருந்த சோதனைக் கூடத்தின் வாயிற் கதவு திறந்திருந்தால், அதன் அளவு ஒரு மதிப்பாகவும், கதவு மூடியிருந்தால், அதன் மதிப்பு வேறாகவும் இருந்ததாம்.

இதைக் கேட்ட ரதர்ஃபர்ட் இது பற்றி மேலும் ஆராய்ந்ததில் ஓர் உண்மை வெளியானது. கதிர்வீச்சியாக்கத்தால் தோரியம், தன்னுள் இருந்து ஒரு புதிய வாயுவை வெளிப்படுத்தியதை அவர் கண்டுபிடித்தார். அப்புதிய வாயுவிற்கு 'தொரான்' என்று பிறகு பெயரிடப்பட்டது, 'தொரான்' வாயு, கூடத்தை விட்டு வெளியேற வழியின்றித் 'தோரியத்தை'ச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்ததை அவர் கண்டுபிடித்தார். 'தொரான்' வாயுவும் கதிர்வீச்சு நிகழ்த்தும் தன்மை உடையது என்பது புலனாயிற்று. எனவே, கூடத்தின் கதவுகள் மூடியிருந்த நிலையில், 'தோரியக் கதிர்வீச்சும் 'தொரான்' கதிர்வீச்சும் சேர்ந்து, மொத்தக் கதிர்வீச்சின் தீவிரம் அதிகரித்ததால், மின்னணுவாக்கல் அதிக அளவில் நிகழ்ந்தது. சோதனைக் கூடத்தின் கதவுகள் திறந்திருந்தால், 'தோரியத் திலிருந்து' வெளிப்பட்ட வாயு அறையை விட்டுத் தப்பி வெளியே சென்றுவிடுகிறது.

பொருட்திரிபு

ரதர்ஃபர்டும் ஸாடியும் இணைந்து தோரியம் பற்றிய ஆய்வினைத் தொடர்ந்து நடத்தியதில் பல உண்மைகள் வெளியாயின. தோரியத்திலிருந்து தொரான் வாயு நேரடியாக வெளிப்படுவதில்லை எனத் தெரிந்தது. தோரியம் முதலில் ஒரு புதிய பொருளாகத் திரிபு பெற்றுப் பிறகு அப்புதிய பொருள் தொரான் வாயுவாகத் திரிபு பெறுவது கண்டுபிடிக்கப்பட்டது. அப்புதிய பொருளுக்கு 'தோரியம்–எக்ஸ்'என்று பெயரிடப்பட்டது. ரதர்ஃபர்டும் ஸாடியும் இணைந்து வெளியிட்ட தீர்வின்படி, கதிர்வீச்சு நிகழ்த்தும் அணுக்களெல்லாம் தாமாகவே தமக்குள்ளிருந்து அகர அல்லது உகரத் துகள்களைக் கதிர்வீச்சாக வெளிப்படுத்தி அதன் விளைவாகப் புதிய அடிப்பொருள் அணுக்களாகத் திரிபடைந்து, அப்புதிய அணுக்களும் கதிர்வீச்சு நிகழ்த்தி வேறு புதிய அடிப்பொருள் அணுக்களாகத் திரிபடையும் தொடர்நிகழ்வுகள் தெளிவாயின. இந்தத் தீர்வைப் 'பொருட்திரிபு' என்று தமிழில் அழைக்கலாம் என்று கவிஞர் ரவி கூறுகிறார். ஒவ்வொரு அறிவியல் அணுவிளைவுகளுக்கும் தமிழில் பெயர் தருவது அவரது அறிவியல் ஆளுமையை விளக்குகிறது.

கவிஞர் 'வானவில்' ரவி அவர்கள், இயல்பியல் ஆய்வில் அணு கண்டுபிடிப்பைக் கால வரிசைப்படி விளக்கிச் செல்கிறார்.

தமிழில் அறிவியலைச் சொல்ல முடியுமா? என்ற கேள்விக்குத் தமிழால் முடியும் என்ற விடையை, கவிஞரின் இருபதாம் நூற்றாண்டின் இயல்பியல் வரலாறு விடை கூறுகிறது. கலைச்சொற்கள் அறிவியல் அறிஞர்களின் புகைப்படங்களுடன் தமது அறிவியல் ஆளுமையைப் புலப்படுத்துகிறார்;

உசாத்துணை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. Oxford Dictionary and Thesaurus, III
3. P.K. Manoharan, Personality Development
4. எஸ். பாக்கியம் கல்வி உளவியல்
5. https://ta.m.wiktionary.org
6. கே. ரவி, இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு

❖

கவிதை வழி வானவில் கே. ரவி

•

முனைவர். அ.ஜனார்த்தலி பேகம்
தமிழ் உதவிப்பேராசிரியர் ஜமால் முகமது கல்லூரி, திருச்சி

மனிதனின் தோற்றம் இறைவனால் இயற்கையோடு இயைந்து படைக்கப்பட்ட மிக உயர்ந்த உன்னதமான ஒரு படைப்பு. மனிதன் அல்லாத மற்ற உயிரினங்கள் அனைத்தும் ஒரு மரபு மாற்றத்திற்குட்பட்டே செயல்படுகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே மரபை மீறிச் செயல்படுகின்றான். ஓரறிவுயிர் தொடங்கி ஐந்தறிவுயிர் வரை செய்யாத பலவற்றை ஆறறிவு மனிதன் செய்கிறான். புதிது புதிதாகச் சிந்தித்து புதிய ஒன்றை உருவாக்குகிறான்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே

என்று நன்னூலார் இறுதியாகச் சொன்னார். தேவைக்கேற்ப புதிய மாற்றங்களை உருவாக்குவதில் தவறு ஒன்றுமில்லை. நூற்பாவாக, செய்யுளாக, பாடலாக பார்த்து வந்த நம் இலக்கியத்தை முதன் முறையாக கவிதை வடிவம் என்ற ஒன்றைக் கொண்டு வந்தவர் மகாகவி. அவர் வழியைப் பின்பற்றி வந்தவர் வானவில் கே. ரவி

இறைவன் உலகைப் படைத்தான். அவன் படைத்த உலகில் பல அற்புதங்களையும் வைத்துப் படைத்துள்ளான். மாலைநேர மழை அதில் அழகிய வானவில் ஏழுவண்ணத்தினையும் தன்னுள்ளே வைத்து வானத்தை வண்ணமயமாக்கும் வானவில்

கண்ணுக்கு விருந்து, ஆனால் அறிவுக்குத் தேவையான ஒரு சிறந்த இலக்கிய விருந்து வானவில்லாரின் கவிதையியல் கட்டுரைத் தொகுப்பு. அவருடைய **'நமக்குத் தொழில் கவிதை'** என்ற கட்டுரைத் தொகுப்பைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர் (நாலடி)

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் (குறள்:399)

என்ற நாலடியாரும் திருக்குறளும் கூறும் வரிகள் மூலம் கல்வி அறிவால் தாம் பெற்ற இன்பத்தால் உலகம் பெறுகின்ற பயனையும் மகிழ்வையும் கண்டு அறிவிற் சிறந்த பெரியோர் மேலும் அத்தகைய கல்வியைப் பெற விரும்புவர் என்பது தெளிவாகின்றது. கவிதை, கட்டுரை, இலக்கணம், இலக்கியம் என்று தம்முடைய கல்வி அறிவில் சிறந்து விளங்குகிறவர் வானவில்லார் அவர்கள்.

ஒளியும் ஒலியும்

மழை பொழிந்திடும் வண்ணத்தைக் கண்டு நான்
வான் இரண்டு கரும்புயல் கூடியே
இழையும் மின்னல் சரேலெனப் பாயவும்
ஈர வாடை இரைந்தொலி செய்யவும்
உழைஎலாமிடை யின்றியிவ் வானநீர்
ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டும்கால்
மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாயென்று பாடுமென் வாணியே

மழைபொழியும் போது, அதன் வண்ணத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் ஒரு கவிதையை, கவிஞனுக்குத் தோற்றுவிக்கிறது.

இருண்ட வானும் கருத்த புயலும் ஒன்று கூடுகிறதாம். அந்தக் கூடலின் ஊடே ஒரு மின்னல் "சரேல்" எனப் பாய்கிறதாம்; ஈர மண்ணின் வாடையைச் சுமந்தபடி காற்று இரைச்சலாக ஒலிசெய்கிறதாம். இடைவெளியின்றி மழைபொழிகிறதாம்.

காட்சிகள் எப்படி அடுக்கடுக்காக விரிகின்றன. மழை பொழியும் வண்ணத்தைக் காணவேண்டும் என்ற எண்ணம்,

இருட்டுக்கும் புயலுக்கும் மின்னலுக்கும் ஒளிவடிவம் தருகிறது. இந்த ஒளி, மொழி வடிவம் பெறும்போது கவிதையாகிறது. இந்தக் கவிதை இத்துடன் நிற்கவில்லை. காட்சிகளின் விரிவாய் கனமழை பொழியும் செய்தியை உலகுக்குச் சொல்லும் உள்ளூக்கம் கவிஞனுக்கு ஏற்படுகிறது. அப்பொழுது அவனுள், அவன் கவிதைகளின் ஊற்றாகத் திகழும் ஒளியில் மழையும் காற்றும் பராசக்தியின் செய்கைகளாக ஒரு தெய்வீகக் காட்சி உருவெடுக்கிறது. மழையைப் பாடவந்த கவிஞன், மழையை மறந்து, வானம் மறந்து, காற்று, திசை எல்லாம் மறந்து "வாழ்க தாய்" என்று பாடுகிறான். அதுவே அவனுள் இருக்கும் உள்ளொளியின் ஒலிவடிவம். அதையே தன் 'வாணி' என்று போற்றுகிறான் கவிஞன்.

புறக்காட்சியில் தோற்றம் கொள்ளும் ஒரு சிறு பொறி– ஓர் ஒளித்துகள் – ஒரு கவிஞனுடைய உள்ளொளிச் சுடரைத் தாக்கித் தூங்கும் சுடரைத் தூண்டி எழுப்பும் தருணம் அவன் மகாகவியாகிறான்.

மெய்த்திருப்பதம் மேவென்ற போதினும்
இத்திருத்துறந் தேகென்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்

என்ற கவிதையில் பொய்யான நிலையற்ற செல்வமாகிய அரச பதவிக்கு 'மெய்திருப்பதம்' என்ற பதத்தைப் பயன்படுத்தியதன் மூலம் ஒரே சமயத்தில் இரண்டு காட்சிகளை விரிய வைக்கிறான் கவிச்சக்ரவர்த்தி. முடிசூட்டு விழா என்று சொன்ன போதும் அரசைத் துறந்து பூழிவெங்கானம் செல் என்று சொன்னபோதும், நிலைதிரியாத ராஜாராமன் முகம் அசோகவனச் சீதையின் அகக்கண்ணில் நிழலாடுகிறதாம். மெய்திருப்பதமாகிய வைகுந்தத்தில் திருமகளோடு சேர்ந்து இருந்தபோதும், உலக நன்மைக்காக, அயோத்தியில் அவதரிக்கத் திருமகளைப் பிரிந்து வரவேண்டிய தேவை ஏற்பட்டபோதும், நிலைதிரியாத பரந்தாமன் முகம் கவிச்சக்ரவர்த்தியின் காவியக் கண்களில் நிழலாடுகிறதாம். அந்தக் கற்பனை ஒருபுறம் காட்சியாகவும், இன்னொருபுறம் உள்ளொளியின் மாட்சியாகவும் வளர்நிலை பெறுகிறது அந்தக் கற்பனையே காலம் வென்று நிற்கும் கவிதையாகிறது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன். என்று சொன்ன வள்ளலாரின் உள்ளம்தான்.

அழகியஎன் திருநாடே அன்பு நாடே
வையகத்தில் உன்பெருமை தன்னை நல்ல
மணிநதியை உயர்குன்றைத் தேனை அள்ளிப்
பெய்யுநறுஞ் சோலையினைத் தமிழால் பாடும்
பேராவல் தீர்ந்ததில்லை அப்பே ராவல்
மெய்யியதயம் அறுபடவும் என்இ ரத்த
வெள்ளம்தான் வெளிப்படவும் தீரும் அன்றோ

என்ற புரட்சிக் கவிஞனின் உள்ளமாகிறது.

சாய்வு நாற்காலியில் வெறுமையான மனத்தோடு ஓய்வு கொள்ளும் பொழுது மனக் கண்ணில் தங்க நிற டேஃபடில் மலர்கள் நிழலாடக் கண்டு தனிமையின் இன்பத்தை நுகர்ந்த வேர்ட்ஸ்வொர்த்தின் உள்ளம் இவை எல்லாம் கவி உள்ளங்களே.

உள்ளங்கள் எல்லாம் உயரப் பறக்கும் ஆற்றல் உள்ளவையே. சில உள்ளங்கள் மட்டும் சிறகு விரித்துப் பறக்கின்றன: அவை பறந்து சென்று வந்த அனுபவங்களைப் பாடும் பொழுது மற்ற உள்ளங்கள் சிறகடித்துக் கொள்கின்றன: சிலிர்த்துக் கொள்கின்றன: விரைவில் சிறகு விரித்துப் பறக்க வேண்டும் என்ற ஆவலை வளர்த்துக் கொள்கின்றன. கவிஞனின் உள்ளம் மகாகவியையும் தாண்டிய ஒரு அழகிய சிந்தனை.

கவிஞனின் தோற்றம்

மகாகவி காளிதாசனின் 'குமார சம்பவம்' என்ற காவியத்தின் ஐந்தாவது பகுதியில், தவக்கோலத்தில் நிற்கும் பார்வதியின் மேல் விழும் மழைத்துளிகளைக் கீழிருந்து எழும் ஐந்தழல்களை (பஞ் சாக்கினிகளை) எதிர் கொள்ள மேலிருந்து வரும் கருணை மழையாக உருவகித்துக் கே.ஆர். ஸ்ரீநிவாஸ் ஐயங்கார் எழுதுகிறார்.

"கவிதைச் சுவை மற்றும் உள்ளொளி ஆகிய உயர்நிலைக்கு நம்மை எழுந்துயரச் செய்வன இத்தகைய உருவகங்களே. அப்படிபட்ட கவிதை (உத்தமோத்தம காவ்யானுபவ) எதிர்பாராமல் வெளிக் கிளம்பும் கதிர்விரி சுடரொளி போன்றது.

அதில் விளையும் பெருமகிழ்ச்சியும் சுவையும் பெரும்பாலும் ஆன்மீகத் தெளிவு போன்றவையே"

அனுபவக் கடத்தல் உயர்நிலை நோக்கி இருக்க வேண்டியதையே 'எழுத்துயர' என்ற சொற்றொடர்மூலம் இவர் குறிப்பிடுகிறார்.

கண்ணுற்றதும் தன் வில் நழுவ விம்முற்று நின்றான். பிறகு பரதனைத் தழுவிக்கொண்டு அவன் தியாக சீலத்தை வியந்து பாராட்டிய பாடல்:

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணிதன்னை
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா

இங்கே 'சிந்தனை' முகத்தில் தேக்கி என்றால் 'யோசனை' என்ற பொருளில் இல்லை. 'சிந்தனை' என்றால் 'கவலை' என்று பெரியோர் பொருள் சொல்லியிருக்கிறார்கள். 'கவலை'என்றால் துயரம் என்று பொருள் இல்லை. ஆங்கிலத்தில் 'Concern' என்ற சொல் எதைக் குறிக்கிறதோ அதையே 'கவலை' அல்லது 'சிந்தனை' என்ற சொல்லும் குறிக்கும். தாய் சேயிடம், நல்ல மருத்துவன் நோயாளியிடம், காட்டும் அக்கறை கலந்த ஈடுபாட்டை அது குறிக்கிறது. அப்படி ஓர் அக்கறை மிகுந்த ஈடுபாட்டுடன் படிப்பவர் உள்ளத்தைத்தான் தன் கவிதைமூலம் ஒரு கவிஞன் தொடமுடியும்; உருக்க முடியும். 'சிந்தனை – செயல்– வெற்றி. எனப் பொருள் கொண்டால் சிந்தித்துப்பார்த்தால் அவர் உள்ளத்தில் ஆனந்தக் கனவுகளும் தோன்றும்.

திருவள்ளுவருடைய தமிழிலும் 'தொழில்' என்ற சொல் வெறும் பொருளீட்டலைக் குறிக்காமல் புலவர்கள் மகிழ்ச்சியுடன் கூடி வருத்தத்துடன் பிரிவதையே உணர்த்துகிறது.

உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்
மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்

கவிஞனின் சிந்தனை

ஈற்றடி எடுத்துக்கொடுக்கப் பட்டவுடன் அதற்கேற்ப முதல் மூன்று அடிகள் முடிந்துவிடும் விதத்தில் உயர்ந்த

கவிதைகள் உதிப்பதில்லை. மொழிப் புலமையால் மட்டும் விளையும் சொற்கள் கேட்டாரைப் பிணிப்பதில்லை. நாரில் தொடுக்கப்பட்ட மலர்கள் போல் அடுக்கப்பட்ட சொற்கள் அமரத்துவம் பெறுவதில்லை. கோள்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பதால் விழாமல் சுழல்வதைப் போல் புறப் பிணைப்பின்றித் தம் உள்ளீர்ப்பால் அணிவகுத்து வரும் சொற்களே உயர்ந்த கவிதைகளாகின்றன. தன்னை மீறிக்கொண்டு வெளிப்படும் சொல் ஒவ்வொன்றுள்ளும் கவிஞன் நுழைந்து செல்கிறான். அடுத்து வரும் சொல் என்னவென்று அறியாமலேயே எதை நோக்கிச் செல்கிறோம் என்று புரியாமலேயே.

நீருக்கு தவித்தமீன் நிழலுக்குத் தவித்தகால்
நிலம்தொடத் தவித்தவிழுது
நிலவுக்குத் தவித்தவான் நீளத் தவித்தவேர்
நிற்கத் தவித்த குழவி
போருக்குத் தவித்ததோள் பொங்கத் தவித்தபால்
பொழியத் தவித்த மேகம்
புதிர்க்குள் தவித்தவிடை புகைக்குள் தவித்த தீ
பூக்கத் தவித்த மொட்டு
ஏழுக்குத் தவித்த மண் ஏடேறத் தவித்தபா
இரவுக்குத் தவித்த அல்லி
எரியத் தவித்ததிரி ஏறத் தவித்தகொடி
இவைகளின் தவிப்பினைப் போல
நேருக்கு நேருன்னை நேர்த்தியாய் காண என்
நெஞ்சம் தவிக்கின்றதே
நெருஞ்சியைப் பார்வையால் குறிஞ்சிமலர் ஆக்கிடும்
நிர்மல மீனாட்சியே

படிக்கும் போதெல்லாம் படிப்போர் விழிகளில் நீர்த்திரை வரவழைத்து நெஞ்சை உருக்கும் அற்புதமான 50 கவிதைகளின் தொகுப்பு **இமயம் கொடுத்த நிலவே**. இதன் ஆசிரியர் நம்மிடையே வாழும் கவிஞர்.

பாரடியோ வானத்தில் புதுமை எல்லாம் (அ- 402)
பார் சுடர் பரிதியை சூழவே படர் முகில்
எத்தனை தீப்பட்டெரிவன ஓகோ
என்னடி இந்த வண்ண இயல்புகள்
எத்தனை வடிவம் எத்தனை கலவை
தீயின் குழம்புகள் செம்பொன் காய்ச்சி

விட்ட ஓடைகள் வெம்மை தோன்றாமே
எரிந்திடும் தங்கத் தீவுகள் பாரடி
நீலப் பொய்கைகள் அடடா நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடீ
எத்தனை செம்மை பசுமையும் கருமையும்
எத்தனை கழிய பெரும்பெரும் பூதம்
.....(அ.403)

என வானை வியந்து வானத்தில் கணம் தோறும் நிகழும் புதுமைகளை வியந்து பாரதி பாடிய கவிதையை எடுத்துக் கூறி விளக்கும் இடம் சிறப்பு.

ஏன் என்ற கேள்வி

"புற நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் வெளிப்படுத்த வசனம் போதுமே. அக இயக்கங்களாகிய உணர்ச்சி முதலானவற்றை வெளிப்படுத்தவே கவிதை தேவைப்படுகிறது"என்று முதல் நோக்கில் தோன்றுகிறது. மேலும் சிந்தித்தால் அக இயக்கங்களைக் கூட உரைநடையில் நாம் வெளிப்படுத்தி வரும் உண்மை புரிகிறது.

நேற்று மழை பெய்தது என்ற புறச் செய்திக் கூற்றும் என் மனம் இன்பத்தில் மூழ்கி உள்ளது என்ற அகவியக்கக் கூற்றும் ஆகிய இரண்டுமே உரைநடைக் கூற்றுகள். எனவே உரைநடையிலும் அகவியக்கங்கள் வெளிப்படுகின்றன. அதுபோல் கவிதைகள் நிகழ்ச்சிகளையும் வெளிப்படுத்துவது உண்டு.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோஎன வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ வியுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே

என்ற புறநானூற்றுப் பாட்டில் ஒரு செய்தி மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. ஆனாலும் இது காலம் கடந்து நிற்கும் கவிதையாக இன்றும் படிப்போருக்கு இனிமை பயக்கிறது. எனவே கருப் பொருளை வைத்து கவிதையின் நோக்கத்தையும் தனித்தன்மையை அளவிட இயலாது. விளைவை வைத்து அளவிட இயலுமா?

ஒரு வெளிப்பாட்டின் நோக்கம் ஒன்றை அடுத்தவருக்குப் புரிய வைப்பதாக இருக்கலாம் அல்லது அடுத்தவரிடம் ஒரு புற இயக்கத்தை அல்லது அக இயக்கத்தைத் தோற்றுவிப்பதாக இருக்கலாம்.

அந்த மலரின் அழகை நான் ரசித்தேன் என்ற கூற்றின் நோக்கம் ஒரு மலரை யார் ரசித்தார் என்ற செய்தியை புரியவைப்பதே. ஆஹா... இந்த மலர் எவ்வளவு அழகாக உள்ளது என்ற கூற்றின் நோக்கம் ஒரு மலர் அழகாக இருக்கிறது என்ற செய்தியைப் புரியவைப்பது இல்லை. அக்கூற்று யாரிடம் சொல்லப்படுகிறதோ அவரும் அந்த மலரைப் பார்த்து அதன் அழகை ரசிக்க வேண்டும் என்ற விளைவை வெளிப்படுத்துகிறது, அதேபோன்றுதான் மலரின் அழகை நாம் ரசிப்பதை விட மலர் அழகானது.

கவிதைச் சுவை

'அழகியல்' 'இன்பியல்'ஆகிய சொற்றொடர்களைத் தவிர்த்து 'சுவையியல்' என்றே ரசனை இயலைத் தமிழில் குறிப்பிடலாம் எனத் தோன்றுகிறது என்ற கவிஞனின் எண்ண ஓட்டத்தில் அழகு சுவை என்ற தமிழ்ச் சொல் விரிந்த பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட'

சேக்கிழார் பெருமான் பெரியபுராணம்' – இசைத்த குறிப்பும்

'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்'

– என்ற குறளும்

'நரை பழுத்த துறை இன் தமிழ் இன்
ஒழுகு நறும் சுவையே'

என்று குமரகுருபரர் மீனாட்சி அன்னையை அழைத்த விளியும்

மின்னற் சுவைதான் மெலிதாய் மிக இனிதாய்
வந்து பரவுதல் போல்

என்ற பாரதியின் வியப்பும்

இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்

என்று இறைவனை பலவாறாக விளித்து மகிழும் ஆழ்வாரின் உறுதிமொழியும் நம் அன்றாட உரை வழக்கில் நகைச்சுவை, அவலச்சுவை என்றெல்லாம் விரவி வரும் குறிப்பும் இவையெல்லாம் 'சுவை' என்ற தமிழ்ச் சொல்லின் விரிவையும் புதுமையையும் நன்கு உணர்த்துகின்றன. ஐம்புலன்களுக்கும் பொதுவாய் அதுவன்றி அக இயக்கங்களை நுகரும் நுட்பத்தையும் குறிப்பதாய் விளங்கும் 'சுவை' என்ற சொல்லே ரசனை என்ற சொல்லுக்கு ஈடான தமிழ்ச்சொல் எனத் துணியலாம். ஐம்புலன்களுக்கும் பொதுவாக அவற்றைக் கடந்த இன்ப நிலையாக விளங்கும் பேரின்ப அனுபவத்தைத் திருவருட்பிரகாச வள்ளலார் ஒரு பாடலில் அழகோவியமாகத் தீட்டியுள்ளார்.

கோடையிலே இளைப்பாற்றிக்
கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே
நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த
சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற
மெல்லியபூங் காற்றே
மென் காற்றில் விளை சுகமே
சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனை மணந்த
மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என்
அலங்கலணிந் தருளே

தருவாய் அழகிய மலராய் பார்வைப் புலனுக்குக் குளிர்ச்சி தந்து அத்தருவின் நிழலாய் அதன் அசைவில் காற்றாய் தீண்டு உணர்வுக்கு அமைதி தந்து மலரின் நறுமணமாய் உயிர்ப்பில் நிறைந்து சலசலத்தோடும் ஓடையின் இசையாய்ச் செவிக்கின்பம் தந்து தண்ணீரின் தீஞ்சுவையாய் நாவுக்கு இனிமை தந்து ஐம்புலன்களாலும் நுகரப்படும் அனுபவ சுகம் அனைத்திலும் விளையும் பயனாகவும் அக இயக்கங்கள் அனைத்தையும் ஆளும் மணவாளனாகவும் இருக்கும் ஈசனின் பொதுமையைக் குறிக்கவே 'பொதுவில் ஆடுகின்ற அரசே' என வள்ளலார் விளித்தாரோ என வியக்க வைக்கிறது கவிதை.

திரைப்படங்களில் காட்சிகளைக் குறைபாடின்றி அப்படியே காட்டுவதுபோல் கவிதைகள் காட்சியை ஓவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன. இக்காட்சி ஓவியங்கள் நீளம், அகலம் ஆகிய ஈரளவைத் திரைகளில் வரையப்பட்ட ஓவியங்கள் போலன்றி நீளம், அகலம், ஆழம் ஆகிய மூவளவை உடைய திரைப்படக் காட்சிகளைப் போன்று அமைந்த கவிதை ஒன்று:

தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகள் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற்றிருக்கும் மாதோ

மயில்கள் அரங்க மேடையில் ஆடுகின்றன. 'தண்டலை மயில்கள்' என்ற சொற்றொடர் நம் நெஞ்சை ஈர்த்து மயில்கள் அருகே அழைத்துச் சென்று அவற்றின் தலைகளைக் கோத வைத்து அத்தலைகளின் குளிர்ச்சியை உணரச் செய்கிறது. கவிதை நம்மை மீண்டும் அரங்க மேடைக்கு வெளியே அழைத்து வந்து மேடைகளின் முகப்பில் குறி விளக்குகள் போல் தாமரைகள் வைக்கப்பட்டிருக்கும் எழிலை 'விளக்கம் தாங்க' என்ற சொற்றொடரால் புலப்படுத்துகிறது. மேகங்கள் முழவொலி செய்கின்றன என்பதைக் கொண்டல்கள் முழவின் ஏங்க' என்று சொல்லுகிறது கவிதை. 'ஒலிக்க, இசைக்க', அதிர போன்ற சொற்களைத் தவிர்த்து 'ஏங்க' என்ற சரியான சொல்லால் முழவின் ஒலியையே கேட்கச் செய்கிறது இக்கவிதை. நோக்க என்ற பொருள் பொதிந்த சொல்லால் நடனத்தைக் கண்டு விளங்கிக் கொண்டு குவளை மலர்கள் சுவைக்கும் நயமும் 'காட்ட' என்ற சொல்லால் எழும்பி எழும்பித் திரையிட்டு மறைத்தும் பின் திரை விலக்கித் துலக்கியும்; அலைகள் நடனத்தைக் காட்சிப்படுத்தும் செயல்திறனும் தெளிவாகின்றன. அதேபோல் வண்டுகள் ரீங்காரமிட என்று சொல்லாமல் பாட என்றதன் மூலம் நடனத்துக்கேற்ற பொருளுள்ள பாடலை ஒரு பாடகர் பாடுவதைப் போன்ற நிகழ்ச்சியை இக்கவிதை புலப்படுத்துகிறது.

பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வராமையால் ஏங்கும் தலைவி தோழியிடம் புலம்புகிறாள்.

"ஊர் ஓசை அடங்கி விட்டது. என்னைக் கொல்லும் நள்ளிரவு நெருங்க நெருங்க என்னுள் பொங்கும் காமம் கடலைக் காட்டிலும் பெருகிக் கரைமீறி ஓடும். நான் இப்படி அல்லற்படும்போது என் நன்நெஞ்சு இருக்கின்றதே, அது என்ன செய்கிறது தெரியுமா? எனக்கும் உனக்கும் அடங்காது வேறெங்கோ செல்கிறது. காட்டின் இருண்ட வழியில் ஓடும் சிறிய சுனையில் பூத்த குவளை மலர்களை வண்டு மொய்க்கும்படிஅணிந்து யானை முதுகில் உள்ள கயிற்றுத் தழும்பு போல் பாறைகளிடையே ஏற்பட்ட சிறிய பாதையில் மழை பெய்து ஓய்ந்த பிறகு நீர் வடிந்து செல்ல அரிதாயிருக்கும் குறுகிய பாதையில் இருட்டில் நடந்துவரும் என் தலைவன் அடியெடுத்து வைக்குமிடம் தோறும் சென்று அந்தத் தளரடி தாங்குவதற்காகக் கிடக்கிறது. இதில் அது (எனது நெஞ்சு) என்ன பயன் கண்டது சொல் தோழி!"

தலைவியின் அகவுணர்வைக் கபிலர் உணர்த்திய விதத்தைத் தம் குறிப்பேட்டில் குறித்த விதம் மிகவும் அருமை.

மரபும் புதுமையும்

இன்று கவிதைத் துறையில் மரபும் புதுமையும் முரண்பட்டு நிற்பதாக ஒரு நம்பிக்கை வளர்ந்து வருகிறது. அப்படி ஒரு முரண்பாடு உண்மையிலேயே இருப்பதாகத் தெரியவில்லை. எப்படி இருக்கக்கூடும் என்றும் புரியவில்லை. புதுமைகளுக்கு இடம் தராமல் அவற்றோடு மல்லுக்கு நின்றே மரபெதுவும் வென்றதில்லை. மரபுகள் அனைத்தையும் ஒழித்துவிட்டு ஒரு புதுமை தானே முளைத்ததாக வரலாறும் இல்லை. அறிவியலுக்கும் இது. ஐசக் நியூட்டன் கட்டுக்கோப்புடன் அமைத்துச் சென்ற பொருண்மை மரபின் குறைபாடுகளைச் செப்பனிடும் முயற்சியே ஐன்ஸ்டினின் 'சார்நிலை கூற்று' என்ற புதுவிரிவுக்கு வழிகோலியது. நாளடைவில் ஐன்ஸ்டீன் மரபு சார்ந்தவராவும் மரபிலிருந்து விடுபடாதவராகவும்

துளிப்பொருண்மை வாதிகளான நீல்ஸபோர் போன்றவர்களால் குற்றம் சாட்டப்பட்டார். எனவே மரபின் ஒவ்வொரு பிரிவும் ஒரு புதுமையாக வரவேற்கப்படும். காலச்செலவில் ஒவ்வொரு புதுமையும் மரபுக் குதிரில் விழுந்து மங்கிப் போவதும் வரலாற்று நிகழ்ச்சிகள்.

சுவை புதிது: பொருள் புதிது: வளம் புதிது

என்றெல்லாம் தன் கவிதைகளை அறிமுகப்படுத்திய பாரதி

கம்பன் இசைத்த காவியம் நான்

என்றும் பாடியுள்ளது எண்ணிப் பார்க்கப்பட வேண்டியது.

மரபுக்கும் புதுமைக்கும் நிலைத்த முரண்பாடு கிடையாது. இன்றைய மருமகள் நாளைய மாமியார் என்பது போலத்தான். இருந்தாலும் இன்றைய புதுக்கவிதை இயக்கம் கவிதைக்குச் சில புதிய பிரிவுகளை வகுத்துக் கொடுத்துள்ளது உண்மை. வெறும் சொற் பெருக்காய் எதுகை–மோனைக் குவியலாய்த் துதிகளாய் இருபொருள் சொல் விளையாடல்கள் நிலைதாழ்ந்து போயிருந்த கவிதையை மீண்டும் தலைநிமிரச் செய்த பாரதிக்குப் பின் இன்னும் தீவிரமாக இந்த மீட்புப் பணியைச் செய்ய வேண்டும் என்ற வேட்கையும் வேகமும் பிச்சமூர்த்தி போன்ற ஒரு சிலரிடம் வெளிப்பட்டுப் புதுக்கவிதை இயக்கத்திற்கு உண்மையிலேயே ஒரு புதுப்பொலிவு கொடுத்தன.

அலைபடு நிழலில் பிம்பம் தெரியுமா
மணல் கூண்டில் கிளி வந்து நுழையுமா
உள்ளத்தின் வேட்கை வார்த்தையில் தோணுமா
ஆ ஆசை அழைத்தால் போதுமா
அழகென்ன மீனா
ஓசையின் தூண்டிலில் சிக்குமா

ஓசை கடந்த கவிதை படைக்கும் வேட்கையை ஓசைத் தூண்டிலில் சிக்க வைத்துவிட்டார் பிச்சமூர்த்தி. 'உஷை' என்ற கவிதையில் பிச்சமூர்த்தி ஓசை எப்படி உதவியுள்ளது என்பதைக் கீழ்வரும் வரிகள் தெளிவு செய்கின்றன.

கிழக்கென்னும் அரங்கத்தில்
உஷை வந்து நின்றாள்
செம்பட்டுச் சல்லடம்
சொகுசாக உடுத்தி
செம்மலர்க் கூடையை
இடுப்பில் இடுக்கி
சதங்கைகள் சிலம்ப
கீழ்வானில் முளைத்தாள்

புதுக்கவிதை இயக்கத்தின் நல்ல விளைவுகளுள் ஒன்று, கவிதை இயல் பற்றிய ஆய்வு வளர்ந்து விரியத் தொடங்கியது. ஏன் கவிதைகள் எழுதப்படுகின்றன? கவிதைக்கும் கவிஞனுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது? கவிதை எப்படி மற்ற வெளிப்பாடுகளில் இருந்து வேறுபடுகிறது? இப்படிப்பட்ட கேள்விகள் பரவலாகத் தொடங்கியுள்ளன. தமிழ் மொழியைப் பொறுத்தவரை இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றே தோன்றுகிறது.

"தமிழில் புதுக்கவிதையின் அவசியத்தைப் பற்றிய வரையில் எனக்குச் சந்தேகமில்லை. மரபுக்கவிதை செத்துவிட்டது. புதுக்கவிதை தோன்றியே தீரும். ஆனால் அது எந்த உருவம் எடுக்கும் என்று இப்போது யாரும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது."

மு.மேத்தா வின் வரிகள்:

வைகறைப் பொழுதுக்கு
வார்த்தைத் தவமிருக்கும்
வானம் பாடிகளே ஓ
வானம் பாடிகளே
இந்த
பூமி உருண்டையை
புரட்டிவிடக் கூடிய
நெம்புகோல் கவிதையை
உங்களில்
யார் பாடப் போகிறார்கள் (கண்ணீர் பூக்கள்)

இந்தக் கேள்வி இன்று வரை விடை அளிக்கப் படாமலேயே இருக்கிறது. புதுக்கவிதையில் இன்னும் அப்படிப்பட்ட 'நெம்புகோல' கவிதை பாடப் படவே இல்லை. இனியேனும் வருமா காத்திருக்கலாமே. இதற்கு விடையாகவே வானவில்லாரின் கவிதை தோன்றிற்று எனலாம்.

அகத்தியன் கண்ட அமுத மொழி, அமிழ்தினும் இனியமொழி. உலகத்தின் முதல்மொழி, தரணி போற்றும் நம்மொழி, இறைவனே இறங்கி வந்து சங்கம் வைத்த மொழி தமிழ்மொழி. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை மூன்றும் வீறுகொண்ட கம்பீர நடையாய் நாம் வியந்து வாழ்விற்கு வழிகாட்டும் புத்தகமே மின்னல் வெளிச்சம். இதில் தானே வானவில் வெளிச்சம் தந்தது, கழனி ஒன்றே போதுமே உள்ளங்கையில் உலகமே என்ற உழவனின் தன்னம்பிக்கையையும் கடந்து கவிதை படைத்தால் உலகம் உன் கையில் என்ற வாக்கை உறுதிப்படுத்தியவர். அவருடைய பன்முக ஆளுமையால் பலருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.

❖

கவிஞர் ரவியின் மக்கள் பாடும் பாட்டும் ''மனம்'' மேலாண்மையும்

•

முனைவர்.மா.ஜாஸ்மின் பிரியா
தமிழ்த்துறைத்தலைவர் ஏ.ஜே.கே கலை அறிவியல் கல்லூரி
கோவை

வாய்மொழிப்பாடல்களில் கதைப்பாடல்கள்; மற்றும் மனதின் பாடல்களின் தன்மையும் பயன்பாடும்பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது. இதன்கண் சிறப்பாகக் குறிக்கக்கூடிய மக்கள் பாடல்களில் இசையமைதி பற்றியதாகும். மிகவும் எளிமையான, பேச்சு வழக்கு நடையில் வானவில் ரவி பாடல்கள் அமைந்துள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும். "ஓ துனியா கே ரக்வாலே" என்று நௌஷத் இசையில் தர்பாரி கானடா ராகத்தில் முஹமது ரஃபி பாடியதை ரசித்தார்கள் மக்கள். இதேப் போன்று என்.எஸ்.கிருஷ்ணன் "ஆண்டிப் பண்டாரம் உன்னை வேண்டிக்கொண்டேனே" என இங்குக் கிராம மக்கள் பாடும் இசையை ஒத்தே பாடிக்காட்டினார். மக்கள் பாடும் பாடல்களுக்கு இசை உண்டு மற்றும் சமுதாய கண்ணோட்டமும் உண்டு என்பதை இக்கட்டுரைக் கோடிட்டுக் காட்டுகிறது. மக்கள் பாடல்களில் சமூக ஆய்வுக்கும், மனதின் மேலாண்மைக்கும், இலக்கியத் திறனாய்வுக்கும் நிறைய வாய்ப்புள்ளது என்பதை மக்கள் பாடும் பாட்டு என்ற இந்நூல் அதன் அடிப்படை நிலையில் வைத்துக்காட்டுகிறது. நாட்டுப்புறப்பாடல்கள் போலவே மக்கள் பாடும் பாட்டும் நாகரிகம், பண்பாட்டைச் சான்றாகக் கொண்டு அமைந்துள்ளது.

மானிடவியல், மொழியியல், இசை வரலாறு, சமூக வரலாறு ஆகிய பல துறைகளோடு தொடர்புப்படுத்தி பாடப்பட்டுள்ளது. மக்கள் பாடும் பாட்டு நூலில் அத்தொடர்புகளை அறிந்து கொள்ளலாம்.; வாழ்வியலையும்;, மக்களின் மனக்குமுறலையும் முழுமையாக அறிந்து கொள்ள முடிகிறது. எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய ஆட்சி முறைகளையும், லஞ்சம், ஊழல் பெருச்சாளி போன்றவற்றை எவ்வித ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாக இவரின் பாடல்கள் எடுத்துரைக்கிறது. பாரதிக்குப் பிறகு வியந்து பாராட்டப்படவேண்டிய அளவுக்குக் பாடல்கள் எழுதியுள்ள கவிஞர் ரவியின் திறமை வியப்பிற்குரிய ஒன்றாகும். கவிஞர் ரவியின் பாடல்கள் சமுதாய அவலங்களை மட்டும் சாடவில்லை. அவை ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான நம்பிக்கையும் ஊட்டுகின்றன. உழைப்பையம், விடாமுயற்சியையும், தன்னம்பிக்கையும் அறிவுறுத்துகின்றன. மனிதன் பிறப்புத் தொடங்கி இறப்பு வரை அமைந்த பல்வேறு பாடுகள் நிகழ்ச்சிகள் இசை ஆகியவற்றில் பல்வேறு வகையான பாடல்கள் இடம்பெறுகின்றன.

கவிஞரின் மக்கள் பாடும் பாட்டில் சாதிக் கட்டுப்பாடுகள், இயற்கையும், இறைவனும், மனம், பலவிதமான இசைக்கருவிகள், வாக்களிப்போர் படும் பாடு, மனிதம், காதல், தமிழ் மொழியின் இனிமை, பாரதியின் வீரம், பழையச் சுவடி போன்ற அறுசுவைகளும் நிரம்பியுள்ளன. வயல்புறத்திலும், தொழில்கூடங்களிலும், வீடுகளிலும், மேடைகளிலும் பலவகையான மக்கள் பாடும் பாடல்களில் சீர்த்திருத்தச் சிந்தனைகள், தன்னம்பிக்கை முயற்சி ஊக்கம் உழைப்பு போன்ற பாடுபொருள்கள் அமையப்பெற்று 243 பாடல்கள் வாழ்வுக்கு வலுவூட்டி மனிதனைத் தலைநிமிரச் செய்யும் சிறந்த படைப்புகள் எனலாம். சமூகத்தின்கண் நிகழும் ஒட்டுமொத்தமான அநீதிகளை எதிர்த்து நன்மைக்காகக் குரல் கொடுக்கின்றன. அதே நேரத்தில் தனிமனித ஒழுங்கீனங்களையும் களைய முற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாசில்லாத எண்ணங்கள் மலர மனதை ஆளக்கூடிய புதிய சக்தி நிறைய வேண்டும் என்று மனமேலாண்மையைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கருத்தும் காட்சியும் ஒரு சேரக் சுவைதரும் இடங்கள் இந்நூலில் மின்னொளிப்போல் மிளிருகின்றன. கவிஞர் அனைத்து வகையான மக்களின் அனுபவங்களையும் தம் பாடல்களில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

இறைவனும் இசையும்

இசையில் இறைவனை அழைக்கும் பாடலாக
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன் - ஒரு
கோணச் சிந்து பாடச் சொல்லி மேடை யமைச்சேன் -எங்
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன் நாடி
நரம்பெல்லாம் உயிர் ஓசை எழுப்பும்
நாதத்துல ஒன்னக் கொஞ்சங் கண்டு புடிச்சேன்
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன்

என்ற இந்தப்பாடல் இறைவனும் இசையும் ஒன்றே என்பதைச்சுட்டிக்காட்டுகிறது. இலக்கியச் செழுமைக்கும், பக்திக்கும் உதாரணமாக போற்றப்படுவது திருப்பாவை, நாச்சியார் திருமொழி. இந்த இரண்டு நூல்களையும் படித்தால் தெய்வீகத் தன்மையையும், ஞானத்தையும் உணர முடியும். அந்த வகையில் கவிஞர் ரவியின் இறைவனை அழைக்கும் பாடலில் தெய்வீகத் தன்மையை உணர முடிகிறது. உதாரணம்

வேதங்களாட, மிகு ஆகமம் ஆடக்
கீதங்களாடக், கிளரண்டமேழுமாடக்
பூதங்களாடப் புவனம் முழுதுமாட
நாதங்கொண்டு ஆடினான் ஞானானந்தக் கூத்தே

என்பார் திருமூலர்.

நாதவடிவினன் இறைவன். 'நாதம்' என்பதற்கு இன்னொலியென்றும், தலைவனென்றும் பொருள். உலகினைப்படைத்துக்காக்கும் இறைவனே, இன்னொலியாக, இசையாக விளங்குகிறான். தான் வணங்கும் ஒவ்வொரு தெய்வ வடிவத்துடனும், ஒரு இசைக் கருவியைச் சேர்த்தே வழிபட்டான் மனிதன். அந்த இசைக்கருவியான நாதத்தின் இசையில் இறைவனைக் காண்பதாகக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

பாபா சேவடிகள் துணையே என்ற பாடலில் இறைவனை வணங்கும் முறைகளாக கண்வெறி போலிரு கண்கள் சுழற்றிக் கற்பூரம் காட்டி இறைவனின் பொற்பாதம் காணுகிறோம். ஆசைகள் அத்தனையும் களைந்து உனக்கு ஆரத்தி ஏந்துகிறோம். பாரமான யாவற்றையும் உன் மேல் போட்டு விடுகிறோம். உன்னை மனதார ஹரி நாராயணா என்று அழைக்கிறோம். இருள் நிறைந்த இரவினில் உயிர் ஊடுருவும் ஒளியாகவும், அனைத்து பாவங்களையும் தீர்க்கும் காருண்யவனாகவும்,

வற்றாத ஜீவநதியாக இறைவன் உள்ளான் என்ற கருத்தை ஆசிரியர் தம் பாடல் வாயிலாக தெரிவிக்கிறார். நாதப்ர வாகத்தில் நனையவைத்து ஹரி நாராயணா என்றும், நர நாராயணா என்றும் இறைவனை நாராயணா, நாராயணா என்று மனதார விளிக்கிறார்.

திருப்பாவையில் ஆண்டாள் இறைவனை பேரரவத்துடன் விளிக்கிறாள்.

புள்ளும் சிலம்பினகான், புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய!; எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும், யோகிகளும்
மெள;ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

என்று இறைவனை அரி அரி என்ற பேரரவத்துடனும், பக்தியுடன் வணங்கும்போது அனைத்து நன்மைகளும் கிடைக்கும். ஹரி நாராயணா என்று மனதின் ஆழத்திலிருந்து கூப்பிடும் போது அனைத்து சூழ்நிலைகளிலும் இறைவன் துணையிருப்பான் என்ற கருத்தை இரண்டு பாடல்களிலும் ஒப்பிட்டு காண முடிகிறது.

இறைவனின் குணங்களாக கவிஞர் தம் பாடலில் புனிதமாகவும், மனம் இரக்கம் உள்ளவனாகவும், கருணை மிக்கவனாகவும், ஒளி வீசும் சுடராகவும், எளிமையாகவும், மாயை, மரணம் இல்லாத இறைவனே இம்மானிட உலகத்திற்கு அனைத்து வெற்றிகளையும். அருளையும் அருள்வாயாக என்று இறைவனை மனம் உருக வேண்டுகிறார்.

மற்றுமொரு வேண்டுதலாக இறைவனிடம் பாதை தவறாமல் உண்மையான வாழ்க்கை வாழ, உறுதி, கள்ளம் கடபமற்ற மனம், மாயையான பாச வலையில் சிக்கிச் சுழலாமல், அன்பும், இன்பமும் தயவையும் தந்து, என் நினைவில், உணர்வில் வருவாயாக என்று வேண்டுதலாக இறைவன் பாதத்தில் நிற்கிறார் ஆசிரியர்.

சாயிபாபாவை பற்றி பக்தியோடு பாடலைப்பாடி யிருக்கிறார் கவிஞர். மாமுனி, பார்வையில் பக்கிரி, சீரடி என்ற

ஊரடி, வெள்ளை தாடி, கந்தல் ஆடை, கள்ளம் கபடமற்ற மனது, புனிதமே மனித வடிவு, எளிமை என்னும் தெளிவு, இதயம் முழுதும் நிறைந்த நீ உண்மையில் தேவ தூதன் உனக்கு மாயை இல்லை, மரணம் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் வெற்றியைத்தா என்று சாயிபாபாவிடம் வேண்டுகிறார்.

காதலும் தேவசுகமும்

தேன்
அள்ளி இரைத்தது தென்றலில்லை -உன்
அன்பு முகம் -நீ
சொல்லிக் கொடுத்தது காதலில்லை - அது
தேவ சுகம்

காதலுக்கும், தேவ சுகத்திற்கும் உள்ள வேற்றுமையையும் நாம் இறைவன் மீது வைத்துள்ள அன்பு தேவசுகம் என்று குறிப்பிடுகிறார்.

சரவண பவவெனும் மந்திரத்தில் பழனிவேல் முருகன்

உலகெலாம் என்ற ஒரு சொல்லில் பெரியபுராணக் காவியமே உதித்தது. அதுப்போன்று

சபரி மலைக்குச் சென்று ஐயப்ப சாமியை வணங்கிவிட்டு பம்பைக் கரையில் கவிஞர் நடந்து வரும்போது யாரோ ஒலிபெருக்கியில் என்ன ராஜகோபால் அண்ணாச்சி வரலியா? அண்ணாச்சி பழனிலே இருக்கார் என்ற ஒரு சொல் பாடலாக உருவெடுத்துள்ளது. அந்தப் பாடலில் அண்ணாச்சி பழனியிலே, தம்பி அத்வானக் காட்டினிலே நாம் அவர்களை ஒன்றாக வைத்துக் கொண்டாடுவோம், ரெண்டு கண்ணாக வீட்டினிலே என்று பாடுகிறார். ஐயப்பன், முருகன் கதையை பாடலாக வடிவமைத்திருக்கிறார் கவிஞர்.

புள்ளி மானத் தேடி வேட்டைக்குப் போயி
வள்ளிமானக் கொண்டு வந்தான் - அண்ணங்காரன்
புலிப்பால் தேடிக் காட்டுக்குப் போயி
புலிமேல் ஏறிவந்தான் - சின்னத்தம்பி
கோவத்தி லேவெறுங் கோவணத் தோடே
குன்றேறி நின்று கொண்டான் - அண்ணங்காரன்
யோகத்தி லேதவக் கோலத்தில் சபரி

மலைமேல் அமர்ந்துகொண்டான் - மணிகண்டன்
சரவண பவனெனும் மந்திரத் தில்வேத
சாரம் உரைத்திடுவான் - வேதாந்த
சரணமென் றேமனம் உருகி யழைத்தால்
தரிசனம் தந்திடுவான் - ஐயப்பன்
'தத்வமஸி' என்பான்

ஐயப்பன் நுழைவாசலில் 'தத்வமஸி' என எழுதப்பட்டிருக்கும். இதற்கு நீயே அதுவாக இருக்கிறாய் என பொருள். இவ்வாறு இறைவனை மனமுருகி யார் அழைத்தாலும் தரிசனம் தருவான் என்ற பொருள் இப்பாட்டின் வழிப்புலப்படுகிறது. இறைவன் இல்லையேல் எந்த அணுவும் அசையாது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இசையில் அசையும் இமையம்

இமையம் கூட இசையில் அசையுமாம். இசையில் இளகிடாத இதயம் இருக்க முடியாது. மக்கள் அனைவரும் சாந்தமாய் வாழ சங்கீதம் ஒன்றுதான் வழி என்று மனது அமைதியாய் இருக்க இசையை கேளுங்கள் என்கிறார் கவிஞர்.

இசைக்கருவி மேல் கொண்;ட கவிஞனின் காதல்
கோடிக் குயில்கள் ஒருசேரக் கூடி வந்து குலவினால் எழும் இசை

கார்த்திகை தீபங்கள் ஆடிக்களித்திட ராகங்கள் நான் தருவேன் என்கிறார். ஒவ்வொரு மொட்டுக்கும் பாட்டிசைப்பேன். பனி முத்துக்களுக்குப் பாட்டிசைப்பேன். செந்தழலில் வீணையை மீட்டும் ஒரே கவிஞர் நமது மக்கள் கவிஞர் ரவி ஐயா அவர்கள்.

நாதஸ்வர இசை மின்னல் போன்று கண்ணில் சுழலுகிறது, பண்ணமைக்கும் தாகம் நெஞ்சில் பெருகுகிறது, நான் பாட காத்து வந்து தாளம் போட, அந்தக் காற்றில் அத்தனை மரங்களும் ஆடணும், சிட்டுக்குருவிக்கூட்டம் கூடும்போது நான் பாடணும், நான் பாடும் பாட்டில் வானமயில் சிக்கித்தடு மாறணும் என்று இசை மீது தான் கொண்ட காதலை விவரிக்கிறார் கவிஞர்.; மேளங்கள் கொட்ட, மின்னல்கள் தாளத்துடன் கூத்தாட, குளம் குட்டைகளில் தவளைகள் கச்சேரி கட்ட என்று இயற்கைக்கும் இசை உண்டு என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

மழை தெய்வத்திற்குப் பாடல்

மனிதர் அனைவருக்கும் இயற்கை வாழ்வு தருகிறது. இன்னார் இனியார் என இனம் பிரித்து அது வஞ்சிப்பது இல்லை. ஆயின் மனிதர் ஒரு சிலரின் வஞ்சனையும் வல்லாண்மையும் இயற்கையின் இயல்பை ஒடுக்கி, ஒடுக்கி தீமையை விளக்குகின்றன. இதனால் சமுதாயத்தில் மக்;கள் பயனின்றி வறுமையின் வாழ்வு உயருகிறது. கழைக்கூத்தாடியின் வாழ்வை கவிஞர் தம் பாடலில் குறிப்பிடும் போதும், மழையை மகமாயி என்று அழைத்து மனமுருக வேண்டும்போதும்

வயத்துப் பொழப்புக் காகக்
கயத்து மேல நடக்கும்
கழக்கூத் தாடி கஞ்சி கேக்குறான்
மழைக்கூத் தாடு மகமாயி

இதில் கழக்கூத்தாடியின் வறுமை வாழும் வாழ்க்கைக்குக் கதியற்ற இந்தியக் குடிமகனின் தரித்திர நிலையை இந்தப்பாடலில் சிந்தனையைத் தொடும் வகையில் சித்தரித்துள்ளார் கவிஞர்.

தமிழின் தொன்மை

பாடல்களின் பெயர்கள் ஓலைச்சுவடியிலே பெரும்பாலும் தொடக்கத்தில் அமைந்திருக்கும். பண்டையக் காலங்களில் ஓலைச்சுவடிகளில் பாடல்கள் எழுதப்பட்டன. தமிழின் தொன்மைக்கு ஓலைச்சுவடிகள் மிகப்பெரும் சான்றாக விளங்குகின்றன. இதை வளரும் தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில்

பழைய சுவடியில் புதிய கவிதைகள்
கணம்தோறும் நீ எழுதுகிறாய்- நீ
எழுத எழுத இச்சுவடியிலே
விழுபவை வெறும் சொற்களா - இல்லை
விரியும் வெளியிலே விளங்கும் விண்மீன் கற்களா

(பக்கம் 231)

என்று தன் கவிதையில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பழைய சுவடியில் புதுமையைக் காண்கிறார் ஆசிரியர்.

மக்கள் பாடும் பாட்டில் மனம் மேலாண்மை

மனத்துணிவைப் பற்றி ஆசிரியர் தம் பாடலில் குறிப்பிடும்பொழுது

நதியின் ஓட்டம் போலே - வாழ்;க்கை
நடக்கும் மேடு பள்ளங்களாலே
எதிர்த்துச் செல்வது கடினம்- இறைவன்
தூதர்களால் மட்டும் அது முடியும்

மனதின் நினைவுகள் குரங்குப் போன்றது. ஏதேதோ சிந்தனைகள் மனதில் அலைமோதும். எண்ணங்களில் சிதறல்கள்; உண்டு. மனது தான் எடுக்கும் முடிவை எண்ணி தனக்குள்ளே குமைந்து கொள்ளும் என்ற கருத்தைத் தம் கவிதையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

ஏதேதோ எண்ணிப் பார்க்கும்
எங்கெங்கோ பறந்து போகும்
தீதாகும் நன்றுமாகும்
திடுக்கென்று நின்று போகும்

மனதின் பல படிநிலைகளாக அழுகை, அன்பு, பாசம், காதல், நட்பு, இருள், மின்னல், ஒளி இவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்றாக இணைந்திருக்கும் சேர்க்கைகளாக உள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்த அனைத்து குணங்களும் மனித வாழ்வில் ஒரு பகுதியாக உள்ளது. எனவே மனதை ஒரே நிலையில் வைத்து எண்ணமுடியவில்லை.

பட்டணத்துச் சாமிவந்து
பற்றவைத்து தீயடா
பத்ரகிரியார் மயங்;கிப்
பற்றுவைத்த நாயடா
பட்டுப்பட்டும் தேறவில்லை
பாழுமனப் பேயடா (பக்கம் 26)

என மனதைப் பாழுமனப் பேய் என்று குறிப்பிடுகிறார்.

அன்றலர்ந்த தாமரை சித்திரத்த தாமரை

கம்பர் சித்திரத்துச் செந்தாமரையை ஒப்பிட்டு நோக்கிச் சீதை வருந்தினாள் என்பதாக இவ்வாறு பாடல் பாடல் பாடியுள்ளார்.

‘மெய்த்திருப்பதம் மேவு’ என்ற போதினும்,
‘இத் திருத்துறந்து ஏகு’ என்ற போதினும்,
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும்முகத்தினை உன்னுவாள்.

அரசச் செல்வத்தைத் துறந்து காட்டிற்குப் போவாயாக என்ற சொன்னபோதும் இருந்ததாம். இந்த சாந்த நிலைக்குத்தான் சித்திரத்துச் செந்தாமரையை ஒப்பிட்டு நோக்கிச் சீதை வருந்தினாள் என்பதாகக் கம்பர் பாடியுள்ளார். கம்பரைப் பின்பற்றியே கவிஞர் ரவி அவர்களும்

அன்றலர்ந்த தாமரை வாடாமல் இல்லையே - வெறும்
சித்திரத்துத் தாமரைக்கோ வாசமில்லையே - கம்பன்
சித்திரத்துத் தாமரைக்கு வாசமுண்டு வாடாது - என்
சிந்தையிந்தப் ப10வையின்றி வேறெதுவும் சூடாது

தாமரை பகலில் மலரும். இரவில் குவியும். ஓவியத் தாமரை எப்போதும் ஒருபடித்தாக இருக்கும். ஓவியத் தாமரை போன்றது இராமன் முகம். இந்தச் செய்தி படிப்பதற்கு மிகவும் சுவை மிகுந்ததாக உள்ளது. அமைதிச் சுவைக்கும், இயற்கையின் இனிமைக்கும் இதனினும் வேறு எடுத்துக் காட்டு கிட்டாது.

மனித நேயமும் இனிமையான தமிழும்

இனம், மதம், மொழி, நாடு போன்ற பல்வேறு வேற்றுமைகளையெல்லாம் கடந்து உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் சகோதரராகப்ப பழகும் உணர்வு வேண்டும். ஆனால் இன்றைய சமுதயாத்தில் சாதியாலும், மதத்தாலும், பணத்தாலும் மனிதநேயம் மறைந்து பிரிவினைகள் தோன்றி அமைதி குலைகின்றன.

ஜாதியில்லை சமயமில்லை சத்தியத்திலே
ஆணும் பெண்ணும் சரிசமம் சமத்துவத்திலே
ஓதும் மந்திரங்களை
மனம் கடந்ததே
உண்மை யாக மட்டும் நெஞ்சில்
ஒளி படர்ந்ததே

இந்த பூமியில் பிறந்தவர் அனைவரும் சமநிறை உடையவர்கள் ஆவர். ஏற்றத்தாழ்வு, தரக்குறைவாக மதித்தல், கீழ்மைப்படுத்தல்,

அடிமைப்படுத்துதல் போன்ற பல்வேறான தீய கூறுகள் அனைத்தும் மனித நேயத்திற்கு எதிரானவை. மனிதனை மனிதனாக நினைக்கும் மனிதநேயம் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் மகிழ்ச்சி நிலைக்கும் என்று தன் பாடல் வரிகள் மூலமாக உணர்த்துகிறார்.

"இனிமையான தமிழிலே எளிமையான சொற்களில், இதயம் குளிரப் பேசலாம் எழுதலாம் பழகலாம், மனிதர் நோகப் பேசும் வழக்கம் மறக்க வேண்டும் மானுடா" என்று தமிழ்மொழிக்குப் புதுமலர்ச்சியும், புதிய வேகமும் புதிய சிந்தனைகளும் கொடுத்து மனித நேயத்தையும் சுட்டிக்காட்டி தீய தன்னலத்தை வெறுத்துத் தள்ளி கயமை சாடும் கருத்துகளை ஏற்திப் புறந்தள்ள அறிவுறுத்துகிறார் கவிஞர்.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

என்று பாட்டுத்திறத்தை பயன்படுத்தி தமிழின் இனிமையை எடுத்துரைத்து தமிழை உயிராக உருக்கிய பாரதிதாசனைப் போன்றே கவிஞர் அவர்களும் மந்திரத் தமிழை

கோபுரம் மீது நின்று கொண்டு
கோடி முறை சொல்வேன் - நம்
தமிழ் தமிழ் தமிழ் அது மந்திரத் தமிழ் - பிர
மாபுரம் மேவிய பெம்மான் நமக்குத்
தமிழ் தமிழ் என்றும் அது சுந்தரத் தமிழ்
மந்திரத் தமிழ்

என்று தமிழுக்கம் தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும் தமிழ் பணியை செய்து வருகிறார்.

தமிழின் இனிமையை செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்ற பாடல் வரிகள் இன்றளவும் நம் காதுகளில் தேனினை வார்த்துக் கொண்டே இருக்கிறது.

வேசி தாசியை மதிக்கும் மனிதம்

விலை மகளிர் நம் சமுதாயத்தில் தொன்று தொட்டு இன்றளவும் இருந்து வருகின்றனர். சங்க இலக்கியத்தில் வரும் 'பரத்தை' எனும் சொல் விலைமகளின் பழைய பெயராக சமுதாயத்தில் வழங்கி வந்திருக்கிறது.

பெண்கள் குறுகிய காலத்தில் அதிகப் பணம் சம்பாதிக்கும் நோக்கமாகவும் வறுமையின் காரணமாகவும், கணவனை இழந்த கைம்பெண் தாகத்தாலும் விபச்சாரம் என்ற வலையில் தள்ளப்படுகின்றனர். அவர்கள் எத்தகைய சூழ்நிலையில் விபச்சாரத்தை மேற்கொண்டாலும் அவர்கள் வாழ்வு அவலத்திற்கு உரியதாகும். இருப்பினும் கவிஞர் மனித நேயத்தின் ஒரு பகுதியாக வேசி தாசியை மதிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

வேதி தாசி யாவரும் நம்
அன்னை, தங்கை பிள்ளையே
வேறு தொழில்கள் போலவே - இதில்
மேன்னை கீழ்மை இல்லையே
யோசிக்காமல் பேசிவிட்டுக்
கலங்கும் நெஞ்சம் ஏனடா
யாவரையும் மதிக்கும் வழக்கம்
பழக வேண்டும் மானுடா

துசி படிந்த சிந்தையைத்
தூய்மை செய்து கொள்ளடா
துளசி மாடச் சுடரை நெஞ்சில்
கோலம் போட்டு வையடா
மாசில்லாத எண்ணங்கள்
மலர வேண்டும் தோழனே
மனமெலாம் ஒரு புதிய சக்தி
நிறைய வேண்டும் தோழியே

என்று மாசில்லாத எண்ணங்கள் மலர மனதை ஆளக்கூடிய புதிய சக்தி நிறைய வேண்டும் என்று மனமேலாண்மையைப் பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கூத்து

அரசியல் வாதிகள் பலர் மிகுந்த சுயநலம் கொண்டு தங்கள் கடமையை மறந்து மக்களுக்குத் தீங்கிழைத்து வருகின்றனர்

என்பது பொதுவான கருத்தாகும். அரசியல் வாதிகள் பொறுப்பில்லாமலும், ஊழல், லஞ்சம் போன்றவற்றில் வீழ்ந்து கிடக்கின்றனர். இதனை

கூத்தாடி அரசியலாம்
கோமாளி நடிகர்களாம்
ஆத்தாடி இவுங்களையா
ஓட்டுப் போட்டு அனுப்பி வச்சோம்
யாராள வேணுமினு
மக்கள் முடிவு செய்யணுமா
ஏராள மாப்பணத்தை
எறைக்கிறவன் ஆளணுமா
மக்களாட்சி மக்களாட்சி
மானங்கெட்ட கந்தலாட்சி
அக்கிரமக் கூட்டம் நம்மை
ஆளுவதே பழகிப் போச்சு

என்று அரசியல்வாதிகளின் போலி வேடத்தை ஈவு இரக்கமின்றி கிழிக்கும் கூர்வாளாக பாடல் செயல்படுவதைக் காணலாம். இன்றைய அரசியல் வாதிகள் பலரும் மேடையில் பேசும் பேச்சும், கொடுக்கும் வாக்குறுதியும் நிறைவேற்றுவதில்லை. இது அரசியல் ஆட்சியில் நிலவும் ஒரு போலித்தனமாக போக்கு.

மக்களுக்குத் துரோகம் செஞ்சா
மன்னிக்கவே மாட்டோம் - அட
பணத்துக் காகச் சோரம் போனா - உன்
பக்கம் திரும்ப மாட்டோம்

என்னும் பாடல் இன்றைய போலி அரசியல்வாதிகளைச் சுருக்கென்று தைக்கும் குண்டூசி முனையாகச் செயல்படுவதை அறியலாம்.

இவருடைய பாடல்கள் மக்கள் மனதில் அரசியல்வாதிகளின் பொய் முகத்தை உணர்த்தி புதிய சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது.

மதுக்கொடுமை

தனி மனித ஒழுக்கம் தான் ஒரு சமுதாயத்தை, உலக அரங்கில் நிலைநறுத்தும். அதிகமான ஒழுக்கமுள்ளவர்கள் மிகுந்த நாடே, அமைதியான, அழகான நாடாக உலகின்

பார்வைக்குப் புலப்படும். மனிதர்கள் தீய ஒழுக்கங்களில் ஈடுபடும் போது அச்சமுதாயம், தலைமுறை வளர்ச்சிக்குன்றிய சமுதாயமாக மாறிவிடும். உலக மொழிகளிலேயே தமிழ் இலக்கியத்தில் மட்டும் தான் மக்களை நல்வழிப்படுத்தவும் மனந்திரும்பி வாழவும் நீதி நூல்கள் என்னும் தனித்துறை தோன்றி வளர்;ந்துள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் மக்கள் பல்வேறு தீய வழிகளைப்பின்பற்றி மனித பண்புகளை இழந்து வருகின்றனர். சூதாட்டம், புகைபிடித்தல், மது அருந்துதல் முதலிய தீய பழக்கங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

சாராயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே - ஒரு
பேராயம் கூட்டுங்க பெரியோர்களே
தோராய மாற்றங்கள் தோதில்லை - நல்லா
ஆராய வேணுமிதன் அடிப்படையை
வேரோடு சாய்க்கணும் சாராயத்தை - வெட்டி
வேதாந்தம் பேசியொரு லாபமில்லை
நாரோடு பூச்சேந்து நாறுவதா
நல்லவரும் சாக்கடையில் வீழ்வதா

என்று நீதி இலக்கியத்தை ஒட்டி ஒழுக்கச் சீர்கேட்டை மையமாக வைத்துப் இந்தப் பாடலை புனைந்துள்ளார். சாராயத்தை அடியோடு சாய்க்கணும் இல்லையென்றால் குடும்பமே வேரோடு சாய்ந்து விடும் என்று எச்சரிக்கிறார் கவிஞர். அதுமட்டுமல்லாமல் அரசியல் வாதிகள் நாட்டைச் சுயநல வேட்டைக் காடாய் ஆக்கியுள்ளனர் என்று சாடுகிறார்.

கவிஞர் ரவியின் பாடல்களில் சமுதாய ஒட்டுமொத்தச் சீர்திருத்தச் சிந்தனைகள் உள்ளடக்கமாகக் இருக்கிறது. மனித நேயம், இயற்கை, இசையில் வாழும் இறைவன், மதுவின் கொடுமை, சட்ட அநீதிகள், நம்பிக்கை வார்த்தைகள், வறுமையின் பிடி, வேசியின் இழிவு இவை அனைத்தும் பொதுவான சமுதாயச் சிந்தனையை விதைக்கின்றன.

இவருடைய பாடல்கள் ஒவ்வொரு மனிதனின் மனதிலும், மாற்றத்தைக் கொண்டு வந்து பக்தியின் வாயிலாக நல்ல எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய சிந்தனைகளைத் தூண்டுகின்றன. தொன்றுதொட்டு அழியாத தெய்வீகக் காதல், தமிழின் தொன்மை, இனிமை ஆகியவை இவருடைய பாடல்களில் காணலாம். ஒவ்வொரு பாடலும் பாடுவோருக்கு அழகாகவும்,

ஆழமாகவும், இசையோடு இழைந்த பாடலாக அமைந்து சில நுட்பமான உத்திகளைக் கையாண்டிருக்கிறார். எங்கும் நீக்கமற நிறைந்து யாவற்றையும் இயக்கும் இறைவனிடம் கவிஞர் ரவி அவர்கள் அழுத்தமான பக்தி கொண்டவர். இவரது பக்திப் பாடல்களைப் படிக்கும்போது அருணகிரியார், தாயுமானவர், ஆண்டாள் போன்ற ஞானப் பெருமக்கள் நம் நினைவில் வருவர். நமக்கு தொழில் கவிதை. நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சேராதிருத்தல் நாட்டு மக்கள் நலமுற்று வாழவும் நானிலத்தோர் மேனிலை எய்தவும் பாட்டுத்திறத்தை பயன்படுத்திய பாரதியாரைப் போன்றே கவிஞர் அவர்களும் ஆற்றல் மிகுந்த அருங்கவிஞராக செந்தழலில் வீணையை மீட்டிக் கொண்டே அழகான கருத்தாளமுள்ள பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய மக்கள் பாடும் பாட்டு பயன்தரும் இலக்கியச் செல்வம்.

உசாத்துணை நூல்கள்

1. மக்கள் பாடும் பாட்டு – வானவில் கே.ரவி
2. ஆலயவழிபாட்டில் இசை, இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
3. சங்கம் ஓவிய உரை
4. மேலது – பக்கம் 34, 35
5. தமிழக நாட்டுப்புறவியல் – சரசுவதி வேணுகோபால், தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் , மதுரை –21, தாமரை வெளியீடு, எண் 2, ஆகஸ்ட், 1981, முதற்பதிப்பு

❖

வானவில் கே.ரவியின் மக்கள் பாடும் பாட்டு மதிப்பீடு

•

முனைவர்.த.ஹேமலதா
உதவிப்பேராசிரியர் இதயா மகளிர் கல்லூரி கும்பகோணம்.

ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் ஒரு முன்னனி வழக்கறிஞர்,தமிழிலும் ஆங்கிலத்திலும் நூற்றுக்கணக்கான கவிதைகளும் சிறந்த இலக்கியத் திறனாய்வு நூல்களும் எழுதி வெளியிட்டுள்ள மிகச்சிறந்த கவிஞர்,பெயருக்கு ஏற்றாற்போல பல பரிமாணங்களைக் கொண்ட எழுத்தாளர்.கவிச்சக்கரவர்த்தி கம்பன்,மகாகவி பாரதியார்,தெய்வப்புலவர் திருவள்ளுவர் உள்ளிட்ட தமிழின் அனைத்து கொடைகளையும் ஆராய்ந்தறிந்து கட்டுரைகள், கவிதைகள் பல வடித்தவர்.ஆசிரியர் கே.ரவியின் படைப்புகளில் ஒன்றான தமிழ் இலக்கிய வரலாற்றில் நிகரற்ற ஓர் இடத்தைப் பெற்றிருக்கும் "மக்கள் பாடும் பாட்டு" என்கின்ற பாடல்களடங்கிய தொகுதியினை மதிபீடு செய்துள்ளேன்.

இந்த நூல் தொடக்கமே இறைவணக்கப் பாடல்லோடு தொடங்குவது போல் உள்ளது.இறைவனையே துணையாக அழைக்கும் பாடலாக உள்ளது.ஆசிரியர் அவர்கள் பாடல் தொடக்கத்திற்கான அனுபவத்தைக் கூறி இருப்பது இந்த நூலிற்கு அதிக பெருமை சேர்ப்பதாக உள்ளது. அவருடைய

அனுபவத்தில் இசைக்கவி ரமணன் அவர்கள் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பொதிகை தொலைக்காட்சியில் அவர் நடத்தி வந்த "கொஞ்சம் தேநீர் கொஞ்சம் கவிதை என்ற நிகழ்சியில், அவரைக் கலந்து கொள்ள அழைத்ததாகவும், அதற்கு ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் தயங்கியதாக கூறியுள்ளார். பிறகு சம்மதித்தப்பிறகு, அவர் வீட்டுத்தோட்டத்தில் நடந்துகொண்டிருந்த போது, தயக்கத்தைத் தணிக்க இறைவனைத் துணையாக வந்து பாடும்படி அழைத்துள்ளதாகக் கீழ்க்கானும் பாடல் அமைந்துள்ளது.

"கூடச்சேர்ந்து பாடத்தானே ஒன்ன அழச்சேன்ஒரு
கோணச் சிந்து பாடச் சொல்லி மேடையமைச்சேன்எங்
கூடச்சேர்ந்து பாடத்தானே ஒன்ன அழச்சேன்
..தேடித்தேடி.....தேடிக்கிட்டே காலம் கழிச்சேன்நீ
தேவையில்ல என்றும் சில நேரம் நெனச்சேன்
நாடி நரம்பெல்லாம் உயிர் ஓசை எழுப்பும்
நாதத்துல ஒன்னக் கொஞ்சங் கண்டு புடிச்சேன்
கூடச்சேந்து பாடத்தானே ஒன்ன அழச்சேன்.

கடவுளை துணைகொண்டு, மனதிற்கு நிறைவான தேடலை இறைவனை துணைகொண்டால் பாடிவிடலாம் என்ற நிறைவையும் எது சரியென நம் அறிவிற்கு சில நேரங்களில் உணர்ந்து கொள்ள முடியாத போதும்,தன் சிந்தனை முயற்சிக்கு வழிகாட்டவும் இறைவனை துணையாக கொள்ளலாம் என்பதை ஆசிரியரின் வரிகள் நமக்கு துணைநிற்கின்றன.

"காற்றுப் பல்லக்கிலே செல்லும்
கார்த்திகை தீபங்களேஉங்கள்
காதல் வனப்புகள் ஆடிக்களித்திட
ராகங்கள் நான்தருவேன்
பாட்டுக்குக் கருவாகிப் பண்ணாற உருவாகிப்
பாரெங்கும் காற்றாகப் பறந்தோடுவேன்

இந்த வரிகளில் நானும் மெய்சிலிர்த்து விட்டேன் என்றே கூறவேண்டும்.ஆம் கார்த்திகைத் திருநாள், காற்றையே பல்லக்காக்கி அதிலேறி அமர்ந்துகொண்டு,மயிலைக் கபாலி கோயில் திருவிழாவில் சப்பரங்களில் போகும் அறுபத்து மூவரைப்போல் தீபங்கள் போகும் அந்த அழகான தரிசனத்தை

வரிகளில் காணும்போது மனதிற்கு மகிழ்ச்சி ஏற்படுவதுபோல, "காற்றுப் பல்லக்கிலே" மகிழ்ச்சியை ஏற்படுத்தியது என்றே கூறுவேன்.

மோழி தோன்றுவதற்கு முன் வாழ்ந்து வந்த பழைய கற்கால ஆதிமனிதன் தனக்கு ஏற்பட்ட இனம் புரியாத மகிழ்ச்சியாலும், துன்பத்தாலும் எழுப்பிய ஓசையும், ஒலியுமே இசையின் ஆரம்பமாக இருந்திருக்கவேண்டும். இசை கேட்பதற்கு இனிமையும், மகழ்ச்சியையும் தரக்கூடியது. நம் துன்பத்தை மறக்கச்செய்வது, அப்படிப்பட்ட இசை நம் மனதிற்கு பிடித்துவிட்டாள்,கேண்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்று தோன்றும். நாம் சிறுவயதில் கேட்டு இன்புற்ற இசையை மறுபடியும் கேட்கும் நிலை வந்தால், அந்த இசை மட்டும் கிடையாது, முகமாக, சுகமாக, கூட இருக்கலாம். அதை திரும்பவும் பார்க்கதாக கூட இருக்கலாம் கேட்டதாக கூட இருக்கலாம். அப்பொழுது தோன்றும் இனம் புரியாத மகிழ்ச்சி தோன்றும். அப்படித்தான் நம் ஆசிரியர் வானவில் ரவி அவர்களுக்கும் தோன்றியிருக்கும் என்று எண்ணுகின்றேன். அதை இப்படி கவிதையாக பாடியிருக்கிறார்.

"எப்பொழுதோ கேட்ட இசை
எப்பொழுதோ பார்த்த முகம்
எப்பொழுதோ செய்த பிழை
எப்பொழுதோ கண்ட சுகம்
எப்பொழுதும் என்னோடு வாழும்என் இதயத்தின்
இசையோடு சேரும்

என்று நம் மனதையும் இசைபாட வைப்பதுபோல் உள்ளது.

கடிதம் எழுதுவதற்கு வரலாறு கூறியவர் நம் ஆசிரியர்,35 ஆண்டுகளுக்கு முன் இசைக்கவி ரமணன் நீண்ட கடிதம் சிலவற்றை, ஆசிரியர் வானவில் ரவி அவர்களுக்கு எழுதியுள்ளார். வானவில் ரவி அவர்கள் பதில் எழுதவில்லை என்பதால் ரமணன் வருத்தப்பட்டதால் கடிதமாக எழுத நினைத்துக் கவிதையாக எழுதி முடித்தேன் என்று கூறுகிறார். அந்த வரிகள்

"கடிதம் எழுதும் வழக்கமில்லை
கவிதை எழுத முடியும்வெறும்
சேதி கேட்க ஜீவன் இல்லை

தேம்பி அழத்தெரியும்மனம்
.....கானம் ஒன்று கவிதையாகக் காதில் வந்து மோதும் உன்
ஞாபத்தை உறுதி செய்யப்பாடலொன்று போதும்

என்ற கவிதையைப் பாடலாக தொலைபேசியில் பாடிக்காட்டியதாகக் கூறியுள்ளார்.

ஆணும் பெண்ணும் அன்புடன் இணைந்து வாழ்வதால் தான் உலகம் நிலைத்து நிற்கின்றது.மனிதன் அறநெறியில் நிற்பதற்கும்,இன்பத்துடன் வாழ்வதற்கும் வாழ்வியல் அறங்கள் இன்றியமையாதது. வாழ்வியல் அறங்களை நீதி இலக்கியங்கள் படம்பிடித்துக்காட்டுகின்றன.

"அன்பு அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

கணவன் மனைவியருக்குள் அன்பு பிணைப்போடு அறநெறிப்படி இல்லாழ்க்கையில் பண்புடைய மேம்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதை வள்ளுவரின் குறள்வழி அறிவதோடு வானவில் ரவி அவாகள் திருமண வரவேற்பில் இயற்கையை மையமாக வைத்து வாழ்த்து பாடிய பாடலில்

'காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம்இது
காணக் கிடைக்காத வைபோகாம்
பூத்துக் குலுங்கும் பல தோட்டங்களாம்அங்குப்
பூவெல்லாம் பொறிவண்டுக் கூட்டங்களாம்
சிற்றெறும்புக் கூட்டங்கள் ஊர்வலமாம்
..... எழில் நாடகமாய் நெஞ்சை இழுப்பதுண்டாம்
பாட்டுக்குள் மட்டுமொரு பார்வை யுண்டாம்அந்த
பார்வைக்குத் தானது புலப்படும்.

இல்லறம் சிறக்க நல்லறம் புரிக என்று ஆசிரியர் வாழ்த்தியுள்ளார்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுவது ஒழுக்கம், நாம் எதைச்செய்து கொள்ள விரும்புகிறோமோ அதைப்பிறருக்கும் விரும்ப செய்யப் பழகுவது ஒழுக்கம், தூய்மைக் காப்பது

ஒழுக்கம், தீமைப் போக்குவது ஒழுக்கம். ஒருவன் ஒழுக்கமாக இருந்தால், வாழ்வில் உயர்வை அடைவதாகும்.

நல்லொழுக்கத்தை அடைய விரும்பும் ஒவ்வெருவரும் மற்றவரை மதிக்க வேண்டும்.மனிதப் பண்பில் மகத்தானது மனிதநேயம், மனிதநேயம் மிக்கவராக வாழ்வதற்கான வழிமுறைகளை ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் "தெருப்பாடகன்" என்ற தலைப்பில் அமைந்த பாடலில் அழகாக உணர்த்தியுள்ளார்.

"யாசகம் கேட்டு வரும் தெருப்பாடகன்நான்
யாதொரு பந்தமும் இல்லதாவன்
தேசமும் தெய்வமும் ஒன்றாகவும்மக்கள்
யாவரும் மன்னர்கள் என்றாகவும்
யாசகம் கேட்டு வரும் தெருப்பாடகன்நான்
யாதொரு பந்தமும் இல்லாதவன்
நேசமுடன் என்றும் வாழ்வதற்கே
நிம்மதியே நம்மைச்
சூழ்வதற்கே
நேரமெல்லாம் நான் பாடுகிறேன்அன்பு
நெஞ்சமொன்றே நான் தேடுகிறேன்
யாசகம் கேட்டு வரும் தெருப்பாடகன்

நல்லவர்கள் யாவரையும் நான் தெய்வமாக வணங்குவேன் என்றும் தன் ஒழுக்கத்தின் பெருந்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

'உடலை வளர்க்க எப்படி உணவு
தேவையோ அதுபோன்று உயிரை வளர்க்க
பிரார்த்தனை தேவை, ஆதலால் கடவுள் தத்துவம்

எல்லாமாகவும் இருப்பது, எல்லா செயல்களாலும் ஆனது என்று சொன்னாலும் பொதுவானவர் என்பதைவிட கடவுள் என்பவர் எல்லாமதத்திற்கும் உரிமையானவர் என்றே கூறலாம். அப்படித்தான் நம் ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் "மன்னன் பிறந்து விட்டான்" என்ற பாடல் வரிகளில்

"கருணையினால் நம்மை மீட்பதற்கே ஒரு
மன்னன் பிறந்து விட்டான் சின்ன
கண்ணன் பிறந்து விட்டான்
சிலுவையிலே ரத்தம் சிந்தி நம் பாவத்தைக்
கழுவிடவே கர்த்தன் பிறந்துவிட்டான்

ஆண்டவன் ஒன்றே என்றுரைப்போம்உலகில்
ஆமைதியை மீண்டும் வென்றெடுப்போம்

கடவுள் நம்பிக்கையையும், மனிதன் சாதிச்சண்டை மதச்சண்டை இல்லாமல் அமைதியால் வெல்லவேண்டும்.

இந்த உலகத்தில் பிறக்கின்ற மனிதர்களெல்லாம் கிடைக்கின்ற இன்பங்கள் எல்லாவற்றிலும் மேம்பட்டதாக காதல் இன்பம் உள்ளது. அந்த இன்பத்தினால் கவலைகள் மறக்கின்றன, கவிதைகள் பிறக்கின்றன. நம் உள்ளத்தில் மறைந்திருக்கும் அனைத்து உணர்ச்சிகளும் வெளிப்படுகின்றன. ஆதலால் காதல் செய்வீர் என்று பாரதி, இவ்வரிகளில்

"காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்கு கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்:
கானமுண்டாம்:சிற்பமுதற் கலைகளுண்டாம்
ஆதலினாற் காதல் செய்வீர்:உலகத்தீரே
அ. தன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்
காதலினாற் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம்,அதனாலே மரணம் பொய்யாம்

என்று விளக்கவது போல் நம் ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் காதலில்லாமல் இவ்வுலகில் ஒன்றும் இல்லை என்பதை

"கண்ணில் வளரும் சித்திரம் போல்ஒரு
கனவில் வளரும் லட்சியம் போல்
பண்ணில் வளரும் கவிதைபோல்என்
நெஞ்சில் படரும் காதலடி
இதைக்
காதலென்றாலும் பக்தியென்றாலும் பேதம் இல்லையடி
இந்தக்
காதலில்லாமல் இவ்வுலகில் ஒரு வேதம் இல்லையடி
யாதுமாகி நிற்பதால்எப்
போதும் என்னுள் இருப்பவளே

இந்த வரிகள் மூலம் காதல் இன்பம் உயர்வானது என்பதை வெளிப்படுத்தியள்ளார்.

இப்படியாக ஆசிரியரின் பாடல் வரிளைப்பற்றி கூறிக்கொண்டு போனால்,கருத்தரங்கில் வாசிக்கும் கட்டுரையாக இல்லாமல் முனைவர் பட்ட ஆய்வாக மாறிவிடும். ஆசிரியர் வானவில் ரவி அவர்கள் ஒவ்வொன்றையும் நுணுக்கமாக சிந்தித்துள்ளார் என்றே கூறவேண்டும்.

இறவனைப்பற்றியும், காதல், தத்துவம்,இசை,இயற்கை,அரசியல் நாட்புப்பற்று, சான்றோர்கள் பற்றியும் மிகவும் நுணக்கமாகப் பாடி, மக்களே பாடும் பாட்டாக "மக்கள் பாடும் பாட்டு" என்ற நூல் இருந்தது. ஆய்வாளர்களுக்கு ஆய்வு செய்யும் நூலாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்றே கூறுகிறேன்.

❖